மெஹர் பிரபு

(MEHER PRABHU)

இக்கால அவதார புருஷரின் வருகை
(ADVENT OF THE AVATAR)

மெஹர் பாபாவின் வாழ்க்கை வரலாறு
(MEHER BABA'S LIFE HISTORY)

குறுகிய தமிழாக்கம்
(TAMIL TRANSLATION - ABRIDGED)

தொகுப்பு பதினாறு

(VOLUME SIXTEEN)

1958 - 1960

இறைவனின் அன்பளிப்பு

இடம், காலம், பொருள் இவற்றை இறைவனன்றி வேறு யாரறிவர்? எது, எங்கு, எப்படி, எப்போது நடக்கவேண்டுமோ அதை நடத்துபவனும் அவனே! தனிப்பட்ட மனிதனால் முடிவது கையளவாக இருந்தாலும் கடவுளின் கருணையால் நிகழ்வது கடலளவு. இருந்தும் அனைத்தையும் தனிமனிதன் செய்வதுபோலத் தோற்றமளிக்கச் செய்வது மாயையின் கைவண்ணம்; இதுவே, இந்த இறைநாடகத்திற்கு இறைவன் எழுதிய திரை, கதை, வசனம்.

மெஹர் பாபாவின் வரலாற்றுத் தொகுப்புக்கு உயிரூட்டம் அளித்தவர் மெஹர் பாபா மட்டுமே என்றாலும், உருவாக்கம் தந்த நூலாசிரியர் அவருடைய நெருங்கிய மண்டலியில் ஒருவரான,

ஸ்ரீ பாவ் கல்சூரி.

இந்தி மொழியில் கவிதை வடிவில் உருவகம் கொடுக்கப்பட்ட வரலாறு, உரைநடை பாணியில், ஆங்கிலத்தில் ஆக்கம் தந்த, மெஹர் பாபாவின் அரவணைப்பில் இருந்த,

ஸ்ரீ ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா.

மொத்தத்தில் ஏறக்குறைய 8000 பக்கங்கள், 20 தொகுப்புகள். இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து ஆங்கிலத்தில் வெளியிட்டவர்,

ஸ்ரீ லாறன்ஸ் ரைட்டர்.

இந்த வரலாற்றுத் தொகுப்பு, நாளடைவில், பல மொழிகளில் முழுமையாக அல்லது குறுகிய வடிவில் வெளிவந்துள்ளன. தமிழ் மக்களுக்கும் இது ஒரு பொக்கிஷமாக அமைய வேண்டும் என்ற ஆர்வத்தில் சமர்ப்பணம் செய்பவர்:

தமிழாக்கம் & புத்தக வடிவமைப்பு:
கு. ராதாகிருஷ்ணன்
வேலம்மாள் ராதாகிருஷ்ணன்
முகேஷ் சிவகுமார்
நித்யகலா நிர்மல்
பூனா, டிசம்பர் 2023
✉ vela.radhakrishnan@gmail.com
✆ +919225631113

REV:01/04.07.2025

நிகழ்வுகளின் காலவரிசை

1958

- ஜூன் 8, அமெரிக்கா, ஆஸ்திரேலியா சகவாசத்திற்கு பின்னர் இந்தியா வருகை
- ஜூன் 8 - 10, மும்பை ஆஷியானா, பூனா கணேஷ்கிந்த் தோட்டம் வருகை

1958

- ஜூன் 14 மெஹராஸாத் வருகை; ஜூன் 15 முதல் மெஹராபாத் விஜயம் - ஜூலை 10ஆம் நாள் நிகழவிருக்கும் கூட்டத்திற்கான ஏற்பாடுகள் குறித்த சந்திப்பு

1958

- ஜூலை 6, சாது வாஸ்வானியின் பூனா, ஸெயின்ட் மீரா உயர்நிலைப் பள்ளிக்கு விஜயம் / ரிஷிகேஷிலிருந்து மஸ்த் நீல்கந்த்வாலா மெஹராஸாத் வருகை

1958

- ஜூலை 09 - 10, 180 அன்பர்கள் அடங்கிய மெஹராபாத் சிறப்புக் கூட்டம் - மெஹர் பாபாவின் 'உலகளாவிய செய்தி' வழங்கல்

1958

- ஜூலை 14 - டிசம்பர் 1, நான்கரை மாத சிறப்பு ஏகாந்தவாசம்
- டிசம்பர் 15, பூனா குருபிரசாத் வருகை

1959

- பிப்ரவரி 1, சுற்றறிக்கை வெளியீடு
- பிப்ரவரி 9, அரன்காவ்ம் கிராம மக்களுக்கு தரிசனம்

1959

- பிப்ரவரி 25, மெஹர் பாபாவின் 65ஆவது பிறந்தநாள்
- மார்ச் 21, 300 ஆந்திரா யாத்ரீ கர்களுக்கு அஹமதுநகர் 'ரயில்வே கிளப்'பில் தரிசனம்

1959

- மார்ச் 7 - ஆகஸ்ட் 8, மெஹர் பாபாவின் மும்பை பயணம், பொது தரிசனம் - பூனா குருபிரசாத் வருகை; தரிசன நிகழ்ச்சி

1959

- ஆகஸ்ட் 8, மெஹராஸாத் வருகை, ஆகஸ்ட் 14 - அக்டோபர் 29, மெஹராஸாத் - மெஹர் பாபாவின் பணி - மிக முக்கியமான காலகட்டம்

1960

- ஜனவரி 2, 'அவதார் மெஹர் பாபா அரன்காவ்ம் மையம்' திறப்பு விழா
- பிப்ரவரி 25, பாபாவின் 66ஆவது பிறந்தநாள்

1960

- பிப்ரவரி 25, பிம்பல்காவ்ம் கிராமத்தைச் சேர்ந்த 60 பள்ளி மாணவர்களின் கால்களைக் கழுவி தலை வணங்கும் நிகழ்ச்சி.

1960

- மார்ச் 6 - குஷ்ரு குவார்ட்டர்ஸ் வளாகத்தில் தரிசன நிகழ்ச்சி
- மார்ச் 9 - மெஹராபாத்தில் ஒரு சிறிய 'ஏழை நிகழ்ச்சி'

1960

- மார்ச் 20 - பூனா குருபிரசாத் வருகை
- மே 1 - ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்ட மிகப் பெரிய தரிசன நிகழ்ச்சி

1960

• தொடரும்...

பொருளடக்கம்

உலகளாவிய செய்தி 3

மெஹராஸாத் - ஏகாந்தவாசம்..... 28

பூனா & மும்பை..... 62

குருபிரசாத், பூனா 102

மெஹராஸாத் ஏகாந்தவாசம்.....189

உலகளாவிய பணி - ஏகாந்தவாசம் 255

குருபிரசாத் தரிசனம்.....293

மெஹர் பாபா, பூனா, **1958**
(MEHER BABA, POONA, 1958)

மும்பை விமான நிலையம், **8 ஜூன் 1958**, ஆதி சீனியர், மெஹர்ஜி, எரச், டான்கின்
(BOMBAY AIRPORT, 8 JUNE 1958, ADI SENIOR, MEHERJEE, ERUCH, DONKIN)

உலகளாவிய செய்தி

(**The Universal Message**)

1958 ஜூன் 8 அன்று மும்பை மற்றும் பிற இடங்களிலிருந்து, கிட்டத்தட்ட 1,000 அன்பர்கள், மெஹர் பாபாவை வரவேற்க விமான நிலையத்திற்கு வருகை தந்தனர். பாபா எந்த உதவியுமின்றி, அவர்களை நோக்கி நடந்ததைக் கண்டு அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர்; அவருடைய மேற்கத்திய அன்பர்களின் அன்பு, பாபாவின் வலியை ஓரளவு தணித்தது போலத் தோன்றியது. இந்திய அன்பர்கள் அவருக்கு மலர்மாலை அணிவித்த போது, அவரது புன்னகை பிரகாசமாக வெளிப்பட்டது. பாபா, தமது பயணத்தைக் குறித்து அவர்களிடம் சுருக்கமாகக் கூறினார்; அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் நடந்த சகவாச நிகழ்ச்சிகள் 100 சதவிகிதம் திருப்திகரமாக நிறைவடைந்ததாகக் கூறி, அவர் மேற்கத்தியர்களின் அன்பை விவரித்தார்.

கூட்டம் கட்டுக்கடங்காமல் போக, பாபா ஆஷியானாவிற்கு விரைந்தார்; அங்கு, பெண் மண்டலி அவருக்காகக் காத்திருந்தனர். அடுத்த நாள், 1958 ஜூன் 9 அன்று பாபா, ஸவக் கொத்வாலை அழைத்து வரக் கூறினார். ஸவக்கின் உடல்நிலை மேலும் பின்னடைவை சந்தித்தது; அவர் உடல்நிலை சீராகும் வரை, மும்பையில் தங்க அனுமதிக்குமாறு கேட்டுக் கொண்டதற்கு, பாபா இணக்கம் தெரிவித்தார். பாவ் கல்சூரி இப்போது இரவு கண்காணிப்புப் பணியை தனியாகச் செய்ய வேண்டிய நிர்பந்தம், அதை அவர் பல ஆண்டுகளாகத் தொடர்ந்தார்.

மும்பையில் இருந்த வேளையில், எரச்சின் உறவினரான தொராப் ஸட்டா (DORAB SATHA, 29), பாபாவை சிறிது நேரம் சந்தித்தார். பாலியல் பிரச்சினை குறித்து, பாபா பலமுறை மண்டலிக்கு விளக்கியதற்கு இணங்க, அவர் தொராபிடம் கூறினார்: **"ஒருவரின் உடல், வெளியளவில் எவ்வளவுதான் கவர்ச்சிகரமாக, அழகாக இருந்தாலும், இறுதியில் நோயை உண்டாக்கும் நுண்ணுயிரிகள், சீழ் மற்றும் பலவற்றால் சீரழிகிறது. அழகு, தோலளவுக்கு மேற்போக்காகத் தோன்றுவது மட்டுமே. எனவே உடலுறவுக்காக மட்டும் ஏன் ஒருவரின் பின்னால் ஓட வேண்டும்?"**

ஜூன் 9ஆம் நாள், அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆஸ்திரேலியாவில் வாழும் தமது அன்பர்களுக்கு, பாபா இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார்: **"என் அன்பர்கள் அனைவரையும் என் இதயத்தில் தாங்கி, இந்தியா வந்தடைந்தேன். அனைவருக்கும் இதைத் தெரிவிக்கவும்."**

பாபா எழுதிய கடிதத்தில், **"என்னைத் தாங்கும் ஒரே இடம் இதயம். என்னை உங்களுக்கு அருகாமையில் நெருக்கமாக வைத்துக்கொள்ளுங்கள் - நான் எப்பொழுதும் அங்கு இருக்கிறேன்"** எனக் குறிப்பிட்டிருந்தார்.

ஜூன் 10 அன்று பாபா மூன்று கார்களில் மண்டலியுடன் மும்பையிலிருந்து புறப்பட்டு, பூனாவில் தாதி கேரவாலாவின் குடியிருப்பான

கணேஷ்கிந்த் தோட்டத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவர் அங்கு வந்த வேளையில், விஷ்ணு, ராமகிருஷ்ணன் இருவரும் அவருக்காகக் காத்திருந்தது, பாபாவை வருந்தச் செய்தது. அவரது அனுமதியின்றி மெஹராபாத்தை விட்டு வெளியேறியதற்காக விஷ்ணுவை கடுமையாகக் கண்டிக்க, விஷ்ணு அமைதியாக இருந்தார். பாபா இருவரையும் ஒரு மரத்தின் கீழ் நிற்குமாறு அறிவுறுத்தினார். உண்மையில் விஷ்ணு அழைக்கப்பட்டு, அதன்படியே வந்திருந்தார். சிறிது நேரத்திற்குப் பிறகு பாபா அவர்களை உள்ளே அழைத்து, ஜூலை 10 அன்று மெஹராபாத்தில் நடத்த விரும்பிய கூட்டத்தின் விவரங்களைப் பற்றி விவாதித்தார்.

மேற்கிலிருந்து பாபா, இந்தியா திரும்பிய வேளையில், அவரை வரவேற்க ஸொராப்ஜி ஸிகன்போரியா (SORABJI SIGANPORIA) விமான நிலையத்திற்கு வரவில்லை; அப்போது அவர் காஷ்மீர் சென்றிருந்தார். பாபா அவரை பூனாவிற்கு அழைத்து, **"காஷ்மீர் அனுபவம் சிறப்பாக இருந்ததா?"** என வினவினார்.

"மிகவும் நன்றாக இருந்தது பாபா" என்றார்.

"காஷ்மீரில் நீங்கள் பார்த்த அனைத்து காட்சிகளையும் இப்போது இங்கே உங்கள் மனக்கண் முன் தோற்றுவிக்க முடியுமா?"

"உண்மையில் இல்லை பாபா."

"நிலையானது எதுவுமே இல்லை" என்று பாபா வலியுறுத்திக் கூறினார், **"அனைத்தும் நிலையற்றது. காஷ்மீரில் நீங்கள் அனுபவித்த இன்பம் இங்கு இல்லை, ஏனெனில் அது நிரந்தரமானது அல்ல; அது நிலையற்றது. கடவுள் ஒருவரே நித்தியமானவர், இதர அனைத்தும் அழியக்கூடியவை. எனவே என்னை எப்பொழுதும் உங்கள் எண்ணங்களில் வைத்துக்கொள்ளுங்கள். எதிர்காலத்தில் இதுபோன்ற வாய்ப்பை மீண்டும் இழக்காதீர்கள்."**

1958 ஜூன் 14 சனிக்கிழமையன்று நான்கு நாள் விஜயத்திற்குப் பிறகு பாபா பூனாவிலிருந்து மெஹர்ஜியின் காரில் ஹோமா தாதாசாஞ்சியுடன் மெஹராஸாத் திரும்பிச் சென்றார். மண்டலி அனைவரும் ஆதி சீனியருடன் சவாரி செய்தனர். அடுத்த நாள் ஜூன் 15 முதல் மெஹராபாத்திற்கு நடைமுறையில் தினமும் வந்து, ஜூலை 10ஆம் நாள் நிகழவிருக்கும் கூட்டத்திற்கான ஏற்பாடுகளைக் குறித்து பெண்டு, பாதிரி, விஷ்ணு ஆகியோருக்கு அறிவுறுத்தினார்.

இந்த நேரத்தில் பாபாவை காரில் அழைத்துச் செல்வதற்காக ஹோமா மெஹராஸாத்தில் தங்கினார். அவரது கால் அறுவை சிகிச்சை செய்யப்பட்டதன் காரணமாக, அவரால் தரையில் அல்லது கழிப்பறையில் அமர முடியவில்லை. எனவே அவர் கழிப்பறை செல்வதற்கான தூண்டுதலை உணரும் போதெல்லாம், ஒரு புதிய யுக்தியைக் கையாண்டார். பாபாவை மெஹராபாத்தில் விட்டுவிட்டு, அவர் வெகுதூரம் காரில் சென்று, வயல்வெளியில் நின்று, இயற்கையின் அழைப்பிற்கு பதிலளித்துவிட்டு திரும்புவது வழக்கம். ஒருமுறை

வயல்வெளிக்குச் சென்று திரும்பும் வழியில் கார் கடும் மழை காரணமாக சேற்றில் சிக்கியது. மிகுந்த சிரமத்துடன் அவர் அதை விடுவிக்க முடிந்தது; ஹோமா திரும்பி வருவதற்கு முன்னரே, பாபா அந்த இடைப்பட்ட நேரத்தில், தமது பணியை முடித்துவிட்டார். நெடுநேரம் ஆனதால், மெஹராபாத்தில் சில நாட்கள் தங்கியிருந்த ஜிம் மிஸ்திரியுடன் பாபா புறப்பட ஆயத்தமானார்.

'**காருடன் எங்கே சென்றீர்கள்**' என்று பாபா கேட்கவே, ஹோமா 'இயற்கையின் அழைப்பிற்கு' என்று பதிலளித்தார். பாபா உடனே, **"இது நான் கேள்விப்பட்ட அனைத்திலும் மிகவும் விசித்திரமான கதை. நீங்கள் என்ன வகையான யோகா செய்கிறீர்கள்? நீங்கள் காருடன் கழிப்பறைக்குச் செல்கிறீர்களா?"** ஹோமா தனது இக்கட்டான சூழ்நிலையின் இரகசியத்தை உடைக்க வேண்டியதாயிற்று, பாபா சிரித்துக்கொண்டே, **"என்ன ஓர் அற்புதமான யோகா! உங்கள் யோகாவை நான் 'யோகராஜா' என்று அழைக்கிறேன்!"** என்றார்.

ஜூன் 16 அன்று அஹமதுநகருக்கு வந்த டாக்டர் தேஷ்முக், பின்பு மெஹராஸாத்திற்குச் சென்று, அங்கு அவர் பல நாட்கள் தங்கியிருந்தார்.

ஜூன் 18ஆம் தேதி, அந்த ஆண்டு மௌன தினத்திற்கான சிறப்பு அறிவுரைகளை வழங்கி, வெளியிடப்பட்ட வாழ்நாள் சுற்றறிக்கை (LIFE CIRCULAR) ஒன்றில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: **"1958 ஜூலை 10 வரை எவரும், பாபாவுக்கோ அல்லது அவரது மண்டலிக்கோ எதுவும் எழுதக்கூடாது."**

ஜூன் 20 அன்று பாபா தனது 'உலகளாவிய செய்தி'யை (UNIVERSAL MESSAGE) வழங்கவிருந்த கூட்டத்தைப் பற்றி அழைக்கப்பட்ட அனைவருக்கும் தெரிவித்தார். ஏறக்குறைய 200 அன்பர்களுக்கு (அவர்களில் எட்டு பெண்மணிகள்) அழைப்பு விடுக்கவே, அனைவரும் ஒரு நாள் முன்னதாக, ஜூலை 9ஆம் தேதி வருமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

பாபா தமது சமீபத்திய மேற்கத்திய பயணத்தின் போது, சில அன்பர்களுக்கு ஜூலை 14 முதல் 40 நாட்கள் மேற்கொள்ளத் தேவையான குறிப்பிட்ட அறிவுறுத்தல்களை வழங்குவதாகத் தெரிவித்திருந்தார், மேலும் அவர் இப்போது இதைப் பற்றிய கடிதங்களை எழுதத் தொடங்கினார். கிழக்கில் வாழும் அன்பர்களுக்காகவும் பாபா அவ்வாறே செய்தார்.

உதாரணமாக, சிலர் உபவாசங்களைக் கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர். லாஹூரைச் சேர்ந்த ஸாயிப் ஆஸ்மி (SAIB ASMI), 40 நாட்களுக்கு ஓர் அறைக்குள் அமர்ந்து, இயற்கையின் அழைப்பிற்குச் செல்வதைத் தவிர, அங்கிருந்து வெளியே வரக்கூடாது; அந்தக் காலக்கட்டத்தில் மௌனம் கடைப்பிடிக்க வேண்டும், மேலும், ஒரு நாளைக்கு ஒருமுறை மட்டுமே உணவு உண்ண வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டார். பிற அன்பர்களுக்கு, பிரியமான உணவு, பானம், புகைபிடித்தல் போன்ற பழக்கவழக்கத்தைக் கைவிடுமாறு கூறப்பட்டது. பலருக்கு ஒரே அமர்வில் ஒரு நாளைக்கு 500 முறை,

உரத்த குரலில் திரும்பத் திரும்ப இந்த வாக்கியத்தை மொழியுமாறு கட்டளையிடப்பட்டது: **"அன்பான கடவுளே, உங்கள் விருப்பத்திற்கிணங்க, எங்கள் பாபா அறிவித்த அனைத்தும் இந்த ஆண்டு விரைவில் நிறைவேறும்."**

ஸொராப்ஜி ஸிகன்போரியா அவரது மகன் நோஷிருடன் ஜூன் 21 அன்று மெஹராஸாத்தில் பாபாவுடனான நேர்காணலுக்காக வந்தார்; ஸவக் கொத்வாலும் அன்றைய தினம் பாபாவை சந்திக்க வந்திருந்தார். ஸவக்கின் உடல்நிலை சீரில்லாத காரணத்தால், பாபா, அவரை, குடும்பத்துடன் மும்பையில் தங்குவதற்கு அனுமதி அளித்தார்.

1958 ஜூலை 2 புதன்கிழமை அன்று, பாபாவின் 1954 ஆந்திரா சுற்றுப்பயணம், 1958 பிப்ரவரி மெஹராபாத் சகவாசம் மற்றும் 1956ஆம் ஆண்டு அமெரிக்கா பயணம் (சார்மியன் டியூஸ் பதிவு செய்தது) ஆகியவற்றின் சிறப்புக் காட்சிக்காக ஏற்பாடு செய்யப்பட்டது. ஸரோஷ் திரையரங்கில் காலை 8:30 முதல் 11:30 வரை, காணொளி திரைப்படங்கள் திரையிடப்பட்டன. மெஹராஸாத் பெண்மணிகள் மற்றும் மெஹராபாத்தைச் சேர்ந்த அனைவரும் கலந்து கொண்டனர். இரண்டு நாட்களுக்குப் பிறகு, பாபா பெண் மண்டலியை மெஹராபாத் அழைத்துச் சென்றார்.

பூனா, ஸெயின்ட் மீரா உயர்நிலைப் பள்ளியை நடத்தி வந்த சமூக சேவகர் சாது வாஸ்வானி (SADHU VASWANI), பாபா அங்கு மறுபடியும் வருகை தருமாறு அழைப்பு விடுத்தார். பாபா அதை ஏற்றுக்கொள்ளவே, 1958 ஜூலை 6ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை, அந்த நிகழ்ச்சிக்காக ஒதுக்கப்பட்டது. அதற்கு முந்தைய நாள் இரவு, பாபாவிற்கு ஜுரம் அதிகமாகி, பல முறை முயற்சித்தும், இயற்கையின் அழைப்புக்கு பதிலளிக்க முடியாமல் அவதியுற்றார்; இருந்தாலும், காலை 7:00 மணியளவில், அவர் எரச், பாவ் கல்சூரி, ஜால்பாய் ஆகியோருடன் பூனாவிற்குப் புறப்பட்டார்; உடன் செல்லவிருந்த டாக்கே அஹமதுநகரில் அவர்களுடன் இணைந்தார்; ஹோமா தாதாசாஞ்சி காரை ஓட்டிச் சென்றார். பாபாவின் உடல்நிலை சரியில்லாததால், அவர் மனநிலையும் சரியில்லாமல் இருந்தது.

வழியில், கார் ஒரு மரத்தின் கீழ் நிறுத்தப்பட்ட போது, பாபா திரை மறைவில் சிறுநீர் கழிக்க முயன்றார். அவ்வேளையில் அவர்களைக் கடந்து சென்ற வேறொரு கார், பாபாவின் காரை அடையாளம் கண்டு, அங்கே நின்றது. அதிலிருந்த பயணிகள் இறங்கி, ஜால்பாயிடம் பாபாவின் தரிசனத்தை விரைவாகப் பெற்றுக்கொள்ள முடியுமா என்று கேட்டார்கள். அவதார புருஷர், கற்பனை செய்ய முடியாத அளவுக்குக் கஷ்டங்களை அனுபவித்தார்; அதற்கும் மேலாக, அவரது பக்தர்கள் தரிசனத்திற்காக முயன்றனர்! சிறுநீர் கழிக்காமல் பாபா காருக்குத் திரும்பிச் சென்ற வேளையில், மக்கள் அவரை அணுகவே, சிரித்துக்கொண்டே பாபா அவர்களை வரவேற்றார். அவர்கள் சென்ற பின்னர், **"எனக்கு ஜுரம் அதிகமாக உள்ளது, என்னால் சிறுநீர் கழிக்க முடியாத நிலை,**

வலியும் அசௌகரியமும் மிகையாக உள்ளது - ஆனால் பிறரை மகிழ்விக்க, நான் சிரித்தாக வேண்டும்" என்று முறையிட்டார்.

சாது வாஸ்வானி, பாபாவிற்கு சிறப்பான வரவேற்பு ஒன்றை வழங்கினார். அவர் ஸெயின்ட் மீரா உயர்நிலைப் பள்ளிக்கு (SAINT MIRA HIGH SCHOOL) வந்ததும், அவரது தோற்றத்தில் திடீர் மாற்றம் ஒன்று அவரில் முந்திக்கொண்டது. பாபாவின் முகம் ரோஜாவைப் போல மலர்ந்தது; அவரது இனிமையான முகபாவத்தில் மகிழ்ச்சி நிரம்பி வழிந்தது.

பஜனை நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது; மேலும், பாபா, வாஸ்வானி மற்றும் சிலருடன் தனி அறையில் உரையாடிக் கொண்டிருந்தார். வாஸ்வானியின் செயலாளர், "பாபா, நான் எப்போது இறை உணர்வை எய்துவேன்?" என்று கேட்டபோது, பாபா பதிலளிக்காத பட்சத்தில், அந்த மனிதர், "பாபா, நீங்கள் ஏன் எனக்கு பதிலளிக்கவில்லை? நான் கேட்க விரும்பும் பல கேள்விகள் உள்ளன" என்று முறையிட்டார்.

பாபா இவ்வாறு பதிலளித்தார்:

கேள்வி ஒன்றே ஒன்றுதான் உள்ளது. அந்தக் கேள்விக்கான பதிலை நீங்கள் அறிந்ததும், வேறு எந்தக் கேள்வியும் இராது. உண்மையில், இரண்டு கேள்விகள் கிடையாது; 'அசலும், முதலுமான' ஒரே ஒரு கேள்வி மட்டுமே உள்ளது. மேலும் அந்த 'அசலும், முதலுமான' ஒரே கேள்விக்கு, 'அறுதியும், இறுதியுமான' ஒரே ஒரு பதில் மட்டுமே உள்ளது. 'அசல்' கேள்விக்கும் 'இறுதி' பதிலுக்கும் இடையே எண்ணற்ற பொய்யும், போலியுமான பதில்கள் உள்ளன.

பிரிக்க முடியாத, அளவிறுதியற்ற உண்மைப்பொருளின் அகத்திலிருந்து அந்தக் கேள்வி எழுந்தது: "நான் யார்?" அந்த ஒரு கேள்விக்கு ஒரே பதில்: "நான் கடவுள்!"

கடவுள் எல்லையற்றவர்; எனவே அவரது நிழலும் எல்லையற்றதாக இருந்தாக வேண்டும். ஏக இறைவன் எனும் உண்மைப்பொருள், அதன் ஒருமைத்தன்மையில் எல்லையற்றது; அதுபோல கடவுளின் நிழலாகிய மாயை, அதன் இருமைத்தன்மையில் எல்லையற்றது. அளவிறுதியற்ற 'ஒருமை'யிலிருந்து எழும் ஒரு கேள்வி, மாயையின் 'இருமை'யில் முடிவில்லாத பதில்களின் பிரமை வழியாக செல்கிறது.

எனவே, நீங்கள் அந்த இறுதி, உண்மையான பதிலை அடையப்பெறுவதற்கு முன்னர், எண்ணற்ற பொய்யும், போலியுமான - "நான் கல்... நான் பறவை... நான் விலங்கு... நான் மனிதன்.. நான் பெண்... நான் பெரியவன்... நான் சிறியவன் இதுபோன்ற பல முடிவிலா - பதில்களை அடையப் பெற்று, அவற்றை சோதனைக்குள்ளாக்கி, நிராகரிக்க வேண்டும்.

இந்த 'பதில்கள்' முடிவில்லாத, ஒன்றுமே இல்லாத வெற்று வடிவங்களிலிருந்து ஒலிக்கும் சிதைந்துபோன எதிரொலிகள், 'நான் கடவுள்!' என்ற ஒரே சரியான பதிலுக்கு வழிவகுக்கும் வரை, மீண்டும் மீண்டும் தவறாக வழிநடத்திக் கொண்டிருக்கும்.

எனவே பொய்யும், போலியுமான பதில்களை சொல்வதை நிறுத்துங்கள், அப்போது நீங்கள் கடவுளை உணர்வீர்கள்.

தாதா வாஸ்வானியைப் பின்பற்றுபவர்கள் பலர் இருந்தனர், அவர்கள் அனைவருக்கும் பாபா தரிசனம் வழங்கினார். பாபா மகிழ்ச்சியான மனநிலையில் தோற்றமளித்தார். மெஹர்ஜியின் காரில் பாபாவை மீண்டும் அஹமதுநகருக்கு அழைத்துச் செல்ல, ஹோமா காத்திருந்த வேளையில், மெஹர்ஜியின் மனைவி காரை ஸெயின்ட் மீரா உயர்நிலைப் பள்ளிக்குக் கொண்டு வந்து, சாவியை ஹோமாவிடம் கொடுத்த போது, அவர் காரைப் பூட்டினார். பாபா தரிசனம் வழங்கியதை மெய்மறந்து பார்த்துக் கொண்டிருந்த ஹோமா, அந்த இனிமையான சூழலின் இன்ப வெள்ளத்தில் மூழ்கியிருந்தார். பாபாவின் புன்னகை அவரில் அற்புதமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

திடீரென ஹோமா, கார் சாவியை நினைவு கூர்ந்தார், அவர் அதை காருக்குள் வைத்து பூட்டியிருந்ததைக் கண்டுபிடித்தார். பதற்றமடைந்த ஹோமா, மெஹர்ஜியிடம் சொல்ல, அவர் ஹோமாவிடம் விரைவாக அவரது இல்லத்திற்குச் சென்று, இரண்டாவது சாவியை எடுத்து வருமாறு கூறினார். தரிசனம் ஏறக்குறைய நிறைவுறும் தருவாயில் இருந்தது. ஹோமா வேறொரு காரில் சென்று, திரும்பி வந்த அந்த நேரத்தில், பாபா மண்டலியுடன் மெஹராஸாத்திற்குச் செல்லத் தயாராக இருந்தார். செல்லும் வழியில் பாபா மண்டலியிடம், **"மலம் இல்லை, ஜலம் இல்லை, ஆனால் செய்த வேலை மட்டும் மிகவும் சிறப்பாக இருந்தது!"** என்றார்.

பாபா மகிழ்ச்சியான மனநிலையில் காணப்பட்டார், ஹோமாவின் தவறு குறித்து அவருக்குத் தெரிவிக்கப்பட்டதும், **"இன்று நான் மிக்க மகிழ்ச்சியாக இருப்பதால் உங்களை மன்னிக்கிறேன். இப்போது வேகமாக ஓட்டுங்கள்"** என்று கூறினார்.

பாபாவின் ஜுரம் அவரை விட்டு நீங்கியது, அவரது முகம் வெற்றிவாகை சூடியது போலப் பிரகாசித்தது. முந்தைய இரவு முழுவதும் பாபா, எப்படி அமைதியற்றவராக இருந்தார் என்பதை பாவ் கல்சூரி கண்கூடாகக் காண முடிந்தது. அவர் சிறுநீர் கழிப்பதில் உதவ, டாக்டர் கோஹெர், ஊக்க மருந்துகள் (டையூரிடிக்ஸ் - DIURETICS) மற்றும் பிற தயாரிப்புகளை வழங்குவதற்கு தன்னால் முடிந்தவரை முயற்சி செய்தும், அவை அனைத்தும் பயனளிக்கவில்லை. அவர்கள் பூனாவிற்குப் புறப்பட்ட வேளையில், பாபா மிகவும் மோசமான மனநிலையில் காணப்பட்டார். ஆனால் தரிசன நிகழ்ச்சிக்குப் பிறகு, பெரியதொரு மாற்றம் தென்பட்டது; எனவே, பாபா உண்மையில் பிறருக்காக மட்டுமே துன்பப்படுகிறார் என்று மண்டலி முடிவு செய்தனர். அவர் ஸெயின்ட் மீரா உயர்நிலைப் பள்ளியில் செய்ய வேண்டியிருந்த, சில சிறப்பு உள் பணிகளின் தாக்கம், இந்த உடல் வழியாக வெளிப்பட்டது. பிறரின் மனப்படிவங்களின் சுமையை தம் மீது ஏற்றுக்கொள்வதே அவரது உண்மையான பணி, அதுவே அவருடைய துன்பத்திற்கு காரணம்.

அன்று மாலை மீண்டும் மெஹராஸாத்தில், பாபா இயற்கையின் அழைப்பிற்கு பதிலளித்து, குடலை சுத்தம் செய்து, சுதந்திரமாக சிறுநீர் கழித்தார். பாவ் கல்சூரி இரவுக் கண்காணிப்பில் இருந்தபோது, பாபா நல்ல மனநிலையில் இரவைக் கழித்ததோடு, அற்புதமான ஆரோக்கியத்துடன் தோற்றமளித்தார்.

"இது எப்பொழுதுமே அப்படித்தான் இருந்தது," காலம் குறிப்பிட்டது. "பாபா பூமியில் வாழ்ந்த தமது வாழ்க்கையின் ஒவ்வொரு வினாடியும் துன்பப்பட்டார். ஆனால் சகவாசம் அல்லது தரிசனம் போன்ற சில நிகழ்ச்சிகளுக்கு முன்னும் பின்னும், அல்லது ஏகாந்தவாசத்தில் பணிபுரியும் காலையில், அவரது துன்பம் ஏதோ ஒரு வகையில் கற்பனை செய்ய இயலாத அளவுக்கு அதிகரித்து, அவரது உடல் முழுவதும் துண்டு துண்டாக நொறுங்குவது போலத் தோன்றும். ஆனாலும், அவர் அன்பர்களிடையே இருந்த வேளையில், பிரகாசமாக சிரித்துக் கொண்டிருந்தார், அவர்களில் எவருக்கும் அவருடைய வலியைப் பற்றி எதுவும் தெரியாது. ஆனால் பாபா, தமது அன்பர்களுக்காகவும் பிரபஞ்சத்திற்காகவும் அனுபவித்த துன்பத்தைக் குறித்து உள் வட்ட மண்டலி நன்கு அறிவர்; உண்மையில், இரவும் பகலும், அவர் தமது அன்பர்களில் தம்மை வணங்கிக் கொண்டிருந்தார்; இதன் காரணமாக, பாபா அவர்களின் நல்ல மற்றும் தீய மனப்படிவங்களைத் தோளில் சுமக்க வேண்டியிருந்தது, இது உடல் ரீதியாக அவரது ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவித்தது. அவர் பிறருக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் அதே வேளையில், அவர்களின் நன்மைக்காக துன்பப்படுவது அவரது கருணையின் வெளிப்பாடு."

ரிஷிகேஷிலிருந்து உயர்நிலை மஸ்த் நீல்கந்த்வாலாவை அழைத்து வரும்படி குமாருக்கு அறிவுறுத்தப்பட்டது. பல மாதங்களுக்கு முன்பு, பாபாவின் அறிவுறுத்தலின் பேரில், குமார் இதையே செய்ய முற்பட்டபோது, நீல்கந்த்வாலா வர மறுத்துவிட்டார். ஆனால் 1958 ஜூலை மாதத்தில், குமார் மஸ்தை அணுகியபோது, அவர் ஏதோ நீண்ட பயணத்திற்கு ஆயத்தமாக இருப்பது போல் இருந்தது! குமார் மரியாதை செலுத்துவதற்கு முன்பு, நீல்கந்த்வாலா அவரை, தனக்கு முன்னால் அமருமாறு கட்டளையிட்டார் (அவர் அமைதியாக இருந்ததால் சைகைகள் மூலம் தொடர்பு கொள்ள முடிந்தது). சிறிது நேரம் கழித்து, குமார், பாபாவை சந்திக்க அஹமதுநகருக்குத் தன்னுடன் வருமாறு கூறவே, மஸ்த் சத்தமாக கைகளைத் தட்டி, தனது விருப்பத்தைத் தெரிவித்தார். நீல்கந்த்வாலா தொடர்ந்து மௌனத்தைக் கடைப்பிடித்ததோடு, கிட்டத்தட்ட முழு இரயில் பயணத்தின் போதும் ஒரு குறிப்பிட்ட விதத்தில் அமர்ந்திருந்தார். ஒருமுறை, குமார் அவரை ரயில் உணவறைக்கு அழைத்துச் சென்ற போது, அங்கு நீல்கந்த்வாலா தனது உணவை கரண்டியால் உண்டார். இந்த அரை நிர்வாண மஸ்த் தனது இரவு உணவை கரண்டியால் உண்டதும், நாகரிகமான பயணிகளும், ராணுவ அதிகாரிகளும் அவருக்கு எதிர்வினையாற்றியதும், குமாருக்கு மறக்க முடியாத வேடிக்கையான காட்சியாக இருந்தது.

இருவரும் 1958 ஜூலை 6ஆம் தேதி அஹமதுநகர் வந்தடையவே, மஸ்த் மெஹராஸாத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். நீல்கந்த்வாலாவிற்கு ஒரு தனி அறை ஒதுக்கப்பட்டது, பைதூல் அவரது கண்காணிப்பாளராகப் பணிபுரிந்தார். ராம்ஜூவும் சத்தாராவிலிருந்து அதே நாளில் வந்தார். பாபா எப்போதேனும் சில நாட்களுக்காக ராம்ஜூவை மெஹராஸாத்திற்கு அழைப்பதுண்டு. இம்முறை அவர் அடுத்த 11ஆம் தேதி வரை அங்குத் தங்குமாறு அறிவுறுத்தப்பட்டார்.

டெல்லியிலிருந்து கல்லூரி முதல்வர் நிரஞ்சன் ஸிங் (NIRANJAN SINGH), அவரது மனைவி, பேராசிரியர் ஜகிந்தர் ஸிங் (JAGINDAR SINGH), அவரது மனைவி மற்றும் லாலா தெஹல்ராம் (LALA TEHLRAM) ஆகியோர் ஜூலை 7ஆம் நாள் மெஹராபாத் வந்தனர்; மறுநாள் அவர்களை சந்திக்க பாபா மெஹராபாத் வருகை தந்தார். அவர்களிடையே நடந்த உரையாடலின் போது, பாபா, நிரஞ்சனிடம், **"உங்கள் அன்போடு ஒப்பிடுகையில், என் மீதான உங்கள் மனைவியின் அன்பு அதிகம்"** என்று குறிப்பிட்டார்.

அதற்கு நிரஞ்சன் ஸிங், "அது உண்மைதான் பாபா" என்றார்.

உரையாடல் 'இறை உணர்தல்' (REALIZATION OF GOD) என்ற தலைப்பை நோக்கித் திரும்பிய போது, பாபா கேட்டார், **"என்னுடன் இரவும் பகலும் வாழ்ந்து, எனக்கு சேவை செய்யும் எனது மண்டலிக்கு வழங்காமல், உங்களுக்கு ஏன் இறை-உணர்வு வழங்கப்பட வேண்டும்? நான் விரும்பினால், சாலையோரம் செல்லும் அந்நியனுக்குக் கூட இறை உணர்வை என்னால் வழங்க முடியும். அது எனது** (தற்போக்கு எண்ணம்) **விருப்பத்தைப் பொறுத்தது!"**

சில மந்திர சொற்களை அவர்களின் காதில் கிசுகிசுப்பதன் மூலம் சீடர்களுக்கு 'தீட்சை' வழங்கும் குருக்களைப் பற்றி பாபா விளக்கினார்; அந்தத் தருணத்தில், கபீரின் இந்த ஈரடிக் கவிதையை எடுத்துரைத்தார்:

தெய்வீக வார்த்தையை ஒருவரின் காதுகளில்
கிசுகிசுப்பதன் மூலம், அருள் புரிபவர், வரம்பிற்குள்
பணிபுரியும் குரு ஆவார், வரம்பற்ற குருநாதர் அல்ல!
வரம்பற்ற குருநாதர்கள் சத்குருக்களைத் தவிர
வேறு எவரும் இல்லை!

பாபா கூறினார், **"சத்குரு அனைத்தும் அறிந்தவர் ஆகையால், அவர் அறிய வேண்டியது எதுவுமில்லை. அவர் தெரிந்துகொள்ள எதுவும் இல்லை என்பதும் அவருக்குத் தெரியும்."**

அவர் மேலும் கூறியதாவது:

"என்னை நம்புங்கள், நான் ஆதிகாலத்தவன். அதில் எந்த சந்தேகத்திற்கும் இடம் இல்லை. நீங்கள் பார்க்கும் இந்த உடல் நான் அல்ல. இது ஒரு மேலாடை மட்டுமே. நான் அளவிறுதியற்ற உணர்வால் ஆனவன். நான் உங்களுடன் அமர்ந்து, உங்களுடன் விளையாடுகிறேன், உங்களுடன் சிரிக்கிறேன்; ஆனால் (நினைவில் கொள்ளுங்கள்), **நான் ஒரே நேரத்தில்**

அனைத்து ஆன்மீகத் தளங்களிலும் பணிபுரிகிறேன்! எனக்கு முன்னால் வாலிகள், பீர்கள், யோகிகள் மற்றும் துறவிகள் உள்ளனர்; அவர்கள் எனது வெவ்வேறு வடிவங்களில் இருக்கின்றனர், ஏனெனில் நான் அனைவரிடமும் அனைத்திலும் வேரூன்றிய மையமாக (ஆதாரமாக) **இருக்கிறேன். என்னிடமிருந்து எண்ணற்ற கிளைகள் பரந்து செல்கின்றன. உங்கள் அனைவரின் மூலமாகவும் பணிபுரிந்து, உங்களுக்காக துன்பப்படுபவனும் நானே!**

"புரிந்து கொள்வதில் எந்த அர்த்தமும் இல்லை. அன்பிற்கு அர்த்தம் உண்டு. கீழ்ப்படிதல் அதிக அர்த்தம் கொண்டது. எனது மேலங்கியைப் பற்றிக்கொள்வதில் மேலதிக அர்த்தம் உள்ளது.

"எனக்கு மூன்று விஷயங்கள் தெரியும்: வார்த்தையின் ஒவ்வோர் அர்த்தத்திலும் நான் அவதார புருஷர். நான் என்ன செய்தாலும் அது என் அளவிறுதியற்ற அன்பின் வெளிப்பாடு. உங்களுடைய அறியாமையால் நான் எல்லையற்ற வேதனையை நிரந்தரமாக அனுபவிக்கிறேன். எனது 'உலகளாவிய' துன்பத்தில் என்னைத் தாங்குவது எனது பேரின்ப நிலை, அத்துடன், எனது எல்லையற்ற நகைச்சுவை உணர்வு. எது ஒன்றையும் இழக்காமல் எழும் வேடிக்கையான சம்பவங்கள், எனது உலகளாவிய சுமையைக் குறைக்கின்றன.

"எனவே எப்பொழுதும் என்னை நினைவில் கொள்ளுங்கள்; எல்லா சூழ்நிலைகளிலும் மகிழ்ச்சியோடும், மனநிறைவோடும் இருங்கள், உங்களுக்கு உதவ நான் இருக்கிறேன்." நிரஞ்சன் ஸிங்கும் பிற அனைவரும் அவருடைய விளக்கங்களால் மிகையாக ஈர்க்கப்பட்டனர்; அதன் பின்பு பாபா மெஹராஸாத் திரும்பிச் சென்றார்.

அந்த ஆண்டு மௌன தினத்தை ஒட்டி, ஜூன் மாதம் ஆதி அனுப்பிய சுற்றறிக்கை ஒன்றில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

1958 ஜூலை 10 அன்று பாபாவின் அன்பர்கள் எவரும் அதே நாளில், முந்தைய ஆண்டுகளில் செய்தது போல் உபவாசம் மேற்கொள்ளவோ அல்லது மௌனம் அனுஷ்டிக்கவோ கூடாது. மாறாக, பாபா, தமது அன்பர்கள், கீழ் குறிப்பிடப்படுவதைச் செய்ய வேண்டும் என விரும்புகிறார்:

சரியாக ஜூலை 9 நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு (உங்கள் உள்ளூர் நேரம்), அதாவது ஜூலை 9 முடிந்த அடுத்த கணமே, ஜூலை 10 பூஜ்ஜிய நேரத்தில், உங்கள் தாய்மொழியிலோ அல்லது ஆங்கிலத்திலோ, உங்கள் வசதிக்கேற்ப, ஏழு முறை உரத்த குரலில் இதை மொழியுங்கள்: "பிரியமான கடவுளே, உமது சித்தம் நிறைவேறியது ("BELOVED GOD, THY WILL HAS COME TO PASS)."

பாபாவின் அறிவுறுத்தலின்படி, இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து, மண்டலி உட்பட 180 அன்பர்கள் மற்றும் பக்தர்கள், மெஹராபாத்தில் 1958 ஜூலை 9 புதன்கிழமை அன்று, ஒரு சிறப்புக் கூட்டத்திற்காக ஒன்றுதிரண்டனர். மஹாராணி ஷாந்தாதேவி (MAHARANI

SHANTADEVI), குருந்த்வாடியின் ராணி (RANI OF KURUNDWAD), அவரது மகன் மற்றும் போர் மஹாராஜா (MAHARAJA OF BHOR) ஆகியோரும் கலந்துகொண்டனர். இதேபோல், ஜபல்பூரைச் சேர்ந்த ரஜினிகாந்த் உபாத்யாயாவும் (RAJNIKANT UPADHYAYA) முதன்முறையாக மெஹராபாத் வந்தார். இவர்களைத் தவிர, நெருங்கிய நீண்டகால அன்பர்கள் மற்றும் ஊழியர்கள் மட்டுமே கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

பாபா அன்று மதியம் மெஹராபாத் வந்து அனைவரையும் தனித்தனியாக சந்தித்தார். ஆந்திராவின் மெஹர்ஸ்தான் மையத்தில் (MEHERSTHAN CENTER), பாபாவின் ஆளுயர சிலை ஒன்றை நிறுவும் திட்டம் குறித்து, கோடூரி கிருஷ்ணா ராவிற்கு அறிவுறுத்தப்பட்டது. முழுக் கட்டிடமும் அவரது சொந்தப் பணத்தில் கட்டப்பட வேண்டும் என்றும், வேறுபாடின்றி அனைவருக்கும் பொது வழிபாட்டிற்காக திறக்கப்பட வேண்டும் என்றும் அவரிடம் கூறப்பட்டது.

வாஸ் தேவ் கெய்ன் (WAS DEO KAIN) மற்றும் அவரது மனைவியிடம் பாபா இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்: **"பாபா இந்த அற்புதத்தை நிகழ்த்தினார் என்று மக்கள் சொல்வதானால், அந்தக் கதையை ஒரு காதில் வாங்கி, மறு காது வழி விட்டுவிடுங்கள். எனது மகத்துவம் அற்புதங்களை நிகழ்த்துவதில் இல்லை. எனது மகத்துவம், மனிதகுலத்திற்காகத் துன்பங்களை என் மீது தாங்கிக் கொள்வதில் தான் உள்ளது, ஏனெனில் நான் அனைவரையும் நேசிக்கிறேன்."** அவர் மேலும் கூறினார்: **"என்னை நேசித்தால், நீங்கள் கடவுளை நேசிக்கிறீர்கள். மேலும் கடவுள் நேர்மையாக நேசிக்கப்பட வேண்டும். அறம் மற்றும் பாவம் என்று அறியப்படுவது அனைத்தும், வலிமை மற்றும் பலவீனத்தைத் தவிர வேறொன்றுமில்லை."**

பாபா, அரன்காவ்ம் கிராமவாசிகளுக்கு தரிசனம் வழங்கினார். அதன்பின் கீழ் மெஹராபாத்தில் அமைந்த மண்டபத்தில் அனைவரும் ஒன்று திரண்டனர்.

பாபா கூறினார்: **"நாளை நான் சொல்லப் போவது அனைத்தும் மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு வார்த்தையையும் உன்னிப்பாக கவனிக்க வேண்டும். உலகக் கவலைகள் மற்றும் எண்ணங்கள் அனைத்தையும் விட்டுவிட்டு, உங்கள் மனதை இங்கே ஒருமுகப்படுத்துங்கள். நீங்கள் இப்போது உங்கள் நீண்ட பயணங்களால் சோர்வாக இருக்கிறீர்கள். நள்ளிரவில் நீங்கள் விழித்திருக்க வேண்டும். அதனால் சீக்கிரம் எழுந்திருக்காதீர்கள். நான்கைந்து மணிநேரம் நன்றாகத் தூங்குங்கள். அதன் மூலம் உங்கள் உடல்நிலை சீராக இருக்கும், எனக்கு முன்னால் அமர்ந்திருக்கும் வேளையில் நீங்கள் புத்துணர்ச்சியுடனும் முகமலர்ச்சியுடனும் நான் கூறுவதை ஜீரணிப்பீர்கள்."**

ஒவ்வொருவரிடமும் நலம் விசாரித்து, அவர்களுடன் சிறிது நேரம் கேலியும், கிண்டலும் செய்து, மாலையில் பாபா மெஹராஸாத் திரும்பிச் சென்றார்.

இரவில், பாபாவின் 1954 ஆந்திரா மற்றும் 1956 அமெரிக்க பயணங்களின் காணொளிப் பதிவுகள் மண்டபத்தில் திரையிடப்பட்டன; அதற்குப் பிறகு பாபா வழங்கிய அறிவுறுத்தலை மொழிய, குழு பன்னிரெண்டு மணி வரை ஆவலுடன் காத்திருந்தது. பாபாவின் விருப்பத்திற்கு இணங்க, நள்ளிரவில் மணியோசை எழுப்பி, துனி (நெருப்புக் குண்டம்) ஏற்றப்பட்டது; மெஹராபாத் முழுவதும் 'பிரியமான கடவுளே, உமது சித்தம் நிறைவேறியது!' என்ற அமைதியான முணுமுணுப்புக் குரல்கள் எதிரொலித்தது. துனி ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து மழை பொழியத் தொடங்கி, அந்த ஆண்டு நீண்ட நாளைய வறட்சியைப் போக்கியது.

1958 ஜூலை 10 வியாழன் அன்று காலை பாபா ஏழு மணியளவில் மெஹராபாத்திற்கு வந்து, தமது அறையில் ஒரு மணி நேரம் பல்வேறு குழுக்களுடன் அவரது பணியைப் பற்றி விவாதித்தார். காலை 8:00 மணிக்கு மண்டபத்திற்குள் நுழைந்த வேளையில், அது ஈரமாகவும் குளிர்ச்சியாகவும் இருந்தது, மேலும் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது, மண்டபத்தில் சற்று இருளாகவே இருந்தது. பாபா, **"இங்கு இருளாக இருப்பதால், தூங்குபவர்களை என்னால் கண்டுகொள்ள முடியாது!"** என்று நகைச்சுவையாகக் கூறி, வராண்டாவின் திரைச்சீலைகளை நீக்கி, அதிக வெளிச்சத்தை அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டார். பாதிரி ஒரு பெட்ரோமாக்ஸ் விளக்குடன் அங்குத் தோன்றிய போது, பாபா கூறினார், **"இப்போது கவனமாக இருங்கள்; நான் தூங்கி விழுபவர்களைப் பார்க்க முடியும்."**

மஹாராணி ஷாந்தாதேவியும், குருந்த்வாடி ராணியும் பாபாவிற்கு மாலை அணிவித்தனர். கூட்டத்தில் மாலை அணிவிப்பது தடைசெய்யப்பட்டது, ஆனால் பாபா இந்த முறை அனுமதித்தார். மாலைகளைக் கழற்றி, பக்கத்து மேசையில் வைத்தார். அப்போது அவர், **"பிரபலமான மும்பை பஜனைக் குழுவைப் பற்றி நான் கேள்விப்பட்டேன், அவர்கள் எங்கே இருக்கிறார்கள்?** என வினவினார்.

கேஷவ் நேனே (KESHAV NENE), குலாப்தாஸ் பாஞ்சால் (GULABDAS PANCHAL), கிஷோர் மிஸ்திரி (KISHOR MISTRY) ஆகியோர் முன் வந்தனர், பாபா அவர்களிடம் இரண்டு பஜனைப் பாடல்களைப் பாடுமாறு கேட்டுக்கொண்டார். கூடியிருந்தவர்கள் பாபாவிற்கு மிகவும் அருகாமையில் அமர்ந்த போது அவர் கேலி செய்தார்: **"எங்கும் நிறை ஒருவருக்கு கொஞ்சம் இடம் வேண்டும்!"** மும்பை குழுவினர் பாடத் தொடங்கியபோது, அனைவரும் பின்னால் நகர்ந்தனர். அவர்கள் பாடிக்கொண்டிருந்தபோது, பாபா தன் அருகில் இருந்த மலர் மாலைகளை எடுத்து மீண்டும் கழுத்தில் அணிந்துகொண்டார்.

பஜனை முடிந்ததும், பாபா கூறினார், **"ஒன்பது மணிக்குப் பின்னர், எவரும் என்னிடம் வரவோ, என்னை வணங்கவோ, தழுவவோ அல்லது எனது புகைப்படத்தை எடுக்கவோ கூடாது. இந்த முறை எனது 'உலகளாவிய செய்தி'க்காக சில தேர்ந்தெடுக்கப்பட்ட அன்பர்களை மட்டுமே**

அழைத்துள்ளேன்; அவர்கள் மூலமாக இந்தச் செய்தி உலகம் முழுவதும் பரவும். கவனமாக செவிமடுத்து, இதை உங்கள் ஆழ் இதயத்திற்கு எடுத்துச் செல்லுங்கள்."

கேஷவ் நிகம் 'மெஹர் புக்கார்' (MEHER PUKAR) எனும் இந்தி இதழின் இரண்டு சமீபத்திய பிரதிகளை பாபாவிடம் வழங்கினார். பாபா, சிலரது தூக்கம் மற்றும் உடல் நலம் குறித்து விசாரித்தார், மேலும் ஷாந்தாதேவியிடம், **"நேற்றிரவு, நீண்ட நாட்களுக்குப் பிறகு, நான் நன்றாகத் தூங்கினேன். நான் இங்கு மிகவும் சௌகரியமாகவும் அமைதியாகவும் உணர்கிறேன்"** என்று குறிப்பிட்டார்.

நவ்ஸாரியின் பச்சூபாய் (BACHOOBHAI OF NAVSARI) பஜனைப் பாடல்களைப் பாடத் தொடங்கினார். பாடல்களின் இடையே, பாஜ்வா (BAJWA) கிராமத்தின் ஹரிபாய் பட்டேல், உணர்ச்சிவசப்பட்டு, உரத்த குரலில் பாடத் தொடங்கினார். பட்டேலின் குரல் பாபாவை சிரிக்க வைத்தது. பச்சூபாயைக் குறித்து, பாபா அவதானித்தார், **"அவர் ஒரு நல்ல பாடகர் மட்டுமின்றி, அவர் எனது நல்ல அன்பரும் கூட. மேலும் டாக்டர் பரூச்சா அவரை மதுபானத்திற்கு அடிமையாகாமல் பாதுகாத்துள்ளார்."**

கேஷவை அறிமுகப்படுத்திய பாபா, **"அவர் ஹமிர்பூர் மாவட்டத்தின் தலைமைப் பணியாளர், மேலும் மாவட்டம் முழுவதிலுமிருந்தும் சில ரத்தினங்களைத் தேர்ந்தெடுத்துள்ளோம்"** என்று கூறினார். பாபா ஹமிர்பூரிலிருந்து வந்த அனைவரையும் எழுந்து நிற்குமாறு கேட்டுக்கொண்டார். அவர்களில் பவானி பிரசாத், லக்ஷ்மிசந்த் பாலிவால், கயா பிரசாத் கரே, பாபு ராம்பிரசாத் ஆகியோர் அடங்குவர். **"அவர்கள் வீடு வீடாகச் சென்று, எனது புகழைப் பாடுகிறார்கள். அவர்கள், ஒருவரையொருவர் சந்திக்கும் போது, 'ஜெய் பாபா' என்று வாழ்த்துகிறார்கள்! மாவட்டம் முழுவதும் என் அன்பால் நிரம்பி வழிகிறது, குழந்தைகள் கூட 'ஜெய் பாபா' எனக் கோஷமிடுகின்றனர்!"** என்று பாபா அறிவித்தார்.

ஆழ்ந்த பக்தியுடன், கேஷவ் தனது 'மெஹர் சாலிஸா' (MEHER CHALISA) கவிதைகளை வாசித்தார். மதுசூதன், அதைத் தொடர்ந்து, பூனா பஜனைக் குழுவினருடன் பாபாவின் இந்தி ஆரத்தியைப் பாடினார். பாபா மீண்டும் கூறினார்: **"ஒன்பது மணிக்குப் பிறகு மாலை அணிவிக்கக் கூடாது, வணங்கக் கூடாது, தழுவக் கூடாது, புகைப்படம் எடுக்கக்கூடாது. நான் உங்களுக்குச் சொல்லப் போவதை 100 சதவிகிதம் கவனத்துடன் கேட்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்."**

அப்போது அவர், **"நேற்று இரவு யார் தூங்க முடியவில்லை?"** என்று கேட்டதும், பலர் தங்கள் கைகளை உயர்த்தினர், பாபா காரணங்களை வினவினார். டாக்டர் தனபதி ராவ், தனது தூக்கமின்மையை விளக்க முடியாது என்றார்; நிரஞ்சன் ஸிங், அவர் ஓய்வு பெறும் நேரம் இதுவல்ல என்பதால் தூங்க முடியவில்லை என்றார். தனக்கு கடுமையான சளி இருப்பதாகவும், நள்ளிரவில் மீண்டும் மீண்டும் பாபா மொழியக் கூறியதை உச்சரிக்க முடியவில்லை என்றும்

பிரீதம் ஸிங் (PREETAM SINGH) கூறினார். பாபா அவரை **"பிரியமான கடவுளே, உமது சித்தம் நிறைவேறியது!"** என்று ஏழு முறை அவர் முன்னிலையில் கூற வைத்து, **"அவர் எனது பழைய அன்பர்"** என்று கருத்துரைத்தார்.

பின்பு பாபா அவதானித்தார்: **"ஜூலை 10ஆம் தேதியுடன் தொடர்புடைய சில விஷயங்களை நான் இன்று உங்களுக்குச் சொல்கிறேன். இந்த முறை நான் பெண்மணிகளை அழைக்கவில்லை. கடந்த முறை, அவர்கள் சகவாசத்திற்காக அழைக்கப்பட்டனர். ஆனால் நான் அறிமுகப்படுத்த சிலர் இங்கே உள்ளனர்."** பாபா, குருந்த்வாடியின் ராணி, மஹாராணி ஷாந்தாதேவி, (அவரது மகன், போர் மஹாராஜா), திருமதி சர்தார் ராஸ்தே (MRS. SARDAR RASTE), திருமதி பிரபா கெய்ன் (MRS. PRABHA KAIN) ஆகியோரை அறிமுகப்படுத்தினார். பெண்மணிகள் மெஹராபாத் மேல்மலையில் தங்க வைக்கப்பட்டனர், ஆண்கள் கீழ் மெஹராபாத்தில் தங்கினர்.

மஹாராணி ஷாந்தாதேவியைப் பற்றி பாபா கூறினார், **"ஷாந்தாதேவி நான் கேட்டதற்கு இணங்க, பூனா குருபிரசாத் அரண்மனையை எனது பயன்பாட்டிற்காக வழங்கியதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். அவர் என்னை இதற்கு முன் பார்த்ததில்லை, ஆனால் என் மீது அவருக்கு அன்பும் மரியாதையும் இருந்தது. அவர் ஒரு மஹாராணி என்பதால் அல்லது அவரிடம் செல்வம் இருப்பதால் நான் மகிழ்ச்சியாக இல்லை; ஆனால் அவர் நேர்மையான அன்பைக் கொண்டிருப்பதால் நான் அவரிடம் மகிழ்ச்சியாக இருக்கிறேன்."**

திருமதி நிரஞ்சன் ஸிங்கைப் பற்றி பாபா கூறினார், **"அவரது கணவருடன் ஒப்பிடும்போது, என் மீதான அவரது அன்பு அதிகம். நிரஞ்சன், அது உண்மையல்லவா?"** அவர் உறுதியுடன் 'ஆமாம்' என பதிலளித்தார்.

பேராசிரியர் ஜகிந்தர் ஸிங்கிடம் பாபா கேட்டார், **"உங்கள் மனைவியை விட என் மீது உங்கள் அன்பு அதிகமாக உள்ளதா?"**

அவர் பதிலளித்தார், "நாங்கள் இருவரும் உங்களை சமமாக நேசிக்கிறோம்."

சஞ்ஜீவனி டாக்கேபால்கரைக் குறிப்பிட்டு, பாபா கூறினார், **"அவர் நன்கு கற்றறிந்தவர், என்னை மிகவும் நேசிக்கிறார். அவர் ஒரு சமூக சேவகர், இந்தி மொழியில் விரிவுரைகள் வழங்குகிறார்."**

குணாதாய் காடேக்கரைக் குறித்து பாபா கருத்துத் தெரிவிக்கையில், **"அவர் சமீபத்தில் எம்.எஸ்சி.** (அறிவியலில் முதுகலைப் பட்டம்) **முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்ற திகம்பரின் தாயார். அவர் எனது விருப்பப்படி** (முதல் வகுப்பில்) **தேர்ச்சி பெறவில்லையென்றால், நான் அவர் முகத்தை மீண்டும் பார்க்கமாட்டேன் என்று அவரிடம் கூறியிருந்தேன். உண்மையாகவே, அவர் அற்புதமாகச் செய்திருக்கிறார், நான் அவரை எண்ணி மகிழ்ச்சியாக இருக்கிறேன்."**

சுபத்ரா பண்டெலுவைப் பற்றி பாபா, **"அவர் ஒரு சிறந்த பாடகர், மதுசூதன் பாடல்களை இயற்றி, இசையமைக்கிறார்"** என்று குறிப்பிட்டார்.

‘லைஃப் அட் இட்ஸ் பெஸ்ட்’ (LIFE AT ITS BEST) **எனும் குறுகிய கையேட்டை படிக்காதவர்கள் யார்?**’ என்று பாபா கேட்கவே, பிரதிகள் இல்லாத ஒவ்வொருவருக்கும் அது பரிசாக வழங்கப்பட்டது. பாபா, திருமதி நிரஞ்சன் ஸிங்கிடம் கூறினார், **“கையேடு ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது, எனவே நீங்கள் நிரஞ்சனிடமிருந்து அதைப் பற்றி அனைத்தையும் தெரிந்துகொள்ள வேண்டும்!”**

பாபா ஐந்து நிமிட இடைவேளையை அனுமதித்து, நிரஞ்சன் ஸிங், ஜகிந்தர் ஸிங் இருவரையும் அழைத்து, **அவர்களின் தலையும்** (அறிவு) **இதயமும்** (அன்பு) **சமநிலையில் இருப்பதைக் குறித்து** பாராட்டினார். இந்த நேரத்தில், சில அன்பர்கள் பாபாவின் பாதங்களில் வீழ்ந்து வணங்கியதை அவர் விரும்பவில்லை என்றாலும், பாபா அவர்களை மன்னித்தார். காடேக்கரும் அவ்வாறு தலைவணங்கும் ஆர்வத்தில் இருந்தார்; ஆனால், பாபா அவரைக் கடுமையாகக் கண்டித்ததால், பிறர் ஒருவரும் தலைவணங்கத் துணியவில்லை.

அனைவரும் ஒன்றுகூடிய பிறகு, பாபா கூறினார்: **“எனக்கு எந்த விதமான பரிசுகளையும் அனுப்ப வேண்டாம் என்று நான் உங்களுக்கு சகவாசத்தில் கூறியிருந்தேன். இன்று நான் மீண்டும் சொல்கிறேன், எவரும், பணம் அல்லது காசோலையாக, எனக்கோ அல்லது ஆதிக்கோ அனுப்ப வேண்டாம்; எந்தப் பரிசும் வாங்க வேண்டாம் என்று ஆதியிடம் கேட்டுள்ளேன். ஆதலால், உங்கள் பணத்தை அல்லது பரிசை, திருப்பி அனுப்பும் தொந்தரவுக்கு அவரை ஆளாக்காதீர்கள். இதை நினைவில் கொள்ளுங்கள்; இது முக்கியம் என்பதால்தான் நான் அதை வலியுறுத்துகிறேன்.**

“நேற்றிரவு, நீங்கள் ஆந்திரா திரைப்படத்தையும், கடல் அருகில் அமைந்த மர்டில் பீச் மையத்தில் எடுத்த காணொளி படத்தையும் பார்த்திருப்பீர்கள். மர்டில் பீச் 500 ஏக்கர் நிலத்தை உள்ளடக்கியது. எலிஸபெத் பேட்டர்ஸன், அதை எனக்கு அன்புப் பரிசாக வழங்கினார், அது எனது பெயரில் உள்ளது. நான் மர்டில் பீச் மையத்தில் இருந்தபோது, என்னைச் சுற்றி சகவாசத்தில் கலந்துகொண்ட அனைவரையும் ஒன்றாக அழைத்து, நேரம் நெருங்கிவிட்டது, எனவே, இனி எனது பெயரில் எந்த சொத்தும் இருக்கக்கூடாது என்று அவர்களுக்குத் தெரிவித்து, நானாகவே, மையத்தை அவர்கள் பெயருக்கு மாற்றினேன்.”

குடும்ப சாஸ்திரி, பாபா கூறிய வார்த்தைகளை தெலுங்கில் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தபோது, பாபா இடையே குறுக்கிட்டு, **“குடும்ப சாஸ்திரி சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தேன்; ஆனால், ‘காரு’** (GARU) **என்ற வார்த்தை எப்பொழுதும் எனது பெயருடன் ஏன் இணைக்கப்படுகிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை?”** என்றார். சாஸ்திரி விளக்கினார், **“தெலுங்கில், பாபாகாரு என்ற சொல் பாபாஜியைப் போன்றது.”** (‘ஜி’ என்ற பின்னொட்டு, இந்தியில் மரியாதைக்குரிய சொல்.)

பாபா தொடர்ந்தார்: **"மெஹராபாத் அல்லது மெஹராஸாத் எனது பெயரில் இல்லை. என் இறுதி உறைவிடம் மட்டுமே எனது பெயரில் உள்ளது.**

"இப்போது 'பர்வர்திகார்' பிரார்த்தனை மொழியப்படும். இது குருநாதருக்கான பிரார்த்தனை என்றும் அழைக்கப்படுகிறது, அதை எவரும் சத்தமாக இங்கே மொழியக்கூடாது. பிரார்த்தனையின் போது, அனைத்தையும் மறந்துவிட்டு, பிரார்த்தனையின் வார்த்தைகளிலும், என் மீதும் கவனம் செலுத்துங்கள்."

டான் மொழிந்த பிரார்த்தனையை, குடும்ப சாஸ்திரி தெலுங்கிலும், கேஷவ் நிகம் இந்தியிலும், டாக்கே மராட்டியிலும் எடுத்துரைத்தனர்.

பாபா பின்னர் உறுதிப்பட அறிவித்தார்: **"நான் ஆதிகாலத்தவன், எவரையும், எதையும் மன்னிக்கும் தெய்வீக அதிகாரம் என்னிடம் உள்ளது!"**

பாபா இதை அறிவித்த சில நிமிடங்களுக்குப் பிறகு, ரவிகாந்த் ராவல், பாபாவிடம் தனது பாவங்களை மன்னிக்கும்படி வேண்டினார்; அவரது குறுக்கீடு பாபாவைப் பெரிதும் அதிருப்திக்குள்ளாக்கியது. அவர் அனைவரையும் ஐந்து நிமிடங்களுக்கு மண்டபத்தை விட்டு வெளியேறுமாறு அறிவுறுத்தினார்; சூழ்நிலை மேலும் மிகவும் தீவிரமானது. பாபாவின் மனநிலையில் திடீரென பெரும் மாற்றம் ஏற்பட்டது; குழு மீண்டும் கூடியதும், பாபா, ராவலைத் திருத்தும் விதத்தில், **"நான் பாபா என்றால், நான் உங்கள் இதயத்தை அறியவில்லையா அல்லது உங்கள் இதயத்தின் குரலைக் கேட்கவில்லையா? உங்களை மன்னிக்குமாறு கூற வேண்டிய தேவைதான் என்ன?"** என்று வினவி, பாபா அவரை மன்னித்தார்.

கபடி விளையாட்டை நினைவு கூர்ந்த பாபா, அதன் விதிகளை அங்கிருந்தவர்களுக்கு விளக்குமாறு டாக்கேயிடம் கேட்டுக் கொண்டதும், அதை அவர் செய்தார். பாபா மேலும் கூறினார், **"இந்த விளையாட்டில், வெளி நபர் ஒருவர், ஏதேனும் விளையாட்டு வீரரைத் தடுத்தால், அவர் மட்டமான மனிதர் என்று அழைக்கப்படுகிறார்; இந்த வார்த்தை ராவலுக்குப் பொருந்தும்!"**

பாபா அவரிடம், **"நான் சொன்னதை நீங்கள் புரிந்துகொண்டீர்களா?"** இல்லை என்று ராவல் தலையை அசைத்தார். பாபா உடனே, **"நீங்கள் கொழுப்பு நிறைந்தவர் ஆனால் மூளை இல்லை!"** என்றார்.

அவர் ஆதி சீனியர், புர்ஜர் மேத்தா இருவரிடமும் ராவலை வெளியே அழைத்துச் சென்று விளக்குமாறு கூறினார். அவர்கள் திரும்பி வந்ததும், பாபா ராவலை நோக்கி, **"உங்கள் செயல் எனக்கு அதிருப்தி அளித்தது, ஆனால் உங்கள் மீது குற்றமில்லை. பாபாவை மட்டுமே குற்றம் சொல்ல வேண்டும்"** என்று கூறினார்.

சிறிது நேரத்தில், பாபா கேட்டுக்கொண்டதற்கு இணங்க, எரச் மனம் வருந்தி மன்னிப்புக் கோரும் இரங்கல் பிரார்த்தனையை (REPENTANCE PRAYER) மொழிந்த பின்பு, பாபா கூறினார்:

இப்போது எனது இறுதிச் செய்தியையும், ஆலோசனையையும் வழங்குகிறேன். அதன் பின்னர், எனது இறுதி உரை உங்களுக்கு

வாசிக்கப்படும். அவதார புருஷரின் இறுதிச் செய்தியையும், உரையையும் அவர் முன்னிலையில் கேட்கும் வாய்ப்பை அடையப்பெற்ற நீங்கள் அனைவரும் எவ்வளவு பெரிய பாக்கியவான்கள். இதற்குப் பிறகு, நீங்கள் அவதார புருஷரிடமிருந்து எந்தச் செய்திகளையும் சொற்பொழிவுகளையும் கேட்க வேண்டியதில்லை. எனவே அவற்றை உன்னிப்பாக கவனிக்க முயற்சி செய்யுங்கள். இங்கிருந்து வெளியேறிய பின்னர், இங்கே நடந்த அனைத்தையும் என் அன்பர்களுக்குத் தெரிவிக்கவும். எனது இறுதிச் செய்தியை தொலைதூரத்திற்குப் பரப்புங்கள். ஒருவர் என்னை நம்புகிறாரா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல், இந்தச் செய்தியை அனைவரிடமும் கொண்டுசெல்ல முயற்சிக்கவும். இது உலகளாவிய செய்தி; அனைவருக்காகவும் வழங்கப்படுகிறது.

ஒன்பது மணிக்குப் பிறகு, நீங்கள் எனது பாதங்களைத் தொட்டு வணங்க வேண்டாம், என்னைப் போற்றிப் புகழவும் வேண்டாம், எனது பணியை முடித்துவிட்டு நான் புறப்படும்போது, என்னைப் பின்தொடரவும் வேண்டாம்.

1958 ஜூலை 14 முதல் நவம்பர் 30 வரை, எவரும் என்னையோ, எனது மண்டலியையோ, மெஹராஸாத்திலோ அல்லது மெஹராபாத்திலோ, பார்க்கவோ, என்னுடனோ அல்லது அவர்களுடன் தொடர்புகொள்ளவோ முயற்சிக்கக்கூடாது. எந்த சூழ்நிலையிலும், மிகப்பெரிய பிரச்சினை அல்லது யார் ஒருவருடைய மரணம் ஏற்பட்டாலும், எவரும் எனக்குத் தொலைத்தந்தி அனுப்பக்கூடாது. இந்தக் காலக்கட்டத்தில் மெஹராஸாத்திற்கு வரவேண்டாம், மெஹராபாத்திற்கும் போகவேண்டாம் என்றும் ஆதிக்கு அறிவுறுத்தியிருக்கிறேன். நான் ஏதாவது பணி நிமித்தம் அழைத்தால் மட்டுமே வரமுடியும். எனக்குப் பரிசாக அனுப்பப்படும் பணம் அல்லது பொருள் எதுவாயினும், அதைத் திருப்பித் தரும்படியும் அவருக்கு உத்தரவிட்டுள்ளேன். எனவே உங்கள் பணத்தையோ அல்லது காசோலைகளையோ திருப்பி அனுப்புவதன் மூலம், ஆதியின் மீது தேவையில்லாத பாரத்தை சுமத்தாதீர்கள். இந்தக் காலகட்டத்தில், மெஹராஸாத் மண்டலி எவரும் மெஹராபாத்திற்குச் செல்ல முடியாது, மாறாக, அவர்கள் யாருடனும் தொடர்பு கொள்ள முடியாது. இந்த விதி, மெஹராஸாத், மெஹராபாத் இரண்டு இடங்களிலும் வாழும் எனது அனைத்து மண்டலிக்கும் பொருந்தும்.

எனது பணிக்கு எரச் எவ்வளவு முக்கியம் என்று உங்களுக்குத் தெரியுமா? எனது பக்கத்தில் இருப்பதன் மூலம், அவர் 24 மணி நேரமும் எனக்கு சேவை செய்கிறார், என் அருகில் இருந்து என்னைக் கண்காணித்து வருகிறார், எனது அடையாளக் குறிகளையும், சைகைகளையும் வாய்விட்டு மொழிகிறார், எனது எந்தவொரு சிறிய தேவையையும் கவனித்துக்கொள்கிறார், மேலும், அவர் கடிதப் பரிமாற்றத்தைக் கையாளுகிறார். ஆனால் முதன்முறையாக, இந்தக் காலகட்டத்தில்

(நான்கரை மாதங்கள்) நான் அவரை என்னிடமிருந்து விலக்கி மெஹராபாத்தில் தங்க வைப்பேன். இதிலிருந்து, எனது அறிவுறுத்தல்களின் முக்கியத்துவத்தை நீங்கள் புரிந்து கொள்ளலாம். அவற்றை முழுமையாகப் பின்பற்றுவதோடு, பிற அன்பர்களையும் பின்பற்றச் செய்யுங்கள்.

அங்கிருந்த அனைவரிடமும் பாபா மேலும் கூறினார்: **"நான் உங்களை இங்கு எந்தக் கூட்டம், சகவாசம், தரிசனம், அல்லது நேர்காணலுக்காக அழைக்கவில்லை; ஆனால், நான் உங்களுக்கு அறிவிக்கப் போவதைக் கேட்பதற்காக மட்டுமே அழைத்தேன்."**

பாபாவின் வார்த்தைகள் மண்டபத்தில் அதி தீவிரமான சூழ்நிலையை உருவாக்கியது. அதன் பின்னர், எரச் **'மெஹர் பாபாவின் உலகளாவிய செய்தி'**யைப் படித்தார்:

நான் போதிக்க வரவில்லை, ஆனால், விழிப்புணர்வை உருவாக்கவே வந்துள்ளேன். எனவே உபதேசங்கள் எதையும் நான் உங்கள் முன்னிலையில் வைக்க வரவில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

நித்தியம் முழுவதும் நான் மனித குலத்திற்காக முன்வைத்த கொள்கைகளும், போதனைகளும் மனிதர்களால் அலட்சியப் படுத்தப்பட்டன. கடவுளின் வார்த்தைகளை மதித்து வாழ முடியாத மனிதனின் இயலாமை, அவதார புருஷரின் போதனைகளைக் கேலிக்கூத்தாக்குகிறது. அவர் போதித்த கருணையைக் கடைப்பிடிப்பதற்கு பதிலாக, மனிதன் அவரது பெயரில் கொடுமைகளை இழைக்கிறான். அவர் போதித்த பணிவு, தூய்மை, சத்தியம், போன்றவற்றை வாழ்ந்துகாட்டுவதற்கு பதிலாக, மனிதன் வெறுப்பு, பேராசை, பலாத்காரம் ஆகியவற்றில் இறங்கிவிட்டான்.

கடந்த காலத்தில் கடவுள் வகுத்த கொள்கைகள் மற்றும் போதனைகளுக்கு மனிதன் செவிசாய்க்காத காரணத்தினால் தான், தற்போதைய அவதார வடிவில் நான் மௌனம் கடைப்பிடிக்கிறேன். நீங்கள் கேட்ட அனைத்திற்கும் போதுமான வார்த்தைகள் வழங்கப்பட்டுவிட்டன - இப்போது அவற்றை வாழ வேண்டிய நேரம் இது. கடவுளின் மிக மிக அருகில் நெருங்க வேண்டுமாயின், நீங்கள் 'நான்', 'எனது', 'என்னை', 'என்னுடைய' ஆகியவற்றிலிருந்து மிக மிக விலகியிருக்க வேண்டும். வேறு எதையும் துறக்கத் தேவையில்லை; உங்களைத் துறந்தால் போதும். அது பார்வைக்கு நடவாத ஒன்றுபோலத் தோன்றினாலும், உண்மையில் அது மிக எளிதில் நடக்கக்கூடியது தான். என் அருளால் நீங்கள் உங்களைத் துறக்க இயலும். அந்த அருளைப் பொழியவே நான் வந்துள்ளேன்.

உங்கள் மீது கோட்பாடுகளைத் திணிக்க வரவில்லை என்று நான் மீண்டும் கூறுகிறேன். நான் வழங்குவதற்காக வந்த சத்தியத்தின் அலையை நான் விடுவித்தால், மனிதனின் அன்றாட வாழ்க்கையில் அந்தக் கோட்பாடுகள் நிலைபெற்றிருக்கும். நான் பேசாத வார்த்தைகள் வாழ்வில் புத்துயிர் பெற்று வாழும்.

நான் மனிதனின் சுய அறியாமை எனும் திரையால் என்னை மறைக்கிறேன்; மேலும் ஒரு சிலருக்கே எனது மகிமையை வெளிப்படுத்துகிறேன். எனது தற்போதைய அவதார வடிவம், இந்தக் காலச்சுழற்சியின் கடைசி அவதாரமாகும், எனவே எனது வெளிப்பாடு மிக மிகப் பெரியதாக இருக்கும்.

நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது, என் அன்பின் தாக்கம் உலகளாவியதாக இருக்கும்; மேலும் படைக்கப்பட்ட உயிர்கள் அனைத்தும் அதைப் புரிந்துகொள்ளும், உணர்ந்துகொள்ளும், பெற்றுக்கொள்ளும். ஒவ்வொரு தனிமனிதனும் அவனுக்கே உரித்தான வழியில், தன் அடிமைத்தனத்திலிருந்து விடுபட அது உதவும். நீங்கள் உங்களை எப்போதும் நேசிப்பதை விட, அதிகமாக உங்களை நேசிக்கும் இறை அன்பன் நான். எனது மௌனம் கலைந்தால், உங்களின் உண்மைப்பொருளான பரமாத்மாவை அறிந்து கொள்வதில் அது உங்களுக்கு உதவும்.

உலகில் நிலவும் அனைத்து குழப்பங்களும், இன்னல்களும் தவிர்க்க முடியாதவை; அதற்காக நாம் எவரையும் குறைகூற வேண்டியதில்லை. நடக்கவேண்டியது நடந்துவிட்டது; என்ன நடக்க வேண்டுமோ அது நடக்கும். உங்கள் மத்தியில் நான் வருவதைத் தவிர வேறு வழி இருந்ததும் இல்லை, இப்போதும் இல்லை. உங்களிடையே வந்தாக வேண்டிய நான் வந்திருக்கிறேன். நான் ஆதிகாலத்தவன்.

'என் இறுதிப் பணியை என்னுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்' என்ற தலைப்பில், பாபா தனது அன்பர்களுக்கு, அவரது 'பரிந்துரை' என்று கூறியதை எரச் வாசித்தார்:

எனது சமீபத்திய அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா பயணம், மேற்கத்திய நாடுகளில் நான் மேற்கொண்ட கடைசி பயணமாக இருக்கும். அங்கு நிகழ்ந்த சகவாசத்தின் போது, நான் தெளிவாக எடுத்துரைத்த இரண்டு விஷயங்களில் இதுவும் ஒன்றாகும். இரண்டாவது விஷயம் கிழக்கில் வாழும் என் அன்பர்களுக்கும் பொருந்தும்; அதாவது இனிமேல், எவரும் என்னிடமிருந்து எந்தவிதமான சொற்பொழிவுகள், தரிசனங்கள், சகவாசங்கள், நேர்காணல்களை எதிர்பார்க்கவோ அல்லது நாடவோ கூடாது.

ஏனெனில், எனது மௌனத்தைக் கலைக்கும் நேரம், முன்னெப்போதையும் விட நெருங்கிவிட்டதால், 1958 ஜூலை 14 முதல், ஆறு மாதங்களுக்குள் அது தொடர்பான அனைத்தையும் செய்து முடிக்க வேண்டும்.

இந்தியா, அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவில் சமீபத்தில் நடந்த மூன்று சகவாச நிகழ்ச்சிகளின் போது, இந்த நாடுகளில் வாழும் ஒவ்வொரு நபரிடமும் ஒரு குறிப்பிட்ட கடமையை நான் ஒப்படைத்தேன். அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் எனது சகவாச நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டவர்களுக்கு, சிறப்பு அறிவுறுத்தல்கள் மற்றும் உத்தரவுகள்

அனுப்பப்பட்டுள்ளன, மேலும் கிழக்கில் வாழும் எனது அன்பர்களில் பலருக்கு நான் சில அறிவுறுத்தல்களை வழங்குகிறேன்.

அடுத்த ஆறு மாதங்களில் நிகழும் எனது இறுதிக் கட்ட பணியை என்னுடன் பகிர்ந்து கொள்ள, என்னை நினைவில் கொள்பவர்கள் அனைவரும், என்னை மேலும் மேலும் நேசிக்க முயற்சிக்க வேண்டும்; நான் அவர்களுக்கு வழங்கிய முக்கிய கட்டளைகளை நிறைவேற்றத் தவறக்கூடாது.

இறுதியாக கூட்டம் நிறைவடைவதற்கு முன்பு, பாபாவின் '**கடவுள் ஒருவரே உளதாயிருக்கிறார்**' (GOD ALONE IS) எனும் 'இறுதி சொற்பொழிவு', எரச்சால் வாசிக்கப்பட்டது:

'ஏக இறைவனின் எல்லையற்ற உணர்வு' அதன் அளவில் எல்லை அற்றது. எனவே, அது எந்த காலநேர அளவிலும், இடத்தைப் பொறுத்தவரையிலும் அளவில் குறைய முடியாது. 'ஏக இறைவனின் எல்லையற்ற உணர்வு', எல்லையின்றி இருப்பதால், அனைத்து உணர்வு நிலையின் ஒவ்வோர் அம்சத்தையும் உள்ளடக்கியது. உணர்வற்ற நிலை என்பது கூட 'ஏக இறைவனின் எல்லையற்ற உணர்வின்' அம்சங்களில் ஒன்றாகும்.

இவ்வாறு, 'ஏக இறைவனின் எல்லையற்ற உணர்வு' என்பது உணர்வற்ற தன்மையையும் உள்ளடக்கியது. அது நிலைத்து நிற்பதோடு, அனைத்தையும் உள்ளடக்கி, அதனுள்ளே ஊடுருவி, உணர்வற்ற நிலையை முடிவுக்குக் கொண்டுவருகிறது - இது 'ஏக இறைவனின் எல்லையற்ற உணர்விலிருந்து' பாய்ந்து அதனுள்ளே ஆட்கொள்ளப்படுகிறது.

'ஏக இறைவனின் எல்லையற்ற உணர்வை' ஐயத்திற்கு இடமின்றி உறுதி செய்வதற்காக, எனக்கு 'ஏக இறைவனின் எல்லையற்ற உணர்வு' இருப்பதாக நான் அறிவிக்கிறேன்; நான் 'ஏக இறைவனின் எல்லையற்ற உணர்வு' என்பதால் இதை மிகவும் வலியுறுத்திக் கூற முடியும். அனைத்தும் நானே! அனைத்தையும் கடந்த அனைத்திற்கும் அப்பாற்பட்டவனும் நானே!

நான் உங்களில் இருக்கிறேன் என்ற உணர்வுடன் நான் எப்பொழுதும் உளதாயிருக்கிறேன், அதே வேளையில் நான் உங்களில் இருக்கிறேன் என்பதை நீங்கள் உணரவில்லை. அனுதினமும், நான் உங்களுக்கு ஆதரவளித்து, உங்கள் உணர்வைப் பகிர்ந்து கொள்கிறேன். இப்போது நீங்கள் என்னை உங்கள் ஆழ் இதயத்தில் உறுதியாக நிலைநிறுத்தி, ஒரு நாள் என் உணர்வைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

அனைத்தும் கடவுளே, கடவுளைத் தவிர பிற அனைத்தும் ஒன்றுமே இல்லாதவை என்ற முடிவிலா உணர்வின் அனுபவத்தை, உண்மையில் கொண்டிராத மனிதன், அனைத்தும் உளதாயிருப்பதாக உணர்கிறான்: காற்று உள்ளது. நீர் உள்ளது; நெருப்பு, பூமி, ஒளி, இருள் உள்ளன; கல், இரும்பு, தாவரங்கள், பூச்சி, புழு, மீன், பறவை, மிருகம், மனிதன் போன்ற அனைத்தும்

உள்ளன; நல்லது, தீயது, துன்பம், இன்பம் அனைத்தும் உள்ளன. இவ்வாறு, அவன் 'எதுவுமே இல்லை' எனும் அறுதியும், இறுதியுமான முடிவுக்கு வந்து, 'கடவுள் ஒருவரே உளதாயிருக்கிறார்' என்பதை உணரும் அந்தத் தருணம் வரை, 'அனைத்தும் உள்ளது' என்று கூறும் அனைத்திற்கும் முடிவே இல்லை.

'கடவுள் ஒருவரே உளதாயிருக்கிறார்' என்பதை மனிதன் ஏற்றுக்கொள்வதும், எல்லா சூழ்நிலைகளிலும் ஏற்றுக்கொண்டே செல்வதும் எளிதல்ல. 'கடவுள் ஒருவரே உளதாயிருக்கிறார்' என்பதை அவன் உறுதியாக ஏற்றுக்கொண்ட பின்னரும், அவன் உறுதியாக ஏற்றுக்கொண்டதை உணர்ந்து கொள்வது மிகவும் கடினம், ஆனால் அது சாத்தியமற்றது அல்ல. 'இறை உணர்தல்' என்றால், மனிதன், தான் மனிதன் என்பதை முழுமையாக உணர்ந்து கொள்வதற்கு பதிலாக, மனிதன், தான் கடவுளாக இருக்கிறார், கடவுளாக இருந்தார், எப்பொழுதும் கடவுளாகவே இருந்துகொண்டிருக்கிறார், கடவுளாகவே இருப்பார் என்ற முழு உணர்வுடன் தன்னில் மாற்றத்தைக் காண்கிறான்.

தெரிந்தோ தெரியாமலோ, மனிதன் எப்பொழுதும் 'ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளை, பரமாத்மா'வை உணர்ந்து கொள்வதற்கான இறுதி இலக்கைத் தேடும் முனைப்பில் இருக்கிறான். மனிதனுக்கு மிக அருகாமையிலும், ஆழ் இதயத்தின் அகத்திலும் இருப்பது அவனது ஆன்மாதான்; ஆனால், வேடிக்கை என்னவெனில், அவன் அதிலிருந்து வெகு தொலைவில் இருப்பதாக உணர்கிறான். எண்ணற்ற நெடுஞ்சாலைகள், இடைவழிகள் மற்றும் வாழ்க்கை, மரணம் போன்ற பல பாதைகள் வழியாக, உண்மையில் கடப்பதற்கென எந்த தூரமும் இல்லாத போதும், இறுதி இலக்கை நோக்கிய அவனது பயணங்களுக்கு முடிவே இல்லை என்ற பிரமையில் அவன் வாழ்கிறான். மனிதனாக முழு உணர்வை அடையப் பெற்று, அவன் தன் இலக்கை அடைந்துவிட்ட இத்தருணத்தில், அவன் ஆன்மாவை உணர்ந்து கொள்ளும் திறனை அடையப் பெற்றிருக்கிறான். இருந்தும், அவனால் இந்த 'தெய்வீக விதி'யை உணர முடியவில்லை, ஏனெனில் அவனுடைய உணர்வு, அவனது நெறி தவறிய, வரையறுக்கப்பட்ட, முடிவுத் தன்மையுள்ள சுயம் எனும் மனம் மீது, தனது முழு கவனத்தையும் செலுத்துகிறது - காரணம், இந்த உணர்வு நிலையை அடைவதற்கு ஊடகமாக இருந்ததே இந்த மனம் ஒன்றுதான் என்பதை நன்றாக புரிந்துகொள்ள வேண்டும்.

தான் யார் என்பதை அறிந்து கொள்வதற்கு முன்னர், ஒரு மனிதன் தனது உணர்வற்ற நிலையிலிருந்து, உணர்வு நிலையை நோக்கி நகரும் இடைவிடாத பயணத்தில், தன்மீது சுமந்துகொண்டிருக்கும் மாயையான அறிவின் பாரங்களை அகற்ற (களைய) வேண்டும். அன்பின் மூலம் மட்டுமே நீங்கள் இதைக் களைய அல்லது அகற்றத் தொடங்க முடியும், இதன் மூலம் உங்களுக்குத் தெரியாத அனைத்திற்கும், இறுதியில் முற்றுப்புள்ளி வைக்க

முடியும். இறை-அன்பு அனைத்து மாயைகளையும் ஊடுருவிச் செல்லும் அதே நேரத்தில், எந்த மாயையும் இறை-அன்பை ஊடுருவ முடியாது.

உங்களால் நேசிக்க முடியாதவர்களை நேசிக்கத் தொடங்குவதன் மூலம், கடவுளை நேசிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். பிறருக்கு சேவை செய்வதில், நீங்கள் உங்களுக்கு சேவை செய்வதைக் காண்பீர்கள். நீங்கள் பிறரை எவ்வளவு அதிகமாகக் கருணையோடும் பெருந்தன்மையோடும் நினைவுகூருகிறீர்களோ, அவ்வளவு குறைவாக உங்களை நினைவில் கொள்கிறீர்கள்; மேலும் உங்களை எவ்வளவு குறைவாக நினைவில் கொள்ள முடியுமோ, அவ்வளவுக்கு நீங்கள் உங்களை மறந்து விடுகிறீர்கள். நீங்கள் உங்களை முற்றிலும் மறந்துவிடும் அந்த கணத்தில், அனைத்து அன்பின் ஆதாரமாக நீங்கள் என்னைக் காண்கிறீர்கள்.

கிளிப்பிள்ளைத்தனத்தை அதன் அனைத்து அம்சங்களிலும் கைவிட்டு விடுங்கள். நீங்கள் உண்மையில் உண்மையாகவும், நியாயத்தில் நியாயமாகவும் இருக்க வேண்டும் என்று நினைப்பதை நடைமுறைப்படுத்தத் தொடங்குங்கள். உங்கள் நம்பிக்கை மற்றும் நாட்டங்களை வெளியளவில் காட்ட வேண்டாம். நீங்கள் உங்கள் மதம் சார்ந்த நம்பிக்கையை விட்டுவிட வேண்டாம்; ஆனால் வெறும் சடங்கு சம்பிரதாயங்களுடன் மேலோட்டமாக ஒட்டிக்கொள்வதைக் கைவிட வேண்டும். அனைத்து மதங்களுக்கும் அடிப்படையான உண்மையின் கருப்பொருளை அடைய, மதத்திற்கு அப்பால் செல்லவேண்டும்.

முடிவில்லா காலநேரத்தில், கடவுளின் மிகப்பெரிய அன்பளிப்பு தொடர்ந்து அமைதியாக வழங்கப்பட்டுவருகிறது. ஆனால் மனிதகுலம் அவரது மௌனத்தின் இடிமுழக்கத்திற்கு முற்றிலும் செவிடாகும்போது, கடவுள் மனிதனாக அவதாரம் எடுக்கிறார். மாய-மயக்கத்தில் தத்தளிக்கும் மனிதகுலத்தை ஆட்டி, அசைத்து, அதன் உண்மையான விதியின் உணர்வு நிலைக்குக் கொண்டுவருவதற்கும், மனித உருவில் பூமியில் இருப்பதன் மூலம் உலகிற்கு ஆன்மீக உந்துதலை வழங்குவதற்கும், அளவிறுதியற்ற இறைவன் மனித உருவில் அவதார புருஷராக வருகிறார். அவர் தனது உலகளாவிய பணிக்காகத் தமது உடலைப் பயன்படுத்துகிறார், அதன் நோக்கம் நிறைவேறிய அடுத்த கணமே, தமது மனித உடலைக் கைவிடுகிறார்.

கடவுள் மீண்டும் மீண்டும் பல்வேறு வடிவங்களில் வந்துள்ளார், வெவ்வேறு மொழிகளில் ஒரே ஒரு சத்திய வாக்கை மொழிந்துள்ளார் - ஆனால் அதற்கிணங்கி நடைமுறையில் வாழ்பவர்கள் எத்தனை பேர்? ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளை தனது வாழ்வின் உயிர் மூச்சாக மாற்றுவதற்கு பதிலாக, மனிதன் மீண்டும் மீண்டும் அதை ஓர் இயந்திரத்தனமான மதமாக மாற்றி, துன்புறும் வேளையில் சாய்ந்து கொள்ளும் ஊன்றுகோலாக, அவனது மனசாட்சிக்கு இதமான அருமருந்தாக

அல்லது கடந்த கால அடிச்சுவடுகளைப் பின்பற்றும் பாரம்பரிய பக்கபலமாக வழிநடத்திச் செல்கிறான்.

கடவுளின் வார்த்தைகளை வாழ முடியாத மனிதனின் இயலாமை, அவர்களை கேலிக்கூத்திற்கு உள்ளாக்கிறது. 'ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு' அல்லது 'உன்னைப் போலவே உன் அண்டை வீட்டாரை நேசி' என்ற கிறிஸ்துவின் போதனையை எத்தனை கிறிஸ்தவர்கள் பின்பற்றுகின்றனர்? 'கடவுள் அனைத்திற்கும் மேலானவர் என்ற எண்ணத்தை எப்பொழுதும் கொண்டிருங்கள்' என்ற முஹமதின் கட்டளையை எத்தனை முஹமதியர்கள் பின்பற்றுகின்றனர்? எத்தனை இந்துக்கள் 'நீதியின் ஜோதியை எப்பாடுபட்டேனும் தாங்கிக்கொள்கின்றனர்? பௌத்தம் மொழிந்த 'தூய இரக்க வாழ்வு' போதனையை எத்தனை பௌத்தர்கள் வாழ்கின்றனர்? எத்தனை ஸொராஸ்ட்ரியர்கள் 'உண்மையாக சிந்தித்து, உண்மையை மொழிந்து, உண்மையாக செயல்படுகின்றனர்?"

ஏக இறைவனான உண்மைப்பொருளைப் புறக்கணிக்க முடியாது; அவ்வாறு புறக்கணிப்பதால், மனித குலத்தின் அறியாமையும், பலவீனமும் மிகப்பெரிய பாதகமான எதிர்வினையை உருவாக்குகிறது; இதனால் உலகம், போர்கள், வெறுப்பு, முரண்பட்ட சித்தாந்தங்கள் மற்றும் இயற்கையின் கிளர்ச்சி ஆகியவற்றின் மூலம் வெள்ளம், பஞ்சம், பூகம்பம் மற்றும் பிற பேரழிவுகள் போன்ற துன்பங்களின் கடாரக் குழியில் தன்னைக் காண்கிறது. இறுதியில், அவை உச்சகட்டத்தை எட்டும் வேளையில் மனிதகுலத்தை, அதன் சுயமாக உருவாக்கப்பட்ட தீமையின் அழிவிலிருந்து திசைதிருப்பி வழிநடத்த, கடவுள், மனித உருவில் அவதார புருஷராக வெளிப்படுவதன் மூலம், ஏக இறைவனான உண்மைப்பொருள் மீண்டும் நிலைநிறுத்தப்படுகிறது.

எனது மௌனமும், தவறாமல் அதைத் தொடர்ந்து வரும் எனது மௌனத்தைக் கலைப்பதும், மனித குலத்தை அறியாமையின் மாபெரும் சக்திகளிடமிருந்து பாதுகாப்பதோடு, உலகளாவிய ஒற்றுமையின் தெய்வீகத் திட்டத்தை நிறைவேற்றுகிறது. எனது மௌனத்தைக் கலைப்பது என்பது, கடவுளின் உலகளாவிய ஒருமைப்பாட்டை மனிதகுலத்திற்கு வெளிப்படுத்துவதோடு, இது மனிதனின் உலகளாவிய சகோதரத்துவத்தை நிலைநாட்டுகிறது. நான் மௌனம் கடைப்பிடிக்க வேண்டியது இன்றியமையாத ஒன்றாக இருந்தது; அது விரைவில் கலைக்கப்பட வேண்டும் என்பதும் தேவையான ஒன்றாகத் திகழ்கிறது.

இந்த மூன்று செய்திகளையும் வழங்கிய பிறகு, பாபா, வெகு தொலைவில் அமைந்த தனது இல்லத்திற்கு திருமல ராவ் செல்ல வேண்டியிருந்ததால், அவருக்கு ஏற்பட்ட சளிக்கான மருந்தை டாக்டர் டானிடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறு கூறினார். கூட்டத்தின் தொடக்கத்தில், ஆந்திராவைத் தவிர, அனைவரும் காலை 11:00 மணிக்கு மண்டபத்தை விட்டு வெளியேற வேண்டும் என்று பாபா அறிவுறுத்தியிருந்தார். மூன்று

செய்திகளையும் படித்து முடித்தபோது, காலை 10:50 ஆகிவிட்டது, அப்போது பாபா கூறினார், **"பாபாவின் நேரப்படி மணி பதினொன்றைக் கடந்துவிட்டது, எனவே நீங்கள் அனைவரும் இப்போது புறப்பட்டாக வேண்டும்!"** பாபாவும் தமது அறைக்குச் சென்றார். எவரும் அவரிடம் எதையும் கேட்கத் துணியாத அளவுக்கு அவர் தீவிரமான மனநிலையில் காணப்பட்டார். பாபா ஆந்திரா குழுவினரை தனது அறைக்கு அழைத்து ஒரு மணி நேரம் சந்தித்தார்.

அதைத் தொடர்ந்து வெளியே வந்த பாபா, அதே சோகமான மனநிலையில் இருந்ததைக் காணமுடிந்தது. அனைத்து அன்பர்களும் தூரத்தில் அமைதியாக நின்று கொண்டிருந்தனர். பாபா எவரையும் பார்க்காமல் காரில் தமது இருக்கையில் அமர்ந்து மெஹராஸாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். வெளியூர் அன்பர்கள் அடக்கமாக, சோகம் தோய்ந்த முகத்துடன் சென்றனர். அவர்கள் பாபாவை இத்தகைய மனநிலையில் இருந்ததை இதுகாறும் பார்த்ததில்லை; மேலும் அவர்கள் மீதான அவரது வெளிப்படையான அலட்சியம், அவர்களின் இதயங்களை ஆழமாகக் காயப்படுத்தியது. அனைவரும் திகைத்துப் போயினர். எதிர்வரும் ஏகாந்தவாசத்தின் இடரார்ந்த முக்கியத்துவத்தைப் பற்றி சிந்திக்கும்போது, அவர்களின் மனங்களும் இதயங்களும் கொந்தளிப்பில் தள்ளப்பட்டன.

ஆனால், காலம் விவரித்தது போல, "தெய்வீக மதுபானம் ரணத்தை உருவாக்கும் என்பதை அன்பர்கள் அறிந்திருக்கவில்லை, மேலும் ஆழமான ரணத்தின் அனுபவத்தை 'வேதனை தோய்ந்த மகிழ்ச்சி' என்று மட்டுமே விவரிக்க முடியும். இது தெய்வீக மதுபானத்தின் இயல்பு: அதனால் ஒருவர் துன்பப்படுகிறார், ஆனால் மேலதிகமாக அருந்தத் துடிக்கிறார்."

பாபா அவர்களை விட்டுப் பிரிந்து சென்ற பின்னர், அன்பர்கள் அனுபவித்த வேதனையைத் தாங்க முடியாமல் தேவ தேவதைகள் கண் கலங்கினர். இந்தக் கண்ணீர் மழையில், பாபாவின் செய்தியைப் பரப்புவதற்காக, பெரும்பாலான அன்பர்கள் அதே நாளில் மெஹராபாத்திலிருந்து புறப்பட்டுச் சென்றனர். அவர்களின் உதடுகள் தெய்வீக அன்பானவரைப் போற்றி புகழவில்லை, அவர்களின் இதயங்களில் மகிழ்ச்சியும் இல்லை - வலிமிகுந்த ரணம் மட்டுமே இருந்தது."

அடுத்த நாள் ஜூலை 11 காலை 11:00 மணிக்கு பாபா, எதிர்பாராமல் திடீரென மெஹராபாத்திற்கு விஜயம் செய்தார். கூட்டத்தில் கலந்து கொண்ட எஞ்சிய அன்பர்கள் பெட்டி பைகளுடன் புறப்படும் ஆயத்தத்தில் இருந்தனர். பாபா, 'அக்னி' சுபாவத்தில் இருந்தார். அவரது மோசமான மனநிலைக்குக் காரணம், அவரது கார் பிரதான கட்டிடத்தின் வராண்டாவைச் சென்றடைந்தபோது, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அடி தூரம் இடைவெளி இருந்தது, மேலும் அரை அங்குல ஆழத்தில் ஒரு குட்டையில் நீர் தேங்கி நின்றது. பாபா அப்போது, **"நான் கால்களை இலகுவாக எடுத்து வைக்க, காருக்கும் வராந்தாவின் விளிம்பிற்கும் இடையே ஏன் மரப்பலகை அல்லது தாழ்வான இருக்கை**

ஒன்றை வைக்கவில்லை? நான் இந்தக் குளத்தில் மூழ்கி மடிவதை அல்லது நழுவி எனது கழுத்து உடைவதைக் காண நீங்கள் அனைவரும் விரும்புகிறீர்களா?" என்று கேட்டார்.

கேக்கி நலவாலா பக்கம் திரும்பி, **"டெஹ்ரா டூனிலிருந்து என்னை வாழ்த்த இவ்வளவு தூரம் வந்திருக்கிறீர்கள்; என்னைப் பாதுகாக்க உங்களுக்கு புத்தி இல்லையா? இந்தக் குட்டை உங்களுக்குச் சிறியதாகத் தெரிகிறது, ஆனால் ராமர் 'ஆதாமின் வளைகுடா'வைக்** (ADAM'S GULF) **கடந்து இலங்கையைச் சென்றடைந்ததைப் போல் அதைக் கடப்பது எனக்குக் கடினமாக இருந்தது!"** என்றார்.

கூடியிருந்தவர்கள் பாபாவின் சீற்றத்தைக் கண்டு திகைப்பில் ஆழ்ந்தனர். ஆனால் விரைவில் அவரது 'சிங்க சினம் ஆட்டுக்குட்டியின் அமைதியாக' மாறியது. அவர் அனைவரையும் மதிய உணவுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தினார்; அவர்களை ஆரத்தழுவினார். அதன் பிறகு குழு மெஹராபாத்தை விட்டு வெளியேறியது, அன்று இரவு மன்மாட் ரயில் நிலையத்தைச் சென்றடைந்தபோது பாபாவின் திடீர் சீற்றத்திற்கான காரணம் புலப்பட்டது. மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் பிற இடங்களில் இடைவிடாது மழை பொழிந்ததால், நேரடி ரயில்கள் எதுவும் இல்லை. அவர்கள் பல்வேறு ரயில்களில் ஏற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது, பெரும்பாலான அன்பர்கள் பல மணிநேரங்களுக்குப் பிறகு தங்கள் இடங்களைச் சென்றடைந்தனர் - ஆனால் அனைவரும் பாதுகாப்பாகத் தத்தமது இல்லங்களுக்குச் சென்றனர்.

யோகி ஷுத்தானந்த் பாரதி (SHUDDHANAND BHARATI, மெஹராபாத் சகவாச நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டவர்) 11ஆம் தேதி மெஹராஸாத்தில் பாபாவை சந்தித்தார்; ஜூலை 14 முதல் டிசம்பர் வரை மௌனம் கடைப்பிடிக்குமாறு பாபா கட்டளையிட்டார்.

1958 ஜூலை 13 ஞாயிற்றுக்கிழமை அன்று பாபா, எரச், கைக்கோபாத் ஆகியோருடன் மெஹராபாத்திற்கு வருகை தந்தார். நரிமன், மெஹர்ஜி, ஜிம் மிஸ்திரி, ஹோமா, ராம்ஜூ, ஜால்பாய், சதாஷிவ் பாட்டீல் ஆகியோர் கூட்டத்திற்கு சில நாட்களுக்கு முன்பிருந்தே மெஹராபாத்தில் தங்கியிருந்தனர். அவர்கள் தத்தமது இல்லங்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். எரச், கைக்கோபாத் இருவரையும் மெஹராபாத்தில் விட்டுவிட்டு பாபா மெஹராஸாத் திரும்பிச் சென்றார்.

1958ஆம் ஆண்டு மேற்கொண்ட இந்த ஏகாந்தவாச காலகட்டத்தில், பெண்டு, பாதிரி, விஷ்ணு, எரச், கைக்கோபாத், டான், சிது ஆகியோர் மெஹராபாத்தில் தங்கினர். மெஹராபாத் மேல்மலையில் மன்ஸாரி மற்றும் கைக்கோபாத்தின் குடும்பத்தினர் வசித்து வந்தனர். அரன்காவ்ம் கிராமத்திற்கு அருகிலமைந்த குடும்ப குவாட்டர்ஸில் ஜங்க்ளே மாஸ்டர் அவரது குடும்பத்துடன் இருந்தார், மேலும் வாலு பவாருடன் ரமா, ஷீலா, மெஹர்நாத் கல்சூரி ஆகியோர் தங்கியிருந்தனர்.

அப்போது பாபாவுடன் மெஹராஸாத்தில் தங்கியிருந்தவர்கள் காக்கா, பைதூல், பாவ் கல்சூரி, மற்றும் அலோபா. குமார், புக்கார், மஸ்த் நீல்கந்த்வாலா ஆகியோர் அங்குத் தற்காலிகமாகத் தங்கினர். கைக்கோபாத் ஜூலை இறுதியில் ஒரு வாரம் முதல் பத்து நாட்கள் வரை மெஹராபாத்திற்கு அனுப்பப்பட்டார். மெஹராஸாத்தில் ஆறு பெண் மண்டலி மெஹரா, மணி, கோஹெர், மெஹரு, நாஜா, ரானோ ஆகியோர் இருந்தனர். இந்த சில ஆண்களையும் பெண்களையும் தவிர, அந்த ஆண்டு நவம்பர் வரை, வேறு எவரும் மெஹராஸாத்திற்கு அழைக்கப்படவில்லை.

ஜூலை 14 முதல் பாபாவின் முழுமையான ஏகாந்தவாசம் தொடங்கியது. அதே நாளில் ஈராக் மன்னர் (ஃபைஸல் 2, KING OF IRAQ, FAISAL II) தூக்கிலிடப்பட்டார், ஈராக் நாட்டின் முடியாட்சி ஒரு இராணுவ சதித் திட்டம் மூலம் தூக்கியெறியப்பட்டது. அடுத்த நாள், அமெரிக்க கடற்படையினர் லெபனானில் தரையிறங்கினர், பிரிட்டிஷ் துருப்புக்கள் ஜோர்டான் நகரைப் பின்தொடர்ந்தன. **'மேற்கத்திய நாடுகள் மெக்கா மற்றும் மதீனாவிற்குள் நுழைகின்றன'** என்று நீல்கந்த்வாலா கருத்துத் தெரிவித்ததைக் கேட்க முடிந்தது.

மெஹராஸாத் - ஏகாந்தவாசம்

(**Seclusion At Meherazad**)

1958 ஜூலை முதல் மெஹர் பாபா ஒரு தொடர்ச்சியான ஏகாந்தவாசத்தைத் தொடங்கினார்; அது, இடையிடையே தொடர்ந்து அவரது வாழ்க்கையின் இறுதி வரை நீடிப்பதாக இருந்தது. 1958 ஜூலை 14 திங்கட்கிழமை தொடங்கிய தற்போதைய ஏகாந்தவாசம், முன்னெப்போதும் மேற்கொண்டதிலிருந்து வேறுபட்டது. இந்த 'முழு' ஏகாந்தவாசத்தின் போது, பாபா தமது அன்பர்களின் வெளி உலகத்துடனான தொடர்பை முற்றிலும் துண்டித்துவிட்டார். கடிதப் பரிமாற்றங்கள் அனைத்தும், வருவதும், போவதும் தடை செய்யப்பட்டன. இந்தக் காலகட்டத்தில், பாபா தமது மெஹராஸாத் மற்றும் மெஹராபாத் மண்டலியை, எவர் ஒருவருக்குமிடையே எந்தத் தொடர்புமின்றி, முற்றிலும் பிரித்து வைத்தார்; அந்தந்த பகுதிகளின் எல்லையை விட்டு எவரும் வெளியே வர அனுமதி இல்லை. பாபாவின் அதிகாரப்பூர்வ பொதுச் செயலாளரான ஆதி சீனியர் அஹமதுநகரிலிருந்து மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்ட வேளையிலும், அவர் காக்கா பாரியாவுடன் மட்டுமே பேச வேண்டும், பிற எவரையும் சந்திக்க முடியவில்லை.

ஜூலை 14ஆம் தேதி தமது ஏகாந்தவாசத்தைத் தொடங்குவதற்கு முன்பு, பாபா, அவர் பயன்படுத்திய பல சத்ரா, கோட்டுகள் போன்றவற்றை மண்டலி மற்றும் ஊழியர்களுக்கு விநியோகித்தார். பின்னர் அவர் ஆண்களுக்கு அறிவுறுத்தினார்: **"இப்போதிலிருந்து நவம்பர் இறுதி வரை, உங்களிடம் நான் கோபம் அல்லது அதிருப்தி அடையும் சந்தர்ப்பம் உருவாகக்கூடாது என்று நான் விரும்புகிறேன். நான் விரும்பாத அல்லது என்னை வருந்தச் செய்யும் எதையும் சொல்ல வேண்டாம். உங்கள் கடமைகளை உண்மையாகச் செய்யுங்கள், எல்லா சூழ்நிலைகளிலும் மகிழ்ச்சியாக இருங்கள். உங்களுக்கிடையில் அன்பாக இருங்கள், ஒருவரையொருவர் புகார் கூறி முறையிட வேண்டாம்..."**

பெண்மணிகளிடம், அவர் கூறினார்: **"ஜூலை 14 முதல், இந்த நான்கரை மாதங்கள் எனது உள் பணியின் மிகத் தீவிரமான காலகட்டமாக இருக்கும், இது 21ஆம் தேதிக்குப் பிறகு** (ஜூலை) **துரிதப்படுத்தப்படும், மேலும் அதன் உலகளாவிய விளைவு மிகப்பெரியதாக இருக்கும்."**

மீண்டும், **"நேரம் நெருங்கிவிட்டது"** என்று திரும்பத் திரும்ப எடுத்துரைத்தார்.

ஏகாந்தவாசத்தின் முதல் 40 நாட்கள், அதாவது ஜூலை 14 முதல் ஆகஸ்ட் 22 வரையிலான காலகட்டம், பாபாவால் ஒரு விசேஷமான காலப் பகுதியாகக் கருதப்பட்டது. இந்த 40 நாட்களில், மெஹராபாத்தில் தங்கியிருந்த எரச், அமெரிக்காவின் ஸாம் கோஹென் (SAM COHEN), ஆஸ்திரேலியாவின் ∴பிரான்சிஸ் பிராபஸோன் (FRANCIS BRABAZON) மூவருக்கும் பாபா இவ்வாறு

அறிவுறுத்தினார். அவர்கள் ஒரு நாளைக்கு ஏறக்குறைய ஒன்றரை லிட்டர் பால் அருந்த அனுமதிக்கப்பட்டனர் மேலும் உபவாசத்தின் போது கடவுளின் நாமத்தை மீண்டும் மீண்டும் மொழிய அறிவுறுத்தப்பட்டனர். இப்படிப் பல்வேறு உத்தரவுகளும் வழங்கப்பட்டன.

முதல் 40 நாட்களுக்கு பாபா, மெஹராஸாத் ஆண் மண்டலியிடம் (அலோபா, பைதூல், காக்கா, குமார், ஆனால் பாவ் கல்சூரி இரவுக் கண்காணிப்பின் பெரும்பகுதியைச் செய்ததால், அந்தக் குழுவில் இடம்பெறவில்லை) ஒவ்வொரு நாளும் தமது அன்பர்களில் சிலருக்கு அனுப்பிய அதே சொற்றொடரைத் திரும்பத் திரும்ப மொழியுமாறு கேட்டுக் கொண்டார்: **"பிரியமான கடவுளே, உமது சித்தம் நிறைவேறியது, அதில், எங்கள் பாபா கூறிய அனைத்தும், இந்த ஆண்டு விரைவில் நிறைவேறும்."**

சமீபத்திய மெஹராபாத் கூட்டத்தில் பங்கேற்ற அனைவருக்கும் பாபா இதையே திரும்பத் திரும்ப மொழியுமாறு அறிவுறுத்தினார். இது, தொடர்ச்சியாக 40 நாட்களுக்கு, தினமும் 500 முறை ஒரே அமர்வில் மீண்டும் மீண்டும் கூறப்பட வேண்டும்.

1958 மெஹராபாத் சகவாசங்களில் பங்கு பெற்ற அன்பர்கள், ஆனால் ஜூலை 10 கூட்டத்திற்கு அழைக்கப்படாதவர்கள், ஆகஸ்ட் 2 முதல் 22 வரை 21 நாட்களுக்கு தினமும் 500 முறை இந்த சொற்றொடரை மீண்டும் மீண்டும் மொழியுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். மேற்கத்திய அன்பர்களும் ஜூலை 14 முதல் 40 நாட்களுக்கு அதையே செய்ய உத்தரவிடப்பட்டனர். சிலருக்கு தினமும் 500 முறைக்கு பதிலாக, வேறு பல எண்ணிக்கையில், அதே சொற்றொடரை மொழிய அறிவுறுத்தப்பட்டது - டேனா ஃபீல்ட் (DANA FIELD) 1,500 முறை மற்றும் ஜோஸஃப் ஹார்ப் (JOSEPH HARB) 2,500. **'தனக்குப் பிரியமான ஒரு பொருளை அல்லது பழக்கத்தைக் கைவிடுமாறும்'** அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது: உதாரணமாக, காஃபி அருந்துவது, புகைபிடித்தல், அல்லது மதுபானங்கள் அருந்துவது போன்றவை, அதே காலகட்டத்தில் செயல்படுத்தப்பட வேண்டும். ஆதியிடமிருந்து ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக ஒரு கடிதம் மூலம் உத்தரவு வழங்கப்பட்டது. மேற்குலகில் இருந்த போது, பாபா அவர்களிடம், **"உங்கள் உயிரைக் கொடுத்தேனும் இதைச் செய்யுங்கள்"** என்று கூறினார்.

மேற்கூறிய சொற்றொடரை மொழிவதிலிருந்து கைக்கோபாத்திற்கு விலக்களித்து, பாபாவின் ஏகாந்தவாசத்தின் முழுக் காலகட்டத்தில், தினமும் ஒரு மணிநேரம் பின்வரும் சொற்றொடரை மீண்டும் மீண்டும் மொழியுமாறு பாபா அவருக்கு (அவர் மெஹராபாத்தில் இருந்தபோது) அறிவுறுத்தினார்: **"யா எஸ்தான்! ஆறு மாதங்களுக்குள் பாபா தனது பணியைச் செய்து முடிக்கட்டும்!"**

மேலும், கைக்கோபாத் ஏகாந்தவாசத்தின் போது, ஒவ்வொரு நாளும் ஒரு மணிநேரத்திற்கு, இந்த இரண்டாவது சொற்றொடரை மீண்டும் மீண்டும் மொழிய வேண்டும்: **"ஓ பரமாத்மா! மெஹர் பாபாவின் அன்பர்கள் உங்களிடம்**

மொழியும் பிரார்த்தனைகளை ஏற்றுக்கொள்ளுங்கள்!" இதன் மூலம், உலகம் முழுவதும் வாழும் பாபாவின் அன்பர்கள் அவருடைய பணியில் பங்கெடுத்தனர்.

பாபா தமது ஏகாந்தவாசத்தின் முதல் 40 நாட்களை கடுமையான செயல்பாடுகளில் கழித்தார். சந்தேகத்திற்கு இடமின்றி, இந்த 40 நாட்களில், அவர் தமது அன்பர்களுக்காக வழங்கிய பணியின் பாரத்தை அவரே சுமந்தார் என்பதற்கு, அவரது ஆழ்ந்த உள் உழைப்பால் நிறைந்த காலங்களே சான்றாகும். இந்த 40 நாட்களில் பாபாவிற்கு இரவும் பகலும் தூக்கம் என்பது அறவே இல்லை. ஏறக்குறைய ஒவ்வொரு நாளும் அவர் ஏதோ ஓர் அன்பரை அல்லது பிற ஒருவரை மிகுந்த கவலையுடன் நினைவுகூர்ந்து, தொடர்ந்து அமைதியற்றவராக இருந்தார். சில நேரங்களில் அவர் தமது படுக்கையறையில், திடீரென படுக்கையில் அமர்ந்து, பல மணி நேரம், கவனத்தை முற்றிலும் ஒருமுகப்படுத்திய மனநிலையில், தனது அன்பர்களை ஒருவர் பின் ஒருவராக நினைவுகூர்ந்தார். பாவ் கல்சூரியைப் பொறுத்தவரை, பாபா தமது படுக்கையில் அமர்ந்து, அவரது அன்பர்களின் பெயர்களை நினைவுகூரும் காட்சியானது - 'பிரபஞ்சத்தின் இறைவன் தம் அன்பர்களை வணங்கி வழிபடுவது போல் இருந்தது."

பாபா மதியம் 3:00 மணிக்கு, மெஹராஸாத் மாடியில் அமைந்த அவரது அறைக்கு ஓய்வு எடுக்கச் செல்வதை வழக்கமாகக் கொண்டார். பைதூல் பிற்பகல் 3:00 முதல் 6:00 மணி வரை, காக்கா மாலை 6:00 முதல் 8:00 மணி வரையிலும், இரவு 8:00 மணி முதல் காலை 6:30 மணி வரை, பாவ் கல்சூரி இரவுக் கண்காணிப்புப் பணியையும் தொடர்ந்தனர்.

சில நாட்களில் பாவ் கல்சூரி மாலை 6:30 மணி முதல் மறு நாள் காலை 6:30 வரை கண்காணிப்புப் பணியில் ஈடுபடவேண்டிய தேவை உருவானது. மேலும் அவர் சிறுநீர் கழிப்பதற்காக அல்லது வேறு எந்த நோக்கத்திற்காகவும் ஒருமுறை கூட அறையை விட்டு வெளியே செல்ல அனுமதிக்கப்படவில்லை. அவர் பன்னிரண்டு மணி நேரமும் மூடிய அறைக்குள் பாபாவுடன் இருக்க வேண்டிய கட்டாயம். மேலும், பகலில் பாவ் கல்சூரிக்கு இதர கடமைகளும் இருந்ததால், பாபாவின் இந்த ஏகாந்தவாச காலகட்டத்தில், அவருக்கு நடைமுறையில் தூக்கம் என்பது அறவே இல்லை. ஆனாலும், ஆச்சரியமூட்டும் விஷயம் என்னவெனில், இரவு முழுவதும் கண்விழித்த பின்னரும், அவருக்கு தூக்கம் வருவதுமில்லை அல்லது சோர்வாக உணர்ந்ததுமில்லை.

காலை 10:00 மணிக்கு, பாபா மண்டபத்திற்கு வந்து, மண்டலியுடன் இருப்பதை வழக்கமாகக் கொண்டார்; பாவ் கல்சூரி கழிப்பறையில் இருக்க நேர்ந்தால் கூட, அவரை அழைக்க பாபா, புக்காரை அனுப்புவதுண்டு. அவர் கழிப்பறையைப் பயன்படுத்தும் வேளையிலும், புக்கார், பாபாவிடமிருந்து இந்த செய்தியை வழங்கத் தவறியதில்லை: "பாபா மண்டபத்திற்கு வந்துள்ளார், ஆனால் நீங்கள் அவசரப்பட வேண்டாம், போதுமான நேரத்தை எடுத்துக் கொள்ளலாம்." மூன்று நிமிடங்களுக்குப் பின்னர், அதே செய்தியை பாபா வேறு

ஒருவர் மூலமாக அனுப்பி வைத்தார். பாவ் கல்சூரி விரைந்து பாபாவிடம் வந்த வேளையில் ஒரு முறை பாபா, **"இவ்வளவு சீக்கிரமாக முடித்துவிட்டீர்களா? நான் போதுமான நேரத்தை எடுத்துக்கொள்ளச் சொன்னேன் அல்லவா?"** என வினவினார்.

"நீங்கள் ஒரே செய்தியை மீண்டும் மீண்டும் அனுப்பிக் கொண்டிருந்தீர்கள், அதனால் நான் வந்தேன்" என்று பாவ் கல்சூரி பதிலளித்தார்.

பாபா, **"நீங்கள் அவசரப்பட வேண்டும் என்று நான் சொல்லவில்லை. இப்போது நினைவில் கொள்ளுங்கள், நீங்கள் வேண்டிய நேரத்தை எடுத்துக் கொள்ளலாம்"** என்று சைகையால் தெரிவித்தார்.

அடுத்த நாள், பாவ் கல்சூரி கழிப்பறையில் இருந்தபோது, பாபா, தொடர்ந்து மூன்று முறை செய்தியை அனுப்பினார்; பாவ் தனக்கு வேண்டிய நேரத்தை எடுத்துக் கொண்டு, பின்பு மண்டபத்திற்கு வந்ததும் பாபா, **"உங்களுக்காக நான் காத்திருந்தேன், என்னை வெகுநேரம் காத்திருக்கச் செய்தீர்கள்! உங்களுக்காக என்னிடம் அவசர வேலை இருந்தது"** என்று திட்டினார்.

பாவ் கல்சூரி உடனே, "நேற்று நீங்கள் எனக்கு வேண்டிய நேரத்தை எடுத்துக் கொள்ளச் சொன்னீர்கள்" என்றதற்கு, பாபா, **"நான் உங்கள் நேரத்தை எடுத்துக் கொள்ளச் சொன்னேன், ஆனால் எனது விருப்பப்படி நீங்கள் உங்கள் நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். உண்மையாகச் சொன்னால், இன்று உங்களுக்காக சில அவசர வேலைகள் இருந்தன, ஆனால் இப்போது அது என்ன என்பதை நான் மறந்துவிட்டேன்"** என்று கூறினார்.

எப்போதேனும், பாபா காலை 9:00 மணிக்கு மண்டலி மண்டபத்திற்கு வருகை தந்தார். பாவ் கல்சூரி உட்பட அனைவரும் எழுந்து தயாராக இருக்க வேண்டிய கட்டாயம். இது பாபாவின் வழி: **"உங்களுக்கு வேண்டிய நேரத்தை எடுத்துக் கொள்ளுங்கள், அவசரப்படாதீர்கள் - ஆனால் விரைந்து வாருங்கள்! பரபரப்படையாதீர்கள், ஆனால் உடனடியாக வாருங்கள்!"** அதுவும் ஒருவர் கழிப்பறையில் இருக்கும் வேளையில் கூட!

ஒரு நாள் பாபா, காலை 8.30 மணிக்கு மண்டபத்திற்கு வந்தவர், **'பாவ் இன்னமும் எழுந்திருக்கவில்லையா?'** என்று கேட்கவே, 'இப்போதும் தூங்கிக் கொண்டிருந்தார்' என்ற தகவல் பாபாவிற்குத் தெரிவிக்கப்பட்டது. அவர் அனைவரிடமும், **"சத்தம் செய்யாதீர்கள்; இல்லையேல், பாவ் எழுந்துவிடுவார். அவர் இரவு முழுவதும் என் அருகில் இருந்தார், அவரைத் தொந்தரவு செய்ய வேண்டாம்"** என்று சைகையால் தெரிவித்தார். அனைவரும் அமைதியாக இருந்தனர், பாபாவும் சிறிது நேரம் அமைதியாக அமர்ந்திருந்தார்.

பதினைந்து நிமிடங்களுக்குப் பிறகு, பாவ் கல்சூரி எழுந்து, தனது அறையிலிருந்து வெளியே வந்தார். பாபா அவரை அழைத்து, **"ஏன் எழுந்தீர்கள்? தொந்தரவாக இருந்ததா?"** பாவ் அவரிடம் இல்லை என்று கூறினார். அப்போது பாபா, **"உங்களுக்குத் தெரியுமா, நான் உங்களின் கண்காணிப்பில் இருந்தேன், எவரையும் சத்தம் போட அனுமதிக்கவில்லை. நீங்கள் என் அருகிலிருந்து**

என்னைக் கண்காணித்துக் கொள்கிறீர்கள்; அதனால் நான், இன்று உங்கள் அருகிலிருந்து கண்காணித்தேன்" என்று கூறினார்.

இந்தக் காலகட்டத்தில் மெஹராஸாத்திற்கு வர அனுமதிக்கப்பட்ட மற்றுமொரு நபர் பூனாவைச் சேர்ந்த காடேக்கர் (GADEKAR) மட்டுமே. அவர் 1958 ஆகஸ்ட் 14ஆம் நாள் வந்து கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் தங்கியிருந்தார். காடேக்கருக்கு விசேஷமான அனுமதி வழங்கப்பட்டிருந்தது; ஆனால், அந்த நேரத்தில், அவருக்கு ஏன் இந்த பாக்கியம் வழங்கப்பட்டது என்பது பாபாவிற்கு மட்டுமே தெரியும். பாபாவின் ஏகாந்தவாசம் நிறைவடைந்த சில மாதங்களுக்குள், காடேக்கர், பாபாவில் நிரந்தரமாக ஒன்றிணையவிருந்தார். பாபாவுடன் இருக்கும் இந்த இறுதி வாய்ப்பை அவர் காடேக்கருக்கு வழங்கிக் கொண்டிருந்தார்.

மண்டலியில் ஒவ்வொருவரும் அவரவர் வழக்கமான கடமைகளைச் செய்ய வேண்டியிருந்தது. ஆண்களுக்கு சோப்பு, பற்பசை, ரேஸர் பிளேடுகள், புகையிலை போன்றவற்றை விநியோகிக்கும் பொறுப்பில் காக்கா ஆசிரமத்தின் மேலாளராக இருந்தார். அலோபாவின் கடமைகளில் பூட்டி (BHOOTY), பீட்டர் (PETER) மற்றும் மஸ்தான் (MASTAN) போன்ற நாய்களை நடைபயிற்சிக்கு அழைத்துச் செல்வது பிரதான கடமையாக இருந்தது. பைதூல் மண்டலிக்கு தினமும் இரண்டு முறை தேநீரும், ஒரு வேளை உணவும் தயார் செய்தார். பாபாவை தினமும் காலையில் அவரது தூக்கு நாற்காலியில், தோட்டப் பணிக்காரர்களில் ஒருவர், அலோபா, குமார், புக்கார் ஆகியோர் மண்டபத்திற்கு அழைத்துச் சென்றனர். மண்டபத்திற்கு வந்ததும், பாபா, புக்கார் தயாராக வைத்திருந்த கழிவுக் கலத்தில் அமர்ந்து கொள்வது வழக்கம்; அலோபா அதை சுத்தம் செய்ய வேண்டும்.

பாபா ஏகாந்தவாசம் தொடங்கிய முதல் நாளிலிருந்து, மஸ்த் தங்கியிருந்த பாவ் கல்சூரியின் அறையில் தினமும் காலையில் குறைந்தது இரண்டு மணி நேரமேனும் மஸ்த் நீல்கந்த்வாலாவுடன் அவர் பணிபுரியத் தொடங்கினார். (எரச் மெஹராபாத்தில் இருந்தபோது பாவ் கல்சூரி, எரச்சின் அறையைப் பயன்படுத்திக் கொண்டிருந்தார்.) பாபா 21 நாட்கள் நீல்கந்த்வாலாவுடன் முழு முனைப்புடன் உள்பணியில் ஈடுபட்டிருந்தார். பைதூல் மஸ்தை கவனித்துக் கொண்டாலும், மஸ்த், குமாருடன் அதிகம் பேசுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். மஸ்த் நீல்கந்த்வாலாவிற்கு டால்கம் பவுடர் மீது அளப்பரிய பிரியம் ஆதலால், அதை அவர் தலையின் மேல் தூவி, உடல் முழுவதும் தேய்த்துக் கொண்டார்.

பாபா ஊன்றுகோலின் உதவியோடு மஸ்தின் அறைக்கு நடந்து சென்ற வேளையில், காக்கா, பாபாவின் மற்றொரு கையைத் தாங்கி ஆதரவாக இருந்தார்; குமார் அவர்களுடன் சென்றார். பாபா கைகளைத் தட்டும்போது, குமார், காக்கா இருவரும் பாபாவை மீண்டும் மண்டபத்திற்கு அழைத்துச் செல்லும் வேளையில், அங்கு அவர் பல மணிநேரங்களை ஆண்களுடன் கழிப்பது வழக்கம்.

நீல்கந்த்வாலாவுடன் பாபா பணிபுரியும் போது, முழு மௌனம் நிலவ வேண்டும். பாபா உள்ளே இருந்தால், எவரும் பாவ் கல்சூரியின் அறைக்கு முன்னால் செல்லக்கூடாது. காக்கா தனது இரண்டு வளர்ப்பு நாய்களான குலு, GULU (பூட்டி - BOOTY) மற்றும் அதன் குட்டிகளில் ஒன்றான ஜாலி (JOLLY), உரத்த குரலில் குரைத்து, பாபாவைத் தொந்தரவு செய்யாமல், அவற்றை அமைதியாக வைத்திருப்பதில் குறிப்பாக கவனமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டார்.

சில நேரங்களில் நீல்கந்த்வாலாவுடனான பணி நிறைவடைந்த பிறகு, புக்கார், பாபாவை மண்டலி மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார். புக்கார் இவ்வாறு நினைவுகூர்ந்தார்: "பணியை முடித்த பிறகு, பாபா எப்பொழுதுமே மிகவும் சோர்வாகக் காணப்பட்டார். அவர் வியர்த்து, கடுமையாக மூச்சு விடுவதோடு, சில சமயம் உடல் நடுங்குவதைக் காணமுடிந்தது; அவர் எந்த வேலை செய்தாலும் மிகவும் கடினமாக இருந்தது. மண்டபத்தில் நாற்காலியில் அமர்வதைக் கூட பாபா கடினமாக உணர்ந்தார்."

குமார், மஸ்த் நீல்கந்த்வாலாவை மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தபோது, மஸ்த் மௌனம் காத்துக்கொண்டிருந்தார். ஆனால் 1958 ஜூலை 10 அன்று, மெஹராபாத்தில் நடந்த கூட்டத்தில், பாபா தமது 'உலகளாவிய செய்தி'யை வழங்கிக் கொண்டிருந்த வேளையில், மஸ்த் தனது மௌனத்தைக் கலைத்து, ஒரே நேரத்தில் மூன்று மொழிகளில் (சில நேரங்களில் இடைவிடாது) பேசத் தொடங்கினார். மண்டலிக்கு அவர் மொழிந்தது எதுவும் புரியவில்லை; அவர்களால் புரிந்துகொள்ள முடிந்த ஒரே ஒரு சிறிய வாக்கியம்: "உலகம் பூஜ்ஜியம், அதில் கடவுள்!"

ஜூலை 23 முதல் மஸ்த் நீல்கந்த்வாலா மீண்டும் மௌனம் கடைப்பிடிக்கத் தொடங்கினார்; கற்பலகை மற்றும் சுண்ணாம்புக் கட்டியைப் பயன்படுத்தி, ஆங்கிலம், இந்தி, பெங்காளி, உருது ஆகிய மொழிகளில் எழுதினார். ஆனால் நான்கு நாட்களுக்குப் பின்னர், 27ஆம் தேதி, அவர் மறுபடியும் பேசத் தொடங்கிய போது, ஒருமுறை இவ்வாறு குறிப்பிட்டார்: "வடக்கு, தெற்கு மற்றும் எல்லா திசைகளிலும் குண்டுகள் விழும். பின்பு மனிதன் செயற்கையாக உருவாக்கிய உலகம் முடிவுக்கு வரும், மேலும் கடவுளால் உருவாக்கப்பட்ட உலகம் புத்துயிர் பெறும்."

ஒருமுறை அவர் தனது கற்பலகையில் 'ஐ.எம்.ஜி' (I.M.G.) என்று மூன்று எழுத்துகளை எழுதினார்; இது 'நான் போகிறேன்' என்பதைக் குறிக்கிறது.

மஸ்த், பைதூலின் உதவியுடன் தனக்குத் தேவையான உணவை சமைத்து வந்தார். உணவு தயார் செய்யும் போது நீல்கந்த்வாலா தனக்குள்ளேயே பேசிக் கொண்டார். ஒருமுறை அவர் இந்தியில் தீர்க்கதரிசன வார்த்தைகளை மொழிந்தார்: "கார்மேகங்கள் ஒன்றுதிரளும்; மக்கள் காட்டுமிருகங்களைப் போல் எங்கும் சிதறுவார்கள்! பூமி பிளவுபடும்! பீடபூமியில் சுற்றித் திரியும் மிருகங்களைப் போல மனிதர்கள் ஆதரவற்றவர்களாகவும், தங்கும் இடம் இல்லாதவர்களாக எங்கும் அலைவார்கள். மனிதர்கள் அதிக அளவில் உயிரைத் துறந்து, மீண்டும் பிறவி எடுப்பார்கள். கட்டாய சூழ்நிலைகளால் மனிதன்

புல்லையும் இலைகளையும் உண்ணத் தள்ளப்படுவான். பழைய மனித வாழ்விடங்கள் அழிக்கப்பட்டு புதியவை நிறுவப்படும். இந்தி போன்ற பழங்குடி மொழிகளின் இடம் ஆங்கில மொழியால் அபகரிக்கப்படும். மதச் சடங்கு சம்பிரதாயங்கள் அகற்றப்படும்."

'**நீல்கந்த்வாலா ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்ட, உயர் திறன் படைத்த மஸ்த்**' என்று பாபா சுட்டிக்காட்டினார். பாபா அவரை சந்திக்கும் போதெல்லாம், "தயவுசெய்து இங்கே அமருங்கள்" என்று கூறி பாபாவிற்கு இருக்கை வழங்குவதில் நீல்கந்த்வாலா சிறப்பு கவனம் செலுத்தினார். ஒருமுறை பாபாவின் முன் அமர்ந்தபோது, ஷங்கரை (சிவபெருமானை) புகழ்ந்து ராவணன் மொழிந்த சமஸ்கிருத வசனங்களை நீல்கந்த்வாலா ஓதினார். அவர் சில சமயங்களில் இதுபோன்ற சமஸ்கிருத வசனங்களால் பாபாவைப் புகழ்ந்தார்: "நாங்கள் உங்களுடன் விளையாடுகிறோம், உங்களுடன் உரையாடுகிறோம், உங்களுடன் உணவை உண்கிறோம், நாங்கள் எங்கள் அறியாமையில், நீங்கள் பரமாத்மா என்பதை மறந்து உங்களுடன் வேடிக்கையாகப் பேசுகிறோம்."

1958 ஜூலை 22 மாலை பாபா, பெண் மண்டலியிடம் மீண்டும் கூறினார்: **"அடுத்த நான்கு மாதங்கள் மிகவும் கடினமானதாக இருக்கும். நீங்கள் அதைத் தாங்கிக் கொண்டு எனக்கு உதவ வேண்டும். நான்கு மாதங்களுக்குப் பின்னர், எனக்கும், உங்களுக்கும், முழு உலகத்திற்கும், அனைத்தும் நன்றாக இருக்கும்."**

1958 ஆகஸ்ட் 2 சனிக்கிழமையன்று பாபா, இந்தக் கருத்துக்களை எடுத்துரைத்தார்: **"நான்கு மாதங்களில், முழு உலகமும் வித்தியாசமான உலகை அறிந்துகொள்ளும். உலகத்தின் அதிர்வு, இயற்கையாகவே என்மீது வினைபுரியும். பிரபஞ்சம் ஆட்டி அசைக்கப்படும் - அதன் விளைவின் பாரம் என் மீது விழ, மாயா எனது பணியைத் தடுக்க, அதனால் இயன்ற அனைத்தையும் செய்வாள்; மேலும் சூழ்நிலைகளை மிகவும் கடினமாக்குவாள்; ஆனால் கடவுள் வெற்றிவாகை சூடுவார், அனைத்தும் சீராக நிறைவுறும். எனவே, இந்த ஏகாந்தவாச காலகட்டம் எனக்கு மிகவும் கடினமாக இருக்கும், ஆனால் அது மகிமையில் முடிவுறும்."**

நீலகந்த்வாலாவுடனான பாபாவின் பணி நிறைவடைந்ததும் - **"100 சதவீதம் எனக்கு திருப்தியைத் தந்துள்ளது,"** என்று அவர் கூறினார் - ஆகஸ்ட் 3 அன்று பைதூலுடன் மஸ்த் நீலகந்த்வாலா, ரயில் மூலமாக ரிஷிகேஷுக்கு அனுப்பப்பட்டார். ரிஷிகேஷில் அமைந்த ஆசிரமம் ஒன்றிற்கு மஸ்தை அழைத்துச் சென்ற பிறகு, நேராக மெஹராஸாத் திரும்புமாறு பைதூலுக்கு பாபா அறிவுறுத்தினார்; மேலும், பாபா தற்போது ஏகாந்தவாசத்தில் இருப்பது குறித்து வெளியில் எந்த மண்டலியிடமும் எதுவும் சொல்ல வேண்டாம் என்று கட்டளையிடப்பட்டார். வழியில் பாபாவின் அன்பர்களையோ அல்லது பக்தர்களையோ சந்திக்க நேர்ந்தால், அவர்களுடன் பேசுவதும் தடைசெய்யப்பட்டது.

நெற்றியிலும் இடுப்பிலும் இரண்டு துண்டுகளைக் கட்டிக்கொண்டு, காலணிகளையும் அணிந்த வண்ணம், ஆகஸ்ட் 2 அன்று புறப்பட ஆயத்தமானார் மஸ்த் நீல்கந்த்வாலா. ஆனால் அவர் தனது பயணத்தை மறுநாள் வரை ஒத்திவைக்குமாறு கேட்டுக்கொண்டபோது, அவர் அதற்கு ஒப்புக்கொண்டார். பாபா அவரைப் பார்க்க வந்தபோது, மஸ்த், பாபாவின் கைகளைப் பற்றிக் கொண்டு, பாபாவின் தலையில் தனது இரு கைகளையும் அன்புடன் வைத்தார். விடைபெறுவதற்கு முன்பு, நீல்கந்த்வாலா ஒரு புதிய படுக்கைக்காக பத்து ரூபாய் கேட்டார், இது மிகவும் குறிப்பிடத்தக்கது என்று பாபா பின்னர் ஒருமுறை கூறினார்.

பாபாவுடன் சேர்ந்து நடக்கும்போது, நீல்கந்த்வாலா இந்தியில் திரும்பத் திரும்பக் கூறினார்: "**அடுத்த பிறவியில், தயவுசெய்து என்னை மீண்டும் அழைக்கவும்; நீங்கள் அழைத்தால் நான் நிச்சயமாக வருவேன்.**" மீண்டும் பாபாவிடம் மன்றாடும் தொனியில் வேண்டினார்: "**தயவு செய்து என்னை இந்த உடலிலிருந்து விடுவித்து விடுங்கள்.**" சில அடிகள் நடந்த பின்பு, திரும்பி வந்து பாபாவின் முகத்தை அன்புடன் கைகளால் வருடினார்.

மெஹராஸாத்தை விட்டு வெளியேறும் முன்பு, மஸ்த் திடீரெனத் திரும்பி, பாபாவை சிறிது நேரம் பார்த்தார். தொடர்ந்து நீல்கந்த்வாலா திரும்பி, தலையைக் குனிந்து, காரை நோக்கி நடந்து சென்று உள்ளே நுழைந்தார். மண்டபத்தின் முன் நின்று பாபா அவர் புறப்படுவதைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

ஏற்கனவே குறிப்பிட்டபடி, கைக்கோபாத் இந்த நேரத்தில் மெஹராபாத்தில் தங்கியிருந்தார்; ஆனால் நீல்கந்த்வாலா சென்ற பிறகு, பாபா, கைக்கோபாத்தை 1958 ஆகஸ்ட் 4 அன்று பாதிரியுடன் மெஹராஸாத்திற்கு அழைத்தார். ஆகஸ்ட் 7 முதல் நவம்பர் 14 வரை, பாபா, கைக்கோபாத்துடன் தினமும் சுமார் அரை மணி நேரம் மண்டலி மண்டபத்தில் தனியாகப் பணிபுரிந்தார்.

ஆகஸ்ட் 4 அன்று பாபா அனைத்து மண்டலிக்கும் இவ்வாறு அறிவுறுத்தினார்: "**எனக்கு உதவுங்கள். மாயா என்னை எதிர்க்க, தன்னால் இயன்றவரை முயற்சிப்பாள். அதை அனுமதிக்காதீர்கள்! எனக்குக் கீழ்ப்படிந்து உதவுங்கள்.**" ஆகஸ்ட் 5ஆம் தேதி, பாபா, மண்டலியைப் பிரதான வீட்டின் வராண்டாவிற்கு அழைத்தார், அங்கு அவர்கள் கிராமபோனில், மணி இசைத்த கவாலி இசையைக் கேட்டு ரசித்தனர்.

ஆகஸ்ட் மாதத்தில், மெஹராஸாத் திறந்த வளாகத்தில், வழக்கத்தை விட அதிக எண்ணிக்கையில் பாம்புகள் ஊர்ந்து செல்வது காணப்பட்டது. 17ஆம் தேதி, பாபாவின் படுக்கையறைக்கு எதிரே மெஹருவால் ஒன்று கொல்லப்பட்டது; அடுத்த நாள், பாபாவின் தூக்கு நாற்காலியின் மெத்தையின் கீழ் ஒரு பாம்பு மறைந்திருந்தது. பாபா இருக்கையில் அமருவதற்கு முன்பு, கோஹெர் மெத்தையை தூசி அகற்ற வெளியே எடுத்தபோது, பாம்பு கீழே விழுந்தது. ரானோ அதைக் கொன்றார். பாபா பெண்மணிகளிடம் கூறினார்,

“கடந்த மூன்றரை மாதங்களாக, மாயா எனது பணியில் தலையிட முயன்றது; அது அங்ஙனம் முயற்சி செய்து கொண்டே இருக்கும், ஆனால் அது தோல்வியை சந்திக்கும். நமக்கு ஏராளமான சிரமங்கள் இருக்கும், ஆனால் ஒரு முடியைக் கூட அதனால் வளைக்க முடியாது (அதாவது எந்த வகையிலும் அவர்களை பாதிக்காது). **கவலைப்பட வேண்டாம். எனக்கு மகிழ்ச்சி தரும் வகையில் உதவுங்கள். எனக்கு உதவ கடவுளின் ஆசீர்வாதத்தை நாடுங்கள்! ஆமேன்** (அங்ஙனமே ஆகட்டும்)!”

ஆண்களிடம், பாபா இவ்வாறு கருத்துரைத்தார்: **“இதுவே மாயா; நான் ஏகாந்தவாசம் மேற்கொள்ளும் போது, எனக்குத் தடையாக இருக்கிறது. ஆனால், ஒன்றை மட்டும் புரிந்து கொள்ளுங்கள்; மாயா கூட இதையெல்லாம் எனது விருப்பப்படிதான் செய்கிறாள். அனைத்தும் எனது விருப்பப்படியே நடக்கும்.”**

ஒருமுறை, கைக்கோபாத்துடனான தனது பணியை நிறைவு செய்த பிறகு, பாபா, அன்று மாயா தனது பணியில் பெரிதும் தடையாக இருந்ததாகக் கூறினார். பாபாவின் வேண்டுகோளுக்கு இணங்க, கைக்கோபாத் மண்டலியிடம் நடந்ததை எடுத்துரைத்தார்: “பாபா தனது பணியைத் தொடங்கியபோது, எனது கால்களில் தசைப்பிடிப்பு ஏற்பட்டதால், நிற்கவோ அமரவோ எனக்கு சக்தி இல்லை. நான் பலவீனமாக உணர்ந்தேன், நான் ஏறக்குறைய நினைவை இழக்க இருந்தேன். ஆனால், பாபா எனது கால்களை ஐந்து நிமிடங்கள் மஸாஜ் செய்து, மீண்டும் தமது பணியைத் தொடங்கினார்.”

“மாயாவின் தடையும், இடர்பாடுகளும் இருந்தபோதிலும், எனது பணி மிகவும் வெற்றிகரமாக முடிந்தது” என்று பாபா கூறினார்.

மாயாவின் பணியின் மற்றொரு பாகத்தை 1958 ஆகஸ்ட் மாதத்தில் காணமுடிந்தது, மண்டலியில் ஒவ்வொருவரும் வெவ்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டனர். காடேக்கர் ஏற்கனவே இதய நோய், ஆஸ்துமா, இருமல், சளி போன்றவற்றால் உடல் நலம் குன்றியிருந்தார். ஒரு நாள் குமாருக்குத் திடீரென மாரடைப்பு ஏற்பட்டது; பாபா, தூக்கு நாற்காலியைத் தாங்கிச் செல்வதைத் தடை செய்தார். பாவ் கல்சூரிக்கு பயங்கரமான கண் வலி ஏற்பட்டது; ஆனால் பாபாவின் ஏகாந்தவாசம் காரணமாக, அவர் ஒரு கண் சிகிச்சை நிபுணரைப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. மற்றுமொருவர் வயிற்றுக் கோளாறால் அவதியுற்றார்.

கைக்கோபாத்துடன் பணிபுரிவதைத் தவிர, பாபா, ஆண்களுடன் சீட்டு விளையாடி சற்று இளைப்பாறினார், மேலும் விளையாடிக் கொண்டே மதிய உணவை உட்கொண்டார். பாபாவுடனான சீட்டு விளையாட்டுகள் பிறரால் ரசிக்கப்படும் விளையாட்டுகளை விட மிகவும் வித்தியாசமாக இருந்தது. விளையாட நான்கு நபர்கள் இருந்தால், துருப்புச் சீட்டு (COAT PIECE) விளையாடுவதும், எண்ணிக்கை அதிகமாக இருந்தால் (குருபிரசாத்தில் 30 பேர் வரை விளையாடினர்!), அவர் ‘லா ரிஸ்க்’ (LA RISQUE) விளையாடுவதும் வழக்கம்.

இரண்டு விளையாட்டுகளும் அடிப்படையில் ஒரே மாதிரியானவை; விளையாட்டுக்காரர்கள் பந்தயம் வைத்து கைப்பரிமாற்றத்தில் பங்கு கொள்கின்றனர். விளையாட்டுக்காரர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் ஒவ்வொருவருக்கும் குறைவான சீட்டுகள் வழங்கப்படுகின்றன; மேலும் வெற்றி பெற அவர்கள் குறைந்தபட்ச ஆட்டங்களில் இறுதி இலக்கை எய்து, விளையாட்டை நிறைவுசெய்ய வேண்டியிருந்தது. தோல்வியை சந்திப்பவர்கள் பாபாவின் முன்னால், கம்பளத்தில் மூக்கை உரச வேண்டும். ஆனால் சில சமயங்களில், அதிக எண்ணிக்கையில் ஆட்டக்காரர்கள் பங்கெடுக்கும் வேளையில், எந்த அணி வெற்றிபெற்றது, எது தோல்வியுற்றது என்ற முடிவுக்கு வருவது கடினமாக இருந்தது; இதுபோன்ற குழப்பத்திற்கு மத்தியில், இரு அணியைச் சார்ந்தவர்களும் மூக்கை உரசிக் கொண்டனர். சில சந்தர்ப்பங்களில், பாபாவின் பக்கம் தோல்வியை சந்தித்து, மூக்கை உரசிக்கொண்டால், பாபா வெற்றியாளர்களையும் தனது சார்பாக மூக்கை உரசுமாறு கேட்டுக் கொள்வது வேடிக்கையான காட்சியாக இருந்தது.

எந்தவொரு விளையாட்டுக்காரரின் 'மோசமான' சீட்டுக்கு ஈடாக ஒரு 'நல்ல' சீட்டை எடுத்துக்கொள்வதற்கும், ஒன்று அல்லது பல விளையாட்டுக்காரர்களை ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்கு அவர்களது மொத்த சீட்டுகளுடன் மாற்றுவதற்கும் பாபாவிற்கு உரிமை உண்டு. உதாரணமாக, பாபா, **"யார் ஒருவரிடம் 'க்ளப்'** (CLUBS) **சீட்டுகளின் 'ஏஸ்'** (ACE) **உள்ளது? வாருங்கள், அதை என்னிடம் கொடுங்கள். இதை எடுத்துக்கொள்ளுங்கள்..."** இப்படி மற்றும் பல. இதனால் பாபாவின் பக்கம் பொதுவாக வெற்றி பெற்ற அடுத்த கணமே, அவருடைய பங்காளிகள் சத்தமாக, "உங்கள் மூக்கை உரசவும், உங்கள் மூக்கை உரசவும்!" என்று தோல்வியுற்றவர்களிடம் குரல் கொடுத்தனர்.

ஆட்டத்தின் ஆரம்பம் முதல் இறுதி வரை மகிழ்ச்சியும், சிரிப்பு ஆரவாரமும் நிறைந்த சூழல் நிலவியது, இரு தரப்பு வீரர்களும் உற்சாகமாக இருந்தனர். பாபாவின் முன்னிலையில் மூக்கை உரச வந்தபோது, தோல்வியுற்றவர்கள் தங்களை அதிர்ஷ்டசாலிகளாகக் கருதினர். எப்போதேனும் பாபா, சீட்டுகளைத் திடீரென தாறுமாறாகத் தூக்கி எறிந்துவிட்டு, மற்றொரு முறை சீட்டுகளை விநியோகிக்குமாறு கூறுவதும், அல்லது, சில சமயங்களில், திடீரென எழுந்து, விளையாட்டை அரைகுறையாக நிறுத்திவிட்டுப் போய்விடுவதும் வழக்கம்.

அவருடன் சீட்டு விளையாடுபவர்களிடம், பாபா பல்வேறு சந்தர்ப்பங்களில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

உலகில் எங்கும் இதுபோன்ற விளையாட்டை விளையாடுபவர்களை நீங்கள் காண முடியாது. அதன் மூலம், எனது உலகளாவிய பணி செய்து முடிக்கப்படுகிறது; என் மீதான சுமை மிகையாகக் குறைகிறது. இதில் புதைந்திருக்கும் அர்த்தத்தை, மர்மத்தை உங்களால் புரிந்து கொள்ள முடியாது. ஆனால் கடவுளே உங்களுடன் விளையாடுவதால்

நீங்கள் எவ்வளவு பெரிய பாக்கியவான்கள்! மேலும் அவர் முன், உங்கள் மூக்கை உரசும் வாய்ப்பு உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது! உங்கள் மனதை அங்கும் இங்கும் அலைபாய விடாமல், பிற விஷயங்களைப் பற்றியும் சிந்திக்காமல், நீங்கள் தீவிரமாக விளையாடுகிறீர்கள், இது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. எங்கும் எதிலும் எதுவுமே இல்லை - நான் உங்களுக்குச் சொல்கிறேன் - நீங்கள் மிகவும் முக்கியத்துவம் கொடுக்கும் அனைத்து உலக விஷயங்களிலும் எதுவுமே இல்லை!

குமார், மெய்யென்று எளிதில் ஏற்கமுடியாத 'பொய்'க் கதைகளை எடுத்துரைத்து பாபாவை மகிழ்விப்பது வழக்கம். ஒரு கட்டத்தில், பைதூல் ஒரு மாதம் ஆங்கிலத்தில் மட்டுமே பேச வேண்டும் என்று கூறப்பட்டது. அவர் அரிதாகவே ஆங்கில மொழியைப் பேசியதால், இது பல நகைச்சுவையான தருணங்களுக்கு வழிவகுத்தது. அவரது அறைக்கு எலி ஒன்று நுழைந்தபோது, அதை 'பாய் எலி' (BOY RAT) என்று விவரித்தார். அவரது மணிக்கட்டு துடித்தபோது, அவர் கோஹெரிடம் 'பம்பிங் வலி' (PUMPING PAIN, துடிதுடிக்கும் வலி)யாக இருப்பதாகக் கூறினார்.

இந்த நேரத்தில் ஒரு முறை சீட்டு விளையாடிய போது, பாபா விளக்கினார்:

வெவ்வேறு நிலைகள் மற்றும் ஆன்மீகத் தளங்களில் நிலைகொண்டுள்ள தனிநபராகவோ அல்லது தனிமைப்படுத்தப்பட்ட உணர்வு மையங்களாகவோ உங்களிடமிருந்து வெளிப்படும் அனைத்து நடவடிக்கைகளும், அவற்றின் முடிவுகளில் வரையறுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, வெவ்வேறு கேள்விகளுக்கு உங்கள் தலையை அசைப்பது, வெவ்வேறு செயல்பாடுகள் மற்றும் மனநிலைகளைக் குறிக்கும் பதிலாக விளங்குகிறது. நான் கேட்கலாம்: "நீங்கள் சாப்பிட்டீர்களா? தூங்கினீர்களா? அழுதீர்களா? நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா?" ஒவ்வொரு முறையும் 'ஆம்' அல்லது 'இல்லை' என்பதைக் குறிக்கும் வகையில் உங்கள் தலையை அசைப்பீர்கள். ஆனால் ஒவ்வொரு தலையசைவும் ஒரு நேரத்தில் ஒரு விஷயத்தை மட்டுமே வெளிப்படுத்துகிறது மற்றும் தெரிவிக்கிறது.

அதற்கு நேர்மாறாக, அவதார புருஷர் அல்லது சத்குருவின் ஒவ்வொரு செயலும், வெவ்வேறு உணர்வு நிலைகளில், பன்மடங்கு செயல்களை உருவாக்குகிறது. என்னுடைய ஒவ்வோர் அசைவும், அதன் செயல் மற்றும் எதிர்வினை, வெளிப்பாடு மற்றும் விளைவு ஆகியவற்றில் வரம்பற்றது. பௌதீகத் தளத்தில் நான் ஏதேனும் செயலைச் செய்தால், உடனடியாக அதன் விளைவு, தானாகவே வெவ்வேறு தளங்களில் பல்வேறு செயல்களை உருவாக்குகிறது. எனது தலையை ஒரு முறை அசைப்பது அனைத்து உணர்வுத் தளங்களிலும் ஒரே நேரத்தில் எண்ணற்ற செயல்கள் மற்றும் எதிர்வினைகளின் அலைகளை உருவாக்குகிறது.

இது பல இயந்திரங்கள், விளக்குகள் மற்றும் பலவற்றுடன் இணைக்கப்பட்ட ஒரு தொழிற்சாலையில் உள்ள 'மின் இயக்கத்

தொடர்பி'யைப் (ELECTRIC SWITCH) **போன்றது. அதிக முயற்சி இல்லாமல், ஒரு மின் இயக்கத் தொடர்பியை இயக்குவதன் மூலம் பல இயந்திரங்கள், விளக்குகள் இயக்கப்படுகின்றன.**

அந்தக் காரணத்திற்காக, ஸு:பி இலக்கியத்தில் சத்குரு 'குதுப்' என்று அழைக்கப்படுகிறார், அதாவது அச்சாணி. இவ்வாறு, 'குதுப்' என்பவர் படைப்பில் உள்ள அனைத்தும் சுழலும் அச்சாணியாவார்; மேலும் அவர் எல்லாவற்றின் மையமாகவும் இருப்பதால், ஒவ்வோர் ஆன்மீகத் தளத்திலும் ஒவ்வொன்றும் அவரிடமிருந்து சமமான தொலைவில் உள்ளன. அவர் ஒரு சக்கரத்தின் மையத்தைப் போன்றவர், அதைச் சுற்றி அவரது உடல் இயக்கங்களின் விளைவாக, அனைத்து உலகளாவிய பணிகளும் தானாகவே செயல்படுகின்றன.

இவ்வாறு, இந்த சீட்டு, சதுரங்க விளையாட்டுகள் மற்றும் எனது இதர அனைத்து செயல்பாடுகளாலும், அனைத்து ஆன்மீகத் தளங்களிலும் பல்வேறு விளைவுகள் ஏற்படுகின்றன, மேலும் எனது உலகளாவிய பணிகளுக்காக எந்த சிறப்பு முயற்சியும் எடுக்கவேண்டிய தேவையில்லை.

மேலும் இது விஷயத்தில், '**அவதார புருஷர் மற்றும் சத்குருக்கள் 'வரம்பற்றவர்கள்', அவர்களின் உலகளாவிய பணிக்காக, அவர்கள் எல்லா சந்தர்ப்பங்களிலும் வரம்பற்ற வழிமுறைகளைப் பயன்படுத்துகின்றனர்**' என்றும் பாபா குறிப்பிட்டார். இந்தக் காரணத்திற்காக, '**ஒருவர், அவர்கள் செய்வதைப்போல் ஒன்றைச் செய்யாமல், சொல்வது போலச் செய்ய வேண்டும்.**'

1958 ஆகஸ்ட் 22 வெள்ளிக்கிழமை அன்று, பாபாவின் ஏகாந்தவாசம் மற்றும் ஆன்மீக உள்பணியின் முதல் 40 நாள் காலகட்டம் (நீல்கந்த்வாலா, கைக்கோபாத் இருவருடன்) நிறைவடைந்தது, இது 100 சதவீதம் திருப்திகரமாகச் செய்யப்பட்டதாக பாபா கூறினார். ஆகஸ்ட் 25 அன்று, தமது ஏகாந்தவாசத்திலிருந்து பாபா அவருடைய அன்பர்கள் சிலருக்கு இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார், அது ஆறு நாட்களுக்குப் பிறகு வாழ்க்கைச் சுற்றறிக்கையாக (LIFE CIRCULAR) வெளியிடப்பட்டது:

இந்த மூன்று மாதங்களில், சூழ்நிலைகள், என் அன்பர்களின் அன்பு, நம்பிக்கை இரண்டையும் சோதனைக்குள்ளாக்கும். எனவே, எனது மேலங்கியை உறுதியாகப் பற்றிக் கொள்ள உங்களால் முடிந்தவரை முயற்சி செய்யுங்கள். பிறரைப் பற்றி தவறாகப் பேசாதீர்கள், பிறரைப் பற்றி தவறாக நினைக்காதீர்கள். மெஹராபாத் அல்லது மெஹராஸாத்திற்குச் செல்ல வேண்டாம், என்னுடனும் அல்லது மெஹராபாத், மெஹராஸாத்தில் தங்கியிருக்கும் எவருடனும், தொடர்பு கொள்ள வேண்டாம் என்பதற்கான என் அறிவுறுத்தல்களை நினைவில் கொள்ளுங்கள்.

பாபா, தம்முடன் இருப்பவர்களிடம் வேறு எவரைப் பற்றியும் எந்தத் தவறான எண்ணங்களையும் கொண்டிருக்கக் கூடாது என்று வலியுறுத்தி வந்தார். ஒருமுறை, ஒரு நாள் காலையில், குடும்பப் பிரச்சினைகளைக் குறிப்பிட்டு,

“உலகம் முழுவதும் ஆபத்தில் இருக்கும்போது, ஏன் இப்படி ஓர் அற்ப விஷயத்தைப் பற்றிக் கவலைப்படுகிறீர்கள்? முற்றிலுமாக எனக்குக் கீழ்ப்படிந்து, எனது பணியில் எனக்கு உதவுங்கள், நீங்கள் என் முன்னிலையில் இருக்கும்போது, எந்தக் காரணத்திற்காகவும் கவலைப்படாமல், மகிழ்ச்சியாக, மனநிலையை இழக்காமல் இருக்க விரும்புகிறேன்” என்று குறிப்பிட்டார்.

அவ்வப்போது, பாபா வேண்டுமென்றே சில செய்தித்தாள் தலைப்புகளை முன்வைத்து, மண்டபத்தில் மண்டலி அதை சத்தமாக வாசிக்கும் போது, **’எந்த ஒரு நாட்டின் தலைவரையோ அல்லது அதிகாரியையோ எவரேனும் தற்செயலாக விமர்சித்தால், பாபா உடனடியாக அவரைத் திருத்தி, அவர்களைக் குறித்துப் புறங்கூறுவதைத் தவிர்க்க வேண்டும்’** என்று எச்சரிப்பது வழக்கம். **‘எண்ணத்தில் எப்பொழுதும் தூய்மையாக இருங்கள்’** என்று மண்டலியிடம் திரும்பத் திரும்பக் கூறிவந்தார்.

முதல் 40-நாள் சகவாச காலகட்டத்திற்குப் பிறகு, பாபா, மண்டலிக்கு இப்படி ஒரு வித்தியாசமான சொற்றொடரை வழங்கி, அதை மொழியுமாறு கேட்டுக்கொண்டார்: **“ஓ அன்பான கடவுளே! மெஹர் பாபாவின் பணி 100 சதவிகிதம் நிறைவடையட்டும்!”**

பாபா, தனது முன்னிலையில் பிரார்த்தனையை மொழியுமாறு பைதூலிடம் கேட்டுக்கொள்ளவே, அதன் போக்கில், பாபா பலமுறை திரும்பத் திரும்பக் கூறினார்: **“என் உடல் நிலைத்திருக்கலாம் அல்லது என்னைவிட்டுப் போகலாம், ஆனால் எனது பணி முடிக்கப்பட வேண்டும்.”**

இந்த நேரத்தில் பாபாவின் உடல்நிலை சீரில்லாமல் இருந்தது. உதாரணமாக, ஆகஸ்ட் 28 அன்று காலை 9:00 மணியளவில், பாபாவிற்குத் திடீரெனக் குமட்டல் ஏற்பட்டது. பைதூல் சில நேரங்களில் பாபாவின் உடல் நலம் மேம்பட பிரார்த்தனை செய்யும் போது, பாபா அவரைத் திருத்தினார், **“என் உடல் நலனுக்காக கடவுளிடம் பிரார்த்தனை செய்யாதீர்கள்; எனது பணி திருப்திகரமாக நிறைவுற, மனதார பிரார்த்தனை செய்யுங்கள். இந்தப் பணி என் இதயத்திற்கு மிகவும் நெருக்கமானது!”**

இந்தக் காலக்கட்டத்தில், மண்டலியின் மிகமிகச் சிறிய தவறுகளை பாபா சுட்டிக் காட்டிய அதே வேளையில், இதுபோன்ற குறுந் தவறுகளை ஒரு சராசரி நபர் சற்றும் கண்டுகொள்வதில்லை. மாறாக, ஒரு பெரிய அத்துமீறல் நடந்தால், சம்பந்தப்பட்ட நபர் அஞ்சி நடுங்கும் வேளையில், பாபா அதை முற்றிலுமாக நிராகரிப்பது மட்டுமின்றி, அது அவரது தவறு அல்ல என்று குற்றவாளிக்கு ஆறுதல் கூறினார். **“நானேதான் அதைச் செய்தேன், கவலைப்படாதீர்கள். உங்களால் என்ன செய்ய முடியும்? எனது விருப்பமின்றி ஓர் இலையும் அசையாது!”** என்று உறுதியளித்தார்.

இதுபோன்ற ஒவ்வொரு சம்பவத்திற்கும் அல்லது யாரொருவரின் அத்துமீறலுக்கும் பிறகு, பாபா மனம்வருந்தி மன்னிப்புக் கோரும் இரங்கல் பிரார்த்தனையை மொழியச் செய்தார். அதை மொழியும்போது லேசாகக்

கன்னத்தில் அறைவதை வழக்கமாகக் கொண்டார். சில நேரங்களில், அவர் தவறிழைத்தவரின் கைகளை எடுத்து, அவரது கன்னங்களில் லேசாக அறைந்து, சம்பந்தப்பட்ட நபரின் கண்களில் கண்ணீரை வரவழைத்தார்.

ஒவ்வொரு மண்டலியும் தான் பயன்படுத்திய சிறிய துணிமணிகளைத் துவைக்க வேண்டும். (ஒரு சலவைத் தொழிலாளி இதர கடினமான சலவையைச் செய்தார்.) பாவ் கல்சூரியின் ஆடைகளைத் துவைக்குமாறு பாபா, குமாருக்குக் கட்டளையிட்டார். குமார் அவரை விட வயதில் பெரியவர் என்பதால், பாவ் கல்சூரி தனது ஆடைகளை அவரிடம் துவைக்கக் கொடுக்கத் தயங்கினார். ஆனாலும், பாபாவின் கட்டளையை நிறைவேற்றும் பொருட்டு, அவர் இதுவரை பயன்படுத்தாத கோட் ஒன்றை அவரிடம் கொடுத்தார். நான்கைந்து நாட்களுக்குப் பின்னர், அதே கோட் மீண்டும் துவைக்கக் கொடுக்கப்பட்டது. இதைக் கேள்விப்பட்ட பாபா, '**ஏன் குமாரிடம் துணிமணிகளைத் துவைக்கக் கொடுக்கவில்லை**' என்று பாவ் கல்சூரியிடம் கேட்டபோது, பாவ், தனது கோட்டை அவரிடம் கொடுத்ததாக பதிலளித்தார். **"என்னை எரிச்சலூட்டாதீர்கள்!"** பாபா கடிந்துகொண்டார். **"என்னை ஒரு குழந்தை என்று நினைக்கிறீர்களா? நீங்கள் என்ன செய்திருந்தாலும், அது சரியானது என்று நினைக்கிறீர்களா?"** பாவ் கல்சூரி தனது தவறை ஒப்புக்கொண்டதோடு, இனிமேல் தனது ஆடைகளை குமாரிடம் துவைக்கக் கொடுப்பதாக உறுதியளித்தார். இருப்பினும் பாபா அவரை இந்த உத்தரவிலிருந்து விடுவித்தார்.

ஒருமுறை குமாருடன் பேசிக்கொண்டிருந்த வேளையில், அவர் கூறிய விஷயத்தால் ஆத்திரமடைந்த பைதூல், தனது கோபத்தை வெளிப்படையாக தெரிவித்தார். பாபா உடனடியாகத் தலையிட்டு, பைதூலைக் கடிந்துகொண்டார், **"உங்கள் பிரார்த்தனைகள், இறை நாமத்தை உச்சரிப்பது அனைத்தும் பயனற்றவை! உங்கள் இதயத்தை சுத்தமாக வைத்திருக்க முடிந்தால் மட்டுமே, உங்கள் பிரார்த்தனை பயனுள்ளதாக இருக்கும்! பிரார்த்தனையின் நோக்கம் இதுதான். இதயம் சுத்தமாக இருந்தால், பிரார்த்தனை கூட தேவையில்லை.**

"நள்ளிரவிலிருந்து ஒரு மணிநேரம் பிரார்த்தனை செய்ய நீங்கள் விழித்திருக்கிறீர்கள், மீண்டும் அதிகாலை 4:00 மணிக்கு; இவ்வாறு ஒவ்வோர் இரவும் மூன்று அல்லது நான்கு மணி நேரம் தூங்குவது அரிது. பிரார்த்தனையின் போது நீங்கள் கடவுளிடம் எப்படிப் புலம்புகிறீர்கள்! ஆனால் இதயம் அசுத்தமாக இருக்கும் வரை இதெல்லாம் பலனில்லை. உங்கள் இதயத்தைத் தூய்மையாக வைத்திருந்தால் நீங்கள் ஈடு இணையற்றவர்! கோபத்தை வெளிப்படுத்தாத யார் ஒருவருக்கும் நான் கரம்கூப்பி தலைவணங்குகிறேன்."

ஒருமுறை மண்டபத்தில் பாபா, மண்டலி ஒருவரிடம் சைகையால் உரையாடிக் கொண்டிருந்தபோது, வேறு இருவர் தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தனர். பாபா சீற்றமடைந்து வினவினார்: **"நான் இறை மனிதன்,**

உங்கள் மத்தியில் இருக்கும் போது நிலைமை இப்படி இருந்தால், நான் இந்த உடலைத் துறந்த பின்னர் என்ன நடக்கும்? நான் ஒருவருடன் பேசும் போது நீங்கள் ஏன் பேசுகிறீர்கள்? எச்சரிக்கையாக இருங்கள்! நான் பேசும்போது, அதில் முழு கவனம் செலுத்துங்கள்."

1958 செப்டம்பர் 6 சனிக்கிழமை தற்செயலாக ஸொராஸ்ட்ரியன் மற்றும் இந்து நாட்காட்டிகளின்படி ஸொராஸ்டர், கிருஷ்ணா இருவருக்கும் பிறந்த நாள். அன்றைய தினம், பெண்மண்டலி பாபாவிற்கு 'இரட்டை' பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர்!

காடேக்கரின் உடல்நிலை மோசமடைந்து வருவது வெளிப்படையாகத் தெரிந்தது. அவரது ஒரே மகன், திகம்பர், பெர்க்லி, கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தில் (UNIVERSITY OF CALIFORNIA, BERKLEY) புவியியல் மேற்படிப்புக்கான உதவித்தொகையை அடையப் பெற்றார், மேலும் அவர் அமெரிக்காவில் நீண்ட நாட்கள் வாழப் போவதைக் குறித்து, காடேக்கர் கவலையில் ஆழ்ந்தார். கவலைப்படுவதை நிறுத்துமாறு பாபா அவருக்கு அறிவுறுத்தி, மேலும் அவர் பள்ளி மாணவனாகக் கற்றுக்கொண்ட, ஸர் வால்டர் ஸ்காட்டின் (SIR WALTER SCOTT) பின்வரும் ஈரடி வரிகளை அவருக்குத் திரும்பத் திரும்ப எடுத்துரைத்தார்:

அவன் மெதுவாக வந்தாலும், விரைவாக வந்தாலும்,
எதுவாக இருந்தாலும் இறுதியில் வருவது மரணம்தான்.

இருப்பினும், காடேக்கர் தொடர்ந்து இதை எண்ணி சஞ்சலப்பட்டுக்கொண்டே இருந்ததால், இரவில் தூங்குவதில் சிக்கல் ஏற்பட்டது. ஏழு நாட்களுக்கு ஏழு தூக்க மாத்திரைகளை கோஹெர், பாபாவின் அறிவுறுத்தலின் பேரில் கொடுத்தார். அவர் ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டிருந்ததால் அவருக்கு பெனாட்ரில் ஸிரபும் (BENADRYL SYRUP) கொடுக்கப்பட்டது. தூங்கும் முன்னர் ஒரே ஒரு மாத்திரையை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கோஹெரின் தெளிவான அறிவுறுத்தல்கள் இருந்தபோதிலும், மறுநாள் காலை காடேக்கர் ஏழு தூக்க மாத்திரைகளையும் விழுங்கினார். அது கண்டுபிடிக்கப்பட்டதும், பாபா அவரை அழைத்து, '**ஏன் இப்படி ஒரு முட்டாள்தனமான தவறு செய்தீர்கள்**' என்று கேட்டார். கோஹெர் அவருக்கு சில ஆப்பிள்களைக் கொடுத்தார்; பாபா அவரைத் தமது பக்கத்தில் அமர வைத்தார். இது எந்த விதமான எதிர்வினையையும் தணிப்பது போலத் தோன்றியது, ஏனெனில் மாத்திரைகள் அவருக்கு எந்த பாதகமான விளைவையும் ஏற்படுத்தவில்லை. விரைவில், காடேக்கரின் கவலைகள் அவரை விட்டு விலகியது, அவரது மனநிலை மாறியது, மேலும் அவர் மகிழ்ச்சியாகக் காணப்பட்டார்.

ஒரு நாள், சீட்டு விளையாடும் வேளையில், தான் செய்த சில தவறுகளால் காடேக்கர் மன உளைச்சலுக்கு ஆளானார். அந்த மோசமான மனநிலையில் அவரைப் பார்த்த பாபா, காடேக்கரிடம், **"கவலைப்படாதீர்கள்.**

உலகில் எது நடந்தாலும் அது இறைவனின் விருப்பப்படியே நடக்கிறது. பாவங்கள் கூட இறைவனின் விருப்பத்தால்தான் நிகழ்கின்றன!" என்று உறுதியளித்தார். பாபா, அலோபாவிடம் ஹஃபீஸின் ஈரடி வரிகளை மொழியுமாறு கூறினார்:

பாவம் செய்வது உன் கையில் இல்லை
என்பதை உணர்ந்து கொண்டாலும்,
இறை மீதான பயபக்தியின் காரணமாக,
நீ அதைச் செய்ததாக ஒப்புக்கொள்!

1958 செப்டம்பர் 15 திங்கட்கிழமை பாபா கூறினார், **"நவம்பர் மாத இறுதிக்குள் மிகப்பெரிய பணியை முடிக்க இன்னும் இரண்டரை மாதங்கள் உள்ளன."** அவர் கைக்கோபாத்தை அழைத்து, தமது பணியை வெற்றிகரமாக முடிக்க, அவருக்கு முன், பிரார்த்தனையை மொழியுமாறு அறிவுறுத்தினார்.

முன்னர் ஒருமுறை பாபா, அலோபாவிடம் அவரை உற்றுப் பார்க்கக் கூடாது என்று தடை விதித்திருந்தார்; அப்படி உற்றுப் பார்ப்பதைத் தவிர்க்கும் விதத்தில், அலோபாவை மண்டலி மண்டபத்தில் இருண்ட சூரிய கண்ணாடிகளை அணியச் செய்தார். இந்தக் காலகட்டத்திலும், ஒவ்வொரு நாளும் அலோபா, பாபாவைக் கூர்ந்து உற்றுப் பார்த்துக் கொண்டிருந்ததை, கையும் களவுமாகக் கண்டுகொண்டார். பாபா அவரைக் கடுமையாகக் கண்டித்து, பின்பு, மனம் வருந்தி மொழியும் இரங்கல் பிரார்த்தனையைக் கூறுமாறு அறிவுறுத்தினார். அதைத் தொடர்ந்து, அலோபா அவரது அறைக்கு அனுப்பப்படும் வேளையில், அங்கு அவர் உணர்ச்சிகளை அடக்க முடியாமல் மிகையாக அழுது கொண்டிருப்பது வழக்கம். சிறிது நேரத்தில், அவர் என்ன செய்கிறார் என்று பார்த்து வர பாபா, புக்காரை அனுப்பி வைத்து, மீண்டும் அவரை மண்டபத்திற்கு அழைத்து வந்தார்.

பாபாவை உற்றுப் பார்ப்பதைத் தவிர்ப்பதற்காக, அலோபா, பாபாவின் முன், முதுகைக் காட்டி அமரத் தொடங்கினார். ஏன் இப்படி விசித்திரமாக நடந்து கொள்கிறீர்கள் என்று பாபா கேட்டார்: **"என்னை உற்றுப் பார்க்காமல், பிற அனைவரையும் போல் என்னை நோக்கி சாதாரணமாக அமர முடியாதா?"**

அதற்குப் பிறகு, பாபா, மண்டலியிடம், **"இந்த மனிதர் இரவு முழுவதும் எனது புகைப்படத்தையே உற்றுப் பார்க்கிறார், அதனால்தான் அவர் என்னையும் எப்பொழுதும் உற்றுப் பார்க்கும் பழக்கத்தைக் கொண்டிருக்கிறார். நான் அவருடைய உடலை துண்டு துண்டாக வெட்டச் சொன்னால், அவர் எனது கட்டளையை உடனடியாக நிறைவேற்றுவார் என்று எனக்குத் தெரியும். ஆனால் அவரால் இதுபோன்ற சிறிய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய முடியாது!"**

அடுத்த நாள், பாபா, அலோபாவை மண்டலி மண்டபத்தில் அவர் அமரும் திசையை மாற்றிக் கொண்டு, வெகு தொலைவில் அமருமாறு அறிவுறுத்தினார். ஆனால், அவர் பாபாவைக் கடைக்கண்ணால் பார்த்ததை அவர் கண்டுபிடித்து, கண்டித்து, மீண்டும் மன்னித்த பின்னர், அவரிடம் பாபா தமது கோரிக்கையை

வைத்தார்: **“உங்களால் எனக்குக் கொஞ்சம் கூட உதவ முடியவில்லையா? நீங்கள் என்னை நேசிக்கிறீர்கள்; ஆனால் எனது பணியில் எனக்கு உதவுங்கள்!”**

அலோபா, பாபாவை உற்றுப் பார்த்ததற்காக அவரைக் கடுமையாகக் கண்டித்து, திட்டாத நாளே இல்லை. பாபாவைப் பார்ப்பது கூட அலோபாவிற்குக் கடினமாகிவிடும் அளவுக்கு அது சென்றது. இதனால், அலோபா மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானதால், தூங்க முடியாமல் தவித்தார். ஒரு நாள் பாபா அவரிடம், **“உங்களுக்கு வயதாகிறது. ஏன் இப்படி வேதனைப்படுகிறீர்கள்?”** என்று கேட்டார்.

அலோபா இப்போது மன்றாடினார்: ”உங்கள் சிறிய அறிவுறுத்தலைக் கூட என்னால் பின்பற்ற முடியாதது, உங்களை வருத்தமடையச் செய்கிறது. அதனால், என்னால் இரவில் தூங்க முடியவில்லை.”

பாபா அவரைத் திருத்தினார், **“உங்கள் தலையை ஏன் பயன்படுத்த வேண்டும்? நான் சொல்வதைச் செய்யுங்கள்! ‘புத்திசாலியாக’ மாறி, நீங்களே உங்களைச் சிக்கலுக்கு உள்ளாக்குகிறீர்கள்!”** பின்வரும் நிகழ்வை மேற்கோள் காட்டி, பாபா கூறினார்:

ஒருமுறை, உங்களைப் போலத் தடுமாற்றத்தில் இருக்கும் ஒருவர், சத்குரு ஷம்ஸ்-இ-தப்ரிஸின் (SHAMS-E-TABRIZ) **தொடர்பில் வந்து, அவரை ஆன்மீகப் பாதையில் வழிநடத்தும்படி குருநாதரிடம் பிரார்த்தனை செய்தார். வந்தவர் அவரது பொது அறிவைப் பயன்படுத்தி, ஷம்ஸ்-இ-தப்ரிஸ் வழங்கும் அசல் வழிமுறைகளை மாற்றாமல், அவர் சொன்னபடி செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டார். ஆனால் அந்த மனிதரால் அவ்வாறு செய்வதைத் தவிர்க்க முடியவில்லை. ஒருமுறை இருவரும் ஒரு நதிக்கரைக்கு வந்து, அதைக் கடக்க விரும்பினர், ஆனால் நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால், அதைக் கடந்து செல்ல வழியில்லை.**

எனவே அவர்கள் எவ்வாறு தொடர வேண்டும் என்று அந்த நபர் ஷம்ஸிடம் கேட்கவே, ஷம்ஸ் கூறினார்: “‘ஷம்ஸ், ஷம்ஸ்’ என்று கூறிக்கொண்டே என்னைப் பின்தொடர்ந்து வாருங்கள்.” ஷம்ஸும் அவ்வாறு உச்சரித்துக்கொண்டே நதியில் இறங்கி அதைக் கடக்கத் தொடங்கினார். அந்த மனிதரும் ‘ஷம்ஸ், ஷம்ஸ்!’ என அவரது உதடுகளில் மொழிந்துகொண்டே பின்தொடர்ந்தார்.

சிறிது நேரத்தில், அந்த நபர், ஷம்ஸும் ஏதோ கூறுவதைக் கவனித்தார். கூர்ந்து கவனித்த அவர், ஷம்ஸ் ‘அல்லா!, அல்லா! அல்லா!’ என்று கூறிய அந்த கணத்தில், அவருக்காக நதி இரண்டாகப் பிளவுற்றதைக் கண்டார். எனவே அந்த மனிதரும் நினைத்தார்: “ஷம்ஸ் ‘அல்லா!, அல்லா!’ என்று கூறும்போது, நான் ஏன் ‘ஷம்ஸ், ஷம்ஸ்’ என்று சொல்ல வேண்டும்?”

மேலும், தனது பகுத்தறிவு ஆற்றலைப் பயன்படுத்தி, குருநாதர் தனக்கு அறிவுறுத்தியதற்கு மாறாக, ‘அல்லா!, அல்லா!’ என்று உச்சரித்த அடுத்த கணமே அவர் நீரில் மூழ்கினார்!

பாபா இவ்வாறு கூறி முடித்தார், **"அலோபா, நான் உங்களிடம் ஆயிரம் முறை கூறியுள்ளேன்: நான் சொல்வதைச் செய்யுங்கள், உங்கள் பகுத்தறிவையோ, விவேகத்தையோ பயன்படுத்தாதீர்கள் என்று! எனது கட்டளைக்கு எதிராகச் செய்வதால் நீங்கள் பிரச்சினைக்கு உள்ளாகிறீர்கள்."**

அலோபாவின் சுபாவம் என்னவெனில், பாபா, வேறு எவருக்கேனும் வழங்கும் கட்டளைகளை, அவரும் கடைப்பிடிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தார். பாபாவின் மனநிலை, இதனால் அவ்வப்போது குழப்பமடையும் வேளையில், அவர் அலோபாவைக் கண்டித்தார்: **"நான் உங்களிடம் செய்யச் சொல்லாததைச் செய்யாதீர்கள். என்னை பாம்பு கடிக்க நேர்ந்தால், நான் அழைக்கும் வரை நீங்கள் என் உதவிக்கு வரக்கூடாது. நான் எனது நாற்காலியிலிருந்து கீழே விழுந்தால், உங்களை அழைக்காமல் நீங்களாக என்னிடம் வரக்கூடாது. எவரேனும் வந்து என்னைத் தாக்கினாலும் - சுடவோ அல்லது கத்தியால் குத்தவோ செய்தாலும் - நான் அழைக்காமல் நீங்கள் என்னிடம் வர வேண்டாம்."**

அப்படியிருந்தும், ஒரு நாள் மண்டபத்தில் பாபா, நாற்காலியில் அமர தன்னை சரிசெய்து கொண்டிருந்தபோது, அவர் அசௌகரியமாக உணர்வதாக எண்ணி, அலோபா, பாபாவின் முதுகில் ஒரு தலையணையை வைக்கச் சென்றார். **"ஏன் என் அருகில் வந்தீர்கள்?"** பாபா எரிச்சலுடன் கேட்டார், **"நீங்கள் எனது மனநிலையைக் கெடுத்துவிட்டீர்கள்!"**

பாபாவின் கட்டளைகளை நிறைவேற்றுவதில் அலோபா எப்பொழுதும் அவசரப்பட்டார்; பாபா, அவற்றைக் கொடுத்து முடிப்பதற்கு முன்னரே - அறிவுறுத்தல்களை முழுமையாகக் கேட்காமல் - அதைச் செயல்படுத்தத் தொடங்கினார்.

ஓர் இரவு பாபா இந்த வரிகளை பாவ் கல்சூரிக்கு எடுத்துரைத்தார்:

நாங்கள் இறுதி இலக்கைச் சென்றடைய அதிவேகத்தில் நடந்தோம்;
எங்கள் வேகத்தை சரிபார்க்க முடியாமல், அதையும் கடந்தோம்!

அடுத்த நாளும், அலோபா அதே தவறைச் செய்தார்; அப்போது இந்த வரிகள் அவருக்கு வாசிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பாபா, **"இதுவே உங்கள் நிலை!"** என்றார்.

அலோபா சம்பந்தப்பட்ட மற்றுமொரு துரதிர்ஷ்டவசமான சம்பவம் - இந்தக் காலக்கட்டத்தில் பாபா, மண்டலியிடம் மீண்டும் மீண்டும் மொழியுமாறு அறிவுறுத்திய பிரார்த்தனை தொடர்பானது. மண்டபத்தில் பாபா, மண்டலியுடன் இருந்தபோது - இது அலோபாவின் நேரம். இதனால் அலோபா அங்கு பாபாவுடன் இருக்க முடியாத சூழ்நிலை உருவாகவே, அவர் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானார். ஒருமுறை பாபா அவரை அழைத்தபோது, அவர் பிரார்த்தனையை உதடுகளில் உச்சரித்துக்கொண்டே வந்தார். பாபா உடனே, **"ஜபத்தை நிறுத்துங்கள், இங்கே அமர்ந்து என்னைப் பார்த்துக் கொண்டே இருங்கள். தொடர்ந்து பார்த்துக் கொண்டே இருங்கள்; எனது மகிழ்ச்சியை சற்று ஒதுக்கி வைத்துவிட்டு உங்களை மகிழ்வுறச் செய்யுங்கள்!"** அதற்குப் பிறகு,

பாபாவிடமிருந்து பிரிந்து தனியாக இருப்பதை அவரால் எப்படித் தாங்கிக்கொள்ள முடியாது என்று அலோபா சுற்றி வளைத்து தொடர்பற்ற நீளுரை ஒன்றை வழங்கினார்.

பாபா அவருக்கு, கபீரின் கவிதை வரிகளை நினைவுபடுத்தினார்:

குருநாதர் அவராகவே எதையேனும் கொடுத்தால்,

அது பால் போன்றது;

அவரிடம் கேட்டு அடையப் பெறுவது தண்ணீர் போன்றது;

அவரைக் கட்டாயப்படுத்தி தன்வசமாக்குவது இரத்தம் போன்றது.

கபீர் இதைத்தான் கூறுகிறார்.

"உங்களை மகிழ்விக்க மட்டுமே நினைக்கிறீர்கள்" என்று பாபா திட்டினார். **"என்னை மகிழ்வுறச் செய்வதில் உங்களுக்கு சிறிதளவும் அக்கறை இல்லை. இது என்ன வகையான அன்பு? கிறிஸ்துவிற்கு ஒரு யூதாஸ் இருந்தார்; எனக்கும் அதுபோல் ஒருவராக இருக்காதீர்கள்! இன்றைக்கு இங்கே அமர்ந்திருங்கள். நாளை முதல் நான் உங்களுக்கு என நிர்ணயித்த நேரத்தில் பிரார்த்தனையை மொழியுங்கள்."**

இரண்டு கைகளையும் கூப்பி பாபா அவரை எச்சரித்தார், **"கடவுளின் நிமித்தம், நாளை முதல் உங்கள் மீது நான் கோபப்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்."**

அக்டோபர் 16 'வாழ்க்கை சுற்றறிக்கை'யின் (LIFE CIRCULAR) நகலை குமாரிடம் கொடுக்க, பாபா கையை நீட்டிய போது, அலோபா குதித்து அதை பாபாவிடமிருந்து வாங்க முயன்றார். இது குமாருக்கு சிரிப்பை வரவழைத்த அதே நேரத்தில், அலோபாவிற்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

பாபா இப்போது குமாரைத் திருத்தும் விதத்தில் அவரிடம் இவ்வாறு எடுத்துரைத்தார்:

"பிறரின் தவறுகளைப் பார்த்து சிரிக்காதீர்கள். அனைவரும் தவறு செய்கிறார்கள். இது பிறர் ஒருவரின் மனதைப் புண்படுத்தக் கூடாது என்ற எனது உத்தரவை மீறுவதாகும். நீங்கள் அவருடைய தவறைக் கண்டு சிரித்து அவர் மனதைப் புண்படுத்திவிட்டீர்கள்."

அலோபா, பாபாவின் முன்னிலையில் எந்தத் தவறும் இழைக்காமல், ஏளனத்திற்கு ஆளாகாமல் இருக்கும் எண்ணத்தில், அடுத்த நாள் முதல் அவரது அறையில் இருக்குமாறு பாபா கேட்டுக் கொண்டார். கவிஞர் ஜிகரின் இந்த வசனத்தை பாபா மேற்கோள் காட்டினார்:

அன்பே, உனது பெயர் முழு அழிவு!

எனவே அன்பில் வாழ்வைத் தேடாதே;

'அவன்' விருப்பத்தை உனது விருப்பமாக எடுத்துக் கொள்;

சொந்த விருப்பத்திற்கு இடம் தராதே!

மறுநாள் முதல், அலோபா, அவரது அறையில் தங்கத் தொடங்கினார்; ஆனால் அவர் பாபாவைப் பார்க்க முடியாமல் பரிதாபமாக உணர்ந்தார். பாபா அவரை அழைத்து, அவருக்கு ஆறுதல் கூறும் விதத்தில் இவ்வாறு விளக்கினார்:

ஓர் அழகான ராணி, அவர் தொழுநோயால் பாதிக்கப்பட்ட பிச்சைக்காரன் ஒருவனை சாலையோரம் சந்திக்க நேர்ந்ததாக வைத்துக்கொள்வோம். அவனது உடல் முழுவதும் பயங்கர துர்நாற்றம் வீசுகிறது. ஒருமுறை, ராணியைப் பார்க்கும் வாய்ப்பை அடையப் பெற்றதில், அவன் ராணியைக் காதலிக்கத் தொடங்குகிறான். ராணியை காதலிக்க அவனுக்கு உரிமை உள்ளது, மேலும் அவனது உடல்ரீதியான துரதிர்ஷ்டம், அவரை நேசிப்பதற்கு ஒரு தடையல்ல; ஆனால், அவன் ராணியைத் தழுவ விரும்பினால், அவர் அதை விரும்புவாரா? பிச்சைக்காரனுக்கு ராணியின் மீது அப்படியொரு காதல் இருக்க வேண்டுமா? மாறாக, அவன் தனது காதலை வலுப்படுத்தினால், ராணியின் மகிழ்ச்சியை எப்போதும் மனதில் கொண்டால், அவனது அவலநிலையால் மனம் நெகிழ்ந்த ராணி அவனை கவனித்து எதிர்காலத்தில் அவனுக்கு உதவ முன்வரலாம்.

பாபா மேலும் கூறினார்: **"சேவையே பிரதானமானது! எனக்கு சேவை புரிய அலோபாவிற்குப் பல வழிகள் உள்ளன. இருந்தும், அவர் ஏன் எனது முன்னிலையில் இருக்க வேண்டும் என விடாப்பிடியாக இருக்கிறார்? நான் அவரை இங்கே அமர அனுமதித்தால், உங்களைப் போலல்லாமல், அவர் எனது கட்டளைகளை மீறி, எனக்கு மிகுந்த வேதனையை விளைவிப்பார். அவர் எனக்குப் பிரியமானவர் இல்லை என்றால், நான் ஏன் அவரை என்னருகில் வைத்திருக்க வேண்டும்? ஐந்தே நிமிட நேரத்தில் எட்டும் தூரத்தில் அவரை நான் வைத்துக்கொள்ள முடியும். அவர் எனக்கு இத்தனை துன்பத்தை தந்தாலும், நான் அவரை என்னிடமிருந்து பிரிக்கவில்லை. அப்படியானால், நான் இல்லாமல் அவரால் வாழ முடியாது என்பது எனக்குத் தெரியும்."**

அதற்குப் பிறகு, பாபா, அலோபாவை தன்னுடன் தினமும் சிறிது நேரம் இருக்க அனுமதித்தார்; மேலும் பாபாவின் அனுமதியுடன் குருநாதருக்கான பிரார்த்தனையை (MASTERS' PRAYER) மொழியத் தொடங்கினார். இருப்பினும், சில நாட்களுக்குப் பின்னர், அலோபாவும் பாபாவைப் புகழ்ந்து ஒரு பிரார்த்தனையை மொழியத் தொடங்கினார். பாபா, அவரைத் தடுத்துக் கூறினார்: **"புதிதாக ஏதாவது ஒன்றைக் கொண்டு வராதீர்கள். நான் உங்களை என்னிடம் அழைக்காததன் காரணம் என்னவெனில், நீங்கள் எப்பொழுதும் ஏதாவது ஒன்றை செய்து, எனக்கு சுமையாக இருக்கிறீர்கள். இங்கு அமர்ந்திருக்கும் எனது மண்டலி உறுப்பினர்கள், என் முன் அமர அனுமதிக்கும் உங்களை விட எனக்குப் பிரியமானவர்கள் இல்லை. அவர்கள் நான் சொல்வதைச் செய்கிறார்கள், இது எனது பணியில் எனக்கு உதவியாக இருப்பதால், என் மீதான சுமை குறைகிறது. உங்களைப் பொறுத்தவரை நீங்கள் சுமையை அதிகப்படுத்துகிறீர்கள்.**

"உங்களை விட, எரச் எனக்கு நெருக்கமானவர் இல்லையா? அவரைப் போல நீங்கள் எப்போதேனும் என்னை நேசிக்க முடியுமா? நான்

அவரை இவ்வளவு காலம் (மெஹராபாத்தில்) **எப்படி என்னிடமிருந்து பிரித்து தனியாக வைத்திருக்கிறேன் என்று பாருங்கள்; அவர் எந்த விதமான எதிர்ப்பையும் தெரிவிக்கும் விதத்தில் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. பல வருடங்கள் அவரை என்னிடம் அழைக்காமல் இருந்திருந்தாலும் அவர் குறை கூறியிருக்க மாட்டார், எனது கட்டளைகளை மனமுவந்து ஏற்றுக்கொண்டு மெஹராபாத்தில் இருந்திருப்பார்.”**

புக்கார், குமார் இருவர் பக்கமும் திரும்பி, பாபா, அலோபாவிற்கு கீழ்ப்படிதலைக் குறித்து விளக்குமாறு கட்டளையிட்டார். அவர்கள், தினமும் செய்யத் தொடங்கிய அதுபோன்ற ‘பாடங்களை’ காக்காவிற்கும் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

இது பாபாவின் விசித்திரமான, அவமானப்படுத்தும் முறையாகும்; இதை பாபாவுடன் வாழும் மண்டலி கடக்க வேண்டியிருந்தது. காலம் இதை இவ்வாறு விளக்கியது: “தோட்டத்தைத் தயார்படுத்த, உரிமையாளர் தரிசு நிலத்தில் மண்ணை உழுது, விதைகளை நட்டு, நீர்ப்பாசனம் செய்து, அதை அழகாகவும் பயனுள்ளதாகவும் மாற்றுவதற்காக இரவும் பகலும் உழைத்தார். இதற்கு உதவும் வகையில், சிலரை தோட்டத்தில் நிரந்தரமாகத் தங்க வைத்தார். நிரந்தரமாக வாழும் நபர்களுக்கு வழங்கப்பட்ட சில கடமைகளை அவர்கள் உண்மையாகவும், நேர்மையாகவும் செய்து முடித்தனர். அவர்களில், வெளிப்படையாக கண்டிப்புடனும், கடுமையாகவும் (காக்காவைப் போல்) இருக்கும் ஒருவர் மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டார். பணியில் கவனக்குறைவும், தளர்வும் ஊடுருவுவதைத் தவிர்க்கும் நோக்கத்தில், குடியிருப்பாளர்களிடையே எந்த நட்புறவையும் வளர்க்க உரிமையாளர் அனுமதிக்க மாட்டார், மேலும் சில நேரங்களில் வேண்டுமென்றே அவர்களிடையே முறுகல் நிலையை உருவாக்குவதுண்டு; இதனால் ஒவ்வொருவரும் பிறரின் பணியைக் கண்காணிப்பதோடு, அனைவரும் விழிப்புடன் இருந்தனர்.

“ஆனால் இடையிடையே, சில வெளி நபர்களும் (உதாரணமாக, புக்கார், குமார் போன்றவர்கள்) அனைத்தையும் மேற்பார்வையிட அழைக்கப்பட்டனர்; தோட்டத்து விவகாரங்கள் குறித்து அவர்களுக்கு எந்த அறிவும் இல்லை என்றாலும், நிரந்தரமாக வாழ்பவர்களின் வெவ்வேறு வழிகளில் தவறுகளைச் சுட்டிக்காட்டும் கடமையை உரிமையாளர் அவர்களுக்கு வழங்கினார். தோட்டத்தில் பணிபுரிவதற்கும், உரிமையாளருக்கு சேவை செய்வதற்கும், சரியான முறையில் குடியிருப்பாளர்களுக்கு விரிவுரை வழங்கவும் அவர்கள் அறிவுறுத்தப்பட்டனர். அதிகாரப்பூர்வமாக தற்காலிக பதவி வகிப்பவர்களுக்கு இது ஒரு சிறந்த பாடமாக இருந்தது, ஏனெனில், தோட்டத்தில் பணிபுரிவது என்பது உடல் ரீதியாக உழைப்பது மட்டுமின்றி, அகந்தை சுக்குநூறாக நொறுங்க வேண்டும்; மேலும் அவ்வப்போது வெளி நபர்கள் இந்த விஷயத்தில் பெரிதும் உதவுகிறார்கள். உரிமையாளர் தமது தொழிலாளர்களின் அகந்தையை சிறிது சிறிதாக அழிக்கும் இத்தகைய சூழ்நிலைகளை தினமும் உருவாக்குகிறார். வெளி நபர்களுக்கும் அவ்வப்போது இதை அனுபவிக்கும் வாய்ப்பு இருந்தது, எனவே

உறுதியும், நெஞ்சுரமும் உடையவர்கள் மட்டுமே உரிமையாளரால் அழைக்கப்பட்டு கடமைகள் வழங்கப்பட்டன.

"தோட்டத்தில் பூக்கள் மலர்ந்து, பூத்துக் குலுங்கும் போது, அதைக் காண ஆயிரக்கணக்கானோர் வந்து குவிந்தனர். தோட்டத்தின் சிறப்பையும், அழகையும் கண்டு, அதன் உரிமையாளரும் வெகுவாகக் கவரப்பட்டார். சில நேரங்களில், பார்வையாளர்கள் முன்னிலையிலும் குடியிருக்கும் தொழிலாளர்கள் அவமானங்களை சந்திக்க வேண்டியிருந்தது. உள்வட்ட மண்டலியின் நிலையும் அப்படிப்பட்டது; ஆனால் இந்த வலி மற்றும் கஷ்டத்துடன், தோட்டத்தின் உரிமையாளர் அவர்கள் மீது பொழிந்த அன்பு, கற்பனை செய்ய முடியாதது. ஆயிரக்கணக்கான மக்கள் தோட்டத்தின் மகத்துவத்திலிருந்து அன்பை அடையப் பெறும் அதேசமயம், அதை உருவாக்க உரிமையாளருடன் சேர்ந்து உழைக்கும், சொல்ல முடியாத முயற்சியின் மூலம் மண்டலி அதை அடையப்பெறுவார்கள்."

இந்த நேரத்தில், பாபாவின் உடல்நிலை மோசமடையவே, அவர் கூறியதாவது: **"இந்நாட்களில் எனது ஜுரம் 99° வரை உள்ளது; நான் மண்டலியிடம் வரும்போது, மேலும் மதிய வேளையில் அது 100 அல்லது 101 டிகிரியை எட்டுகிறது. இப்படித்தான் தினமும் நடந்து வருகிறது. இடுப்புப் பாகத்தில் தாங்க முடியாத வலி உள்ளது; அது தவிர, தலையைப் பிளக்கும் வலியோடு, கண் விழிகள் வலியில் கீழே வீழ்ந்து விடும் போலத் தோன்றுகிறது. வாகன விபத்தில், எனது நாக்கில் தையல் போட வேண்டியதாயிற்று. அதன் மேல் சூடான நிலக்கரி வைக்கப்பட்டு, தீப்பற்றி எரிவது போல் உணர்கிறேன்.** (பாபா அதைக் காட்டுவதற்காகத் தனது நாக்கை நீட்டினார்.) **விபத்துக்கு முன்னர், எனக்கு மிகவும் அழகான வடிவில் மூக்கு இருந்தது, ஆனால் காயம் காரணமாக அது இப்போது சீர்குலைந்துவிட்டது."**

"வெளியே குளிர் காற்று வீசும் போது மூச்சு விட சிரமமாக உள்ளது. இடுப்புப் பக்கம் வலி மட்டும் இருந்திருந்தால் நான் பொருட்படுத்தியிருக்க மாட்டேன்; இப்போது ஜுரம் கூட என்னை விட்டபாடில்லை. இதற்கு முன்னர் எவ்வளவு சுறுசுறுப்பாக இருந்தேன்! இப்போது அதற்கு நேர்மாறாக உணர்கிறேன். இந்த ஜுரத்தால் எனது பலம் முழுவதும் பாழாய்போனது."

பாபா, **"இருப்பினும், நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்"** என்று கூறி முடித்தார்.

ஏகாந்தவாச வேளையில், பாபாவின் உடல்நிலை தொடர்ந்து மோசமடைந்தது. வெளி மருத்துவர்களை அழைக்குமாறு கோஹெர் அவரைக் கேட்டுக் கொண்டபோது, பாபா பதிலளித்தார், **"ஏகாந்தவாச காலகட்டத்தில், எந்த வெளி மருத்துவர்களும் என்னை அணுகவதையோ அல்லது நான் அவர்களிடம் செல்வதையோ விரும்பவில்லை. என் உடல் நிலைத்திருக்கலாம் அல்லது போகலாம்; நான் எனது பணியை முடித்தாக வேண்டும்."** இருப்பினும், கோஹெரிடம் இரத்தப் பரிசோதனைக்காக அதை பூனாவிற்கு அனுப்ப அவர் அனுமதித்தார்.

1958 செப்டம்பர் 28 இரவு, பாபாவின் உடல்நிலை மிகவும் மோசமானது; அவர் மிகவும் அமைதியற்றவராகக் காணப்பட்டார். அவர் ஐந்து முறை தளர்வான குடல் அசைவுகளைக் கொண்டிருந்ததோடு, வாந்தியும் எடுத்தார். ஆனால் 29ஆம் நாள் காலையில், ஆண்கள் மத்தியில் இருந்த வேளையில், அவர் கைக்கோபாத்திடம், **"உங்கள் பிரார்த்தனை காரணமாக, நான் இப்போது நன்றாக உணர்கிறேன்"** என்று குறிப்பிட்டார்.

மண்டலியிடம் உரையாற்றிய அவர், **"உங்கள் பிரார்த்தனையின் பலன் இது** (நல்ல உடல் நலனை மீட்டெடுப்பது). **நான் இதை இலகுவான தொனியில் அல்ல, உண்மையாகச் சொல்கிறேன். கபீர் கூறினார்: "எறும்பின் கால்களில் கட்டப்பட்ட மணிகளின் ஓசையைக் கூட கடவுள் கேட்கிறார்!"**

அக்டோபர் 1ஆம் தேதி, கீழ் மெஹராபாத்தில் தங்கியிருந்த மண்டலி உட்பட அனைத்து மண்டலிக்கும், பகலில் இரண்டு முறை தேநீர் அல்லது கா:பி மற்றும் அவர்கள் விரும்பிய அளவு தண்ணீர் அருந்துமாறு பாபா கட்டளையிட்டார். இதன் பின்னர், அவர்கள் ஒவ்வொரு செவ்வாய்கிழமையும், மாத இறுதி வரை, இதே முறையைப் பின்பற்ற வேண்டும் எனவும் அறிவுறுத்தினார். அவர்கள் உபவாசத்தைத் தொடங்குவதற்கு முன்பு, எளிதான உணவை உண்ணுமாறு கூறினார். ஒருமுறை, வேண்டுமென்றே மண்டலியை எரிச்சலடையச் செய்ய முயன்ற பாபா, **"இது** (உண்மையில்) **உபவாசமா?"** என்று கேட்டார்.

பைதூல் உணர்ச்சி பொங்க கூறினார்: "ஆம், பாபா! இந்த விரதத்தில் தேநீர் அருந்துவதற்கு முன் சப்பாத்தி, வெண்ணெய், வாழைப்பழம் ஆகியவற்றை உண்கிறோம். ஆனால் தண்ணீர் மட்டுமே அருந்தி கடைப்பிடித்தால் அது உண்மையான உபவாசமாக இருக்கும்" என்றார்.

அதன்பின், பாபா விளக்கினார், **"பைதூல் ஒருமுறை ஏழு நாட்கள் தண்ணீர் அருந்தாமல் உபவாசம் மேற்கொண்டதால், அதற்கு அவர் முக்கியத்துவம் வழங்குகிறார். அவர் தனது கருத்துக்களுக்கு குரல் கொடுக்காமல் இருந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்! அவர் முறை தவறி பேசியது அனைத்தையும் சாம்பலாக்கி விட்டது!"**

பாபா மேலும் விளக்கினார், **"உங்கள் கோபத்தை வெளிக்கொணர வேண்டும் என்பதற்காக நான் வேண்டுமென்றே உங்களைக் 'குத்திக் குதறு'கிறேன். இருந்தும் நீங்கள் கோபப்படாவிட்டால், நான் உங்களைத் தலை வணங்குவேன்."**

அக்டோபர் 6ஆம் நாள் பாபாவின் கால்கள் வீங்கி, கடுமையான ஜுரம் ஏற்பட்டது. **"நாளுக்கு நாள் என் உடல்நிலை மோசமடைந்து கொண்டே போகும்"** என்று முந்தைய நாள் அவர் குறிப்பிட்டிருந்தார்.

அந்த நிலையிலும், பாபா நீண்ட ஏகாந்தவாசத்திற்கான திட்டங்களை வகுத்தார். இந்த யோசனையை கைவிடுமாறு டாக்டர் கோஹெர் அவரிடம் கெஞ்சி, அழ ஆரம்பித்தார்; அவரைத் தொடர்ந்து புக்காரும் கண்கலங்கி அழுதார்.

பாபா இவ்வாறு கூறினார்: **“என் உடல்நிலை கெட்டுவிட்டது என்பதில் சந்தேகம் இல்லை; ஆனால் நீங்கள் மகிழ்ச்சியாக இருந்தால், அது எனது பணிக்கு உதவியாக இருக்கும். நீங்கள் எனது பணியில் உதவ, சிரித்து மகிழ்ச்சியான மனநிலையில், முகமலர்ச்சியுடன் இருப்பதை நான் காண விரும்புகிறேன்; உங்கள் அழுகையால் எனது பணி வெகுவாகத் தடைபடுகிறது.”**

பாபா மேலும் கூறினார், **“நேற்று, மெஹராவும் நான் கூறுவதைக் கேட்க முடியாமல் மிகவும் அழுது நடுங்கத் தொடங்கினார். அன்பான அக்கறையுடன் அவரை அமைதிப்படுத்தினேன்.”**

உபவாசத்தைத் தொடங்குவதற்கு முன்பு, பாபா எடுத்துரைத்த ‘வாழ்க்கை சுற்றறிக்கை’யை (LIFE CIRCULAR) ஆதி 1958 அக்டோபர் 16 அன்று வெளியிட்டார்:

ஆன்மீக உலகில் ஒரு தனித்தன்மை வாய்ந்த மற்றும் முன் எப்போதும் நிகழாத ஒன்று, விரைவில் நடைபெறும் என்று நான் அறிவிக்கிறேன். ஆனால் இது தவிர, நவம்பர் இறுதிக்குப் பின்னர் எது நடக்கலாம் அல்லது நடக்காமல் போகலாம் என்பதைப் பொருட்படுத்தாமல், இறுதி வரை நீங்கள் என் மீது முழு நம்பிக்கை வைக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவ்வாறு செய்ய நீங்கள் தயாரா என்பதை சுருக்கமாகவும் தெளிவாகவும் எனக்கு நேரடியாக பதிலளிக்கவும். இந்த ஒரு சிறிய பதிலைத் தவிர (நான்கு வரிகளுக்கு மிகாமல்), நவம்பர் மாத இறுதிக்குள் நீங்கள் என்னுடன் அல்லது எரச்சுடன் தொடர்பு கொள்ளக்கூடாது.

அக்டோபர் 17 வெள்ளியன்று, திரவ ஆகாரங்களில் பாபா உபவாசம் மேற்கொள்ளத் தொடங்கினார், மேலும் கோஹெரையும், பெண் மற்றும் ஆண் மண்டலியை மகிழ்விக்க, 24 மணி நேரத்திற்கு ஒருமுறை அவர், சிறிது உணவை உட்கொண்டார். முதல் நாள், கோஹெர் ஒரு டம்ளர் தேநீர் மற்றும் வாழைப்பழத்துடன் மண்டலி மண்டபத்தில் பாபாவிடம் வந்தவர், சில பணிகள் நிமித்தம் திரும்பிச் சென்றார். பாபா வாழைப்பழத்தின் தோலை உரித்து, வாயில் சிறிது திணித்து, மீதியை குமாருக்கும் புக்காருக்கும் கொடுத்தார். “பாபா சாப்பிட்டு முடிப்பது வரை கூடத்தை விட்டு வெளியே போகக் கூடாது என்று கோஹெரிடம் சொல்ல வேண்டி வரும்” என்று குமார் கேலி செய்தார். பாபா தேநீரைப் பருகும்போது, கோஹெர் மீண்டும் தோன்றினார். எனவே பாபா மீதி தேநீரை அவருக்குக் கொடுத்தார். 21 நாட்கள் உபவாசத்தின் போது அவர் எடுத்துக்கொண்ட ‘ஊட்டச்சத்து’ இதுதான்.

எதிர்பார்த்ததற்கு இணங்க பாபாவின் உடல்நிலை மோசமடைந்தது. அக்டோபர் 23 அன்று, **“என்னுடைய பலவீனம் வெகுவாக அதிகரித்துள்ளது. இன்று நான், கைக்கோபாத்துடன் எனது பணியைச் செய்து கொண்டிருந்தபோது, எனது கைகள் நடுங்கத் தொடங்கின”** என்று அவர் வெளிப்படுத்தினார். பாபா கைகளை நீட்டிக் காட்டவே, கைகள் நடுங்கின.

மறுநாள், மண்டபத்திலிருந்து தனது அறைக்கு திரும்பிச் செல்லும் வேளையில், பாபா, மயங்கிய நிலையில், வீட்டின் சுவரில் சாய்ந்து, தன்னை நிலைநிறுத்திக் கொண்டார். கைப்பிடிக் கம்பியை உறுதியாகப் பற்றிக்கொண்டுதான் அவரால் படிக்கட்டுகளில் ஏற முடிந்தது. அன்று இரவு பாபாவின் நிலை கவலைக்குரியதாக இருந்ததை பாவ் கல்சூரி தெரிவித்தார்.

ஒருமுறை நள்ளிரவில் பாபா, பாவ் கல்சூரியிடம் சோடா தண்ணீர் கொடுக்குமாறு கேட்டார். பாவ், ஒரு பாட்டிலைத் திறந்தபோது, தற்செயலாக ஒரு கண்ணாடித் துண்டு மூடியுடன் தரையில் விழுந்தது. சீற்றமடைந்த பாபா, **"நான் பெண்மணிகளை ஐந்து நிமிடங்களுக்காக இங்கு அழைக்க இருந்தேன், நீங்கள் என்ன செய்தீர்கள்? நான் அவர்களை இப்போது வருமாறு அழைத்தால், கண்ணாடி துண்டுகள் அவர்களின் கால்களை காயப்படுத்தும்!"** என்றார்.

பாவ் கல்சூரி உடனே, "நான் அதை சிறிது நேரத்தில் சுத்தம் செய்து அகற்றி விடுகிறேன், பாபா" என்று கூறினார்.

பாபா அவரை உடனடியாகச் செய்யும்படி கேட்டுக் கொண்டார். பாவ் கல்சூரி அதைத் துடைத்து சேகரிக்கத் தொடங்கினார் - ஒரே ஒரு சிறிய துண்டு மட்டுமே இருந்தது. ஆனால், பாபா திருப்தியடையாமல், அவரை, ஒருமுறை அல்ல, பலமுறை சுத்தம் செய்து, அறையைத் துடைக்கச் செய்தார். ஒவ்வொரு மூலையிலும் மீண்டும் மீண்டும் சுத்தம் செய்த முழு நேரமும், பாபா படுக்கையில் அமர்ந்து, **"நான் மெஹராவை ஐந்து நிமிடங்களுக்காக அழைக்க விரும்பினேன், ஆனால் இப்போது உங்கள் கவனக்குறைவால் அதையெல்லாம் கெடுத்துவிட்டீர்கள்"** என்று திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டிருந்தார். (உண்மையாகச் சொன்னால், பாபா, மெஹராவையும் இதர பெண்மணிகளையும் இந்த இரவு நேரத்தில் அழைக்க மாட்டார். அவர் அவ்வாறு செய்தாலும், பாவ் கல்சூரி வெறுங்காலுடன் இருக்கும் போது அவர்கள் எப்பொழுதும் பாத அணிகளை அணிவது பழக்கம்!)

எவ்வாறாயினும், அறை முழுவதும் சுத்தம் செய்வதற்கு, கிட்டத்தட்ட மூன்று மணிநேரம் ஆனது; பாபா தனது படுக்கையில் அமர்ந்து, முழு நேரமும் சுத்தம் செய்ததை மேற்பார்வையிட்டார். கடைசியாக, அவர் இவ்வாறு சுட்டிக்காட்டினார், **"நீங்கள் முழு அறையையும் சுத்தம் செய்துவிட்டீர்கள், ஆனால் படுக்கையின் கீழ் என்ன செய்வது? ஒரு சில துண்டுகள் அங்கேயும் வீழ்ந்திருக்கலாம்."**

பாவ் கல்சூரி தன்னால் முடிந்த அனைத்தையும் தாங்கிக் கொண்டார், ஆனால் அவர் கூறியபடி, பாபாவின் படுக்கைக்கு அடியில் துடைத்து சுத்தம் செய்தார். பாபா அப்போது அவரிடம், **"ஆமாம், நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"** என வினவினார்.

"ஒன்றுமில்லை."

"உண்மையை மொழியுங்கள்; நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

பாவ் கல்சூரி இந்த நேரத்தில் மிகவும் எரிச்சலடைந்து கூறினார்: “நீங்கள் ஒருபோதும் பெண்மணிகளை இவ்வளவு தாமதமாக அழைப்பதில்லை; ஆனால் நீங்கள் அவ்வாறு செய்தாலும், அவர்கள் படுக்கைக்கு அடியில் செல்வார்களா? இது எனக்கு தொந்தரவு கொடுத்து என்னை அலைக்கழிப்பதற்கான உங்கள் சாக்குப்போக்கு!”

“பெண்மணிகள் எனது படுக்கைக்கு அடியில் செல்ல மாட்டார்கள் என்று எனக்குத் தெரியாதா?” பாபா பதிலளித்தார். **“எனக்குப் புதிதாக ஏதாவது சொல்கிறீர்களா? இப்போது சொல்லுங்கள், உங்கள் கடமை என்ன?”**

“உங்களுடைய விருப்பத்தை நிறைவேற்றுவது.”

“பெண்மணிகள் படுக்கைக்கு அடியில் செல்வார்களா என்ற எண்ணத்தை மனதில்கொண்டு, எனது விருப்பத்தை நீங்கள் நிறைவேற்றுகிறீர்களா? இதுதான் என் விருப்பத்திற்கு அடிபணிவதா? அத்தகைய எண்ணங்கள் இருந்தால், என்னுடைய கட்டளைகளை உங்களால் ஒருபோதும் பின்பற்ற முடியாது. என்னை, எல்லாம் அறிந்தவனாக எடுத்துக் கொள்ளும்போது, இதுபோன்ற எண்ணங்கள் வருவது உங்களுக்குப் பைத்தியக்காரத்தனம் இல்லையா? எனக்குக் கீழ்ப்படிவதைத் தவிர, வேறு எந்த எண்ணமும் இல்லாத ஒருவரால் மட்டுமே எனது விருப்பத்தை நிறைவேற்ற முடியும். எனக்குக் கீழ்ப்படிய விரும்புகிற ஒருவர், நான் பிறரைப் பற்றி சிந்திக்கிறேன், அவரைப் பற்றி அல்ல என்று நினைக்க மாட்டார். நான் சிலரை ரோஜாப் படுக்கையிலும், சிலரை முட்குவியலின் மீதும் வைத்திருப்பது எனது திடீர் விருப்பத்தைப் (தற்போக்கெண்ணம்) **பொறுத்தது! எனது விருப்பத்திற்கு அடிபணிபவர் அப்படிப்பட்ட எதையும் நினைக்கவே மாட்டார். அப்படிச் செய்தால் அவரால் எனது விருப்பத்தை நிறைவேற்றவே முடியாது.”**

பாவ் கல்சூரிக்கு இது ஒரு பாடமாக இருந்தது; அவருக்கு இந்தப் பாடத்தைக் கற்பிக்கவும், அது அவரது உள்ளத்தில் ஊடுருவுவதை ஊர்ஜிதம் செய்யவும், அவதார புருஷராக வருகை தந்த இறைவன், பொறுமையாக நான்கு மணிநேரம் படுக்கையில் அமர்ந்து, தனது அறை சுத்தம் செய்யப்படுவதை மேற்பார்வையிட்டார். இதனால், பாபா தனது அன்பர்களுக்காக மிகவும் துன்பப்பட வேண்டியிருந்தது. ஒவ்வொரு மண்டலி விஷயத்திலும் இது போன்ற சூழ்நிலைகள் ஏறக்குறைய தினசரி எழுந்தன.

ஏற்கனவே குறிப்பிட்டபடி, பாபா, ஏகாந்தவாசம் மேற்கொண்ட காலம் முழுவதும், பாவ் கல்சூரி ஒவ்வோர் இரவிலும் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்ததோடு, பல்வேறு பகல்நேரக் கடமைகளையும் கவனிக்க வேண்டியிருந்தது. அவர் சில மணிநேரங்கள் தூங்க முயற்சித்தாலும், பிற மண்டலி உரத்த குரலில் திரும்பத் திரும்ப மொழியும் பிரார்த்தனை அவரைத் தொந்தரவு செய்தது. காலை 9:00 மணிக்கு தேநீர் அருந்தச் செல்லும்போது, காலை ஆறு மணிக்குத் தயார் செய்து, ஒரு குவளையில் அவருக்காக

வைக்கப்பட்ட குளிர்ந்துபோன தேநீரே அவருக்குக் கிடைத்தது. தேநீருக்குப் பின்னர் அவர், பாபாவிற்கு முன்பாக மண்டபத்தில் அமர்ந்து, பாபா வெளியேறியதும், பாவ் கல்சூரி தனது அறைக்குச் சென்று, கடிதப் பரிமாற்றம் அல்லது இதர எழுதும் பணியைச் செய்வதை வழக்கமாகக் கொண்டார். பிற ஆண்களுடன் பதினொரு மணிக்கு அவரால் மதிய உணவையும் சரியான நேரத்தில் உண்ண முடியவில்லை, ஏனெனில், அஹமதுநகரைச் சேர்ந்த ஒரு சிறுவன், மெஹராஸாத்திலிருந்து தபால்களை சேகரித்துக் கொண்டு, மாலை 4:00 மணிக்கு புறப்படுவது வழக்கம்; அதற்குள் அஞ்சல்கள் அனைத்தும் தயாராக இருக்க வேண்டும். வேலை முடிந்த பின்னரே உணவு உண்ண முடிந்தது. அப்போது உணவு தயார் செய்து வந்த பைதூல், அனைவருக்கும் பரிமாறிய பின்னர், பாவ் கல்சூரியின் உணவை ஒரு தட்டில் திறந்தே வைத்து விடுவது அனுதினமும் நடந்தது.

ஒருமுறை அவர் பைதூலிடம் உணவைப் பாதுகாக்கும் விதத்தில், குறைந்தபட்சம் அதை மூடி வைக்குமாறு கேட்டுக்கொண்டதற்கு, பைதூல் கோபமாக பதிலளித்தார், "மதிய உணவுக்கு சரியான நேரத்தில் வராததற்காக இது உங்கள் வெகுமதி! நீங்கள் காலநேரம் தவறாமல் வரவேண்டும், அதனால்தான் நான் உங்கள் உணவை பாதுகாப்பாக மூடி வைக்கவில்லை." பாபாவின் பணியை முடிக்க வேண்டியிருந்ததால், தாமதமாக வருவதைத் தவிர்க்க முடியாது என்று பாவ் கூறிய போது, பைதூல், "நேரமின்மை காரணமாக, இயற்கையின் அழைப்புகளுக்கு பதிலளிக்காமல் இருப்பீர்களா? நேரத்தில் உணவு உண்பது அவசியம். நீங்கள் சொல்வது எனக்கு ஏற்புடையது அல்ல. காலை 11:00 மணிக்கு உணவை தயார் செய்து பரிமாறுவதன் மூலம், எனது கடமையை நான் செய்கிறேன். யார் ஒருவருக்கும் உணவை ஒதுக்கி வைக்கும் கடமை எனக்கு வழங்கப்படவில்லை" என்று பதிலளித்தார். இத்தகைய நாட்களை மண்டலி கடக்க வேண்டிய சூழ்நிலை - அது பாபா விரும்பியபடியே நடந்தது. இதுவே குருநாதர் நடந்துகொள்ளும் விதம்; அனைவரையும் அவர் உள்ளூர நேசித்தாலும், வெளியளவில் பெரும்பாலும் இரக்கமற்றவராகவே இருந்தார்.

பாபாவின் ஏகாந்தவாச காலகட்டத்தில், சில நாட்களுக்கு ஒருமுறை ஆதி சீனியர் மெஹராஸாத்திற்கு பணி நிமித்தம் அழைக்கப்பட்டார். அக்டோபர் 25 அன்று ஆதி வரும் வேளையில் அவருடன் விஷ்ணுவையும் அழைத்து வருமாறு அறிவுறுத்தப்பட்டார். பத்து நாட்களுக்கு முன்னர் அவருடன் வந்திருந்த விஷ்ணு மெஹராபாத்தில் அனைவரின் உடல்நிலை குறித்து, குறிப்பாக எரச்சைக் குறித்த அறிக்கையை வழங்கினார்.

குஸ்தாஜியின் முதல் ஆண்டு நினைவு தினமான அக்டோபர் 30 அன்று, அவருடைய கல்லறையில் வைக்க மெஹராஸாத்தில் மலர்ந்த மலர்களை பாபா அனுப்பிவைத்தார்.

காடேக்கர் அக்டோபர் 7 அன்று மெஹராஸாத்திலிருந்து பூனாவிற்குத் திரும்பிச் சென்றவர், தீபாவளி திருநாட்களில் திரும்ப அழைக்கப்பட்டார்; அவர் நவம்பர் 5ஆம் தேதி வந்து ஆறு நாட்கள் தங்கியிருந்தார்.

1958 நவம்பர் 6 வியாழன், பாபாவின் 21 நாள் உபவாசத்தின் கடைசி நாள், அவருடைய விருப்பத்திற்கிணங்க, காலை 9:00 மணிக்கு, அரன்காவ்ம் கிராமத்திலிருந்து 56 ஏழைகள் வரவழைக்கப்பட்டனர். இருபுறமும் படிகளுடன் கூடிய ஒரு மர மேடை கொண்டுவரப்பட்டது, அதன் மீது ஒவ்வொரு கிராமவாசிகளும் அழைத்துச் செல்லப்பட்டனர். ஒவ்வொருவரையும் தலைவணங்கிய பின்பு, பாபா, ஐந்து ரூபாய், இனிப்புப் பொட்டலம் மற்றும் துணிமணிகளை வழங்கினார். சகன் முழு நிகழ்ச்சிக்கும் தேவையான பணத்தைச் (ரூ.380) செலுத்தி, லட்டுகளை தானே தயார் செய்தார். இதர ஆதரவற்ற கிராமவாசிகள் அருகில் ஒன்றுதிரளவே, பாபா இனிப்புகளை விநியோகித்து, ஒவ்வொருவருக்கும் எட்டு அணா (50 பைசா) வழங்கினார். அவரது உபவாசத்தின் இறுதி மூன்று நாட்களில், ஆண்களும் பெண்களும் ஒரு குறுகிய உபவாசத்தைக் கடைப்பிடித்தனர்.

7ஆம் தேதி காலை 10:15 மணிக்கு, அனைத்து ஆண் மண்டலியின் முன்னிலையில், கைக்கோபாத், பாபாவின் முன் நின்று, மண்டலி சார்பில் பிராயச்சித்தத்திற்கான வேண்டுதலை கடவுள் முன் வைக்கவும், பாபாவின் பணி 100 சதவீதம் வெற்றிகரமாக நிறைவுற கைக்கோபாத் கடவுளிடம் பிரார்த்தனை செய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டார். அதற்குப் பிறகு, கைக்கோபாத்தின் கைகளைப் பற்றிக்கொண்டு, பாபா அவற்றை முத்தமிட்டு, தமது நெற்றியையும் தொட்டார். தம் இருக்கையில் அமர்ந்து, மண்டலிக்கு சாதமும், பருப்பும் கலந்த கலவையைப் பிரசாதமாக வழங்கினார். ஒவ்வொருவருக்கும் கொடுத்து முடித்த பின்னரே பாபா சிறிது உணவை உண்டு, உபவாசத்தை நிறைவு செய்தார். ஆனால் பாபாவின் உடல்நிலை இன்னும் சீரானபாடில்லை.

உபவாசத்திற்கு முன்னர், அவரது அன்பர்கள் அவர் மீது முழு நம்பிக்கை வைக்கத் தயாரா இல்லையா என்று கேட்டு, வெளியிட்ட சுற்றறிக்கை, அவர்களின் கைகளை எட்டிய அடுத்த கணமே, பதில்கள் குவியத் தொடங்கின. முதன் முதலாக, மெஹராபாத் மண்டலியின் ஒன்றிணைந்த பதில் அடையப் பெற்றது, அதன்பின் மெஹராஸாத் ஆண், பெண் மண்டலியிடமிருந்து பதில்கள் வந்தன. பாபா தமது மண்டலியின் மூன்று தனித்தனி குழுக்களின் பதில்களை தம்மிடம் வைத்திருந்தார்.

மற்றுமொரு தருணத்தில், பாபா தமது பெண் மண்டலியைப் பற்றி குறிப்பிடுகையில், **"மணி மிகவும் புத்தி கூர்மை உடையவர் என்று நீங்கள் அனைவரும் சொல்கிறீர்கள், ஆனால், மிகவும் புத்திசாலியான எரச் கூட அப்படித்தான் கூறுகிறார். எனது கை சைகைகளைப் புரிந்து விளக்குவதில் மணிக்கு நிகர் எவருமில்லை; பின்னர் எரச் வருகிறார். மணி அமெரிக்கன் 'அவேக்கனர்'** (AWAKENER) **செய்தி இதழுக்குத் தேவையான விஷயங்களைத்**

தொகுப்பதில் பெருமளவில் உதவி இருக்கிறார்" என்று குறிப்பிட்டார். அமெரிக்க அன்பர்களும், உண்மையிலேயே, மணி மிகவும் திறமைசாலி என்று கூறுகிறார்கள்

சுற்றறிக்கை தொடர்பான பதில்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்கவே, ஒரே நாளில், 1500 கடிதங்கள் பெறப்பட்டன! ஒவ்வொரு கடிதமும் பாபா முன்னிலையில் மண்டலி மண்டபத்தில் வாசிக்க தினமும் ஐந்து முதல் ஆறு மணி நேரம் பிடித்தது. குமார் பதில்களைப் படிக்கும் வேளையில், பாபா அவற்றை வெவ்வேறு குழுக்களாக வகைப்படுத்தினார்.

பாபாவின் அறிவுறுத்தலின்படி, பாவ் கல்சூரி அவற்றை எண்ணி, குழுக்களாகப் பிரிக்க, புக்கார் அதன் பட்டியலைத் தயார் செய்தார். சில கடிதங்களை பாபா நான்கு அல்லது ஐந்து முறை படித்தார் - சில சமயங்களில் கடிதங்களை தொடர்ந்து படிக்க வேண்டும் என்பதற்காக மதிய உணவைத் தவிர்த்ததும் உண்டு. இரவில் உலகம் முழுவதும் வாழும் தமது அன்பர்களை அவர் நினைவுகூர்ந்தார்; இந்த முறையில் அன்பிற்குரியவர் தமது ஏகாந்தவாச பணியில் பங்கெடுக்க அன்பர்களுக்கு வாய்ப்பளித்தார். **"என் மீதான பாரத்தைக் குறைக்க என் அன்பர்கள் எனக்கு உதவுகிறார்கள்"** என்றும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

சரியான நேரத்தில் பதில் அனுப்பாத அன்பர்கள் மற்றும் பக்தர்களுக்கு (நவம்பர் 20க்கு முன் பதில் அளிக்குமாறு கூறப்பட்டிருந்தது) நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டன. சுற்றறிக்கை, குடும்பத் தலைவருக்கு மட்டுமே அனுப்பப்பட்டிருந்தாலும், குறிப்பிட்ட குடும்பங்களின் ஒவ்வோர் உறுப்பினரிடமிருந்தும் தனிப்பட்ட கடிதங்களும் பெறப்பட்டன. பாபாவே சில சமயங்களில் ஒரு குறிப்பிட்ட குடும்பத்தில் உள்ள சில நபர்களை நினைவு கூர்ந்தார்; அவர்களுக்குத் தனித்தனியாக நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டன. உதாரணமாக, நாக்பூரில் வாழ்ந்த வினூ கேரின் மனைவிக்கும், கராச்சியில் வாழ்ந்த ஆதி துபாஷின் மகன் மேர்வானுக்கும், அலஹாபாத், ஸ்ரீவாஸ்தவாவின் மகள் ஸரோஜுக்கும் சிறப்பு சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. பின்னர், இந்த நபர்கள் அனைவரும் பாபாவிடம் ஆழ்ந்த அன்புடன் சரணடைந்தனர். போபால் நகரைச் சார்ந்த, ஏற்கனவே பாபாவிடம் மிகையான பக்தி மிக்க, நஃப்டேயின் (NAFDE) மனைவி மற்றும் குழந்தைகளுக்கு, தனித்தனி சுற்றறிக்கைகள் அனுப்பப்பட்டன.

இந்த முறையில் பாபா, இரவில் பல நபர்களை நினைவு கூருவதும், பாவ் கல்சூரி தினமும் காலையில் ஆதிக்கு ஒரு நீண்ட பட்டியலை அனுப்புவதும் பல நாட்களாக நடந்து வந்தது. ஒவ்வொருவருக்கும் சுற்றறிக்கைகள், சில சமயங்களில் தனிப்பட்ட கடிதங்களும் அனுப்பப்பட வேண்டும் என்பது பாபாவின் அறிவுறுத்தலாகும். 'பாபாவிற்குத் தூக்கம் வராததால், இது அவருடைய பொழுது போக்கு' என்று பாவ் கல்சூரி சிந்திக்கத் தொடங்கும் வரை, ஒவ்வோர் இரவும் அது தொடர்ந்தது.

ஒரு நாள் இரவு பாபா அவரிடம், **"நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"** என வினவினார்.

"ஒன்றுமில்லை," பாவ் கல்சூரி வழக்கம் போல பதிலளித்தார்.

நல்ல மனநிலையில் இருந்த பாபா, **"நான் ஏன் பூமியில் இறங்கி வருகிறேன் தெரியுமா? என் அன்பர்களின் அன்பை வணங்குவதற்காக நான் இங்கு வருகிறேன் - இது நான் வழிபடும் ஒரு வழி. அவர்கள் என்னை வணங்குகிறார்கள், நான் அவர்களை வணங்குகிறேன். அவர்கள் என்னை நினைவு கூருகிறார்கள், நானும் அவர்களை நினைவு கூருகிறேன். இது எனது பொழுது போக்கு அல்ல"** என்று விளக்கினார்.

இந்தக் காலகட்டத்தில், பாபா உலகம் முழுவதிலும் வாழும் தமது அன்பர்களை எப்படி நினைவில் கொண்டிருந்தார் என்பதை காலம் பதிவு செய்தது. "இரவு முழுவதும் அன்பர்களை நினைவில் கொண்டு, அவர், அவர்களுக்குத் தனது அன்பின் காணிக்கையைச் செலுத்தி, அவர் மீது அவர்கள் கொண்ட அன்பை வணங்கினார்" என்று அது அவதானித்தது.

பாபாவின் அருகாமையில், தனது கடமை தவறாமல், பாவ் கல்சூரி குறித்த நேரத்தில், தினமும் மாலை 6:30 மணிக்கு மேல்மாடியில் அமைந்த பாபாவின் அறைக்குச் சென்று, ஒவ்வொரு காலையும் 6:30 மணிக்கு வெளியேறுவதை வழக்கமாகக் கொண்டார். ஆனால் ஒரு நாள், அவர் புறப்படுவதற்கு முன்பு சில கூடுதலான பெயர்களைக் குறிப்பிட வேண்டியிருந்ததால், அவர் அறையை விட்டு வெளியேற இரண்டு நிமிடங்கள் தாமதமானது. பாபாவின் பழக்கம் என்னவெனில், காலையில் இரவு கண்காணிப்பாளர் சென்றதும், முதலில் மெஹரா அவரை வாழ்த்துவது வழக்கம், பின்னர் இதர பெண் மண்டலி வந்தனர்.

பாவ் கல்சூரி எழுதுவதில் மும்முரமாக இருந்த அவ்வேளையில், அவர் இன்னும் உள்ளே இருப்பதை அறியாமல், மெஹரா அங்கே தோன்றி, கதவைத் திறந்து அவரைப் பார்த்ததும், அவசரமாகப் பின்வாங்கி வெளியே வந்தார். அன்று முதல், பாபாவின் அறையில் ஓர் அழைப்பு மணி பொருத்தப்பட்டு, இரவு கண்காணிப்பாளர் சென்ற பின்னரே, பாபா மணியை அடிக்கும் வேளையில் முதலில் மெஹராவும், தொடர்ந்து இதர பெண் மண்டலியும் செல்வது வழக்கமானது.

காலையில் பாபா, முதலாவதாக மெஹராவை பார்க்க விரும்பினார். அதுபோல, மெஹரா வழங்கிய உணவு, தண்ணீர் தவிர வேறு எதையும் உட்கொள்ள மாட்டார். நாஜா, பாபாவின் உணவைத் தயார் செய்தாலும், அதை மெஹரா எடுத்துச் சென்ற பின்னரே அவர் அதில் பங்கெடுத்தார்.

1958 நவம்பர் 20 அன்று, விஷ்ணு மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டபோது, அவர் காலை 10:00 மணிக்கு பேருந்தில் பயணம் செய்து வந்தார். மறுநாள் நரிமன், மெஹர்ஜி, ராம்ஜு, ஆதி ஆகியோர் காலை 9:00 மணிக்கு வந்தனர். ∴பிரான்சிஸ் பிராபஸோன் இந்தியாவிற்கு வருவது குறித்து

விவாதிக்கப்பட்டு முடிவு எடுக்கப்பட்டது. **"குறைந்த பட்சம் ஆறு மாதங்கள் தங்குவதற்கும், இந்தக் காலகட்டத்தில் பாபாவிற்குக் கீழ்ப்படிய தயாராகவும் வாருங்கள்"** என்று பாபா, ஃபிரான்ஸிஸுக்கு தொலைத்தந்தி அனுப்பினார்.

ஆதி, ராம்ஜு, விஷ்ணு மூவரும் நவம்பர் 22ஆம் தேதி மெஹராஸாத் திரும்பி வந்தனர்; அவ்வேளையில், விஷ்ணு டிசம்பர் 10 வரை அங்கேயே இருக்குமாறு கூறப்பட்டது. சதாஷிவ் பாட்டீல் இரண்டு நாட்களுக்காக 25ஆம் தேதி மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டார். டிசம்பர் 15 முதல் ஜனவரி 15 வரை, ஒரு மாத காலம் பாபா, பூனாவில் தங்க விரும்பினார்; அதற்குப் பொருத்தமான ஒரு பங்களாவை ஏற்பாடு செய்யுமாறு சதாஷிவ் பாட்டீலுக்குக் கூறப்பட்டது.

இந்தியா, பாகிஸ்தான் மற்றும் மேற்கத்திய அன்பர்களிடமிருந்து, பாபாவின் சுற்றறிக்கைக்கு கிட்டத்தட்ட 30,000 பதில்கள் நவம்பர் இறுதிக்குள் வந்து சேர்ந்தன. மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்ட ஆதி, 1958 நவம்பர் 30 ஞாயிற்றுக்கிழமை அன்று, காலை 9:00 மணிக்கு வந்தார். கைக்கோபாத்தைத் தம் முன் நிற்க அறிவுறுத்தி, பாபா பிராயச்சித்தம் செய்தது போல - மனம் வருந்தி மன்னிப்புக் கோருவதன் அடையாளமாக தமது கன்னங்களில் தொடர்ந்து லேசாக அறைந்தார்.

பாபா, அன்பர்களின் அனைத்து பதில்களையும் ஆதியின் பக்கம் வைத்து, **"அலுவலக ஆவணத் தொகுப்புகள் அனைத்தையும் இரும்புப் பெட்டிகளில் அல்லது அல்மிராக்களில் வைக்கிறீர்களா? பூச்சிகள் மற்றும் நெருப்பிலிருந்து பாதுகாக்கும் வகையில் முன்னெச்சரிக்கையாக இதைச் செய்ய வேண்டும். இந்தக் கடிதங்களின் முக்கியத்துவம் இன்று உங்களால் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு உள்ளது"** என்று கூறினார். (ஃபெராம் ஒர்க்கிங்பாக்ஸ்வாலா, ஆதியின் முதன்மை உதவியாளர், கடிதங்கள், தொலைத்தந்திகள், சுற்றறிக்கைகள் அனைத்தையும் கோப்புகளில் பத்திரமாகத் தாக்கல் செய்தார்.)

அடுத்த நாள் 1958 டிசம்பர் 1ஆம் தேதி பாபா, ஆதியை மீண்டும் மெஹராஸாத்திற்கு அழைத்தார். ஏகாந்தவாசத்தை நிறைவுசெய்து, காலை 10:00 மணிக்கு, ஆதி, பாபாவை மெஹராபாத்திற்கு அழைத்துச் சென்றார்; குமார், புக்கார் இருவரும் உடன் சென்றனர். நான்கரை மாதங்களுக்கு முன்னதாக, ஜூலை மாதத்தில் தொடங்கிய ஏகாந்தவாசத்திற்குப் பிறகு, பாபா மெஹராஸாத்தை விட்டு வெளியேறியது இதுவே முதல் முறை.

காரிலிருந்து இறங்கிய பாபா, மண்டபத்தின் உள்ளே சென்றதும், முதலில் எரச்சை அங்கு அழைத்து, அன்புடன் அரவணைத்துக் கொண்டார். பின்னர் அவர் பிற அனைவரையும் சந்தித்து பிரசாதம் வழங்கினார்; அவரது உத்தரவுப்படி அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது. பெண்டுவின் உடல் முன்னேற்றத்தை பாபா முன்னிலையில் காட்டுவதற்காக, அவர் முன்னும் பின்னும் நடக்குமாறு அறிவுறுத்தப்பட்டார். பெண்டு அவ்வாறு செய்தது அவருக்கு வேதனையாக இருந்தாலும், அவர் அதைச் சமாளித்தார். பாபா, தமது

ஏகாந்தவாசத்தில் நிகழ்ந்த சம்பவங்களை எடுத்துரைத்து, அந்தக் காலக்கட்டத்தில் ஏற்பட்ட பெரும் துன்பங்களைப் பற்றியும் விவரித்தார். **"நான் எத்தகைய பாரத்தை சுமக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியாது; ஆனால் உள்ளளவில் என் உள்ளம், அனைத்து உள்ளங்களிலும் மிகப்பெரியது. நான் அளவிறுதியற்ற இறை பெருங்கடல்"** என்று அவர் கூறினார்.

எரச்சைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு பாபா, மெஹராஸாத் திரும்பிச் சென்றார். வழியில், அக்டோபர் 1 முதல் மெஹராபாத்தில் தங்கி இருந்த கர்மன் மாசியின் மருமகன் நோஷிர் ஈரானி, இப்போது வீடு திரும்பும்படி அறிவுறுத்தப்பட்டதால், அஹமதுநகர் ரயில் நிலையத்தில் இறங்கிக் கொண்டார். அவர் ஜனவரி மாதம் மெஹராஸாத் திரும்பி வரலாம் என்று அவரிடம் கூறப்பட்டது.

1958 டிசம்பர் 5ஆம் நாள், மெஹர் பாபாவின் 'பீம்ஸ்' (BEAMS FROM MEHER BABA ON THE SPIRITUAL PANORAMA), கையேட்டுப் பிரதி, பாபா, தனது கடைசி வருகையின் போது ஐவி டியூஸுக்கு வழங்கியது, இப்போது புத்தக வடிவில் அமெரிக்காவில் வெளியிடப்பட்டது.

ஆதி சீனியர் டிசம்பர் 6 அன்று காலை 10:00 மணிக்கு சகன், டாக்கே இருவரையும் மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தார். பாபாவின் நீண்ட கால ஏகாந்தவாசத்திற்குப் பிறகு, மீண்டும் ஒருமுறை அவரைக் கண்டு இருவரும் மகிழ்ச்சியடைந்தனர்.

டிசம்பர் 7 ஞாயிற்றுக்கிழமை பாபா, புக்கார், குமார் இருவரையும் தத்தமது இல்லங்களுக்குத் திருப்பி அனுப்பினார். ஆதி அவர்களை பேருந்து நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்.

1958 டிசம்பர் 8 காலை பாபா, எரச், விஷ்ணு மூவரையும் ஆதி மெஹராபாத்திற்கு அழைத்துச் சென்றபோது, அங்கு பாபா, கைக்கோபாத்தின் குடும்பத்தினரையும், மன்ஸாரியையும் கீழ் மெஹராபாத் மண்டபத்திற்கு அழைத்தார். அவர் சிறிது நேரம் மண்டலியுடன் சீட்டு விளையாடி, பெண்டுவை மீண்டும் மெஹராஸாத்திற்கு அழைத்துச் சென்றார்.

டிசம்பர் 10 அன்று கிஷின்சந்த் கஜ்வானி (KISHINCHAND GAJWANI) மெஹராஸாத்தில் பாபாவை சந்தித்துச் சென்றார். பிற்பகல் 3 மணிக்கு, பெண்டு, விஷ்ணு இருவரும் மெஹராபாத்திலிருந்து வந்தனர். மூன்று நாட்களுக்குப் பிறகு மெஹராஸாத் திரும்பி வந்து அங்கேயே நிரந்தரமாகத் தங்கவும் பெண்டுவிற்கு அறிவுறுத்தப்பட்டது.

டாக்டர் மூர்த்தி 11ஆம் தேதி காலை பாபாவை சந்தித்தார். அன்றைய தினம் ஜான் (JOHN) என்று அழைக்கப்பட்ட ஆஸ்திரேலிய இளைஞர் ஒருவரும் வந்திருந்தார்; அவர் இந்தியாவில் பல ஆசிரமங்களுக்கு விஜயம் செய்து கொண்டிருந்தார், ஆனால் அவர் இதுவரை திருப்தி அடைந்ததாக இல்லை. கேரளாவைச் சேர்ந்த பாபா அன்பர் ஒருவர், அவரை சந்தித்து, பாபாவைப் பற்றி கூறவே, அவர் இந்தப் பயணத்தை மேற்கொண்டார். ஜால்பாய் 11ஆம் தேதி

இரண்டு நாட்களுக்காக வந்திருந்தார்; அதற்கு அடுத்த நாள் ஆதி, ஸரோஷ் இருவரும் வந்தனர். 14ஆம் தேதி, ஃபெராம் மற்றும் ஸாக்கரே தம்பதியினரை ஆதி அழைத்து வந்தார். பாபா அடுத்த நாள், ஒரு மாதத்திற்காக பூனா புறப்பட இருந்ததால், ஆதி, கைக்கோபாத்தை மெஹராபாத்திற்கு அழைத்துச் செல்லவே, அங்கு பாபா இல்லாதபோது, அவர் தனது குடும்பத்துடன் தங்கினார்.

நீண்ட கால ஏகாந்தவாசத்திற்குப் பின்னர், அவ்வப்போது நிகழ்ந்தது போல, பாபா குறிப்பிட்டதற்கு இணங்க, 'மாற்றம், ஓய்வு' இரண்டிற்காகவும் 'ஒரு வித்தியாசமான சுற்றுப்புற சூழலை அல்லது இயற்கைக் காட்சியை விரும்பினார். அதற்காக அவர் தேர்ந்தெடுத்த இடம் பூனா.



பாபாவுடன் பாவ் கல்சூரி,
குருபிரசாத், பூனா.
(WITH BHAU KALCHURI AT
GURUPRASAD, POONA)

குருபிரசாத், பூனா @ **1957 – 58,** காடேக்கர் & குணாதாய், மெஹர்ஜி, நரிமன், எரச்
(GURUPRASAD, POONA @ 1957 -58), GADEKAR & GUNATAI, MEHERJI, NARIMAN, ERUCH

அலோபா, பைதூலுடன்
சதுரங்கம் விளையாடல்,
குருபிரசாத், பூனா
(WITH ALOBA & BIDUL PLAYING
CHESS AT GURUPRASAD, POONA)



பூனா & மும்பை

(**Poona & Mumbai**)

1958 டிசம்பர் 15 திங்கட்கிழமை அன்று பாபாவும், பெண் மண்டலியும் குருபிரசாத்தை நோக்கி காலை 9:00 மணிக்கு மெஹர்ஜியின் காரில் புறப்பட்டுச் சென்றனர். எரச், பாவ், அலோபா, பெண்டு ஆகியோர் ஆதியின் காரில் அவர்களைப் பின்தொடர்ந்தனர். பூனாவில் பாவ் கல்சூரி மாலை 6:00 முதல் அதிகாலை 4:00 மணி வரை, அதைத் தொடர்ந்து பெண்டு இரண்டு மணி நேரம், காலை 6:00 மணி வரையிலும் இரவுக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டனர்; பாபாவின் ஏகாந்தவாச காலத்தில் தொடங்கிய பாவ் கல்சூரியின் கண் வலி இப்போது மிகுந்த தொந்தரவாக இருந்தது.

சமீபகாலமாக, கடுமையான உபவாசத்திற்குப் பிறகு பாபா, 21ஆம் தேதி டாக்டர் தேஷ்முக்கின் மருத்துவ மனைக்கு வயிற்றுப் பரிசோதனைக்காக அழைத்துச் செல்லப்பட்டார். அர்னவாஸ், நரிமன், ஜிம் மிஸ்திரி ஆகியோர் பாபாவுடன் சில நாட்களை கழிக்க 23ஆம் தேதி மாலை வந்தனர்.

மெஹராவின் பிறந்தநாளை சிறப்பிக்கும் வகையில் டிசம்பர் 24 புதன்கிழமை அன்று, குருபிரசாத்தில் கவாலி நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. நெருங்கிய அன்பர்கள் குறுகிய குறிப்பிட்ட எண்ணிக்கையில் பூனா மையத்தைச் சார்ந்தவர்களும், மும்பையிலிருந்தும் சிலர் அழைக்கப்பட்டனர். ஸாக்கோரியின் கோதாவரி மாயும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். பாபா பாடல்களைக் கேட்டு, சில வரிகளின் அர்த்தத்தை இடையிடையே விளக்கினார். நிகழ்ச்சி மூன்று மணி நேரம் நடந்தது. இறுதியில் பாபா தமது அன்பர்கள் அனைவரையும் அரவணைத்தார்.

டிசம்பர் 25ஆம் தேதி கிறிஸ்துமஸ் பண்டிகை தனிப்பட்ட முறையில் கொண்டாடப்பட்டது; அன்றைய தினம் பாபா கிரிக்கெட் போட்டி ஒன்றைப் பார்க்கக் சென்றார். முந்தைய நாள் பாபா, மெஹராபாத்தில் இருந்த டாக்டர் டானுக்கு இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார்: **"எனது மேலங்கியை (தாமன்) உறுதியாகப் பற்றிக்கொள்ள உங்களுக்கு எனது கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்."**

ஃபிரான்சிஸ் பிராபஸோன், 'கடவுளுடன் இணைந்திருங்கள்' (STAY WITH GOD) என்ற புத்தகத்தின் கையெழுத்துப் பிரதியை, பாபாவின் ஒப்புதலுக்காக அனுப்பியிருந்தார். ஒவ்வொரு நாளும் புத்தகத்தின் ஒரு பகுதி அவருக்கு வாசிக்கப்பட்டது.

பாபா பூனாவில் தங்கியிருந்தபோது, அவருடைய சகோதரர்களான பெஹராம் மற்றும் ஜால்பாய், பப்பா, மெஹர்வான் ஜெஸவாலா, சதாஷிவ் பாட்டீல், மெஹர்ஜி போன்ற சில நெருங்கிய அன்பர்கள், குருபிரசாத் மாளிகைக்கு எப்போது வேண்டுமானாலும் வரலாம் என அறிவுறுத்தப்பட்டனர்.

ஜால்பாய் நகைச்சுவை துணுக்குகளை எடுத்துரைத்து, பாபாவை தனது அர்த்தமற்ற நகைப்பூட்டும் கதைகளால் மகிழ்வித்தார். காடேக்கர், ராமகிருஷ்ணன், ஷிண்டே, காம்ப்ளே, டவ்லே மற்றும் தின்கர் டி.போட்டே (DINKAR D.POTE) ஆகியோரும் அவ்வப்போது வந்தனர்.

ஒருமுறை பப்பா ஜெஸவாலா தனது மைத்துனர் நஸர்வான் ஸட்டாவுடன் (அஹமதுநகர்) வந்தார். குருபிரசாத் மாளிகைக்கு வந்த நஸர்வானை, பாபா பெரிதும் புகழ்ந்து பேசத் தொடங்கியது, திடீரென, அதிசயமாக, பப்பாவை சீற்றமடையச் செய்தது. உண்மை என்னவெனில், பிந்த்ரா ஹவுஸிலிருந்து வருவதற்கு சற்று முன்பு, பப்பா, நஸர்வானிடம் மிகுந்த கோபமடைந்து, மன அமைதியை சீர்குலைக்கும் விதத்தில் கடிந்து கொண்டார். நஸர்வான் எதுவும் பேசாமல் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

பாபா, பப்பாவிடம், "**ஏன் இந்தத் திடீர் கொந்தளிப்பு?**" என வினவினார்.

பப்பா கூறினார், "நான் இன்று காலையிலிருந்து அவரிடம் வருத்தத்தில் இருக்கிறேன், அவர் இங்கு வந்ததும், நீங்கள் அவரைப் பாராட்டத் தொடங்குகிறீர்கள்!"

"**இதை ஏன் என்னிடம் முன்கூட்டியே சொல்லவில்லை? நான் உங்களைப் பாராட்டியிருப்பேனே!**" இது பப்பாவிற்கு சிரிப்பை வரவழைத்தது, பாபா உடனே இவ்வாறு குறிப்பிட்டார்: "**இதோ பாருங்கள், நீங்கள் அவரை இடம், வலம் பாராமல் எங்குத் தாக்கினாலும், நஸர்வான் அமைதியாக இருக்கிறார். அவர் மீது பரிதாபப்பட்டு அவரை மன்னிக்கவும்**" என்று கூறினார்.

நீங்கள் அவரை மன்னித்து விடுங்கள் என்று பப்பா கூறினார். "அவரைப் பொறுத்தவரை, எனது நாவில் சாபத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை!"

"**உங்கள் மீது எனக்கு எவ்வளவு அன்பு உள்ளது; ஆனால் நீங்கள் பிறரை திட்டி, வசைபாடுகிறீர்கள்! நீங்கள் இப்படி நடந்து கொண்டால், நான் என் அன்பைத் திரும்பப் பெற்றுவிடுவேன்.**"

அச்சத்தில் நடுங்கிப்போன பப்பா, "அப்படிச் செய்யாதீர்கள் பாபா! நான் அவரை மன்னிக்கிறேன்" என்று அதி விரைவில் பதிலளித்தார். பப்பாவின் உரையாடல் அங்கிருந்த அனைவரையும் அகமகிழச் செய்ததோடு, பொழுதுபோக்காகவும் இருந்தது.

பாபா மற்றும் மண்டலிக்குத் தேவையான உணவு பிந்த்ரா ஹவுஸிலிருந்து வந்து கொண்டிருந்தது; பப்பா, பாபாவைப் பார்க்க தினமும் வருவதுண்டு. பாபா ஓய்வெடுக்கும் நோக்கத்தில் பூனாவிற்கு வருவதாக முன்பு தெரிவித்திருந்ததால், பல பொது நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படவில்லை. ஆனால் பாபாவிற்கு உண்மையான 'ஓய்வு' என்பதே இருந்ததில்லை. அனுதினமும் ஏதோ சில நெருக்கடிகள், அதற்காக அவரது கவனமும், வழிகாட்டுதலும் அதிக நேரத்தை ஆக்கிரமித்தது. பாபா கூட ஒரு

நாள் முணுமுணுத்தார், **"அப்பாவி அவதார புருஷருக்கு ஒருபோதும் விடுமுறை என்பதே இல்லை!"**

இந்த சமயத்தில், பாபாவைப் பார்க்க, ஒரு மனிதர் எதிர்பாராதவிதமாக வந்திருந்தார். அவர் இந்த செய்தியை அனுப்பிவைத்தார்: "உண்மையில் பாபா எப்போது ஏகாந்தவாசத்திலிருந்து வெளியே வருவார்?"

பாபா சிரித்துக்கொண்டே பதிலளித்தார், **"உண்மையில் நான் ஒருவன் மட்டுமே ஏகாந்தவாசத்தில் இல்லை. எஞ்சிய மனிதகுலம் முழுவதும் ஏகாந்தவாசத்தில் உள்ளது. அதை நித்திய சுதந்திரமாக வெளிக்கொணரவே நான் வந்துள்ளேன்!"**

1959 ஜனவரி 1 அன்று, ஆதி சீனியர் பாபாவைப் பார்க்க காக்கா சிஞ்சோர்கர், ரங்கோலே இருவரையும் அழைத்து வந்தார்; மேலும், ரங்கோலே குருபிரசாத்தில் அன்றிரவைக் கழிக்க அனுமதிக்கப்பட்டார். அன்றைய தினம் ஆதி, மணி, எரச், ராம்ஜூ, பாபா ஆகியோருக்கு இடையே 'மெஹர் பாபா, ஸாஹேப்-இ-ஸமான்" (SAHEB-E-ZAMAN, அவதார புருஷர்) பற்றிய ஸாயிப் ஆஸ்மியின் உருது புத்தகம் வெளியிடுவதற்குத் தேவையான நிதியுதவி வழங்க, அமெரிக்காவிலிருந்து நன்கொடை சேகரிப்பு உள்ளிட்ட விஷயங்களை விவாதிக்கும் கூட்டம் நடைபெற்றது. ராம்ஜூ இந்தப் புத்தகத்திற்கு முகவுரை எழுதியிருந்தார்.

அடுத்த நாள் ஷுத்தானந்த பாரதி, பாபாவுடனான ஒரு நேர்காணலுக்கு அனுமதிக்கப்பட்டார். ஜனவரி 9ஆம் தேதி, பாபா இவ்வாறு கூறினார், **"உண்மையான இறை ஒளி தோன்றினால், நீங்கள் ஒளி என்று நினைக்கும் இந்த இருள் மறைந்துவிடும்."**

1959 ஜனவரி 11 அன்று ஒரு கிறிஸ்தவர், 'இயேசு கிறிஸ்துவின் போதனைகளின்படி, அன்பிலும் சேவையிலும் ஒரு பரிபூரண வாழ்க்கையை நடத்த' விரும்பி, மெஹர் பாபாவின் வழிகாட்டுதலுக்கான தீவிர விருப்பத்தை வெளிப்படுத்தினார். நேர்காணலுக்கான அந்த நபரின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. அவர் குறிப்பிட்ட நேரத்தில் வந்தபோது, பாபா ஒரு கூட்டத்தில் அன்பர்களுடன் இருந்தார். இது அவரைத் தொந்தரவு செய்வது போலத் தோன்றியது, மேலும் அவர் சங்கடமாகவும் தயக்கமாகவும் காணப்பட்ட போது, பாபா கேட்டார், **"நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? நீங்கள் ஒரு தனிப்பட்ட நேர்காணலை விரும்பிய வேளையில், இங்கே உங்களைச் சுற்றிலும் மக்கள் கூட்டம் காணப்படுகிறதா? ஆனால், என்னைத் தவிர வேறு எவரும் இல்லை என்பதால், நீங்கள் உண்மையில் அதைத்தான் அனுபவிக்கிறீர்கள். அதனால், உங்கள் மனதில் உள்ளதைக் கூறத் தயங்காதீர்கள்."**

அப்போது பாபா, **"உங்களுக்கு என்ன வேண்டும்?"** என்று கேட்டார்.

கிறிஸ்தவர் பதிலளித்தார், "நான் இயேசு கிறிஸ்துவின் ரூபத்தைப் பார்க்க விரும்புகிறேன், அவருடைய அன்பு மற்றும் சேவையின் வாழ்க்கையைப் பின்பற்ற விரும்புகிறேன். என்னால் அதைச் செய்ய முடியாமல் போனதால் நான் கவலைப்படுகிறேன்."

'**இயேசு கிறிஸ்து மீதான அவரது நம்பிக்கை உண்மையானதா?**' என்று பாபா கேட்டபோது, கிறிஸ்தவர் உறுதியாக 'ஆம்' என பதிலளித்தார். அப்போது பாபா கூறியதாவது:

நீங்கள் உண்மையில் அவர் மீது அந்த நம்பிக்கையை வைத்திருந்தால், கிறிஸ்துவின் போதனைகளை நீங்கள் எவ்வாறு செயல்படுத்த வேண்டும் என்பதைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டிய தேவை உள்ளதா? பதிலை உங்கள் இதயத்தில் தேடுங்கள்.

நீங்கள் கிறிஸ்துவின் சுய ரூபத்தைக் காண ஏங்குகிறீர்கள். அன்பு, சேவை இரண்டையும் அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கையை வாழ, இது ஓரளவுக்கு உங்களுக்கு உதவும் என்பதில் ஐயமில்லை; ஆனால் நீங்கள் விரும்பும் பரிபூரண வாழ்வை அடைய இது போதுமானதா? நீங்கள் முழு நிறைவானவர் அல்ல. பரிபூரண வாழ்க்கையை வாழ, பரிபூரண நிலையை அடைய விரும்புகிறீர்கள். ஆனால் அனைத்து ஆன்மீக ஆர்வலர்களும் நீங்கள் விரும்புவதையே விரும்புவார்கள். கிறிஸ்துவின் உண்மை ரூபத்தைக் காண யார் விரும்ப மாட்டார்கள்? நீங்கள் விரும்புவதை ஏற்கனவே நீங்கள் உங்களுக்குள்ளேயே வைத்திருக்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியாது. அப்படியிருந்தும், ஏன் நீங்கள் விரும்பியது கிடைக்காமல் போகிறது? முழு நேர்மையுடன் உங்களுக்குள் ஆழமாகப் பார்த்தால், நீங்கள் நினைப்பதையும், தேவை என விரும்புவதையும் உண்மையில் விரும்பவில்லை என்பதை நீங்கள் காண்பீர்கள்.

நீங்கள் பல பொருட்களை உங்களுக்குச் சொந்தமாக வைத்திருக்கிறீர்கள், அவற்றிலிருந்து விடுபட்டு, சுதந்திரமாக இருக்க விரும்புகிறீர்கள். நீங்கள் உண்மையிலேயே அவற்றை அகற்ற விரும்பினால், ஒரு நொடியில் அவ்வாறு செய்யலாம், உங்களை யார் பிணைப்பது? உண்மையில் அவ்வாறு செய்ய விரும்பாதது உங்கள் சுயமே! நீங்கள் சுதந்திரமாக இருக்க விரும்பினால், நீங்கள் சுதந்திரமாக இருக்கிறீர்கள்; ஆனால் நீங்கள் உண்மையில் சுதந்திரமாக இருக்க விரும்பவில்லை, எனவே நீங்கள் தொடர்ந்து உங்களை கட்டுண்டதாக உணர்கிறீர்கள். நீங்கள் அன்பு மற்றும் சேவையின் முறையான வாழ்க்கையை வாழ விரும்புகிறீர்கள். உங்களுக்கு உண்மையிலேயே அந்த விருப்பம் இருந்தால், வாழ்க்கையை எப்படி நடத்துவது என்று நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை - நீங்கள் அதை வாழ்வீர்கள்.

தம்மைப் பின்பற்றுபவர்கள் அனைவரும் தங்கள் ஆழ் இதயத்திலிருந்து, உண்மையான தேவையை விரும்புவதை இயேசு விரும்பினார், ஆனால் பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் உட்பட எவரும்

உண்மையான தேவையை உண்மையில் விரும்பவில்லை. இது மிகவும் கடினம், மிக மிகக் கடினம், ஆனால் சாத்தியமற்றது அல்ல. மிகவும் அரிதாக, பல லட்சங்களில் ஒருவர் மட்டுமே உண்மையான தேவையை நிலைநாட்ட முடியும். கடவுளின் மனிதனால் மட்டுமே (மர்த்-இ-குதா) **ஒருவரின் தேவையை துணிந்து உருவாக்க முடியும்.**

நீங்கள் விரும்ப வேண்டியது உண்மையான தேவை, இந்த உண்மையான தேவை மட்டுமே உங்கள் நிரந்தர விருப்பமாக இருக்க வேண்டும். இது உங்கள் இதயத்தில் ஸ்தாபிக்கப்பட்டதும், இந்த ஒரே தேவையிலிருந்தும் நீங்கள் விடுபட்டு, எந்தவிதமான சுதந்திரத்திற்கும் கட்டுப்படாத சுதந்திரத்தை அடையப்பெறும் காலம் வரும்.

பாவ் கல்சூரியின் கண் பிரச்சினைகள் தொடர்ந்தன. தாதி கேரவாலா ஒரு நாள் அங்கு வந்த போது, கடுகு எண்ணெய் சாரத்தைப் பயன்படுத்துமாறு பரிந்துரைத்தார். பாபா, தாதியிடம் (பெங்களூரிலிருந்து) வாங்கிவரக் கூறி, அது வந்ததும், பாபாவே முதல்முறையாக பாவ் கல்சூரியின் கண்களில் தடவி, அவரிடம் தினமும் பயன்படுத்துமாறு அறிவுறுத்தினார். அது மிகுந்த எரிச்சலைத் தரவே, அவரது கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. அவர் மண்டபத்தை விட்டு கண்ணீருடன் வெளியேறிய வேளையில், அங்கிருந்த மக்கள், பாபா அவருக்கு அன்பின் அபரிமிதமான அனுபவத்தைத் தருகிறார் எனக் கூறி தங்களுக்குள் கிசுகிசுத்துக்கொண்டனர். பாபா, அவர் அதைப் பயன்படுத்துவதை நிறுத்தக் கூறும் வரை சில நாட்கள் இது தொடர்ந்தது.

கடுகு எண்ணெய் உதவவில்லை. ஓர் இரவில் பாவ் கண்காணிப்புப் பணியில் இருந்த வேளையில் அவர் கண்களில் மிகுந்த வலியை உணரவே, பாபா வினவினார், **"உங்கள் கண்கள் வலிக்கிறதா?"**

"வலி அதிகமாக உள்ளது பாபா!"

பாபா பெண்மணிகளை வரவழைத்து, பாவ் கல்சூரியை கதவருகில் வெளியே நிற்குமாறு கட்டளையிட்டார். அவர் பெண்மணிகளிடம், **"பாவ் என்னை மிகவும் தொந்தரவு செய்கிறார்; அவர் என்னை ஓய்வெடுக்க அனுமதிக்கவில்லை, அவர் கண்களில் சிறிய வலியைப் பற்றிப் புகார் கூறுகிறார், அவர் என்னைத் துன்புறுத்துவதைத் தவிர வேறு எதுவும் செய்யவில்லை!"** என்றார்.

டாக்டர் கோஹெர் கூறினார், "அவரது கண்கள் உண்மையாக வலிக்கின்றன, பாபா."

"அப்படியானால் அதற்கு நான் என்ன செய்ய முடியும்? அவர் எனது சௌகரியத்தைப் பற்றியா அல்லது அவருடையதைப் பற்றி நினைக்க வேண்டுமா? எனது சௌகரியத்தைப் பார்ப்பதே அவருடைய கடமை."

பாபா மேலும் கூறினார், **"அவர் மீது எனக்கு எரிச்சல் வருகிறது! நான் அவரைத் திருப்பி அனுப்ப வேண்டும் என்று நினைக்கிறேன். இந்நாட்களில் அவர் எனக்கு ஏராளமான தொந்தரவைத் தருகிறார். என் உடல்நிலை**

சீரில்லாத நிலையில், நாள் முழுவதும் மக்களை சந்தித்து, நான் சோர்வாக உணர்கிறேன். இப்போது இரவில், அவர் என்னை சித்திரவதை செய்கிறார்!"

மணி உடனே, "பாவை அனுப்பிவிடாதீர்கள் பாபா. சேவை செய்ய அவருக்கு மேலுமொரு வாய்ப்பு கொடுங்கள்" என்றார்.

"என்ன சேவை செய்வார்? என்னைக் கொன்றுவிடுவார்! தன்னைப் பற்றி மட்டுமே நினைக்கிறார்." பாவ் கல்சூரி ஒவ்வொரு வார்த்தையையும் கேட்டுக் கொண்டிருந்தார். பாபா பெண்மணிகளை அனுப்பிவிட்டு, பாவ் கல்சூரியை உள்ளே அழைத்து, **இன்னும் கண்களில் வலி இருக்கிறதா?** என்று கேட்டார். மிகவும் வருத்தமடைந்த பாவ் கல்சூரி, "இல்லை!" என்று பதிலளித்தார். ஆனால் பாபா அவருக்குத் தனது கைகளால் சில சொட்டு மருந்துகளைக் கொடுத்தார். பாவ், "அது எனக்குத் தேவையில்லை" என்றார்.

"ஏன் இல்லை?"

"இப்போது பெண்மணிகளுக்கு முன்பு, நீங்கள் ஒரு சிறந்த மருந்தைப் பரிந்துரைத்தீர்கள் அல்லவா?"

"அட முட்டாளே! இந்த மருந்தின் மதிப்பு உங்களுக்குத் தெரியாது. இது விலைமதிப்பற்றது, இது அதிர்ஷ்டத்தை மட்டுமே விளைவிக்கும். எனக்கு உங்கள் மீது அன்பு உள்ளது, அதனால் நான் அதை உங்களுக்குத் தருகிறேன். ஆனால் என் அன்பை நீங்கள் சரியாக மதிப்பிடவில்லை. பாபா எதைச் செய்தாலும் அது நன்மைக்கே என்று நீங்கள் நினைக்க வேண்டும். இந்தப் புரிதலை உங்களிடத்தில் கொண்டுவரவே, இந்த மருந்து வழங்கப்படுகிறது."

பாபா, பாவ் கல்சூரியை அரவணைத்துக் கொண்டார், பாவ் அமைதியானார். அடுத்த நாள், பாபா, அவரை பூனாவில் ஒரு மருத்துவரிடம் அனுப்பி, சிகிச்சைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்; சிறப்பான சிகிச்சைக்குப் பின்னரும், அவருக்கு எந்த நிவாரணமும் இல்லை. ஆனால், ஒரு நாள், அவர் சிகிச்சையை நிறுத்திய பிறகு, திடீரென வலி அவரை விட்டு விலகியது.

மற்றுமொரு சந்தர்ப்பத்தில், பாவ் கல்சூரியின் உடலும் தலையும் வலிக்கவே அவர் ஜுரத்தால் அவதியுற்றார். அவரது கண்கள் வீக்கமடைந்து, வாயும் தொண்டையும் வறண்டு போயிருந்தன. அன்று இரவு பாபாவின் அருகில் எப்படி இரவு கண்காணிப்புப் பணியைச் செய்வது என்று அவர் யோசித்துக் கொண்டிருந்தார். அவர் இரவு கண்காணிப்புப் பணிக்காகச் சென்றபோது, பாபா அவரிடம் கூறினார், **"இன்று என் உடல்நிலை மிகவும் மோசமாக உள்ளது. வலியால் எனது தலை வெடிப்பது போல் உணர்கிறேன், என் உடல் முழுவதும் வலிக்கிறது. எனக்கு ஜுரமாகவும் உள்ளது, எனது வாய் வறண்டு, கண்கள் எரிகின்றன. இன்றிரவு கவனமாக இருந்து, எனது கால்களை அழுத்தவும்."**

பாவ் கல்சூரியின் அனைத்து அறிகுறிகளையும் பாபா துல்லியமாக பட்டியலிட்டுள்ளார். எனவே அவரிடம் சொல்ல என்ன இருந்தது? பாவ் கல்சூரி அமைதியாக பாபாவின் பாதங்களை அழுத்துவதைத் தொடர்ந்தார். சிறிது

நேரத்தில் பாவ் கல்சூரியின் ஜுரம் குறைந்து, நள்ளிரவில் அவர் நன்றாக உணர்ந்தார்.

1959 ஜனவரி 13 செவ்வாய் அன்று, பாபா செய்தித்தாள் நிருபர்கள் குழு ஒன்றை சந்தித்த போது அவர் கூறினார்: **"வாழ்க்கையின் ஆன்மீக அம்சத்திற்கான, அன்பான இதயத்தைக் கொண்ட இந்த அறிவார்ந்த குழுவை சந்திக்க முடிந்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன்."**

பாபா பின்வரும் குறுஞ்செய்தியை வழங்கினார் (இரண்டு நாட்களுக்கு முன்பு பாபாவால் எடுத்துரைக்கப்பட்டது):

நமது வாழ்க்கை, உலகில், ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளின் செய்தியாக அமைய வேண்டும். நம் அன்றாட வாழ்வில் அன்பு, சேவை, நேர்மை ஆகியவற்றை வெளிப்படுத்தினால், உலகைத் துறக்காமல் துறவு அடையப்படும்.

ஆஷியானா, மும்பை, 10 மார்ச் 1959
(ASHIANA, MUMBAI, 10 MARCH 1959)

தொடர்ந்து நிருபர்கள் அனைவரும் பாபாவிடம் தனித்தனியாக அறிமுகம் செய்யப்பட்டனர். அவர்களின் பத்து நிமிட சந்திப்பின் முடிவில், ஒரு நிருபர் கேட்டார், "மெஹர் பாபா, ஆன்மீகப் பாதை என்பது என்ன, ஆன்மீகப் பாதையில் பயணிப்பதற்கான அளவுகோல் என்ன?"

பாபா புன்னகைத்தார், ஏனெனில் கேள்விகள் கேட்க வேண்டாம் என்று அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது, இருப்பினும், அவர் விளக்கினார்:

நீங்கள் ஆன்மீகப் பாதையில் இருப்பதாக நினைக்கத் தொடங்கும் போது, உண்மையில் நீங்கள் அதில் இல்லை. ஆன்மீகப் பாதை என்பது உங்களிடமிருந்து விலகி, வரையறுக்கப்பட்ட வழிமுறை அல்ல. அது உங்களுக்குள் தொடங்கி உங்களுக்குள் முடிகிறது. இதை, பாதையில் அதிக தூரம் என்று குறிப்பிடாமல், அறியாமை எனும் திரையின் மிகக் குறைந்த அளவாக எடுத்துக்கொள்ள வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், ஆன்மீகப் பாதை என்பது 'எனக்கு எதுவும் வேண்டாம்' என்ற நிலை.

ஆனால், இது எதையும் விரும்புவதிலிருந்து ஒரு சுதந்திரத்தைக் குறிப்பதாக இருந்தாலும், 'எதுவுமே வேண்டாம்' எனும் இந்த ஆசை கூட ஒரு தேவையாகக் கருதப்படுவதோடு, இதனால் உருவாகும் பிணைப்பு, உங்கள் இறுதி இலக்கையும், அனைத்து தேவைகளிலிருந்தும் அந்த முழு சுதந்திரத்தை அடையப்பெறுவதற்கும் முன்பு முழுமையாக அழிக்கப்பட வேண்டும்.

நிருபர்களில் ஒருவர், "ஒருவர் உறுதியான தொடக்கத்தை எடுத்தாலும், முயற்சியின் திருவினையைக் கண்கூடாகக் காணாத போது, அவரின் உற்சாகம் மெதுவாகக் குறைந்து, தொடர்ந்து மனச்சோர்வு ஏற்படுகிறது" என்று குறிப்பிட்டார்.

பாபா பதிலளித்தார்:

ஆம், இது மிகவும் பொதுவாக நிகழும் ஒன்று. நீங்கள் எடுக்கும் முயற்சிகள் எதுவாக இருந்தாலும், தோல்விகள் என்னவாக இருந்தாலும், அதைத் தொடர்ந்து வரும் விரக்தியும் எதுவாக இருந்தாலும், எல்லாவற்றின் வேர்களும் நீங்கள் கடவுளை நேசிப்பதை விட உங்களை அதிகமாக நேசிக்கிறீர்கள் என்ற உண்மையில்தான் உள்ளன. நீங்கள் கடவுளை எப்படி நேசித்திருக்க வேண்டுமோ, அந்த அளவுக்கு மனதார உங்களை நேசிப்பதால், தோல்விகளும் விரக்தியும் உங்கள் முன் முதன்மையாக நிற்கின்றன. இது மிகவும் இயற்கையானது.

எனவே, உங்கள் மனச்சோர்வு என்ற உண்மை, உங்களை மனச்சோர்வடையச் செய்ய அனுமதிக்காதீர்கள். இந்த மனச்சோர்வு தோன்றுவதற்கு முன்னர், அது எங்கு இருந்தது என்று நீங்கள் யோசனை செய்து பார்த்திருக்கிறீர்களா? இது கேட்கப்படாமலேயே வெளிப்பட்டது, மேலும் அது அந்த வழியிலேயே மறைந்து போக வேண்டும். அதை முறியடிப்பதற்கான உங்கள் கட்டாய முயற்சிகள், உங்கள் மனதில் மேலும்

மனப்பதிவுகளைத் தோற்றுவித்து, மேலும் மேலும் பிணைப்பை உருவாக்கும். எனவே முற்றிலும் அலட்சியமாக இருங்கள், அது மறைந்துவிடும்.

கடவுளை எப்படி நேசிக்க வேண்டுமோ அப்படி நேசிப்பதே ஒரே தீர்வு. கடவுள் மீதான அன்பு மட்டுமே இன்றியமையாதது.

ஐவி டியூஸ் (IVY DUCE) தனது கணவர் டெர்ரியுடன் (TERRY) சவுதி அரேபியாவில் (SAUDI ARABIA) இருந்தார், கணவர் 'அராம்கோ' ஆயில் நிறுவனத்தில் (ARAMCO OIL COMPANY) பணிபுரிந்தார். ஐவி, பாபாவைப் பார்க்க அனுமதி கோரி எழுதியிருந்ததைத் தொடர்ந்து, பாபா அவரைத் தமது முன்னிலையில் '**ஐந்து நிமிடங்கள் மட்டும்**' மற்றும் '**பெண்மணிகளுடன் ஐந்து நிமிடங்கள்**' இருக்க அனுமதித்தார். 1959 ஜனவரி 16 அன்று, நரிமன், மெஹர்ஜி இருவரும் ஐவியை குருபிரசாத்திற்கு அழைத்து வந்தனர். அவர் உடனடியாக பெண் மண்டலியைப் பார்க்கச் சென்றார் (மெஹரா, மணி, கோஹெர், ரானோ மற்றும் கோர்ஷெத்; அப்போது மெஹரு ஒரு அறுவை சிகிச்சைக்காக மும்பையில் இருந்தார்). பின்னர் ஐவி, பாபாவிடம் அழைத்துச் செல்லப்பட்டார். 'அவரது கடைசி அவதார காலகட்டத்தில் பாபா, முஹம்மது நபியாக இருந்ததால், ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, சவுதி அரேபியாவிற்குத் தான் கடைசியாகச் சென்றதிலிருந்து, அங்கு நிகழ்ந்த மாற்றங்களைப் பற்றி அவர் தெரிந்து கொள்வதில் பாபா மகிழ்ச்சியடைவார்' என்று ஐவி நினைத்தார். ஐவி, சவுதி மன்னர் (ஃபைஸல் இபின் அல் ஸவுத், FAISAL IBN AL SAUD) எண்ணெய் வளம் மூலம் வந்த அரச உரிமைப் பங்கீட்டுத் தொகையை, எவ்வாறு சாதாரண மக்களுக்கு உதவ பயன்படுத்துகிறார் என்பதை விளக்கினார். ஆனால் பாபா மகிழ்ச்சியடைவதற்குப் பதிலாக, **"ஏன் மன்னர்களைப் பற்றி இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்? நீங்கள் இப்போது 'உண்மைப்பொருளான' ராஜாதி ராஜனுடன் இருக்கிறீர்கள்!"** என்றார்.

அப்போது பாபா அவரிடம், **"எப்போது நீங்கள் வீடு திரும்புகிறீர்கள்?"** என்று கேட்டார்.

ஐவி, அரேபியாவிற்குத் திரும்பிச் சென்றதும், அவர் கணவருடன் எகிப்து (EGYPT), பெய்ரூட் (BEIRUT) பயணம் செய்ய இருப்பதைத் தெரிவித்தபோது, **"நீங்கள் உங்கள் வாழ்க்கையின் கதையைக் கூறுகிறீர்கள்!"** என்று பாபா குறுக்கிட்டார். **"நீங்கள் எப்போது வீடு திரும்புகிறீர்கள் என்று நான் கேட்டேன்"** என்றார்.

அந்த நேரத்தில், ஐவி நிராகரிக்கப்பட்டதாக உணர்ந்து, மனதில் நினைத்தார்: "எனது ஐந்து நிமிடங்கள் இப்படித்தான் பயன்படுத்தப்படுகின்றன," ஆனால் பின்னர் அவர், வழக்கம் போல தன் அகங்காரத்தை பாபா 'ஊசியால்' ஊடுருவச் செய்வதாக உணர்ந்தார். ஐந்து நிமிடம் முடிந்தது, ஆனால் பாபா அவரைத் தன் அருகில் அமருமாறும், மறுநாள் காலை தரிசன வேளையில் நான்கு மணிநேரம் அவரைப் பார்த்துக் கொண்டிருக்குமாறும் கூறி அவரை ஆறுதல்படுத்தினார்.

ஜனவரி 17 சனிக்கிழமை காலை எட்டு மணி முதல், குருப்பிரசாத்தில் தரிசனம் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட பூனா அன்பர்களுக்கு மட்டுமே தரிசனம் வழங்க இருப்பதாக அறிவித்தும், ஏறக்குறைய 700 ஆண்கள், பெண்கள், குழந்தைகளும், பாபா அழைத்த ஆந்திரா மற்றும் கொல்கத்தாவிலிருந்தும் அன்பர்கள் வந்தனர். பிறகு, பாபா பெண்கள் பக்கம் ஐவியுடன் நடக்கத் தொடங்கிய வேளையில், அவர் வெளியே வருவதைப் பார்த்து, கையில் மலர் மாலையுடன் ஒரு சிறுவன் கதறி அழுதான். பாபா அவனை அழைத்து தனது கரங்களால் அணைத்தார். ஐவி உடனே, "பாபா, அங்கு ஒன்றுதிரண்ட கூட்டத்தில் முச்சுத் திணறி அல்லது காயப்பட வாய்ப்புள்ளதாக உணர்ந்தேன்!" என்று குறிப்பிட்டார்.

புன்முறுவல் செய்துகொண்டே பாபா பதிலளித்தார், **"ஓ, இது ஒன்றுமில்லை! ஆந்திராவில் சில நிகழ்ச்சிகளில் மிகப் பெரிய கூட்டத்தை நீங்கள் பார்த்திருக்க வேண்டும் - நீங்கள் காணொளி திரைப்படத்தைப் பார்த்திருப்பீர்கள். அந்த தரிசனத்தில், மண்டலி என் உயிருக்கு ஆபத்து என அஞ்சினர்! ஆயிரக்கணக்கான மக்கள் என் அருகில் இருக்க என்னை நோக்கி விரைந்தனர்."**

பாபா, பின்னர் ஐவியுடன் மற்றுமொரு தனிப்பட்ட சந்திப்பை நிகழ்த்தினார். விரைவில், பாபாவின் அறிவுறுத்தல்களை அமெரிக்க அன்பர்களுக்கு எடுத்துச் செல்லும் எண்ணத்தில், மெஹர்ஜியுடன் மும்பைக்குப் புறப்பட்டார்.

தரிசனத்தின் போது, ஒரு டச்சு பெண்மணி, இந்திய செய்தித்தாள் பதிப்பாசிரியரை மணந்து, தென்னாஃப்ரிக்காவில் வாழ்பவர், பாபாவை சந்திக்க வந்தார். அவர் ஒரு சமூக சேவகராக இருந்து, அவரது பணியின் நிமித்தம் இந்தியாவில் பரவலாக பயணம் செய்தார். அவர் குருபிரசாத் அருகில் செல்ல நேர்ந்த வேளையில், ஆர்வத்தால் தூண்டப்பட்டு உள்ளே ஈர்க்கப்பட்டார்.

பாபா அவரை அமரச் சொன்னார். **"நீங்கள் அதிர்ஷ்டசாலி"** என்று சைகையால் தெரிவித்து, **"உங்களுக்கு மிகவும் பிடித்த இடம் எது?"** என வினவினார்.

"இமயமலை" என்று அவர் பதிலளித்தார். "அவற்றின் கம்பீரம் மற்றும் ஆன்மீக சூழல்களுக்காக நான் அதை நேசித்தேன்."

பாபா கூறினார்: **"ஆமாம், இமயமலையில் ரிஷிகளும் முனிகளும் (மௌன யோகிகளும்) பல காலமாக இருந்திருக்கிறார்கள், ஆனால் அவர்கள் கூட என்னைக் காண வேண்டிய விதத்தில் எனது உண்மை ரூபத்தைக் காணவில்லை. அவற்றின் ஆன்மீக சூழ்நிலைக்காக நீங்கள் இமயமலையை விரும்புகிறீர்கள். ஆனால், உங்களுக்குள் கடவுள் வாழும் இடத்தைப் பற்றி என்ன சொல்வது? அந்த இடத்தை நீங்கள் மிகவும் விரும்புகிறீர்களா? அந்த இடத்தை நீங்கள் அனைத்திலும் அதிகமாக நேசிக்கவில்லையா? ஒருமுறை நீங்கள் அந்த இடத்தைப் பார்வையிட நேர்ந்தால், இதர எல்லா இடங்களும்,**

எவ்வளவுதான் அழகாகவும், புகழ் வாய்ந்ததாகவும் அல்லது ஆன்மீக சூழல் நிறைந்ததாகவும் இருந்தாலும், உங்களுக்கு அவற்றில் எந்த ஈர்ப்பும் இராது.

"இமயமலை, இந்தியா, உலகின் பிற எல்லாப் பகுதிகளும் (கூட்டத்தையும், மைதானத்தையும் கைகளால் காட்டி), **இங்கே உங்களுக்கு முன்னால் இருக்கும் அனைத்தும் மாயை. உண்மையானதையும், என்றென்றும் நீடித்து நிலைப்பதையும் உங்கள் இதயத்தில் தேடுங்கள்."**

ஒருவர் தரிசனம் செய்தபோது, பாபாவைப் பின்பற்ற விருப்பம் தெரிவித்தார்; பதிலுக்கு பாபா விளக்கினார்:

நீங்கள் என்னைப் பின்பற்ற விரும்புகிறீர்களா? அதன் அர்த்தம் என்ன என்று தெரியுமா? 'எல்லாவற்றையும் விட்டுவிட்டு என்னைப் பின்பற்ற வேண்டும்' என்று அர்த்தம். மேலும் எல்லாவற்றையும் விட்டுவிடுவது என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? எல்லாவற்றையும் என்றால் உங்கள் சுயத்தைக் கூட, உங்கள் பின்னால் விட்டுச் செல்வது. நினைவில்கொள்ளுங்கள், நீங்கள் என்னைப் பின்பற்ற வேண்டும், எனக்கு முன்னால் ஓடக்கூடாது. இது மிகவும் எளிமையானது, ஆனால் மிகவும் கடினம்.

உங்கள் விருப்பத்தை உயர்வாகக் கருதி, நீங்கள் எனக்கு முன்னால் நடந்தால், உங்களை வழிநடத்தும் எனது வழியில் நீங்களே தடையாகி விடுகிறீர்கள். மீண்டும், ஆன்மீகப் பாதையில் உள்ள பள்ளங்களும் படுகுழிகளும் உங்களுக்குத் தெரியாது, எனவே உங்களைக் காப்பாற்ற, நான் தொடர்ந்து உங்களைக் கண்காணிக்க வேண்டும், இல்லையெனில் நீங்கள் வீழ்ந்து விடுவீர்கள். நீங்கள் என்னைப் பின்பற்றுவதற்கு பதிலாக, நான் உங்களைப் பின்பற்றவேண்டிய நிலை உருவாகும்.

நான் எனது வடிவத்தால் வரையறுக்கப்படவில்லை. நான் எல்லோருக்குள்ளும், உங்களுக்குள்ளும் உண்மையான வழிகாட்டியாக இருக்கிறேன். என்னைப் பின்பற்றுவது என்பது, எல்லாவற்றையும் விட்டுவிட்டு என் அருகில் இருக்க வேண்டும் என்பதல்ல. நீங்கள் உங்கள் உலகக் கடமைகளையும், பொறுப்புகளையும் விட்டுவிட்டு, எனக்கு சுமையாக இருக்கவேண்டும் என்று அர்த்தமல்ல. உங்கள் கவலைகளைக் கொட்டும் தளங்களாக நீங்கள் என்னைப் பயன்படுத்த வேண்டும் என்றும் அர்த்தமல்ல, உங்கள் அனைத்து ஆசைகளையும் நான் நிறைவேற்றுவேன் என்று நீங்கள் எதிர்பார்க்கக்கூடாது. நீங்கள் எனது விருப்பத்திற்கு முற்றிலும் அடிபணிந்து, முழுமையான சரணாகதியில் நிலைத்திருக்க வேண்டும் என்று அர்த்தம்.

என்னைப் பின்பற்றுவது என்பது எனக்குக் கீழ்ப்படிவது, நான் விரும்பியபடி செய்வது. எனது விருப்பம் உங்களது வழியாக மாறும் போது, நீங்கள் என்னை உண்மையாகப் பின்பற்றுகிறீர்கள். பிறகு நீங்கள் இரட்சிக்கப்படுகிறீர்கள்; அப்போது நீங்கள் பாதுகாப்பாக இருக்கிறீர்கள். நான்

வழியையும் அதன் தளங்களையும் அறிவேன், ஏனெனில் நானே இறை வழி. நான் தான் இறுதி இலக்கு.

ஒருமுறை குருபிரசாத்தில் இரண்டு பெண்மணிகள் ஒரே நேரத்தில் வந்து பாபாவை சந்திக்க அனுமதி கோரினர். ஒருவர் இந்தியர், மற்றொருவர் நெதர்லாந்து (NETHERLANDS) நாட்டைச் சார்ந்தவர். பாபா முதலில் அந்த இந்திய பெண்மணியை உள்ளே அழைத்தார், சிறிது நேரத்தில் அவர் பாபாவை சந்தித்து, தரிசனம் பெற்றுக்கொண்ட பின்பு மகிழ்ச்சியுடனும் முகமலர்ச்சியுடனும் வெளியே வந்தார். நெதர்லாந்திலிருந்து வந்த அந்த பெண்மணி உள்ளே நுழையும்போது, பாபா அவரைத் தடுக்கக் கூறி தகவல் தெரிவித்தார். மாறாக, பாபா அந்தப் பெண்மணியைப் பார்க்க முடியாது என்று அவருக்கு ஆறுதல் கூறுவதற்காக எரச்சை அனுப்பிவைத்தார். இயற்கையாகவே, அவருடைய அனைத்து எதிர்பார்ப்புகளுக்கும் பின்னர் அவர் ஏமாற்றமடைந்தார், மிக்க வருத்தத்துடன் வெளியேறினார். பின்பு ஸரோஷ், பாபாவிடம் ஏன் அவரைப் பார்க்கவில்லை என்று கேட்டதற்கு பாபா விளக்கினார், **"நிச்சயமாக, முதலாவதாக, எனது தரிசனத்தை அடையப்பெற்ற பெண்மணி அதிர்ஷ்டசாலி, ஆனால் இரண்டாவது பெண்மணி அதைவிட அதிர்ஷ்டசாலி, ஏனெனில் நான் அவருடைய இதயத்தைக் காயப்படுத்தினேன், அவர் இப்போது என்னை அதிகம் நினைவில் கொள்வார்."**

அன்று பிற்பகல், 3:30 முதல் 6:00 மணி வரை, பூனா பஜனை மண்டலியின் இசை நிகழ்ச்சி, குருபிரசாத்தில் நடந்தது. பூனாவிலிருந்து நெருங்கிய, தேர்ந்தெடுக்கப்பட்ட அன்பர்கள் மட்டுமே அழைக்கப்பட்டனர், அவர்களுக்கு பாபாவின் சகவாசத்திற்கான அரியதொரு வாய்ப்பு வழங்கப்பட்டது.

பாபாவின் ஏகாந்தவாசம் நிறைவடைந்த பின்னர் 1958, டிசம்பர் 1 அன்று பாபாவை சந்திக்க ஹோஷங் பரூச்சா (HOSHANG BAROOCHA) ரகசியமாக திட்டமிட்டிருந்தார். அவர் தனது சகோதரியைத் தவிர எவரிடமும் தனது விருப்பத்தைத் தெரிவிக்கவில்லை; இந்த நிலையில், ஜனவரி 17 அன்று, பூனாவில் பாபா அவரை சந்திக்க விரும்புகிறார் என்று எரச்சிடமிருந்து ஒரு கடிதம் நவம்பர் 29 அன்று வந்தபோது, அவர் மிகவும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தார். எனவே அவர் தனது அசல் திட்டத்தைக் கைவிட்டு இந்த நேரத்தில் பாபாவை சந்தித்தார்.

பாபா, பூனாவில் தங்கியிருந்த காலத்தில், சில முறை பிந்த்ரா ஹவுஸில் ஜெஸவாலா குடும்பத்தை சந்தித்ததைத் தவிர, அவர் வேறு எங்கும் செல்லவில்லை. ஆனால் விதிவிலக்காக, ஏர்வாடா சீர்திருத்தப் பள்ளியின் (YERAVDA REFORMATORY SCHOOL) கண்காணிப்பாளர் பி.எஸ். கரே (B.S. KHARE) என்பவரின் அழைப்பின் பேரில், அவர் அங்குச் சென்று, பள்ளி மாணவர்களுக்கு தரிசனம் வழங்குமாறு விடுத்த அழைப்பை பாபா ஏற்றுக்கொண்டார். சிறுவர்கள் சிறு பிள்ளைத்தனமான குற்றவாளிகள் (சிலர் திருடியதற்காக) மற்றும் சிலர் தொழில்களைக் கற்றுக்கொள்ளும் நோக்கத்தில் பள்ளியில் தங்க

வைக்கப்பட்டனர்; இதனால் எதிர்காலத்தில் தங்களைக் தாமே கவனித்துக் கொண்டு, சமூகத்தில் பொருத்தமான நபர்களாக வாழ முடியும்.

ஜனவரி 19 அன்று காலை 10:00 மணிக்கு, பாபா, சீர்திருத்தப் பள்ளிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். தமக்கு பூக்கள் அல்லது மலர் மாலைகள் எதுவும் வழங்க வேண்டாம் என அவர் வேண்டுகோள் விடுத்திருந்தார். களிப்பூட்டும் மனநிலையில் இருந்த பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: **"நான் சிறுவனாக இருந்தபோது, எனது வீட்டு சரக்கு அறையிலிருந்து பொருட்களையும், தின்பண்டங்களையும் திருடுவதோடு, சிறுபிள்ளைத்தனமான குறும்புகளால் நிறைந்திருந்தேன். ஆனால் நான் வளர்ந்த பிறகு, கடவுளை முழுவதுமாகக் கொள்ளையடித்து, அவருடன் ஒன்றாகிவிட்டேன். நீங்கள் இப்போது உங்கள் அன்பின் மூலம், என் அன்பைக் கொள்ளையடிக்க முடியும், அதற்காக உங்கள் அனைவரையும் நான் ஆசீர்வதிக்கிறேன்."**

சிறுவர்களுக்காக பாபாவின் வார்த்தைகளை கரே மராட்டியில் மொழிபெயர்த்தார், மேலும் 400 மாணவர்களும் தரிசனத்திற்கு வந்தனர். பாபா சிலரைத் தட்டிக் கொடுத்து, சிலரது தலையில் கைகளை வைத்து வருடி, சிலரை முத்தமிட்டார். இவ்வாறு ஒவ்வொரு சிறுவனுக்கும் இறை-மனிதனின் அன்பையும், அரவணைப்பையும் அடையப் பெறும் அனுகூலம் இருந்தது.

1959 ஜனவரி 20 செவ்வாய் அன்று காலை 9:30 மணிக்கு, பாபா, ஆண், பெண் மண்டலியுடன் பூனாவிலிருந்து புறப்பட்டு மெஹராஸாத் திரும்பிச் சென்றார். உபாஸனி மஹாராஜுக்கு அவர் அளித்த வாக்குறுதியின்படி, கோதாவரி மாய்க்கான பாபாவின் செய்தியுடன் ஆதி சீனியர் ஸாக்கோரிக்கு அனுப்பப்பட்டார். நோஷிர் ஈரானி 21ஆம் தேதி மெஹராஸாத்தில் தங்கும் நம்பிக்கையுடன் வந்தவர் மும்பைக்குத் திரும்புமாறு அறிவுறுத்தப்பட்டார்.

1959 ஜனவரி மாதத்தில், பாபா சில சமயங்களில் (எப்பொழுதும் பக்கத்துணையுடன் இருந்தாலும்) சிரமமின்றி நடக்க முடிந்தது, ஆனால் இதர நேரங்களில், அவரது இடுப்பில் வலி, வழக்கத்திற்கு மாறாக மிகவும் மோசமாக இருந்ததால், தூக்கு நாற்காலியை பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்த வலியின் காரணமாக, பாபா மாடியிலிருந்த படுக்கையறையைப் பயன்படுத்துவதை நிறுத்திவிட்டு, அதற்கு பதிலாக (அதுவரை) மெஹரு, கோஹெர் இருவரும் பயன்படுத்தி வந்த பிரதான வீட்டின் படுக்கையறையில் தூங்குமாறு மெஹரா பரிந்துரைத்தார். அறைக்கு வெளிப்புற கதவும் இருந்ததால் கண்காணிப்பாளர்கள் பயன்படுத்த வசதியாக இருக்கும். பாபா அந்த யோசனையை ஆமோதித்து, மெஹராஸாத் திரும்பி வந்ததும் கீழே பிரதான அறையைப் பயன்படுத்தத் தொடங்கினார்.

1956 விபத்துக்குப் பிறகு, பாபாவிற்கு ஏற்பட்ட காயங்கள் காரணமாக, அவரது வலது மற்றும் இடது கால்களுக்கு இடையேயான நீளத்தில் ஏற்பட்ட வேறுபாட்டை ஈடுசெய்ய, வலது பக்கத்தை இடது பக்கத்தை விட முக்கால் அங்குலம் உயர்த்தி, பாபாவிற்கு சிறப்பு பாத அணிகள் செய்யப்பட்டன.

இவற்றுடன் நடந்து செல்வதை பாபா மிகவும் எளிதாகவும் சௌகரியமாகவும் உணர்ந்தார்.

பாபா பூனாவிலிருந்து திரும்பிய பிறகு, சில முறை மெஹராபாத் மற்றும் குஷ்ரு குவார்ட்டர்ஸுக்கு விஜயம் செய்தார்; ஒருமுறை பாபா, பெண் மண்டலியை தன்னுடன் மெஹராபாத்திற்கு அழைத்துச் சென்றார். மெஹராபாத்திற்கு காரில் செல்லும் போது (1959 பிப்ரவரி 5), பாபா தனது இரண்டு கார் விபத்துகளைப் பற்றி குறிப்பிட்டார். பாபா, எரச்சிடம் எடுத்துரைத்தபோது அவற்றின் நோக்கத்தை இவ்வாறு வெளிப்படுத்தினார்: **"இயந்திர யுகத்தின்** (MACHINE AGE) **பொருள் சார்ந்த உலகின் முதுகெலும்பை உடைக்கும் வகையில், எனது உடல் எலும்புகளை உடைத்த அதே வேளையில், அதன் ஆன்மீக அம்சத்தை அப்படியே வைத்திருக்கிறேன்."**

மெஹராஸாத்தில், பாபா ஒவ்வொரு வாரமும் அஹமதுநகர் மையத்தைச் சார்ந்த அன்பர்களை, தனக்கு முன்பாக பஜனை பாடல்களைப் பாட அழைக்கத் தொடங்கினார். முஹமது ஸையத் ஸூனுமியான் (SOONU, ஸூனு என்று அழைக்கப்பட்டார்) என்ற இளம் முஸ்லீம் கவாலி பாடகரும் கஸல்களைப் பாட வருவதுண்டு. இவ்வாறு, அவரது நெருங்கிய தொடர்பு காரணமாக, பாபாவின் அஹமதுநகர் அன்பர்கள், மையத்தை முழு மனதுடன் நடத்த தூண்டப்பட்டனர். ரங்கோலே முழுப் பணியையும் பொறுப்பாக ஏற்று நடத்தினார், மேலும் ஒவ்வொரு வாரமும் ருஸ்தம் காக்காவின் இல்லத்தில் கூட்டங்கள் நடத்தப்பட்டன. பின்னர் அவர்களின் எண்ணிக்கை அதிகரித்த போது, குஷ்ரு குவார்ட்டர்ஸில் ஒரு வழக்கமான மையம் உருவாக்கப்பட்டது.

பாபாவின் விருப்பத்திற்கிணங்க, ஃபிரான்சிஸ் பிராபஸோன் ஆஸ்திரேலியாவிலிருந்து 1959 ஜனவரி 27 அன்று, காலவரையின்றி மெஹராஸாத்தில் வசிக்க வந்தார். 'இறைவனுடன் இணைந்திருங்கள்' (STAY WITH GOD) என்ற புத்தகத்தின் கையெழுத்துப் பிரதியை அவர் பாபாவின் பாதங்களில் சமர்ப்பித்தார் - உண்மையில் இறைவனுடன் வாழத் தொடங்கினார்! புத்தகத்தைப் பற்றி பாபா இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்: **"இக்கால அவதார புருஷரின் இதிகாசத்தின் தனித்துவமான உண்மை, அவர் வாழ்ந்த காலத்தில் எழுதப்பட்டது, மேலும் அவரது பௌதீக உடல் வடிவத்தில் கேட்கப்பட்டது, பிற்கால சந்ததியினருக்கு மிகப்பெரிய ஆதாரமாகத் திகழ்ந்து, அதன் இன்றியமையா தன்மையை நிலைநாட்டும்."**

ஃபிரான்சிஸிடம் பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: **"எந்தப் புத்தகமும் செய்யாத வகையில், என் அன்பு அதைப் படிக்கும் அனைவரின் இதயத்தையும் தொடும். உயர்ந்த அறிவாளிகளையும், எளிய இதயம் கொண்டவர்களையும் அது ஈர்க்கும்,"** இது பாபா, ஃபிரான்சிஸுக்கு வழங்கக் கூடியதில் மிக உயர்ந்த பாராட்டு ஆகும்.

ஃபிரான்சிஸ் புத்தகத்தின் பின்புறத்தில் வழங்க வேண்டிய குறிப்புகளில் பணிபுரிந்து கொண்டிருந்தார், மேலும் அவர் பல்வேறு வேத நூல்களையும்

படித்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் பாபா அவற்றைக் குறித்து கூறுகையில், வேதங்களை அவற்றின் சரியான கண்ணோட்டத்தில் பார்க்கச் செய்தார்:

வேதம் அழுகிய எலும்புகள் போன்றது, புழுக்களுக்கு உணவாகும். இறையியலும் தத்துவமும் நல்ல எலும்புகள்; அழுகும் நிலையில் இருப்பது போன்றது, கழுகுகளுக்கு உணவாக இருக்கிறது.

எழுச்சியூட்டும் கவிஞர்களின் எழுத்துக்கள் புத்தம்புது எலும்புகள் போல, நாய்களுக்கு உணவாகவும் இருக்கின்றன. ஆன்மீகப் பாதையில் முன்னேறிய துறவிகளின் எழுத்துக்கள் சதை போன்றது, புலிகளுக்கு உணவாகும். பௌதீக உடலில் வாழும் பரிபூரண குருநாதர்களின் எழுத்துக்கள் மூளை போன்றது, மனிதர்களுக்கு உணவாகும்!

நல்ல எலும்புகள் அழுகும் போது, எலும்பின் சாயல் இருக்கும், ஆனால் அழுகிய எலும்புகள் மேலும் அழுகும் போது, அருவருப்பூட்டும் கழிவுப்பொருள் போன்றது.

எனவே, நீங்கள் வேதங்களை மேலோட்டமாகப் படிக்கலாம் - தேவைப்படும்போது குரைக்கும் நாய்களை விரட்ட மட்டுமே பயன்படும்; உதாரணமாக, பாதிரியார்கள் மற்றும் மரபுவழியைப் பின்பற்றுபவர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க நீங்கள் அழைக்கப்பட்டால், அவை உதவியாக இருக்கும்.

உங்கள் முழு இதயத்தையும் 'இறைவனுடன் இணைந்திருங்கள்' புத்தகத்தின் குறிப்புகளில் பதிவிடும் போது, அது எப்பொழுதும் புத்துணர்வுடன் இருக்கும்.

பல அன்பர்கள் பாபாவின் தரிசனத்திற்காக கடிதம் எழுதிக் கொண்டிருந்தனர், எனவே, 1959 பிப்ரவரி 1 அன்று, பாபா இந்த சுற்றறிக்கையை வெளியிட்டார்:

என்னை நேசிப்பவர்களுக்கும், எனக்குக் கீழ்ப்படிபவர்களுக்கும், மேலும் அவ்வாறு செய்ய இருப்பவர்களுக்கும்:

1958, ஜூலை 10ஆம் நாள் நடந்த மெஹராபாத் கூட்டத்தில், நானாக விரும்பி, தனிப்பட்ட முறையில், தனி ஒருவருக்கோ, குடும்பம் அல்லது குழுவிற்கோ வழங்குவதைத் தவிர, எந்த ஒரு சொற்பொழிவையோ, நேர்காணலையோ, தரிசனத்தையோ, சகவாசத்தையோ, இனிமேல் எவரும் என்னிடம் எதிர்பார்க்கவோ, நாடவோ கூடாது என்று நான் எனது விருப்பத்தைத் தெரிவித்திருந்தேன். இருந்தும், 1959 ஜனவரி 15க்குப் பின்னர், என் அன்பர்கள் சிலரிடமிருந்து எனக்கு அனுப்பப்பட்ட எல்லாக் கடிதங்களும், எனது தரிசனத்திற்கான தீவிர ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளன. என் அன்பர்களில் சிலர், தங்கள் பக்தியால் ஆட்கொள்ளப்பட்டு, இன்னும் எனது தரிசனத்தை நாடி, எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களின் பக்தி, கீழ்ப்படிதல் இரண்டிற்கும் இடையேயான போராட்டத்தைக் காக்கும் வகையில், இனிமேல், என்னைப் பார்க்கவும்,

என்னைத் தொடர்பு கொள்ளவும் விரும்பும் எவரும், எந்த நாளிலும் காலை 9:00 மணி முதல் 12:00 மணிக்குள் அவ்வாறு செய்யலாம் என்பதை, என் அன்பர்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் அறிந்து கொள்ள விரும்புகிறேன். போக்குவரத்து, தங்குதல், உணவு மற்றும் பிற தனிப்பட்ட வசதிகள் தொடர்பாக அனைத்தையும், சம்பந்தப்பட்ட நபர், தனது சொந்த ஏற்பாட்டில் செய்ய வேண்டும். இந்த ஏற்பாடுகளுக்காக எவரும் எனது மண்டலி, ஆதி அல்லது அவரது அலுவலகத்திடமிருந்து குறைந்தபட்ச உதவியைக் கூட நாடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

காலை 9.00 மணியிலிருந்து 12:00 வரை என்னைப் பார்ப்பதற்கான சுதந்திரம் என்பது, பார்வையாளர்கள், வருகையின் முழு நேரமும், எனது முன்னிலையில் அல்லது எனது அறைக்கு அருகாமையில் இருக்க அனுமதி வழங்கப்படும் என்று அர்த்தமல்ல. என்னைப் பார்க்கும் இந்த சுதந்திரம் எவரையும் இரண்டு நிமிடங்களுக்கு மேல் என்னுடன் இருக்க அனுமதிக்காது, இது என்னை அன்புடன் சந்தித்து வாழ்த்துவதற்கும், அனைத்தையும் உள்ளடக்கும் என் அன்பின் அரவணைப்பை அடையப் பெறுவதற்கும் போதுமானது. மேலும், வளாகத்தில் கூட, முற்றிலும் தேவையான நேரத்தை விட அதிகமாகத் தங்குவதற்கு எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

என்னைப் பார்ப்பதற்கான இந்த சுதந்திரம், ஆன்மீக அல்லது பொருள் சார்ந்த வழிகாட்டுதல், ஆதாயம் அல்லது உதவி ஆகியவற்றைக் கேட்கும் எந்தவிதமான வாய்ப்பையும் அனுமதிக்காது. என்னைப் பார்ப்பதற்கான சுதந்திரம், சம்பந்தப்பட்ட நபரை நான் பார்த்தாலும், பார்க்காவிட்டாலும், பயணக் கட்டணம் அல்லது பயணச் செலவுகளை என்னிடமிருந்து எதிர்பார்க்க எவருக்கும் உரிமை இல்லை. என்னைப் பார்ப்பதற்கான இந்த சுதந்திரம் என்பது, என்னைப் பார்க்க உங்களுக்கு விடுக்கும் அழைப்பு அல்ல; எனவே, எந்தவொரு தனிப்பட்ட கவனிப்பையும் எவரும் எதிர்பார்க்கக்கூடாது.

என்னைப் பார்ப்பதற்கான இந்த சுதந்திரம் என்னால் வழங்கப்பட்டது; எனவே, குறிப்பிட்ட நாளிலோ, நேரத்திலோ, குறிப்பிடப்பட்ட நேரங்களிலும் கூட, நான் எவரையும் பார்க்காமல் இருக்கலாம். நான் விரும்பினால், தொடர்ந்து பல நாட்கள் எவரையும் பார்க்காமலும் இருக்க முடியும்.

என்னைப் பார்ப்பதற்கான இந்த சுதந்திரம், காலை 9:00 முதல் மதியம் 12:00 வரை (உள்ளூர் நேரம்) நான் எங்கிருந்தாலும், எந்த நகரத்தில் அல்லது கிராமத்தில் இருந்தாலும், என்னை சந்திக்க எவரையும் அனுமதிக்கிறது. என்னைப் பார்ப்பதற்கான இந்த சுதந்திரம், என்னை ஒரே இடத்தில் இருக்கவோ, அல்லது இந்த நேரத்தில் பார்வையாளர்கள் வருவதை எதிர்நோக்கி இருக்கும் வகையில் என்னைக் கட்டுப்படுத்தாது. மும்பை, பூனா, அஹமதுநகர் போன்ற இடங்களுக்கு இடையே, குறிப்பாக அடுத்த ஆறு மாதங்களில் நான் வசிக்கும் இடத்தை அடிக்கடி மாற்றிக் கொண்டிருக்கலாம்.

எனவே, என்னைப் பார்ப்பதற்கான சுதந்திரத்தைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பும் எவரும், எந்த ஒரு குறிப்பிட்ட இடத்திலும் பல நாட்கள் என்னைப் பார்க்காமல் இருப்பதற்கான சாத்தியக்கூறுகளையும், அதனால் ஏற்படும் அசௌகரியங்களையும், ஆபத்துகளையும் எதிர்கொள்ள முழுமையான தயார் நிலையில் என்னிடம் வர முயற்சி செய்ய வேண்டும். எனது மண்டலியோ, ஆதி அல்லது அவரது அலுவலகமோ இதற்குப் பொறுப்பல்ல அல்லது இடம் விட்டு இடம் நான் நகர்வதைப் பற்றி எவருக்கும் தெரிவிக்க வேண்டிய கட்டாயமும் இல்லை.

நான் எந்த விதமான அன்பளிப்பு அல்லது ரொக்கப் பணத்தையும் ஏற்றுக்கொள்ளாததால், என்னை சந்திக்கும் எவரும் உண்மையான அன்பெனும் காணிக்கையைத் தவிர, வேறு எந்த வகையான காணிக்கைகளையும் கொண்டு வரக்கூடாது. எனது பணிக்காக, என் அன்பர்களில் யார் ஒருவரையும், என்னை எந்த இடத்திலும் பார்க்குமாறு நான் பிரத்யேகமாக அழைக்கும்போது, மேற்கூறிய குறிப்புகள், அன்பளிப்புகள் பற்றிய விஷயங்களைத் தவிர, அழைக்கப்பட்டவர்களுக்கு இது பொருந்தாது.

தொலைத்தந்திகளைத் தவிர, எனக்கு அனுப்பப்படும் இதர எல்லா தகவல் தொடர்புகளையும் நான் கவனிக்க வேண்டிய தேவை இல்லை. எனவே, என்னிடமிருந்து பதில்களை எவரும் எதிர்பார்க்க வேண்டாம்.

சுற்றறிக்கையை அடையப்பெற்ற பிறகு, பாபாவிற்கு சுருக்கமாக மரியாதை செலுத்தி அவரது அரவணைப்பைப் பெற்றுக்கொள்வதற்காக, பல அன்பர்களும் பக்தர்களும் மெஹராஸாத்திற்கு வரத் தொடங்கினர். ஒரு சில நிமிடங்கள் பாபாவை சந்திப்பதற்காக, சிலர், நூற்றுக்கணக்கான மைல் தூரத்திலிருந்து பயணம் மேற்கொண்டனர்.

பிப்ரவரி 2ஆம் தேதி தரிசனத்திற்காக வந்திருந்த ஒருவரிடம் பாபா கூறினார், **"என்னை நீங்கள் நேசித்தாலும், இல்லை என்றாலும், உங்கள் மீதான என் அன்புதான் முக்கியம்."**

ஒரு நாள் பாபா, மண்டலியிடம் கூறினார்: **"என்னை விட எனது பணி மிகவும் முக்கியமானது. நான் நித்தியமானவன், என்னைப் பற்றி பிறருக்குத் தெரியப்படுத்த எனது பணி அவசியம்.**

"எனது விருப்பமின்றி எதுவும் நடக்காது என்று நான் கூறுவது உண்மை. உங்களைப் பொறுத்தவரை, நீங்கள் இவ்வாறு கூற வேண்டும்: 'பாபா விரும்புவதைத் தவிர, வேறு எதுவும் நடக்கக்கூடாது'. இதன் பொருள் எனது விருப்பமும், ஆர்வமும் இரண்டு வெவ்வேறு விஷயங்கள்."

பாபா ஒரு நாள் அதற்கு ஏற்ற மனநிலையில் இருக்கும் போது, அந்த வித்தியாசத்தை தெளிவாக விளக்குவதாகக் கூறி, மேலும் எடுத்துரைத்தார்: **"எனது விருப்பமின்றி எதுவும் நடக்காது எனும்போது, என் ஆர்வத்திற்கு மாறாக நீங்கள் போவதும் எனது விருப்பத்திற்குள் அடங்கும்."**

பிப்ரவரி 7 அன்று அவர் கூறினார்: **"எல்லோரும் எதையாவது செய்கிறார்கள்; சிலர் எதையுமே செய்யவில்லை. எதுவும் செய்யாமல் இருப்பதும் ஏதாவது செய்வது போலத்தான். எனவே, ஒவ்வொருவரும் எதையாவது செய்வதும், ஒன்றும் செய்யாதது போலாகும். இவ்வாறு ஏதாவது செய்வதும், அல்லது ஒன்றும் செய்யாமல் இருப்பதும், அல்லது எதையேனும் செய்வதும், எதுவும் செய்யாமல் இருப்பதாகும். செய்வது போன்ற செயல் அனைத்தும் கற்பனையே. 'செய்வது' என்று எதுவுமே இல்லை."**

1959 பிப்ரவரி 9 திங்கட்கிழமை அன்று, அரன்காவ்ம் கிராம மக்களுக்கு தரிசனம் வழங்க பாபா மெஹராபாத் சென்றார்.

பாரிஸ் நகரைச் சேர்ந்த ஃபிலிப் டுபுயி - PHILIPPE DUPUIS (**1954**ஆம் ஆண்டு 'மூன்று வியத்தகு வாரங்கள்' - 'THREE INCREDIBLE WEEKS' நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்) இந்தியா வந்து, பாபாவைப் பார்க்க அனுமதி கோரி, அவருக்கு கடிதம் எழுதியிருந்தார். பாபா அனுமதி வழங்கவே, பிப்ரவரி 6 அன்று மும்பை வந்தவரை, 9ஆம் தேதி, காலை, 9:00 மணிக்கு ஆதி, மெஹராபாத்திற்கு நேரடியாக அழைத்து வந்தார். பாபாவின் அனுமதியைப் பெறாமல், ஸுஃபி ஆசிரியர் இனாயத் கானின் மூத்த மகனான விலாயத் கானை (VILAYAT KHAN) டுபுயி தன்னுடன் அழைத்து வந்திருந்தார்.

பாபா தமது நேர்காணல் அறையில் இருவரையும் சந்தித்தார். நேர்காணலின் போது ஆதி, எரச், ஃபிரான்சிஸ் ஆகியோர் உடனிருந்தனர். விலாயத் கான், பாபாவின் கையை முத்தமிட்டார். பாபாவின் கேள்விக்கு பதிலளித்த விலாயத், டுபுயிஸ் வருவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு, தான் இந்தியா வந்ததாகக் கூறினார். அஜ்மீர் நகரில் அமைந்த கிஷ்தியின் ஆலயத்திற்கு அருகில், ஒரு குறிப்பிட்ட நேரம் தியானத்தில் அமர அவர் திட்டமிட்டார். விலாயத் கூறினார், "உங்கள் முன்னிலையில் உங்களை தியானம் செய்ய எனது முர்ஷித்தின் தூண்டுதலால் நான் பாபாவிடம் வந்தேன்."

பாபா, விலாயத் கானை நல்லுள்ளம் படைத்தவராகப் பார்த்தார்; ஆனால் அவரது புரிதல் ஆழமாக இல்லை, மேலும் அவர் தனது தந்தையைப் போன்ற ஆன்மீக நிலையை எய்தவில்லை. விலாயத் அவரது வாழ்வில் நடைமுறைப்படுத்தும் விதத்தில் பாபா, பின்வரும் ஆறு விஷயங்களை எடுத்துரைத்தார்:

1. **உலகத்தை விட்டு ஓடாதீர்கள்; உங்கள் சுய கீழ்நிலையிலிருந்து ஓடிவிடுங்கள்.**
2. **உலகத்தைத் துறக்காதீர்கள்; உங்கள் சுய கீழ்நிலையைக் கைவிடுங்கள்.**
3. **தனிமையை வேறு எங்கும் தேடாதீர்கள், உங்கள் சுயத்தின் உள்ளேயே தேடுங்கள், ஏனெனில், நீங்கள் எப்பொழுதும் உங்கள் 'ஏக இறைவன் எனும் பரமாத்மா'வாகத் தனியாக இருக்கிறீர்கள்.**

4. **உங்கள் சுயத்திற்குள்ளேயே அமைதியாக அழுது புலம்புங்கள்: 'பிரியமான இறைவனே, உங்களை என்னுடைய, உண்மையான, எல்லையற்ற சுயமாக எனக்கு வெளிப்படுத்துங்கள்.'**
5. **உங்கள் 'ஏக இறைவன் எனும் பரமாத்மா'வை கண்டுபிடிப்பதற்கு நீங்களே தடையாக இருக்கிறீர்கள். ஆகவே, உங்கள் உண்மைப்பொருளான பரமாத்மாவை, தொடர்ந்து நினைவுகூருவதன் மூலம், உங்கள் கீழ்நிலையை இழக்க முயற்சி செய்யுங்கள்.**
6. **உங்கள் சுயத்தையே நீங்கள் வென்று தேர்ச்சித் திறம் அடையும் வரை, சீடர்களின் குருநாதராக மாறாதீர்கள்.**

முடிவில், பாபா இவ்வாறு வலியுறுத்தினார்: **"இறைவனைத் தேடும் உண்மையான ஒருவர் செய்ய வேண்டிய ஒரே பொருத்தமான விஷயம், ஒரு பரிபூரண குருநாதரிடம் முழுமையாக சரணடைவதே ஆகும். ஒரு பரிபூரண குருநாதரின் பாதங்களைப் பற்றிப் பிடிக்கும் அதிர்ஷ்டம் இருக்கும் ஒருவர், அவருக்குக் கீழ்ப்படிந்து, சரணடைவது ஒன்றுதான் வாழ்க்கையின் ஒரே தீர்வு.**

"உண்மையில் சொல்லப்போனால், பிரியமான கடவுள் மீது கொண்டுள்ள அன்பும் பக்தியும் மட்டுமே, இந்தப் பாதையில் இன்றியமையாதவை. தியானம் என்பது பக்தி, அன்பு இரண்டும் இல்லை, ஆனால் ஒருவரின் எண்ணங்களின் பொருளை, அவரது மனக்கண் முன் பதிய வைப்பது ஆகும்."

பாபா விலாயத்திடம், **"நான் கூறியதை கவனமாகக் கேட்டீர்களா?"** என்று கேட்டார். விலாயத் 'ஆம்' என்று உறுதியாக பதிலளித்தார்.

அப்போது பாபா, **"இவ்வளவு தூரம் என்னைப் பார்க்க வந்துள்ளதால், நீங்கள் எளிய காரியம் ஒன்றைச் செய்ய விரும்புகிறேன். தினமும் நள்ளிரவு பன்னிரெண்டு மணிக்கு, ஐந்து நிமிடம் பாபாவை தியானம் செய்யுங்கள். எனது முகத்தில் கவனம் செலுத்துங்கள்"** என்றார்.

"இது எனது முர்ஷித்தை சினம் கொள்ளச் செய்யும்" என்றார் விலாயத்.

பாபா பதிலளித்தார், **"உங்கள் முர்ஷித் ஒரு பரிபூரண குருநாதராக இருந்தால், அவர் ஒருபோதும் சினம் கொள்ளமாட்டார்; மேலும் உங்கள் குருநாதர் இதைக் குறித்து சினம் கொள்வதானால், அவர் ஒரு முர்ஷித்தாக இருக்க முடியாது!**

"எனது முன்னிலையில் என்னை தியானம் செய்ய உங்கள் முர்ஷித் உங்களைத் தூண்டியதாக நீங்கள் கூறும்போது, ஒவ்வோர் இரவும் நான் உங்கள் அருகில் இல்லாத நேரத்தில், என்னை நினைத்து, தியானம் செய்ய ஐந்து நிமிடங்களை ஒதுக்கினால், குறிப்பாக, இவ்வளவு தூரம் வந்து, என்னை நினைத்து தியானம் செய்ய நான் இப்படி ஒரு அறிவுறுத்தலை வழங்கும்போது, முர்ஷித் சினம் கொள்வார் என்று சொல்வது அபத்தமானது."

பாபா, விலாயத் கானிடம், **"தயவுசெய்து நீங்களாகவே, ஆனால் நீங்கள் எனக்காக ஒரு காரியத்தையேனும் செய்ய வேண்டும். நீங்கள்**

'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) **புத்தகத்தை முதல் பக்கத்திலிருந்து இறுதி வரை படிக்க வேண்டும்"** என்று கூறி முடித்தார்.

விலாயத் கான் அதைச் செய்வதாக உறுதியளித்தார். பாபா அவருக்கு விடையளித்ததும், அறையை விட்டு வெளியேறும் முன்பு, பாபாவின் கையை மீண்டும் ஒருமுறை முத்தமிட்டார். ஆதி அவருக்கு பாகிஸ்தான் நாட்டின் ஸாயிப் ஆஸ்மி, பாபாவைப் பற்றி எழுதிய கவிதைகளின் உருது புத்தகமான 'இட்டர்னல் ஸாங்' (ETERNAL SONG) மற்றும் 'லை◌ஃப் அட் இட்ஸ் பெஸ்ட்' (LIFE AT ITS BEST) புத்தகங்களின் பிரதிகளை வழங்கினார். அவருக்கு 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகமும் வழங்கப்பட்டது.

பாபா பின்னர் அவரது அறையில் ◌ஃபிலிப் டுபுயியை தனிப்பட்ட முறையில் சந்தித்தார். அவர் டுபுயியை எச்சரித்தார்: **"விலாயத் கானின் விவகாரங்களில் நிதி ரீதியாகவோ அல்லது வேறு விதமாகவோ ஈடுபடாதீர்கள். நீங்கள் அவரை என்னைப் பார்க்க அழைத்து வந்திருக்கக் கூடாது, ஏனெனில் அவர் என் அருளை அடையப் பெறுவதற்கான பக்குவத்தை இன்னும் எட்டவில்லை."**

டுபுயி கூறினார், "விலாயத் உங்களை ஏற்றுக்கொண்டால், மேற்கில் உள்ள அவரது முழு ஸு◌ஃபிக் குழுவும் (அது ஒரு பெரிய குழுவாக இருந்தது) பின்னர் உங்களிடம் ஈர்க்கப்படும் பாக்கியத்தை அடையப் பெறுவதோடு, உங்கள் பாதுகாப்புக் கரங்களின் கீழ் நேரடியாக வர முடியும் என்ற எண்ணத்தில், நான் அவரை முழு நம்பிக்கையுடன் அழைத்து வந்தேன்."

பாபா இந்த விளக்கத்தில் திருப்தியடைந்ததாகத் தோன்றவில்லை, மேலும் தனது கேள்வியைத் திரும்பத் திரும்ப முன்வைத்து, டுபுயிடம் மீண்டும் மீண்டும் கேட்டார்: "ஆனால் நீங்கள் அவரை ஏன் அழைத்து வந்தீர்கள்?" ஒவ்வொரு முறையும், பாபா, டுபுயி மீது அதிக அக்கறை காட்டினார்.

இந்தியாவில் தங்குவதற்கான அவரது திட்டத்தைப் பற்றி பாபா, டுபுயிடம் கேட்டார். டுபுயி உடனே, "என்னிடம் எந்தத் திட்டமும் இல்லை, ஆனால் நான் ஐரோப்பாவிற்குத் திரும்ப விரும்பவில்லை" என்றார். பாபா அவருடைய நிதி நிலைமையைப் பற்றி கேட்டதும், டுபுயிக்குக் கடன்கள் ஏதுமில்லை என்றும், அவருடைய பயணச் செலவுகளை சந்திக்க முடியும் என்றும் கூறினார்.

சமீபத்திய சுற்றறிக்கைக்கு அவர் அளித்த பதிலைப் பற்றி பாபா, டுபுயிக்கு நினைவுபடுத்தினார், மேலும் அவருடைய அன்பு மற்றும் கீழ்ப்படிதலுக்கான உறுதிமொழி அவரை மகிழ்ச்சியடையச் செய்ததாகக் கூறினார். டுபுயி தனது உறுதிமொழியை மீண்டும் வலியுறுத்தினார், பாபா அவரை அன்புடன் தழுவினார்.

பாபா உடனே, **"நீங்கள் இங்கிருந்து புறப்பட்டு விரைவில் மேற்கு நாடு திரும்ப வேண்டும், விலாயத் கான் விவகாரங்களில் ஈடுபட வேண்டாம்"** என்று அறிவுறுத்தினார்.

விலாயத் கானுடன் அஜ்மீருக்குச் செல்வதாகவும், அவருக்கு ஒரு துணையாக அல்லது ஒருவித பாதுகாப்பிற்காக அங்கே அவருடன் தங்குவதாகவும் வழங்கிய வாக்குறுதிக்குக் கட்டுப்பட்டதாக டுபுயி, பாபாவிடம் கூறினார்.

அதற்கு பதிலளித்த பாபா, **"அஜ்மீருக்குச் செல்வது வீண். மேலும் சிக்கல்கள் வராமல் கவனமாக இருக்குமாறு நான் உங்களை எச்சரிக்கிறேன். நீங்கள் எந்த மனிதனுக்கும் வழங்கிய வாக்குறுதியைக் குறித்து, ஒருமுறை கூட சிந்தித்துப் பார்ப்பதை விட, நான் உங்களுக்கு வழங்கும் எந்த அறிவுரைகளையும் ஏற்றுக்கொள்வதும், அவற்றைக் கடைப்பிடிப்பதும் மிகவும் முக்கியம் என்பதை நீங்கள் உணர வேண்டும்."**

பாபா மேலும் விளக்கினார், **"நான் பூமியில் அவதரித்த இக்காலகட்டத்தில், மனிதன் புனித ஸ்தலங்களுக்குச் செல்வதும், ஆலயங்களில் தியானத்தில் அமர்வதும், துறவிகளைத் தரிசிப்பதும் சிறுபிள்ளைத்தனமானது. ஒருவருக்கு நீங்கள் வழங்கிய வாக்குறுதியின் முக்கியத்துவத்தை மதிப்பிடுவதை விட, நான் உங்களுக்கு வழங்கும் அறிவுரையின் மகத்துவத்தை நீங்கள் உணர்ந்து கொள்வது மிகவும் முக்கியம்."**

பாபா, டுபுயிடம் கூறினார், **"நான் இன்று மெஹராபாத்திற்கு மூன்று மணிநேரம் கிராமவாசிகளுக்காகப் பிரத்யேகமாக வந்திருந்தாலும், நான் உங்களை மிகவும் நேசிப்பதால் உங்களுடன் கணிசமான நேரத்தை செலவிட்டேன்."**

பாபா, விலாயத் கானை அழைத்தார்; அவர் உள்ளே நுழைந்தபோது, எரச் மூலமாக பாபா, பின்வரும் ஐந்து விஷயங்களை ஃபிலிப் டுபுயிஸுக்கு அறிவுறுத்துவதைக் கேட்டார்:

- **"ஃபிலிப், மும்பையிலிருந்து மேற்கத்திய நாடுகளுக்கு முடிந்த வரை, விரைவில் திரும்ப வேண்டும்.**
- **"ஃபிலிப், இப்போது மும்பைக்குச் சென்று, விலாயத் கான் அஜ்மீருக்குச் செல்ல முடிவு செய்யும் வரை, சில நாட்கள் அங்கேயே இருக்க வேண்டும்.**
- **"ஃபிலிப், விலாயத் கானுடன் அஜ்மீருக்குச் சென்று, விலாயத் கான் அஜ்மீரில் குடியேறும் வரை, அதிகபட்சம் ஐந்து முதல் பத்து நாட்கள் வரை அங்கேயே இருக்க வேண்டும்.**
- **"ஃபிலிப் பின்னர் அங்கிருந்து மும்பைக்குச் சென்று, மேற்கத்திய நாடுகளுக்குத் திரும்ப வேண்டும்.**
- **"பாபா, அவர் விரைவில் மேற்கத்திய நாடுகளுக்குச் செல்ல வேண்டும் என்று விரும்புகிறார் என்பதை ஃபிலிப் கவனிக்க வேண்டும்."**

பாபா, ஃபிலிப் டுபுயிடம் அவருடைய வழிகாட்டுதல்கள் தெளிவாகப் புரிந்ததா என்று கேட்டார். டுபுயிஸ் தலையை அசைத்தார். பாபா, அவரையும்,

விலாயத் கானையும் மீண்டும் ஒருமுறை ஆரத்தழுவி, அவரது வருகைக்காக பொறுமையுடன் மண்டபத்தில் காத்திருந்த அரன்காவ்ம் கிராம மக்களை சந்திக்க, தமது அறையை விட்டு வெளியேறினார்.

கிராமவாசிகளின் வழக்கமான வாழ்த்துகளுக்குப் பிறகு, பாபா, டுபுயியை அழைத்து, அவரை மண்டபத்தில் அமருமாறு சைகையால் தெரிவித்தார். ருஸ்தம் காக்கா, கோகிலா போன்றோர் பஜனை பாடி பாபாவை மகிழ்வித்தனர். ஸுனுமியான் கவாலி பாடல்கள் பாடினார். பாபா, விலாயத் கான் விரும்பினால் சபையில் பாபாவுடன் இணைய சுதந்திரமாக இருப்பதாகக் கூறி அனுப்பினார்; இல்லையெனில், டுபுயி, பாபாவால் செல்ல அனுமதிக்கப்படும் வரை, அவர் வெளியே அமர வேண்டும்.

அதே சமயம், வெளியே அமர்ந்திருந்த விலாயத் கான், பாபாவின் முன்னிலையில் மண்டபத்தில் பிறருடன் இணைந்து கொள்ளலாமா என்று மண்டலி ஒருவரிடம் கேட்டுக்கொண்டிருந்தார். பாபாவின் செய்தி அவருக்கு வழங்கப்பட்டபோது, அவர் அந்த வாய்ப்பில் மிகவும் மகிழ்ச்சியடைந்து, விரைவாக மண்டபத்திற்குள் நுழைந்தார். அவருக்கு உருது அல்லது பாரசீக மொழி புரியவில்லை என்றாலும், கவாலி பாடல்களைக் கேட்கும் ஆர்வத்தில் இருந்தார். அவ்வப்போது, உருது மற்றும் பாரசீக கஸல்களின் வார்த்தைகள் மற்றும் வரிகளின் ஆழத்தை விளக்க, பாபா ஆங்கிலத்தில் ஒரிரு வார்த்தை அல்லது வாக்கியத்தை சைகையால் தெரிவித்தார்.

அன்றைய தினம் பாபாவின் முன்னிலையில் பாடப்பட்ட ஒவ்வொரு கஸலின் சாராம்சமும் என்னவெனில், 'ஓர் அன்பன் அனைத்தையும் அர்ப்பணித்து, அன்பிற்குரியவரைப் பின்பற்றுவது முற்றிலும் அவசியம், மேலும் பரிபூரண குருநாதரின் பாதங்களுக்குக் கீழே, தூசியாக மாறுவது ஒன்றுதான் அவருடன் ஐக்கியமாவதற்கான ஒரே தீர்வு.'

அதற்குப் பிறகு தரிசனம் தொடங்கியது.

பாவ் கல்சூரியின் மகன் மெஹர்நாத்திற்கு சளி பிடித்திருந்ததால், அவனுடைய தாயார் அவனைப் பின்பக்கமாக வைத்திருந்தார். தரிசனம் தொடங்கியதும், பாபாவின் அருகில் செல்ல அனுமதிக்கப்படாததைக் கண்டு, மெஹர்நாத் உரத்த குரலில் அழத் தொடங்கினான்.

பாபா, ரமாவிடம், "**ஏன் அவனை என்னிடம் வர விடக்கூடாது?**" என வினவினார்.

"அவனுக்குச் சளி பிடித்திருக்கிறது," என்று ரமா விளக்கினார்.

"**அவன் கேட்கப் போவதில்லை, அவனை என்னிடம் அழைத்து வாருங்கள்!**" என்று பாபா கூறினார்.

அவன் வந்ததும், பாபா, அவனைத் தமது கைகளில் எடுத்துக் கொள்ளவே, மெஹர்நாத் அமைதியானான். சிறுவனின் சகோதரி ஷீலா, பாபாவின் அருகில் அமர்ந்திருந்தார்; பாபா அவரை அவ்வப்போது வருடிக் கொண்டிருந்தார். பாபா, ஷீலாவை மட்டும் குருபிரசாத்திற்கு அழைத்தது, மெஹர்நாத்தை மிகவும் பொறாமைப்பட செய்தது.

ஆனால் பாபா, இப்போது அப்பாவித்தனமாக, **"ஷீலாவை விட நான் உன்னை நேசிக்கிறேன்"** என்று உறுதியளித்தார், இது சிறுவனுக்கு இயல்பாகவே மகிழ்ச்சியை அளித்தது. பாபா கேட்டார், **"நீங்கள் யாரை அதிகம் நேசிக்கிறீர்கள், உங்கள் தாயையா அல்லது என்னையா?"**

அதற்கு மெஹர்நாத், "நான் பாபாவை அதிகம் நேசிக்கிறேன்!" என்று பதிலளித்ததும், பாபா அவனை இரண்டு முறை தழுவினார். பாபா, ஷீலாவிடம், **"நீங்கள் உங்கள் தாயை அதிகமாக நேசிக்கிறீர்கள், அப்படித்தானே?"** என்று கேட்டபோது, ஷீலா, "இல்லை, பாபா, நான் உங்களை அதிகமாக நேசிக்கிறேன்!" என்று பதிலளித்ததார்.

கிராம மக்களுடனான நிகழ்ச்சியின் முடிவில், ஃபிலிப் டுபுயி, விலாயத் கான் இருவரும் நரிமனுடன் மும்பைக்குப் புறப்படுமாறு அறிவுறுத்தப்பட்டனர்; இருவரும் பாபாவிடமிருந்து பிரியாவிடையாக அரவணைப்பைப் பெற்றுக்கொண்டனர். மேலும் அஜ்மீரில் சிறிது காலம் தங்கியிருந்து, விரைவில் ஐரோப்பாவிற்குத் திரும்புமாறு டுபுயிடமும், 'கடவுள் பேசுகிறார்' புத்தகத்தைப் படிக்கும்படி பாபா, விலாயத்தையும் நினைவூட்டினார். இருவரும் மகிழ்ச்சியுடன் அஹமதுநகரை விட்டு வெளியேறினர்; டுபுயி நேராக மும்பைக்குச் சென்ற அதே வேளையில், விலாயத் கான் ஒரு குறுகிய பயணத்திற்காக ஹைதராபாத் செல்ல பூனா ரயில் நிலையம் சென்றார்.

மெஹராபாத்திற்கு வந்த அனைத்து கிராம மக்களையும் அன்புடன் தழுவி, பாபா நண்பகலில் மெஹராஸாத் திரும்பிச் சென்றார். காரில் திரும்பும் போது, அவர் ஃபிலிப் டுபுயி மீதான தனது கவலையை ஃபிரான்சிஸிடம் குறிப்பிட்டார்: **"வீழ்வதும், வீழ்ந்து சிக்கிக் கொள்வதும் மிகவும் எளிதானது. மறுபுறம் பார்த்தால், சிக்கலிலிருந்து தடையின்றி விடுபடுவது மிகவும் கடினம்."**

அடுத்த நாள், பாபா, மும்பையில் நரிமனுக்கு ஒரு தொலைத்தந்தி அனுப்பினார், டுபுயியை அவரது ஹோட்டலில் சந்தித்து, பாபாவின் சார்பாக, மெஹராபாத்தில் அவர் வழங்கிய அறிவுரைகளைக் கடைப்பிடிக்குமாறு டுபுயிக்கு நினைவூட்டக் கூறினார். மறுநாள், பாபா, ஃபிரான்சிஸிடம், மேலும் நினைவூட்டும் விதத்தில் டுபுயிக்கு ஒரு நீண்ட கடிதத்தை எழுதுமாறு அறிவுறுத்தி, அவர், விலாயத் கானுடன் அஜ்மீருக்குச் செல்லாமல், அவர் விரும்புவதாக இருந்தால் இந்தியாவை விட்டு வெளியேறுமாறு அறிவுறுத்தினார்.

நரிமனுக்கு மீண்டும் ஒரு செய்தி அனுப்பப்பட்டது, டுபுயியைத் தொடர்புகொண்டு, காலந்தாழ்த்தாமல், விரைவில் அவரை ஐரோப்பாவிற்குத் திரும்பச் சொல்லுங்கள். ஆனால், விலாயத் கானுடன் ஏற்கனவே அஜ்மீருக்கு ரயிலில் சென்றுவிட்டதால், டுபுயியை நரிமன் சந்திக்க முடியவில்லை. அதன் பிறகு, மும்பைக்குத் திரும்பி வந்ததும் டுபுயியைத் தொடர்புகொண்டு பாபாவின் அறிவுறுத்தல்களை அவருக்கு நினைவூட்டுமாறு நரிமனுக்குக் கூறப்பட்டது. ஆனால் இதுவும் அவரால் செய்ய இயலவில்லை, ஏனெனில் டுபுயி மும்பையில் ஒரு நாள் மட்டுமே இருந்ததால், தொடர்புகொள்ளும் முகவரி தெரியாமல்

போயிற்று. அவரது ஃபிரான்ஸ் முகவரிக்கு அனுப்பப்பட்ட தொலைத்தந்தியும், 'பெறுநர் அங்கிருந்து நகர்ந்துவிட்டார்' என்ற குறிப்புடன் திரும்பி வந்தது. பாபா, டுபுயி மீது அதிக அக்கறையுடன் நேரத்தை செலவிட்டதன் காரணம், அவர் டுபுயியைப் பாதுகாக்கவும், அவரைத் தனது அரவணைப்பில் வைத்திருக்கவும் முயன்றார். ஆனால் டுபுயி அதற்கு பதிலாக, தனது மனம் போன போக்கில் நடக்கத் தொடங்கினார். துரதிர்ஷ்டவசமான விளைவு என்னவெனில், ஃபிலிப் டுபுயிடமிருந்து மீண்டும் ஒருபோதும் தகவல் எதுவுமில்லை.

ஃபிலிப் டுபுயிக்கு பாபா வழங்கிய எந்த அறிவுரைக்கும் அவர் கீழ்ப்படியவில்லை; பாபா, எதைச் செய்யக்கூடாது என்று கூறினாரோ, அதையே செய்ததாகத் தோன்றியது. எடுத்துக்காட்டாக, துறவிகள் மற்றும் புனிதர்களை சந்திக்க வேண்டாம் என்று பாபா அவரிடம் கூறியிருந்தார், ஆனால் ஃபிலிப் டுபுயி டெல்லிக்குச் சென்று, கிர்பால் ஸிங்கை சந்தித்ததாக கிஷன் ஸிங், பாபாவிடம் தெரிவித்தார். பாபா இதைக் குறித்து மகிழ்ச்சியடையவில்லை; மேலும், கிர்பால் ஸிங், பாபாவை 'மஜ்ஜூப்களின் தலைவர்' என்று குறிப்பிட்டதைக் கேள்விப்பட்டு பாபா அவர் மீது அதிருப்தி அடைந்தார்.

இது குறித்து கிஷன் ஸிங்கிற்கு எரச் எழுதியதாவது:

மீண்டும் ஒருமுறை, நீங்கள் கிர்பால் ஸிங்கை சந்திக்க நேர்ந்தால், 'மெஹர் பாபாவை 'மஜ்ஜூப்களின் தலைவர்' என்று அழைப்பதன் மூலம், அவர் பெரியதொரு தவறிழைக்கிறார் என்பதை கிர்பால் ஸிங்கின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும். ஏழாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டுள்ள மஜ்ஜூப்களுக்கு எந்தத் தலையும் (HEAD) இல்லை, வாலும் (TAIL) இல்லை என்று பாபா நமக்கு விளக்கியுள்ளார். எல்லையில்லா உணர்வில் லயித்து - எல்லையில்லா பேரின்பத்தில் முழுமையாக மூழ்கிய ஒருவரின் நிலை இதுவாகும். மஜ்ஜூப்களுக்குத் தலைவர் என்று எவரும் இல்லை.

கிர்பால் ஸிங், பாபாவை ஒரு சாதாரண மனிதனாகக் கருதி, பாபாவை வெறும் மனிதர் என்று அழைத்திருந்தால் கூட (மஜ்ஜூப்களின் தலைவர் என்பதற்கு பதிலாக) அவர் அதை பொய்யின்றி சொன்னதாக எடுத்துக்கொள்ளலாம், ஏனெனில், பாபாவும் ஒரு மனிதர், அதே வேளையில் பிரபஞ்சத்தின் இறைவன். ஒரு மஜ்ஜூப் சொற்பொழிவுகளை வழங்கவோ, பயணங்களை மேற்கொள்ளவோ முடியாது, ஏனெனில் மஜ்ஜூப் (ஏழாவது ஆன்மீகத் தளத்தில்) இறை உணர்வில் முழுமையாக உள்வாங்கப்பட்டுள்ளார்.

கிர்பால் ஸிங்கை மீண்டும் சந்தித்து, அவரிடம் இதைத் தெரிவிக்குமாறு கிஷன் ஸிங்கிற்கு எழுதக் கூறி பாபா, ஆதி சீனியருக்கு அறிவுறுத்தினார்:

கீழ்நிலை ஆன்மீகத் தளங்களில் நிலைகொண்டிருக்கும் மஜ்ஜூப், தனது சுற்றுப்புறத்தை முழுமையாக மறக்கும் அளவிற்கு, தெய்வீக அன்பில் மதிமயங்கிய 'மஸ்த்' என்று பாபா கூறுகிறார். ஏழாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டிருக்கும் ஒரு மஜ்ஜூப், தனது சுயமான இறைப் பெருங்கடலில் மூழ்கி, உலகைப் பொறுத்தவரை எந்த விதமான தொடர்புமின்றி இருக்கிறார்.

மெஹர் பாபா மக்களைப் பார்க்கிறார், மக்களை சந்திக்கிறார், சகவாசம் மற்றும் தரிசன நிகழ்ச்சிகளை நடத்துகிறார், பல முறை உலக சுற்றுப்பயணங்களை மேற்கொள்கிறார், சொற்பொழிவுகள் வழங்குகிறார், பல அறிஞர்களின் கூற்றுப்படி 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) **என்ற ஒப்பற்ற ஆன்மீகப் புத்தகத்தை வழங்கியுள்ளார் எனும் போது, அவரை 'மஜ்ஜூப்களின் தலைவர்' என்று அழைப்பது, ஆன்மீக ஞானத்தின் முழுமையான திவால்நிலையைக் குறிக்கிறது.**

இதை கிர்பால் ஸிங்கிடம் தெரிவித்த பிறகு, பாபாவின் அன்பை நீங்கள் அவருக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும், பாபா அவரை இன்னும் தமது அரிதான குழந்தைகளில் ஒருவராகவே கருதுகிறார் என்றும் பாபா கூறுகிறார்.

மேற்கத்திய அன்பர்கள், தங்கள் அன்பையும் கீழ்ப்படிதலையும் மீண்டும் உறுதிப்படுத்தி அனுப்பிய கடிதங்களுக்கு பதிலளிக்கும் விதத்தில், 1959 பிப்ரவரி 10 அன்று, பாபா அவர்களுக்கு இந்தச் செய்தியை அனுப்பினார்:

1958 அக்டோபர் 19ஆம் நாள் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு பதில் கடிதங்களாக அடையப்பெற்ற ஒவ்வொன்றும் என் முன்னால் வாசிக்கப்பட்டது; உங்கள் ஒவ்வொரு பதிலும் என்னை மிகவும் மகிழ்ச்சியடைய செய்துள்ளது.

அன்பை விட கீழ்ப்படிதல் மேலானது. அன்பு என்பது அன்பிற்குரியவர் அன்பருக்கு வழங்கும் பரிசு, அதேசமயம் கீழ்ப்படிதல் என்பது அன்பரிடமிருந்து அன்பிற்குரியவருக்கு வழங்கும் அன்பளிப்பு, அது எந்தவிதமான துன்பம், துயரம், தியாகத்தையும் ஏற்றுக்கொள்கிறது. கீழ்ப்படிதல் என்பது இறை அன்பருக்கு அன்பை அர்ப்பணிப்பது; இதில் அன்பிற்குரியவரின் விருப்பம் அன்பரின் மகிழ்ச்சியாக மாறும்.

எனக்குக் கீழ்ப்படிவதற்கான உங்கள் விருப்பம் அல்லது ஆர்வத்தினால் நான் மகிழ்ச்சியடைகிறேன் என்று நான் கூறும்போது, நீங்கள் அதைச் செய்ய முடியும் என்பதற்கான எனது ஆசீர்வாதத்தை ஏற்கனவே அடையப் பெற்றுள்ளீர்கள் - அன்பிற்குரியவரின் மகிழ்ச்சி அன்பருக்கு அவர் அளித்த ஆசீர்வாதமாகும்.

உங்கள் ஒவ்வொருவருக்கும் என் அன்பை வழங்குகிறேன்.

நவம்பர் மாதத்தில் பூனாவில் தனது இல்லத்திற்குத் திரும்பிய பிறகு, காடேக்கர் நிணநீர் சுரப்பி புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது; அவரது அக்குளுக்குக் கீழே இரண்டு புற்றுநோய் கட்டிகள் இருந்தன. அவரது மகன் திகம்பர் 1959 ஜனவரி இறுதியில் கல்லூரி படிப்பிற்காக அமெரிக்கா சென்றார்; மேலும் அவரது மகள் நளினி தாய், பூனா பல்கலைக்கழக மருத்துவப் பள்ளியில் பயின்று வந்தார். ஜனவரி 28 அன்று காடேக்கர் இது குறித்து பாபாவிற்கு எழுதியபோது, எரச் இந்த பதிலை அனுப்பிவைத்தார்:

மெஹராஸாத், அஹமதுநகர்,
1959 பிப்ரவரி 1

என் அன்பான காடேக்கர் ஸாஹேப்,

(ஜனவரி மாதம்) 28ஆம் தேதி அனுப்பப்பட்ட உங்கள் கடிதத்தின் உள்ளடக்கங்களைக் கேட்பதில் பாபா மிகுந்த ஆர்வம் காட்டினார்.

நீங்கள் பாபாவை எப்படி நேசிக்கிறீர்கள், எப்படி எடுத்துக்கொள்கிறீர்கள் என்பதை பாபா அறிவார்; மேலும், உங்கள் அன்பிற்குரிய பாபாவின் 'தெய்வீக அன்பு மற்றும் உண்மை' பற்றிய செய்தியை பூனாவிலும் பிற இடங்களிலும் - நீங்கள் எங்குப் பதவியில் அமர்த்தப்பட்டாலும் - பரப்புவதற்கு மிகுந்த சிரமத்தை எடுத்து வருகிறீர்கள். இந்த அன்பின் உழைப்பு அனைத்தும் ஒருபோதும் வீண் போகாது.

உங்கள் உடலில் தற்போது வீக்கமடைந்த சுரப்பிகளால் நீங்கள் எவ்வளவு வலியையும், அசௌகரியங்களையும் அனுபவிக்கிறீர்கள் என்பதை பாபா அறிவார். இந்த வலி அனைத்தையும், நீங்கள் ஒருபோதும் 'உங்கள் பாவங்களால் விளைந்தது' என்று எடுத்துக்கொள்ளாமல், பாபாவை அடிக்கடி நினைவுகூரும் வாய்ப்பை வழங்குவதாக பாவிக்க வேண்டும். பாபாவின் மீது அதிக அன்பு செலுத்துவதன் மூலம், நீங்கள் வலியை பொறுமையாகத் தாங்கிக்கொள்ள வேண்டும் என்று பாபா விரும்புகிறார்.

'உங்கள் முயற்சிகள், அவர் மீதான உங்களின் ஆழ்ந்த அன்பு, நிலையான ஆதரவு மற்றும் பாபா-அன்பர்களுடனான உங்கள் ஒத்துழைப்பால், எல்லா நேரங்களிலும், ஒவ்வொரு சூழ்நிலையிலும் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்; அத்தகைய அன்பர்களை அடையப் பெற்றதற்காக பெருமைப்படுகிறேன்' என்று பாபா கூறுகிறார்.

'இப்போது பாபாவை மேலும் அதிகமாக நேசிப்பதில் உங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும்' என்று அவர் விரும்புகிறார். எனவே, இதைச் செய்யுங்கள்: பாபாவை மேலும் அதிகமாக நினைவுகூருங்கள். உங்களால் இயன்றவரை, அமைதியாக பாபாவின் பெயரை மொழியுங்கள்; மேலும் அனைத்து இதயங்களிலும் வாழும் பிரியமான பாபா மீதான உங்கள் அன்பிலும் பக்தியிலும் மூழ்கி இருங்கள்.

திகம்பர், சகோதரி, அல்லது குணாதாய் (காடேக்கரின் மனைவி) பற்றி கவலைப்படுவதை நிறுத்துங்கள். அவர்கள் இப்போது உங்கள் வசதிக்காகவும் உங்கள் உடல் ஆரோக்கியத்திற்காகவும் கவலைப்படட்டும். கடந்த காலங்களில் அவர்களுக்காக, நீங்கள் போதுமான கவலைகளை அனுபவித்திருக்கிறீர்கள். அவர்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்கி, அவர்கள் தங்கள் பங்கைச் செய்ய அனுமதிக்கவும். 'இது, அது, அவர்கள்' என்று கவலைப்படுவதற்கு பதிலாக, 'அவர், அவரை, அவருடைய பணி' என்பதில் தீவிரமாக மூழ்கிவிடுங்கள். நீங்கள் இதைச் செய்ய வேண்டிய நேரம் இது. பாபாவின் 'இன்பத்தையும் மகிழ்ச்சியையும்' பிற சக உயிர்களுடன் - உறவுகள், அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் அனைவருடனும் பகிர்ந்து கொண்டு, வழக்கமான கவலைகளிலிருந்து நீங்கள்

முற்றிலும் விடுபட்டு, நிதானமாகவும், சௌகரியமாகவும் இருப்பதற்கான நேரம் இது.

பாபா, தனது மிகவும் அன்பான துக்காராம் (காடேக்கரின் செல்லப்பெயர்) மற்றும் குணாதாய், சகோதரி, திகம்பர் ஆகியோருக்கு தனது இதயத்தின் நெருக்கமான அன்பை அனுப்புகிறார்.

உங்கள் அன்புடன்,
எரச்

பிப்ரவரி 12 வியாழன் அன்று காலை, பாபாவைப் பார்க்க காடேக்கரும், குணாதாயும் மெஹராஸாத்திற்கு வந்தனர். காடேக்கர் வலுவிழந்து மிகவும் சிரமப்பட்டார். அழுதுகொண்டே, "பாபா, என்னைக் குணப்படுத்துங்கள், உங்கள் அன்பை நான் வெவ்வேறு இடங்களுக்கு எடுத்துச்செல்ல விரும்புகிறேன்" என்று மன்றாடினார்.

பாபா அவருக்கு ஆறுதல் கூறினார், "**கவலைப்படாதீர்கள், விரைவில் நீங்கள் சரியாகிவிடுவீர்கள். நீங்கள், உங்கள் முழு வாழ்க்கையையும் எனது நோக்கத்திற்காக அர்ப்பணித்துள்ளீர்கள்; நான் உங்களை நினைத்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.**" மண்டலி ஒருவருடன் அவரை மண்டபத்திற்கு வெளியே அனுப்பிய பாபா, குணாதாயிடம், "**காடேக்கர் விரைவில் என்னிடம் வருவார், எனவே அவருக்கு சிறப்பாக சேவை செய்யுங்கள். முடிந்தவரை மகிழ்ச்சியாக இருக்கச் செய்யுங்கள். எது நடக்க வேண்டுமோ அதுவே நடக்கும். அமைதியாக இருந்து முடிந்தவரை அவருக்கு ஓய்வு கொடுங்கள்.**"

முந்தைய நாள், பாபாவுடன் ஒரு நாள் தங்குவதற்காக ஹமிர்பூரிலிருந்து மெஹர்தாஸ், மெஹராஸாத்திற்கு வந்திருந்தார். காடேக்கருடன் பூனா சென்று, அவரை கவனித்துப் பேணுமாறு பாபா அறிவுறுத்தினார். பாபா, காடேக்கரிடம் தமது பெயரைத் திரும்பத் திரும்ப மொழிந்து, கவலைப்படாமல் இருக்குமாறு கேட்டுக் கொண்டார். அவருக்கு அன்புடன் விடையளிக்கும் விதத்தில், காடேக்கர் காரில் அமர்ந்ததும், பாபா மண்டலியிடம் அதன் அருகே நின்று, '**பக்த ஷிரோன்மணி** (பக்தர்கள் மத்தியில் அவர் ஒரு மகுடம்) **காடேக்கர் ஸாஹேபிற்கு ஜெய்!**" என்று மொழியுமாறு அறிவுறுத்தியதும், அனைத்து மண்டலியும் அவ்வாறே செய்தனர். காடேக்கரும் குணாதாயும் பூனாவிற்குப் புறப்பட்டுச் சென்றனர்; அது மிகவும் மனதைத் தொடும் 'பிரியும் விடை'யாக இருந்தது.

பிப்ரவரி 20 அன்று, பாபா கூறினார், "**இன்று நான் எனது ஆறு மாத கால இடர்பாடுகள் மற்றும் அவமானத்தின் கடைசி கட்டத்தில் நுழைகிறேன்.**"

1959 பிப்ரவரி 25 புதன்கிழமை, பாபாவின் 65 ஆவது பிறந்தநாள்; அவர் விரும்பியதற்கு இணங்க, அந்த ஆண்டு மெஹராஸாத்திலோ அல்லது மெஹராபாத்திலோ எந்த வகையிலும் பிறந்தநாள் அனுஷ்டிக்கப்படவில்லை. ஆண், பெண் அனைவரும் பாபாவிற்குப் பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவிக்க

வேண்டாம் என்றும் கூறப்பட்டது. ஆனால் இந்தியா மற்றும் உலகெங்கிலும் உள்ள இதர மையங்களில் பாபாவின் பிறந்தநாள் மிகச் சிறப்பாக அனுசரிக்கப்பட்டது. **"நேரம் வந்துவிட்டது, அது வந்தாக வேண்டும். மக்கள் கூட்டம் பெருகும் இவ்வேளையில், அவரின் அளப்பரிய அன்பு எங்கும் பரவிக்கொண்டே இருக்கும், அதை எதுவும் தடுக்க முடியாது அல்லது தடுக்காது"** என்று அவர் சமீபத்தில் கூறியது போல், அதிகமான மக்கள் பாபாவிடம் வெகுவாக ஈர்க்கப்பட்டனர்.

பிப்ரவரி 22ஆம் தேதி அனைத்து மையங்களுக்கும் தொலைத்தந்தி மூலம் பாபாவின் கீழ்வரும் பிறந்தநாள் செய்தி அனுப்பப்பட்டது: **"நித்தியத்தில் ஒவ்வொரு நொடியும், நாம் ஒவ்வொருவரும் ஏக இறைவனான ஒரே ஒரு பிரிக்க முடியாத கடவுளாக, இரண்டாவது என்று கூற முடியாத அளவுக்கு இணைபிரியாமல், 25ஆம் தேதியிலும் அவ்வண்ணமே இருக்கிறோம்."**

பிப்ரவரி 25ஆம் தேதி 'ஆந்திரா பத்திரிகா பதிப்பகம்' (ANDHRA PATRIKA PUBLICATION) நிறுவனத்திற்காக பாபா, கீழ்வரும் செய்தியை வழங்கினார்: **"காலங்காலமாக என் அன்பின் செய்தியை மௌனமாக வழங்கி வருகிறேன். எனது மௌனத்திலிருந்து ஒரு செய்தியை நீங்கள் கேட்கிறீர்கள், ஆனால் மௌனமே எனது மௌனத்தின் வார்த்தைகள். மௌனமே அன்பு எனும்போது, அன்பர் எனது மௌனத்தை விரும்புகிறார், எனது மௌனத்தில் மௌனமாக என்னை மனம் கனிந்து போற்றி பாராட்டுகிறார்."**

பாபாவின் பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில், மும்பை மையம் அவதார் மெஹர் பாபாவின் 'இருபத்தொன்று துகள்கள்' (TWENTY-ONE FRAGMENTS BY AVATAR MEHER BABA) என்ற தலைப்பில் அவரது செய்திகளிலிருந்து சில பகுதிகளை வெளியிட்டது. இந்தக் கையேட்டிற்கு ஒரு முகவுரையை எழுதுமாறு கேட்டுக்கொண்டதற்கு இணங்க, ∴பிரான்சிஸ் பிராபஸோன் எழுதிய குறுகிய கட்டுரை, இந்த வார்த்தைகளுடன் முடிந்தது:

மனிதர்களின் வார்த்தைகள் மெழுகுவர்த்திகள் எரிந்து, அணைந்துவிடுவது போல், உரை நிகழ்த்துபவர்களையும் அதற்கு செவிமடுப்பவர்களையும் இருளில் ஆழ்த்துகின்றன; ஆனால் இறை மனிதனின் செய்தி, அதை உச்சரிக்கும் காலத்திலும், பிற்கால சந்ததியினருக்கும், என்றென்றும் மறையாத சூரியனைப் போன்றது; ஒருவர் விரும்பி, குருட்டு நம்பிக்கைகளை களைந்து, அதன் ஒளியில் பங்குபெற நேர்ந்தால், அது எப்பொழுதும் அருளை வழங்கும் ஒன்றாக இருக்கும்.

பிப்ரவரி மாதத்தில் பாபா, மெஹராஸாத்தில் இருந்த போது ஒருநாள் இவ்வாறு எடுத்துரைத்தார்: **"ஆழ்ந்த அர்த்தம் நிறைந்த அந்த ஓர் இறை-வார்த்தை, எண்ணிலடங்கா அர்த்தமற்ற வார்த்தைகளை உருவாக்கியுள்ளது, மேலும் நான் அந்த வார்த்தையை உச்சரிக்கும் வேளையில், அனைத்து வார்த்தைகளும் அர்த்தம் நிறைந்ததாக இருக்கும்."**

ஆந்திராவிலிருந்து 300 யாத்ரீகர்களுடன் ஒரு சிறப்பு ரயில், 1959 மார்ச் 1 ஞாயிற்றுக்கிழமை அன்று அஹமதுநகரை வந்தடைந்தது. அன்பர்கள் பாபாவின் தரிசனத்தை நாடவே, அவர் அதை வழங்க இணக்கம் தெரிவித்தார். ரயில் நிலையத்திற்கு அருகில் அமைந்த 'ரயில்வே கிளப்'பில் (RAILWAY CLUB) தரிசனத்திற்காக இரண்டு அறைகளை ஆதி முன்பதிவு செய்து, காலை 8:00 மணிக்கு, ஆதி, ஸரோஷ், கராச்சியைச் சேர்ந்த மினூ கராஸ் மூவரும் பாபாவை அழைத்து வந்தனர். அஹமதுநகரிலிருந்து சுமார் 500 அன்பர்களும் ஒன்றுதிரண்டனர்; இதில் பால்வனி (BHALWANI) கிராமத்தைச் சேர்ந்த ஏராளமான பக்தர்களும் பங்கெடுத்தனர். ஸரோஷ் தனக்குப் பரிச்சயமான பலரை அழைத்து வந்தார்; ஜால்பாய் நிகழ்ச்சியை காணொளி படமாக்க பூனாவிலிருந்து வந்தார். அனைவருக்கும் தரிசனம் வழங்கி, பாபா பிரசாதம் விநியோகிக்க, நிகழ்ச்சி நிறைவடையும் வேளையில், ரயில்வே அதிகாரிகள் குடும்பத்துடன் வந்து பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டனர். பாபா அறையை விட்டு வெளியே வந்ததும், ஜால்பாய் முழுக் குழுவுடன் பாபாவின் புகைப்படத்தை எடுத்தார். பாபா காரில் அமர்ந்த பின்னரும் மக்கள் அவரது கைகளை முத்தமிட, கார் ஜன்னல் அருகில் ஒன்றுதிரண்டதால், பாபா, மெஹராஸாத்திற்குப் புறப்பட தாமதமானது. பாபாவின் ஜெய் முழக்கங்களுக்கு மத்தியில் கார் புறப்பட்டுச் சென்றது. இடுப்பு வலியுடன், கணுக்கால் வீங்கி இருந்தபோதிலும், பாபா மெஹராஸாத் திரும்புவதற்கு முன்னர், அக்பர் அச்சகம் மற்றும் லுக்டுக்கேயின் இல்லத்திற்கு விஜயம் செய்தார்.

வாரி வழங்கும் அன்பான வள்ளலின் கருணையால் காலம் மனம் நெகிழ்ந்தது: "மெஹர் பாபாவின் தரிசன நிகழ்ச்சிகளை விவரிக்க வார்த்தைகள் போதுமானதாக இல்லை. ஒருவர் நதி அல்லது கடலில் நீராடச் செல்லும் போது, தண்ணீரின் குளிர்ச்சியை அனுபவிப்பதோடு, அதிலேயே மூழ்கியிருப்பதில் மகிழ்ச்சி அடைகிறார்.

அதேபோல, பாபாவை தரிசனம் செய்யும்போது, அன்பர்கள் ஆனந்தக் கடலில் மூழ்குவது போல் உணர்ந்தார்கள்! ஒட்டுமொத்த சூழலும் மகிழ்ச்சியால் ஊடுருவி இருந்தது, எங்கும் ஆனந்தத்தை அனுபவித்தது. இதர அனைத்தையும் மறந்து, பாபாவின் தரிசனத்தை அடையப் பெற்றவர்கள், தனியாக அமர்ந்து ஒவ்வொரு நொடியும் தெய்வீக மதுபானத்தை அருந்தி, அமைதியாக இந்த நிலையை அனுபவித்தனர். சிலர் நிகழ்ச்சிக்குப் பின்னரும் பல நாட்கள் அதே நிலையில் இருந்தனர்."

மார்ச் 2ஆம் தேதி, ஏறக்குறைய ஒரு மாத காலத்தில் ஆறாவது முறையாக, ருஸ்தம் காக்கா, ஸுனுமியான் இருவரும் பாபாவின் முன்னால் பாடுவதற்காக மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டனர். பாபா மிகவும் விரும்பிய ஸுனுமியான் பாடிய ஒரு கஸலில் இந்த வார்த்தைகள் அடங்கியிருந்தன:

சொல்ல என்னிடம் வார்த்தைகள் இல்லை;
உன்னை நான் கண்டு கொண்டதில்.

நான் எனது இலக்கை எட்டினேன்,
எனது பரமாத்மாவைக் கண்டு கொண்டேன் -
உண்மையாகவே, நான் ஒரு மனித உருவில்,
கடவுளைக் கண்டேன்!

பாபா ஒவ்வொரு நாளும் காலை நேரத்தில் மண்டபத்திற்கு வந்ததும், கைக்கோபாத்துடன் அவரது அறையில் தனியாக அமர்வதையும், அதன் பிறகு, தினசரி கடிதப் போக்குவரத்தைக் கையாளுவதையும் வழக்கமாகக் கொண்டார். பார்வையாளர்களை சிறிது நேரம் சந்தித்தாலும், பாபா ஒருவரையும் தழுவவில்லை. இந்த நேரத்தில் அவரது கால்களில் வீக்கம் ஏற்படுவதும், அது வந்து போவதும் மர்மமாக இருந்தது.

குமார், புக்கார் இருவரும் அறிவுறுத்தியபடி மெஹராஸாத் திரும்பி வந்தனர். ஒரு நாள் குமார், பாபாவிடம், அலோபாவும் பைதூலும் சிறந்த சதுரங்க விளையாட்டு வீரர்கள் என்று கூறியதும், இருவரையும் அழைத்து பாபா, சதுரங்கம் விளையாடுமாறு கூறினார். அலோபா வெள்ளை காய்களையும், பைதூல் கருப்பு காய்களையும் தேர்ந்தெடுத்தனர். இருவரும் வேண்டிய நேரம் எடுத்துக்கொண்டு, ஒவ்வொரு நகர்வையும் கவனமாக சிந்தித்து விளையாடினர், ஆனால் இருவரும் விளையாட்டில் உள்வாங்கப்பட்டு, அதன் மீதான அதீத ஆர்வத்தில், பைதூல் சில நேரங்களில் வெள்ளைக் காய்களையும், அலோபா கருப்பு காய்களையும் நகர்த்தினர்.

பாபா இதைக் கண்டு மிகவும் மனம் மகிழ்ந்து இவ்வாறு கருத்துரைத்தார்: **"இப்படிப்பட்ட பைத்தியக்காரர்களை நான் எப்பொழுதும் பார்த்ததில்லை! அவர்கள் ஹவுரா பாலத்தின் மேல் உலாவும் பைத்தியக்காரர்களையும் மிஞ்சிவிட்டனர்!"**

(ஒருமுறை கொல்கத்தாவில் உள்ள ஹவுரா பாலத்தின் அதி உயர இரும்புச் சட்டத்தில் இரண்டு பைத்தியக்காரர்கள் ஏறி, சீட்டு விளையாடத் தொடங்கிய கதையை பாபா குறிப்பிடுகிறார். காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு வந்த பின்னரும், அவர்களைக் கீழே அழைத்து வருவதில் கடும் சிக்கல் ஏற்பட்டது. பைத்தியக்காரர்களின் குறைந்தபட்ச நகர்வும் அவர்களின் உடனடி வீழ்ச்சியைக் குறிக்கும். காவல்காரர்கள் இரவு முழுவதும் கண்காணித்து, அடுத்த நாள், எப்படியோ இருவரையும் கீழே இறங்கத் தூண்டுவதில் வெற்றி கண்டனர்.)

அன்று முதல் பைதூல், அலோபா இருவருக்கும் நண்பகல் நேரத்தில் தனக்கு முன் சதுரங்கம் விளையாடும் வாய்ப்பை பாபா வழங்கினார், மேலும் அவர்கள் விளையாடும் விதத்தைப் பார்த்து மகிழ்ந்தார்.

1959 மார்ச் 7 சனிக்கிழமையன்று வாமன் ஓட்டிச் சென்ற மெஹர்ஜியின் காரில் மெஹரா, மணி, கோஹெர் ஆகியோருடன் பாபா மும்பைக்குப் புறப்பட்டுச் சென்றார். ஆதி தனது காரில் எரச், பெண்டு, ராம்ஜூ, பாவ்

ஆகியோருடன் அவர்களைப் பின்தொடர்ந்தார். (குமார், புக்கார், விஷ்ணு மூவரும் பேருந்து மற்றும் ரயிலில் பயணம் செய்தனர்; காக்கா, கைக்கோபாத், ∴பிரான்சிஸ், அலோபா, மெஹர்தாஸ் ஆகியோர் மெஹராஸாத்தில் தங்கினர்.) குருபிரசாத் மாளிகையில் (பிந்த்ரா ஹவுஸிலிருந்து வந்த) மதிய உணவு மற்றும் தேநீர் அருந்துவதற்காக பூனாவில் இரண்டு மணிநேரம் நின்றனர். ஆனால் உணவு அல்லது ஓய்வு எடுப்பதற்கு முன்பு, பாபா, காடேக்கரின் உடல்நிலை குறித்து விசாரிக்க மண்டலியுடன் காடேக்கரின் இல்லத்திற்குச் சென்றார்.

"உங்கள் வலி எப்படி இருக்கிறது? நீங்கள் எப்படி உணர்கிறீர்கள்?" பாபா அவரிடம் கேட்டார்.

"நீங்கள் என்னைப் பார்க்க வந்துள்ளதால், நான் சிறிதளவும் வலியை உணரவில்லை" என்றார் காடேக்கர்.

"**இன்று மஹா சிவராத்திரி** (சிவபெருமானின் நினைவாக இந்து விடுமுறை), **ஷங்கர் நேரில் உங்கள் இல்லத்திற்கு உங்களைப் பார்க்க வந்துள்ளார். இரவும் பகலும் எனது பெயரை மொழியுங்கள். அதைத் தொடர்ந்து செய்யுங்கள்.**"

காடேக்கர் ஆனந்தக் கண்ணீர் வடித்தார். அவரை ஆரத்தழுவி பின்பு பாபா குருபிரசாத் திரும்பி வந்தார். காடேக்கர் தனது பிரியமான பாபாவைக் கடைசியாக பார்த்தது அதுதான்.

பாபாவும் மண்டலியும் மாலை 5:00 மணியளவில் மும்பைக்கு வந்து, அவரும் பெண்மணிகளும் ஆஷியானாவில் தங்கினர். பாவ் கல்சூரிக்கு மாலை 5:00 மணி முதல் அதிகாலை 2:00 மணி வரை, கண்காணிப்புப் பணி வழங்கப்பட்டது. அதன் பின்பு பெண்டுவும் விஷ்ணுவும் தலா இரண்டு மணிநேரம் காலை 6:00 மணி வரை பகிர்ந்து கொண்டனர். புக்கார், குமார் இருவரும் மும்பையில் ஒரு ஹோட்டலில் தங்கினர்.

பாபா வருவதற்கு முன்னர் அர்னவாஸ், நரிமன் இருவரின் குடியிருப்பு புதுப்பிக்கப்பட்டது - வர்ணம் பூசப்பட்டு, புதிய மூடு திரைகளுடன், பாபா பயன்படுத்திய அறையில் குளிரூட்டும் கருவியும் பொருத்தப்பட்டது. அனைத்தும் அவசர அவசரமாக முடிந்த நிலையில், பாபா அங்கு வருகை தந்தார். பாபா புதிப்பிக்கப்பட்ட இல்லத்தைப் பார்த்து, நரிமனிடம் '**எவ்வளவு செலவு செய்தீர்கள்?**' என்று கேட்டதற்கு, அவர் "ஏழாயிரம் ரூபாய்" என்று பதிலளித்தார்.

"**எனக்காக இவ்வளவு செலவு செய்தீர்களா?**" என்று பாபா கேட்டார்.

அதற்கு அர்னவாஸ், "இதைச் செய்ததில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம், பாபா" என்றார்.

பாபா மகிழ்ச்சியில், ஒவ்வோர் அறைக்கும் சென்று பார்வையிட்டு, பின்பு சாப்பாட்டு அறையில் அமர்ந்து, ஒரு பாட்டில் ஸோடா நீர் கேட்டார். அர்னவாஸ், இதை மட்டுமே பாபா அருந்துவது பழக்கம் என்பதை அறிந்திருந்தும், ஸோடா பாட்டில்களை வாங்க மறந்துவிட்டார். ஹோமாவை இயன்றவரை, விரைவாக வாங்கி வருமாறு கூறி அனுப்பினார், ஆனால் துரதிர்ஷ்டவசமாக, பாபா

விரும்பிய தரவகையைக் கண்டுகொள்வதில் சிரமம் இருந்ததால், திரும்பி வர சிறிது நேரம் ஆனது.

பாபா மீண்டும் அர்னவாஸிடம் ஸோடா நீர் கேட்டபோது, அவர் படபடப்புடன் பார்த்து, அதை வாங்க மறந்துவிட்டதாக விளக்கினார். பாபா, **"குடியிருப்பைப் புதுப்பிக்க முழுக்க ரூ.7,000 செலவு செய்தீர்கள், எனக்கு இரண்டு அணா மதிப்புள்ள ஸோடா நீர் வாங்க நினைவில்லையா?" 'குருநாதரைப் பொறுத்தவரை பெரியது, சிறியது என எதையும் அலட்சியப்படுத்தக் கூடாது'** என்று கூறியது அர்னவாஸுக்கு ஒரு பாடமாக இருந்தது.

அதே நாளில், பாபா, அர்னவாஸிடம், **"உங்கள் குடியிருப்பில் ஏன் இவ்வளவு பணம் செலவு செய்தீர்கள், நான் இனி ஒருபோதும் மும்பைக்கு வரப் போவதில்லை,"** என்று கூறினார்.

அர்னவாஸ் உடனே, "பாபா, நீங்கள் இப்போது இங்கே இருக்கிறீர்கள், அதுதான் எங்களுக்கு முக்கியம்" என்றார்.

பாபா தமது மும்பை அன்பர்களில் சுமார் 1,000 பேருக்கு 1959 மார்ச் 8 ஞாயிற்றுக்கிழமை அன்று ஆஷியானாவில் தரிசனம் வழங்கினார். முந்தைய நாள் அஹமதுநகரிலிருந்து நீண்ட, வெப்பமான காலநிலையில் பயணம் மேற்கொண்டு, இரவில் போதிய தூக்கம் இல்லாத போதிலும், அவர் அனைவரையும் உற்சாகமாக அரவணைத்தார். பெரும்பாலானவர்கள் அவரது நீண்டகால அன்பர்கள் ஆதலால், பாபா அவர்களுடன் நகைச்சுவையாகப் பேசினார்; தொடர்ந்து நிகழ்ச்சி முழுவதும் மகிழ்ச்சி ஆரவாரம் நிலவியது.

அன்று கிஷின்சந்த் கஜ்வானி, ஸொராப்ஜி ஸிகன்போரியா இருவரும் ஹாஸ்மான் ஹாலில் (HASMAN HALL) பாபாவிற்கு முன்பாகப் பாடுவதற்கு நான்கு பிரபலமான கவாலி பாடர்களின் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தனர். மாலை 3:00 மணிக்கு பாபா மண்டலியுடன் மண்டபத்தை வந்தடைந்தபோது, முதல் குழு இசை நிகழ்ச்சியைத் தொடங்கியது. பாபா அதை ரசிக்காமல் அவர்களைத் தேநீர் அருந்த அனுப்பி வைத்தார்.

இரண்டாவது குழு இசை நிகழ்ச்சியைத் தொடங்கிய ஐந்து நிமிடங்களுக்குப் பின்னர் அவர்களும் நிறுத்தப்பட்டனர். மூன்றாவது மற்றும் நான்காவது குழுக்களும் அதே துரதிர்ஷ்டத்தை சந்தித்தன; எந்தக் குழுவுடனும் பாபா மகிழ்ச்சியடையவில்லை. அவர் கஜ்வானி, ஸிகன்போரியா இருவரிடமும் கேட்டார், **"என்ன இது? இவர்களில் ஒரு குழுவின் நிகழ்ச்சி கூட என் மனதிற்கு உகந்ததாக இல்லை."**

அதற்கு அவர்கள், "பாபா, இந்த நான்கு கவாலி குழுக்களும் மும்பை முழுவதும் பிரபலமானவர்கள்" என்று பதிலளித்தனர்.

"அவர்கள் மும்பையில் பிரபலமாக இருக்கலாம், ஆனால் நான் இதயத்திலிருந்து பாடுவதை விரும்புகிறேன்!"

இந்த நேரத்தில் 1955ஆம் ஆண்டு, மெஹராபாத்தில் பாபாவின் முன் இசை நிகழ்ச்சி வழங்கிய ஐந்தாவது கவாலி இசைக்கலைஞர்கள் அங்குத் தோன்றினர். பாபா அவர்களின் பாடலை மிகவும் ரசித்தார். பிற நான்கு குழுக்களும் தங்கள் 'கலை'யில் பெருமிதம் அடைந்து, பார்வையாளர்கள் கூட்டத்தில் அமர்ந்திருந்தனர். பாபா, இடையிடையே எப்போதேனும் அவர்களைப் பார்த்தது, இறைவன் முன்னிலையில் பாடுவதற்கு திறமையைத் தவிர, வேறு ஏதோ ஒன்று தேவை என்பதை அவர்களுக்கு உணரச் செய்தது.

நிகழ்ச்சிக்குப் பிறகு, பாபா கஜ்வானி, ஸிகன்போரியா இருவரிடமும், **'நான்கு கவாலி குழுக்களையும் ஏமாற்றமடையச் செய்யாமல், முழுத் தொகையைச் செலுத்திவிடுமாறு'** அறிவுறுத்தினார்.

மார்ச் 9ஆம் தேதி கொவ்வூரை சேர்ந்த கோடூரி கிருஷ்ணாராவ், ஆஷியானாவில் பாபாவை சந்திக்க குடும்பத்துடன் வந்திருந்தார். அவர் பல நாட்கள் மும்பையில் தங்கியிருந்து, மெஹர்ஸ்தானில் நிறுவுவதற்கான பாபாவின் சிலையை உருவாக்கும் சிற்பி பி.வி. தலிமிடம் (B.V. TALIM) அனைத்து விவரங்களையும் விவாதித்து முடிவு செய்தார். அடுத்த நாள், இந்திய சுதந்திரப் போராட்ட வீரரும் உத்தரப்பிரதேசத்தின் முன்னாள் ஆளுநருமான கே.எம். முன்ஷி (K.M. MUNSHI), அவரது மனைவியுடன் தரிசனத்திற்கு வந்தார். பாபா அவரிடம் கூறினார், **"கடவுளை உள்ளூர அனுபவிப்பது கடினம் மட்டுமின்றி, தனித்தன்மை மிக்கது, ஏனெனில் பார்ப்பவரும் பார்க்கப்படுபவரும் ஒரே ஏக இறைவனே!"**

1959 மார்ச் 10 முதல் 14 வரை ஐந்து நாட்களுக்கு, பாபா தினமும் ஒன்பது மணி முதல் நண்பகல் வரை, ஆஷியானாவில் தரிசனம் வழங்கினார். ஒவ்வொரு காலையிலும் ஏராளமான மக்கள் அவரவர் தரிசனத்திற்கான வாய்ப்பை எதிர்நோக்கிக் காத்திருந்தனர்; அடுக்குமாடி குடியிருப்பில் அமைந்த பொது முகப்பு அறை மற்றும் படிக்கட்டுகள் வரை திரள் திரளாக மக்கள் நின்றனர். பெரும்பாலான மக்கள் இதற்கு முன் பாபாவை சந்தித்ததில்லை. ஜகத் முராரி (JAGAT MURARI, 34), இந்தியாவின் 'திரைப்பட' பிரிவைச் சேர்ந்த குறும்படத் தயாரிப்பாளர், முதல் முதலாக வந்தவர்களில் ஒருவர். 10ஆம் தேதி காலை 9:30 மணிக்கு, முதல் முறையாக பாபாவை சந்தித்தார். ஆன்மீகத்தில் ஆழ்ந்த ஆர்வம் மிக்க முராரி, பாபாவைப் பற்றி அவருடைய நண்பரும் வழிகாட்டியுமான 'எஸ்ரா மிர்' (EZRA MIR) மூலமாக அறிமுகமானவர். முராரி பின்பு பூனாவிற்கு குடிபெயர்ந்து, ஜால்பாயுடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார். அவரும் அவரது குடும்பத்தினரும் குருபிரசாத் மாளிகையில் பாபாவை சந்தித்தனர்; அதைத் தொடர்ந்து முராரி, மற்றுமொரு தருணத்தில் பாபாவை மெஹராஸாத்தில் காணொளித் திரைப்படம் எடுத்தார்.

48 வயதான அர்ஸுலா ஸில்வியா ஹெல்மன் (URSULA SYLVIA HELLMAN) என்ற அமெரிக்க பெண்மணியும், மார்ச் 10ஆம் தேதி பாபாவை சந்தித்தார். பெர்லின் (BERLIN) நகரில் பிறந்த ஸில்வியா திருமணம் செய்து கொண்டார்,

ஆனால் யூதர்களுக்கு உதவியதற்காக அவரது கணவர் ஜெர்மனியின் 'கஸ்டாபோ (GESTAPO) இரகசிய காவல்துறை'யால் கொல்லப்பட்டார். ஸில்வியா ஹெல்மன் ஆன்மீகத்தில் ஆர்வத்தை வளர்த்துக் கொண்டு, 1955இல் சுவாமி ஷிவானந்தாவுடன் ரிஷிகேஷில் ஆறு மாதங்களைக் கழித்தார். அவர் 1956இல் சந்நியாசியாக தீட்சை பெற்ற முதல் மேற்கத்திய பெண்மணி, சுவாமி ஷிவானந்த ராதா என்ற பெயரில் அழைக்கப்பட்டார். 1959இல், அவர் இமயமலைக்குத் திரும்பிச் சென்று கொண்டிருந்த வேளையில், அர்னவாஸ் அவரை ஓர் அங்காடியியில் தற்செயலாக சந்திக்க நேர்ந்தது. உரையாடலின் இடையே, 'இக்காலத்தில் வாழும் கிறிஸ்துவை சந்திக்கும் ஆர்வத்தில்' அவரைத் தனது குடியிருப்பிற்கு அழைத்துச் சென்றார்.

ஸில்வியா ஹெல்மன் பின்பு பாபாவை சந்தித்ததைப் பற்றி எழுதினார்:

மெஹர் பாபா என்னை அருகில் வருமாறு சைகையால் அழைத்த போது, அந்த கணம் வந்தது. நானும் அவரைப் பணிந்து வணங்கினேன். நான் தெய்வீக இயல்பு என்று மட்டுமே கருதக்கூடிய அன்பின் அற்புதமான வெளிப்பாட்டைக் கண்ட பின்னர், என்னால் எதுவும் செய்ய முடியவில்லை.

நான் கடல் கடந்து வெகு தொலைவிலிருந்து வந்த அந்நியன், வேறு கலாச்சாரத்தைச் சேர்ந்த பெண். மெஹர் பாபா என்னை அருகில் அழைத்து, சில நொடிகள் எனது கண்களை மிகவும் ஆழமாகப் பார்த்தபோது, அது நித்தியத்தின் வெளிப்பாடாக எனக்குத் தோன்றியது. அவரது கண்கள் இரண்டு பெரிய சூரியன்களைப் போல் ஒளிர்ந்ததால், நான் அவருடைய ஆசீர்வாதத்தை அடையப் பெற்றேன், அவருடைய அழகான புன்னகை ஆழ் இதயத்திலிருந்து வந்தது.

இந்தத் தீவிரத் தன்மையைத் தவிர, வேறு எதையும் என்னால் பார்க்க முடியவில்லை; மானிடன், மனிதன் அனைத்தும் மங்கி மறைந்து போயின... பாபாவின் கண்களில் நான் கண்ட அன்பின் அழகிய ஒளியின் தாக்கம் அளப்பரியதாக இருந்தது; இதர அனைத்தும் (சுற்றுப்புற சூழல்கள்) கிட்டத்தட்ட அழிக்கப்பட்டன.

1959 மார்ச் 12 அன்று நள்ளிரவில், காடேக்கர் தனது 55வது வயதில் பூனாவில் காலமானார் என்ற செய்தி வந்தது. அவரது இதயத் துடிப்பு நின்ற அந்த நேரம் வரை, அவர் படுக்கையில் அமர்ந்து, பாபாவின் பெயரை உச்சரித்துக் கொண்டிருந்தார். அன்று காலை டாக்டர் டான் அவரைப் பார்க்க வந்திருந்தார். பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்: **"காடேக்கர் எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்று எனக்குத் தெரியும்; இறுதி மூச்சில் என் பெயரை உச்சரித்தவர். அவர் என்றென்றும் என்னிடம் வந்திருக்கிறார்."**

பாபா இந்தத் தொலைத்தந்தியை குணாதாய்க்கு அனுப்பினார்:

காடேக்கர் மிக்க அன்பானவர்,

இப்போது அவர் என் அருகில் வந்துவிட்டார்.

அஞ்ச வேண்டாம் என அனைவருக்கும் தெரிவிக்கவும்;

ஆனால் என்னை மகிழ்ச்சி ஆரவாரத்துடன் நேசிக்கவும்.

பாபா மேலும் கூறினார்: **"காடேக்கர் எனது சகவாசத்தை நித்தியமாக அனுபவிப்பதில் மகிழ்ச்சியாக இருங்கள்."**

1955 சகவாசத்திற்குப் பிறகு காடேக்கர், பாபாவிடம் அவரை மண்டலியில் ஒருவராகத் தங்க அனுமதிக்கும்படி கேட்டுக் கொண்டதற்கு பாபா, சில ஆண்டுகளுக்குள், **"என்றென்றும் என்னுடன் இருக்க உங்களை அழைப்பேன்!"** என்று உறுதியளித்தார். பாபா தனது வாக்குறுதியை நிறைவேற்றினார் - ஆனால் காடேக்கர் எதிர்பார்த்த விதத்தில் அல்ல.

காடேக்கரின் இறுதி நாட்களில், பூனா பஜனைக் குழுவினர் அவருக்கு பஜனை பாடி, வலியில் துவண்ட நீண்ட இரவுகளில் அவருக்கு உதவினர். இந்தத் தம்பதியின் ஒரே மகனான திகம்பர், பாபாவின் அறிவுறுத்தலின்படி, ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் அமெரிக்கா சென்றிருந்தார். அவர் அங்கேயே தங்கி படிப்பைத் தொடரவும், **'உங்கள் தந்தையார் என்னிடம் வந்திருப்பதில் மகிழ்ச்சியாக இருங்கள்'** என்றும் பாபா தொலைத்தந்தி அனுப்பினார்.

13ஆம் தேதி ஆஷியானாவில் பிளீடர், பாபாவை சந்தித்தபோது, பாபா, **"காடேக்கர் போய்விட்டார். நான் அவரை விடுவித்துவிட்டேன்"** என்று குறிப்பிட்டார்.

பிளீடருக்கும் உடல்நிலை சரியில்லை, ஆனால் பாபா அவரிடம், **"நீங்கள் அனுபவிப்பது நான் படும் எல்லையற்ற துன்பத்தின் ஒரு குறுகிய பகுதிதான். நான் துன்பப்பட்டாலும், இரவும் பகலும் பிரபஞ்சத்திற்காக உழைக்கும் அதே வேளையில், உங்கள் அனைவரையும் அரவணைத்து, கவனித்துக் கொள்ள வேண்டும்"** என்று கூறினார்.

பாபா, பிளீடரின் தற்போதைய துன்பத்தை இன்னும் நான்கு மாதங்கள் தாங்கும்படி கூறினார். **"நான் கவலைப்படாமல் இருக்கும் அளவுக்கு எனக்கு தைரியம் இல்லை"** என்று பாபா அன்று கூறினார், **"எல்லாவற்றையும், நன்மை தீமையையும் நான் கவனித்துக் கொள்ள வேண்டும்."**

வடாலாவில் (WADALA) அமைந்த கத்தோலிக்க ஸெயின்ட் ஜோஸஃப் உயர்நிலைப் பள்ளிக்கு (CATHOLIC SAINT JOSEPH HIGH SCHOOL) வருகை தருமாறு பாபாவை முதல்வர், தந்தை ரெகோ (FATHER REGO) அழைத்திருந்தார். ஒர்லியில், பார்வையற்றோருக்கான என்.எஸ்.டி தொழில்துறை இல்லத்திற்கும் (N.S.D. INDUSTRIAL HOME FOR BLIND IN WORLI) வருமாறு பாபாவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. 1959 மார்ச் 13 வெள்ளிக்கிழமையன்று, பாபா இரண்டு நிறுவனங்களுக்கும் விஜயம் செய்தார். டாக்டர் அலு கம்பட்டா, ஸெயின்ட் ஜோஸஃப் உயர்நிலைப் பள்ளியின் ஹோமியோபதி ஆலோசகராக இருந்தார், மேலும் அவர் மூலம் பாபாவைப் பற்றி தந்தை ரெகோ அறிந்து கொண்டார்.

பாபாவைப் பார்த்ததும், தந்தை ரெகோ பிரமித்துப் போனார், மேலும் 1400 பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு பாபாவை அறிமுகப்படுத்த அவர் தவறிவிட்டார். எனவே அலு, பதட்டத்துடன் அறிமுகம்

செய்யும் விதத்தில், பாபாவைப் பற்றி சில வார்த்தைகளைக் கூறுமாறு எரச்சிடம் கேட்டுக்கொண்ட போது, எரச் இவ்வாறு கூறினார்:

மெஹர் பாபா என்ற பெயரின் உண்மையான அர்த்தம் இரக்கமுள்ள தந்தை - ஆனால் அவர் அதைவிடவும் அதிகமாக, எல்லா நிலைகளிலும் இருப்பவர். எனவே நீங்கள் அவரை உங்கள் நண்பராக அல்லது சகோதரராக, உங்கள் தாயாக அல்லது தந்தையாக, உங்களின் கடவுளாகவும் அல்லது இவை அனைத்தாகவும் எடுத்துக் கொள்ளலாம் - ஏனெனில் நீங்கள் அவரை எப்படி எடுத்துக்கொள்கிறீர்களோ அவை அனைத்திலும், அனைவரிடத்திலும் அவர் இருக்கிறார்.

பள்ளிச் சிறுவனாக இருந்த எனக்கு, எப்பொழுதும் சில புகழ்பெற்ற வருகையாளர்கள் எங்கள் பள்ளிக்கு வருகை தருகிறார்கள் என்பதை அறிவது எவ்வளவு உற்சாகமாக இருந்தது; மேலும் அவர் எதைப் பற்றி பேசுவார் என்று தவிர்க்க முடியாமல் யோசித்தேன். இப்போது இங்கே பேசாத ஒரு வருகையாளர்! அவர் உங்களுக்கு வார்த்தைகளை அல்ல, அன்பை வழங்க வந்துள்ளார். அவர் உங்களுக்கு உபதேசம் செய்ய அல்ல, ஆனால் உங்களை ஆசீர்வதிப்பதற்காக, உங்களுக்குக் கற்பிக்க அல்ல, உங்களை எழுச்சியுறச் செய்வதற்காக வந்துள்ளார். அவர் உங்களுடன் கைகளைக் குலுக்குவதில்லை, ஆனால் கருணையுள்ள தந்தையாக உங்களை அரவணைக்கிறார். இந்த நாளை நீங்கள் உண்மையிலேயே அடையப் பெற்றதன் முக்கியத்துவத்தை நீங்கள் ஒரு நாள் உணர்வீர்கள்.

அதைத் தொடர்ந்து பாபா கூறினார்: "1400 **மாணவர்களையும் மற்றும் பிறரையும் சந்தித்து ஒவ்வொருவருக்கும் அவரது அரவணைப்பைக் கொடுப்பதன் மூலம், அன்பான கடவுளின் மனித வடிவத்தை இதைவிட மனிதமயமாக்க முடியாது. நீங்கள் இப்போது மிகவும் இளமையாக இருக்கிறீர்கள், அவருடைய தெய்வீக ஸ்பரிசத்தின் தூய்மையைப் அடையப் பெறுவதற்கான அப்பாவித்தனமும், ஏற்றுக்கொள்ளும் தன்மையும் உங்களிடம் உள்ளன.**"

ஒவ்வொரு சிறுவனும், சிறுமியும் பாபாவைக் கடந்து சென்ற வேளையில், அவர்களைத் தழுவி இனிப்புகளை வழங்கினார். பாபா ஒரு சிறுவனிடம் மட்டும் அவனுடைய பெயரைக் கேட்டார். சிறுவனுக்கு ஓர் அசாதாரண பெயர் இருந்தது, "எனது பெயர் கிறிஸ்து" என்று சிறுவன் பதிலளித்தான்.

இரண்டு மணி நேர நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ததற்காக, பாதிரியாரிடம் தனது திருப்தியை வெளிப்படுத்திய பாபா கூறினார்: "**இறைநிலையை அடைந்தவர், மனித இதயத்தில் இறை அன்பின் விதையை விதைக்க முடியும், பின்பு விதை முளைத்து, ஆழமாக வேரூன்றி, மொட்டுகளாகத் தோன்றி, பின்பு பூக்களாக மலரும்; இதன் மூலம் தனிநபரின் முழு வாழ்க்கையும் நறுமணம் மிக்கதாக மாற்றப்பட்டு, ஒருவரை மனிதகுலத்திற்கு தன்னலமின்றி சேவை செய்யத் தூண்டுகிறது.**" (தந்தை ரெகோ மீது பின்னர் ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது, ஆனால் அனைத்து

குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டதற்கு பாபாவின் ஆசீர்வாதமே காரணம் என்று நம்பினார்.)

அதைத் தொடர்ந்து பாபா கண்பார்வையற்றோர் இல்லத்திற்கு விஜயம் செய்வதற்காக, மும்பை புறநகர்ப் பகுதியான ஒர்லிக்குச் சென்றார். இளம் உள்வாசிகள் அவரை அன்புடன் வரவேற்றனர். அனைவரின் சார்பாகவும் பயபக்தியுடன் பேசிய இளம் பார்வையற்ற சிறுவர்களில் ஒருவர் பாபாவை உருக்கமாக வரவேற்றார்.

ஒவ்வொருவரும் பாபாவிடம் ஒரு சிறிய ரோஜாவைக் கொடுத்தபோது, அவர் ஒவ்வொருவரையும் தழுவினார். அன்பின் ஆதாரமான, ஆனால் அவர்களின் பௌதீக கண்களால் காண முடியாத இறை மனிதரின் அருகில் அனைவரும் சென்றனர். அவர்கள் மீதான பாபாவின் ஆழங்காண முடியாத அன்பு வெளிப்படையானது, உண்மையிலேயே அவர்களின் ஆழ் இதயங்களைத் தொட்டது; கண்கள் பார்வையற்றவையாக இருந்தும், பாபாவின் அரவணைப்பும், ஸ்பரிசமும் அவர்களது கண்களில் கண்ணீரை வரவழைத்தன. ஒவ்வொரு பார்வையற்ற குழந்தைகளின் முகமும், பாபா, அவர்களை ஆரத் தழுவியதும், இதய ஒளியின் பிரகாசத்தால் மலர்ந்தது.

ஒரு நபர் 'அவர் ஏன் பார்வையற்றவராக இருக்கிறார்?' என்று பாபாவிடம் கேட்டார்; 'முற்பிறவியில் அவர் செய்த சில தீய செயல்கள் அதற்குக் காரணமா?' என்று கேட்டதற்கு பாபா பதிலளித்தார்: **"ஒரு விதத்தில் உலகின் தீமைகளையும், துன்பங்களையும் பார்க்க முடியாததில் நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி. அனைவரும் குருடர்களே. நீங்கள், பார்க்க முடியும் என்று நினைப்பவர்கள் கூட உண்மையில் குருடர்கள், ஏனெனில் அவர்கள் உண்மை இல்லாததை மட்டுமே காண்கிறார்கள்.**

"நீங்களும் உண்மையானதை காணவில்லை - அவ்வாறு செய்ய வேண்டும் என்ற உங்கள் ஆர்வம் ஒன்றுதான் உங்களைப் பிணைக்கிறது. எனவே, உடலளவிலான பார்வையைக் கேட்காதீர்கள், ஆனால் பார்ப்பதற்கு உகந்த 'உளதாயிருக்கும் ஒரே உண்மைப்பொருளை'ப் பார்க்கச் செய்யும் 'உண்மையான பார்வை'யை உங்களுக்கு வழங்குமாறு கேளுங்கள். எப்பொழுதும் எனது பெயரை உதடுகளில் மொழியுங்கள். என்னை இடைவிடாது நினைவுகூருங்கள். உங்கள் அனைவருக்கும் என் அன்பையும் ஆசீர்வாதத்தையும் வழங்குகிறேன்."

பாபாவின் விருப்பத்திற்கிணங்க, பாபாவைப் பற்றியும், மனிதகுலத்திற்கான இறை அன்பு மற்றும் ஏக இறைவனான உண்மைப்பொருளைப் பற்றிய அவரது செய்தியை, புக்கார் சுருக்கமாக எடுத்துரைத்தார். கண் பார்வையற்றவர்கள் எப்படி துணிமணிகளை நெசவு செய்கிறார்கள், மூங்கில் கூடைகள் மற்றும் நாற்காலிகள் செய்கிறார்கள் என்பதை பாபாவிற்குக் காட்டினர், மேலும் அவருக்காக இசைக்குழு ஒன்று நிகழ்ச்சிகளை வழங்கியதைக் கேட்டு, பாபா மிக்க மகிழ்ச்சியடைந்தார். கௌரவ

செயலாளர் கேப்டன் ஹெச்.ஜே.எம். தேசாய் (CAPTAIN H.J.M. DESAI), பாபா அங்கு வருகை தந்து ஆசிர்வதித்ததற்கு நன்றி தெரிவித்தார். பாபா, உரத்த ஆரவாரங்களுக்கு மத்தியில், மாலை 6:00 மணியளவில் ஆஷியானாவிற்குத் திரும்பிச் சென்றார்.

அவதார் மெஹர் பாபா அறக்கட்டளையை உருவாக்குவதற்கான திட்டங்களின் வரைவுகளைத் தயார் செய்யும் இந்த நேரத்தில், ராம்ஜூ மும்பையில் இருந்தார்; இது விரைவில் அறக்கட்டளையாக பதிவு செய்யப்பட இருந்தது. அவர் தங்கியிருந்த காலகட்டத்தில், பாபாவின் அறிவுறுத்தல்களின்படி, பாபாவின் இரகசிய புத்தகத்தின் (1925-26இல் அவரது கையால் எழுதப்பட்டது) தொகுப்புகளை ராம்ஜூ மும்பை வங்கியிலிருந்து அகற்றினார் என்று நம்பப்படுகிறது. அவர் அதை பாபாவிடம் ஒப்படைத்ததாகக் கூறப்பட்டாலும், பாபா அதை என்ன செய்தார் அல்லது அதற்குப் பின்னர் என்ன ஆனது என்பது எவருக்கும் தெரியவில்லை.

1959 மார்ச் 15 ஞாயிற்றுக்கிழமை மதியம் 2:00 மணிக்கு, பாபா மும்பையிலிருந்து பூனாவிற்குப் புறப்பட்டார். அர்னவாஸிடம் அவர் கூறியதற்கு இணங்க, ஒரு வாரத்திற்கான அவரது மும்பை வருகை, அவரது இறுதி வருகையாக இருக்கும். அதன் பின்னர், ஒவ்வோர் ஆண்டும் பாபா பூனாவிற்குச் சென்று, கோடையின் மூன்று மாதங்களை குருபிரசாத்தில் கழிப்பதை வழக்கமாகக் கொண்டார்; எஞ்சிய ஒன்பது மாதங்களையும் மெஹராஸாத்தில் கழித்தார். இந்த நடைமுறை வழக்கம் இறுதி வரை நீடித்தது.

மார்ச் 15 அர்னவாஸின் பிறந்தநாள். அதற்கு முந்தைய நாள், பாபா, பூனா புறப்பட திட்டமிட்டிருந்தாலும், அர்னவாஸின் பிறந்த நாள் காரணமாக, 15ஆம் தேதி மதிய உணவுக்குப் பின்பு புறப்படுவதாக முடிவு செய்தார். அன்று அர்னவாஸ் மண்டலிக்கு உணவு பரிமாறுவதில் மும்முரமாக இருந்தார். பாபா முன் அறையில் நாற்காலியில் தனியாக அமர்ந்திருந்தார். அவரைப் பார்த்த அர்னவாஸ், அவருக்கு ஏதாவது வேண்டுமா என்று விரைந்தார். "**இல்லை**," என்று பாபா பதிலளித்தார்.

"பாபா, நீங்கள் இங்கே தனியாக இருக்கிறீர்கள்" என்றார்.

"**பரவாயில்லை**" என்று அவரிடம் கை சைகையால் தெரிவித்தார். அர்னவாஸ், பாபாவைப் பார்த்துக்கொண்டே நின்றார்; 'ராஜாவைப் போல் அமர்ந்திருக்கிறார்' என்ற எண்ணம் அவர் மனதில் அலை பாய்ந்தது, ஆனால் அவர் சோகமாகத் தோற்றமளித்தார். சிறிது நேர மௌனத்திற்குப் பிறகு, பாபா, "**அர்னவாஸ், நான் மறுபடியும் மும்பைக்கு வரமாட்டேன்**" என்று மீண்டும் சைகையால் தெரிவித்தார்.

இதை பாபா, நரிமனிடம் சொல்லவில்லை, பாபா புறப்படும் போது, நரிமன் அவரைத் தழுவி, "பாபா, விரைவில் திரும்பி வாருங்கள்" என்றார். பாபா தீவிரமாகப் பார்த்து, ஒரு கணம் நின்றார். பின்னர் அவர் வேகமாக சில அடிகள்

பின்னோக்கி நகர்ந்து, மீண்டும் நரிமனைத் தழுவினார். அர்னவாஸ் அதைப் பார்த்துக் கொண்டிருந்தார்; பாபா பின்வாங்கி, மீண்டும் தனது கணவரைத் தழுவி, பாபா 'விரைவில் திரும்பி வர வேண்டும்' என்ற அவரது விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்தார்.

அவர் பூனா செல்வதற்குச் சில நாட்களுக்கு முன்பு, பாபா அந்தத் தம்பதியினரிடம், **"எதுவும் உங்களுடையது அல்ல; அனைத்தும் என்னுடையது. நீங்களே உங்களுடையவர்கள் அல்ல, என்னுடையவர்கள்"** என்று வலியுறுத்திக் கூறினார்.



குருபிரசாத், பூனா (GURUPRASAD, POONA), **1958**

மஹாராணி ஷாந்தாதேவியுடன் மெஹர் பாபா, பூனா, **1959** (MEHER BABA WITH MAHARANI SHANTADEVI, POONA 1959)

குருபிரசாத், பூனா

(**Guruprasad In Poona**)

மும்பையிலிருந்து பாபா, மெஹரா, மணி, கோஹெர் ஆகியோருடன் மெஹர்ஜியின் காரிலும், எரச், பாவ் கல்சூரி, மெஹர்ஜி, பெண்டு ஆகியோர் ஆதியின் காரிலும் பயணம் செய்து (குமார், புக்கார் இருவரும் தனித்தனியாகப் பயணம் செய்தனர்) 1959 மார்ச் 15 அன்று மாலை குருபிரசாத்தை வந்தடைந்தனர்; அடுத்த ஐந்து மாதங்கள் அங்கேயே தங்கப் போவதாகத் திட்டம். பூனா வந்ததும், ஒருமுறை, காடேக்கரின் மனைவி குணாதாய் மற்றும் அவரது மகள் நளினி தாயை பாபா குருபிரசாத்திற்கு அழைத்தார். இருவரும் பாபாவை அணுகிய வேளையில், குணாதாய் கண்கலங்கி அழுதுகொண்டே இருந்தார். ஆறுதலளிக்கும் விதத்தில் பாபா, **"காடேக்கர் என்னிடம் வந்து நித்திய ஆனந்தத்தை அனுபவித்து வருகிறார். அவர் முக்தியடைந்துவிட்டார், ஆதலால் கவலைப்பட எதுவுமில்லை"** என்று உறுதியளித்தார்.

குணாதாய்க்கு ஆறுதல் கூற, பப்பா ஜெஸவாலா தினமும் அவர் வீட்டிற்குச் சென்று குருபிரசாத்திற்கு அழைத்து வருவதை வழக்கமாகக் கொண்டார். பாபா முன்னிலையில் பப்பா, குணாதாயை வெகுவாகப் பாராட்டிப் பேசியதைக் கேட்ட பாபா, **"பப்பா, குணாதாயை மணக்க விரும்புகிறார் போலிருக்கிறது!"** என்று கேலி செய்தது, திடீரென இருவரையும் சிரிக்க வைத்தது; அடுத்த கணமே அங்கு நிலவிய சூழல் மகிழ்ச்சிகரமாக மாறியது. பாபா, குணாதாயின் நிதி விவகாரங்கள் மற்றும் பிற விஷயங்களைப் பற்றி விசாரிக்கவே, இருவரும் மகிழ்ச்சியுடன் வெளியேறினர்.

இதற்கிடையில், கேஷவ் நிகம், ஹமிர்பூர் மாவட்டத்தின் அனைத்து பாபா அன்பர்கள் மற்றும் பக்தர்களும், சத்தியப் பிரச்சாரத்திற்காக, யோகிராஜ் தர்ம துருவா கவுர் (YOGIRAJ DHARMA DHRUWA GAUR) என்ற யோகியால் நடத்தப்படும் யாகத்தில் (புனித இந்து நெருப்பு விழா) பங்கேற்க வேண்டுமா என்று கேட்டு, பாபாவிற்குக் கடிதம் எழுதியிருந்தார்.

கேஷவின் கடிதத்திற்கு பாபா, மார்ச் 18 அன்று எரச் மூலம் இவ்வாறு பதிலளித்தார்:

அவரைப் பற்றிய (யோகி) **அனைத்தும் நான் அறிவேன். அவர் என் இதயத்திற்கு மிகவும் நெருக்கமானவர். அவர் என்னை நேசிக்கிறார், என் இதயத்தின் ஒரு மூலையில் நிலைகொண்டுள்ளார். ஆனால் ஹவன், ஹோமம் போன்ற யாகங்களுக்கும், ஆன்மீகத்திற்கும் என்ன சம்பந்தம்? மெஹர் பாபா, அவதார புருஷர் எனும் மகத்துவத்தை நிலைநாட்ட, இத்தகைய யாகங்கள் எவ்வாறு உதவும்? இதுபோன்ற யாகங்கள், அவதார புருஷரின் மகத்துவத்தை நிலைநிறுத்துவதற்கு உகந்த சக்திகளைக் கொண்டிருந்தால், யாகங்கள் 'முத்திரை' பதிப்பதன் மூலம், அவதார**

மஹான்கள் என்று சான்றளித்து, முழுமையாக நிறுவப்பட்டு, சிம்மாசனத்தில் அமர்த்தப்பட்ட அவதாரங்களின் மகிமை தழைத்தோங்கியிருக்கும்!

இக்காலகட்டத்தில் அவதார புருஷராக வருகை தந்த ஆதிகாலத்தவர், யாகங்கள், சடங்கு சம்பிரதாயங்கள் அனைத்தையும் தனது முத்திரையால் வேரோடு அகற்ற வந்துள்ளார். மனிதகுலத்தின் மத்தியில் அவரது வருகையே அனைத்து தியாகங்களின் தெய்வீகத் தியாகமாகும்; அவர் மனித உருவில் இருப்பதே அனைத்து யாகங்கள் மற்றும் சடங்கு சம்பிரதாயங்களைக் கடந்து செல்லும். பூமியில் அவர் வாழும் வாழ்க்கையே, வெளியளவிலான அனைத்தையும் அவரது தெய்வீக முத்திரையால் சிதறடிக்கச் செய்யும் அதே வேளையில், ஒருவரின் அடிப்படை மையமான ஆழ் இதயத்தின் வாயிலைத் திறக்கும்.

ஹமிர்பூரில் வாழும் எனது அன்பான உள்ளங்கள், என் மீதுள்ள அன்பிலும் என் மீதுள்ள நம்பிக்கையிலும் நிலைநிறுத்தப்படுவதற்கு, அவர்களுக்குப் பாடப் பயிற்சி எதுவும் தேவையில்லை. அத்தகைய யாகம் பாபா-பிரியர்களின் அப்பழுக்கற்ற இதயங்களைக் களங்கப்படுத்துதற்கு சமம். யாகங்கள், சடங்கு சம்பிரதாயங்கள், மற்றும் பலவிதமான யோகப் பயிற்சிகள் அனைத்தும், எனது அன்பின் செய்தியைப் பரப்புவதில் பயனற்று போன ஆயுதங்கள். யுகத்தின் அவதார புருஷர் தனது சொந்த படைப்பின் மத்தியில் இறை-மனிதனாக வாழும்போது, அன்பைத் தவிர பிற அனைத்தும் பயனின்றி போய்விடும்.

யாகம் என்ற முறையில் யாகங்களைச் செய்வதற்கு பதிலாக (அதன் மூலம், பசியால் வாடும் உயிரினங்கள், யாகத் தீயில் தேவையில்லாமல் எரிக்கப்படும் பொருட்களை, உண்ணும், பருகும் உரிமையைப் பறிக்கும்) **உங்கள் நண்பன் யோகிராஜ், மிக உயர்ந்த அன்பின் புனித நெருப்பில் தன்னைத் தியாகம் செய்யத் தீவிரமாக நினைத்திருக்க வேண்டும்!**

1959 மார்ச் 22 ஞாயிற்றுக்கிழமை அன்று, பாபா இரண்டு மணி நேரம் குருபிரசாத்தில் தரிசனம் வழங்கினார். அஹமதுநகர் பஜனை குழு பாபாவின் முன்னிலையில் இசை நிகழ்ச்சியை நடத்த அழைக்கப்பட்டனர். பல்வேறு பகுதிகளிலிருந்து பயணம் செய்து, பிற அன்பர்களும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். மூன்று நாட்களுக்குப் பின்னர் 25ஆம் தேதி, பாபா மற்றுமொரு தரிசன நிகழ்ச்சியை நடத்திய வேளையில், பூனா பஜனை குழுவினர் அவருக்கு முன்பாக இசை நிகழ்ச்சி ஒன்றை வழங்குவதற்கான வாய்ப்பை அடையப் பெற்றனர்.

மூன்று நாட்களுக்காக கொல்கத்தாவிலிருந்து பல அன்பர்கள் ஒரு குழுவாக வருகை தந்தனர். அவர்களில் அனில் குமார் ஸர்கார் (ANIL KUMAR SARKAR) மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதியாக பணிபுரிந்த அவரது சகோதரர் பி.கே. ஸர்காரும் (P.K. SARKAR) அடங்குவர்; அவர்கள் பாபாவை முதன்முதலாக சந்தித்து, வெகுவாக ஈர்க்கப்பட்டனர். 1957 பிப்ரவரி மாதத்தில், கொல்கத்தாவில் நடந்த

பாபாவின் பிறந்தநாள் விழாவிற்குத் தலைமை தாங்க அழைக்கப்பட்ட போது, நீதிபதி ஸர்கார், பாபாவைப் பற்றி முதன்முதலில் கேள்விப்பட்டார். பூனாவில் பாபாவை சந்தித்ததை அவர் இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

இந்த மூன்று நாட்களும் முடிவிலா அன்பு, இனிமை, மேன்மை ஆகியவற்றின் விருந்தாக அமைந்ததோடு, மறக்க முடியாத நினைவாகவும் இருந்தது. அவருடைய பரிசுத்தமான ஸ்பரிசத்தையும், அன்பான அரவணைப்பையும், ஆனந்தம் மற்றும் சந்தோஷத்தின் கண்ணீரையும் அடையப் பெற்றபோது, எங்களால் கண்களில் நீர் பெருக்கெடுப்பதைத் தடுக்க முடியவில்லை. உள்ளூர நாம் இறை அன்பின் முன்னிலையில் இருப்பதை உணர்ந்தோம்... அவரது பிரசன்னம், அவரது புனிதமான அரவணைப்பு, அவருடைய தோற்றம், அவருடைய கனிவான புன்னகை, அவருடைய அன்பான சைகைகள் மற்றும் அவரைப் பற்றிய எல்லாமே அன்பைப் பறைசாற்றுகின்றன. பாபாவின் முன்னிலையில் அவர் தெய்வீக அன்பின் திருவுருவம் என்றும், அவரை நேசிப்போம் என்று நாம் நம்புவதை விட, அதிகமாக அவர் நம்மை நேசிக்கிறார் என்றும் உணராமல் இருக்க முடியாது.

குருபிரசாத்தில் பல நாட்கள் தங்குவதற்காக, ஹோஷங் பரூச்சா, கோவாஸ் வெஸுனா (COWAS VESUNA) இருவரும் நவ்ஸாரியிலிருந்து (NAVSARI) அழைக்கப்பட்டனர். அவர்கள் 25ஆம் தேதி வந்தபோது, அவர்களை ஆச்சரியப்படுத்தும் வகையில், அக்டோபர் மாதத்தின் பிற்பகுதியில் மெஹராஸாத்திற்கு அழைப்பதாக உறுதியளித்து, அதே நாளில் நவ்ஸாரிக்குத் திரும்பும்படி பாபா கேட்டுக் கொண்டதற்கு இணங்க, அவர்கள் திரும்பிச் செல்லும் பயணத்தின் போது, வெஸுனா ஜுரத்தால் பாதிக்கப்பட்டார்; மருத்துவரான பரூச்சா, அவர் குணமடைவதற்கு முன்னர் அவருக்குப் பல நாட்கள் சிகிச்சை அளிக்க வேண்டியிருந்தது. பாபா அவர்களைத் திருப்பி அனுப்பியதற்கு இதுதான் உண்மையான காரணம்.

குருபிரசாத்தில் அவதார் மெஹர் பாபா அறக்கட்டளையை உருவாக்குவதற்கான பத்திரத்தில் ராம்ஜு தொடர்ந்து பணியாற்றினார்; குடும்ப சாஸ்திரியின் உதவியுடன் நிபந்தனைகள் மற்றும் பொருத்தமான வார்த்தைகளை முடிவு செய்தார். ஒரு நாள் ராம்ஜு, பாபாவின் முன்னால் தரையில் அமர்ந்து, வரைவு ஆவணங்களை அவருக்கு முன்னால் பரப்பி வைத்து, அவர் பேசுகையில், ஆஸ்துமா காரணமாக அவரது சுவாசம் மிகவும் தடைப்பட்டது. அங்கிருந்தவர்களிடம் பாபா, **"ராம்ஜு எனக்காக எவ்வளவு வேலைகளைச் செய்கிறார். அவரிடமிருந்து நான் எதை விரும்புகிறேனோ, அதை அவர் தனது உயிரைக் கொடுத்தேனும் செய்யத் தவறுவதில்லை. அவரை நான் ஒரே நொடியில் குணப்படுத்த முடியும், ஆனால் நான் அதைச் செய்யவில்லை. இந்த எல்லா பிரச்சனைகளிலிருந்தும் அவர் விடுபடும் காலம் வரும்."**

மார்ச் 26ஆம் தேதி, சாது வாஸ்வானியின் மருமகனும், தலைமை சீடருமான ஜஷன் பி. வாஸ்வானி (JASHAN P. VASWANI) குருபிரசாத்தில் பாபாவை சந்தித்தார். பாபாவிற்கு பாதாம் பருப்புப் பொட்டலத்தைக் காணிக்கையாக வழங்கி, பாபாவின் கோட்டின் மீது வாசனைத் திரவியத்தைத் தெளித்தார்.

1959 ஏப்ரல் 1 புதன்கிழமை அன்று, தினமும் தரிசனம் வழங்குவதற்கு பதிலாக, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9:00 மணி முதல் மதியம் வரை மட்டுமே தரிசனம் வழங்கப்படும் என்றும், மாதம் ஒருமுறை பிற்பகல் நிகழ்ச்சி குடும்பங்களுக்காக நடத்தப்படும் என்றும் பாபா அறிவித்தார். மும்பை அன்பர்கள் இப்போது ஒவ்வொரு வார இறுதியிலும் பூனாவிற்கு வந்து, ஹோட்டல்களில் தங்கி, ஞாயிற்றுக்கிழமைகளில் குருபிரசாத் வரத் தொடங்கினர். நானா கேரைப் போலவே, கோர்ஷெத், அர்னவாஸ் ஆகியோர் குருபிரசாத்தில் பாபா தங்கியிருக்கும் காலம் வரை தங்க அனுமதிக்கப்பட்டனர்.

பள்ளி ஆசிரியரான பால் நாத்து (BAL NATU), கோடை விடுமுறையில் குருபிரசாத்தில் பல வாரங்கள் தங்குவதற்காக அனுமதிக்கப்பட்டார். டாக்டர் தேஷ்முக் கோடை விடுமுறையில் குடும்பத்தினருடன் பூனாவிற்கு வந்து, பட்வர்தன் விடுதியில் (PATWARDHAN LODGE) தங்கியிருந்தார்; கொல்கத்தாவின் டாக்டர் மூர்த்தியும் தினமும் குருபிரசாத்தில் பாபாவை சந்திக்க அனுமதிக்கப்பட்டார். நரிமன், கேட்டி (கோஹெரின் சகோதரி) மற்றும் ஜிம் மிஸ்திரி ஆகியோர் ஒவ்வொரு சனிக்கிழமையும் மும்பையிலிருந்து வந்து, குருபிரசாத்தில் தங்கி, ஞாயிறு மாலைகளில் திரும்பிச் செல்வதை வழக்கமாகக் கொண்டனர்.

டாக்டர் தேஷ்முக், பாபா உட்பட அனைவரின் கேலிக்கும் பாத்திரமாக இருந்தார். ஏப்ரல் முட்டாள் தினத்தன்று குருபிரசாத்தில், பாபா அவருக்கு, வெளியே ஆடம்பரமாகத் தோற்றமளிக்கும் விதத்தில் பரிசுப் பொட்டலம் ஒன்றை வழங்கினார்; அதை தேஷ்முக், பெரு மதிப்பு வாய்ந்த ஒன்றாகக் கருதினார். ஏழு அடுக்குகளில் விதவிதமான வண்ணச் சுருள் காகிதங்களைக் கொண்டிருந்த அந்த மூட்டையை கவனமாக அவிழ்த்துப் பார்த்தபோது, ஒரு சாதாரண பாறைக்கல் உள்ளே இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அனைவரும் சிரிப்பு ஆரவாரம் செய்தனர், ஆனால் தேஷ்முக் அதை, பாபாவின் பிரசாதமாக ஏற்றுக்கொண்டார், மேலும், பாபா மீது என்றென்றும் 'பாறை போன்ற அசைக்கமுடியாத' நம்பிக்கை வைத்திருப்பதற்கான அடையாளமாகவும், நினைவூட்டலாகவும் எடுத்துக்கொண்டார்.

பூனா கிரிக்கெட் சங்கத்தின் செயலாளர் எம்.ஜி. பாவே (M.G. BHAVE), வரவிருக்கும் விளையாட்டுப் போட்டிக்காக இங்கிலாந்து செல்லவிருக்கும் பதினேழு இந்திய கிரிக்கெட் வீரர்கள் கொண்ட அணிக்கு, பாபாவின் தரிசனம் மற்றும் ஆசிர்வாதத்தை வழங்குமாறு கோரினார். ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் தரிசனம் வழங்கும் வழக்கத்திற்கு விதிவிலக்கு அளித்த பாபா, 1959 ஏப்ரல் 2 வியாழன் அன்று காலை 9:00 மணிக்கு, கிரிக்கெட் அணியை சந்திக்க

ஒப்புக்கொண்டார். அன்று சரியாக காலை 9:00 மணிக்கு, குருபிரசாத் முன் அறையில் பாபா தயாராக இருந்தார்; ஆனால் அதே நாளில் கிரிக்கெட் வீரர்கள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதால், அவர்கள் தாமதமாக வந்தனர்.

பத்திரிக்கை பிரதிநிதிகளும் வர அனுமதிக்கப்பட்டனர், அவர்கள் பாபாவிடம் சில கேள்விகளைக் கேட்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டனர். பாபா அவற்றை வரவேற்கும் மனநிலையில் அவர்களுக்கு பதிலளித்தார். அவர் தனது குழந்தைப் பருவத்தைப் பற்றி அவர்களிடம் கூறினார்:

எல்லா விளையாட்டுகளிலும், நான் கிரிக்கெட்டை மிகவும் விரும்புகிறேன். நான் சிறுவனாக கிரிக்கெட் விளையாடினேன். நான் இலக்குமுனைகளுக்குப் பின்னால் சிறப்பாக விளையாடினேன். நான் பயின்று வந்த ஸெயின்ட் வின்ஸெண்ட் உயர்நிலைப் பள்ளியின் ஜூனியர் கிரிக்கெட் அணியில் உறுப்பினராக இருந்தேன், மூத்த அணியிலும் இலக்குமுனை காப்பாளராகத் (WICKET KEEPER) **தேர்ந்தெடுக்கப்பட்டேன். சிறுவயதிலிருந்தே எனது பள்ளித் தோழர்களால் நான் எப்பொழுதும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன், மாணவர்களிடையே சூடான வாக்குவாதம் அல்லது பூசல் ஏற்படும்போதெல்லாம், மோதும் கட்சிகளுக்கு இடையில் நான் நடுவராக எப்பொழுதும் இருந்தேன்.**

நான் குழந்தையாக இருந்தபோது, குழந்தைகள் என்னால் கவரப்பட்டனர். நான் வளர்ந்த பிறகு, கடவுளாக நான் ஈர்க்கப்பட்டேன். நான் கடவுளுடன் ஒன்றிணைந்தபோது, உலகம் முழுவதும் உள்ள மக்கள் என்னால் ஈர்க்கப்பட்டனர்.

ஸெயின்ட் வின்ஸெண்ட்டிலிருந்து, நான் டெக்கன் கல்லூரிக்குச் சென்றேன்; அங்கேயும் நான் பல போட்டிகளில் பங்கெடுத்தேன். ஒருமுறை பூனா கிளப் மைதானத்தில் கிரிக்கெட் போட்டி நடந்து கொண்டிருந்தது. அந்த நாட்களில் புகழ்பெற்ற பன்முக ஆற்றல்மிக்க (மிர்ஸா) யூஸுப் பெய்க், பந்தை அடிப்பவராக விளையாடிக் கொண்டிருந்தார். இலக்குமுனைகளை சிறப்பாக பாதுகாக்கும் எனது திறமையை யூஸுப் அறிந்திருந்தார்; அப்போது அவரை 'வெளியேற்ற' எனக்கு சவால் விடுத்தார். அவருடைய சவாலை நானும் ஏற்றுக்கொண்டேன். யூஸுப் முதல் நான்கு பந்துகளை மிகவும் கவனமாக விளையாடினார், ஆனால் ஐந்தாவது பந்தை அடிக்க அவர் தனது இடத்தை விட்டு சற்று வெளியேறவே, நான் வீசிய பந்து அவரது இலக்கு முனையைச் சிதறடித்து, அவரை வெளியேற்றியது. சவாலில் வெற்றி பெற்ற என்னை யூஸுப் பெய்க் வாழ்த்தினார்.

இப்போதெல்லாம் நான் விளையாட்டுகள் விளையாடுவதில்லை என்றாலும், குறிப்பாக கிரிக்கெட் பார்ப்பதில் ஆர்வம் அதிகம். மஹாராஷ்டிரா கிளப் அல்லது டெக்கன் ஜிம்கானா அருகில் அமைந்த மைதானத்தை நான் கடக்க நேர்ந்தால், காரை நிறுத்தி, விளையாடுவதைப் பார்க்கிறேன். ஒரு சில முக்கியமான கிரிக்கெட் போட்டிகளை நான் தவறவிட்டிருப்பேன். இந்தியா மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையிலான போட்டியை காண

டெல்லிக்குச் சென்றேன். கடந்த ஆண்டு 'ரஞ்சி கோப்பை' போட்டி வேளையில் நான் அஹமதுநகரில் இருந்தேன். டி.எஸ்.பி. (மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்) நான் பார்வையாளர்களின் ஓய்வறைக்குள் வருவதைப் பார்த்தார். அதற்குள் என்னைச் சுற்றி ஒரு பெரிய கூட்டம் கூடியது. போட்டியைப் பார்க்காமல், அவர்கள் என்னைப் பார்க்க விரும்பியதால், பார்வையாளர்களுக்கு ஏதேனும் இடையூறு ஏற்படாத வண்ணம், நான் சீக்கிரமாகவே கிளம்பிவிட்டேன். கிரிக்கெட் போட்டிகளைப் பார்வையிட வருவதற்கும், மக்கள் மத்தியில் அமர்ந்து விளையாட்டை உன்னிப்பாக கவனிப்பதற்கும் பின்னால் ஒரு பெரிய ஆன்மீக நோக்கம் இருப்பதாக நான் அடிக்கடி விளக்கினேன்.

நான் குழந்தைகளை நேசிக்கிறேன். அவர்களை சந்திக்கும் போது நான் ஒரு குழந்தையைப் போல் ஆகிவிடுகிறேன். அவர்களுடன் கோலி விளையாடுவது, பட்டம் பறக்கவிடுவது, கிரிக்கெட் விளையாடுவது என்றால் எனக்கு அலாதி ஆசை. நான் அடிக்கடி காரில் செல்லும்போது, நேரம் இருந்தால், சிறு குழந்தைகள் மரக்கட்டைகளையும், ரப்பர் பந்தையும் வைத்து கிரிக்கெட் விளையாடுவதைக் காண நேர்ந்தால், காரை நிறுத்தி ஆர்வத்துடன் விளையாட்டைப் பார்ப்பதை வழக்கமாகக் கொண்டேன்.

பாபா தனது குழந்தைப் பருவ நாட்களையும், விளையாட்டின் மீதுள்ள ஆர்வத்தையும் விவரிக்கும் போது, நிருபர்களிடம் கூறினார்: "**நான் கடவுளுடன் ஒன்றானவன், இந்த சந்திப்புப் பற்றிய செய்திகளை, உங்கள் செய்தித்தாள்களில் எழுதும் போது, இவ்வாறு குறிப்பிடுங்கள்: எல்லா நிலைகளிலும் உள்ள எல்லோருடனும், எல்லாவற்றுடனும் ஒன்றாக இருக்கும் ஏக இறைவனான நான், ஒரே நேரத்தில் அனைத்து பாத்திரங்களையும் வகிக்கிறேன்.**"

இவ்வாறு ஏறக்குறைய ஒரு மணி நேரம் சைகைகள் மூலம் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பாபா பதிலளித்தார்.

இறுதியாக, கிரிக்கெட் வீரர்கள் குருபிரசாத் மண்டபத்தில் தோன்றினர். அவர்களில் ஒருவர், இங்கிலாந்தில் சிறப்பாக விளையாடும் வகையில் அணியை ஆசிர்வதிக்குமாறு பாபாவிடம் கேட்டுக் கொண்டார். பாபா கூறினார்: "**உங்கள் முழு இதயத்துடனும், அன்புடனும் என்னை அரவணைத்து, உங்களுடன் என் அன்பை இங்கிலாந்துக்கு எடுத்துச் செல்லுங்கள். நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன். மேற்கிந்திய தீவுகள் அணியுடன் நீங்கள் விளையாடுவதைக் கண்டு பதற்றப்பட வேண்டாம். நீங்கள் ஒருமனதாக, முழு ஆர்வத்துடன் விளையாடினால், என் அன்பு, குறைந்தது ஒரு போட்டியிலேனும் வெற்றி பெற உங்களுக்கு உதவும்; மொத்தத்தில், நீங்கள் மேற்கிந்தியத் தீவுகளுடன் இதுகாறும் விளையாடியதை விட, சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்துவீர்கள். ஆனால் எல்லாமே என் மீதான உங்கள் அன்பைச் சார்ந்தது. என் அன்பை உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள், அது உங்களை சிறப்பாகப் பிரகாசிக்கச் செய்யும்.**"



டாக்டர் சி.டி. தேஷ்முக்
(DR. C.D. DESHMUKH)



நரி கான்ட்ராக்டர், குருபிரசாத், பூனா, 1959.
(NARI CONTRACTOR, GURUPRASAD, POONA, 1959)

பாபா கிரிக்கெட் வீரர்களை அன்புடன் அரவணைத்து, ஒவ்வொருவருக்கும் 'லைஃப் அட் இட்ஸ் பெஸ்ட்' (LIFE AT ITS BEST), ஒரு குறுகிய கையேடு மற்றும் '21 ஃப்ராக்மென்ட்ஸ்' (TWENTI-ONE FRAGMENTS) புத்தகங்களின் நகல்களை வழங்கினார், மேலும் **'நான் சிறந்த பன்முக ஆற்றல் மிக்கவர்'** (I AM THE GREATEST ALL-ROUNDER) என்ற தலைப்பில் பாபா வழங்கிய இந்தச் செய்தியை எரச் படித்தார்:

விளையாட்டுத் துறையில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்த இங்கிலாந்துக்குச் செல்வதில், 'ஒருமித்த கவனம், அன்பு' இவ்விரண்டின் சிறந்த ஆன்மீகப் பாடங்களைப் பயிற்சி செய்வதற்கும், அங்கு வாழும் மக்களுக்கு அவற்றை எடுத்துச் செல்வதற்கும், உங்களுக்கு ஒரு தனித்துவமான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. நீங்கள் களத்தில் இறங்கும் போது, அனைவரும் ஒரே இதயத்துடன், பதினொன்று ஆடவர்களாக விளையாடினால், ஒவ்வொருவரும் மற்றொரு வீரரின் சிறப்பான செயல்திறனை அவரே அனுபவிக்கிறார்; அந்த வீரர் உங்கள் அணியில் இருந்தாலும் அல்லது எதிரணியில் இருந்தாலும் சரி, பொறாமை, கோபம் மற்றும் பெருமை போன்ற உணர்வுகளை அகற்றும் தருவாயில் (இது விளையாட்டை அடிக்கடி பாதிக்கிறது) **- நீங்கள் பார்வையாளர்களை மகிழ்விப்பீர்கள், அதே வேளையில் விளையாட்டுத் திறனின் உண்மையான உணர்வை வெளிப்படுத்துவீர்கள். உண்மையான விளையாட்டுத்திறன் என்பது, ஒருமித்த கவனத்தால் விளையும் திறன், பிறரின் செயல்திறனைப் பாராட்டுவதன் மூலம் உயிர்ப்பிக்கப்படுகிறது. மேலும் இது வெளிப்படும் வேளையில், விளையாட்டு வீரர்கள் மற்றும் பார்வையாளர்கள் என அனைவரும், ஆன்மீக எழுச்சியையும், நல்ல பொழுதுபோக்கையும் அடையப் பெறுகிறார்கள்.**

உங்களில் சிலர் 'பன்முக ஆற்றல்மிக்கவர்கள்'. நான் எல்லா காலத்திலும் சிறந்த ஆன்மீக 'பன்முக ஆற்றல்மிக்கவன்', ஏனெனில் நான் புனிதர்கள், யோகிகள், தத்துவவாதிகள், கிரிக்கெட் வீரர்கள் மற்றும் பாவிகள், கயவர்கள் என்று அழைக்கப்படுபவர்களுடனும் சமமாக உணர்கிறேன். உங்கள் எல்லா செயல்களிலும், நீங்கள் அன்பின் உணர்வை வெளிப்படுத்த என் ஆசீர்வாதத்தை வழங்குகிறேன்.

பாபா மீண்டும் ஒவ்வொரு வீரருக்கும் பிரியாவிடை அளித்துத் தழுவினார். பலர் பாபாவிடம் வியப்புடனும், அறிந்துகொள்ளும் ஆர்வத்துடனும் வந்திருந்தனர். ஆனால் அவரை சந்தித்து, அவருடைய அன்பை அனுபவப்பூர்வமாக அடையப் பெற்ற அவர்கள், அவர் மீதான புதிய உற்சாகத்துடனும், அன்புடனும், மரியாதையுடனும் விடைபெற்றுச் சென்றனர். அவர்களில் இருவர், பாலி ஆர். உம்ரிகர், (POLLY R. UMRIGAR, 33), மற்றும் நரி கான்ட்ராக்டர் (NARI CONTRACTOR, 25), அவரை பக்தியுடன் பின்பற்றுபவர்கள்.

பெண்டுவும் கிரிக்கெட் போட்டிகளை ஆர்வத்துடன் பின்தொடர்ந்து, ஆட்ட நிலவரத்தை வானொலி மூலம் கண்டறிவதில் அக்கறையுடன் இருந்தார்.

இங்கிலாந்தில் போட்டிப்பந்தயங்கள் நடந்து கொண்டிருந்த வேளையில் பெண்டு, பாபாவின் படுக்கையறைக்கு வெளியே வந்து நின்றார். கண்காணிப்புப் பணியில் இருந்த பாவ் கல்சூரியிடம், வெளியே யார் என்று வினவி, பாபா, பெண்டுவை அழைத்தார். அவரது இரு கரங்களையும் கூப்பி பெண்டு, பாபாவிடம், "பாபா, நரி காண்டிராக்டரை (இந்திய அணியின் தலைவன்) போட்டியில் வெற்றிபெறச் செய்யுங்கள்!" இந்த எளிய வேண்டுகோளைக் கேட்டு, பாபா சிரித்துக்கொண்டே, **"நாம் பார்ப்போம்"** என்று பதிலளித்தார்.

"இது பார்ப்பதற்கு ஒரு விஷயம் இல்லை," பெண்டு பிடிவாதமாக இருந்தார், "நீங்கள் அவரை விளையாட்டில் வெற்றியடையச் செய்ய வேண்டும்."

பாபா அதைக் கேட்டு மிகவும் மகிழ்ந்து, பெண்டுவை வெளியேறுமாறு கூறினார். பெண்டு வெளியே சென்ற வேகத்தில், அதே கோரிக்கையுடன் திரும்பி வந்தார். பாபா அவரிடம், **"பார்ப்போம். ஏன் இவ்வளவு கவலைப்படுகிறீர்கள்?"** என்று சைகையால் கேட்டார். பெண்டுவின் பிரார்த்தனைக்கு பாபா செவிமடுத்தார். விலா எலும்பில் காயம் இருந்தபோதிலும், இந்திய அணிக்காக நரி கான்ட்ராக்டர் 84 ஓட்டங்கள் குவித்து அணி வெற்றி பெற்றது.

பாபாவே கிரிக்கெட்டை மிகவும் நேசித்தவராக இருந்தார், குறிப்பாக மிகவும் மும்முரமாக இருந்த ஒரு காலை நேரத்தில், **"அப்பாவி அவதார புருஷர், ஒரு சிறப்பான கிரிக்கெட் விளையாட்டைப் பார்க்க விரும்பும் போதெல்லாம் இதைப் போன்ற அனைத்தையும் செய்ய வேண்டியுள்ளது!"** என்றார்.

1959 ஏப்ரல் 6 அன்று, பாபா, மெஹர்ஜியின் காரில் மெஹராபாத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட வேளையில், அங்கு தேஷ்பாண்டே (DESHPANDE) என்ற துணைப் பதிவாளர் முன்னிலையில், 'அவதார் மெஹர் பாபா அறக்கட்டளை பத்திரம்' (AVATAR MEHER BABA TRUST DEED) மெஹராபாத் மேல்மலையில் காலை 11:45 மணிக்கு பதிவு செய்யப்பட்டது. மேல்மலையில் நடந்த பதிவு விழாவிற்கு, பத்து அறங்காவலர்களும் வருகை தந்தனர். அவர்களில் தலைவராக நியமிக்கப்பட்ட குடும்ப சாஸ்திரி மற்றும் மணி, ராம்ஜூ, ஆதி, மெஹர்ஜி, நரிமன், பெண்டு, விஷ்ணு, பாதிரி, காக்கா ஆகியோர் அடங்குவர். பாபாவால் அங்கீகரிக்கப்பட்ட, அறக்கட்டளைப் பத்திரம், அதன் நோக்கம் மற்றும் குறிக்கோளைக் கோடிட்டுக் காட்டியதுடன், பாபாவை சார்ந்திருக்கும் 41 நபர்களின் ஆதரவிற்கான ஏற்பாடும் செய்யப்பட்டது.

அதே நாளில் காடேக்கரின் அஸ்தி, கீழ் மெஹராபாத்தில் அடக்கம் செய்யப்பட்டது. பாபாவே சாம்பல் நிறைந்த கொள்கலனை கல்லறையில் வைத்து, மண்ணால் மூடி, அதன் மீது மலர்களைத் தூவினார். மண்டலியும் கல்லறைக்கு மாலை அணிவித்து மலர்களைத் தூவினர். பூனாவிலிருந்து அஸ்தியை எடுத்து வந்த குணாதாயை நோக்கி, பாபா, **"காடேக்கர் விடுதலை அடைந்துவிட்டார். அவர் மீண்டும்** (நீண்ட காலத்திற்கு) **பிறவி எடுக்க மாட்டார்; அவர் மிகவும் அதிர்ஷ்டசாலி, நான் எனது கைகளால், எனக்குப் பிரியமான**

ஒருவரின் சாம்பல் நிரம்பிய கொள்கலனை கல்லறையில் வைத்தேன். 700 ஆண்டுகளுக்குப் பின்னர், அடுத்த அவதார புருஷராக நான் திரும்பி வரும்போதுதான் அவர் என்னுடன் வருவார்" என்றார்.

காடேக்கரின் பக்தியை காலம் பாராட்டியது: "உண்மையாகவே, காடேக்கர், பாபாவின் அன்பையும், நோக்கத்தையும் வெளி உலகுக்கு எடுத்துச் செல்ல அயராது உழைத்தார். பல ஆன்மாக்களை அவதார புருஷரின் தொடர்புக்குக் கொண்டு வந்தவர் அவர். பல ஆண்டுகளாக மெஹர் பாபா, காடேக்கரின் தந்தை கன்னோபா ராவ் என்பவரால் தைக்கப்பட்ட பாத அணியை அணிந்திருந்தார். அது இப்போதும் மெஹராபாத்தில் உள்ள அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளது."

மெஹராபாத்திலிருந்து, பாபா மெஹராஸாத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டபோது, அவர், அலோபாவை சந்தித்து, காக்காவுடன் விஷயங்களைப் பரிமாறி, பின்னர், அன்றே பூனாவிற்குத் திரும்பிச் சென்றார். கடுமையான கோடை வெப்பத்தில் பயணம் பாபாவிற்கு மிகவும் கடினமாக இருந்தது; அது அவரது உடல்நிலையை பாதித்தது.

அடுத்த நாள் ஏப்ரல் 7, பூனாவில், திருத்தம் செய்யப்பட்ட 'இறுதி உயில்' (LAST WILL) மற்றும் 'உறுதிச் சான்று' (TESTAMENT) இரண்டையும் பாபா நிறைவேற்றினார் - ஆதி சீனியரின் மறைவுக்குப் பின்னர் அவரது எழுத்து வடிவிலான தொகுப்புகளின் பதிப்புரிமையை 'அறக்கட்டளை'க்கு (TRUST) மாற்றினார். அவரது எதிர்கால சமாதி ஏற்கனவே அறக்கட்டளையின் கீழ் மாற்றப்பட்டது.

7ஆம் தேதி, அவதார புருஷர் (AVATAR) மற்றும் குதுப்களின் (QUTUBS) செயல்பாடு குறித்த நீண்ட, சுவாரஸ்யமான விளக்கத்தை பாபா எடுத்துரைத்தார், அவர் முன்பு கூறிய சில விஷயங்களை விரிவாக விளக்கினார்:

அவதார புருஷர் உலகளாவிய துன்பத்தைத் தம்மீது ஏற்றுக்கொள்கிறார்; ஆனால் அவர் இந்த மிகப் பெரிய அளவிலான பணிச்சுமையை, அவரது எல்லையற்ற பேரின்பத்தாலும், நகைச்சுவை உணர்வாலும் தக்கவைத்துக் கொள்கிறார். அவதார புருஷர், பிரபஞ்சத்தின் மையம் அல்லது 'அச்சாணி', அதைச் சுற்றி முழுப் பிரபஞ்சமும் சுழலும். அவர், அரவைக்கல்லின் மைய முள்ளுடன் ஒப்பிடத்தக்கவர். அவர் தானாகவே, ஒவ்வொருவர் மற்றும் ஒவ்வொன்றிலிருந்தும் சமமான தொடர்பில்/தூரத்தில் இருக்கிறார், இதனால் அனைவருக்கும், அனைத்திற்குமான பொறுப்பை ஏற்று, முழுமையான கடமை உணர்வுடன் செயல்படுகிறார்.

ஒவ்வொரு கணமும் அவதார புருஷர், இந்த உலகளாவிய கடமையின் பல்வேறு மற்றும் எண்ணற்ற அம்சங்களை தனித்தனியாகவும், கூட்டாகவும் நிறைவேற்ற முடிகிறது, ஏனெனில் அவரது செயல்கள், 'நேரம்,

இடம்' மற்றும் 'இங்கே, இப்போது' போன்ற உணர்வுத்திறனால் எந்த வகையிலும் கட்டுப்படுத்தப்படவில்லை.

பௌதீகத் தளத்தில் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட செயலில் ஈடுபடும் போதும், அவதார புருஷர் பிற அனைத்து ஆன்மீக உள் தளங்களிலும் ஒரே நேரத்தில் பணிபுரிகிறார். ஆன்மீக உள் தளங்களில் அவர் பணிபுரிவது, சிரமமற்றது, அதே வேளையில் சுயமாக செயல்படுவது; ஆனால் பௌதீகத் தளத்தில், அதன் பண்படாத, முரடான தன்மையால், அதன் ஒவ்வொரு செயலும், உழைப்பு, முயற்சி இரண்டையும் உள்ளடக்கியதாக உள்ளது. எவ்வாறாயினும், சாதாரண, வரையறுக்கப்பட்ட மனிதர்களின் செயல்களைப் போலல்லாமல், பௌதீகத் தளத்தில் அவதார புருஷரின் ஒவ்வொரு செயலும், எண்ணற்ற, தொலைநோக்கு முடிவுகளை பல்வேறு ஆன்மீக உணர்வுத் தளங்களில் கொண்டு வருகிறது.

விதியின் நியதிப்படி, ஒரு சாதாரண நபரின் ஒவ்வொரு செயலும், ஒரு தனித்த நோக்கத்தால் தூண்டப்பட்டு, ஒரு தனித்த நோக்கத்திற்காக செயல்படுகிறது. அது போலவே, ஒரு நேரத்தில் ஒரு இலக்கை மட்டுமே தாக்க முடியும், ஒரு குறிப்பிட்ட முடிவை மட்டுமே கொண்டு வர முடியும். இருப்பினும், அவதார புருஷரைப் பொறுத்தவரை, ஒரு செயல் அனைத்து நபர்களுக்கும், பொருட்களுக்கும், பலதரப்பட்ட முடிவுகளின் ஒருங்கிணைப்பைக் கொண்டுவருகிறது, ஏனெனில் அவர் ஒவ்வொருவருக்கும், ஒவ்வொன்றிற்கும் மையமாக இருக்கிறார்.

பௌதீகத் தளத்தில் அவதார புருஷரின் செயல், மின்சக்தி மையத்தின் பிரதான மின்விசை இயக்கியின் (ELECTRIC SWITCH) செயல்பாட்டிற்கு ஒப்பானது. சிறப்பாகத் திட்டமிடப்பட்டால், மின்விசை இயக்கியை இணைப்பூட்டச் செய்வது, ஒரே நேரத்தில் பல்வேறு வழிகள் மூலம், மகத்தான சக்திகளை வெளியிட்டு, தேவைக்கு ஏற்ப பலவிதமான மற்றும் பல சேவைகளைச் சார்ந்த கிளைகளை செயல்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக, ஒரே நேரத்தில் பல்வேறு தொழிற்சாலைகள் மற்றும் மின்விசிறிகள், ரயில்கள் மற்றும் தள்ளுவண்டிகள், பல நகரங்கள் மற்றும் கிராமங்களில் பரந்துள்ள லட்சக்கணக்கான மின் விளக்குகள் மூலம் வெளிச்சத்தை வழங்க முடியும்.

மின்விசை இயக்கியை செயலாக்கம் செய்வது, சிறியதொரு விஷயமாகத் தோன்றினாலும், அது, தொலைநோக்குடைய குறிப்பிடத்தக்க முடிவுகளைக் கொண்டுவருவது போல், அவதார புருஷரின் பௌதீக உடலின் செயல்பாடு, அதன் தொடர்ச்சியாக, அனைத்து ஆன்மீகத் தளங்களிலும் விளைவுகளை ஏற்படுத்துகிறது; ஒவ்வொரு கோளத்திலும் சிரமமின்றி மேலோட்டமான குறிப்பீடுகளைத் தூண்டி, பல பக்க விளைவுகளைக் கொண்டுவருகிறது. இவ்வாறாக, அவதார புருஷரின் ஒரு சாதாரண நடவடிக்கையானது, இயற்கை மற்றும் இயற்கைக்கு அப்பாற்பட்ட நிலைகளில் செயல்படுவதற்கான ஒரு தொடக்க புள்ளியாக மாறும் அதே

நேரத்தில், உள் சக்திகளின் வெளியீட்டால் ஏற்படும் சிக்கலான தொடர்புகளின் பக்க விளைவுகள் முழுப் பிரபஞ்சத்தையும் உள்ளடக்கும்.

பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும், ஆரம்பத்திலிருந்தே, பொதுமுறையான சட்டத்தின் மூலம் தானாகவே, சிரமமின்றி செயல்படும் தெய்வீக திடீர் ஆர்வத்தின் (தற்போக்கெண்ணம் - WHIM) ஒரு பொருளாக்கம். இந்த வெளிப்பாடு, தெய்வீக சித்தத்தின் பேரில், முயற்சி எதுவுமின்றி, அங்குமிங்கும் விலகிச்செல்லாமல் அல்லது தோல்வியை சந்திக்காமல், வெல்லமுடியாத வகையில் செயல்படுகிறது. இது படைப்பின் திரையில் விரிவடைவதைப் போன்றது, அதன் அனைத்து தொடர்ச்சியான காட்சிகளிலும் நிகழ்ச்சிகளிலும் அசல் தெய்வீகத் திடீர் ஆர்வத்திலிருந்து வெளியிடப்பட்ட வடிவத்தைப் படம்பிடிப்பது போன்றது.

இருப்பினும், கடவுள் மனித வடிவில், இதுகாறும் விழிப்புணர்வை எட்டாத மனிதன் மற்றும் உயிரினங்களுடன் ஒன்றிணைந்து, அவர்களின் அல்லது அவற்றின் பாத்திரத்தை வகிக்கும் அதே வேளையில், அவர் தமது அவதார விருப்பத்திற்கிணங்க, எந்தவொரு குறிப்பிட்ட விஷயத்தையும் அல்லது மூலமுதலான தெய்வீக திடீர் ஆர்வத்தால் விதிக்கப்பட்ட மற்றும் உருவாக்கப்பட்ட நிகழ்வையும் மாற்றலாம் அல்லது அழிக்கலாம். ஆயினும்கூட, அவதார புருஷர், தெய்வீக அதிகாரத்தின் கீழ் தீர்மானிக்கப்பட்ட நிகழ்வுகளில் தலையிடுவது முற்றிலும் அவசியம் என்று கருதும் போது மட்டுமே, அவர் அதைச் செய்கிறார். அவதார புருஷரின் தலையீடு போன்ற, அத்தகைய தேவை ஏற்படுவது கூட, தெய்வீக சித்தத்தின் ஒரு பகுதியாகும்.

ஸுபி பாரம்பரியத்தில் ஸுபிக்கள், 'விதிக்கப்பட்ட நிகழ்வுகளின் தொடர்' (QAZA - காஸா) மற்றும் திடீர் மனக்கிளர்ச்சி அல்லது 'தற்செயலான' நிகழ்வுகள் (QADAR - கதார்) இவற்றிற்கிடையேயான வேறுபாட்டைச் சுட்டிக்காட்டுகின்றனர். குதுப் அல்லது அவதார புருஷரின் எல்லையற்ற இரக்கத் தன்மையால் 'கதாரில்' இந்த தெய்வீக உந்துதல் ஏற்படுகிறது. எனவே அவதார புருஷரின் அல்லது குதுபின் செயல்கள் 'கதார்' வகையின் கீழ் வருகின்றன, இது 'வாய்ப்பு' என்ற ஒருவகை கூறுகளைக் கொண்டுள்ளது மற்றும் நிகழ்வுகளின் முன்னரே தீர்மானிக்கப்பட்ட போக்கின் உறுதியான தன்மையை விடுவிக்கிறது.

குதுபின் செயல்கள் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட தெய்வீகத் திட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வந்தாலும், இந்த மாற்றங்கள் வரையறுக்கப்பட்ட அளவில் உள்ளன. ஆனால் மறுபுறம் பார்க்கும்போது, அவதார புருஷரின் தலையீடு, உலகளாவிய அளவில் மாற்றங்களைக் கொண்டுவருகிறது. எடுத்துக்காட்டாக, 1950இல் ஒரு போர், தெய்வீக விதியின் கீழ் விதிக்கப்பட்டது என்று வைத்துக்கொள்வோம். சாதாரண நிகழ்வுகளில், பேரழிவு, தவிர்க்க முடியாமல் குறிப்பிட்ட நேரத்தில் நிகழ வேண்டும், மேலும் உலக நிகழ்வுகளின் தொடர்ச்சி, முன்னரே தீர்மானிக்கப்பட்ட கால

அட்டவணையைத் தவறாமல் சரியான நேரத்தில் பின்பற்றும். இருப்பினும், போர் நடைபெறுவதற்கென நியமிக்கப்பட்ட நேரத்தில், அவதார புருஷர் உலகில் அவதரித்திருந்தால், அவர் தெய்வீக உந்துதலின் (கதாரின்) ஒரு பகுதியாக, பௌதீகத் தளத்தில் சில குறிப்பிட்ட செயல்களால் அதைத் தடுக்கலாம். இவ்வாறு, இயற்கையின் விதிகளின் இடைவிடாத வேலையில், 'விதியின் நாட்குறிப்பில்' போருக்கு பதிலாக அமைதியை உச்சரிக்கும், விவரிக்க முடியாத தெய்வீக சபல சிந்தனையில் நுழைய முடியும். கபீர் கூறியது போல: "விதி, தயவு தாட்சண்யம் இல்லாதது, தவிர்க்க முடியாதது; ராமர் ஒருவரால் மட்டுமே (அவதார புருஷரால் மட்டுமே) அதை மாற்ற முடியும். அவரால் விதியை இல்லாமலாக்க முடியும். அவர் சர்வ வல்லமை படைத்தவர், ஆனால் தெய்வீக அதிகாரத்தின் கீழ் விதிக்கப்பட்ட அனைத்தும் முழு சிந்தனைக்குப் பிறகு திட்டமிடப்பட்டுள்ளது."

அவதார புருஷர், விதியின் நியதிப்படி, மனித விதிகளின் செயல்பாட்டில் தலையிடுவதில்லை. மிகவும் அவசர தேவை என்ற தருணத்தில் மட்டுமே, அவர் அவ்வாறு செய்வார் - அதாவது, அவரது அனைத்தையும் உள்ளடக்கும் கருத்துக் கணிப்பில், இன்றியமையா தேவை என்ற கட்டாய காலத்தில் மட்டுமே, அவர் அவ்வாறு செய்வார். ஏனெனில், ஒவ்வொரு புள்ளியும், வரியும் ஒன்றையொன்று சார்ந்து ஒன்றிணைக்கும் திட்டமிடப்பட்ட மற்றும் வடிவமைக்கப்பட்ட அமைப்பில் ஏற்படுத்தும் ஒரு சிறிய ஒற்றை மாற்றமானது, சாத்தியக்கூறுகள் மற்றும் நிகழ்வுகளின் முடிவில்லாத சங்கிலியை உலுக்கி, மீண்டும் ஒருங்கிணைக்கிறது. தெய்வீக விதியின் முன்னதாகவே வரையப்பட்ட கோட்டில் மிகக் குறைவான மாற்றத்திற்கு, எல்லையற்ற முறையில் சரிசெய்வது அல்லது சீர்படுத்த வேண்டியது கட்டாயமாகிறது, இது சம்பந்தப்பட்ட நபரின் சுற்றுப்பாதையில் அல்லது சுற்றுப்புற சூழலில் மட்டுமின்றி, கடந்த கால மனப்படிவங்களின் பிணைப்பால் இணைக்கப்பட்ட அனைத்தையும் அதன் இடையறா விளைவுகளிலும் ஈடுபடுத்துகிறது.

அவதார புருஷரின் திடீர் ஆர்வமும் (WHIM - தற்போக்கெண்ணம்) தெய்வீக விதியின் ஓர் அங்கமாகும். அவதார புருஷரின் 'திடீர், தற்செயல்' தலையீட்டை அவசியமாக்கும் முழுமையான தேவையை, 'விதிக்கப்பட்ட நிகழ்வுகளின் தொடர்' (QAZA - காஸா) வழங்குகிறது. ஆனால் இந்த வாய்ப்பு மற்றும் கணிக்க முடியாத கூறுகள் 'விதிக்கப்பட்ட தொடர் நிகழ்வுகளின்' வடிவத்தில் கணிக்கப்படுகின்றன, இதில் அவதார புருஷரின் தலையீட்டின் சாத்தியக்கூறும் அடங்கும்; இது அவரது எல்லையில்லா இரக்கத்தால் எழுகிறது, இது மறுக்கப்படாது.

அவதார புருஷரின் திடீர் ஆர்வத்தில், அதன் பணி மற்றும் விளைவுகளைப் பொறுத்தவரை, 'வாய்ப்பு' என்பதற்கு குறைந்தபட்ச இடமும் இல்லை. அந்தத் திடீர் ஆர்வம், அதைத் தொடர்ந்து வரும் முன்னேற்றங்களுக்கான வழியை இது வகுத்தாலும், அவ்வாறு

உருவாக்கப்பட்ட செயல், தற்செயலாக நிகழ்வதாக இல்லாமல், அதன் பின்விளைவு முழு நிறைவானதாக இருக்கும்.

ஒரு சாதாரண மனிதனின் திடீர் ஆர்வம் அல்லது தற்போக்கெண்ணத்தை செயல் படுத்தும் போது, கற்பனை செய்ததற்கு முற்றிலும் முரணான விளைவுகளை ஏற்படுத்தலாம், ஏனெனில் அவனது முயற்சிகள் ஒழுங்குமுறையற்றதாக அல்லது கையாளுவதற்கு கடினமானதாக இருக்கும். எனவே, முடிவுகள் விருப்பத்தால் உருவான சிந்தனைக்கு முற்றிலும் நேர்மாறாக மாறும்.

கீழ்வரும் கதையின் மூலம் இதை நன்கு விளக்கலாம்: வழிப்போக்கர் ஒருவர் விளாம்பழ மரத்தின் கீழ் ஓய்வெடுக்கிறார்; அதன் கிளைகளில் சில பறவைகள் அமர்ந்துள்ளன. குடிப்பழக்கத்தால் சீரழிந்துபோன மற்றொரு மனிதன், மாறாக, அந்த வழியாகச் சென்று, விளாம்பழ மரத்தைப் பார்த்து, அதன் பழங்களில் ஒன்றை சுவைக்கும் திடீர் ஆர்வத்தால் தூண்டப்படுகிறான். ஒரு கல்லை எடுத்து, ஒரு பழத்தை வீழ்த்தும் நம்பிக்கையில், மரத்தின் மீது வீசுகிறான்.

இப்போது, விதியின் நியதிப்படி, ஒரு குடிகாரனுக்கு புளிப்பு சுவை மீது அளப்பரிய வெறுப்பு உள்ளது, ஏனெனில் புளிப்பு சுவை, போதையின் விளைவுகளை இல்லாமலாக்குகிறது. ஒரு குடிகாரனுக்கு விளாம்பழத்தின் மீது எண்ணமோ ஆர்வமோ இருப்பதில்லை. எனவே, குடிகாரன், விளாம்பழ மரத்தின் மீது கல்லை எறியத் தூண்டுதலாக இருந்தது, முற்றிலும் அவனது இனம் புரியாத திடீர் ஆர்வம் அல்லது தற்போக்கெண்ணம். எனவே திடீர் ஆர்வம் அல்லது தற்போக்கெண்ணம் என்பது, முற்றிலும், விருப்பம், சிந்தனை போன்றவற்றைச் சார்ந்ததாக இராது.

குடிகாரன் ஒரு கல்லை விளாம்பழ மரத்தின் மீது வீசும்போது, அவன் தன் இலக்கை இழந்து பறவைகளில் ஒன்றைத் தாக்குகிறான்; அந்தப் பறவை உயிரைத் துறந்து தரையில் வீழ்ந்த அந்த நேரத்தில், இதர பறவைகள் பறந்து செல்கின்றன. ஆனால், குடிகாரன் வீசிய கல், கீழே விழும்போது, மரத்தின் அடியில் ஓய்வெடுக்கும் வழிப்போக்கனின் தலையைத் தாக்கி காயத்தை ஏற்படுத்துகிறது. இறுதியில், நடந்தது அனைத்தும், நாம் பார்ப்பது போல், குடிகாரனின் திடீர் ஆர்வத்திற்கு முற்றிலும் முரணாக இருந்தது.

அவதார புருஷர் விஷயத்தில் இது எப்பொழுதும் இப்படி நடப்பதில்லை. இலக்கு மற்றும் இறுதி முடிவுகள் இரண்டும் ஒவ்வொரு முறையும் தவறாமல் இருப்பதோடு, அவதார புருஷரின் திடீர் ஆர்வத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிவதாக இருக்கும்.

1959 ஏப்ரல் 11 சனிக்கிழமை அன்று, கோரேகாவ்ம் பார்க்கில் அமைந்த பூனா பள்ளிக்கூடம் மற்றும் பார்வையற்றோர் இல்லத்திற்கு (POONA SCHOOL AND HOME FOR THE BLIND IN KOREGAON PARK) பாபா விஜயம் செய்தார். பள்ளியின் கண்காணிப்பாளர் திரு. காளே (MR. KALE), மெஹர் பாபாவிற்கு அழைப்பு

விடுத்திருந்ததைத் தொடர்ந்து, அன்று காலை 9:00 மணிக்கு பாபா அங்கு வந்தார். சுமார் 150 பார்வையற்ற மாணவர்களும், ஒரு டஜன் ஆசிரியர்களும் அங்கு இருந்தனர்; இவர்களில் ஆசிரியர்கள் அனைவரும் கண்பார்வையற்றவர்கள். சிறுவர்கள் பாபா முன்னிலையில் பாடல்கள் பாடினர், அவர்களில் ஒரு சிறுவர், மதுசூதனன் இசையமைத்து, சுபத்ரா கற்றுவித்த வரவேற்பு பஜனையைப் பாடி, தங்கள் நிறுவனத்திற்கு வருகை தந்து, புனிதப்படுத்தியதற்காக யுகத்தின் அவதார புருஷருக்கு பாராட்டுகளைத் தெரிவித்தார்.

பாபாவின் கீழ்வரும் செய்தியை நானா கேர் வழங்கினார்:

சாதாரணமாக, பார்வையற்றவர்களை துரதிர்ஷ்டவசமானவர்கள் என்று மக்கள் நினைக்கிறார்கள். நீங்களும் சில நேரங்களில் அப்படி நினைக்கலாம். ஆனால், கண்பார்வை உள்ளவர்கள்தான் உண்மையில் துரதிஷ்டசாலிகள். தாங்கள் பார்க்கும் அனைத்தும் உண்மை என்று நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் பார்க்காத கடவுள் ஒருவரே உண்மையானவர்.

கடவுளைக் காணாத அனைவரும் குருடர்கள். காண வேண்டிய ஒரே உண்மைப்பொருள் கடவுள். எனவே பௌதீக பார்வை உள்ளவர்கள் கூட பௌதீக பார்வையற்றவர்களை விட பார்வையற்றவர்களாக இருக்கலாம், ஏனெனில் கண்பார்வையற்றவர்கள் உள்ளுக்குள் கடவுளை நேசிப்பவர்களாகவும் இருக்கலாம்.

இன்று, நான் உங்களை அன்புடன் அரவணைக்கிறேன், அதனால், ஒரு நாள் உங்களுக்குக் கிடைக்கும் திவ்ய தரிசனத்தால் எங்கும் என்னைப் பார்க்கலாம்.

பாபா பின்னர் ஒவ்வொரு மாணவர்களையும் ஆசிரியர்களையும் தழுவி தமது யதார்த்தத்தின் ஸ்பரிசத்தை வெளிப்படுத்தினார்.

நிகழ்ச்சியின் போது, வயதில் இளைய பார்வையற்ற சிறுவன் ஒருவன் பாபாவின் மடியில் சிறிது நேரம் அமர்ந்து, அவனை வலுக்கட்டாயமாக அகற்ற வேண்டிய அளவுக்கு அவரை இறுக்கமாகப் பற்றிக்கொண்டான். குருபிரசாத்திற்குத் திரும்பிச் செல்லும் வழியில், பாபா, **"நான் அந்த சிறுவனை மிகவும் விரும்பினேன். அவன் பார்வையற்றவனாக இருப்பதற்கு ஒரு காரணம் உள்ளது. நான் அந்த நிறுவனத்திற்கு விஜயம் செய்ததன் காரணம் அந்த சிறுவனே!"** என்று குறிப்பிட்டார். பாபா, ராமகிருஷ்ணனிடம் பள்ளிக்குச் சென்று, அந்த சிறுவனை மறுநாள் காலை குருபிரசாத்திற்கு அழைத்து வருமாறு அறிவுறுத்தினார். சிறுவனை அழைத்து வந்ததும், பாபா மீண்டும் அவனை வருடிக்கொடுத்து, மதியம் வரை தன்னுடனேயே வைத்திருந்தார்.

ஏப்ரல் 12 ஞாயிற்றுக்கிழமை காலை நடந்த தரிசன நிகழ்ச்சியின் போது, மேற்கு வங்காளத்தில் மெஹர் பாபா தரிசனம் வழங்குமாறு, டாக்டர் மூர்த்தி அவரிடம் கேட்டுக் கொண்டார். நாக்பூரிலும் அவ்வாறே செய்யுமாறு டாக்டர் தேஷ்முக் கோரிக்கை வைத்தார். பாபா, தேஷ்முக்கை தனது வலதுபுறத்திலும்,

மூர்த்தியை இடதுபுறத்திலும் அமர வைத்து, அவர், கொல்கத்தாவிலா அல்லது நாக்பூரிலா என்பதைத் தங்களுக்குள் பேசி தீர்த்துக் கொள்ளுமாறு கூறினார். நீண்ட விவாதம் நடந்தது. ஒரு கட்டத்தில், தேஷ்முக்கின் வாதம் மேலோங்கி நின்றது. ஆனால், மூர்த்தி கருத்தில் கொள்ள வேண்டிய சில முக்கிய விஷயங்களை பாபா வழங்கினார்; மேலும் அவர்கள் உறுதியான முடிவுக்கு வரமுடியாமல் மீண்டும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

பாபா, அவர்களின் விவாதத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டு, இறுதியாக அவதானித்தார்: **"நான் என்ன செய்ய முடியும்? நீங்கள் இருவரும் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. நான் ஒரே இடத்திற்குச் செல்ல விரும்புகிறேன், ஆனால் நீங்கள் இருவரும் என்னை உங்கள் இல்லங்களுக்கு இழுக்க விரும்புகிறீர்கள். ஆதலால் 1959ஆம் ஆண்டு எஞ்சியிருக்கும் மாதங்களில், இந்தப் பிரச்சினையை மீண்டும் எழுப்ப வேண்டாம். அடுத்த ஆண்டு, அதுவரை, நான் என் உடலை கைவிடவில்லை என்றால், அதை எனக்கு நினைவூட்டுங்கள்; நீங்கள் (மூர்த்தி) அதுவரை எனது பெயரை பரப்புவதற்கு ஏராளமான பணிபுரிய வேண்டும்."**

அன்று மதியம், ஒரு ஷெனாய் இசைக்கலைஞர் நிகழ்ச்சி ஒன்றை வழங்கவே, பாபா, ஆன்மீகத் தளங்களைப் பற்றி விளக்கினார். ஆந்திரா அன்பர்களிடையே இருந்த மாணிக்யால ராவைச் சுட்டிக்காட்டி பாபா, மூர்த்தியிடம் கூறினார், **"நீங்கள் நாளுக்கு நாள் கொழுத்து வளரும்போது, அவர் மட்டும் எப்படி மெலிந்துகொண்டே வருகிறார் என்று பாருங்கள்."**

மறுநாள் காலை 8:30 மணிக்கு, பாபா 'இறை-போதை' (GOD-INTOXICATION) மற்றும் மஸ்தின் 'ஆனந்தகரமான வேதனை' (BLISSFUL AGONY) பற்றி சொற்பொழிவாற்றினார். இத்துடன், பிற தருணங்களில் மஸ்துகளைப் பற்றி அவர் கூறியதன் ஒரு பகுதி பின்வருமாறு:

இறை அன்பின் நெருப்பில் எரியும் ஒருவர் 'ஆனந்தகரமான வேதனை'யை அனுபவிக்கிறார். அவருக்கு அமைதியே மரணம், அமைதியின்மையே வாழ்க்கை. அன்பின் நெருப்பு சற்று தணிய வேண்டும் என்று அவர் ஒருபோதும் விரும்புவதில்லை, ஆனால் அது எப்பொழுதும் கொழுந்துவிட்டு எரிய வேண்டும் என்று ஏங்குகிறார்.

அன்பன் ஒருவனின் வேதனைகளைக் குறித்து ஹஃபீஸ் கூறியதாவது:

அன்பில், உங்கள் அன்பானவரைப் பிரியும் வேதனை,
உங்கள் இதயத்தைக் கடித்து குதறும்
ஒரு கட்டத்தை எட்டுகிறது;
ஆனால் ஒவ்வொரு முறை அவ்வாறு செய்வதும்
பேரின்ப வேதனையாகவே அனுபவிக்கப்படுகிறது.

ஒரு மனிதன் மது அருந்தினால், அவர் போதையில் இருக்கிறார். அவர் தற்காலிகமாக எதையும் கண்டுகொள்ளாமல், கவனக்குறைவாக

இருப்பதால், கவலையிலிருந்து விடுபட்டவர் போல மேலோங்கி நிற்கிறார். அந்த நேரத்தில், அவர் மது போதையில், உலகில் எதைப்பற்றியும் கவலைப்படுவதில்லை. ஆனால் அதன் தாக்கம் தணிந்து போனதும், தலைவலியால் அவதியுற்று, மது போதையில் வழிதவறிப் போனதற்காக வருந்துகிறார்; அவர் தன்னை எண்ணி வெட்கப்படுகிறார்.

ஆனால், நேர்மாறாக மஸ்த், இறை போதையில், இறை அன்பால் ஆட்கொள்ளப்படுகிறார்; அவரது அலட்சியமும், இறை அன்பின் தாக்கமும் தனித்தன்மை வாய்ந்தது. மஸ்தைப் பொறுத்தவரை, இறை போதை எப்பொழுதும் அவரால் உணரப்படுகிறது. உலகம் கூறுவதை அறவே கண்டுகொள்வதில்லை. அவர் உலக மக்களைப் பற்றி கவலைப்படுவதுமில்லை. அவருக்குத் தலைவலி என்பது இல்லை, ஆனால் அவரது இதயம் தொடர்ந்து 'இனிமை' நிறைந்த வலியை அனுபவிக்கிறது. அவரது இதயம் அன்பிற்குரியவரை உணரும் தாகத்தில் இருக்கிறது. எந்த சூழ்நிலையிலும், எப்பாடு பட்டேனும், தன் உயிரை விலையாகக் கொடுத்தாலும், இந்த வலி தணிவதை அவர் விரும்புவதில்லை! அவருக்கு இந்த வலி இனிமையாக இருக்கிறது, அவர் அதை, தொடர்ந்து நீடித்திருக்க தன்னால் இயன்ற அனைத்தையும் முயற்சிக்கிறார்.

உதாரணமாக, ஒரு மனிதன், தனது மனைவியை மிகவும் அதிகமாக நேசிக்கிறான். குறுகிய காலத்தில், அவள் இறந்துவிடுகிறாள். அவரது அன்பான மனைவியின் நினைவு அவருக்கு வேதனையாக இருந்தாலும், அது இனிமையாகவே இருக்கிறது.

உலக மனிதன் போதையில் இருக்கும் போது, ஒருவித அச்சமின்மையையும் அலட்சியத்தையும் வெளிப்படுத்துகிறான். ஆனால் அது அந்த நேரத்திற்கு மட்டுமே; அதே வேளையில், ஒரு மஸ்தின் அச்சமின்மையும் அலட்சியமும் நீடித்து நிற்கிறது. அந்த தெய்வீக அன்பை நீங்கள் ஒரு முறை அனுபவித்தாலும், உங்கள் கவலைகள் அனைத்தும் மறைந்துவிடும், மேலும் நீங்கள் தொடர்ந்து ஆனந்த வேதனையை அனுபவிப்பீர்கள்! மஸ்தின் இதய வலி மிகவும் உன்னதமான நிலையில் உள்ளது, அவர் அதை இழப்பதை விட உயிர் துறப்பதை விரும்புகிறார். இது சாதாரண மக்களின் இதய வேதனையைப் போல் அல்லாமல், மிக உயர்வான நிலையில் உள்ளது. மறைந்து போன மனைவியைப் பிரிந்த கணவன் அனுபவிக்கும் வலியை, அதனுடன் ஒப்பிடுகையில் ஒன்றுமில்லை.

ஒரு நாள், ஹர்ஜீவன் லாலின் மகன் சுகந்திற்கு (SUGANDH) தரிசனம் வழங்கி, வாழ்த்திய பின்பு, பாபா அவரை டெல்லிக்குத் திரும்புமாறு அறிவுறுத்தினார், ஆனால் சுகந்த் அங்கிருந்து செல்லவில்லை. ஏப்ரல் 13 அன்று அவரை மீண்டும் பார்க்க நேர்ந்த போது பாபா, **"ஏன் நீங்கள் இல்லம் திரும்பவில்லை?"** என்று கேட்டார்.

பூனா பள்ளிக்கூடம் மற்றும் பார்வையற்றோர் இல்லம், கோரேகாவ்ம் பார்க், ஏப்ரல் **1959**
(POONA SCHOOL AND HOME FOR THE BLIND IN KOREGAON PARK, APRIL 1959)



குருபிரசாத் (GURUPRASAD), **1959**.

அதற்கு சுகந்த், "டாக்டர் தேஷ்முக் என்னை தொடர்ந்து இருக்குமாறு கூறினார்" என்றார்.

கடும் அதிருப்தியுடன் பாபா, "**இனிமேல் தேஷ்முக் எதைச் சொன்னாலும் செய்யுங்கள், நான் சொல்வதைச் செய்ய வேண்டாம்!**" என்று திட்டினார்.

பாபாவின் கட்டளைக்கு தேஷ்முக் இடையூறு விளைவித்ததற்காக அவரைக் கண்டித்தார், ஆனால் அவரைத் தழுவி மன்னித்தார்.

மாணிக்யால ராவிடம், பாபா, "**ஆந்திராவில் உள்ள 35 ரத்தினக் கற்களில் நீங்களும் ஒருவர், உங்கள் சட்டையை மேலே தூக்குங்கள்**" என்று குறிப்பிட்டார். அவர் அவ்வாறே செய்தபோது, மிகவும் மெலிந்திருந்த நிலையில், அவருடைய விலா எலும்பைப் பார்த்து அனைவரும் சிரித்தனர். பாபா உடனே, "**என் அன்பில் உருகி அவர் இந்த நிலைக்கு வந்துள்ளார்**" என்று குறிப்பிட்டார்.

அன்று மதியம் பூனா, கிர்கியில் தங்கியிருந்த கே.கே. ராமகிருஷ்ணனின் இல்லத்திற்கு பாபா விஜயம் செய்தார். பாபா ஒரு நாற்காலியில் அமர, அன்பர்கள் அனைவரும் அவரைச் சுற்றி தரையில் அமர்ந்தனர். அனைவருக்கும் பிஸ்கட், இனிப்புகள் மற்றும் பானகம் வழங்கப்பட்டது. பதார்த்தங்கள் இருந்த தட்டில் ஒன்றை பெஸி ஈரானியிடம் கொடுத்தபோது, அதில் ஒரு சில சிறிய துண்டு பிஸ்கட்டுகள் மட்டுமே இருந்தன; அதே வேளையில், அவர் அருகிலிருந்த பிரதாப் அஹிருக்குப் பரிமாறப்பட்ட மற்றொரு தட்டில், நிறைய பதார்த்தங்கள் இருந்தன. பெஸி, தடித்த, திடகாத்திரமான இளைஞனாக இருந்த அதே வேளையில், பிரதாப் நலிந்துபோய் பெஸியின் பாதி அளவில் இருந்தார். இருவரும் பாபாவிற்கு சற்று தொலைவில் அமர்ந்திருந்தனர். அங்குக் கிட்டத்தட்ட 50 பேர் இருந்தனர், ஆனால் பாபா அவர்களை கவனித்து, "**இது எவ்வளவு வேடிக்கையான விஷயம் பாருங்கள். பெஸி ஒரு புலியைப் போன்றவர், அவருக்கு சிறிய, உடைந்துபோன பிஸ்கட்களும், எறும்பு போன்ற பிரதாபிற்கு பெரிய பிஸ்கட்களையும் வைத்திருக்கிறார்**" என்று குறிப்பிட்டார்.

பாபாவின் அருகில் தேஷ்முக் உடனிருந்தார்; ராமகிருஷ்ணன் அனைவருக்கும் பானகத்தை வழங்குவதற்கு சற்று முன்பு, தேஷ்முக் கழிப்பறைக்குச் சென்றார். எப்பொழுதும் தேஷ்முக்கை கிண்டல் செய்து மகிழும் பாபா, அவரைப் பின்தொடர்ந்து சென்று, கதவை வெளிப்புறமாகத் தாழ்பாளிட்டார். சிறிது நேரத்தில் தேஷ்முக் கதவைத் தட்டத் தொடங்கினார். அனைவரும் அருந்தி முடித்த பின்னரே பாபா அதைத் திறந்தார். தேஷ்முக் வெளியே வந்ததும், பாபா கிண்டலாக, "**ஷர்பத் தீர்ந்து விட்டது. நீங்கள் அதைத் தவறவிட்டீர்கள். ஏன் கழிப்பறைக்குச் சென்றீர்கள்?**" என்று கேட்டார்.

"பாபா, நீங்கள் அதை ஒருபோதும் செய்ய மாட்டீர்கள், எனக்காகக் கொஞ்சம் வைத்திருந்திருக்க வேண்டும்" என்று தேஷ்முக் கூறினார். பதிலளிக்காமல், பாபா காரை நோக்கிச் செல்லவே, தேஷ்முக் மனமுடைந்து

போனார். திரும்பி வந்த பாபா, அவரது முதுகில் தட்டி, அவரது பங்கைக் கொடுத்தார்.

மீண்டும் குருபிரசாத்தில் சீட்டு மற்றும் இதர விளையாட்டுகளை விளையாடத் தொடங்கினர். தத்துவத்தில் டாக்டர் பட்டம் பெற்ற மூர்த்தியிடம் பாபா, **"தேஷ்முக் உங்களை அவரது கட்டுப்பாட்டின் கீழ் வைக்கலாம், அவர் அதி புத்திசாலி"** என்று கருத்துத் தெரிவித்தார்.

பிறகு தேஷ்முக்கிடம் திரும்பி, **"நீங்கள் புத்திசாலி, ஆனால் அதே சமயம் முதல் தர முட்டாள்! மணி உங்கள் இருவர் மீதும் தனது ஆதிக்கத்தைச் செலுத்தலாம்! அவர் மேற்கத்திய நாடுகளுடன் கடிதத் தொடர்பில் இருக்கிறார். நாள் முழுவதும் தட்டச்சு செய்கிறார்"** என்று குறிப்பிட்டார்.

ஒரு நாள் மூர்த்தி, மஞ்சள் நிற சட்டை அணிந்து குருபிரசாத்தில் தோன்றினார். பாபா அவரிடம், **"உங்களுக்கு எப்படி முதுகலை பட்டம் வழங்கப்பட்டது? எந்த நிற ஆடைகளை அணிவது என்று கூட உங்களுக்குத் தெரியாதா? நீங்கள் வேடிக்கையாக இருக்கிறீர்கள்!"** என்றார்.

மறுநாள் மூர்த்தி அடர் சிவப்பு நிற சட்டை அணிந்து வந்தார். பாபா கூறினார், **"இப்போது நீங்கள், நேற்றை விட நகைப்புக்குரியவராகத் தோன்றுகிறீர்கள். உண்மையில் நீங்கள் ஒரு மூடர்!"**

மூன்றாவது நாள், மூர்த்தி ஒரு பிரகாசமான நீல நிற சட்டை அணிந்து வந்தார், பாபா கூறினார், **"கடவுளின் நிமித்தம், நீங்கள் முன்பை விட மோசமாக இருக்கிறீர்கள்! உங்களுக்கு, குறைந்த அளவும் நிற பாகுபாட்டுத்திறன் இல்லையா?"**

இது மூர்த்திக்கு எரிச்சலை ஏற்படுத்தியது, அவர் சற்றே சீற்றத்துடன் கேட்டார், "அப்படியானால் நான் என்ன நிற சட்டை அணிய வேண்டும்?"

சிரித்துக்கொண்டே பாபா, **"அட, நீங்கள் இப்போது காட்டும் நிறத்தைத் தவிர, வேறு எந்த நிறத்தையும் தேர்ந்தெடுக்கலாம். உங்கள் சட்டைகளைப் பற்றிய இந்தப் பேச்சு அனைத்தும் உங்கள் உண்மை 'நிறத்தை'** (கோபத்தை) **வெளிக்கொணரவே"** என்றார்.

மூர்த்தியின் பணியிலிருந்து விடுப்பு கிட்டத்தட்ட முடிந்துவிட்ட நிலையில், அவரது விடுப்பை நீட்டிக்க விரும்பினார். அதற்காக ஒரு தொலைத்தந்தி அனுப்புமாறு பாபா அவருக்கு அறிவுறுத்தினார், ஆனால் மூர்த்தி, "என்னால் அதை ஒருபோதும் பெற முடியாது, பாபா. மிகுந்த சிரமத்துடன் நான் இத்தனை கால அவகாசத்தைப் பெற முடிந்தது" என்றார்.

பாபா பதிலளித்தார், **"இது எனது குழந்தைப் பருவத்தை எனக்கு நினைவூட்டுகிறது. எனது நண்பர் ஒருவரால் தேர்வில் தேர்ச்சி பெற முடியாத நிலையில், அவர் தனது ஆசிரியரின் காலில் விழுந்து கெஞ்சினார்: 'ஐயா, நான் வேண்டுமானால் உங்கள் கழிவைக் கூட உண்ணுவேன், ஆனால் தயவுசெய்து என்னைத் தேர்ச்சிபெறச் செய்யுங்கள்!' அப்போது ஆசிரியர்**

அவரைத் தேர்ச்சிபெறச் செய்தார். நீங்களும் அவ்வாறே செய்யுங்கள், உங்கள் மேலதிகாரி நிச்சயமாக உங்களுக்கு விடுமுறை வழங்குவார்.” மூர்த்தி முணுமுணுத்துக் கொண்டே தனது மேலதிகாரியிடம் இப்படி ஒரு விஷயத்தைச் சொல்லத் தயங்கினார். எனவே, விடுப்பை நீட்டிக்க விண்ணப்பிக்கும் யோசனையை கைவிட்டு, அவர் கொல்கத்தா திரும்பிச் சென்றார்.

1959 ஏப்ரல் 14 அன்று, தேஷ்முக் அவரது மூத்த மகள் சஞ்ஜீவனிக்கு கணவனாகத் தேர்ந்தெடுத்த ஒரு குறிப்பிட்ட இளைஞனைப் பற்றி விவரித்தார். பாபா உடனே, **“எனக்கு அதில் விருப்பம் இல்லை; அவர் பொருத்தமானவர் அல்ல”** என்று பதிலளித்தார்.

ஆர்வத்துடன் தேஷ்முக், “பாபா, இளைஞர் மிகவும் நல்லவர், படித்தவர், நல்ல குடும்பம்” என்று கூறினார்.

தேஷ்முக் ஏற்கனவே அனைத்தையும் தீர்மானித்துவிட்டதைப் பார்த்து, பாபா, **“அப்படியானால், மேலும் தொடர்ந்து சம்பந்தத்தை முடிவு செய்யுங்கள்”** என்று இறுதியாக இணக்கம் தெரிவித்தார்.

முன் அறையிலிருந்து வெளியே வந்த தேஷ்முக், திருமணத்திற்கு பாபா ஒப்புதல் அளித்ததாகவும், தனது மகள் அந்த இளைஞனை திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகவும் பிற அனைவரிடமும் கூறினார். இதைக் கேட்ட பாபா, அவரைத் திரும்ப அழைத்துத் திருத்தினார்: **“இந்த இளைஞரை சஞ்ஜீவனி திருமணம் செய்து கொள்வதில் விருப்பத்தை தெரிவித்தது நானா அல்லது நீங்களா? அப்படிப் பேசாதீர்கள்!**

“நான் விரும்புவதை விரும்புங்கள்! நான் விரும்புவதை விரும்புவதற்கு பதிலாக, நீங்கள் விரும்புவதை நான் விரும்ப வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள். மேலும் நீங்கள் விரும்புவதை ஒப்புக்கொள்வதில் நீங்கள் வெற்றி பெற்றால், அது எனது விருப்பம் என்று பிறரிடம் கூறுகிறீர்கள். நீங்கள் ஏற்கனவே என்ன முடிவு செய்துள்ளீர்களோ, அதற்கு மட்டுமே என்னை ஒப்புக்கொள்ள வைத்தீர்கள், ஆனால் நீங்கள் பிறரிடம் சொல்கிறீர்கள்: ‘எனது மகளும் அந்த இளைஞரைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதைத்தான் பாபாவும் விரும்புகிறார்.”

“நான் நேசிக்கப்பட வேண்டிய விதத்தில் நீங்கள் என்னை நேசிப்பது சாத்தியமற்றது போல, நான் விரும்புவதை நீங்கள் விரும்புவதும் சாத்தியமற்றது. ஆனால் குறைந்தபட்சம் நீங்கள் விரும்புவதை நான் விரும்ப வேண்டும் என்று எப்போதும் விரும்பாதீர்கள். என்னை உறுதியாகப் பற்றக்கொள்ள முயற்சி செய்யுங்கள். நான் கேட்கும் எல்லாவற்றிலும் முழுமையாக எனக்குக் கீழ்ப்படியுங்கள்.”

பாபாவிற்கு நெருக்கமானவர்கள் பொதுவாக குருபிரசாத்தில் தங்கள் மதிய நேரத்தைக் கழிப்பது வழக்கம். ஒரு நாள் பாபாவின் தரிசனத்திற்காக ஜபல்பூரிலிருந்து வந்திருந்த பங்க்ராஜ் (PANKHRAJ), ஒரு வாசனையுள்ள தலைமுடி எண்ணெயைப் பயன்படுத்தியதன் வாசனை மண்டபம் முழுவதும் பரவியது.

பாபா அவரைத் தழுவிய போது, முகத்தைச் சுளித்துக் கொண்டு கேட்டார், **"நீங்கள் எந்த ரக தலைமுடி தைலத்தைப் பயன்படுத்துகிறீர்கள்? உங்கள் தலையிலிருந்து துர்நாற்றம் வீசுகிறது"**.

பங்கராஜ், "இந்த எண்ணெய் மிகவும் நல்லது, பாபா" என்றார்.

"நல்லதா? ஒவ்வொருவரிடமும் சென்று வாசனையை நுகரும்படி கேளுங்கள். அவர்களின் கருத்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு தரும்."

பங்க்ராஜ் தலையைக் குனிந்துகொண்டு, முழு அறையையும் சுற்றி வந்தார். பாபா கண்களைச் சிமிட்டி வெளிப்படுத்திய அடையாளக்குறியின் பேரில், அனைவரும் ஒருமித்த குரலில், "அது பயங்கரமான வாசனை!" ராம்ஜூ ஒருமுறை நுகர்ந்து வாந்தி எடுப்பது போல நடித்தார். பங்க்ராஜ் அமைதியாக இருந்தபோது பாபா கேட்டார், **"இப்போது நீங்கள் என்னை நம்புகிறீர்களா?"**

பங்க்ராஜ், "நீங்கள் கூறுவதால் நான் நம்ப வேண்டியதாக உள்ளது. முதலில் நான் நம்பாமல் தவறிழைத்துவிட்டேன்" என்றார். இதனால் பாபா மகிழ்ச்சி அடைந்தார்.

இதேபோன்ற ஒரு சம்பவம் ஒருமுறை அலோபாவுடன் நடந்தது. மெஹராஸாத்திலிருந்து அலோபா அழைக்கப்பட்டார்; ஒரு நாள் பாபா அவருடைய கண்ணாடியை சுத்தம் செய்யுமாறு கேட்டுக்கொண்டார். கண்ணாடியை எடுத்து வர மேஜை அருகே சென்றபோது, பாபா முகம் சுளித்து, **"கடவுளே, என்ன ஒரு துர்நாற்றம்! நீங்கள் நீராடுவதே இல்லையா? துர்நாற்றம் வீசுகிறது! நீங்கள் என்ன ஓர் அசுத்தமான மனிதர்"** என்று குறிப்பிட்டார்.

அவர் ராம்ஜூவிடம் அலோபாவை நுகருமாறு கூறியதும், ராம்ஜூ, "பாபா, எனக்கு வாந்தி வருவதுபோல் இருக்கிறது! ஒரு நிமிடம் கூட, இந்த துர்நாற்றத்தை என்னால் சகிக்க முடியாது" என்று பதிலளித்தார். (மண்டபத்தில் இருந்த சில புதிய நபர்கள் இந்த சம்பவத்தைத் தீவிரமாக எடுத்துக் கொண்டு, அலோபாவின் உடலிலிருந்து உண்மையில் வாசனை வீசுவதாக நினைத்தார்கள்.)

அப்போது பாபா, பாவ் கல்சூரியிடம் வினவினார், **"உங்கள் வியர்வையிலிருந்து துர்நாற்றம் வீசுமா?"**

"ஆம், பாபா, வீசும்."

பாபா, ராம்ஜூவிடம் நுகரும்படி சைகையால் தெரிவித்தபோது அவர், "வாசனை வீசுகிறது பாபா - ஆனால் அலோபாவை விட குறைவாக உள்ளது" என்று நியாயமாக அறிவித்தார்.

இதற்கிடையில், ஃபிரான்சிஸ், மெஹர்தாஸ் இருவரும் மார்ச் 20 அன்று மெஹராஸாத்திலிருந்து வந்தனர்.

கிர்கியில் தங்கியிருந்த ராமகிருஷ்ணனின் இல்லத்தில் ஃபிரான்சிஸ் தங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது, அந்த சுற்றுப்புற சூழல் அமைதியாக இருந்ததால், ஃபிரான்சிஸ் அங்குத் தங்கி அவரது எழுத்துப் பணியைத் தொடர எளிதாக இருந்தது. தினமும் காலையில், ஃபிரான்சிஸ்

குருபிரசாத்திற்கு மிதிவண்டியில் மூன்று மைல் தூரம் சென்று வருவதை வழக்கமாகக் கொண்டார். பாபா அவரை காலை 9:00 மணிக்கு வருமாறு அறிவுறுத்தியிருந்தாலும், ஃபிரான்சிஸ் காலை 8:45 மணிக்கே வந்துவிடுவது தவறாமல் நடந்தது.

ஒரு நாள் அவர் தனது வழக்கமான நேரத்தில் வந்தபோது பாபா கேட்டார், **"ஏன் இன்று தாமதமாக வந்தீர்கள்? நான் உங்களுக்காகக் காத்திருந்தேன்."**

ஃபிரான்சிஸ், "நான் பதினைந்து நிமிடம் முன்னதாக வந்துவிட்டேன் பாபா" என்றார்.

பாபா உடனே, **"உங்களுக்காக நான் ஒரு மணி நேரமாகக் காத்திருக்கிறேன், பதினைந்து நிமிடம் முன்னதாக வந்ததாகக் கூறுகிறீர்கள். நீங்கள் இப்படிக் கூறுவது முறையா?"** என வினவினார்.

பாபாவின் அதிருப்தியால் வேதனையடைந்த ஃபிரான்சிஸ் கண்ணீர் விட்டு அழுதார். பாபா அவரிடம், **"'பாபா-நேரம்' என்பது வேறு. அதை நினைவில் கொள்ளுங்கள்!"** அவரைத் தழுவி, அதைக் குறித்துக் கவலைப்பட வேண்டாம் என்று பாபா உறுதியளித்தார்.

ஃபிரான்சிஸ் காலை 8:30 மணிக்கு வரத் தொடங்கினார், ஆனால் மீண்டும் பாபா, அவருக்காகக் காத்திருந்ததாக ஃபிரான்சிஸிடம் தெரிவித்தார். மறுநாள், ஃபிரான்சிஸ் காலை 8:00 மணிக்கு வந்தார், ஆனால் பாபா மீண்டும் சீக்கிரமாக வந்து, வராண்டாவில் காத்திருந்து, தாமதமாக வந்ததற்காக அவரைத் திட்டினார்! இது, ஃபிரான்சிஸ் இறுதியாக குருபிரசாத்தில் சென்று தங்கும் வரை தொடர்ந்தது.

பாபா அடிக்கடி நரிமன், ஜிம் மிஸ்திரி, குமார் ஆகியோருடன் சதுரங்கம் விளையாடுவதுண்டு. அலோபா, பைதூல் இவர்களிடையேயான போட்டிகளும் தொடர்ந்தன. ஒரு விளையாட்டின் போது, நரிமன், தேஷ்முக் இருவரும் பாபாவின் முன்னால் தரையில் அமர்ந்திருந்தனர். பாபா அவர்கள் விளையாடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தவர், திடீரென அவர் முன்னால் இருந்த ஒரு குறுகிய நாற்காலியில் கால்களை நீட்டி, முற்றிலும் அமைதியாகிவிட்டார். அப்போது அங்கிருந்த ராமகிருஷ்ணன் இதை இவ்வாறு விவரித்தார்: "நரிமன், தேஷ்முக் இருவரும் எழுந்து நின்றனர். குண்டூசி கீழே விழுந்தால் கூட கேட்கும் அளவுக்கு நிசப்தம் நிலவியது. பாபா அங்கு உடலளவில் இருந்தாலும், இல்லாதவர் போலவே தோற்றமளித்தார். நாங்கள் அனைவரும் மூச்சை அடக்கிக் கொண்டிருந்தோம். நாற்பத்தைந்து நிமிடங்கள் இந்த முழுமையான அமைதியும் அசைவின்மையும் கடந்து சென்றது. பாபா பின்னர் அவரது கால்களை விலக்கி, தூக்கத்திலிருந்து விழிப்பது போல கைகளை நீட்டினார்."

வார இறுதியில் ஒரு நாள் மும்பையிலிருந்து வந்த ஜிம் மிஸ்திரி, குருபிரசாத் வந்ததும் நீராடச் சென்றார். வெதுவெதுப்பான நீருக்காக

குருபிரசாத்தில் ஒரு சிறிய மின்சார நீர் கொதிகலன் பொருத்தப்பட்டிருந்ததை அவர் இயக்கினார். அந்த நேரத்தில், பாபா அவரை அழைத்ததும், நீர் கொதிகலனை அணைக்க மறந்து வெளியே விரைந்தார். கொதிகலன் அதிக வெப்பமடைந்து வெடிக்கவே, என்ன நடந்தது என்று பார்க்க அனைவரும் உள்ளே சென்றனர். பாபா என்ன சத்தம் என வினவி, ஜிம்மிடம் கேட்டார், **"நீங்கள் ஏன் நீர் கொள்கலனை அணைக்கவில்லை?"**

ஜிம் ஒரு நகைச்சுவையான பதிலை வழங்கினார், "என் உடனடி கீழ்ப்படிதலால்! நீங்கள் என்னை அழைத்தீர்கள், நான் ஓடி வந்தேன். நான் அதை அணைக்க காத்திருந்திருந்தால், உங்கள் அழைப்பை நான் உடனடியாக நிறைவேற்றியிருக்க மாட்டேன்." அவருடைய சாமர்த்தியமான பதில் பாபாவின் சிரிப்பை வரவழைத்தது.

ஒவ்வொரு நாளும், பாபா கணேஷ்கிந்த் தோட்டத்திற்குச் சென்று, அங்கு ஜிம் மிஸ்திரியின் கையைப் பற்றிக்கொண்டு நடக்கச் சென்றார். ஒரு நாள் பாபா, வேறொருவரை தமது அருகில் நடக்கச் சொன்ன போது, பின்னர் அவரது உதவியை பாபா நாடுவார் என்று ஜிம் கருதினார். அதன்பிறகு, பாபா, ∴பிரான்சிஸின் கையைப் பற்றிக்கொண்டு அவருடன் முன்னும் பின்னுமாக நடந்து உடற்பயிற்சியில் ஈடுபட்டார்.

பாபா தன்னிடம் ஏதோ ஒருவிதத்தில் அதிருப்தி அடைந்திருப்பதாக ஜிம் உணர்ந்தார், மேலும் அவரது மனம் ஜுரத்தால் தடுமாறுவது போல் உணரத் தொடங்கியது. அவர் மீது பாபா சிறிதும் கவனம் செலுத்தாமல் அலட்சியமாக இருந்தார். பாபா வெகுதூரம் நடந்து சென்று, திடீரென திரும்பி, "ஜிம் எங்கே?" என்று கேட்க, ஜிம் ஓடி வந்து, அவரைக் கையால் பற்றிக் கொண்டபோது, பாபா அவருடன் வெகுதூரம் நடந்தார். பாபா எப்பொழுதும், ஒவ்வொருவரும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்பதற்காகவே விலகி இருப்பது போல பாவனை செய்து கொண்டிருந்தார் என்று ஜிம் நம்பினார்.

ஜிம் மிஸ்திரியின் மகன் மெஹர்வான் ஒருமுறை, பாபாவை சந்திக்க பூனா வந்து ஹோட்டலில் தங்கியிருந்த அவர், குருபிரசாத் செல்வதற்கு முன்னர், அன்று மாலை திரைப்படம் பார்க்கச் செல்வதற்காக, நுழைவுச்சீட்டு வாங்கச் சென்றார். குருபிரசாத்தில் அவர் பாபாவின் அருகில் அமர்ந்திருந்த வேளையில், பாபா அவரிடம் **"இன்று மாலை நீங்கள் பூனா மையத்திற்குச் செல்லுங்கள்"** என்று அறிவுறுத்தினார். மெஹர்வான் தனது சட்டைப் பையில் நுழைவுச்சீட்டு இருந்ததை உணர்ந்தாலும், பூனா மையம் செல்ல ஒப்புக்கொண்டார். பாபா எதுவும் பேசவில்லை, மெஹர்வான் மையத்திற்குச் சென்றார்.

மறுநாள் அவர் வந்தபோது பாபா அவரிடம், **"நேற்று இரவு பூனா மையத்திற்குச் சென்றீர்களா?"** என்று கேட்டபோது மெஹர்வான் 'ஆமாம்' என பதிலளித்தார். **"நீங்கள் திரைப்படத்திற்குச் செல்லவில்லையா?"** ஆச்சரியமடைந்த மெஹர்வான் இல்லை என்று பதிலளித்தார். பாபா உடனே,

"நான் உங்களை நினைத்து மகிழ்ச்சியடைகிறேன். நான் அனைத்தும் அறிவேன். இப்படியே எனக்குக் கீழ்ப்படிந்து இருங்கள்" என்று குறிப்பிட்டார்.

1959 ஏப்ரல் நடுப்பகுதியில், பாபா மீண்டும் ஒவ்வொரு நாளும் தரிசனத்தை அனுமதிக்கத் தொடங்கினார். மும்பை மற்றும் பிற இடங்களிலிருந்து அன்பர்கள் வந்து, அருகிலமைந்த விடுதிகளில் தங்கினர். அவர்கள் மதியம் மூன்று மணிக்கு குருபிரசாத் வரலாம் என நேரம் நிர்ணயிக்கப்பட்டது. தாரா தாதாசாஞ்சி, பாபாவைப் பார்க்க சற்று முன்னதாகவே புறப்பட நினைத்தார்; ஜிம் மிஸ்திரியும் அவருடைய யோசனைக்கு உடன்பட்டார். தாரா மதியம் 1:00 மணிக்கு வந்தபோது, பாபா அவரைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தார். ஹோமா தாதாசாஞ்சி (தாராவின் சகோதரர்) பிற்பகல் 3:00 மணிக்கு வந்த வேளையில், பாபா அவரிடம், **"ஏன் தாமதமாக வந்தீர்கள்?"** என்று கேட்டார்.

ஹோமா, "நான் சரியான நேரத்தில் வந்துவிட்டேன் பாபா" என்றார்.

"நீங்கள் குட்டித்தூக்கம் போட்டீர்களா?"

"ஆம்."

"நீங்கள் பூனாவிற்கு தூங்குவதற்காகவா அல்லது எனது சகவாசத்திற்காகவா வந்துள்ளீர்கள்? ஒரு மணியிலிருந்து தாரா இங்கே இருக்கிறார்."

"நாளையிலிருந்து நானும் சீக்கிரம் வருவேன் பாபா" என்று ஹோமி உறுதியளித்தார்.

பாபா புன்னகைத்து பதிலளித்தார், **"இது இன்றைக்கு மட்டுமே, நாளைக்கு அல்ல."**

ஒருமுறை ஹோமி, பாபாவுடன் கேரம் விளையாடி தோல்வியை சந்திக்கும் நிலையில் இருந்தார். அவருடைய இறுதி நகர்விலும் இலக்கைத் தவறவிட்டதால் ஏமாற்றமடைந்த ஹோமி, "ஹாய் ராமா (ஓ கடவுளே)!" என்று பெருமூச்சு விட்டார்.

சிரித்துக்கொண்டே பாபா குறிப்பிட்டார், **"ராமர் உங்கள் முன் அமர்ந்திருக்கிறார். வேறு எந்த ராமரை நீங்கள் அழைக்கிறீர்கள்?"**

ஒருமுறை குருபிரசாத்தில் பாபாவுடன் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தபோது, மஹாபலேஷ்வரில் நடந்த சம்பவத்தை விவரிக்குமாறு ஹோமியிடம் கேட்கப்பட்டது; அப்போது அவர், கடந்து சென்ற பேருந்திலிருந்து விழுந்த எண்ணெய் பீப்பாய், அவர் அருகிலிருந்த குன்றின் மேல் விழுந்ததில் அவர் மயிரிழையில் தப்பிக்க நேர்ந்தது. பாபா இவ்வாறு அவதானித்தார், **"ஹோமா என்னுடன் தந்திரமாக விளையாடிக் கொண்டிருந்தார், ஆனால் நான் அந்தத் தந்திர விளையாட்டில் ஒரு நிபுணர்! உண்மையில் அவர் மீண்டும் லண்டனுக்குச் செல்ல விரும்பினார், ஆனால் அவர் மும்பையில் தங்க விரும்புவதாக பாசாங்கு செய்து கொண்டிருந்தார். என்னைப் பொறுத்தவரை அவர் இங்கு என் அருகில் இருப்பதை நான் விரும்பினேன்."**

மற்றுமொரு முறை சீட்டு விளையாடும் போது, பாபா, இடையே விளையாடுவதை நிறுத்திவிட்டு, **"நீங்கள் எப்போதேனும் ஒரு பெண்ணைத் தொட்டது உண்டா?"** என்று ஹோமியிடம் கேட்டார்.

அதற்கு ஹோமி, "ஆம், பாபா, பலமுறை" என்று பதிலளித்தார்.

"நீங்கள் வேறு ஏதேனும் மோசமான செயல்களில் ஈடுபட்டிருக்கிறீர்களா?"

"இல்லை, பாபா."

பாபா அவரது மடியில் தலையை வைக்குமாறு சைகையால் தெரிவித்தார், பாபா ஒரு பிளாஸ்டிக் குச்சியால் முதுகில் வேகமாக அறைந்தார்.

ஒருமுறை மதுசூதன் குருபிரசாத்தில் சரியான நேரத்தில் வரத் தவறிய போது, பாபா அவருக்காகக் காத்திருந்தார். மதுசூதன் உள்ளே நுழையும் வேளையில் "மரமண்டை முட்டாள்" என்று கத்த வேண்டும் என்று அனைவரிடமும் கூறியிருந்தார். அவர் வந்ததும் அவருக்கு இந்த வரவேற்பு வழங்கப்பட்டது. மதுசூதன் திடுக்கிட்டுப் போனார், அங்கிருந்தவர்கள் அவருடைய முகபாவத்தைக் கண்டு சிரித்தனர்.

ஒரு காலகட்டத்தில், பூனா பஜனை குழுவின் குருபிரசாத் நிகழ்ச்சிகளுக்கு, பிரதாப் அகிர் தொடர்ந்து தாமதமாக வந்தார், இருப்பினும் பிற அனைவரும் அவரை சரியான நேரத்தில் வருமாறு எச்சரித்தனர். ஆனால் அவர் தொடர்ந்து தாமதமாக வந்தபோது, பாபா, இது ஏற்புடையது அல்ல என்ற தனது மறுப்பைத் தெரிவித்தார், **"உங்களை மழுங்கிய கத்தியால் துண்டு துண்டாக வெட்ட வேண்டும்! ஏன் மழுங்கிய கத்தி? கத்தி கூர்மையாக இருந்தால், எளிதில் வெட்டப்படும் ஆகையால், நீங்கள் அதிகம் பாதிக்கப்பட மாட்டீர்கள். ஆனால் கத்தி மழுங்கி இருந்தால், அது அதிக வலியை ஏற்படுத்தும்!"**

ஒரு சந்தர்ப்பத்தில், 1955 மெஹராபாத் சகவாசத்தில் பாபாவை சந்தித்த (JAGANNATH MAHARAJ) ஜகந்நாத் மஹாராஜ் உட்பட, பூனாவைச் சார்ந்த சில நன்கு அறியப்பட்ட, மக்களால் மதிக்கப்படும் நபர்களுடன், மும்பையில் வாழும் ஜோஷி மஹாராஜ் (JOSHI MAHARAJ) எனும் இறை நாட்டம் மிக்க ஒருவரும், மெஹர் பாபாவின் தரிசனத்திற்காக வந்தனர்.

ஜெகந்நாத் மஹாராஜைப் போலவே, ஜோஷி மஹாராஜைப் பின்பற்றுபவர்கள் பலர் இருந்தனர்; ஆனால் அவர் ஆன்மீகப் பாதையில் இதுகாறும் முன்னேறவில்லை. அவரும் முன்பு ஸாக்கோரியில் பாபாவை சந்தித்த அந்த நேரத்தில், அவர் பாபாவின் பாதங்களைத் தொட்டு வணங்கினார்; ஆனால் இந்த முறை, அவருடன் செல்வாக்கு மிக்க நபர்களும், அவரைப் பின்பற்றுபவர்கள் சிலரும் இருந்ததால், அவர் பாபாவுடன் கைகளைக் குலுக்கினார். பாபா உடனே, **"ஸாக்கோரிக்கு வந்தபோது நீங்கள் எனக்கு மாலை அணிவித்து, எனது பாதங்களைத் தொட்டு வணங்கினீர்கள்"** என்று சுட்டிக்காட்டினார். தனது தவறை உணர்ந்த ஜோஷி மஹாராஜ் உடனே பாபாவின் பாதங்களில் விழுந்து வணங்கினார்.

ஜோஷி மஹாராஜ் அங்கிருந்து சென்ற பிறகு, பாபா இவ்வாறு எடுத்துரைத்தார், **"அனைத்து உயர் அதிகாரிகளின் முன்னிலையில், அவரது அகந்தை, அவரை, எனது பாதங்களைத் தொடவிடாமல் தடுத்தது. ஆனால் நான் உஸ்தாத் (குருநாதர்). நான் வேண்டுமென்றே அவரை எனக்கு அடிபணிய வைத்தது, அவருடைய சொந்த நலனுக்காகத்தான்."**

லாஹூரைச் சார்ந்த ஹோமி தேசாய், பல வருடங்களுக்குப் பிறகு பாபாவின் தரிசனத்திற்காக வந்தவர், பாபாவிடம் தனது சில பிரச்சனைகளை முன்வைக்க ஆர்வமாக இருந்தார். ஆனால் அவரைப் பார்த்த பாபா, **"ஹோமி, ஐந்து நிமிடம் அமைதியாக இங்கேயே அமர்ந்து விட்டுச் செல்லுங்கள்"** என்று கூறினார். ஹோமி அமர்ந்தார், ஆனால் அவரது மனம் கொந்தளிப்பில் ஆழ்ந்தது. ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு, பாபா அவருக்கு விடையளித்த போது, மிகுந்த ஏமாற்றத்துடன் வெளியேறினார். தனக்குக் கிடைத்த வாய்ப்பை இழந்துவிட்டதாக நினைத்தார்; ஆனால் பாபா, ஒருவரை அவரிடம் அனுப்பி, அடுத்த நாள் வருமாறு கூறி அனுப்பினார். இரவு முழுவதும் அவர், கவலைகள் நிறைந்த மனத்துடன் விழித்திருந்தார். மறுநாள் காலையில் அவர் பாபா முன்னிலையில் தோன்றிய போது, பாபா மீண்டும் அவரிடம் அமைதியாக இருந்து ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு வெளியேறுமாறு கூறினார். ஹோமியின் முகம் சினத்தால் சிவந்தது, ஆனால் பாபா அவரை மறுநாள் மீண்டும் வருமாறு அறிவுறுத்தினார்.

மூன்றாவது நாள், மிகுந்த வருத்தத்துடன், ஹோமி குருபிரசாத்தை வந்தடைந்தார். தூக்கமின்மையால் கண்கள் சிவந்து, மனம் கொந்தளித்துக் கொண்டிருந்தது. **"ஐந்து நிமிடம் இங்கேயே அமர்ந்திருங்கள், எதுவும் பேச வேண்டாம்; அதற்குப் பிறகு நீங்கள் போகலாம்"** என்று பாபா கூறினார்.

முதலில், பாபா அவரை கவனிக்காமல் இருந்து, பின்னர் அவரைப் பார்த்த அடுத்த கணமே, மேகமூட்டம் நிறைந்த அவரது மனம் தெளிவடைந்து, உள்ளத்தில் அவர் தேடிய கேள்விகளுக்கான பதில்களை அடையப் பெற்றார். மிகுந்த மனமகிழ்ச்சி அடைந்த ஹோமி, தனது கைகளைக் கூப்பி, பாபாவிடம், நன்றி கூறிவிட்டு, "இத்தனை மெதுவாக ஒருவரை துடிதுடித்து சாகடிக்கும் நீங்கள், எப்படிப்பட்ட கசாப்புக் கடைக்காரர்!" என்றார்.

பாபா புன்னகைத்து பதிலளித்தார், **"மெதுவான சித்திரவதை மட்டுமே ஒருவரை இலக்கை நோக்கி அழைத்துச் செல்லும். விரைவான முடிவு உங்களை நீங்கள் இருக்கும் இடத்திலேயே வைத்திருக்கும்."**

ஒவ்வொரு வியாழக்கிழமையும் ஷிண்டே, காம்ப்ளே, போட்டே, டவ்லே (அனைவரும் பூனா வாசிகள்) ஆகியோர் குருபிரசாத்தில் பகல் பொழுதைக் கழிக்கும் வேளையில், இரயில் நிலையத்திற்கு அருகில் அமைந்த ஜால் தொராப்ஜியின் விருந்தினர் மாளிகையான எட்வர்ட் ஹோட்டலுக்கு மதிய உணவுக்காகச் செல்வதும், அதன் பின்னர், என்ன உண்டனர் என்று பாபா அவர்களிடம் கேட்பதும் ஒவ்வொரு முறையும் நிகழ்ந்தது.

அவர்கள் பல உணவுகளின் பட்டியலை முன்வைத்த வேளையில், பாபா அவர்களிடம் **"தொராப்ஜியை திவாலாக்க விரும்புகிறீர்களா? இரண்டு ரூபாய்க்கு இத்தனை வகை உணவுகளை எப்படி வழங்க முடியும்?"** ஷிண்டே, போட்டே, டவ்லே மூவரும் காம்ப்ளே மீது பழி சுமத்துவதை வழக்கமாகக் கொண்டனர்.

இது சில நாட்கள் நீடித்தது, ஒரு நாள், தொராப்ஜியை அழைத்து, பாபா இவ்வாறு அறிவுறுத்தினார், **"நாளை ஷிண்டே, காம்ப்ளே, போட்டே, டவ்லே நால்வரும் உங்கள் உணவகத்தில் உண்ண வரும் வேளையில், காம்ப்ளேக்கு மட்டுமே உணவு பரிமாறுங்கள். ஒவ்வொருவரிடமிருந்தும் இரண்டு ரூபாய் முன்கூட்டியே பெற்றுக் கொண்டு, பிற மூவருக்கும் உணவு பரிமாற வேண்டாம்; சூடாக உணவு தயாராகி வருவதாகவும், அவர்கள் சற்று காத்திருக்க வேண்டும் என்றும் கூறுங்கள், பின்னர் அவர்களுக்குத் தண்ணீர் வழங்கி, பத்து நிமிடங்களுக்குப் பிறகு, வெங்காயம்** (உணவுடன் வழக்கமான வழங்கும் பச்சை வெங்காயம்) **கொடுங்கள். அவர்களுக்கு வேறு எதையும் கொடுக்க வேண்டாம். அரை மணி நேரத்தில், அவர்களை அழைக்க அலோபாவை அனுப்புகிறேன்."**

தொராப்ஜி அறிவுறுத்தியபடி செய்தார். அவர் காம்ப்ளேக்கு மட்டுமே உணவு பரிமாறினார், பிற மூவருக்கும் வழங்கவில்லை. அலோபா வந்த வேளையில், காம்ப்ளே அவரது உணவை முடித்து அமர்ந்திருக்கவே, மூவரும் தண்ணீரைப் பருகிக்கொண்டு, வெங்காயத்தை சிறிது சிறிதாக கடித்துக் கொண்டிருந்தனர். அலோபா அவர்களை குருபிரசாத்திற்கு அழைத்துச் சென்றபோது, பாபா, **"இன்று என்ன உண்டீர்கள்?"** என்று கேட்டார்.

அவர்களின் முகங்கள் கீழே தொங்கிய நிலையில், ஷிண்டே, "உணவு தயாராகவில்லை பாபா, நாங்கள் அதற்காகக் காத்திருந்தோம்" என்று விரக்தியுடன் பதிலளித்தார்.

"ஏன் தயாராக இல்லை?"

"தொராப்ஜி திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே இருந்தார், 'ஐந்து நிமிடம் காத்திருங்கள்... இன்னும் ஐந்தே நிமிடங்கள்' என்று! ஆனால் அரை மணி நேரம் கழித்தும், எங்களுக்கு உணவு எதுவும் வழங்கவில்லை. அவர் பிற அனைவருக்கும் உணவு பரிமாறிக் கொண்டிருந்தார் - காம்ப்ளே உட்பட! - ஆனால் எங்களுக்கு அல்ல."

"நீங்கள் அவருக்கு பணம் கொடுத்தீர்களா?"

"நாங்கள் உள்ளே நுழைந்ததும் பணத்தைச் செலுத்தினோம்."

"இப்போது அதை மறந்துவிடுங்கள்; நீங்கள் இங்கே சாப்பிடலாம்." எனவே அவர்கள் மூவரும் குருபிரசாத்தில் மதிய உணவை உண்டனர், மேலும் தொராப்ஜி ஏன் இப்படி நடந்துகொண்டார் என்பதை அவர்கள் ஒருபோதும் அறியவில்லை. அதற்குப் பிறகு பாபா, **"இது மிகவும் விசித்திரமானது. காம்ப்ளேக்கு உணவு வழங்கிய அதே வேளையில், ஏன் உங்கள் மூவருக்கும் வழங்கப்படவில்லை?"** அது அவர்களுக்குத் தெரியாது. பாபா விளக்கினார்:

"நீங்கள் ஆரம்பத்தில் காம்ப்ளே மீது பழி சுமத்தினீர்கள், ஆனால் கடவுள் அவர் மீது கருணை காட்டி, உணவு வழங்கிய அதே நேரத்தில், நீங்கள் உணவு இல்லாமல் போக வேண்டியிருந்தது."

ஒரு நாள் மும்பையிலிருந்து பல பெண்மணிகள் குருபிரசாத்திற்கு வந்தனர். அவர்கள் என்ன உண்டனர் என்று பாபா கேட்டபோது, நர்கிஸ் தாதாசாஞ்சி, "(ஆட்டுக்கறி) மூளை மற்றும் கீரை" என்று பதிலளித்தார்.

பாபா வேடிக்கையாகக் கூறினார், **"உங்களுக்கெல்லாம் மூளை இருக்கிறது; இப்போது என் மூளையை சாப்பிடாதீர்கள்!"** (அதாவது, தேவையற்ற கேள்விகளால் அவரை சோர்வடையச் செய்ய வேண்டாம்.)

பாபா ஒருமுறை பபாய் தேசாயிடம் (மன்ஸாரியின் மைத்துனி) **"நீங்கள் கோழிக்கறி உண்பதுண்டா?"** என்று கேட்டார். பபாய் இல்லை என்றதும், **"நல்லது; இல்லையேல் கோழியாகப் பிறவி எடுக்க வேண்டியிருக்கும்!"** என்றார்.

பபாய் தேசாயின் மகள் மெஹர், அறிவியல் இடைத்தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தாலும், மருத்துவப் படிப்பில் இணைய இயலவில்லை. பாபா அவருக்கு அறிவுரை வழங்கினார்: **"இளங்கலை அறிவியல் வகுப்பில் இணைந்து, பின்பு மருத்துவப் படிப்பிற்கு விண்ணப்பிக்கவும், நீங்கள் மருத்துவராகவில்லை என்றால், நான் உங்கள் முகத்தை மீண்டும் பார்க்க மாட்டேன்."**

பாபா கேலி செய்கிறார் என்று அனைவரும் நினைத்தனர், ஆனால் அவர், **"நான் கேலி செய்யவில்லை, இதை நான் தீவிரமாகச் சொல்கிறேன்"** என்றார்.

"நான் மருத்துவப் படிப்பில் நுழையவில்லையென்றால், பாபாவின் தரிசனத்திற்கு வாய்ப்பில்லை. இது என்ன தாங்க முடியாத தண்டனை!" என்று கூறி மெஹர் அழத் தொடங்கினார்.

பாபா, **"ஏன் அஞ்சி அழுகிறீர்கள்? என்ன நடக்கிறது என்று முயற்சி செய்து பாருங்கள்"** என்றார். அதற்கிணங்க, தனது இளங்கலை அறிவியல் பட்டம் பெற்ற பிறகு, மெஹர் விண்ணப்பம் செய்து மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து மருத்துவரானார்.

மற்றுமொரு சந்தர்ப்பத்தில், பபாய் தேசாயின் கணவர் மினூ அவர்களுடன் பூனாவிற்கு வந்திருந்தார். பாபாவின் தரிசன நிகழ்ச்சி மதியம் 3:00 மணிக்குத் தொடங்கவிருந்ததால், மூவரும் வாசலுக்கு வெளியே நின்று கொண்டிருந்தனர். புற்றுநோயால் தாக்கப்பட்டு, அறுவை சிகிச்சைக்குப் பின்பு பபாய் சமீபத்தில் குணமடைந்து, பலவீனமாக இருந்ததால், வெயிலில் நீண்ட நேரம் நிற்க முடியவில்லை. ஆண்கள் முதலில் உள்ளே வர அனுமதிக்கப்படவே, மினூ உள்ளே சென்றார்.

பாபா அவரிடம், **"பபாய் மற்றும் மெஹர் எங்கே?"** என்று வினவ, அவர்கள் வெளியே வாசல் அருகே நிற்கிறார்கள் என்று மினூ பதிலளித்தார். பாபா சீற்றத்துடன் **"உங்களுக்கு ஏதேனும் அறிவு உள்ளதா? பபாய் அறுவை**

சிகிச்சையிலிருந்து மீண்டு வரும் வேளையில், நீங்கள் அவரை வெயிலில் நிற்க வைக்கிறீர்கள்? நீங்கள் போய் வாயிலில் நின்று அவர்களை உள்ளே அனுப்புங்கள்!" என்றார்.

மினூவைப் பாதுகாக்கும் விதத்தில் எரச் கூறினார், "மினூவை குறைகூற முடியாது பாபா. பெண்களின் குழு வருவதற்கான நேரம் மூன்று மணியாக நிர்ணயிக்கப்பட்டது, எனவே உங்கள் கட்டளைக்கு எதிராக மினூ அவர்களை எவ்வாறு அழைத்து வர முடியும்?"

"அது அவருடைய தவறோ இல்லையோ, நான் அப்படிச் சொன்னால், அது அவருடைய தவறு!" என்று பாபா வலியுறுத்திக் கூறினார்.

எனவே, பபாயும், மெஹரும் உள்ளே வந்தபோது, அவரிடம் நலம் விசாரித்துவிட்டு, மும்பையில் பல வருடங்களுக்கு முன்பு நடந்த ஒரு சம்பவத்தை மீண்டும் எடுத்துரைக்குமாறு பாபா கேட்டுக் கொண்டார். பபாய் பின்வரும் கதையைக் கூறினார்: "ஒருமுறை (1920 ஆண்டுகளில்) பாபா, மும்பையில் காக்கா பாரியா இல்லத்தில் தங்கியிருந்தார். ஒரு பெண்மணி பாபாவிடம் வந்து, அவருடைய அன்பான தோழி ஒருவருக்கு பல மணிநேரம் குழந்தைப்பேறு வலி இருந்தும், இன்னும் குழந்தை பிறக்கவில்லை என்று முறையிட்டார். அதைக் கேட்டு பாபா ஒரு வார்த்தையும் பேசாமல், தன் உடலை ஒரு போர்வையால் மூடிக்கொண்டு, தூங்குவது போலத் தோற்றமளித்தார். அந்தப் பெண்மணி திகைத்துப்போய் நினைத்தார்: 'எனது தோழி வலியால் துடித்துக் கொண்டிருக்கும் வேளையில், தூங்குவதற்காகச் சென்ற மெஹர் பாபா என்ன ஒரு குருநாதரா?' அவர் திரும்பிச் சென்ற பிறகு, பாபா எழுந்து நீராடினார். ஆனால், இந்த நேரம் அல்லாத நேரத்தில், அவர் இதுபோல செய்ததில்லை. அந்தப் பெண்மணி தனது தோழியிடம் திரும்பிச் சென்றபோது, பாபாவிடம் தனது தோழியின் அவலநிலையை எடுத்துரைத்துக் கொண்டிருந்த அந்த நேரத்தில், தோழி சிரமம் எதுவுமின்றி, குழந்தையை ஈன்றெடுத்த பின்னர் ஓய்வெடுத்துக் கொண்டிருந்ததைக் கண்டார்."

வேறொரு நாள், குருபிரசாத்தில் தமது அன்பர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த போது, பாபா, **"நான் 700 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் வருவேன்"** என்று கூறினார்.

மெஹர்பாய் மெர்ச்சன்ட் கேட்டார், "பாபா, நீங்கள் 700 ஆண்டுகளுக்குப் பிறகு திரும்பி வருகிறீர்கள், ஆனால் அதற்கிடையில் நாங்கள் என்ன செய்வது?"

அதற்கு பாபா, **"700 வருடங்கள் தூங்குங்கள். பின்பு நான் வந்து உங்களை முத்தமிட்டு எழுப்புகிறேன்!"** என்றார்.

பெர்விஸ் தலாட்டி, பாபாவின் தரிசனத்திற்காக பூனா வந்த வேளையில், பாபா இவ்வாறு அறிவுறுத்தினார்: **"நாளை முதல் மும்பை குழுக்கள், எனது மார்பில் அமர்ந்திருக்கும். எவருக்கேனும் சளி பிடித்திருந்தால் எனக்கும் சளி பிடிக்கும். ஆதலால், அவர்கள் வரும் வேளையில் ஒவ்வொருவருக்கும் ஒரு அனாசின் மாத்திரையை வழங்குங்கள். அதை வாங்குவதற்கு உங்களிடம் தேவையான பணம் உள்ளதா?"**

பெர்விஸ், “ஆமாம் பாபா, நான் அதைச் செய்கிறேன்” என்று பதிலளித்தார்.

மறுநாள் ஒவ்வொருவருக்கும் ஒரு மாத்திரையை வழங்கினார். அவர் மருந்தகத்தில் 100 ரூபாய் நோட்டைக் கொடுத்து, திரும்பக் கிடைத்த பணத்தைக் கணக்கிடாமல் தனது பையில் வைத்தார். அவர் பாபாவிடம் வந்ததும், **“அனைவருக்கும் மாத்திரைகளை வழங்கினீர்களா?”** என்று கேட்டார்.

“ஆம்,” பெர்விஸ் பதிலளித்தார்.

“எவ்வளவு பணம் செலவானது?” பெர்விஸுக்கு உறுதியாக தெரியவில்லை. பாபா மீண்டும் கேட்டார், **“நீங்கள் மருந்தகத்தில் எவ்வளவு கொடுத்தீர்கள்?”**

“ஒரு 100 ரூபாய் நோட்டு.”

“கடைக்காரர் உங்களிடம் எவ்வளவு திருப்பிக் கொடுத்தார்?”

“நான் அதை கணக்கிடவில்லை.”

பாபா அவரை எச்சரித்தார், **“நினைவில் கொள்ளுங்கள், எப்பொழுதும் திரும்பி வரும் பணத்தை எண்ணவேண்டும். இது விஷயத்தில் உங்கள் பெற்றோரையும் சேர்த்து எவரையும் நம்பாதீர்கள்! உங்கள் தாய் உங்களுக்கு ஏதாவது பணம் கொடுத்தால் கூட, அதை எண்ணுங்கள். நான் உங்களுக்கு கொஞ்சம் கொடுத்தாலும், அதையும் எண்ணுங்கள். என்னையும் பண விஷயத்தில் நம்பாதீர்கள்.”**

அன்று முதல் பெர்விஸ், பாபாவின் அறிவுரையைப் பின்பற்றினார். ஒருமுறை கடைக்காரர் ஒருவர், சரியான தொகையை விட அதிகமாக அவரிடம் திருப்பிக் கொடுத்தார். அவர் அதை ஒருமுறை எண்ணி, மீண்டும் கணக்கிடத் தொடங்கினார். அந்த மனிதர் உடனே, “மேடம், இது குறையவே முடியாது; ஏன் திரும்பத் திரும்ப எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்?” என்று கேட்டார்.

பெர்விஸ் பதிலளித்தார், “இது குறைவாக இல்லை - அதிகமாக உள்ளது!”

“இருக்க முடியாது! நான் 25 வருடங்களாக வியாபாரத்தில் இருக்கிறேன், எந்த ஒரு வாடிக்கையாளரும் என்னிடம் அப்படிச் சொன்னதில்லை.” எனவே பெர்விஸ் மீதிப் பணத்தைத் திரும்பக் கொடுத்தார், அதை எண்ணிப் பார்த்ததில் அவர் தவறிழைத்திருப்பதைக் கண்டார், அவருடைய நேர்மையால் மிகவும் ஈர்க்கப்பட்டார்.

மற்றுமொரு முறை பெர்விஸ், தனது வாரச் சம்பளத்தில் பத்து ரூபாய் கூடுதலாக இருந்ததைக் கண்டுபிடித்தார். அவர் காசாளரிடம் சென்றபோது, அவர் பணம் என்ன குறைவாக இருக்கிறதா என்று கேட்டார். காகித உறையில் பத்து ரூபாய் அதிகமாக இருந்ததாகவும், அதைத் திருப்பிக் கொடுக்க வந்ததாகவும் பெர்விஸ் பதிலளித்தார். “எனக்குத் தெரிந்த ஒரே நபர் நீங்கள் மட்டுமே இந்த வழியில் பணத்தைத் திருப்பித் தருபவர்” என்று அந்த நபர் நன்றியுடன் கூறினார், “வேறு எவரும் அதைக் கண்டுகொண்டிருக்க மாட்டார்கள்.”

மும்பையில், மன்ஸில்-இ-மீமில் (MANZIL-E-MEEM) பாபாவின் நெருங்கிய தொடர்பில் இருந்த, ஆனால் 1933 முதல் பாபாவை சந்திக்காத முன்னாள் கிரிக்கெட் வீரர் ஹோமி வஜிப்தரை (HOMI VAJIFDAR) பெர்விஸ் சந்தித்தார். பாபா அவரை அன்புடன் நினைவு கூர்ந்து, அவருக்கு அனுப்பிய அன்புச் செய்தியை, பெர்விஸ் அவரிடம் வழங்கிய போது, வஜிப்தர் அழுதார். அவருக்கு பாபாவைக் குறித்த உள்ளார்ந்த உணர்வுகள் இருந்தபோதிலும், வஜிப்தர் ஒருபோதும் பாபாவைப் பார்க்க வரவில்லை; 1961ஆம் ஆண்டில் காலமானார்.

இந்தக் காலகட்டத்தில், தூன் ஸட்டா, பிந்த்ரா ஹவுஸிலிருந்து பாபாவின் தரிசனத்திற்காக வந்தார். ஊனமுற்றவராகையால், கேஸர் என்ற அவரது பணிப்பெண் அவரை சக்கர நாற்காலியில் அழைத்து வந்தார். பாபா அவரிடம், **"உங்களின் இயலாமையைக் கண்டு, நான் உங்களைக் குணப்படுத்த வேண்டும் என்று உணர்கிறேன், ஆனால் எனது மௌனத்தைக் கைவிடும் வரை, நீங்கள் இதைத் தாங்கிக்கொண்டு, பொறுமையாக இருப்பது நல்லது"** என்று கூறினார்.

தூன் சாதுரியமாக பதிலளித்தார், "இந்த நோக்கத்திற்காக நான் உங்களிடம் வரவில்லை. எனக்காக நீங்கள் சிரமப்படுவதை நான் விரும்பவில்லை. எனக்கு உங்கள் அன்பு மட்டுமே வேண்டும். இந்த உடல் எப்படியும் ஒரு நாள் போயாக வேண்டும்."

அவருடைய பதிலில் பாபா மிக்க மகிழ்ச்சி அடைந்ததாகக் கூறினார்.

தூன் பல ஆண்டுகளாக தசைச் சிதைவு நோயால் அவதிப்பட்டார், மேலும் அவரது உடலின் ஒவ்வோர் எலும்பும் வலித்தது. பாபா அவரிடம் கூறினார், **"ஒருவர் கை கால்களை பயன்படுத்த இயலாமல் உதவியற்றவராக உள்ளார் என்பதில் சந்தேகமில்லை, ஆனால் கடவுளின் சினத்தை எதிர்கொள்ளும் போது, ஒருவரைக் காப்பாற்ற கைகளும் கால்களும் கூட போதுமானதாக இராது!"**

தூனின் சகோதரி ரோஷன் கேரவாலா, 1959 பிப்ரவரி 21அன்று ஒரு மகளை ஈன்றெடுத்தார், அவருக்கு பாபா, மெஹரா என்று பெயரிட்டார். ஏப்ரல் மாத இறுதியில், அவர்களின் உறவினர், மெஹரு மேத்தா ஒரு மகனை ஈன்றெடுத்தார், அவருக்கு பாபா, மேர்வான் என்று பெயரிட்டார். மெஹரு மேத்தாவும் பிந்த்ரா ஹவுஸில் தங்க வந்தார்; பாபா, பெண் மண்டலியுடன் அங்கு வருகை தரும் போதெல்லாம், அவர் இரண்டு குழந்தைகளையும் அரவணைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். பரிமாறப்பட்ட பானகத்தைப் பருகிய பிறகு, பாபாவும் மண்டலியும் குருபிரசாத் திரும்பிச் சென்றனர்.

மெஹரா கேரவாலா பிறந்தபோது, ரோஷனுக்கு இரண்டு அல்லது மூன்று தையல்கள் போட வேண்டியிருந்தது, ஆனால் மருத்துவர் அவற்றை வெளியே எடுத்தபோது, ஒன்று தவறுதலாக அகற்றப்படாமல் இருந்தது. ரோஷனுக்கு கடுமையான அசௌகரியம் ஏற்படவே, மருத்துவரிடம் ஆலோசனைக்காகச் சென்றவரைப் பரிசோதித்து, எல்லாம் சரியாகிவிட்டது

என்று கூறினார். ஆனால் அவருடைய பிரச்சினை நீடித்தது மட்டுமின்றி அதிகமானது. ஒரு நாள் பாபா தரிசனம் வழங்கச் சென்றபோது, அவர் சோகமாக இருப்பதைக் கண்டு, காரணத்தைக் கேட்க, அவர் நடந்ததைக் கூறினார். பாபா உடனடியாக குருபிரசாத்திலிருந்து கோஹெரை வரவழைத்து, அவரிடம் பிரச்சினை கூறப்பட்டபோது, அவர், "அறுவை சிகிச்சைக் கருவிகளை என்னுடன் கொண்டு வரவில்லை" என்றார்.

பாபா அவரிடம் குறுக்காக கேட்டார், "**அப்படியானால் நீங்கள் என்னை முறைத்துப் பார்க்க இங்கு வந்தீர்களா?**"

கோஹெர் உடனே திரும்பிச் சென்று தேவையான மருத்துவப் பொருட்களுடன் திரும்பி வந்தார். பரிசோதனையில், ஒரு தையல் அகற்றப்படாமலும், தோலின் அடுக்கு ஒன்றில் மூடப்பட்டிருப்பதையும் அவர் கண்டார். "**அதை அகற்றிவிடுங்கள்**" என்று பாபா கட்டளையிட்டார்.

"பாபா, இது மருத்துவமனையில் செய்யப்பட வேண்டும், இங்கே இல்லை" கோஹெர் எதிர்ப்புத் தெரிவித்தார்,

"**ஓ கடவுளின் நிமித்தம், வாக்குவாதத்தை விட்டுவிட்டு, அதை வெளியே எடுத்துவிடுங்கள்!**" பாபா வலியுறுத்தினார்.

கோஹெர் தயக்கத்தை வெளிப்படுத்தி, ரோஷனை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல பலமுறை கோரிக்கைகளை முன்வைத்த போதிலும், பாபா, அங்கே, அப்பொழுதே அறுவை சிகிச்சை செய்யுமாறு வலியுறுத்தினார். அவர் கோஹெருக்கு உறுதியளித்தார், "**பயப்படாதீர்கள்; எனது புகைப்படத்தைப் பார்த்துக் கொண்டே இருங்கள், அது உங்கள் நரம்புகளை உறுதிப்படுத்தும்.**" தோலின் அடுக்கைத் திறந்து, கோஹெர் தையலை வெளியே எடுத்தார், ஆச்சரியப்படும் விதத்தில் ரோஷன் எந்த வலியையும் உணரவில்லை.

கெய்மாய் ஜெஸவாலாவின் பணிக்கார பெண்மணி கேஸரிடம், வீட்டிலிருந்து சிறு சிறு பொருட்களைத் திருடும் பழக்கத்தை கைவிடுமாறு பாபா பலமுறை முன்னர் எச்சரித்திருந்தார். பணிப்பெண் மனதளவில் சற்று 'கவனமாக' சிறிது காலம் இருந்தாலும், மீண்டும் அதே பலவீனத்திற்கு ஆளானார்.

ஒரு நாள் பிற்பகல், பாபா மண்டலியுடன் பிந்த்ரா ஹவுஸிற்குச் சென்றபோது, கெய்மாய், கேஸரைக் குறித்து புகார் செய்தார். கேஸரை அருகில் அழைத்து பாபா, "**மீண்டும் ஒருமுறை திருட்டில் ஈடுபட்டால், அடுத்த பிறவியில் பன்றியாகப் பிறப்பீர்கள்!**" என்று கடுமையான பார்வையுடன் சைகையால் தெரிவித்தார். அந்த எண்ணமே கேஸரை மயக்கத்தில் ஆழ்த்தியது, மேலும் மனம் வருந்திய முகத்துடன், இனி ஒருபோதும் இதுபோன்ற திருட்டில் ஈடுபட மாட்டேன் என்று உறுதியளித்தார். அவர் அறையை விட்டு வெளியேறியதும், பாபா உள்ளூர ஓசையின்றி மகிழ்ச்சியுடன் சிரித்தார்.

அவர் ஃபிரான்சிஸ் பக்கம் திரும்பி, "**நீங்கள் ஒரு மனித உடலை அடையப் பெற்ற பின்பு, பின்னோக்கி விலங்கு வடிவங்களுக்குச் செல்வது என்பது இல்லை**" என்று குறிப்பிட்டார்.

மற்றொரு முறை பிந்த்ரா ஹவுஸில், பப்பா ஜெஸவாலா அல்லது வேறு எவரோ மண்டலியை விமர்சித்து ஏதோ கூறினர். பாபா சீற்றமடைந்து, **"நான் உங்கள் கடவுள், நான் கடவுள் என்பதை நீங்கள் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும் - ஆனால் எனது மண்டலி எனக்குக் கடவுள்!"** என்றார்.

ஆதி சீனியர் 1959 ஏப்ரல் 16 அன்று மஹாபலேஷ்வருக்கு வருகை தந்திருந்த கோதாவரி மாய்க்கு ஒரு செய்தியை வழங்க அனுப்பப்பட்டார். 17ஆம் தேதி ஆதி, குருபிரசாத்திற்கு வந்து கோதாவரி மாயுடனான தனது உரையாடல்களை பாபாவிடம் தெரிவித்தார். மஹாபலேஷ்வரிலிருந்து கோஹியார் சத்தாரவாலாவும் ஆதியுடன் வந்திருந்தார். பாபா, அவர் உடல் மெலிந்து இருப்பதாகக் குறிப்பிட்டார்; கோஹியார் உடனே, "நான் புக்காரின் அருகில் அமர்ந்திருப்பதால் அவ்வாறு தோன்றுகிறேன்" என்று கேலி செய்தார்.

பாபா கூறினார், **"ஒருவேளை என்மீது நீங்கள் கொண்ட அன்பினால் கூட இருக்கலாம்."**

அன்று, பூனாவில் வாழ்ந்த ஸர்தார் ராஸ்தேயின் (SARDAR RASTE) குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு, அவரது பெரிய இல்லமான 'ராஸ்தேவாடா'வில் (RASTEWADA) பாபா தரிசனம் வழங்கினார். ராஸ்தேயும் அவரது மனைவியும் பின்னர் ஒரு தனிப்பட்ட சந்திப்பிற்காக குருபிரசாத் வந்தனர்.

ஏப்ரல் 18 அன்று மதியம் குருபிரசாத்தில், ஜால்பாய் சமீபத்தில் எடுத்த பாபாவின் பல புகைப்படங்களைக் காட்டினார். பெஹ்ராமின் குடும்பத்தினரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

19ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 9:00 மணி முதல் மதியம் வரை பொது தரிசன நிகழ்ச்சி நடைபெற்றது. காக்கிநாடாவைச் சேர்ந்த போனலா வெங்கடேஸ்வரலு (BONALA VENKATESWARLU OF KAKINADA), பாபாவை சந்தித்தார், மல்லிகார்ஜுன ராவ் அவருடன் 20 பேரையும், டெஹ்ரா டூனிலிருந்து பிரகாஷ்வதி பத்து பேரையும் அழைத்து வந்தனர்.

மும்பையிலிருந்து ஸொராப்ஜி ஸிகன்போரியா, கிஷின்சந்த் கஜ்வானி ஆகியோர் வந்தனர். பாபா அவர்களிடம், **"நீங்கள் எனக்கு 100 சதவீதம் கீழ்ப்படிவீர்களா?"** என வினவிய வேளையில் 'ஆம்' என்று அவர்கள் பதிலளிக்கவே, பாபா இருவரிடமும், **"உங்கள் ஆடைகளை களைந்துவிட்டு பஜாரில் நிர்வாணமாக நடந்து செல்லுங்கள்"** என்று அறிவுறுத்தினார். ஸிகன்போரியா அதிர்ச்சியடைந்தார், ஒரு வார்த்தை கூட பேச முடியவில்லை, ஆனால் கஜ்வானி, பாபாவின் விருப்பமாக இருந்தால் அதைச் செய்வேன் என்றார். ஆனால் பாபா அவரைத் தடுத்து, **"கவலைப்பட வேண்டாம், இது ஒரு சோதனை மட்டுமே"** என்று கூறினார்.

ஸொராப்ஜி, கிஷின்சந்த் இருவரும் பாபாவுக்காக மகத்தான பணியை செய்தனர், மேலும் பாபா அவர்களை 'மும்பையின் இரட்டை சகோதரர்கள்' என்று குறிப்பிடுவது வழக்கம்.

அடுத்த நாள், பாபா, குடும்ப சாஸ்திரி மற்றும் அவரது மகன் பாஸ்கர் ஆகியோருடன் நிகழ்த்திய நேர்காணலில், பாஸ்கர் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான பாபாவின் வழிகாட்டுதலை நாடினார். பாபா, பாஸ்கரை அஹமதுநகருக்கு அனுப்பி, அங்கு அவரை குஷ்ரு குவார்ட்டர்ஸில் அமைந்த ஆதி சீனியர் அலுவலகத்தில் எழுத்தராக பணியமர்த்தினார்.

அன்றைய தினம், ஸர்தார் ராஸ்தே, அவரது குடும்பத்தினர், ஸிகன்போரியா, அவரது உறவினர்கள், கஜ்வானி மற்றும் பிறருடன் பாபா ஒரு நேர்காணலை நிகழ்த்தினார். 23ஆம் தேதி, பாபா ஏர்வாடாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டபோது, அங்கு வாழ்ந்த ஏழை பழங்குடியினரின் குழந்தைகளுக்கு அவர் தரிசனம் வழங்கினார். ஏப்ரல் 28 அன்று பாபா, மண்டலியுடன் பிந்த்ரா ஹவுஸ் மற்றும் பாபா இல்லத்திற்கு வருகை தந்தார்.

கலி:போர்னியாவின் லேக்ஸைடை சேர்ந்த எரிக் பேஸ் (ERIC BASS OF LAKESIDE, CALIFORNIA) என்ற அமெரிக்கர் ஏப்ரல் 29ஆம் தேதி குருபிரசாத்தில் பாபாவை சந்தித்தார். தனது அரை மணி நேர சந்திப்பின் போது, பாபா விளக்கினார், **"அன்பின் மூலம் குருநாதரிடம் சரணடைவதுதான் பரமாத்மாவை அறியும் ஒரே வழி."**

ஒரு நாள் பாபாவின் தரிசனத்திற்காக, பாவ்நகரி மிட்டாய்வாலா (BHAVNAGRI MITHAIWALA) வந்திருந்தார், அவரை தேஷ்முக் அறிமுகப்படுத்தினார். அவரது குடும்பப் பெயருக்கு இணங்கினாற்போல் அவர் ஓர் இனிப்புப்பண்ட வியாபாரி. பாபா வேடிக்கை கலந்த தொனியில், **"தேஷ்முக்கிற்கு இனிப்புகள் கடன் வழங்க வேண்டாம். அவர் அவற்றை உண்ட பின்பு, விலை விவரச் சீட்டை இங்கே அனுப்பிவைப்பார்!"** என்று எச்சரித்தார்.

1959 கோடையில் ஒருமுறை, தேஷ்முக்கின் முழுக் குடும்பமும் பாபாவின் தரிசனத்திற்காக வந்தபோது, அவரது மகள் சஞ்ஜீவனி, பாபாவிடம் முறையிட்டார், "பாபா, எனது தந்தை பல வருடங்களாக உங்கள் தொடர்பில் இருக்கிறார், ஆனால் அவர் நடந்துகொள்ளும் விதம் எங்களைத் தொடர்ந்து சங்கடத்திற்குள்ளாக்குவது ஏன்? அவருடன் ஒப்பிடுகையில் நாங்கள் மிகவும் விவேகமிக்கவர்கள்."

பாபா உடனே, **"என்னுடனான அவரது தொடர்பின் பலனை உங்களுக்குக் காட்டுகிறேன்"** என்றார். சஞ்ஜீவனியிடம், **"இங்கே அனைவரின் முன்னிலையில் உங்கள் ஆடைகளைக் களைந்து விடுங்கள்!"** என்று கட்டளையிட்டார்.

திகைத்துப் போன சஞ்ஜீவனி, “இவர்களுக்கெல்லாம் முன், பாபா? நான் எப்படி அதைச் செய்ய முடியும்?” என்று கேட்டார்.

பாபா, தேஷ்முக்கிடம் அவரது ஆடைகளைக் களையச் சொன்ன அந்த கணமே, அவர் தனது ஆடைகளை கழற்றத் தொடங்கினார். அவரைத் தடுத்து நிறுத்திய பாபா, சஞ்ஜீவனியை நோக்கி, **“இப்போது, எனது தொடர்பின் பலன் என்ன என்பதை உங்கள் கண்களால் பார்க்கமுடிகிறது. எனக்காக உங்கள் தந்தை எல்லாவற்றையும் செய்கிறார்; நீங்கள் செய்யவில்லை! அவருடைய வெளியளவிலான நடத்தையை வைத்து அவரது அன்பை எடைபோடாதீர்கள்.”**

ஒரு முறை பாபா, ‘**ஒவ்வொரு நாளும் மதியம், தேநீருடன் வெண்ணெய் தடவிய சப்பாத்தி சாப்பிடுமாறு**’ தேஷ்முக்கிற்கு அறிவுறுத்தினார். தேஷ்முக் சப்பாத்தியில் வெண்ணெய் தடவி, அதை சாப்பிடும் முன் தேநீரில் ஊறவைப்பதைப் பழக்கமாகக் கொண்டார். இது பாபாவை அகமகிழச் செய்தது; பாபா அவரிடம், **“நீங்கள் எப்பொழுதும் இப்படித்தான் சப்பாத்தி, வெண்ணெயை சாப்பிடுகிறீர்களா? லண்டனில் பயின்று எப்படிப் பட்டம் பெற்றீர்கள்?”** (தேஷ்முக் தத்துவத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர்.)

தேஷ்முக் அப்பாவித்தனமாக பதிலளித்தார், “வெண்ணெய் தடவிய சப்பாத்தியை தேநீரில் தோய்த்தால் மிகவும் சுவையாக இருக்கும் பாபா. இதை முயற்சி செய்து பாருங்கள்” என்றதும் பாபா சிரித்தார்.

ஓர் உபசரிப்பு விருந்தாக, டாக்டர் தேஷ்முக், மண்டலிக்கு ஐஸ்கிரீம் வழங்க விரும்பினார், பாபா அதை அனுமதித்தார். அப்போது அங்கிருந்த மெஹர்ஜியிடம் தேஷ்முக், ‘குவாலிட்டி’ ஐஸ்கிரீமின் தரம் எப்படி என்று கேட்டார். மெஹர்ஜி கூறினார், “நீங்கள் குவாலிட்டி ஐஸ்கிரீம் வழங்குவதானால், உங்கள் தோல் உரிக்கப்படும் (அதாவது, இதன் விலை மிகவும் அதிகம், ஏனெனில், இது சிறந்த ரகங்களில் ஒன்றாகும்). பலருக்கு வழங்கவேண்டி இருப்பதால் சற்று மலிவான வகையை வரவழைப்பது நல்லது.”

தேஷ்முக் இதைக் கருத்தில்கொண்டு, “நீங்கள் சொல்வது சரிதான். நான் இவ்வளவு செலவு செய்ய விரும்பவில்லை” என்று கூறி, வேறொரு தயாரிப்பிலான ஐஸ்கிரீம் வாங்கி வந்ததை, பாபா அனைவருக்கும் விநியோகித்தார்.

புக்கார் தனது பங்கை விரைவாக முடிக்க விரும்பி, அதைத் தண்ணீரில் கலந்து, திரவமாக்கி அருந்தினார். அதை கவனித்த பாபா, **“உலகில் எவரேனும் ஐஸ்கிரீமை தண்ணீரில் கலந்து உண்பதுண்டா? நீங்கள் ஒரு முட்டாள்! எனது பிரசாதத்தின் மீது உங்களுக்கு எந்த மரியாதையும் இல்லை! உங்கள் பெட்டி படுக்கைகளைச் சுருட்டிக்கொண்டு உடனே ஹமிர்பூருக்குப் புறப்படுங்கள்!”** என்றார்.

பாபா, மெஹர்தாஸிடம் கேட்டார், **“நீங்களும் உங்கள் ஐஸ்கிரீமை தண்ணீரில் கலந்தீர்களா?”** அவர் இல்லை என்றதும், **“அப்படியானால்**

புக்காரை நீங்கள் ஏன் தடுக்கவில்லை? நீங்களும் மூட்டையைக் கட்டிக் கொண்டு புறப்படுங்கள்!" என்று கட்டளையிட்டார்.

பாபா அவர்களைக் கடுமையாகத் தாக்கி, புக்கார் ஒரு குழந்தையைப் போல் அழுவதுவரை வசைபாடி, இறுதியில் இருவரையும் மன்னித்தார். மண்டலிக்காக தேஷ்முக் வழங்கிய மலிவான ஐஸ்கிரீம் மிகவும் விலை உயர்ந்ததாக மாறிவிட்டது!

இந்தக் காலகட்டத்தில் பாபா, அடிக்கடி, தேஷ்முக், நானா கேர், பால் நாத்து ஆகியோரிடம் பகவத் கீதையிலிருந்து **'ராமாய ராமபத்ரை'** (RAMAYA RAMABHADRAI, 'ராமருக்கு வந்தனம்'), கிருஷ்ணா பறைசாற்றியது போல், **'யதா யதாஹி தர்மஸ்யே'** (YEDA YEDAHI DHARMASYE, 'தர்மத்தின் திரி தணிந்து எரியும் போது நான் பூமியில் அவதரிக்கிறேன்') மேலும், **'ஷிவோஹம், ஷிவோஹம்!'** (SHIVOHUM, SHIVOHUM, 'நான் சிவன்!') என்ற நன்கு அறியப்பட்ட சமஸ்கிருத ஸ்லோகங்களை மொழியும்படிக் கேட்டுக் கொண்டார்.

பாபா ஒருமுறை குறிப்பிட்டார், **"நான் வெளிப்படும் போது, ஒரே நேரத்தில் ஓராயிரம் இடங்களில் தென்படுவேன்!"**

கூட்டத்தில் ஒருவர் கேட்டார், "பாபா, நீங்கள் இப்போது உங்களை ஏன் வெளிப்படுத்தக்கூடாது?"

பாபா பதிலளித்தார், **"என்னை வெளிப்படுத்துவது மிகவும் எளிதானது. நீங்கள் என்னை உணரத் தயாராகும் வரை, என்னை மறைத்துக் கொள்வது கடினம். இது ஒருவர் காற்றைக் கடப்பது போன்றது, அதை விட்டுவிடுவது எவ்வளவு எளிது. தக்க தருணம் வரும் வரை அதைப் பற்றிபிடித்துக் கொள்வது என்பது, கடினமான மற்றும் சங்கடமான நேரம் மட்டுமல்ல, வலியாகவும் இருப்பது கூட, அதுதான் எனது நிலை."**

1959 மே 1 வெள்ளிக்கிழமை அன்று, பாபாவுடன் அந்த நாளைக் கழிப்பதற்காக டாக்டர் டான் மெஹராபாத்திலிருந்து குருபிரசாத்திற்கு வந்தார். அனைவரும் ஆச்சரியப்படும் விதத்தில், பாபா, அன்று ஊன்றுகோலைப் பயன்படுத்தாமல், சுதந்திரமாக வராண்டாவில் ஏறி இறங்கினார். பாபா இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்:

நான் எப்படி நடக்கிறேன் என்று எனக்கு மட்டுமே தெரியும். இடுப்புப் பாகத்தில் கடுமையான வலி இன்னும் உள்ளது. இடுப்பின் குழிவுப்பாகம் தளர்வாகி, மூட்டுகள் சரியாகப் பொருந்திய நிலையில் இல்லை. நான் நடக்கும்போது 'கிளிக்-கிளாக்" என்ற சத்தம் கேட்கிறது. இப்படிப்பட்ட நிலையில் எந்த ஒரு மனிதனும் நடக்க முடியாது.

என்னை நம்புங்கள், முழுமையான தெய்வீக சக்தி ஒன்றுதான் என்னை நடக்க வைக்கிறது. முன்பு, நானும் ஊன்றுகோல் இல்லாமல் நடப்பேன் என்று எதிர்பார்க்கவில்லை, ஆனால் இப்போது நான், எனது பௌதீக உடலைக் கைவிடுவதற்கு முன்பு நடந்தாக வேண்டும். இனி வரும் மூன்று மாதங்களில் நான் சுதந்திரமாக நடப்பதை நீங்கள் காண்பீர்கள்,

நிச்சயமாக நான் இதற்கு முன்பு நடந்தது போல் அல்ல. ஆனால் நான் ஊன்றுகோல் இல்லாமல் அங்கும் இங்கும் நகர்ந்து கொண்டிருப்பேன்.

சந்தேகத்திற்கு இடமின்றி, நான் ஆதிகாலத்தவன், அவதார புருஷன். பிரபஞ்சம் முழுவதையும் தாங்குபவன், தம் உடலைத் துறக்கும் முன்னர் ஊன்றுகோல்களின் உதவியுடன் நடக்கக்கூடாது!

ஆதி சீனியர், ஸுலூ மேஷ்ராமுக்கு எழுதிய கடிதத்தில் (1959 ஜூன் 25) சமீபத்தில் பாபா, பூனாவில் தங்கியிருந்தபோது, திடீரென அதிசயமான மாற்றம் ஒன்றைக் கண்டோம். பாபாவின் இடுப்புப் பாகத்தில் இருந்துவரும் வலியால், இப்படி நடக்கும் என இதுகாறும் நாங்கள் எதிர்பார்க்கவே இல்லை. பாபா, தானே சில அடிகள் ஊன்றுகோலின் உதவியின்றி நடக்கத் தொடங்கினார். ஒவ்வொரு நாளும் நடையின் தூரத்தை அதிகரித்துக்கொண்டே இருக்கிறார். இதைப் போலவே, பாபா, தெய்வீக சித்தத்தை நிறைவேற்றும் நோக்கத்தில், உலக நிகழ்வுகள் மாற்றத்தை சந்திக்கக்கூடும் என்று குறிப்பிட்டார், அது குறித்து அவர் மீண்டும் மீண்டும் தனது அறிவிப்புகள் மூலம் குறிப்புகளை வழங்கினார்.

மெஹர் பாபாவின் சகோதரர் பெஹராமின் மகன்கள், ருஸ்தம் (RUSTOM), ஸொராப் (SOHRAB) இருவரும், பதினான்கு வயது; ஒரே மாதிரியான தோற்றத்தைக் கொண்ட இரட்டையர்கள். அவர்கள் தினமும் குருபிரசாத்தில் பாபாவை சந்திக்க வருவது வழக்கம்; இருவரும் ஒன்று போல் இருந்ததால், பாபா, **"உங்களில் யார் ஸொராப், யார் ருஸ்தம்?"** என்று கேட்டபோது, அவர்கள் தங்கள் பெயர்களைக் கூறினர்.

அடிக்கடி வந்து போகும் மஹாராணி ஷாந்தாதேவியைப் பார்த்து, பாபா, **"நான் கடவுள், அனைத்தும் அறிந்தவன். ஆனால், இவர்களில் யார் ஸொராப், யார் ருஸ்தம் என்று எனக்குத் தெரியவில்லை!"** என்றார்.

எரச் உடனே, "ஸொராபின் முகத்தில் மச்சம் உள்ளது, அதை நினைவில் வைத்துக் கொள்வதன் மூலம் இருவரையும் வேறுபடுத்துவதில் சிரமம் இராது" என்று குறிப்பிட்டார்.

அதற்கு பாபா, **"ஆனால் இருவரில் யாரிடம் மச்சம் இருக்கிறது என்பது எனக்கு நினைவில் இல்லை"** என்று பதிலளித்தார்.

'இருவரில் யார் அதிக புத்திசாலி' என்று பாபா வினவியபோது, ஸொராப், தான் என்றும், ருஸ்தமும் அவ்வாறே தான் என்றும் கூறுவது வழக்கம். இருவரும் மோதிக்கொண்டதால், பாபா, தலைப்பை மாற்றி, **"யார் வலிமையானவர்?"** என்று கேட்டார். மீண்டும் இருவரும் தத்தமது கௌரவத்தை விட்டுக்கொடுக்காத நிலையில், மற்றுமொரு வாக்குவாதம் ஏற்பட்டது; மேலும், பாபா அவர்களைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பது வழக்கம்.

ஒருமுறை குருபிரசாத்தில் திடீரென மின்சாரம் தடைபட்டபோது மின்விசிறி நின்றது. பாபா, ருஸ்தம், ஸொராப் இருவரிடமும் விசிறியால் வீசுமாறு கூறினார். அவர் ஸொராபை 'பாம்பியா' (BAMBIA) என்றும் ருஸ்தத்தை மாருதி (MARUTI, ஹனுமான், ராமரின் சீடர்) என்றும் செல்லப்பெயரிட்டு

அழைப்பதுண்டு. இரண்டு சிறுவர்களும் உருளை போல பருமனாக பாபாவின் அருகில் இருந்தனர், பாபா அவர்களிடம் எழுந்து செல்லுமாறு கூறியபோது, அவர்கள் சற்று சிரமத்துடன் எழுந்து நிற்பதற்கு முன்னர், அவர்களின் உடல்கள் நடுங்கின. பாபா அவர்களை கிண்டல் செய்து, பலமுறை எழுந்து அமர வைத்து, வியர்வை வழிய சிரமப்பட்ட இக்கட்டான நிலையை இருவரும் அனுபவித்ததைக் கண்டு மகிழ்ந்தார்.

ஜால்பாயை, ஜால் காக்கா, JAL KAKA (சித்தப்பா) என்று அழைப்பதற்கு பதிலாக இருவரும் 'ஜாக்கா' (JAKA) என்று அழைத்து வந்தனர். அவர்களைக் கிண்டல் செய்ய, பாபா, **"ஜாக்கா எப்படி இருக்கிறார்?"** என்று திரும்பத் திரும்பக் கேட்டார். அவர் நலமாக இருக்கிறார் என்று பதிலளித்த வேளையில், பாபா மறுபடியும், **"யார் நலமாக இருக்கிறார்?"** என்று கேட்க, இருவரும், "ஜாக்கா!" என்று பதிலளித்தனர்; பாபா கூறினார், **"உங்கள் ஜாக்கா நல்லவர், ஆனால் கொஞ்சம் பித்து பிடித்தவர், அப்படித்தானே?"**

ஒருமுறை ருஸ்தம், ஸொராப் இருவரும் வேறு சில சிறுவர்களுடன் கைச்சண்டையிட்டு மோதிக்கொண்டனர். பாபா அதைக் கேள்விப்பட்டு, **"எவருக்கும் எதிராக கைகளை மட்டும் உயர்த்தாதீர்கள்"** என்று எச்சரித்தார். எவரேனும் முதலில் அறைந்தால் என்ன செய்ய வேண்டும் என்று அவர்களின் தந்தை பெஹ்ராம் கேட்டதற்கு, பாபா பதிலளித்தார்: **"அவர்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ள வேண்டும், ஆனால் எவரையும் அறையக்கூடாது."**

ஒரு நாள் பாபா, ருஸ்தம் மற்றும் ஸொராபிடம் வலியுறுத்திக் கூறினார், **"நான் உங்களை இலக்காக வைத்து, உங்களுடன் கேலி, கிண்டல் செய்து உரையாடுகிறேன், உங்களுடன் சீட்டு விளையாடுகிறேன், எனது பொழுதுபோக்கிற்காக உங்களை சில காட்சிகளில் அங்கம் வகிக்க வைக்கிறேன். இதையெல்லாம் நான் உங்கள் நிலைக்கு வந்து செய்தாலும், நான் மனித உருவில் வந்த கடவுள் என்பதை ஒருபோதும் மறவாதீர்கள்."**

1959 மே 2 அன்று, இந்த இரண்டு சிறுவர்களும் பயின்று வந்த ஸெயின்ட் வின்ஸென்ட் உயர்நிலைப் பள்ளியின் (ST. VINCENT'S HIGH SCHOOL) முதல்வருக்கு, பாபா இந்தச் செய்தியை அனுப்பி வைத்தார்: **"எனது சகோதரரின் மகன்கள் ருஸ்தம், ஸொராப் இருவரும், பிறரைப் பற்றி நன்றாக சிந்திக்கவும், பிறரிடம் நல்லதையே பார்க்கவும், பிறரை மகிழ்விக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். உண்மையையே பேசி, பாசாங்குத்தனத்தை களைந்து, கடவுளை நேசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். இதுவே உண்மையான கல்வி. இதர எல்லாக் கல்வியிலும் எந்த பயனுமில்லை. இந்த முறையில் கல்வி பயில்வோர் என் உண்மையான உறவினர்கள்."**

பெஹ்ராமின் மகள் குல்னாருக்கு (GULNAR) அந்த ஆண்டு இறுதியில் திருமணம் நடைபெற இருந்தது. அவரது வருங்கால கணவர், ஜெஹாங்கு ஸுகத்வாலா (JEHANGU SUKHADWALLA), குருபிரசாத்திற்கு தினமும் வருவதைப்

பழக்கமாகக் கொண்டார். அந்த வருடம் அக்டோபர் மாதம் திருமணத்திற்கான தேதியை பாபா நிர்ணயித்தார். பெஹ்ராமின் மனைவி பெரின், பாபாவிடம், "ஜெஹாங்கு உங்கள் மீது கொண்டிருக்கும் அன்பில், குல்னாருக்கு சந்தேகம் உள்ளது. அவர் உங்களை நேசிக்கவில்லை என்றால், அது அவளுக்கு வாழ்நாள் முழுவதும் துன்பமாக இருக்கும்" என்று கூறினார்.

பாபா உறுதியளித்தார், **"ஜெஹாங்குவிற்கு என்னுடன் மிகவும் பழமையான, நீண்டகால தொடர்பு உள்ளது. குல்னார் கவலைப்பட வேண்டாம்."** மேலும், காலப்போக்கில், ஜெஹாங்கு, பாபாவை ஒரு நீண்ட நாளைய அன்பரைப் போல நேசித்து வந்தார்.

காம்ப்ளேயின் மனைவி லீலாவதி, அவ்வேளையில் நோய்வாய்ப்பட்டிருந்தார். அவர் ஏழையாததால், அவரது சிகிச்சைக்குத் தேவையான பணம் செலுத்த முடியாத சூழ்நிலை. பாபா, **"அவரை மருத்துவமனையில் அனுமதியுங்கள்; செலவைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். நான் பார்த்துக் கொள்கிறேன்"** என அறிவுறுத்தினார். நன்றி உணர்வுடன், காம்ப்ளேயின் மனைவி, டாக்டர் ஈ.எச். கோயாஜி (E.H. COYAJI) நடத்தி வந்த ஜெஹாங்கீர் நர்சிங் ஹோமில் (JEHANGIR NURSING HOME) அனுமதிக்கப்பட்டார். அவர் மோசமான நிலையில் இருந்ததால், காம்ப்ளே அவரைப் பற்றி இயல்பாகவே கவலைப்பட்டார். ஒரு நாள் பிற்பகல் வேளையில், பாபா மருத்துவமனைக்குச் சென்று அவரைப் பார்த்தார். அன்று முதல் லீலாவதி படிப்படியாக, மேலும் சில நாட்களில் பூரண குணமடைந்து வீடு திரும்பினார். பாபா பின்னர் இவ்வாறு குறிப்பிட்டார்: **"நான் அவரைப் பார்க்காமல் இருந்திருந்தால் அவர் உயிரைத் துறந்திருப்பார்."**

ஒருமுறை பாபா, காம்ப்ளேயிடம், **"நான் உங்கள் இல்லத்திற்கு வர விரும்புகிறேன்"** என்று கூறினார்.

காம்ப்ளே, பாபாவின் வருகைக்குத் தயாராகும் விதத்தில், "சில நாட்கள் கழித்து வாருங்கள் பாபா" என்றார்.

"ஆயிரக்கணக்கான மக்கள் என்னைப் பார்க்க இங்கு வர விரும்புகிறார்கள்," என்று பாபா அவருக்கு நினைவூட்டினார், **"மேலும் நானாகவே உங்கள் இல்லத்திற்கு வர விரும்பினால், நீங்கள் சில நாட்கள் காத்திருக்கச் சொல்கிறீர்கள்!"** அடுத்த நாளே பாபா, காம்ப்ளேயின் எளிய இல்லத்திற்கு விஜயம் செய்தார். ஒரு வாய் தேநீரை மட்டும் அருந்திவிட்டு மீதியை காம்ப்ளேக்கு அருந்தக் கொடுத்தார்.

இந்த நேரத்தில், பாபா தமது பூனா அன்பர்கள் பலரின் இல்லங்களுக்கு விஜயம் செய்தார். அது கோடையின் உச்சம், அதிக வெப்பமாக இருந்தாலும், அது அவர்களுக்கு வசந்த காலம் போலத் தோன்றியது. பாபா அவர்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்தார்.

1959இல் பாபா, பூனாவில் தங்கியிருந்த போது விஜயம் செய்த இல்லங்களின் பட்டியல் பின்வருமாறு:



ராஸ்தேவாடா, பூனா, ஏப்ரல் **1959** - மெஹர்ஜி, ஃபிரான்சிஸ், பாபா, எரச், தேஷ்முக், நரிமன், ஸர்தார் ராஸ்தே (RASTEWADA, POONA, APRIL 1959 – MEHERJI, FRANCIS, BABA, ERUCH, DESHMUKH, NARIMAN, SARDAR RASTE)

பூனா இல்லங்களுக்கு விஜயம் (POONA HOUSE VISITS) **1959**.

- சதாஷிவ் பாட்டீல் (301, நானா பேட்)
- காஷிநாத் ஸோமன் (399/2, சதாஷிவ் பேட், 1959 ஜூலை 13)
- ராமகிருஷ்ணன் (133/1, ரேஞ்ச் ஹில், கிர்கி)
- பாப்புஸாஹேப் ஷிண்டே (ஷிவாஜிநகர், 1959 ஜூலை 13 அன்று)
- ஸர்தார் ராஸ்தே (ராஸ்தா பேட்)
- மதுசூதன் (392, நானா பேட்)
- தின்கர் போட்டே (645-ஏ, சதாஷிவ் பேட்)
- சுப்பிரமணியம் அஹிர் (ராஸ்தா பேட்)
- குணாதாய் காடேக்கர் (885/5, பண்டார்கர் சாலை, டெக்கன் ஜிம்கானா)
- தாமோதர் ஷிவ்நாத் பவ்ஸார் (342, ராஸ்தா பேட்)
- பிரதாப் அஹிர் (கஞ்ச் பேட்)
- தாடே குடும்பம் (ஷிவ் கீர்த்தி, கோர்புரி)
- கிருஷ்ணா பண்டெலு (808, பவானி பேட்)
- பிக்குபாய் பனார்கர் (மீலன் போட்டோ ஸ்டுடியோ)
- மாய்ஸாஹேப் பட்வர்தன் (குருந்த்வாடி ராணி)
- பெஹராமின் குடும்பம் (பாபா இல்லம்)
- ஜெஸவாலா குடும்பம் (பிந்த்ரா ஹவுஸ்)
- பல்லால், கணேஷ்கிந்தில் உதவி கண்காணிப்பாளர்.

மேலும்:

- பந்த் கார்டன்
- டெக்கன் கல்லூரி
- பேஷ்வா பூங்கா
- கணேஷ்கிந்த் தோட்டம்
- ஸம்பாஜி பூங்கா
- சிவாஜிநகரில் ஓர் உணவகம்
- அல்கா திரையரங்கம்
- பார்சி தர்மசாலை
- பாபாஜானின் சமாதி
- வெஸ்ட் எண்ட் திரையரங்கம்
- மஹாத்ஜி ஷிண்டேயின் சமாதி, வானோவ்ரி (ஷிண்டே சத்ரி)
- விஷால் ஸையாத்ரி அலுவலகங்கள் (உள்ளூர் மராத்தி செய்தித்தாள்)
- கோயாஜி மருத்துவமனை (ஜெஹாங்கிர் நர்ஸிங் ஹோம்)
- பூனா மையத்திற்காக முன்மொழியப்பட்ட மூன்று தளங்கள்: ஸ்வார்கேட் அருகில், ஷிவாஜிநகர் அருகே மற்றும் முதலியார் சாலை.

இந்த தினசரி வருகைகளை பாவ்ஸார் ஏற்பாடு செய்தார். ஒருமுறை பாபா அவரிடம், **"நாளை நாம் எங்குச் செல்ல உள்ளோம்?"** என வினவினார்.

பாவ்ஸார், "ஸர்தார் முதலியார் இல்லத்திற்கு" என்று பதிலளித்தார்.

"அவர் என் அன்பரா?"

"எனக்குத் தெரியாது, ஆனால் நீங்கள் அவருடைய இல்லத்திற்குச் செல்ல வேண்டும் என்று அவர் விரும்புகிறார்."

"**அவர் இல்லத்தில் எனது சித்திரம் உள்ளதா?**" பாவ்ஸார் 'உறுதியாக தெரியவில்லை' என்றார். பாபா ஒன்றும் கூறாமல் மதிய உணவுக்குச் சென்றபோது, பாவ்ஸார், முதலியாரை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு, அவர் இல்லத்தில் பாபாவின் சித்திரம் இருக்கிறதா என்று கேட்டார். முதலியார் இல்லை என்றதும், 'பாபா அவரைப் பார்க்க வர இயலாது, மேலும் அவர் வருகையை ரத்து செய்ய வேண்டியதாக இருந்ததை, பாவ்ஸார் வருத்தத்துடன் தெரிவித்தார். மதிய உணவை முடித்து, பாபா மண்டபத்திற்குள் நுழைந்தபோது, முதலியார் இல்லத்திற்கான வருகையை ரத்து செய்துவிட்டதாக பாவ்ஸார் கூறினார்.

"**ஏன்?**" என்று பாபா கேட்டார்.

"நான் அவரைத் தொடர்புகொண்டு, அவர் இல்லத்தில் உங்கள் புகைப்படம் இருக்கிறதா என்று கேட்டேன், அவர் இல்லை என்று கூறினார்; அதனால் அங்குச் செல்வதால் என்ன பயன்?"

"**அவரிடம் கேட்கச் சொன்னேனா? உங்களுக்கு புத்தி இருக்கிறதா? நீங்கள் (பூனா) மையத்தில் எப்படிப் பணிபுரிகிறீர்கள்?**" பாவ்ஸார், தனது தவறை ஒப்புக்கொண்டு பாபாவிடம் மன்னிப்புக் கோரினார். "**நான் எப்பொழுதும் மன்னிக்கிறேன், ஆனால் குறைந்தபட்சம் ஒருவரின் உணர்வுகளைப் புண்படுத்தும் எதையும் செய்வதற்கு முன், நீங்கள் முதலில் சிந்திக்க வேண்டும்.**"

மஹாராணி ஷாந்தாதேவியிடம் திரும்பிய பாபா, "**எந்த மாதிரியான ரத்தினங்களை நான் அடையப் பெற்றுள்ளேன்!**" என்றார்.

நீண்டகால அன்பரான எஸ்.எம். துரேக்கர் (S.M. TUREKAR), தனது மனைவியுடன் பாபாவை சந்திக்க வந்தவர், அவரைப் பார்த்ததும் மனம் வருந்தி கண் கலங்கினார். துரேக்கர் ஒரு காவல்துறை அதிகாரி, அப்போது காவல்துறை பொறுப்பாளராக, உயர் பதவியை வகித்துவந்தார்.

அவருடைய வருத்தத்திற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. நேர்மையாக இருக்குமாறு பாபா அவருக்கு அறிவுறுத்திய போதிலும், அவர் ஊழல்வாதியாகி, அடிக்கடி லஞ்சப் பரிமாற்றத்தில் ஈடுபட்டு, பாபாவின் கட்டளையைப் பொருட்படுத்தாமல் இருந்தார். ஒருமுறை, இந்த வழியில் அவர் லஞ்சமாக 100 ரூபாயை ஏற்றுக்கொண்ட அதே வேளையில், அவரது மனைவின் உடல் நலக்குறைவு காரணமாக, அவரது சிகிச்சைக்கு ரூ.200 செலவிட வேண்டியிருந்தது. என்ன நடக்க வேண்டுமோ அதுவே நடக்கும் என்ற மனோபாவத்தில் அவர் வழங்கக்கூடிய சில சலுகைகளுக்காக, மீண்டும் லஞ்சப் பரிமாற்றத்தில் தொடர்ந்து ஈடுபட்டார். பின்னர் ஒருமுறை, அவரது மகன் நோய்வாய்ப்பட்டபோது, அவர் சட்டவிரோதமாக சேகரித்ததை விட அதிகமாக செலவிட வேண்டியிருந்தது. இறுதியாக, மிகவும் துன்பகரமான சூழ்நிலைகளை

சந்தித்த அவர், பாபாவின் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் இருந்ததே அனைத்திற்கும் காரணம் என்பதை உணர்ந்தார்.

துரேக்கர், தனது மகளாலும் மிகுந்த துயரத்தில் ஆழ்ந்தார். ஆஃப்ரிக்காவில் வாழும் இந்திய வாலிபர் ஒருவருடன் அவரது திருமணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. திருமணத்திற்குப் பிறகு, தனது மருமகன் ஆண்மை குறைபாடுடையவர் என்ற வதந்தியை அவர் கேட்க நேர்ந்தது. அந்த இளைஞர், தனது மனைவியை ஆஃப்ரிக்காவிற்கு அழைத்துச் செல்ல விரும்பியபோது, பாபா, '**அந்தக் கதைகள் உண்மையல்ல**' என்பதைத் தெரிவித்து, துரேக்கரிடம் அவரது மகளை ஆஃப்ரிக்காவிற்கு அனுப்புமாறு அறிவுறுத்தினார். ஆனால் துரேக்கர் மருமகனை உடல் பரிசோதனைக்கு உட்படுத்த விரும்பியதை அறிந்த மருமகன், உடனடியாக ஆஃப்ரிக்காவிற்குப் புறப்பட்டுச் சென்றவர், திரும்பி வரவில்லை. அவர் எங்கிருந்தார் என்பதையும் அறிய முடியாத நிலையில், மகள் மிகவும் மனச்சோர்வடைந்து, மனநல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டியதாயிற்று. துரேக்கர், பாபாவின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாததற்காக மிகவும் வருந்தினார். பாபா அவரைத் தழுவி மன்னித்தார்.

ஹோமாய் டி.மாலதி (HOMAI D. MALATI) என்பவர் சுபத்ரா மூலம் பாபாவின் தொடர்பில் சில காலம் இருந்துவந்தார். அவர், அமர் ஜோதி (AMAR JYOTI) என்று அழைக்கப்பட்ட சாதுவையும் அவ்வப்போது சந்திக்கச் செல்வதுண்டு. ஒருமுறை பாபா, தனக்கும், அமர் ஜோதிக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை அவருக்கு விளக்கினார்: **"நான் ஒரு கல்லூரியின் முதல்வர், நீங்கள் மழலையர் பள்ளியில் ஆசிரியராக பணிபுரியும் ஒரு துறவியிடம் செல்கிறீர்கள்! நீங்கள் ஆசிரியரிடம் சென்று, கல்லூரி முதல்வரை மறந்துவிடுவது முறையா?"** அன்று முதல் ஹோமாய் சாதுவிடம் செல்வதை நிறுத்தினார்.

பாபாவை சந்திக்க டெல்லியிலிருந்து கல்லூரி முதல்வர் நிரஞ்சன் ஸிங் வந்தார். சந்திப்பு முடிந்ததும், நிரஞ்சனை, தாதி கேரவாலாவிடம் அவரது ஸ்கூட்டரில் ரயில் நிலையத்திற்கு அழைத்துச் செல்லுமாறு பாபா, கூறினார்.

அதே நேரத்தில் இன்னும் ஒருவர் தரிசனத்திற்காக வரவே, பாபா, ஜெஹாங்குவிடம் அவரை ரயில் நிலையத்திற்கு அழைத்துச் செல்லுமாறு கூறியதற்கு ஜெஹாங்கு, "தாதியின் ஸ்கூட்டரின் பக்கவாட்டில் கார் பொருத்தப்பட்டுள்ளது, இருவரையும் எளிதாக அழைத்துச் செல்ல முடியும்" என்றார்.

பாபா, **"நான் உங்களுக்குக் கொடுத்த பணியை மட்டும் செய்யுங்கள், தாதி அவருடையதைச் செய்வார். நீங்கள் எனக்கு ஆலோசனைகள் வழங்க வேண்டிய அவசியமில்லை"** என்று கடுமையாகக் கண்டித்தார்.

எனவே, தாதி, ஜெஹாங்கு இருவரும் பாபா கூறியபடி செய்துவிட்டு, குருபிரசாத் திரும்பி வந்ததும், அதி தீவிரமான தொனியில், பாபா அவருடைய '**அறிவுறுத்தல்களை இருவரும் நிறைவேற்றினார்களா**' என்று கேட்டார். 'ஆமாம்' என்று பதிலளித்தது பாபாவை மகிழ்வித்தது. அடுத்த நாள் தாதி

மேற்படிப்பிற்காக அமெரிக்கா செல்வது குறித்த விஷயம் தீர்மானிக்கப்பட்டது; நீண்ட தேடலுக்குப் பின்னர், இறுதியில் ஜெஹாங்குவிற்கு ஒரு நல்ல வேலை வாய்ப்பும் கிடைத்தது. இருவரும் முந்தைய நாள் பாபாவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்ததால் விளைந்த அதிர்ஷ்டம் என கருதினர்.

ஒரு நாள் தென்னிந்தியாவிலிருந்து இளைஞன் ஒருவன் பாபாவைப் பார்க்க வந்தான். பாபாவின் அன்பு மற்றும் மகிமையைப் போற்றும் வகையில் சமஸ்கிருத ஸ்லோகம் ஒன்றை தான் இயற்றியதாகக் கூறி, பாபாவிற்கு முன்பாக அதை மொழிய விரும்பினான். பாபா அவனை அனுமதித்து, அவர் அதை விரும்புவதாகக் கூறினார். அருகிலிருந்த ராமகிருஷ்ணனைப் பார்த்து பாபா, **"உங்களுக்குப் பிடித்ததா?"** என்று கேட்டதற்கு, ராமகிருஷ்ணன், அந்த வசனம் வேத நூல்களில் கூறப்பட்டுள்ளதாகவும், அவன் கூறியது போல சுய உருவாக்கம் அல்ல என்றும் கூறினார். பாபா அவர் கூறியதை கண்டிக்கும் விதத்தில், **"நீங்கள் ஒரு முட்டாள்!"** என்றார். கோபமும் வேதனையும் அடைந்த அந்த இளைஞன், ராமகிருஷ்ணன் கூறியதை மறுத்து, தனது சொந்த முயற்சியால் உருவானது என்று மீண்டும் வலியுறுத்திக் கூறினான்.

சந்திப்பு நிறைவடைந்து அந்த இளைஞன் சென்ற பின்பு, பாபா ராமகிருஷ்ணனிடம், **"என்ன யோசிக்கிறீர்கள்?"** என்று கேட்டார்.

"பாபா, என் மனதில் உண்மைக்கும் அன்பிற்கும் இடையேயான ஒரு மோதல் உள்ளது, நீங்கள் என்னிடம் கேட்டபோது, அந்த வசனம் அந்த இளைஞன் எழுதியது அல்ல என்று நான் உண்மையைக் கூறினேன். அது ஒரு குறிப்பிட்ட வேத நூலில் உள்ளது என்பது எனக்குத் தெரியும்."

பாபா பதிலளித்தார், **"இப்போது கவலை வேண்டாம், அதை மறந்துவிடுங்கள், அந்த இளஞன் மகிழ்ச்சியாக இருப்பதற்காகவும், என்னை அதிகமாக நேசிக்க ஊக்குவிக்கப்படுவதற்காகவும் நீங்கள் அதைப் பாராட்ட வேண்டும் என்று நான் விரும்பினேன். அதே நேரத்தில், அந்த இளைஞன் பொய் சொன்னதை உணர்ந்து வெட்கப்பட்டிருப்பான்."**

ஒரு நாள் பாபா, ராமகிருஷ்ணனிடம், கீழ்வரும் ஆங்கில வாக்கியத்தை ஏழு முறை மொழியுமாறு கட்டளையிட்டார்: '**தி ஸெக்ஸ்லெஸ் ஸெல்ஃப் இஸ் தி ஹையஸ்ட் எக்ஸ்பீரியன்ஸ்**' (THE SEXLESS SELF IS THE HIGHEST EXPERIENCE). ஆனால் இந்த 'நா பிறழ்வு' வாக்கியம் (TONGUE-TWISTER) மிகவும் கடினமாக இருந்தது, சில முறை முயற்சித்து, பின்னர் அவர் தடுமாறினார்.

ஆந்திராவைச் சேர்ந்த அச்சுதா ராமராஜு (ATCHYUTHA RAMARAJU), குருபிரசாத்திற்கு அவ்வப்போது வந்து சென்றார். அவருக்கு, தெலுங்கு தவிர வேறு எந்த மொழியும் தெரியாது; ஆதலால், பிறருடன் பாபா நிகழ்த்தும் உரையாடலை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒருமுறை கவலை தோய்ந்த எண்ணங்களுடன் குருபிரசாத் செல்லவிருந்தபோது, பூனா ரயில் நிலையம் அருகே ஒருவர் தெலுங்கு பேசுவதைக் கேட்டு, பாபாவின் வார்த்தைகளை மொழிபெயர்க்கும் நோக்கத்தில், ராமராஜு அவரை தன்னுடன்

வருமாறு பணித்தார். குருபிரசாத்தில், அந்த மனிதர், பாபாவின் சுருக்கமான விளக்கங்களை தெலுங்கில் அவருடைய சொந்த விளக்கங்களையும் சேர்த்து, நீண்ட வாக்கியங்களாக மொழிபெயர்க்கத் தொடங்கினார், (ஒருவேளை தனது நீண்ட நெடிய மொழி பெயர்ப்புகளுக்கு அதிக பணம் கிடைக்கலாம் என்று அவர் நினைத்திருக்கலாம்!) ஆனால் அவர்களுக்கிடையே நடந்ததை கவனித்த பாபா, அந்த நபரிடம், '**இவ்வளவு நேரம் அவர் என்ன சொல்லிக் கொண்டிருந்தார்**' என்று கேட்டார்? ராமராஜுவிடம் அந்த மனிதரை மறுநாளிலிருந்து அழைத்து வர வேண்டாம் என்று பாபா அறிவுறுத்தினார். பாபா மொழிபெயர்ப்பாளரிடம், **"நீங்கள் ராமராஜை ஏமாற்றலாம், ஆனால் என்னை அல்ல"** என்று கூறி, ராமராஜுவிடம், **"எனது முன்னிலையில் குருபிரசாத்தில் இருக்கும் போது, நீங்கள் அமைதியாக என்னைப் பார்த்தாலே போதும். உங்களுக்கு அனைத்தும் புரியும். உங்களுக்கு எதுவும் புரியவில்லை என்றாலும், கடவுள் முன்னிலையில் இரண்டு மணி நேரம் அமர்ந்திருக்கும் அதிர்ஷ்டத்தை எண்ணி மகிழ்ச்சியாக இருங்கள்"** என்றார்.

1959 மே 5 செவ்வாய் அன்று, பூனாவின் தொழில்முறை புகைப்படக் கலைஞரான டி.டி. ரெகே (D.D. REGE) குருபிரசாத்திற்கு வந்தார். பாபாவைப் புகைப்படம் எடுக்க அனுமதி கோரி, முன்னர் ஒருமுறை அவர் எழுதியிருந்தார். அனுமதி வழங்கப்பட்டது, ஆனால் புகைப்படம் எடுப்பதற்கு ஒரு நாள் முன்னதாக வருமாறு அவருக்குத் தெரிவிக்கப்பட்டது. பாபாவை ஒரு சிறிய அறையில் புகைப்படம் எடுக்க விரும்புவதாகக் கூறினார், ஆனால் மறுநாள் அவர் வந்தபோது, பாபா, மக்களால் சூழப்பட்ட பெரிய மண்டபத்தில் அமர்ந்திருந்தார். தேவைப்பட்டால் சிறிய அறைக்குச் செல்வதாக பாபா கூறினார், ஆனால் ரெகே, முன்னால் இருப்பவர்கள் சற்று விலகினால், பாபா இருக்கும் இடத்திலேயே இருக்கலாம் என்றார். ரெகே படப்பிடிப்பிற்கான விளக்குகளை அமைத்து, பாபாவின் தலையை ஒரு பக்கமாகத் திருப்பி, பல புகைப்படங்களை எடுத்தார். '**அச்சிடப்பட்ட புகைப்படங்களை எப்போது பார்க்கலாம்**' என்று பாபா கேட்கவே, ஞாயிற்றுக்கிழமை கொண்டு வருவதாக ரெகே கூறினார்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை ரெகே திரும்பி வந்தபோது, பாபா நான்கு புகைப்படங்களையும் கையில் பிடித்து, **"இதில் நான் எவ்வளவு அழகாக இருக்கிறேன் என்று பாருங்கள்"** என்று கருத்துரைத்து, தமது பாதங்களின் அருகில் அமர்ந்திருந்த பரோடா மஹாராணியிடம் அவற்றைக் கொடுத்து, பிற அனைவருக்கும் காட்டினார். ரெகே, பாபாவிடம் இவற்றில் உங்களுக்கு மிகவும் பிடித்தது எது என்று கேட்டதற்கு பாபா, **"அவை அனைத்தும் அழகாக உள்ளன"** என்று பதிலளித்தார். ரெகே இவற்றில் பாபாவிற்கு பிடித்த ஒன்றைத் தேர்ந்தெடுக்குமாறு வற்புறுத்தவே, பாபா இறுதியாக, முக்கால்வாசி உருவில் இருந்த பக்கவாட்டிலான புகைப்படத்தைக் குறிப்பிட்டார். ரெகே தனது இல்லத்திற்குச் சென்று அவரால் இயன்ற அளவு படத்தின் மிகப்பெரிய பிரதியை அச்சிட்டு அதை வரைந்தார். அவர் அந்த சித்திரத்தை பாபாவிடம்

கொடுத்தபோது, அதை அவர் மஹாராணிக்கு வழங்கலாமா என்று கேட்டதற்கு ரெகே, "உங்கள் கைகளில் கொடுக்கப்பட்ட பின்பு, பாபா, நீங்கள் விரும்பியதைச் செய்யலாம்" என்றார். மஹாராணியிடம் வழங்கிய பாபாவின் உருவப்படம் பல வருடங்களாக குருபிரசாத் மாளிகையின் பிரதான அறைச் சுவரை அலங்கரித்தது.

மே 10 ஞாயிற்றுக்கிழமை பாபாவை சந்திக்க டெக்கன் கல்லூரியைச் (DECCAN COLLEGE) சேர்ந்த ஃபிரெஞ்சு பேராசிரியர் (PROFESSOR OF FRENCH) ஒருவர் வந்தார். அந்த மனிதர் தனக்கு யோகாவில் ஆர்வம் இருப்பதாக பாபாவிடம் கூறினார்.

பாபா அவரிடம் **"யோகா என்பதன் அர்த்தம் என்ன, அதன் மூலம் நீங்கள் எதை அடைய விரும்புகிறீர்கள்?"** என்று கேட்டு, **"ஒரே ஒரு யோகா, உண்மையான யோகா உள்ளது, அதுதான் 'நீ போ'** (YOU GO)" என்று குறிப்பிட்டார். **யோகா என்பதன் அர்த்தம் அவ்வளவு எளிமையானது.**

"நீ (ஈகோ) போ' (EGO அதாவது YOU GO) **என்பதைத் தவிர, வேறு எந்த யோகாவும் எனக்குத் தெரியாது. நீங்களே உங்கள் சுயமாகத் திகழும் முகத்திரை; 'நீ' போகும் போது** (WHEN 'YOU GO') **மட்டுமே 'நீங்கள்'** (YOU) **வர முடியும்; 'நீ'** (EGO) **எப்படிப் போகும்' என்பதுதான் பிரச்சினை, அதற்கான ஒரே தீர்வு, அன்பு. அன்பான கடவுளின் அன்பின் மூலம் 'நான்' எனும் அகந்தை** (EGO) **'போகும் போது' (அழிக்கப்படும் போது), நீங்கள் 'வருவீர்கள்', நீங்கள் உண்மையில் இருப்பது போல வெளிப்படுவீர்கள்."**

சில தருணங்களில், ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில், பூனா அன்பர்கள் சிலரை, குருபிரசாத்தில் பாபா தனது சகவாசத்திற்காக அனுமதித்தார். எப்போதேனும் பாபா அழைக்கப்பட வேண்டிய நபர்களின் பட்டியலைக் கொடுப்பதுண்டு. சில நேரங்களில் பூனா மையத்தின் சேவகர்களையோ அல்லது பூனாவில் வாழும் பல்வேறு குடும்பங்களையோ அழைக்குமாறு ராமகிருஷ்ணனிடம் தெரிவித்தார். ராமகிருஷ்ணன் இது குறித்துக் குறிப்பிடுகையில், "பாபா யாரை அழைக்க விரும்பினார் என்பதில் மிகவும் உறுதியாக இருந்தார்; ஆனால் அவர் எவரையேனும் குறிப்பிடத் தவறியதாக நான் கருதினால், அவரை பாபாவிடம் பரிந்துரைக்க எனக்கு அனுமதி வழங்கப்பட்டது."

ஒரு சந்தர்ப்பத்தில், பாபா, ராமகிருஷ்ணனிடம் அடுத்த ஞாயிற்றுக்கிழமை காலை, சில மணிநேரங்களுக்காக அழைக்கப்பட வேண்டிய நபர்களின் பட்டியலைக் கொடுத்தார். அதன்படி அவர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு, அனைவரும் வந்து, பாபாவின் சகவாசத்தில் மகிழ்ச்சியுடன் பங்கெடுத்து, தத்தமது இல்லங்களுக்குத் திரும்பிச் சென்றனர். அதன்பிறகு, ராமகிருஷ்ணன், பாபாவிற்கு நெருக்கமானவர்களில் சிலரை அழைக்கவில்லை என்றும், பிற அனைவரும் வந்திருந்ததைக் கேள்விப்பட்டால், அவர்கள் வேதனைப்படுவார்கள் என்றும் பாபாவை நினைவுபடுத்தினார். அதற்கு பாபா, **"சரி, இன்று மதியம் 2:30 மணிக்கு அவர்களை அழைக்கவும். நான் அவர்களை**

மட்டுமே பார்ப்பேன்; அவர்களை அரவணைத்து திருப்பி அனுப்பிவிடுவேன் " என்று கூறினார்.

ராமகிருஷ்ணன், மதியம் 2:00 மணிக்கு, குருபிரசாத்திற்கு வருமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு அழைப்பு விடுத்தார்; அதனால் அவர்கள் சரியாக 2:30 மணிக்கு பாபாவுடன் இருக்க முடியும். சுமார் மதியம் 1:00 மணியளவில், பாபா உடல்நிலை சரியில்லாமல், ராமகிருஷ்ணனிடம், **"நீங்கள் அவர்களை அழைத்தீர்கள், இப்போது அவர்கள் வருவார்கள், ஆனால் நான் அவர்களைப் பார்க்கும் மனநிலையில் இல்லை. ஏன் திட்டத்தை ரத்து செய்ய முயற்சிக்கக்கூடாது? எப்படியாவது அவர்களைத் திரும்பிச் செல்லச் சொல்லுங்கள்"** என்றார்.

குருபிரசாத்திற்கு வந்த பின்னர், அதைச் செய்வது கடினம் என்று ராமகிருஷ்ணன் நினைத்தார். பாபா ஒரு மாற்று வழியை பரிந்துரைத்தார்: **"பெண்டுவிடமிருந்து சிறிது பணம் வாங்கி, அவர்களை ரயில் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, ஐஸ்கிரீம் வழங்கி உபசரிக்கவும். பின்னர் அவர்களை தத்தமது இல்லங்களுக்குத் திரும்பச் சொல்லுங்கள்."**

ராமகிருஷ்ணன், பாபாவின் யோசனையை ஏற்றுக்கொண்டு, குருபிரசாத்தை விட்டு வெளியேறும்போது, அழைக்கப்பட்டவர்களில் பெரும்பாலோர் முன் வாயில் வழியாக நடந்து சென்று கொண்டிருந்தனர். பாபா அவர்களுக்கு தரிசனம் வழங்க வற்புறுத்தப்பட்டார். அனைவரும் அங்கு இருந்த வேளையில், ராமகிருஷ்ணன், "இப்போது அவர்கள் உங்களை சந்தித்ததால், ஐஸ்கிரீம் வழங்க என்ன தேவை?" என்ற கேள்வியை முன்வைத்தார்.

பாபா கேட்டார், **"அவர்களின் பங்கை ஏன் பறிக்க விரும்புகிறீர்கள்?"** இதனால் அனைவருக்கும் பாபாவின் அரவணைப்பு மட்டுமின்றி, ஐஸ்கிரீமும் வழங்கப்பட்டது!

குருபிரசாத்தில் இருந்த வேளையில், பாபா மதியம் திரும்பி வருவதற்கு முன்னர், அன்பர்களில் சிலர் மதிய உணவுக்குப் பிறகு மண்டபத்தில் சிறிது நேரம் தூங்கும் எண்ணத்தில், மின்விசிறிகளை இயக்கி, அனைவரும் தரையில் சாய்ந்துவிடுவது வழக்கம். ஒரு நாள், அனைவரும் சத்தமாகக் குறட்டை விட்டுக் கொண்டிருந்த போது, பாபா கையில் ஒரு கழியுடன் வந்தார்.

கதவைத் திறந்து பாபா உள்ளே நுழைந்ததும், பெரும்பாலானோர் குதித்து எழுந்தனர். ஆனால், இன்னும் தூங்கிக் கொண்டிருந்தவர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது! பாபா ஒவ்வொருவரையும், ஒருவர் பின் ஒருவராக, கழியால் குத்த ஆரம்பித்தார். அந்த நபர் எழுந்த உடனேயே, அவரை பாபா அமைதியாக இருக்குமாறு சைகையால் தெரிவித்து, ஒவ்வொரு நபரையும் மாற்றி மாற்றி குத்தி, அனைவரையும் எழுப்பவே, அவர்கள் தூக்கத்திலிருந்து திடுக்கிட்டு எழுந்ததைக் கண்டு மகிழ்ந்தார்.

கிஸன் தாடேயின் மனைவி நிர்மலா, உருளைபோல மிகவும் பருமனானவராக இருந்தார்; பாபா அவரிடம், **"நீங்கள் எந்த மாவு ஆலையிலிருந்து வாங்கி வந்த மாவை உண்கிறீர்கள்?"** என வினவினார்.

அவர் "உங்கள் மாவு ஆலையிலிருந்துதான்" என்று பதிலளித்தார்.

பாபா கேலி செய்தார், **"என் ஆலையிலிருந்து மாவை அடையப் பெறுவது மிகவும் கடினம், அதை அடையப் பெறுபவர் அவரே மாவாக அரைக்கப்படுகிறார்!"**

லக்ஷ்மிகாந்த் தாடேயின் மனைவி சுனிதா, தொடர்ச்சியான கருச்சிதைவுகளால் பாதிக்கப்பட்டு, ஒருமுறை பாபாவிற்கு இது குறித்து எழுதினார். பாபா, தம்பதியரை வரவழைத்து, அவருக்கு ஒரு சாக்லேட்டை வழங்கி அதை, **பொதியப்பட்டிருந்த காகிதத்துடன் சேர்த்து சாப்பிடும்படி** அறிவுறுத்தினார். 1959இல் குருபிரசாத்தில் பாபா தங்கியிருந்த வேளையில், சுனிதா, பூனாவில் ஒரு பெண் குழந்தையை ஈன்றெடுத்தார், அதற்கு அல்கா (ALKA) என்று பெயரிடப்பட்டது. **'மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பும் முன், சுனிதாவை குழந்தையுடன் நேரடியாக குருபிரசாத்திற்கு வருமாறு'** பாபா அறிவுறுத்தினார். எனவே அவர் புதிதாகப் பிறந்த குழந்தையுடன் பாபாவிடம் வந்தபோது, அவர் குழந்தையை மடியில் தாங்கி முத்தமிட்டார். **'நான்கு மாதங்களுக்கு, குழந்தையை வேறு எவரும் முத்தமிட வேண்டாம்'** என்று பாபா, குடும்பத்தினருக்குக் கட்டளையிட்டார், அதற்கு அவர்கள் இணக்கம் தெரிவித்தனர். இவ்வாறு பல கருச்சிதைவுகளுக்குப் பின்னர், ஆரோக்கியமான குழந்தை ஒன்று பிறந்தது, மேலும் குழந்தையின் மூன்று வயது பருவத்தில் அவள் ஆதிகாலத்தவர் முன்பாக நடனமாடினாள்!

ஒருமுறை பாபா, சில தேர்ந்தெடுக்கப்பட்ட பூனா சேவகர்களை குருபிரசாத்திற்கு வரவழைத்தார். விநாயக் வாவலே (VINAYAK WHAVALE) ஜுரத்தால் அவதிப்பட்டு, மெதுவாக நடந்து சென்றதால், சரியான நேரத்தில் வரமுடியவில்லை. அவர் ஏன் தாமதமாக வந்தார் என்று வினவாமல், பாபா அவருக்கு தேநீரும், பஜ்ஜியும் வழங்கினார். அவரது ஜுரம் காரணமாக, காரமான பஜ்ஜிகளை உண்பது உகந்ததல்ல என்ற எண்ணத்தில், அவற்றைத் தொடக்கூட விரும்பவில்லை. அவர் தனது கடுமையான ஜுரத்தால் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதை மட்டுமே நினைத்துக் கொண்டிருந்தார்; ஆனால் எதுவும் கேட்காமல், பாபா அவரிடம் உண்ணுமாறு கூறி, ஒரு தட்டு நிரம்ப பஜ்ஜிகளைக் கொடுத்தார். அவரைப் பார்த்த பாபா, அனைத்தையும் உண்ணுமாறு சைகையால் தெரிவித்தார். விநாயக் அவ்வாறு செய்த சிறிது நேரத்தில் அவருடைய ஜுரம் குறைந்திருப்பதைக் கண்டார். பாபாவின் சர்வ ஞானத்தையும் அக்கறையையும் சந்தேகித்ததற்காக அவர் வெட்கப்பட்டார்.

திருமணத்திற்குப் பிறகு, விநாயக்கின் சகோதரர் பிரபாகர் மணமகளுடன் பாபாவை தரிசனம் செய்ய வந்தபோது, பாபா அவரிடம், **"திருமணம் எப்படி நடந்தது?"** என்று கேட்டார்.

"நன்றாக நடந்தது பாபா, ஆனால் என் உறவினர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை" என்று அவர் பதிலளித்தார்.

பாபா, **"ஒருவரும் வரவில்லையா? ஆனால் நான் அங்கேயே இருந்தேன்! நான் இருந்ததால், அனைவரும் அங்கேயே இருந்தனர். நான் இல்லை என்றால், எல்லோரும் அங்கே இருந்திருந்தாலும், எவரும் அங்கு இருந்திருக்க மாட்டார்கள்"** என்று கூறினார்.

ஆதி, 1959 மே 9 அன்று கைக்கோபாத்துடன் குல்மாயை குருபிரசாத்திற்கு அழைத்து வந்தார். பூனா மையத்தைச் சார்ந்த அன்பர்கள் குருபிரசாத் வந்தபோது, பாபாவுக்காக அவர்கள் செய்யும் அனைத்து பணிகளையும் பெருமையுடன் விவரித்தனர்: "அப்படி ஒரு நிகழ்ச்சியை நாங்கள் அங்கு நடத்தினோம்... நாங்கள் பல சிரமங்களை சந்திக்க வேண்டியிருந்தது... மிகவும் கடினமாக உழைத்தோம்... நாங்கள் மிகவும் அருமையான பஜனைகளைப் பாடினோம், அது மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது... எங்கள் விரிவுரை பெரியதொரு தாக்கத்தை உருவாக்கியது," இப்படி மற்றும் பல. பாபா அவர்கள் கூறியதற்கு செவிமடுத்து, அவர்களின் முயற்சிகளைப் பாராட்டுவது வழக்கம்.

ஒருமுறை, அவர்களின் பெருமிதம் வெகுதூரத்தை எட்டியபோது, பைதூலை அழைத்து பாபா கூறினார், **"நாளை, பூனாவில் தெலுங்கு மக்கள் வாழும் பகுதிக்குச் சென்று, அவர்களிடம் என்னைப் பற்றி உரையாற்றுங்கள். கிருஷ்ணா பண்டெலுவின் தந்தையை உடன் அழைத்துச் சென்று சொன்னதை சிறப்பாகச் செய்யுங்கள்."**

பைதூல் உத்தரவுப்படி செய்தார். மறுநாள் மதியம் பூனா மையத்தைச் சார்ந்த சேவகர்கள் வந்த வேளையில், பாபா, பைதூலிடம், **"நேற்று நீங்கள் என்ன செய்தீர்கள் என்று விளக்கமாகச் சொல்லுங்கள்"** என்று கூறினார்.

"நேற்றைய பணி மிகவும் சிறப்பாக முடிந்தது," என்று பைதூல் பதிலளித்தார். "ஆந்திரா மக்கள் வெகுவாக ஈர்க்கப்பட்டனர், உங்கள் தரிசனத்திற்காக அனைவரும் இங்கு வருகிறார்கள்."

"அப்படியானால் நீங்கள் சிறப்பான பணி ஒன்றைச் செய்தீர்கள், இல்லையா?"

"ஆமாம் பாபா, மிகவும் சிறந்ததொரு பணி செய்யப்பட்டது. நான், நாள் முழுவதும் அந்த பகுதியில் சுற்றி அலைந்து, மிகவும் சோர்வடைந்தேன். நான் ஏராளமான பணியைச் செய்தேன்."

"என்ன? காட்டுமிராண்டி ஈரானி!" பாபா சீற்றத்துடன் தோன்றினார். **"முதலில், நீங்கள் அவர்களை எதிர்கொண்டு, இப்படி ஒரு பணியைச் செய்ய முடியுமா? உங்களால் என்ன வேலை செய்ய முடியும்? உங்களை யாருக்குத் தெரியும்? எனது பணியை நான் மட்டுமே செய்கிறேன் என்பதை நீங்கள் உணரவில்லையா?"**

"ஆமாம், பாபா, நீங்கள் மட்டுமே உங்கள் பணியைச் செய்கிறீர்கள்."

"அப்படியானால் நீங்கள் அதைச் செய்ததாகச் சொல்லி, அதற்காக ஏன் புகழாரம் சூட்டிக்கொள்கிறீர்கள்? அதைச் செய்ய நீங்கள்தான் காரணம் என்று உணர்கிறீர்கள் போலும், இல்லையா?"

“ஆமாம், பாபா. நான் முழு நாளும் வெயிலில் அலைந்து திரிந்து மிகவும் சோர்வாகிவிட்டேன்.”

“ஆனால் அதில் என்ன பெரிய விஷயம் உள்ளது? எனக்குக் கீழ்ப்படியும் விருப்பம் இருந்தால், சோர்வைப் பற்றி பேசமாட்டீர்கள், என் முன்னிலையில் இதுபோன்ற விஷயங்களைச் சொல்ல நீங்கள் வெட்கப்பட வேண்டும். தூசாக மாறுங்கள்; அப்போதுதான் நீங்கள் எனது பணியைச் செய்வீர்கள்! உங்களை ஏன் புகழ்ந்து கொள்கிறீர்கள்? நீங்கள் அகங்காரத்தால் நிறைந்திருக்கிறீர்கள்! என்னுடைய எந்த வேலையை உங்களால் செய்ய முடியும்? பாபா ஒருவரே அவருடைய வேலையைச் செய்கிறார் என்று உண்மையாக நம்புபவர் மட்டுமே எனக்கு உதவ முடியும். எந்த வேலையையும் செய்ய முடியும் என்ற நம்பிக்கை உங்களுக்கு உள்ளதா?”

இவ்வாறு பாபா, பைதூலை வசைபாடிக்கொண்டே இருந்தார்; பூனா அன்பர்கள், அமைதியான சிலைகளாக அமர்ந்து, கவலை தோய்ந்த முகத்துடன் கேட்டுக் கொண்டிருந்தனர். அவர்களுக்குப் பாடம் கற்பிக்கும் விதத்தில் அன்று பைதூல், பாபாவின் இலக்காகச் செயல்பட வேண்டியதாயிற்று; அன்றிலிருந்து அவர்கள் தங்கள் ‘அருஞ்செயல்களை’ப் பற்றி பெருமை கொண்டதில்லை. பிறருக்கு ஒழுக்கத்தை கற்பிக்க, பாபா எப்பொழுதும் மண்டலியை இலக்குகளாகப் பயன்படுத்துவது வழக்கம், ஏனெனில் அவர் உருவாக்கும் ஆழமான காயங்களை, அவர்களால் மட்டுமே தாங்கிக்கொள்ள முடியும்.

ஒருமுறை பாபா, குருபிரசாத்தில் மண்டலியுடன் அமர்ந்திருந்த வேளையில், பூனா மையத்தைச் சார்ந்த சில அன்பர்களும் வந்திருந்தனர். பால் நாத்து மையத்தில் பாபாவைப் பற்றி உரை நிகழ்த்தியதை அனைவரும் பாராட்டினர். பாபா இவ்வாறு கருத்துரைத்தார், **“பால் நாத்து ஒரு ரத்தினக் கல், இந்த இருவரையும்** (விஷ்ணு மற்றும் பாவ் கல்சூரியைச் சுட்டிக்காட்டி) **பாருங்கள், சுத்த நிலக்கரி!”**

பாபாவின் அருகில் இரவுக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டவர்கள், தங்கள் கடமைகளைச் செய்யும்போது, பல சிரமங்களை சந்தித்தனர். கோடை வெயிலில் சோர்வாக இருந்த பாபாவின் கால்களை, இரவு கண்காணிப்பாளர்கள் அழுத்த வேண்டியிருந்தது. அதுவும் மிதமான, நிலையான அழுத்தத்தில். ஒருவர் பாபாவின் கால்களை சற்று கடினமாக மஸாஜ் செய்தால், **“உங்களுக்கு என்ன என் மீது கோபமா?”**, மிகவும் மென்மையாகச் செய்தால், **“உங்களுக்கு என்ன தூக்கம் வருகிறதா?”** என்றும் வினவினார். எதுவும் செய்யாத போது, இரவு கண்காணிப்பாளர் ஒரு சிலை போல முற்றிலும் அசையாமல் அமர்ந்திருக்க வேண்டியிருந்தது. சிறிய அளவிலான சத்தமும் பாபாவின் ஓய்வைக் குலைத்தது. எச்சில் விழுங்குவது கூட பாபாவை தொந்தரவு செய்ய போதுமான சத்தமாக இருக்கும் என்று கற்பனை செய்வது கடினம். எனவே இரவில்

பாபாவின் அருகில் இருப்பது மிகவும் கடினமான கடமைகளில் ஒன்றாக இருந்தது.

ஒருமுறை பாபாவின் அருகில் பாவ் கல்சூரி கண்காணித்துக் கொண்டிருந்த வேளையில், அவர் ஒரு ஜோடி மெல்லிய பைஜாமா அணிந்திருந்தார். பாபா குறட்டை விட்டபடி படுத்திருந்தார். சத்தம் செய்யவேண்டாம் என்று குறிப்பாக பாபா கூறியிருந்ததால், பாவ் கல்சூரி அமைதியாக அமர்ந்திருந்தார்.

திடீரென, பாபாவின் கொசுவலை சரியாக மூடப்படாமல் இருப்பதையும், அப்படியே இருந்தால், கொசுக்கள் உள்ளே நுழைந்து அவரைத் துன்புறுத்தக்கூடும் என்பதையும் உணர்ந்து, பாவ் கல்சூரி, சத்தம் செய்யாமல் மெதுவாக எழுந்து நின்று, பாபாவின் படுக்கையை நோக்கி அடி எடுத்து வைக்கத் தொடங்கினார்.

பாபா எழுந்து, "**ஏன் நகர்ந்தீர்கள்?**" என்று கேட்டார்.

பாவ், "நான் சத்தம் செய்யவில்லை பாபா" என்றார்.

அவர் பதிலளித்தார், "**உங்கள் பைஜாமாவின் சலசலப்பை நான் கேட்டேன்.**" பாவ் கல்சூரியின் முகம் ஆச்சரியத்தில் ஒளிர்ந்தது.

பாவ் கல்சூரியின் முகபாவத்தைக் கண்டு பாபா சீற்றமடைந்தார். அவர் பாவ் கல்சூரியைக் கடுமையாகத் திட்டி, வெறுப்பை வெளிப்படுத்தும் பார்வையுடன், "**உங்கள் இல்லத்திற்குத் திரும்பிச் செல்லுங்கள். இனிமேல், நீங்கள் என்னுடன் இருக்க முடியாது; உங்கள் முகத்தை நான் பார்க்க விரும்பவில்லை**" என்று சைகையால் தெரிவித்தார்.

பாவ் கல்சூரி முறையிட்டார்: "பாபா, அருகில் ரயில்கள் ஓடுகின்றன, பேருந்துகள், கார்கள் மற்றும் சரக்கு லாரிகள் சாலைகளில் விரைந்து செல்கின்றன. அவை அதிக சத்தத்தை எழுப்புகின்றன! அவ்வப்போது வெளியில் ஒலிபெருக்கிகளும் ஒலிக்கின்றன. அந்த சத்தத்தைப் பற்றி நீங்கள் புகார் செய்யவில்லை, ஆனால் எனது பைஜாமாவின் சலசலப்பைக் குறித்து நீங்கள் புகார் செய்கிறீர்கள்."

பாபா, அவரிடம் கடுமையாகக் கேட்டார், "**எனக்கு சேவை செய்ய நான் ரயில், பேருந்துகள், சரக்கு வாகனங்கள் மற்றும் கார்களைத் தேர்ந்தெடுத்தேனா, அல்லது உங்களைத் தேர்ந்தெடுத்தேனா? யாரைத் தேர்ந்தெடுத்தேன்? நான் உங்களை எனக்கு சேவை செய்ய அனுமதிப்பதால், உங்கள் மீது எனக்கு அக்கறை இருக்கிறது. ரயில்கள், பேருந்துகள் அல்லது வேறு எதைப் பற்றியும் எனக்கு என்ன கவலை?**"

பாவ் கல்சூரி தனது தவறை உணர்ந்தார்; அவர் மீது பாபா வைத்துள்ள அக்கறையும், தன் அருகில் இருக்க அனுமதித்ததன் மூலம் அவருக்குக் கிடைத்த பாக்கியமும், பாவ் கல்சூரியின் இதயத்தைத் தொட்டது.

முந்தைய ஆண்டு, பாபாவை சந்தித்த நீதிபதி பிரேம் கில்னானி (PREM KHILNANI), அவரது மனைவி கிரிஜா (GIRIJA, 33) மற்றும் அவர்களது இரண்டு இளம் மகன்களான வினோத் (VINOD), ராஜ் (RAJ) ஆகியோரை பாபாவின் தரிசனத்திற்காக

அழைத்து வந்தார். மெஹர் பாபா, அவதார புருஷர் என்பது குறித்து கிரிஜாவிற்கு வலுவான சந்தேகம் இருந்தது. பாபா கேலி, கிண்டல் செய்து, சீட்டு விளையாடுவதைக் கண்டதும் அவரது சந்தேகம் மேலும் வலுவடைந்தது. ஒருமுறை, பாபா சீட்டு விளையாட்டில் மும்முரமாக இருந்தபோது, அவர் குருபிரசாத்தில் இருந்தார். திடீரென கையிலிருந்த சீட்டுகளை வீசி எறிந்துவிட்டு, பாபா கூட்டத்தில் உரையாற்றினார்: **"இப்போது சொல்லுங்கள், நீங்கள் என்னை என்னவாக எடுத்துக் கொள்கிறீர்கள்? நீங்கள் உண்மையைக் கூறினால் நான் மகிழ்ச்சியடைவேன், பொய் பேசினால் அது வேதனையை விளைவிக்கும்."**

அங்கிருந்தவர்களில் சிலர், அவரை, அவதார புருஷர் அல்லது 'மெஸையா' என்று கூறினர்; சிலர் அவரை ராம், ஸொராஸ்டர், முஹமது ஆகியோருடன் ஒப்பிட்டனர். கிரிஜா அமைதியாக இருந்தார்; ஆனால், பாபா அவரது சந்தேகத்திற்கு பதிலளிப்பதை அவர் உணர்ந்தார்.

ஆனால் இது அவரது மனக் கிளர்ச்சிக்கு ஒரு முடிவைக் கொண்டுவரவில்லை. அவர் ஏற்கனவே ஒரு குருநாதரைப் பின்பற்றுவதால், இன்னொருவரை அணுகுவது நல்லதல்ல என்று அவர் நியாயப்படுத்தினார். அவரது குரு, உயிரைத் துறந்த பின்னரும், இன்னும் அவரை நினைத்து, மெஹர் பாபாவிடம் வந்ததன் மூலம், தனது குருவிற்கு துரோகம் விளைவிப்பதாக உணர்ந்தார். இந்த எண்ணங்கள் அவரைத் தொந்தரவு செய்த போது, கிரிஜா எதையும் குறிப்பிடாத அந்த நேரத்தில், பாபா இவ்வாறு கருத்துரைத்தார், **"உங்கள் கணவர் ஒரு நீதிபதி. அவருக்கு அதிகாரம் உள்ளது. அந்த அதிகாரத்தின் பலத்தில் அவர் குற்றவாளிகளை சிறைக்கு அனுப்பலாம். ஆனால் அவர் ஓய்வு பெற்ற பின்னர், ஒருவர் உண்மையில் குற்றவாளி என்பதை அவர் அறிந்திருந்தாலும், அவரால் குற்றவாளியைத் தண்டிக்க முடியாது, அப்படித்தானே?"** கிரிஜா, பாபாவின் வார்த்தைகளால் வெகுவாக ஈர்க்கப்பட்டார், மேலும் அவர் தனது மறைந்த குருவைக் குறிப்பிடுகிறார் என்பதை அறிந்தார்.

ஆனாலும், அவருடைய சந்தேகம் நீடித்தது. கிரிஜா, தான் பின்பற்றிய குரு, பாபாவை விட உயர்ந்தவரா என்று யோசித்தார். பாபா சீட்டாட்டத்தில் ஆழ்ந்த கவனம் செலுத்திக் கொண்டிருந்தார், ஆனால் அதே சமயம் கிரிஜாவின் கேள்விகளுக்கு அவர் நேரடியாகக் குரல் கொடுக்காமல், பதில் சொல்லிக் கொண்டிருந்தார். அவர் கூட்டத்தினரைப் பார்த்து இவ்வாறு குறிப்பிட்டார்: **"உலகில் இதுவும் அதுவும் நிறைந்த பல சிறிய அங்காடிகள் உள்ளன, ஆனால் இதுபோன்ற சாதாரண பொருட்களை நீங்கள் காண முடியாத பெரிய களஞ்சியம் ஒன்று உள்ளது. வணிகர்களில் இளவரசன் ஒருவர் அதன் உரிமைக்காரர், நான் அத்தகைய களஞ்சியத்தின் உரிமையாளர் மற்றும் வணிகர்களிடையே பேரரசர்."**

மீண்டும், பாபாவின் வார்த்தைகள் தன்னை நோக்கி பாய்வதை கிரிஜா அறிந்தார், அப்போது அவருடைய சந்தேகம் நீங்கியது. அவர் பாபாவின் பாதங்களை வணங்கினார். பாபாவைத் தழுவும் போது, அவர் வெட்கத்தில் அதை

மனமார விரும்பி செய்யவில்லை. பாபா அவரைப் பார்த்து, **"நீங்கள் உங்கள் கணவரையும் இப்படித்தான் தழுவுகிறீர்களா?"** அவர் சிரித்துக்கொண்டே பாபாவின் கரங்களில் வீழ்ந்தார்.

பாத்தர்டியைச் (PATHARDI) சேர்ந்த வழக்கறிஞர் வி.ஆர். படே (V.R. BADE), பாபாவின் தரிசனத்திற்காக வந்தவர், தினமும் அவரை தரிசனம் செய்ய பூனாவில் சிறிது காலம் தங்க விரும்பினார்; ஆனால் அவரது நிதி நிலைமை அதை அனுமதிக்கவில்லை. 'மெஹர் பாபாவின் அருகில் செல்வந்தர்கள் மட்டுமே இருக்க முடியும், ஏழைகள் அல்ல' என்ற எண்ணம் அவர் மனதில் மேலோங்கி நின்றது. படே, பாபாவை அணுகியபோது அவர் கூறினார், **"நீங்கள் இரண்டு வாரங்களுக்கு, தினமும் என்னிடம் வர வேண்டும். அதைச் செய்வீர்களா?"**

"நிச்சயம் பாபா. நானும் அதையே நினைத்துக் கொண்டிருந்தேன், நிச்சயமாக வருவேன்."

"எப்படி அதைச் செய்வீர்கள்?"

"எப்படியேனும் பார்த்துக்கொள்கிறேன்" என்று படே பதிலளித்தார்.

"இரண்டு வாரம் உங்கள் செலவுக்குத் தேவையானதை, நான் ஒருவர் மூலம் ஏற்பாடு செய்கிறேன். எந்த நன்றி உணர்வையும் வெளிப்படுத்தாமல், பணத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். உங்களால் முடியும்போது அவருக்கு அதைத் திருப்பிக் கொடுங்கள்." படே கண்களில் நீர் பெருக அந்த முன்மொழிவை ஏற்றுக்கொண்டார். அவர் தனது எண்ணங்களுக்காக வருந்திய அதே வேளையில், அவதார புருஷரின் சர்வஞானம் மற்றும் இரக்கத்தின் நேரடி அனுபவத்தை அடையப் பெற்றார்.

ஒருமுறை, அஹமதுநகரைச் சேர்ந்த கேக்கி தமானியாவும் (KEKI DAMANIA) அவரது மனைவி சகுந்தலாவும் (SHAKUNTALA) குருபிரசாத்தில் பாபாவைப் பார்க்க வந்தனர். அவர்களது பத்து மாத மகள் மெஹர்னாஸுக்கு (MEHERNAZ) கடுமையான ஜுரம் இருந்தது; ஆனால், குழந்தை பாதுகாப்பாக இருப்பாள் என்பதை அறிந்த தம்பதியினர், அவளை முன் அறையில் அமரவைத்து, அருகிலிருந்த பஜாருக்குச் சென்றனர். அங்குத் தனியாக இருந்த குழந்தையைப் பார்த்த பாபா, அது யாருடைய குழந்தை என்று கேட்க, எவருக்கும் தெரியாதபோது, பாபா குழந்தையை தன்னிடம் கொண்டு வந்தார்; அவளுக்கு ஜுரம் இருப்பதை உணர்ந்து, அவர் தமது கைகளால் அவளை வருடி, டாக்டர் கோஹெரை அழைத்து, மெஹர்னாஸை பரிசோதிக்குமாறு கூறினார். குழந்தைக்கு மருந்து கொடுக்கப்பட்டு, ஓர் அறையில் பாதுகாப்பாக இருந்தது. விரைவில் தம்பதியர் திரும்பி வந்து தங்கள் குழந்தையைத் தேடத் தொடங்கினர். பாபா, **"யாரைத் தேடுகிறீர்கள்?"** என்று கேட்டார்.

கேக்கி, "மெஹர்னாஸை இங்கே விட்டுச் சென்றோம்" என்றார்.

பாபா அவர்களைக் கடிந்துகொண்டார், **"அவளை இங்கே தனியாக விட்டுவிட்டீர்களே! என்ன அருமையான பெற்றோர் நீங்கள்! குழந்தைக்கு 105°**

ஜுரம், இந்த நிலையிலும் அவளை இங்கே விட்டுவிட்டு வெளியே சென்றுவிட்டீர்கள். நீங்கள் எப்படிப்பட்ட மனிதர்கள்?"

"பாபா, நீங்கள் இங்கே இருக்கிறீர்கள், நாங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்?"

"நான் இங்கே இருந்தாலும், குழந்தை இறந்திருந்தால், நீங்கள் வருத்தப்பட மாட்டீர்களா?"

"இல்லை பாபா. எல்லாம் உங்கள் விருப்பப்படியே நடக்கும்."

"அப்படியானால் நான் உங்களுக்குச் சொல்கிறேன், மெஹர்னாஸ் நாளை இறந்துவிடுவார்!" கேக்கியும், சகுந்தலாவும் அமைதியாக இருந்தனர், மறுநாள் இறப்பதற்கு பதிலாக, குழந்தையின் உடல் நலம் சீரானது!

ஆந்திரா, ஹமிர்பூர், டெல்லி, டெஹ்ரா டூன், நாக்பூர், கொல்கத்தா, மும்பை, நவ்ஸாரி மற்றும் பிற இடங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான அன்பர்களும், பக்தர்களும் இந்த மாதங்களில் பாபாவின் தரிசனத்திற்காக பூனா வந்தனர். தரிசன வேளையில் பக்தி பாடல்கள் ஒலித்துக்கொண்டே இருந்தது. பூனா மற்றும் அஹமதுநகர் பஜனை குழுக்கள் தவிர, இந்தியா முழுவதிலுமிருந்து பல்வேறு பாடகர்கள் பங்கேற்றனர், ஆனால் பூனா பஜனை குழுவினருக்கு, பிற குழுக்களைவிட பாபாவிற்கு முன்பாக அடிக்கடி பாடும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

பூனா குழுவிற்கு பின்னால் இருந்த முக்கிய சக்திகளில் ஒன்று மதுசூதன். அவருக்கு, பூனா குழுவில் பங்கெடுக்கும் பாடகியான சுபத்ரா பண்டெலுவுடன் திருமணம் நிச்சயம் செய்யப்பட்டு, 1959 மே 14 வியாழன் அன்று, குருபிரசாத்தில் பாபா முன்னிலையில், அவர்களது திருமணம் நடைபெற்றது. அந்த நிகழ்ச்சிக்காக, மதுசூதன் சிறப்பாக இயற்றிய ஒரு புதிய பாடலை இருவரும் பாடினர். பாபாவின் அன்பு, இருவரையும் இணைத்து வைத்த ஒரு வகையான 'அற்புதங்களுக்கு' உண்மையிலேயே ஓர் எடுத்துக்காட்டு. சுபத்ரா ஹரிஜன் (தீண்டத்தகாத) இனத்தைச் சார்ந்தவர், மதுசூதன் ஓர் உயர்சாதி பிராமணர். இந்தத் திருமணத்தை முதலில் கேள்விப்பட்டபோது, அவரது குடும்பத்தினர் எதிர்த்தாலும், பின்னர் இணக்கம் தெரிவித்தனர். பாபா தம்பதியினரை ஆசீர்வதித்தார், பின்பு பதிவாளர் அலுவலகத்தில் நிகழ்ந்த பொது விழாவில், அவர்கள் முறைப்படி திருமணம் செய்து கொண்டனர்.

குருபிரசாத்தில் நடந்த விழாவின் நடுவில், பாபா இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்: **"நான் ஏன் இப்படிச் செய்கிறேன்** (அவர்களை திருமணம் செய்துகொள்ள அனுமதிக்கிறேன்) **என்று எரச்சிற்கு மட்டுமே தெரியும். இதன் மூலம் நான் செய்யும் பணி எவருக்கும் தெரியாது. பாபாவாக நான் நடத்தி வைத்த முதல் மற்றும் கடைசி திருமணம் இது."**

அப்போது அவர் கூறியதாவது:

மதுசூதன் & சுபத்ரா,
குருபிரசாத், 14 மே 1959
(MADHUSUDAN & SUBHATRA
14 MAY 1959)



'புர்ரா கதா' குழு, மே 1959
(BURRA KATHA GROUP, MAY 1959)

நான் கடவுள் - அதற்கும் அப்பாற்பட்ட கடவுள். எனது நெருங்கிய தோழமைக்கான சந்தர்ப்பங்களை உங்களுக்கு அடிக்கடி வழங்குவதன் மூலம், நான் உங்களை என்னுடன் மேலும் மேலும் நெருங்கச் செய்கிறேன். ஆனால் இந்த அதிகப்படியான பரிச்சயம், நான் மனித உருவில் உங்களிடையே கடவுளாக வந்தவன் என்பதை அடிக்கடி மறந்துவிடச் செய்கிறது.

நடப்பதும், நடக்கப்போவதும் அனைத்தும் நான் அறிவேன். உண்மையில், நடக்கும் எதுவும் எனது விருப்பமின்றி நடக்காது. தெரிந்தே, நான் அனைத்து விஷயங்களையும் அவற்றின் இயல்பான போக்கில் நடக்க அனுமதிக்கிறேன்.

நான் உங்களிடம் கேட்பதெல்லாம் என்னை மிகவும் நேசிப்பதும், எல்லா நேரங்களிலும் எனக்குக் கீழ்ப்படிவதும்தான். நீங்கள் எனக்குக் கீழ்ப்படிவது சாத்தியமற்றது என்பதை அறிந்து, கீழ்ப்படிதலின் முக்கியத்துவத்தை அடிக்கடி உங்களிடம் கொண்டு வருவதன் மூலம், எனது அறிவுரைகளை முழு மனதுடன் நிறைவேற்ற உங்களுக்கு உதவுகிறேன்.

இப்போது நான் சொல்லப்போவதை மிகவும் கவனமாகக் கேளுங்கள்.

பாபா விரும்புவதையே ஒருவர் விரும்ப வேண்டும் என்று தேஷ்முக்கிடம் அவர் சொன்னதையே திரும்பத் திரும்ப எடுத்துரைத்தார். இறுதியில் பாபா இவ்வாறு கூறி முடித்தார்:

நான் விரும்புவதை விரும்புவது எளிதானது அல்ல என்பது எனக்குத் தெரியும்; அது கிட்டத்தட்ட சாத்தியமற்றது. இருப்பினும், நான், நீங்கள் செய்ய விரும்பும் எதையும், உங்கள் இதயம் மற்றும் ஆத்மபூர்வமாக இயன்றவரை செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். என்மீதான தீவிர அன்பு ஒன்றுதான், நான் விரும்பியபடி எனக்குக் கீழ்ப்படிய உங்களை வழிநடத்தும்.

பல பாபா அன்பர்கள் தம்பதியருக்கு திருமண பரிசுகளை வழங்கினர், மேலும் மணமகளின் தந்தை அனைவருக்கும் மதிய விருந்து அளித்தார். பாபாவின் முன்னிலையில் பரிசுப் பட்டியல் வாசிக்கப்பட்டது, மிகவும் செல்வந்தராக இருந்த மெஹர்ஜி அவர்களுக்கு ஒரு சிறிய பரிசை வழங்கியதைக் கேள்விப்பட்ட பாபா, சீற்றத்தில் அருகிலிருந்த பாத்திரத்தை அவர் மீது வீசினார்.

அன்று ஆதி சீனியர், காக்கா பாரியாவுடன், ஆதியின் மருமகள் நாகு மற்றும் அவரது வருங்கால கணவர் ரவி மேத்தாவுடன் வந்திருந்தார். பாபா இந்த ஜோடியை ஆமோதித்து, இருவரையும் அவருக்கு முன்னால் தழுவச் செய்தார்.

1959 மே மாதத்தின் நடுப்பகுதியில், பாபா தமது உலகளாவிய பணியின் சுமை வெகுவாக அதிகரித்து வருவதாகவும், 'நேரம்' நெருங்கி விட்டதாகவும் அடிக்கடி சுட்டிக்காட்டத் தொடங்கினார். மே 14 முதல் அவர் 56 நாட்களுக்கு, ஒரு சிறப்பு காலகட்டத்தை தொடங்க இருந்தார்; அந்த நேரத்தில் பாபா, சம்பந்தப்பட்ட அனைவரையும் தமது ஒவ்வொரு விருப்பத்திற்கும் முழுமையாகக்

கீழ்ப்படியுமாறும், அவருக்கு எந்த வகையிலும் எரிச்சலுக்கான குறைந்தபட்ச வாய்ப்பிற்கும் இடந்தர வேண்டாம் என்றும் அறிவுறுத்தினார். அவர் மேலும் கூறியதாவது:

எனது விருப்பத்திற்கிணங்க அனைத்தும் சீராக நடந்தால், எனது பணி 100 சதவீதம் வெற்றிகரமாக, உன்னதமான முடிவுகளுடன் நிறைவுறும். நீங்கள் உங்களால் இயன்றதைச் செய்தால், எனக்கு உதவ நான் உங்களுக்கு உதவுவேன்.

இந்த நாட்களில் மாயா, முழு பலத்துடன் எனது பணியை எதிர்க்கும் ஆயத்தத்தில் இருப்பாள். எனவே, குறிப்பாக என் அருகில் வாழ்பவர்கள், மிகவும் கவனமாக இருக்க வேண்டும். உங்கள் மீதான என் அன்பை அறிந்த மாயா, உங்களின் பலவீனங்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பிற்காக காத்திருக்கிறாள். என் அறிவுரைகளை நீங்கள் புறக்கணிக்கும் தருணத்தில், மாயாவின் நோக்கம் நிறைவேற்றப்படும். நான் மாயாவுடன் ஒரு பெரிய மோதல்போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும் - அதை அழிக்கும் நோக்கத்தில் அல்ல, ஆனால் அதன் ஒன்றுமில்லாத தன்மையை உங்களுக்கு உணர்த்துவதற்காக. நீங்கள் எனக்கு முழுமையாகக் கீழ்ப்படியத் தவறும் தருணத்தில், மாயா உங்கள் மீது அதன் பிடியை இறுக்குகிறது மற்றும் உங்களுக்கென ஒதுக்கப்பட்ட கடமைகளை நீங்கள் செய்யத் தவறிவிடுவீர்கள். இது எனது தற்போதைய துன்பத்தை அதிகரிக்கிறது.

கடவுளில் குழப்பம் என்று எதுவும் இல்லை: கடவுள் எல்லையற்ற ஆனந்தம் மற்றும் நேர்மையின் மொத்த உருவம். மாயை துன்பம், குழப்பம் மற்றும் ஒழுங்கற்ற தன்மையின் உறைவிடம். மனிதகுலத்தின் நித்திய இரட்சிப்பாளராக, நான் எப்பொழுதும் ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளும், மாயையும் ஒன்றிணையும் சந்திப்பில் நிலைகொண்டுள்ளேன்; ஒரே நேரத்தில் உண்மைப்பொருளின் எல்லையற்ற பேரின்பத்தையும், மாயையின் இடையறா துன்பத்தையும் அனுபவிக்கிறேன். ஒருபுறம் உண்மைப்பொருள், மறுபுறம் மாயை - இரண்டும் என்னை ஒவ்வொரு பக்கத்திலிருந்தும் இழுப்பதைப் போலவே, நான் தொடர்ந்து அனுபவிக்கிறேன். இதுவே என்னை சிலுவையில் அறையப்படுவதன் அர்த்தம். உண்மைப்பொருளின் மீதான எனது பிடியை நான் ஒருபோதும் நழுவ விடுவதில்லை. உதாரணமாக மாயையின் ஈர்ப்பு சக்தி மிகவும் அதிகமாகிறது என்று கற்பனை செய்து பாருங்கள். அப்போது என்ன நடக்கும்? எனது 'கை' அதன் மூட்டு இணைப்பிலிருந்து வெளியே வந்தாலும் நான் என்னவாக இருந்தேனோ அவ்வாறே இருக்கிறேன்!

பாஸ்கர ராஜுவும் அவரது நாடகக் குழுவும் 1959 மே 16 அன்று பூனாவிற்கு வந்து, பிற்பகலில் பாபாவை சந்தித்தனர். ஜிம் மிஸ்திரி தனது மகன் மெஹர்வானின் பிறந்தநாளை சிறப்பிக்கும் வகையில், மாம்பழ ஐஸ்கிரீம் கொண்டு வந்திருந்தார். பாபா அதை ருசித்துப் பார்த்து, பிரசாதமாக

அனைவருக்கும் விநியோகித்தார். வேடிக்கைக்காக, கூட்டத்தில் இருந்தவர்கள் சிலரின் திறந்த வாய்களில் சில கரண்டி ஐஸ்கிரீமை வீசினார்.

பாபா அவர்களிடம், **"உங்கள் அனைவரையும் பார்த்ததில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். விசில் அடிப்பதன் மூலம் எனது மகிழ்ச்சியை வெளிப்படுத்த விரும்புகிறேன். ஆனால் நான் மௌனமாக இருப்பதால், எப்படி விசில் அடிப்பது? எனவே நீங்கள் அனைவரும் எனது சார்பாக அதைச் செய்யுங்கள்"** என்றதும், ஒவ்வொருவராக அவ்வாறே செய்தனர். அடுத்தநாள் மாலை 6:30 மணிக்கு, கோகலே ஹாலில் ஆந்திரா குழுவினர் 'புர்ரா கதா' (BURRA KATHA) நாடகத்தை பொது நிகழ்ச்சியாக நடத்தினர்.

17ஆம் தேதி காலை பாஸ்கர ராஜு, கொண்டபள்ளி வெங்கடாச்சார்யா (KONDAPALLI VENKATACHARYA), பாரேபள்ளி சத்யம் (PAREPALLI SATYAM), பி. சத்தியநாராயண ராஜு (B. SATYANARAYANA RAJU), ராமபத்ர ராஜு (RAMABHADRA RAJU) ஆகியோர் குருபிரசாத்தில் பாபா முன்னிலையில் தங்களின் நான்கு மணி நேர கதாகாலட்சேப நிகழ்ச்சியின் சுருக்கமான வடிவத்தை வழங்கினர். அதைத் தொடர்ந்து, காலை 10:00 மணியளவில், பிக்குபாய், பாபாவுடன் குழுவின் புகைப்படம் ஒன்றை எடுத்துக் கொண்டார். பாபா இவ்வாறு குறிப்பிட்டார், **"இது ஒரு தனித்துவமான புகைப்படம். எனது உடலைக் கைவிட்ட பின்பு, மக்கள் அதைப் பாராட்டுவார்கள் மற்றும் எனது உலகளாவிய நோக்கத்திற்காக நீங்கள் செய்யும் சேவைகளை அங்கீகரிப்பதற்காக உங்களை அணுகுவார்கள்."**

இதற்கிடையில், மன்ஸாரி மற்றும் கைக்கோபாத்தின் குடும்பத்தினர் பாபாவுடன் பகல் பொழுதைக் கழிக்க மே 17 அன்று குருபிரசாத்திற்கு அழைத்து வரப்பட்டனர். அவர்கள் மெஹராபாத் மலையில் தனியாக வாழ்ந்து வந்தனர்; பாபாவின் அனுமதியின்றி மெஹராபாத் மேல்மலையை விட்டு வெளியேறுவது அரிது. மன்ஸாரியின் சகோதரர் மினூ, அன்று மீண்டும் கொண்டுவந்த ஐஸ்கிரீமை பாபா அனைவருக்கும் விநியோகித்தார்.

பூனாவில் பாபா தங்கியிருந்த காலத்தில், அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, கே.என். ஸோமன் (K.N. SOMAN) மராட்டியில் எழுதத் தொடங்கிய நாடகத்தை அவரால் முடிக்க இயலவில்லை.

மஹாராணி ஷாந்தாதேவி, தனது மகள்களுடன் மே 22 அன்று பாபாவைப் பார்க்க வந்தவர், மறுநாள் ஸர்தார் ராஸ்தேயுடனும் வந்தபோது, இரண்டு மணி நேரம் பாபாவின் சகவாசத்தில் இருக்க நேர்ந்தது. ஷாந்தாதேவி பூனாவிற்கு வரும் போதெல்லாம் குருபிரசாத்தில் பாபாவை அடிக்கடி சந்திப்பதை வழக்கமாகக் கொண்டார்; ஆனால், பாபா குருபிரசாத்தை ஆக்கிரமித்திருந்த வேளையில், அவர் வேறொரு பங்களாவில் தங்கினார். ஒருமுறை பாபா அவரிடம், **"நீங்கள் என்னிடம் தவறாமல் வர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆனால் உங்களுக்கு நேரமும், வசதியும் இருக்கும் போது**

மட்டும் வாருங்கள்" என்று கூறினார். பாபா, பிறரை அழைப்பதுபோல, தன்னை அவரிடம் வருமாறு கட்டளையிடாததைக் குறித்து, ஷாந்தாதேவி ஆச்சரியமடைந்தார். ஆனால், பாபா அவருக்கு எந்த உத்தரவையும் வழங்கவில்லை; அவர் ஒருபோதும் பாபாவிடம் தானாக எதையும் கேட்டதுமில்லை. ஆனால், எப்போதேனும் பாபா, ஷாந்தாதேவியின் மனதில் அலைமோதிய விஷயங்களை வினவும் வேளையில், அவர் பதில் அளிக்கும் விதத்தில், அவரது தனிப்பட்ட மற்றும் குடும்ப விஷயங்களைப் பற்றி பாபாவிடம் கூறினார். (கேளிக்கை நாட்டமிக்கவரான கணவருடன் அவருக்குத் திருமண மனஸ்தாபங்கள் இருந்தன.)

ஒரு சந்தர்ப்பத்தில், பாபா, ஷாந்தாதேவியிடம், **"நீங்கள் ஆசிர்வதிக்கப்பட்டவர். நீங்கள் என்னை நேசிப்பதை விட, நான் உங்களை நேசிக்கிறேன். எனது பார்வை உங்கள் மீது உள்ளது."** என்று கூறினார். பாபா பிற்காலத்தில் அவரிடம் அடிக்கடி கூறிவந்தார்: **"குருபிரசாத் என்றும் அழியாத ஒன்றாக இருக்கும். அது ஒரு புனிதஸ்தலமாக மாறும். அத்துடன் நீங்களும் என்றென்றும் நிலைத்திருக்கும் ஒருவராகி விடுவீர்கள்."**

ஒருமுறை, குருபிரசாத் மையத்தைப் பற்றி விவாதித்த வேளையில், பாபா, ஷாந்தாதேவியிடம், **"உங்கள் அரண்மனையில், நான் முழுப் பிரபஞ்சத்திற்குமான பல பணிகளைச் செய்துள்ளேன். அது குருபிரசாத்திற்கு ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றுத் தந்தது"** என்று வெளிப்படுத்தினார்.

சுவிட்சர்லாந்தில் வாழும் ஓர் அமெரிக்க ஸுஃபி (ஐவி டியூஸின் வழிகாட்டுதலின் கீழ்) மார்வின் கேம்பென் (MARVIN CAMPEN), வணிக நிமித்தமாக ஸவுதி அரேபியாவிற்குச் (SAUDI ARABIA) செல்லவிருந்ததால், பாபாவைப் பார்க்க அனுமதி கோரி கடிதம் எழுதியிருந்தார். மார்வின் 1959 மே 21 அன்று மும்பைக்கு வந்தவர், மறுநாள் மதியம் ஜிம் மிஸ்திரியால் பூனாவிற்கு அழைத்து வரப்பட்டார். மெஹர்ஜி அவர்களை ரயில் நிலையத்தில் சந்தித்து, மார்வினை நேப்பியர் ஹோட்டலுக்கு (NAPIER HOTEL) அழைத்துச் சென்று, "நாளை காலை 8:15 மணிக்கு பாபாவிடம் செல்லத் தயாராக இருங்கள்" என்று கூறினார்.

23ஆம் தேதி சனிக்கிழமை, வழக்கம் போல காலை 7:00 மணிக்கு, குருபிரசாத்தின் முன் அறைக்கு பாபா வந்தார். மண்டபத்திற்குச் செல்வதற்கு முன்னர், அவர் கடிதப் பரிமாற்றம் மற்றும் அவரது அன்றாட வேலை விவரங்களைப் பார்ப்பதில் மும்முரமாக இருந்தார். காலை 8:30 மணிக்கு, மார்வின் உட்பட அனைவரும் உள்ளே அழைக்கப்பட்டனர். மார்வின், பாபாவின் காலடியில் ஸுவிஸ் ஷேலே (SWISS CHALET) வடிவிலான இசைப்பெட்டி ஒன்றை வைத்து, அது திறக்கப்பட்டதும், பாபாவின் இதயத்திற்கு மிகவும் நெருக்கமான 'பிகின் தி பிகீன்' (BEGIN THE BEGUINE) இசையை இசைத்தது, பாபா அதை மகிழ்ச்சியுடன் கேட்டார்.

பாபா, கருத்துகளைக் பரிமாறும் மனநிலையில் இருந்து கூறினார்:

அளவிறுதியற்ற மூலமுதலான இறை கீதம் படைப்பின் ஆரம்பம். இது, பல்வேறு இரட்டைத்தன்மை படைத்த உலகில், ஏக இறைவன் எனும் எல்லையில்லா உண்மைப்பொருளை, பௌதீக உருவில் கொண்டுவருகிறது. இருமைத்தன்மை என்பது தீராத துன்பங்களைக் குறிக்கிறது.

நான் அளவிறுதியற்றவன் என்பதை அறிவதால், நான் நித்திய மகிழ்ச்சியாக இருக்கிறேன். நான் ஒருவனே உள்ளேன், என்னைத் தவிர வேறு எதுவும் இல்லை, இதர அனைத்தும் மாயை. அதே நேரத்தில், நான் நித்தியமாகத் துன்பப்படுகிறேன்.

நான் நானாக, சுதந்திரமாக இருக்கிறேன், ஆனால் உங்களில், உங்களைப் போலவே, நான் பிணைக்கப்பட்டிருக்கிறேன். உங்களைப் பிணைப்புகளிலிருந்து விடுவிப்பதற்காக நான் அறிந்து, வேண்டுமென்றே உங்கள் மூலம் துன்பப்படுகிறேன். இதுவே என்னை சிலுவையில் அறைவதற்கு சமம். நீங்கள் அனுபவிக்கும் துன்பங்கள் அனைத்திற்கும் உங்கள் அறியாமையே மூல காரணம். உங்கள் அறியாமையே எனது துன்பம்.

அதற்குப் பிறகு பாபா, **"விழிப்புற்ற கனவு நிலையிலிருந்து 'ஏக இறைவன் எனும் உண்மையான' விழிப்பு நிலை"** (AWAKE DREAM STATE TO REAL AWAKE STATE) என்ற தலைப்பில் ஒரு சொற்பொழிவை நிகழ்த்தியது, பின்னர், **'எல்லாமும் ஒன்றுமில்லாததும்'** (THE EVERYTHING AND THE NOTHING) என்ற தலைப்பில் புத்தகமாக அச்சிடப்பட்டது. பாபா இவ்வாறு கூறி முடித்தார்:

கர்ம விதி (LAW OF KARMA) **பாரபட்சமற்றது, தவிர்க்க முடியாதது, தயவுதாட்சண்யம் இல்லாதது. அதற்கு விட்டுக்கொடுக்கும் தன்மை கிடையாது, விருப்புவெறுப்புகளும், விதிவிலக்குகளும் கிடையாது. அது நீதியை வழங்குகிறது. இறை நியதிக்கு இணங்க, நீங்கள் கடந்தகால வாழ்க்கையை நினைவில் கொள்வதிலிருந்து பாதுகாக்கப்படுகிறீர்கள், ஏனெனில், இது உங்கள் இந்த கால வாழ்க்கையை வாழ உதவாமல், அதை எண்ணற்ற சிக்கலானதாகவும் குழப்பம் நிறைந்ததாகவும் மாற்றும்.**

என்னைப் பொறுத்தவரை, 'கடந்த காலம்' என்று ஒன்று இல்லை. நான் நித்தியம் எனும் நிகழ்காலத்தில் இறை வாழ்க்கையை வாழ்கிறேன். உங்களின் அனைத்து நெருக்கமான, சிக்கலான உறவுகள் மற்றும் நபர்களுடன், உங்கள் முந்தைய வாழ்க்கையை நான் தெளிவாகப் பார்க்கிறேன். முந்தைய வாழ்க்கையில் உங்கள் பரஸ்பர (கர்ம) தொடர்புகளின் பின்னணியில் காணப்பட்ட பிற அனைவருடனான உங்கள் பல்வேறு எதிர்வினைகள், எனக்கு ஒரு பெரிய நகைச்சுவையாகவும், துன்பத்தின் சுமையை குறைக்கவும் உதவுகின்றன.

அனைத்து மற்றும் அனைவருடைய வாழ்க்கையும் எனக்கு ஒரு திறந்த புத்தகம். இது, நான் எனது சொந்த செலவில் ரசிக்கும் ஒரு திரைப்படக் காட்சியைப் போன்றது. பிரபஞ்சம் என்று அழைக்கப்படும், இந்த என்றென்றும் மாறாத, எந்த முடிவுமில்லாத திரைப்படத்தின் ஒரே தெய்வீக தயாரிப்பாளர், (படைக்கும் கடவுள் - CREATOR) **நான்தான், அதில் உங்களை 'ஏக**

இறைவன் எனும் உண்மையான' விழிப்பு நிலைக்கு கொண்டுவருவதற்காக, உங்கள் விழிப்புற்ற கனவு நிலையில், நான் நீங்களாக மாறுகிறேன். இந்த நிலையை நீங்கள் அனுபவிக்கும் போது, இப்போது அனுபவிக்கும் உங்கள் விழிப்புற்ற கனவு நிலையின் ஒன்றுமில்லா தன்மையை உணர்வீர்கள். இதற்கு என் அருள் இன்றியமையாதது. என் அருளை நீங்கள் அடையப்பெறும்போது, அது உங்களை, நானாக மாற்றுகிறது.

அதே நாளில், பாபா இந்த உரையையும் வழங்கினார்:

நான் உங்களுக்குக் கட்டளையிடும்போது, முழுமையாக அதற்குக் கீழ்ப்படிய, நீங்கள் உங்களால் முடிந்தவரை முயற்சி செய்ய வேண்டும். நான் 'பறக்க'ச் சொன்னால், உங்களுக்கு இறக்கைகள் இல்லாததால், முயற்சி செய்வது கூட கேள்விக்குறியாக உள்ளது. எனது கட்டளையின் பிரதிபலிப்பாக நீங்கள் அதிகபட்சம் செய்யமுடிவது, மனிதனால் இயன்றவரை மேல்நோக்கி குதித்து, பூமியில் திரும்ப விழுவதுதான். இருந்தாலும், நான் 10,000 குட்டிக்கரணங்களைப் போடச் சொன்னால், முயற்சி நிச்சயம் சாத்தியம், ஆனால் அதன் விளைவாக, ஒருவேளை நிகழும் மரணத்தை எதிர்கொள்ளத் தேவையான உங்கள் தயார்நிலை முக்கியம். எனவே முதல் அடியை எடுத்து வைக்கவும்; நான் உங்களுக்கு உதவ உள்ளேன்.

இப்போது, வேறொரு வகையைச் சார்ந்த கீழ்ப்படிதலுக்கு மேலும் இரண்டு உதாரணங்கள்: நீங்கள் மிகவும் நேசிக்கும் உங்கள் தாயாரின் கழுத்தை நெரிக்குமாறு நான் கட்டளையிட்டால், உங்களின் எதிர்வினை என்னவாக இருக்கும்? நீங்கள் குழப்பமாகவும் பதற்றமாகவும் உணர்கிறீர்கள். நீங்கள் மனத்தடுமாற்றம் அடைகிறீர்கள். ஏனெனில், அவதார புருஷரின் உண்மை நிலையையும், அவரின் செயல்பாட்டையும் நீங்கள் புரிந்து கொள்ளவில்லை - அவர் எல்லையில்லா இறைப்பெரும் கருணைக்கடல்.

மனம் அதன் தந்திரத்துடன் விளையாடுகிறது, நீங்களே உங்களுக்குச் சொல்வீர்கள்: 'பாபா, எனது கழுத்தை நானே நெரிக்க நீங்கள் கூறியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.' ஆனால், நான், "உங்கள் கழுத்தை நீங்களே நெரித்துக் கொள்ளுங்கள்" என்று கூறுவதானால், நீங்கள் என்ன செய்வீர்கள்? என்ற எனது கேள்விக்கு, நீங்கள் 'இந்தக் கட்டளையை நாங்கள் எவ்வாறு செயல்படுத்த முடியும்? சுயநினைவுடன் ஒருவர் கழுத்தை நெரிக்க முடியுமா?' என்ற கேள்விகளை முன்வைப்பீர்கள்.

எனவே, எனக்குக் கீழ்ப்படிய முயற்சிப்பதில் இரண்டு சாத்தியக்கூறுகள் உள்ளன - விருப்பத்துடன் கீழ்ப்படிவது, விருப்பமின்றி கீழ்ப்படிவது. உங்கள் அன்பான தாயாரைக் குறித்த உதாரணத்தைப் போலவே, 'முயற்சி' சாத்தியம் ஆனால் நீங்கள் தயாராக இல்லை. இரண்டாவது எடுத்துக்காட்டில், கீழ்ப்படிவதற்கான உங்கள் விருப்பம் உள்ளது, ஆனால் முயற்சி சாத்தியமில்லை.

அப்படி ஓர் உத்தரவை இப்போது நான் கொடுக்கப் போவதில்லை. உங்கள் நிலைப்பாடு என்ன என்பதை அறிய, உங்களை நீங்களே சோதித்துக்கொள்ள இது ஒரு சந்தர்ப்பம். அனைத்து பெரிய கட்டளைகளையும் நீங்கள் செயல்படுத்த முடியும். எளிதானது அல்ல என்றாலும், பலதரப்பட்ட இயல்பான சிறிய கட்டளைகளை நிறைவேற்றுவதில் நீங்கள் வெற்றிபெறலாம். ஆனால் என்னுடன் வாழ்ந்து, சிறிய மற்றும் பெரிய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது, அதே நேரத்தில் மகிழ்ச்சியான மனநிலையில் எதைப் பற்றியும் கவலைப்படாமல் இருப்பது சாத்தியமற்றது.

இருப்பினும், எனது கட்டளைகளை நிறைவேற்றும் நோக்கத்தில், ஒருவரால் இயன்றவரை மகிழ்ச்சியாக இருக்க முயற்சித்து, என்னை உறுதியாகப் பற்றிக் கொள்வது என்பது பாராட்டத்தக்கதும், துணிச்சலுமான செயலாகும். ஹஃபீஸ் இது குறித்துத் தனித்துவமான ஒன்றைக் கூறுகிறார்:

- ஓர் அதிர்ஷ்டமுள்ள அடிமைக்கு ஏற்றமுறையில், குருநாதரின் ஒவ்வொரு கட்டளையையும், ஏன், என்ன என்ற கேள்விக்கு இடமின்றி நிறைவேற்றுங்கள். (BEFITTING A FORTUNATE SLAVE, CARRY OUT EVERY COMMAND OF THE MASTER, WITHOUT ANY QUESTION OF WHY AND WHAT.)
- குருநாதர் கூறும் எதையும், ஒருபோதும் தவறு என்று சொல்லாதீர்கள், ஏனெனில், அன்பரே, அவரைப் புரிந்துகொள்ளத் தவறியதற்கு, உங்கள் சுய இயலாமையே காரணம். (ABOUT WHAT YOU HEAR FROM THE MASTER, NEVER SAY IT IS WRONG, BECAUSE, MY DEAR, THE FAULT LIES IN YOUR OWN INCAPACITY TO UNDERSTAND HIM.)
- அறியாமையிலிருந்து என்னை விடுவித்த குருநாதரின் அடிமை நான்; எனது குருநாதர் எதைச் செய்தாலும், அது சம்பந்தப்பட்ட அனைவருக்கும் மகத்தான பலனைத் தரும். (I AM THE SLAVE OF THE MASTER, WHO HASRELEASED FROM IGNORANCE; WHATEVER MY MASTER DOES IS OF THE HIGHEST BENEFIT TO ALL CONCERNED.)

ஆகையால், நான் சொல்வதைச் செய்யுங்கள். எதற்கும் கவலைப்படாதீர்கள். மகிழ்ச்சியாகவும், முகமலர்ச்சியாகவும் இருங்கள்.

பாபா இவ்வாறு கூறி முடித்தார்:

உங்கள் இதயம் தூய்மையாக இருக்கட்டும். நீங்கள் உள்ளளவில் இல்லாததை வெளிப்புறமாகக் காட்டாதீர்கள். முற்றிலும் நேர்மையாக இருங்கள். கடவுள் எல்லையற்ற நேர்மையாளர். உங்கள் இதயம் தூய்மையாக இல்லாவிடில், பக்திமான் என்று காட்டிக் கொள்ளாதீர்கள். ஏன்? ஏனெனில் கடவுள் எங்கும் எதிலும் இருக்கிறார். கடவுளை ஏமாற்ற முடியாது. அப்படியெனும்போது, நீங்கள் இல்லாத ஒன்றை இருப்பது போலக் காட்டிக்கொள்வானேன்?

உங்களிடமிருந்து எனக்கு எதுவும் வேண்டாம். நான் பரிசுகளை ஏற்றுக்கொள்வதை நிறுத்திவிட்டேன். அன்பெனும் பரிசை எனக்கு அளித்து, அறியாமையின் அடிமைத்தனத்திலிருந்து விடுபடுங்கள்.

1959 மே 24 ஞாயிறு காலை குருபிரசாத்திற்கு மீண்டும் வர, மார்வின் கேம்பென் அனுமதிக்கப்பட்டார். பாபாவின் தரிசனத்திற்கு சுமார் 500 பேர் வந்திருந்தனர். அனைவருக்கும் தரிசனம் வழங்க, பாபா அயராது உழைத்ததைப் பார்த்த மார்வின், "பாபா, நீங்கள் எங்களுக்காக மிகவும் கடினமாக உழைக்கிறீர்கள்!" என்றார். பாபா அப்போது, "**மார்வின் என்னை நேசிக்கிறார்**" என்று கூட்டத்தினரிடம் சைகையால் தெரிவித்தார்.

ஒரு கவாலி பாடகரின் இசை நிகழ்ச்சியின் போது, மெஹர் பாபா, மார்வினிடம் கூறினார்: "**அப்பாற்பட்ட இறைநிலையில், எனது தனித்துவமான அனுபவம், மிகவும் தனித்துவமானது என்பதால், நான் எல்லாவற்றையும், மேலும் அதையும் கடந்து எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் அனுபவிக்கிறேன். பாடலும் நானே, அதன் வார்த்தைகள், மெல்லிசை, மற்றும் பாடகரும் நானே. இசைக்கருவிகளும், அவற்றை இயக்குபவரும், கேட்டு ரசிப்பவரும் நானே. உங்கள் நிலையிலிருந்து பாடகராகிய நான் பாட்டின் பொருளை உங்களுக்கு விளக்குகிறேன்.**"

மார்வின் புறப்படுவதற்கு முன்பு, பாபா அவரிடம் வலியுறுத்தி கூறினார், "**அனைவருக்கும் என் அன்பை வழங்குங்கள்.**"

ரானோ, நாஜா இருவரும் அப்போது பிந்த்ரா ஹவுஸில் தங்கியிருந்தனர்; அங்கு நாஜா, பாபா மற்றும் பெண் மண்டலிக்குத் தேவையான உணவைத் தயார்செய்து கொண்டிருந்தார். பப்பா ஜெஸவாலா மற்றும் ரோஷனின் குழந்தையைப் போலவே, ரானோவும் மே மாதத்தில் நோய்வாய்ப்பட்டார். மே 28 இரவு, ரானோ கடுமையான இரைப்பை குடல் அழற்சியின் தாக்குதலால் பாதிக்கப்பட்டு, தொடர்ந்து வயிற்றுக் கோளாறு மற்றும் வாந்தியால் சிரமத்திற்குள்ளானார். மெஹர்வான் ஜெஸவாலா பெண் மருத்துவர் ஒருவரை அழைத்து வந்தபோது, அவருக்கு மருந்து பரிந்துரைக்கப்பட்டது, மேலும் மெஹர்வானுக்கு இரவு முழுவதும் தூக்கம் இல்லை.

பாபாவிற்கு ரானோவின் உடல் நிலை குறித்துத் தெரிவிக்கப்பட்டது. மறுநாள் காலையில் அவர் பிந்த்ரா ஹவுஸுக்குச் சென்றார்; ஆனால், காரிலிருந்து இறங்குவதற்கு முன்னர், அவர் தனது ஊன்றுகோலால் தரையில் மூன்று சிலுவைகளை வரைந்தார். அவர் அவற்றை உற்றுநோக்கி, சில கணங்கள் அமைதியாக அமர்ந்து, சிலுவைகளில் ஒன்றை அழித்தார்.

உள்ளே சென்று, பாபா, ரானோவிற்கு ஆறுதல் கூறினார், பின்னர் எலுமிச்சை பழ ஷர்பத்தை தயார் செய்யுமாறு மனுவிற்கு அறிவுறுத்தினார். அவர் கண்ணாடி டம்ளரில் விரலை நனைத்து, ஒரு தேக்கரண்டி ஷர்பத்தை ரானோவிற்கு ஊட்டினார். அவர் மனுவிடம் ரானோ அதை மெதுவாக உறிஞ்சி பருக உதவுமாறு அறிவுறுத்தினார். ரானோ முழு டம்ளர் ஷர்பத்தை அருந்த முடிந்தால், அவர் ஆபத்திலிருந்து விடுபடுவார். ஒரு தேக்கரண்டி ஷர்பத்தைப் பருகும்போது, பாபாவின் பெயரை ஏழு முறை மொழியுமாறு ரானோவிடம்

கூறப்பட்டது. மிகுந்த சிரமத்துடன், அவர் அதைச் செய்து, நன்றாக உணரத் தொடங்கினார்.

பாபா, பப்பாவைப் பார்க்கச் சென்றபோது அவர், "பாபா, ரானோவைக் காப்பாற்றுங்கள், அவர் அயல்நாட்டவர், இங்கே உயிரைத் துறக்க நேர்ந்தால், காவல்துறையினரின் சிக்கலில் மாட்டிக்கொள்வோம்" என்று கூறினார். பாபா சிரித்துக்கொண்டே '**ரானோவைப் பற்றி கவலைப்பட வேண்டாம்**, **அவர் நன்றாக இருப்பார்**' என்று கூறி, பாபா, பப்பாவிற்கும் ஒரு டம்ளர் ஷர்பத்தை வழங்கினார்.

பிந்த்ரா ஹவுஸிலிருந்து புறப்படுவதற்கு முன்பு, பாபா, மெஹர்வானிடம், "**நேற்றிரவு நீங்கள் தூங்கவில்லை**, **ஆதலால் இன்று இரவு பத்து மணிக்கு படுக்கைக்குச் செல்லுங்கள்**. **இது என் உத்தரவு**" என்று கூறினார்.

பாபா, குருபிரசாத்திற்குத் திரும்பி வந்த அதே பிற்பகலில், பெண் மண்டலியுடன், மீண்டும் பிந்த்ரா ஹவுஸிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். தூன் ஸட்டா கேலியாக பாபாவிடம், "பாபா இது இல்லம் அல்ல, மருத்துவமனை!" என்றார்.

பாபா, தூனின் காதுகளை விளையாட்டாகக் கிள்ளியபடி கூறினார்: "**இந்த வீட்டில் நான் எவ்வளவு பணிபுரிந்திருக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியுமா?**" மேலும், "**நான் பேசும்போது**, **நீங்கள் பிந்த்ரா ஹவுஸில் நடந்து செல்வீர்கள்!**"

பப்பா ஜெஸவாலாவின் அறைக்கு மெஹராவை அழைத்த பாபா, "**இதுகாறும் நான் மெஹராவை**, **எந்த ஆண்மகன் முன்னிலையிலும் அழைத்து வந்ததில்லை**; **ஆனால் நான் உங்களை மிகவும் நேசிப்பதால்**, **அவரை உங்களிடம் அழைத்து வந்தேன்**" என்று கூறியது, பப்பாவின் இதயத்தில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியது. பாபா தொடர்ந்து கூறினார், "**நான் இன்று ரானோவுக்காக இங்கு வரவில்லை**; **நான் உங்களுக்காக வந்தேன்**, **பப்பா மற்றும் (ரோஷனின்) குழந்தை மெஹராவுக்காக வந்தேன்**. **நான் உங்கள் மீது அளப்பரிய அன்பு வைத்துள்ளேன்**, **பப்பா**."

இந்த நேரத்தில் மெஹர்வான், அருகிலமைந்த அவரது அலுவலகத்தில் இருந்தார், பாபா குருபிரசாத் திரும்பிச் செல்லும்போது, அவர் காரை அலுவலகத்திற்கு வெளியே நிறுத்தி, மெஹர்வானை வரவழைத்து, மீண்டும் இரவு 10:00 மணிக்கு படுக்கைக்குச் செல்ல வேண்டும் என்று அவருக்கு நினைவூட்டினார்.

அவர்கள் சென்ற பிறகு, கைமாய் மற்றும் மகள் மனுவிடம் பப்பா, "இன்று பாபா, மெஹராவை என் அருகில் அழைத்து வந்ததில், நான் எவ்வளவு தூய்மையாக இருக்க வேண்டும்!" என்று கருத்துரைத்தார்.



பப்பா ஜெஸவாலா
(PAPPA JESSAWALA) **1959**



குருபிரசாத், 1959
நரிமன், மெஹர்வான் ஜெஸவாலா, டாக்கே, ஸாம் & தாதி கேரவாலா, மெஹர்ஜி, அவரது மகள் மெஹர்னாஸ்
(NARIMAN, MEHERWAN JESSAWALA, DHAKE, SAM & DADI KERAWALA, MEHERJEE & HIS DAUGHTER MEHERNAZ)

அன்று இரவு, சரியாக பத்து மணிக்கு மெஹர்வான் படுக்கைக்குச் செல்லவிருந்தபோது, பப்பா அவருக்காகக் குரல் கொடுத்து கத்தினார். மெஹர்வான் ஒரே குழப்பத்தில் ஆழ்ந்தார்; பத்து மணிக்குத் தூங்கச் செல்ல வேண்டும் என்பது பாபாவின் கட்டளை, இப்போது இந்த எதிர்பாராத நிலை ஏற்பட்டுள்ளது.

மெஹர்வான் பாபாவின் கட்டளையை நிறைவேற்றும் நோக்கத்தில் விரைவாகப் படுக்கைக்குச் சென்று பின்பு, தனது தந்தையின் அறையை நோக்கி விரைந்தார். பப்பா மிகவும் சிரமப்பட்டு, மூச்சு விடுவதையும், வியர்த்து கொட்டுவதையும் கண்டார். பப்பாவின் உடல்நிலை குறித்து கவலையடைந்த மெஹர்வான், டாக்டரை அழைத்து வர வெளியே சென்றார், ஆனால் அது மிகவும் தாமதமானது. பப்பாவின் நேரம் நெருங்கிவிட்டது. அவர் தனது 74ஆவது வயதில் 'பாபா' என்ற இறுதி வார்த்தையை உச்சரித்து உயிர் துறந்தார். பப்பா, நுரையீரலில் ஏற்பட்ட இரத்த உறைவால் காலமானார்.

குருபிரசாத்திற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதும், நரிமன், மெஹர்ஜி இருவரையும் பாபா, பிந்த்ரா ஹவுஸுக்கு அனுப்பி வைத்தார். பாபாவின் அறிவுறுத்தலின்படி, எரச், குருபிரசாத்திலே இருந்தார். மெஹர் பாபாவின் இறைப் பெருங்கடலில் பப்பா நிரந்தரமாக ஒன்றிணைந்தார். மெஹர்வான் தனது தந்தையின் மறைவு குறித்து மனங்கலங்கவில்லை, பாபாவின் அறிவுறுத்தலுக்குக் கீழ்ப்படியாதது குறித்து மட்டுமே அவர் கவலைப்பட்டார்.

பப்பா ஜெஸவாலாவின் உடல் அன்றிரவு ஸொராஸ்ட்ரியன் பங்க்லிக்கு (ZOROASTRIAN BANGLI, பிணங்கள் நீராட்டப்பட்டு பிரார்த்தனைக்காக தற்காலிகமாக வைக்கப்படும் இடம்) கொண்டு செல்லப்பட்டது. மறுநாள் 1959 மே 30 சனிக்கிழமை காலை 7:00 மணிக்கு, பாபா, எரச்சுடன் பிந்த்ரா ஹவுஸுக்குச் சென்று, பப்பாவின் அறையில் அமர்ந்தார். பப்பா ஜெஸவாலாவின் தொப்பியை பாபா அவரது தலையில் அணிந்து, ஹோமி தமானியாவின் தொப்பியை எரச்சிடம் அணியக் கொடுத்தார். பாபா உண்ண ஏதாவது கேட்டபோது, ரோஷன், நாஜா இருவரும் உணவு தயார் செய்தனர்; அவர் அதனுடன் ரொட்டியை விரும்பினார், ஆனால் வீட்டில் ரொட்டி இல்லை.

அருகிலிருந்த பேக்கரியிலிருந்து ரொட்டி கொண்டு வருவதைக் காரணம் காட்டி, பாபா மீண்டும் மண்டலியுடன் காரில் அமர்ந்தார். அவர்கள் செல்லும் வழியில், பப்பாவின் உடல் ஊர்வலமாக அமைதிக் கோபுரத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட அந்தத் தருணத்தில், அவர்கள் அதைக் கடந்து சென்றனர். பாபா காரை நிறுத்தக் கூறி, சில நிமிடங்கள் ஊர்வலத்தைப் பார்த்த பின்னர் அவர், **"பணி முடிந்தது"** என்று குறிப்பிட்டார்.

அதற்குப் பிறகு பாபா, எரச்சிடம், **"நீங்கள் உணவு உண்ட பின்னர் என்ன நடக்கும்?"** என வினவினார்.

எரச் கூறினார், "உண்ட உணவு ஜீரணமாகி, பின்பு கழிவாக மாறுகிறது."

பாபா விளக்கினார், **"உணவுக்குக் கழிவு இருப்பது போல், உடல் ஆன்மாவிற்கு உள்ளது. உடல், இறுதியில் ஆன்மாவின் கழிவாக மாறுகிறது.**

மரணம் என்பது மனித உடலிலிருந்து ஆன்மா வெளியேற்றப்படும் செயல்முறையாகும். கழிவு வெளியே சென்ற பின்னர் எப்படி உணர்கிறீர்கள்?"

"நிம்மதி மற்றும் மகிழ்ச்சி."

"ஆன்மாவும், உடலிலிருந்து விடுபட்டு மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும் உணர்கிறது. யாருடைய மரணத்தையும் ஒருவர் அப்படித்தான் உணர வேண்டும்." அதைத் தொடர்ந்து **'பப்பா எவ்வளவு அதிர்ஷ்டசாலி'** என்று பாபா குறிப்பிட்டார், இந்த இறுதி கட்டத்தில் கூட பாபாவின் பார்வை அவர் மீது விழுந்தது.

பப்பாவின் தொப்பியை தன்னுடன் எடுத்துக் கொண்டு, பாபா, எரச் மற்றும் அவரது குடும்பத்தினருடன் மதிய உணவுக்காக பிந்த்ரா ஹவுஸிற்குத் திரும்பினார்; அதன் பிறகு குருபிரசாத் சென்றார். பிந்த்ரா ஹவுஸில் அனைவரும் ஒன்றுமே நடக்காதது போல் அமைதியாக இருந்தனர். இதுவே பாபாவின் அன்பின் விளையாட்டு மற்றும் அவரது அன்பர்களுக்கு அவர் அளித்த பரிசு. உலகில் உள்ள அனைத்தும் உண்மைக்கு மாறானவை என்ற பாபாவின் வார்த்தைகளில் அவர்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர்; அவர்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்படாமல் அமைதியாக இருந்தனர்.

நான்கு இரவுகள் ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டிருந்த பாதிரி மற்றும் பாவ் கல்சூரி குடும்பத்தினரை அழைத்துக்கொண்டு, பப்பாவின் இறுதிச் சடங்கிற்காக, ஆதி சீனியர் வந்தார். ஒவ்வொரு நாளும் அவர்களை குருபிரசாத்திற்கு அழைத்து வர, பாபா தனது காரை அனுப்பினார். 1959 மே 30 அன்று, கயா பிரசாத் கரே, அவரது குடும்பத்தினர் மற்றும் உத்தரபிரதேசத்தைச் சேர்ந்த சிலருடன் பாபாவை சந்தித்தார்.

குருபிரசாத்தில், பாபா, தொலைதூர இடத்தில் யாரோ ஒருவருக்குக் காட்சியளித்ததாக நிகழ்ந்த சம்பவம் அன்பர்களிடையே விவாதிக்கப்பட்டது.

ஷீலா கூறினாள், "பாபா, ஒருமுறை நாங்கள் எனது தாத்தா வீட்டில் (நாக்பூருக்கு அருகில்) தங்கியிருந்தபோது, மெஹர்நாத் உங்களைப் பார்த்ததாகக் கூறினான்."

ரமா உடனே, "ஆம் பாபா, அப்போது மெஹர்நாத் அனைவரையும் அழைக்கத் தொடங்கினான், அவனுக்கு அப்போது இரண்டு அல்லது மூன்று வயதுதான், உங்கள் உருவப்படத்தை மட்டுமே பார்த்ததாகக் கூறி, நீங்கள் அணிந்திருந்த சத்ராவை விவரித்தான், நீங்கள் அவன் முகத்தைத் தடவி அவனுடன் பேசியதாகக் கூறினான்" என்றார்.

"நீங்கள் உண்மையிலேயே வந்திருந்தீர்களா?" ஷீலா கேட்டாள்.

பாபா தலையசைத்தார், **"ஆம், சில நேரங்களில் நான் என் அன்பர்களிடம் வருவதுண்டு. நான் மெஹர்நாத்தை மட்டும் பார்க்க வந்தேன், ஆனால் அவன் அனைவரையும் அழைக்கத் தொடங்கியதால் நான் வெளியேற வேண்டியிருந்தது."**

கல்சூரி குடும்பத்தினர் பாபாவைப் பார்க்க வந்த முதல் நாள், அவர்களிடம் மிகவும் அன்பாகவும் ஆர்வமாகவும் இருந்தார்; ஆனால் அடுத்த நாள், அவர் தீவிரமான மனநிலையில் காணப்பட்டார். அவர் ரமாவிற்கு, சில கட்டுப்பாடுகளை விதித்து, அவரது மாதாந்திர பணத்தைக் குறைத்து, **"இப்போது, நீங்கள் என்னை எவ்வளவு நேசிக்கிறீர்கள் என்று நான் பார்க்கிறேன்"** என்று அவரிடம் தெரிவித்தார்.

ரமா அழத் தொடங்கியதும், பாபா, **"உங்களுக்கு என் மீது அன்பு இருந்தால், நான் இப்போது உங்களை சோதித்துப் பார்க்கிறேன்"** என்று கூறினார்.

மூன்றாவது நாள், அங்கிருந்த அனைவருக்கும் முன்பாக, பாபா, பாவ் கல்சூரியிடம் கேட்டார், **"நீங்கள் ரமாவையும் குழந்தைகளையும் சந்தித்தீர்களா?"** பாவ் இல்லை என்றதும், அங்கிருந்த அனைவருக்கும் முன்பாக அவர்களைத் தழுவும்படி, பாபா அவருக்குக் கட்டளையிட்டார், அதன் பின்னர் அவர் குடும்பத்தை மீண்டும் மெஹராபாத்திற்கு அனுப்பி வைத்தார்.

பின்னர் அவர், பாவ் கல்சூரியிடம் கூறினார், **"கவலைப்படாதீர்கள். நான் ரமாவை என்னுடன் நெருக்கமாக இருக்கச் செய்கிறேன். அவர் மிகவும் நல்லவர், நல்லுள்ளம் படைத்தவர். மெஹராபாத்தில் இரண்டு சிறு குழந்தைகளுடன் தனியாக வாழ்கிறார், இருந்தாலும் எந்தச் சிக்கலையும் ஏற்படுத்துவதில்லை. நான் அவரை மிகவும் நேசிக்கிறேன், ஆதலால் அவரை எனது கட்டளைகளுடன் பிணைக்கிறேன்."**

1959 ஜூன் 1 திங்கட்கிழமை காலை 8:00 மணிக்கு, குருபிரசாத்தில் மண்டலி மற்றும் பூனா மையத்தின் சேவகர்களுடன், பாபா ஒரு கூட்டத்தை நிகழ்த்தினார். அவர்கள் முன்னிலையில் அவர் இவ்வாறு அறிவித்தார்:

ஜூன் 8 முதல், சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் தரிசனம் வழங்குவதை நிறுத்த முடிவு செய்துள்ளேன்; ஆனால், நான் ஜூலை இறுதி வரை குருப்பிரசாத்தில் இருப்பேன்.

நான் உங்களுக்கு மகிழ்ச்சியாகவும், முகமலர்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும் தோன்றுகிறேன், ஆனால் என் உடல்நிலை 100 சதவீதம் நம்பிக்கையற்றது. எனது மருத்துவர் கூறுகிறார், "பாபா, முழு ஓய்வு எடுங்கள்; வேகமாக நடக்காதீர்கள்; தரிசனம் வழங்குவதை நிறுத்துங்கள். இதெல்லாம் உங்களது உடல்நிலையில் தொடர்ந்து அழுத்தத்தை உருவாக்கும்."

மருத்துவர் சொல்வது சரிதான். நான் இரவில் ஓய்வெடுக்கச் செல்லும் போது, எனது முழு உடலும் பிழிந்தெடுக்கப்படுவதாக உணர்கிறேன். என் இதயத்துடிப்பு 120 முதல் 130 வரை இயல்பை விட அதிகமாக உள்ளது. ஆயினும்கூட, காலையிலிருந்து மாலை வரை, நான் சுறுசுறுப்பாக இருப்பதைப் பார்க்கிறீர்கள், பல்வேறு பணிகளைப் பற்றிய மிக நுணுக்கமான விவரங்களைக் கூட கவனித்துக்கொள்கிறேன்.

இப்போது, இந்த முரண்பாட்டைப் பாருங்கள். ஒருபுறம், என் உடல்நிலை மோசமடைந்து வருகிறது, மறுபுறம், நான் மேலும் மேலும் சுறுசுறுப்பாக இருக்கிறேன். ஆனால், நான் தரிசனம் வழங்குவதை நிறுத்துவது, உடல்நலக் காரணங்களுக்காக மட்டும் அல்ல என்பது உங்களுக்குத் தெளிவாகத் தெரியும். எனது உலகளாவிய பணியின் பாரம் என் மீது மிகப்பெரியதாக உள்ளது, இது உங்களுக்குத் தெரியாது. நான் சூசகமாகச் சுட்டிக் காட்டிய காலம் நெருங்கி விட்டது.

நான் பிரபஞ்சத்தின் இறைவன். பிரபஞ்சம் என்னிடமிருந்து வெளிவந்து, என்னிடம் வர வேண்டும். இது வெற்றுப்பேச்சு அல்ல. நான் ஆதிகாலத்தவன் என்ற அனுபவத்தின் அதிகாரத்துடன் சொல்கிறேன்.

இப்போது நான் ஒரு மாதத்திற்கு, அதாவது ஜூன் 8 முதல் ஜூலை 8 வரை (பாபாவின் 56 நாட்கள் பணியின் இறுதி நாள்), என்னுடைய முக்கியமான பணிக்காக முற்றிலும் சுதந்திரமாக இருக்க விரும்புகிறேன். இந்தக் காலகட்டத்தில் சிறிய சிறிய விஷயங்களை எனது கவனத்திற்கு கொண்டு வந்து, என்னை தொந்தரவு செய்யாதீர்கள். இது எனது தற்போதைய செயல்பாட்டின்போது எரிச்சலையும் மன உளைச்சலையும் ஏற்படுத்தும். நான் அழைக்கும் வரை எவரும் என்னைப் பார்க்க முயற்சிக்கக் கூடாது.

வாராந்திர கூட்டங்கள், பஜனைகள், உரைகளை வழங்குவதன் மூலம் உங்கள் மையத்திலும், வெளியிலும் உங்கள் பணியைத் தொடரவும். வர விரும்புபவர்கள் வருவார்கள். உங்கள் முயற்சியின் பலனைப் பொருட்படுத்தாமல், அனைவரின் நன்மைக்காகவும், அன்பு மற்றும் உண்மை பற்றிய எனது செய்தியைப் பரப்புவதற்கும் உங்களால் முடிந்தவரை முயற்சி செய்ய வேண்டும்.

அன்று மும்பையில் நாகு, ரவி மேத்தா இருவருக்கும் திருமணம் நடந்தது. திருமணத்தில் கலந்து கொள்ளுமாறு ஆதி சீனியருக்கு பாபா அறிவுறுத்தியிருந்தார்; மேலும் அன்று பிற்பகல் 4:30 மணிக்கு, பாபாவின் ஆசீர்வாதத்திற்காக தம்பதிகளை குருபிரசாத்திற்கு அழைத்து வந்தார். குருபிரசாத்தில் அன்றைய இரவைக் கழிக்க தம்பதிகள் அனுமதிக்கப்பட்டனர். நாகு பெண் மண்டலியுடன் தங்கியிருக்க, ரவி ஆண்கள் பக்கத்தில் தூங்கினார்.

அஹமதுநகரில் வாழும் பாபா அன்பர்கள், ஜூன் 20ஆம் தேதி, அதிகாரப்பூர்வமாக திறக்கப்படவிருந்த குஷ்ரு குவார்ட்டர்ஸில், ஒரு பெரிய அறையில் புதிய மையத்தை நிறுவ இருந்தனர். ரங்கோலே (RANGOLE) செயலாளராகவும், ஸரோஷ் தலைவராகவும் நியமிக்கப்பட்டனர். 1959 ஜூன் 6 அன்று நடந்த திறப்பு விழாவிற்காக, பாபா, கீழ்வரும் செய்தியை வழங்கினார்.

நகரில் வாழும் என் அன்பர்கள், குஷ்ரு குவார்ட்டர்ஸில் மெஹர் மையத்தைத் திறந்து வைக்கிறார்கள் என்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். எனது உண்மையான மையம் தனிமனிதனின் இதயம் என்பது உண்மைதான் என்றாலும், என் அன்பர்கள் ஒன்று கூடி, என்னைப் பற்றி

சிந்திக்கவும், பேசவும், எனது போதனைகள் மற்றும் செய்திகளைக் குறித்து விவாதிக்கவும், குறிப்புகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளவும், ஒத்துழைப்புடன் என்னை நெருங்க முயற்சி செய்யவும் இது உதவியாக இருக்கும் தருணத்தில், நல்ல புரிதலுக்கும், புத்துணர்ச்சிக்கும் வழிவகுக்கும். என் ஆசீர்வாதங்களை நாடாமல், என்னிடமிருந்து எதையும் எதிர்பாராமல், எனக்குக் கீழ்ப்படிந்து சேவை புரிபவனே என் உண்மையான அன்பன்.

மெஹராபாத் மற்றும் மெஹராஸாத்தில் நான் நீண்ட காலம் தங்கியிருப்பதைக் கருத்தில் கொண்டு, நகர் மெஹர் மையத்திற்கு சிறப்புப் பொறுப்பும், பங்கும் உண்டு. எதிர்காலத்தில், உலகம் முழுவதிலுமிருந்து வரும் என் அன்பர்களுக்கு, மெஹராபாத் மற்றும் மெஹராஸாத் புனித ஸ்தலமாக மாறும் போது, என் அன்பையும் உண்மையையும் அடையப் பெறுவதற்காக உலகம் உண்மையிலேயே நகர் மெஹர் மையத்தை எதிர்நோக்கி இருக்கும்.

எனவே, என்னுடன் உங்கள் உள்ளார்ந்த தொடர்பை வைத்துக்கொண்டும், உங்கள் வாழ்க்கையை எனது விருப்பத்திற்குத் தகுந்தாற்போல் அமைத்துக்கொள்வதன் மூலமும், பிறர் என்னை நேசிப்பதில் உங்களைப் பின்தொடரத் தூண்டும் வகையில் வாழ்வதன் மூலமும், என் அன்பையும் உண்மையையும் நீங்கள் அடையப் பெறுவது அவசியம்.

நகர் மெஹர் மையத்தின் செயல்பாடுகளில் பங்கேற்கும் அனைவரின் மீதும் எனது கனிவான பார்வை இருக்கும், இது ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை கொண்டிருக்கும், உலகம் இயற்கையாகவே உருவாகும் என்ற எதிர்பார்ப்புகளை எழுச்சியுறச் செய்கிறது.

நீங்கள் அனைவரும் ஏக இறைவனின் நித்திய வாழ்க்கையை அடையப் பெறுவீர்கள். உங்களுக்கு என் அன்பும், ஆசிகளும்.

தர்மாராவ் ஜூன் 6ஆம் நாள் பாபாவை சந்தித்த போது, கொவ்வூரில் எழுப்பவிருந்த மெஹர்ஸ்தான் மையத்திற்கான அவரது வடிவமைப்பிற்கு, பாபா ஒப்புதல் அளித்தார்.

ஏற்கனவே அறிவித்ததற்கு இணங்க, 1959 ஜூன் 7 அன்று, பூனாவில் பொது தரிசனத்திற்கான கடைசி ஞாயிற்றுக்கிழமை; பாபாவின் தரிசனம் மற்றும் அரவணைப்பிற்கான இந்த 'இறுதி' வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்தில், விஜயவாடாவிலிருந்து வந்த ஒரு குழு, மஹாராணி ஷாந்தாதேவி மற்றும் தாதா வாஸ்வானியின் நெருங்கிய தோழர்கள் உட்பட கிட்டத்தட்ட 4,000 பேர் குருபிரசாத்தில் குவிந்தனர். தரிசனத்திற்காக ஒன்றுதிரண்ட கூட்டத்தைப் பற்றி ஒருவர் குறிப்பிடுகையில், 'இது ஆழிப் பேரலை போன்றது!' என்றார்.

பாபா, தரிசனம் வழங்குவதை நிறுத்திவிட்டாலும், பூனா மையத்தைச் சேர்ந்த குறிப்பிட்ட சேவகர்கள், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் குருபிரசாத்தில் சீட்டு விளையாட வருவது வழக்கம். மெஹர்வான், சதாஷிவ்,

மெஹர்ஜி, பாபாவின் சகோதரர்கள் பெஹராம், ஜால்பாய், மற்றும் பெஹராமின் மகன்கள் ஷெரூ, ருஸ்தம், ஸொராப் ஆகியோருக்கு தினமும் செல்ல அனுமதி வழங்கப்பட்டது; ஜெஹாங்கு தனது பணியிலிருந்து ஒரு நாள் விடுமுறை கிடைக்கும் போதெல்லாம் அங்கு வருவதுண்டு. ஒவ்வொரு நாளும் பாபா, ஸாம்பாஜி பூங்கா (SAMBHAJI PARK), பேஷ்வே பூங்கா (PESHWA PARK), பந்த் கார்டன் (BUND GARDEN) போன்ற இடங்களுக்கு நடந்து செல்வதை வழக்கமாகக் கொண்டார். ஒருமுறை அவர் ஸாம்பாஜி பூங்காவில் இருந்தபோது, ஒரு நபர் அவரை அடையாளம் கண்டுகொள்ளவே, பாபா உடனடியாக குருபிரசாத் திரும்பிச் சென்றார்.

ஜூன் 8, 9 தேதிகளில் பாபா, பெண்மணிகளை காரில் வெளியே அழைத்துச் சென்றார். 1959 ஜூன் 17 அன்று, அவர் மண்டலியை 'வெஸ்ட் எண்ட்' (WEST END) சினிமாவிற்கு அழைத்துச் சென்று, 'லைம்லைட்' என்ற சார்லி சாப்ளினின் திரைப்படத்தைப் (CHARLIE CHAPLIN'S FILM 'LIMELIGHT') பார்த்த பின்னர் அவர், **"சார்லியின் திரைப்படத்தை நான் பார்த்து ரசித்தேன், அவர் எவ்வளவு அதிர்ஷ்டசாலி"** என்று குறிப்பிட்டார். மேலும் இரண்டு திரைப்படங்களுக்கும் சென்றனர்.

ஒவ்வொரு காலையிலும், எரச், செய்தித்தாள் கட்டுரைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நகைச்சுவை, சோகம், தீவிரம் நிறைந்த பகுதிகளை, பாபா முன்னிலையில் வாசிப்பது அனுதினமும் நடந்தது. பாபா, மண்டலியிடம் எப்போதேனும் கதைகள், நகைச்சுவை துணுக்குகள் அல்லது பாடல்களால் மகிழ்விக்குமாறு கேட்டுக் கொள்வதுண்டு. பைதூல், நியூயார்க் நகரத்திற்குப் பயணம் செய்ததில்லை என்றாலும், ஒரு நாள், அவர் அதைப்பற்றி ஆங்கிலத்தில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

1959 ஜூன் 20 சனிக்கிழமையன்று, 'எல்லையில்லா ஞானம்' (INFINITE KNOWLEDGE) குறித்த ஒரு சொற்பொழிவை பாபா வழங்கினார்: **"இந்த நேரத்தில், தனி நபர்களாக நீங்கள் அறிந்த அனைத்தும், நான் பல யுகங்களுக்கு முன்பே அறிந்திருக்கிறேன்; மேலும் வரும் காலங்களில், தனி நபர்களாகிய நீங்கள் ஒரு குறிப்பிட்ட தருணத்தில் அறியப் போகும் அனைத்தும், இந்த கணத்திலே எனக்குத் தெரியும்."**

ஜூன் மாதத்தில், 'தெய்வீக மறுமொழி' (DIVINE RESPONSE) என்ற தலைப்பில் அவர் இந்த சொற்பொழிவையும் வழங்கினார்:

நீங்கள் கடவுளை நேசிப்பதை விட்டுவிட்டு, அவரைப் புரிந்துகொள்ள முயற்சிக்கும் தருணத்தில், நீங்கள் அவரைத் தவறாகப் புரிந்து கொள்ளத் தொடங்குகிறீர்கள்; உங்கள் அறியாமை உங்கள் அகங்காரத்தை ஊட்டி வளர்க்கிறது. மனம் அதற்கு அப்பாற்பட்டதை எட்ட முடியாது. கடவுள் எல்லையற்றவர், மனதிற்கு எட்டாதவர்.

இந்த எல்லையற்ற மாயையைத் தோற்றுவித்த 'தெய்வீக சித்தம்' (DIVINE WILL), **அதன் அனைத்து தூய்மையிலும் என் மூலம் வெளிப்படுத்துகிறது,**

மேலும் எனது செயல்பாடுகள் மூலம் உங்களை மாயையிலிருந்து இறை-உணர்வை நோக்கித் திரும்பச் செய்கிறது.

ஒவ்வொரு கணமும், முழு படைப்புக்கும் நான் மறுமொழி வழங்குகிறேன். எனது மறுமொழி, தெய்வீகப் பிரதிபலிப்பாக இருப்பதால், முழுக்க முழுக்க அன்பால் நிறைந்ததாக இருக்கும். அந்த ஒரு மறுமொழியின் பல அம்சங்கள், அவை உங்களுக்குத் தோன்றுவது போல், உங்கள் பலதரப்பட்ட-கண்ணாடியான மனதின் பிரதிபலிப்புகள். நீங்கள் எனது செயல்களை, உங்களின் தனிப்பட்ட புரிந்துகொள்ளும் நிலையிலிருந்து பார்த்து மதிப்பிடுகிறீர்கள், மேலும், உங்கள் சொந்த, வரையறுக்கப்பட்ட தரமான மதிப்புகளின் வெளிச்சத்தில் அவற்றை வேறுபடுத்த முயற்சிக்கிறீர்கள். எனவே, வெவ்வேறு நபர்களுக்கு நான் வழங்கும் மறுமொழியின் வெவ்வேறு சாயல்களை, நீங்கள் தவறாகப் புரிந்துகொள்வது சாத்தியமாகும். எல்லையற்றதாக இருப்பதால், நான் ஒரே நேரத்தில் அனைத்து உணர்வு நிலைகளிலும் இருக்கிறேன்; மேலும், எனது மறுமொழியில், நான் ஒன்றை, பிற ஒருவரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவது, அவரது மனப்பதிவுகள் (மனப்படிவங்கள்) தோற்றுவிக்கும் வெவ்வேறு உணர்வு நிலைகளின் வெளிச்சத்தில் மட்டுமே. என்னுடைய ஒவ்வொரு செயலும் பலவிதமான உணர்வு நிலைகளில், அதை அடையப் பெறுபவர்களின் தேவைக்கு ஏற்ப மாறுபட்ட மறுமொழிகளைக் கொண்டு அறியப்படுகிறது. எனவே, அதன் இயல்பிலும் அளவிலும் எனது தெய்வீக மறுமொழி, சில சமயங்களில் புரியாத புதிராகவே தோன்றுகிறது.

எனது செயல்களின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள, உங்கள் வரையறுக்கப்பட்ட மனதுடன் முயற்சிக்காதீர்கள், அந்தச் செயல்களை அப்படியே பின்பற்றவும் முயற்சிக்காதீர்கள். அதாவது, நான் செய்வதை நீங்கள் செய்யாமல், நான் சொல்வதைச் செய்யுங்கள். எனது ஒவ்வொரு செயலையும் உங்கள் புரிதலின் வட்டப்பாதையில் கொண்டு வர முயற்சிப்பது, உங்கள் சொந்த புரிதலின் வரம்புகளைப் புரிந்துகொள்வதாகும்!

நீங்கள் குழப்பமடைந்திருப்பதைப் பார்க்கும்போது, சில சமயங்களில், என்னுடைய ஒரு குறிப்பிட்ட செயலுக்கான காரணத்தைத் தெளிவுபடுத்தி, விளக்கம் கொடுக்க நான் தூண்டப்படுகிறேன். உங்கள் மீதுள்ள இரக்கத்தினாலும், அன்பினாலும் நான் இதைச் செய்கிறேன். அதனால், சில சமயங்களில், நான் எனது செயல்களை 'நியாயப்படுத்துவதற்கான' விளக்கங்களுடன், அதற்கான காரணங்களைக் கூறுவது போலத் தோன்றச் செய்யும். ஆனால், இவ்வாறு நான் செய்வது, உங்கள் பலவீனத்தை சித்தரித்து எனது பலத்தை வெளிப்படுத்துகிறது.

ஆனால் நான் விளக்கினாலும், எனது செயல்களின் முக்கியத்துவம், நீங்கள் அறியும் எல்லைக்கு அப்பாற்பட்டதாக இருக்கும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். எனது தெய்வீக திருவிளையாடலின் முழுமையான எளிமையை, நீங்கள் உங்கள் அறிவுத்திறன் மூலம் புரிந்து

கொள்ள முயற்சிக்கும்போது மட்டுமே, மிகவும் சிக்கலானதாகத் தோன்றுகிறது.

நீங்கள் எவ்வளவு அதிகமாக என்னுடைய சகவாசங்களில் பங்கெடுக்கிறீர்களோ, எந்த அளவுக்கு என் அன்பை திறந்த மனதுடன் ஏற்றுக்கொள்கிறீர்களோ, அந்த அளவுக்கு முழு மனதுடன் நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளத் தொடங்குகிறீர்கள். மேலும் நீங்கள் என்னை எவ்வளவு அதிகமாகப் பார்க்கிறீர்களோ, அவ்வளவுக்குக் குறையாமல் என்னைப் புரிந்துகொள்கிறீர்கள் என்று நீங்கள் உறுதியாக நம்புகிறீர்கள் என்பதும் உண்மைதான். புத்தித் திறனால் விளையும் புரிதலின் செயல்முறையின் மூலம், எனது தெய்வீகத் திருவிளையாடலைப் புரிந்துகொள்ள முயற்சிப்பது, யூகங்களின் பரந்த புலங்களைத் திறக்க வழிவகுப்பதால், நீங்கள் ஆங்காங்கே அலைந்து திரிந்து, விரைவில் அல்லது பின்னர் ஒரு முட்டுச்சந்தில் வந்து சேரும் வேளையில், நீங்கள் ஞானி அல்ல என்பதைக் கண்டறிந்து, உதவியற்றவராகத் தொலைந்துவிடுகிறீர்கள்.

எனது செயல்கள் குழப்பத்தை ஏற்படுத்தினால், அதற்கு உங்கள் முழுமையான நம்பிக்கையின்மைதான் காரணம். எனவே, எல்லா சந்தேகங்களையும் வேரோடு அகற்றி, நான் எதைச் செய்தாலும் அது நன்மைக்கே என்பதை நினைவில் கொள்ளுங்கள். எனது எல்லா செயல்களும் தெய்வீக அன்பினால் நிரம்பிய எனது தெய்வீக மறுமொழியில் தோன்றியவை.

1959 ஜூன் 22 திங்கட்கிழமை காலை 8:00 மணியளவில், பாபா, மண்டலி மற்றும் குருபிரசாத்திற்கு அடிக்கடி விஜயம் செய்யும் அன்பர்களுடன் ஒரு சந்திப்பை நிகழ்த்தினார். மார்ச் மாதம் பூனாவிற்கு வந்ததிலிருந்து அவர் செய்த மகத்தான பணிகளை மறுபடியும் தொகுத்துரைத்து நினைவுகூர்ந்தார்:

அன்புடன் என்னை அணுகிய பல்லாயிரம் அன்பர்களுக்கு நான் தரிசனம் வழங்கி, அவர்களை அரவணைத்தது மட்டுமின்றி, பலரின் தனிப்பட்ட, நுட்பமான, உணர்திறன்மிக்க பிரச்சினைகளில் உதவிக்கரம் நீட்டியுள்ளேன். நான் மூன்று மாதங்கள் தங்கியிருந்த காலத்தில், பூனாவில் நான் இருந்ததால், என் அன்பர்களின் குடும்பங்களுக்கு இடையே இரண்டு திருமணங்கள் (குல்னார்/ஜெஹாங்கு மற்றும் மதுசூதன்/சுபத்ரா) **நடைபெற்றன. இரண்டு முக்கியமான அன்பர்கள் தங்கள் பௌதீக உடல்களை** (காடேக்கர் மற்றும் பப்பா ஜெஸவாலா) **கைவிட்டபோது எனது நேரடியான ஆதரவு, இரண்டு குடும்பங்களுக்கும் தக்க பலத்தை அளித்துள்ளது. மகப்பேறு நிகழ்ந்த இரண்டு குடும்பங்களும்** (தாடே மற்றும் பிந்த்ரா ஹவுஸ்) **என் ஆர்வத்தை மிகையாக ஈர்த்தன.**

இது தவிர, நான் 'இறைவனுடன் இணைந்திருங்கள்' (STAY WITH GOD) **என்ற புத்தகத்தின் பாராயணத்தைக் கேட்டு, அதை அச்சிட்டு, வெளியிடுவற்கான என் இறுதி வார்த்தையை வழங்கியுள்ளேன். உள்ளூர்**

பூனா மையத்திற்கான ஓர் இடத்தையும், கட்டிடத்தையும் பாதுகாப்பது தொடர்பாக நிகழ்ந்த விவாதங்களில் நான் பங்கேற்றுள்ளேன்.

மேலும் மூன்று முறை, நான் அதன் சேவகர்களை சந்தித்து, அவர்கள் முறையாக நடந்து கொள்ளவும், அவர்களின் பணியைத் திறம்படச் செய்யவும் அறிவுறுத்தினேன். ஏர்வாடாவில் பார்வையற்றோர் இல்லத்திற்குச் சென்று, ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டேன், இந்திய கிரிக்கெட் அணியைச் சந்தித்தேன், மூன்று திரைப்படங்களைப் பார்க்க மண்டலியை உடன் அழைத்துச் சென்றேன், ஸோமனின் மராத்தி நாடகத்தின் கையெழுத்துப் பிரதியைக் கேட்டேன் - இவை அனைத்தும் தினசரி வழக்கமாக நிகழ்ந்த சம்பவங்களைத் தவிர அவ்வப்போது நடந்தவை.

மூன்று மாதங்கள் வெறுமனே கடந்துவிட்டதாகத் தோன்றினாலும், இவ்வளவு பணிகள் உண்மையில் செய்யப்பட்டுள்ளன. மேலும் இவை அனைத்தும், நான் தொடர்ந்து செய்து வரும் எனது உலகளாவிய பணியைத் தவிர்த்து நிகழ்ந்த சம்பவங்கள்.

இந்த முழுக் காலகட்டத்திலும், எனது உடல்நிலை சீராக இல்லை; நான் ஜுரம், தலைவலி மற்றும் வயிற்றுக் கோளாறால் அவதியுற்றேன். நான் மிகவும் அல்லல்படுகிறேன், அது குறித்து எவருக்கும் தெரியாது. ஊன்றுகோலின் உதவியின்றி நான் மீண்டும் சுதந்திரமாக நடக்க முடியும் என்று எவரும் எதிர்பார்க்காதது போல், இப்போதெல்லாம் நான் மௌனத்தைக் கலைப்பேன் என எவரும் எதிர்பார்க்கவில்லை. என்னுடன் நெருங்கிப் பழகுபவர்கள் கூட இதை எதிர்பார்க்க மாட்டார்கள்; நான் அப்படிச் செய்தால், என்னில் சிறப்பானதாகக் கருதும் அளவுக்கு வேறு எதுவும் இருக்காது என்று அஞ்சுவார்கள், ஏனெனில் நான் மௌனம் கடைப்பிடிப்பது எனக்கே உரித்தான ஒரு தனிச்சிறப்பு.

ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன், நான் எனது மௌனத்தைக் கலைக்கும்போது, பல சம்பவங்கள் நிகழும். எனது மௌனத்தைக் கலைப்பது என்பது பிற சாதாரண மனிதர்களைப் போல நான் பேசுவதை அர்த்தப்படுத்தாது. இது 'இறை வார்த்தைகளின் வார்த்தை'யைப் (WORD OF WORDS) பேசுவதாக இருக்கும். அது நிகழும் நேரம் மிக அருகாமையில் உள்ளது என்று உறுதியளிக்கிறேன். தற்போதைய உலக நிலைமைகள் மற்றும் உலகம் முழுவதும் நிலவும் 'கடவுளை-எதிர்க்கும்' போக்குகள் பற்றி நான் கடந்த காலங்களில் அடிக்கடி குறிப்பிட்டிருக்கிறேன் - இதற்கு திபெத் நாடும் விதிவிலக்கல்ல. தலைவர்கள் ஒருவரையொருவர் நம்புவதில்லை, மேலும் ஒட்டுமொத்த மக்களும் பொருள் சார்ந்த வளர்ச்சிக்கு முக்கியத்துவம் வழங்கி, மேலும் மேலும் அதில் மூழ்கி, தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர்.

என்னுடன் குருபிரசாத்தில் வாழும் எனது மண்டலி மற்றும் என்னை அடிக்கடி சந்திக்கும் அன்பர்கள் அனைவரிடமிருந்தும் நான் விரும்புவது என்னவெனில், அடுத்த 40 நாட்கள், ஜூலை இறுதி வரை, 100 சதவீதம்

எனக்குக் கண்டிப்பாகக் கீழ்ப்படிந்து உதவ வேண்டும். என்னை வருந்தச் செய்யும் எந்தக் காரணத்தையும் முன்வைக்காமல் இருக்க, உங்களால் இயன்றவரை முயற்சி செய்யுங்கள். ஒவ்வொருவருக்கும் அவரவர் சிரமங்களும், பிரச்சினைகளும் தவிர்க்க முடியாமல் இருக்க நேரும் என்றாலும், அடுத்த 40 நாட்களுக்கு நீங்கள் இதுபோன்ற விஷயங்களை, எனது செவிகளுக்குக் கொண்டு வர வேண்டாம் என்று நான் விரும்புகிறேன். இந்தக் காலகட்டத்தில், எனது முன்னிலையில் எந்த விதமான சந்திப்புகளும், விவாதங்களும் நடைபெறக்கூடாது என்று நான் விரும்புகிறேன். நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க உங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும் என்றும், எனது முன்னிலையில் ஒருபோதும் சினமூட்டும், எரிச்சலான மனநிலைக்கு இடந்தர வேண்டாம் என்றும் நான் விரும்புகிறேன்.

நீங்கள் இவ்வண்ணம் செய்வதானால் எனது பணியில் எனக்கு உதவியாக இருக்கும். சிறியதாகவோ அல்லது சிறப்பற்றதாகவோ தோன்றினாலும், எனது எந்த உத்தரவுகளையும் நீங்கள் மீற மாட்டீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். என்னைப் பொறுத்தவரை, எந்த விவாதமும் வேண்டாம், சாக்குப்போக்குகளும் வேண்டாம், விளக்கங்களும் வேண்டாம்; நான், 100 சதவிகிதம் கீழ்ப்படிதல் மற்றும் கேள்வி கேட்கும் வேளையில் நேரான மற்றும் எளிமையான பதில்களை மட்டுமே விரும்புகிறேன்.

கடந்த மூன்று மாதங்களில், நீங்கள் மகிழ்ச்சியாகவும், முகமலர்ச்சியாகவும் உணர, என்னால் இயன்றதைச் செய்துள்ளேன். இனி வரும் 40 நாட்களில் நீங்கள் எனக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்து, உங்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். எனக்கு முன்னால் நான் செய்ய வேண்டிய மிகப் பெரிய பணி உள்ளது. என் உடல் மிகவும் வாடி வதங்கி உள்ளது, இதற்கு மேலும் எதையும் இனி தாங்கிக் கொள்ள முடியாது. எனவே, எனக்கு 40 நாட்கள் முழுமையான ஓய்வு தேவை.

கூட்டத்தின் முடிவில், பாபாவின் மேலங்கியை (தாமன்) உறுதியாகப் பற்றிக்கொள்ளவும், 100 சதவிகிதம் அவருக்குக் கீழ்ப்படியவும், அங்கிருந்த அனைவரும் கடவுளிடம் பிரார்த்தனையை மொழிந்தனர்.

எரச்சும் இதர மண்டலியும் குருபிரசாத்தில் தங்கள் கடிதப் பரிமாற்றத்தைக் கவனிக்கத் தொடங்கினர். 1959 ஜூன் 23 அன்று, தனது பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட எல்சா மிஸ்திரிக்கு, எரச் இந்த ஊக்கமளிக்கும் வரிகளை எழுதினார்: "நீங்கள் அனைத்தையும் தைரியமாகவும் மகிழ்ச்சியாகவும் எதிர்கொள்ள வேண்டும் என்று பாபா விரும்புகிறார். அவருடைய தெய்வீக சித்தம் (DIVINE WILL) இல்லாமல் எதுவும் நடக்காது என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்றும் பாபா விரும்புகிறார். ஒருவருக்கு எது நடந்தாலும், அது காலப்போக்கில் ஒருவரின் சொந்த நலனுக்காகவே இருக்கும்." (எல்சாவால் சில வாரங்களில் ஒரு புதிய வேலையைக் கண்டுகொள்ள முடிந்தது.)

28ஆம் தேதி, மெஹர் பாபா, இரண்டு முறை 'பாபா' இல்லத்திற்கு வருகை தந்தார், முதலில் பெண்மணிகளுடன், பின்னர் ஆண் மண்டலியுடன். மறுநாள், பாபாஜானின் சமாதியில் மலர் வளையம் வைக்குமாறு அறிவுறுத்தி பெண்மணிகளை அங்கு அனுப்பினார். குருபிரசாத் வாயில்களை நோக்கி பாபா, உதவியின்றி பாதி வழி நடந்து வந்ததால், மண்டலிக்கு இது ஓர் 'இனிய' நாள்.

1959 ஜூலை 6ஆம் நாள், டாக்டர் தீக்ஷித் (DR. DIKSHIT), பாபாவின் இரைப்பை குடல் மற்றும் சிறுநீர் பாதைகளில் பேரியம் (BARIUM) கலவையின் பரிசோதனை செய்தார், ஆனால் அவரது சிறுநீர் பாதையில் எந்தத் தடை அல்லது புண் இருந்ததற்கான அறிகுறி எதுவும் இல்லை.

ஜூலை 8 புதன்கிழமை அன்று, பாபாவின் 56 நாட்கள் பணி நிறைவடைந்தது; ஆனால் பாபா, அது குறித்து அதைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. அந்த ஆண்டு மௌன தினத்தை அனுஷ்டிப்பதற்கான எந்த அறிவுறுத்தலையும் அவர் வழங்காமல், அதை முழுவதுமாக சம்பந்தப்பட்ட ஒவ்வொரு நபரின் விருப்பத்திற்கு விட்டுவிட்டார், அல்லது அவர்கள் விரும்பியபடி மௌனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆனால், ஜூலை 10 அன்று, பாபா பழைய பூனா மையத்திற்குச் சென்று, அங்குக் கூடி இருந்த 100 ஏழைக் குழந்தைகளின் கால்களைக் கழுவி, அவர்களுக்கு அன்புப் பரிசாக பத்து ரூபாய் வழங்கினார்.

இதற்கிடையில், பெல்காவ்ம் (BELGAUM) அருகே அமைந்த சுரங்கம் ஒன்றில் மின்னியல் வல்லுநராகப் பணிபுரிந்த குமாரின் மூத்த மகன் பிரஷாந்த் (PRASHANT, 19), ஜூலை மாத தொடக்கத்தில் குருபிரசாத்திற்கு அழைக்கப்பட்டார். பாபா பிரஷாந்தைத் தழுவி, **"உங்களுக்கு ஜுரமாக இருக்கிறது"** என்று குறிப்பிட்டார். குணாதாய், நளினி காடேக்கர் இருவரையும் அழைத்து, பாபா, பிரஷாந்தை அவர்கள் இல்லத்தில் தங்க வைக்குமாறு கேட்டுக் கொண்டார்; மேலும் நளினி, மருத்துவக் கல்லூரியில் இருந்ததால், அவருக்கு சிகிச்சை அளிக்கக் கூறினார். அவர்கள் பாபாவின் அறிவுறுத்தல்படி அனைத்தையும் செய்தாலும், அவரது உடல்நிலை மேலும் மோசமடையவே, ஜஹாங்கீர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். மருத்துவ பரிசோதனைக்குப் பின்னர் அவருக்கு ரத்தப் புற்றுநோய் இருப்பது தெரியவந்தது.

டாக்டர் கோஹெர் மூலமாக பாபாவை சந்தித்த கேக்கி பைராம் கிராண்ட் (KEKI BYRAM GRANT, 39) என்ற மருத்துவர், பிரஷாந்திற்கு சிகிச்சை அளித்தார். 1959 ஜூலை 10ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை, பாபா, டாக்டர் கிராண்டிற்கு இந்தச் செய்தியை அனுப்பினார்: **"அன்று இரவு உடல்நிலை சீராகி, அவரைக் காப்பாற்ற முடிந்தால், பாபா, பிரஷாந்தை அவரது நோயிலிருந்து மீட்டெடுப்பார்."**

ஆனால் மருத்துவர் அதைச் செய்யத் தவறியதால், இரவு 10:00 மணியளவில் பிரஷாந்த் உயிர் துறந்தார். தகவல் வந்ததும், பாபா, எரச்சின் நெற்றியில் முத்தமிட்டு, பிரஷாந்தின் சடலத்திற்கும் அவ்வாறே செய்யுமாறு

அறிவுறுத்தி, மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார். பாபாவின் கட்டளைப்படி, மெஹர்தாஸ் மருத்துவமனையில் பிரஷாந்தைப் பேணி, பாதுகாத்து, கடைசி நேரத்தில் அவருக்கு சிறப்பாக சேவை செய்தார்.

அவரது மகனின் மறைவு, குமாருக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை; அவர் பாபாவின் விருப்பத்திற்கு முற்றிலும் அடிபணிந்தவராக இருந்தார். அவரது மனைவி சுபத்ரா டெஹ்ரா டூனிலிருந்து வரவழைக்கப்பட்டு, 15ஆம் தேதி பூனா வந்தார். கெய்மாய், எரச் இருவரும் சாதுரியமாக அவருக்குச் செய்தியை அறிவிக்கும்படி அறிவுறுத்தப்பட்டனர். பாபா, அவருக்கு ஆறுதல் கூறி, சில நாட்கள் குருபிரசாத்தில் உடனிருக்க அனுமதித்தார். அதைத் தொடர்ந்து, குமாருடன் அவரைத் திருப்பி அனுப்பினார். **"எனது சில துன்பங்களை அவர்களைப் போன்ற அன்பர்கள் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்வதாக இருக்கவேண்டும்"** என அவர் கருத்துத் தெரிவித்தார்.

வளையங்களை சாகசமாக இடுப்பில் சுற்றி விளையாடும் 'ஹுலா-ஹூப்' (HULA-HOOP) மோகம் இந்தியாவிற்கு வந்துவிட்டது, ஒன்று குருபிரசாத்திலும் கொண்டு வரப்பட்டது. குமாரும் அவரது மனைவியும் 29ஆம் தேதி புறப்படுவதற்கு முன்பு, பாபாவுடன் அமர்ந்திருந்த வேளையில், பாபா குமாரிடம், **"வாருங்கள், எழுந்து வந்து எனது முன்னால் ஹுலா ஹூப் விளையாடுவது எப்படி என்று எங்களுக்குக் காட்டுங்கள்"** என்று கூறினார். குமார் உடனே எழுந்து, வளையத்தை வேகமாக சுழற்ற, தன் இடுப்பை விறுவிறுப்பாக அசைத்தார். இப்படித்தான் பாபா ஒரு சோகமான சந்தர்ப்பத்தை மகிழ்ச்சியான ஒன்றாக மாற்றினார்.

இதே காலக்கட்டத்தில் புக்காரின் மகனும் காலமானார். பாபா, புக்காரை ஒரு மாதத்திற்காக ஹமிர்பூருக்கு அனுப்பினார்; அவர் ஜூலை இறுதியில் குருபிரசாத்திற்குத் திரும்பி வந்தார். புக்காரும் தனது மகனின் மரணத்தைக் கண்டு அழுது கலங்கவில்லை, மேலும், பாபா, அவரை வெளிப்படையாகப் புகழ்ந்து, பாபா விரும்பும் அன்பின் வகைக்கு, அவரை ஓர் உதாரணமாகக் காட்டினார். புக்கார் குருபிரசாத்தில் தங்கியிருந்தபோது, பாபா அவருக்கு கணிசமான அளவுக்கு 'அவரது சிறப்புப் பிரசாதம்' என்ற முறையில், தினமும் அவரது பெரிய பானை போன்ற வயிற்றில் ஒரு அலுமினிய பாத்திரத்தால் (கைகளை கழுவுவதற்காக பாபாவின் பக்கத்தில் வைத்திருந்தார்) அடித்தார்.

நவ்ஸாரியைச் சேர்ந்த டாக்டர் ஹோஷங் பரூச்சா (DR. HOSHANG BARUCHA OF NAVSARI), அந்தக் கோடை நாட்களில், பாபாவின் தரிசனத்திற்காக பலமுறை, கடைசியாக 1959 ஜூன் 7 அன்று பூனா வந்தார். பாபா அவரை ஓரிரு நாட்கள் கூடுதலாகத் தங்குமாறு கூறி, 9ஆம் தேதி, முதலில் எளியதாகத் தோன்றிய ஒரு கட்டளையை வழங்கினார். '**ஆகஸ்ட் மாத இறுதி வரை, நவ்ஸாரியை விட்டு வெளியேற வேண்டாம்**' என்று பாபா அவருக்கு அறிவுறுத்தினார். என்ன நடக்கும் என்று தெரியாமல் பரூச்சா ஒப்புக்கொண்டார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு, ஹோஷங்கின் சகோதரி தெஹ்மி (TEHMIE), ஜால் கோவாஸ்ஜி (JAL COWASJI) என்ற நபரை மணந்து, மும்பைக்குக் குடிபெயர்ந்தார். இருப்பினும், தனது மனைவி, தன்னையும் உலகத்தையும் துறந்துவிடுவாரோ என்ற அச்சத்தில், கோவாஸ்ஜி ஆன்மீகப் பழக்கவழக்கங்களில் ஈடுபடுவதை ஒருபோதும் அனுமதிக்கவில்லை. ஒரு நாள் இருவருக்குமிடையே பலத்த தகராறு ஏற்படவே, தெஹ்மி வீட்டை விட்டு வெளியேறி ஒரு ஹோட்டலுக்குச் சென்று தங்கினார். வாக்குவாதத்தால் வருத்தமடைந்த கணவர், தெஹ்மி வீட்டை விட்டு வெளியேறிவிட்டதாகத் தெரிவித்து, ஹோஷங்கிற்கு ஒரு தொலைத்தந்தி அனுப்பினார்.

தொலைதந்தி வருவதற்கு சற்று முன்பு, ஹோஷங் மற்றும் அவரது இன்னுமொரு சகோதரி, மெஹெரு (MEHERU) இருவரும், சமீபத்தில் வெளிவந்த 'லிஸன், ஹியுமானிட்டி' (LISTEN, HUMANITY) என்ற புத்தகத்தில் விளக்கப்பட்டிருந்த நான்கு வகையான தற்கொலைகள் பற்றிய அத்தியாயத்தைப் படித்துக் கொண்டிருந்தனர். ஹோஷங் பரூச்சாவின் தாயார், தெஹ்மியை அழைத்து வருவதற்காக மும்பைக்குச் செல்லுமாறு அவரைக் கேட்டுக் கொண்டார்; ஆனால், பாபாவின் உத்தரவால் நவ்ஸாரியை விட்டு வெளியேற முடியாத சூழ்நிலையை அவர் விளக்கினார். அவருடைய தாயும் சகோதரியும் நவ்ஸாரியிலிருந்து அடுத்த ரயிலில் மும்பைக்குப் புறப்பட முடிவு செய்தனர்.

1959 ஜூலை 9 அன்று, பாபா, ஹோஷங்கிற்கு உத்தரவு வழங்கிய ஒரு மாதத்திற்குப் பிறகு, மெஹெரு அவருக்குத் தொலைபேசி மூலமாகத் தெரிவித்தார்: "தெஹ்மி, தற்கொலை செய்து உயிரைத் துறந்துவிட்டாள். அவளது இறுதிச் சடங்கு நாளை காலை நடைபெறும்."

அதிர்ச்சியில் இருந்தபோதிலும், பாபாவின் கட்டளையை மீறக்கூடாது என்பதில் ஹோஷங் உறுதியாக இருந்தார், மேலும் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள வேண்டாம் என்ற முடிவுக்கு வந்தார். ஹோஷங்கின் சகோதரி தெஹ்மியின் மரணத்தைப் பற்றி பாபாவிடம் தெரிவித்தபோது, அன்று மாலை, பாபாவிடமிருந்து ஹோஷங்கிற்கு தொலைத்தந்தி ஒன்று வந்தது: **"உடனடியாக மும்பைக்குப் புறப்படுங்கள், அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளுங்கள், பின்பு பூனாவிற்கு இரண்டு நிமிடம் என்னைப் பார்க்க வாருங்கள்."**

ஹோஷங்கின் மைத்துனர் ஜால் கோவாஸ்ஜி தனது மனைவியின் மரணத்தால் மிகவும் மனம் வருந்தினார். அவருடைய ஆன்மாவிற்கு என்ன நடக்கும் என்று அவர் யோசித்தார். தற்கொலைகளின் வகைகளைப் பற்றி அறிந்த ஹோஷங், தெஹ்மியின் ஆன்மாவிற்கு மிக நீண்ட காலத்திற்கு வேறு உடல் கிடைக்காது என்றும், நரகத்தில் மனதளவில் சிரமங்களை அனுபவிக்க வேண்டியிருக்கும் என்றும் அவரிடம் கூறினார்.

"நான் என்ன செய்ய வேண்டும்," கோவாஸ்ஜி கேட்டார். "இது அனைத்தும் எனது தவறு."

ஹோஷங் கூறினார், "இந்த உலகத்தில் ஒருவரால் மட்டுமே இதற்கு பதிலளிக்க முடியும் - அவரே மெஹர் பாபா!"

ஜால் கோவாஸ்ஜி, பாபாவைப் பற்றி பேசவோ கேட்கவோ விரும்பாதவராக இருந்தாலும், அவரை சந்திக்க முடியுமா என்று ஆவலுடன் கேட்டார், அவருடைய மனைவி, பாபாவின் தரிசனத்திற்குச் செல்ல விரும்பியபோதெல்லாம், அவர் பிடிவாதமாக மறுத்துவிட்டார். 1959 ஜூலை 12 ஞாயிற்றுக்கிழமை அன்று அவர், ஹோஷங்குடன் பாபாவை சந்திக்க பூனாவிற்குப் புறப்பட்டார்.

பாபா, கோவாஸ்ஜியிடம், **"உங்களுக்கு என் மீது நம்பிக்கை உள்ளதா? தெஹ்மியைப் பற்றி நான் சொல்வதை நீங்கள் நம்புவீர்களா?"** என்று கேட்டதற்கு 'ஆம்' என்றார்.

பாபா கூறினார், **"ஹோஷங் என்னை மிகவும் நேசிப்பதாலும், தெஹ்மி உயிர் துறந்த மூன்று நாட்களுக்குள் எனக்குத் தெரிவிக்கப்பட்டதாலும், நான் தெஹ்மியைக் காப்பாற்றினேன். அவர் நரகத்தில் துன்பப்பட மாட்டார், விரைவில் அவருக்கு வேறு ஓர் உடலைக் கொடுப்பேன். அவர் மறுபடியும் பிறவி எடுத்தாக வேண்டும், ஏனெனில் அவர் உங்களை மிகவும் நேசிக்கிறார்."**

"பாபா, நான் பொறுப்பு... எல்லாம் எனது தவறு" என்று கோவாஸ்ஜி அழுதுகொண்டே கூறினார்.

"இல்லை," பாபா அவரிடம், **"நீங்கள் இதற்குப் பொறுப்பல்ல. நீங்கள் திரையரங்கில் பார்க்கும் திரைப்படம் போல், இந்த வாழ்க்கையும் ஒரு திரைப்படம் போன்றது. இது முன்னரே தீர்மானிக்கப்பட்டது. திரைப்படத்தில் எது நடக்கிறதோ அது நடக்கும். அது ஏற்கனவே உள்ளது. இது இப்படித்தான் நடக்க வேண்டும்."**

ஜால் கோவாஸ்ஜி மிகுந்த ஆறுதலுடன் மும்பைக்குத் திரும்பிச் சென்றார்.

அடுத்த வருடம் ஹோஷங் பரூச்சா குருபிரசாத்தில் தங்கியிருந்தபோது, பாபாவைப் பார்க்க அவரது தாயும் சகோதரியும் வந்தனர். ஒரு சொற்பொழிவின் போது, பாபா கூறினார், "300 **ஆண்டுகளுக்கு முன்னர் உயிரைத் துறந்த ஒரு நபரை, மீண்டும் உயிர்ப்பிக்கும் ஆற்றல் பரிபூரண குருநாதருக்கு உள்ளது."**

இதைக் கேட்ட தாயும் சகோதரியும் பாபாவிடம், "300 வருடங்களுக்கு முன்னர் உயிரைத் துறந்த ஒரு நபரை மீண்டும் உயிர்ப்பிக்கும் ஆற்றல் பரிபூரண குருநாதருக்கு இருக்குமானால், அவதார புருஷராகிய நீங்கள் தெஹ்மியை அதே உருவத்தில் கொண்டு வர முடியும்!" என்றனர்.

பாபா பதிலளித்தார், **"தெஹ்மியைப் பற்றி நான் உங்கள் கனவில் சொல்கிறேன்."**

அடுத்த ஆண்டு, ஹோஷங்கின் தாயும் சகோதரியும் குருபிரசாத்தில் மீண்டும் பாபாவை சந்தித்தபோது, அவர்கள் அதே கோரிக்கையை முன்வைத்தனர். பாபா புன்னகைத்து பதிலளித்தார், **"தெஹ்மி என் அன்பர்**

ஒருவரின் குடும்பத்தில் மறுபிறவி எடுத்துள்ளார், அவர் இங்கே குருபிரசாத்தில் என்னிடம் வந்து, எனது மடியில் விளையாடினார்."

1959 ஜூலை 14 முதல் ஆண், பெண் மண்டலி அனைவரும் மாற்றி மாற்றி உபவாசம் கடைப்பிடிக்க அறிவுறுத்தப்பட்டனர், ஆண் மண்டலி இரண்டு வாரங்கள், அதைத் தொடர்ந்து பெண் மண்டலி. 1959 ஜூலை 13ஆம் தேதி நடந்த கூட்டத்தில், பாபா இவ்வாறு வெளிப்படுத்தினார்: **"பரமாத்மா அனைத்தும் அறிவார் என்ற ஞானம், இறை ஞானம். பரமாத்மா கூறுகிறார்: 'இப்போது எனக்கு எல்லாம் தெரியும் என்று எனக்குத் தெரியும்.' எனவே, அனைத்தையும் அறிந்த பரமாத்மா, அது தூய்மையான கற்பனை என்பதை மட்டும் அறிந்திருக்கவில்லை."**

அதைத் தொடர்ந்து, பாபா கவிதை வடிவில் மொழிந்தார்:

ஓ, நீ ஒன்றுமறியாத, அனைத்தையும் அறிந்த பரமாத்மா,
என்ன ஒரு அவலநிலையில் இருக்கிறாய்!
ஓ, நீ பலவீனமான, அனைத்து சக்திவாய்ந்த பரமாத்மா,
என்ன ஓர் இக்கட்டான நிலையில் இருக்கிறாய்!
ஓ, நீ துயரமான, அனைத்து மகிழ்ச்சியும் நிறைந்த பரமாத்மா,
என்ன ஓர் இடர்பாடான நிலையில் இருக்கிறாய்!
என்ன ஒரு வருத்தம்!
என்ன ஒரு தோற்றம்!
என்ன ஒரு சந்தோஷம்!

1959 ஜூலை 16 வியாழன் அன்று குருபிரசாத்தில் இருந்தபோது, பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்:

உயர்ந்தவர்களில் உயர்ந்தவர் என்ற முறையில், நான் அதி புத்திசாலிகளில் புத்திசாலி, இருந்தாலும் எந்த முட்டாளையும் விட முட்டாள்தனமான செயலைச் செய்ய நான் என்னை அனுமதித்தேன். என்னுடைய இந்த முட்டாள்தனமான செயல் என்ன? 'படைப்பை உருவாக்குதல்!'

படைப்பு உண்மையில் ஒரு பெரிய நகைச்சுவை; என்னையே நான் பணயம் வைத்து, அந்த சிரிப்பை அடையப்பெற்றாலும், இப்போது அந்த நகைச்சுவை எனது மார்பில் மாபெரும் பாரமாக நிரூபிக்கப்படுகிறது. சில நேரங்களில், நான் மிகவும் சோர்வாக இருப்பதால், 700 ஆண்டுகளுக்கு தூங்கப் போகலாம் என உணர்கிறேன்.

முட்டாளைப் பொறுத்தவரை, முட்டாள்தனமான செயல் மிகவும் இயற்கையானது, சிரமமற்றது. ஆனால், மகத்தான மேல்நிலையில் இருக்கும் ஞானி, தமது ஞானப் பண்பிற்கு நேர்மாறான ஒரு செயலைச் செய்யத் துடித்துக் கொண்டிருப்பதை உங்களால் கற்பனை செய்ய முடியுமா? அதனால்தான் நான் சொல்கிறேன், நான் சோர்வாக இருக்கிறேன் என்று

சொல்லும்போது, நான் என்ன சொல்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியாது - அது மனித புரிதலுக்கு அப்பாற்பட்டது.

அடுத்த நாள், பாபா 'தெய்வீக மதுபானமும் அன்பும்' (WINE & LOVE) மற்றும் ஜூலை 18 அன்று 'ஸாக்கி' (SAKI, இறைத்தோழன் - 'தெய்வீக மதுபானம் வழங்குபவர்') குறித்து விளக்கமளித்தார். அன்றைய தினம் மாலை 5:30 மணிக்கு, நீதிபதியாகப் பணிபுரிந்த பிரேம் கில்னானி அவரது மனைவி கிரிஜாவுடன் பாபாவைப் பார்க்க வந்தார். அவரை அடிக்கடி பார்க்க முடியாமல் போனது குறித்து தங்கள் ஏமாற்றத்தை இருவரும் வெளிப்படுத்தினர். பாபா அவர்களிடம் கூறினார்:

நீங்கள் என்னுடன் இருப்பதை விட, நான் உங்களுடன் இருப்பது சிறந்தது! நான் எல்லோருடைய இதயத்திலும் இருக்கிறேன், ஆனால் நான் அங்கே தூங்கிக் கொண்டிருக்கிறேன். இது எனது பழைய பழக்கம். என்னைத் தூக்கத்திலிருந்து எழுப்புவதற்கு, நீங்கள் எப்போதும் என்னை 'பாபா, பாபா, பாபா!' என்று தொடர்ந்து கூக்குரல் விடுக்க வேண்டும். அப்படியானால், உங்கள் இதயத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் நான், தூங்குவதில் எந்த இன்பமும் காண முடியாது. தூங்குவதை விடுங்கள், சிறிய குட்டித் தூக்கம் போடுவதற்கு கூட எனக்கு நேரம் இராது! உங்கள் இடைவிடாத அழைப்பைக் கேட்டு, உங்கள் இதயத்தில் நான் மெதுவாக விழிப்பேன் - நீங்கள் தொடர்ந்து எனது பெயரை உச்சரித்துக் கொண்டிருப்பீர்கள்.

உங்கள் இதயத்தில் நான் ஒருமுறை விழித்தெழுந்ததும் நீங்களும் விழித்தெழுந்து, எப்பொழுதும் விழித்திருப்பீர்கள். ஆதலால், எனது பெயரைத் தொடர்ந்து, திரும்பத் திரும்ப உச்சரித்து, உங்கள் இதயங்களில் என்னை எழுப்புங்கள், இதனால் நீங்கள் எப்பொழுதும் விழித்திருப்பீர்கள்.

குரு பூர்ணிமா (பௌர்ணமி) தினத்தில், பாபாவை என்றென்றும் இறுதிவரை உறுதியாகப் பற்றிக் கொள்ள உதவுமாறு பாபா, மண்டலியை ஒன்றிணைந்து கடவுளிடம் பிரார்த்தனையை மொழியச் செய்தார். மாலையில் ஃபிரான்சிஸை தன் அறைக்கு அழைத்து, உரையாடிய பல விஷயங்களுக்கு மத்தியில், பாபா, **"நீங்கள் இதுவரை என்னுடன் தங்கியிருப்பது எனக்கும், உங்களுக்கும், உங்கள்** (ஆஸ்திரேலியா) **குழுவினருக்கும் முழுமையாக பலனளித்துள்ளது"** என்று கூறினார்.

ஆஸ்திரேலிய குழுவிற்கு எழுதிய கடிதத்தில், ஃபிரான்சிஸ் இந்த உரையாடலை விவரித்தார், மேலும் 'புதிய மனிதநேயம்' (NEW HUMANITY) மற்றும் பாபாவின் துன்பம் குறித்தும் விவாதித்தார்:

ஒருவர் பாபாவுடன் எவ்வளவு காலம் இருக்கிறாரோ, அவ்வளவு அதிகமாக, இன்றைய உலக நிலைமைக்கு ஒரே தீர்வு புதிய மனிதநேயம், அதாவது 'இரக்கம் மற்றும் ஒத்துணர்வுடன் கூடிய மனித பண்பு' என்பதை உணர்ந்து கொள்கிறார்; இந்த மானிட சமுதாயம், இன்றைய மனிதநேயம் கொண்டிருப்பதை விட, முற்றிலும் மாறுபட்ட மதிப்புகளை உள்ளடக்கிய ஒரு

மனிதநேயம்; 'இசையை நுகர்வதற்கான புதிய செவிகள்', 'இறைவனையும், ஒவ்வொருவரையும் தன்னைப் போலவே நேசிப்பது' என்ற இந்த புதிய இசை, 'என்னுடையது இந்த உலகம்' என்ற பேராசை மிக்க தனித்துவத்தின் முடிவு - இதுபோன்ற 'புதிய இறை உலகம்' என்ற ஆரம்பத்தை உள்ளடக்கிய மனிதநேயம்.

பிரச்சினை என்னவெனில், பாபா, தமது மௌனத்தைக் கைவிடும் வரை, இந்தப் புதிய மனிதகுலத்தின் தொடக்கத்தை செயல்படுத்த முடியாது - அதாவது, அவரது பௌதீக உடலைத் துறப்பது. 'இறை-மனிதன்' எனும் மொத்த ரூபத்தில் நிலைகொண்டுள்ள பாபாவைப் பிரிந்த ஓர் உலகத்தை, கற்பனை செய்து பார்க்க முடியாது. மீண்டும், ஒருவர் அவரது துன்பத்தின் ஒரு சாயலை மட்டுமே தினமும் பார்க்கும்போது, அவர் தனது உடலைக் கைவிட விரும்புவது, தவிர்க்க முடியாத ஒன்றாகத் தோன்றும். ஒருவர் தனது துயரத்தை முடித்துக் கொண்டு, தான் உட்பட முழு உலகமும் தொலைந்து போகட்டும் அல்லது போரின் மூலம் தன்னை அழித்துக்கொள்ளட்டும் என்று கெஞ்சுவது போல் உணர்கிறார்.

1959 ஜூலை 19 ஞாயிற்றுக்கிழமை, நெருங்கிய பூனா அன்பர்களுக்கு ஒரு 'குடும்ப தரிசனம்' - பாபாவைப் பார்ப்பதற்கான இறுதி வாய்ப்பு வழங்கப்பட்டது; அவர் விரைவில் பூனாவை விட்டுச் செல்லவிருந்தார். நாள் முழுவதும் பாபா அவர்களுடன் இருந்தார். பலர் தங்களுடன் மதிய உணவுப் பொட்டலங்களைக் கொண்டு வந்திருந்தனர்.

'அவதார் மெஹர் பாபா அறக்கட்டளை'யின் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஆதி, பாதிரி, காக்கா பாரியா ஆகியோர் 1959 ஜூலை 26 ஞாயிற்றுக்கிழமை அன்று, நான்கு நாட்களுக்காக குருபிரசாத்திற்கு வந்தனர். டாக்டர் டான் 30ஆம் தேதி வந்தார். ஜூலை 28ஆம் தேதி பிற்பகல் சுமார் 3:00 மணியளவில், நோய்வாய்ப்பட்டிருந்த ஃபிரான்சிஸுக்கு முறையான மருத்துவ சிகிச்சையின் அவசியத்தை வலியுறுத்தி, பாபா குறிப்பிட்டார்: **"பிரபஞ்சத்தின் இறைவன், எல்லையற்ற மாயாவின் ஆற்றலுடன் - ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் - அவரது இறுதிப் போரை நடத்த வேண்டும். மண்டலியில் மூன்று அல்லது நான்கு பேர் அவருக்கு உதவ வேண்டும். ஆதலால், அவர்கள் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார்."**

ஜூலை 31 மாலை, பாபா இந்தக் கவிதையை எடுத்துரைத்தார்:

எனக்கென்னவோ தோன்றுவது ஒன்றே ஒன்றுதான்.
நான் இல்லையென்றால், எல்லாமும் எங்கே இருக்க முடியும்?
எனக்கென்னவோ தோன்றாதது ஒன்றே ஒன்றுதான்.
நான் இல்லாமல், இவை அனைத்தும் நின்றுவிடும்.
நானும் நீங்களும் எல்லாமும் இல்லாமல் இருக்கட்டும்,
அப்போதுதான், நாம் நிலைபெற்று இருக்க முடியும்.

1959 ஆகஸ்ட் 2 ஞாயிற்றுக்கிழமை அன்று, ஔரங்காபாத் பேராசிரியர் ராஜ்துர்கர் (PROFESSOR RAJDURKAR) குருபிரசாத்தில் வழங்கிய நகைச்சுவை நயம் மிக்க கீர்த்தனையை பாபா மிகவும் ரசித்தார். இறுதியில், பாபா இவ்வாறு குறிப்பிட்டார், **"என்னைக் கண்டுகொண்டதன் மூலமாக, நான் என்ன அடையப் பெற்றேன் என்பதை எப்படி எடுத்துரைக்க முடியும்?"**

இது வரை பாபா, மண்டலி ஒருவரின் கையைப் பற்றிக்கொண்டு நடந்து கொண்டிருந்தார்; ஆனால் 4ஆம் தேதி, **"இன்று உதவியின்றி நடக்க எனக்கு ஒரு திடீர் விருப்பம் வந்துள்ளது"** என்று குறிப்பிட்டு, நாற்காலியிலிருந்து எழுந்து, அதையே செய்தார். பின்னர் அவர் குருபிரசாத்தின் நுழைவு வாயில் வரை நடக்கத் தொடங்கினார், வழியில் இரண்டு இடங்களில் சற்று நின்று ஓய்வெடுத்தார். புக்கார் இரண்டு கைகளையும் தரையில் ஊன்றி, முழங்காலிட்டு குனிந்த வேளையில், பாபா, அவரது பின் முதுகை ஒரு நாற்காலியாகப் பயன்படுத்திக் கொண்டார். பாபா இந்த 'உயிருள்ள நாற்காலி'யை மூன்று அல்லது நான்கு நாட்கள் பயன்படுத்தி, பின்பு நிறுத்தினார். (ஜால்பாய் இந்த நிகழ்வுகளில் ஒன்றைப் புகைப்படமாக எடுத்தார்.)

விபத்துக்குப் பிறகு, பாபாவிற்கு சிகிச்சை அளித்த மருத்துவர்களில் ஒருவரான டாக்டர் சாட்டர்ஜி (DR. CHATTERJEE), இந்த நேரத்தில் அவரைப் பார்த்து, "நாங்கள் அறிவுறுத்திய அறுவை சிகிச்சையின் விளைவாக, இப்போது இருப்பதுபோல் இது சரியாக இருந்திருக்கும். பாபா, தமது சொந்த அறுவை சிகிச்சையை அவரே செய்ததாகத் தோன்றியது!" என்று கூறினார். அந்த மாத இறுதிக்குள், பாபாவும் முன்பு போல, விரும்பினால், தரையில் அமர முடியும் நிலை உருவானது.

1959 ஆகஸ்ட் 5 புதன்கிழமை, மெஹரா, மணி, கைக்கோபாத் ஆகியோரை பாபா, ஹஸ்ரத் பாபாஜானின் சமாதிக்கு அனுப்பி, அங்கு அவர்கள், அந்த ஆண்டு அக்டோபர் இறுதியில், பாபா தனது மௌனத்தைக் கலைக்க வேண்டும்; அதுவரை, பாபாஜான், பாபாவின் பணியில் உதவ வேண்டும் என்ற பிரார்த்தனையை முன்மொழியச் செய்தார்; மூவரும் அவ்வாறே செய்தனர். (மெஹரா தன்னை கைக்கோபாத்திற்கு காட்டிக்கொள்ளக் கூடாது என்பதால், காரின் முன் மற்றும் பின் இருக்கைக்கு இடையே திரையால் மூடப்பட்டிருந்தது.)

அன்றைய நாளின் பிற்பகுதியில், பாபாஜானின் சமாதியில் பரிந்துரைத்த அதே பிரார்த்தனையை மொழியும் அறிவுறுத்தல்களுடன் எரச், ∴பிரான்சிஸ் இருவரும் பாபாஜானின் சமாதிக்கு அனுப்பப்பட்டனர்.

அன்று மாலை 7:00 மணியளவில் பாபா மண்டலியிடம், **"மெஹராஸாத்தில் நான் மிகவும் உடல் நலம் குன்றி காணப்படுவேன், அதை உங்களால் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது"** என்று தெரிவித்தார்.

அவர் மேலும் கூறினார், **"முட்டாள் ஒருவன், சில நேரத்தில் அல்லது எல்லா நேரத்திலும் புத்திசாலியாக ஒருபோதும் இருந்ததில்லை. எதிர்வரும்**

மூன்று மாதங்களில் மெஹராஸாத்தில், பாபா என்ன எதிர்கொள்ள நேரிடும் என்பதை, கடவுளாகிய நான் கூட நினைத்து நடுங்குகிறேன்!"

1959 ஆகஸ்ட் 6 அன்று குருபிரசாத்தில் மெஹர்ஜி, சதாஷிவ் பாட்டீல் இருவருடன் ஆதி, பாபாவை சந்தித்தார். 7ஆம் தேதி, மண்டலி மற்றும் பூனா சேவகர்களிடையே நடந்த ஒரு சிறிய கூட்டத்தில் பாபா கூறினார்: **"உங்கள் ஆசையின் மூச்சை களைந்து, நீங்களே உங்களுள் இறந்தால் ஒழிய, என்னை உங்கள் வாழ்க்கையின் மூச்சாக மாற்றி, என்றென்றும் வாழ முடியாது."**

அவர் தொடர்ந்து கூறினார்:

ஆகஸ்ட் 14 முதல் அக்டோபர் இறுதி வரை, எனக்கு மிக முக்கியமான காலமாகவும், எனது உலகளாவிய பணியின் சுமை தாங்க முடியாததாகவும் இருக்கும். இந்தப் பணியின் அழுத்தத்தால், நான் எல்லையற்ற சுமையைத் தாங்கிக்கொள்ளும் தருணத்தில், உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் எல்லையற்ற சோர்வாகக் காணப்படுவேன். இது உதவியற்ற, நம்பிக்கை இல்லாத மற்றும் அவமானத்தின் ஒரு காலகட்டமாக இருக்கும்; அதைப் பற்றி நான் அடிக்கடி உங்களிடம் கூறிவருகிறேன். அக்டோபர் இறுதி வரை, என் உடல் அப்படியே இருந்தால், எனது மௌனம் கலைக்கப்படும், அதைத் தொடர்ந்து எனது மகிமையும் வெளிப்படும்.

எனவே, எனக்கு உங்கள் உதவி தேவை. எப்படி? என்பதை நான் உங்களுக்குச் சொல்வேன்.

மெஹராஸாத்தில் குடியிருக்காத அன்பர்களுக்காக, அவர் இவ்வாறு எடுத்துரைத்தார்:

1. **அக்டோபர் இறுதி வரை, எந்த சூழ்நிலையிலும், அவர்கள் என்னை தொந்தரவு செய்யக்கூடாது. இந்த இரண்டரை மாதங்களில் மெஹராஸாத் வரக்கூடாது, அழைக்கப்படாவிட்டால், என்னுடன் தங்கும் விருப்பத்தைத் தெரிவிக்கக்கூடாது.**
2. **இந்த மாதங்களில் எவரும் என்னுடன் கடிதங்கள் அல்லது தொலைத்தந்தி மூலமாக, எவ்வளவுதான் கடினமான சூழ்நிலையை சந்தித்தாலும், என்னைத் தொடர்பு கொள்ளக்கூடாது. இந்த மாதங்களில் எந்த விதமான தொந்தரவும் எனக்கு மிகுந்த தடையாக இருக்கும் என்பதால், என்னை சிறிதும் தொந்தரவு செய்வதை விட, ஒருவர் கவலையுடன் உயிரைத் துறப்பது நல்லது.**

பாபாவுடன் தங்கியிருக்கும் மண்டலி, கவனமாகப் பின்பற்ற வேண்டிய விஷயங்களையும் எடுத்துரைத்தார்:

1. **இந்த இரண்டரை மாதங்களில், எக்காரணத்தைக் கொண்டும், எவரும், மெஹராஸாத்தை விட்டு வெளியேறக் கூடாது.**
2. **எவரும் குழப்பமான செய்திகளை எனது செவிகளுக்குக் கொண்டு வர வேண்டாம்.**

3. **அனைவரும் என்னை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும் மற்றும் அந்த நோக்கத்திற்காக மிகவும் கடினமாக உழைக்க வேண்டும், இதன் மூலம், உங்கள் புரிதல் மற்றும் முயற்சிகளில் நான் மகிழ்ச்சியடைவேன்.**
4. **எவரும் என்னுடன் வாக்குவாதத்தில் ஈடுபடவோ அல்லது விவாதத்திற்கான எதையும் முன்வைக்கவோ கூடாது.**
5. **இந்தக் காலகட்டத்தில் நான் அடிக்கடி மண்டலியிடம் வரமாட்டேன்.**
6. **எனது அறிவுறுத்தல்களை முழுமையாக நிறைவேற்றவும், முற்றிலும் எனக்குக் கீழ்ப்படியவும் அனைவரும் 100 சதவீதம் முயற்சி செய்ய வேண்டும்.**

கோஹெர், மணி அல்லது எரச் மூலம், ஏதேனும் பணி நிமித்தம் அழைத்தால் மட்டுமே, மெஹராஸாத்திற்கு வர வேண்டும் என்றும், பாபாவே, அவரை எவரும் பார்க்க விரும்பாவிடில், பாபாவைப் பார்க்க முயற்சிக்கக் கூடாது என்றும் ஆதிக்கு அறிவுறுத்தப்பட்டது. அவர் பாபாவால் அழைக்கப்பட்டால், பின்வரும் மூன்று கட்டளைகளை ஆதி நினைவில் கொள்ள வேண்டும்:

1. **ஆதி பாபாவை மகிழ்விக்க வேண்டும்.**
2. **ஆதி எந்த விஷயத்திலும் பாபாவிடம் வாக்குவாதத்தில் ஈடுபடக்கூடாது.**
3. **ஆதி எந்த ஒரு குழப்பமான செய்தியையும் பாபாவிடம் தெரிவிக்கக்கூடாது.**

இறுதியாக, கைக்கோபாத், ஃபிரான்சிஸ் மற்றும் மெஹராஸாத்தில் இருந்த எரச் ஆகியோருக்கு, தனது பணியில் உதவுவதற்காக மேலும் அறிவுரைகளை வழங்குவதாகக் கூறி முடித்தார் பாபா.

அன்று மதியம், நீண்ட நாட்களுக்குப் பிறகு, பாபா மண்டலியுடன் சதாஷிவ் பாட்டீலின் இல்லத்திற்குச் சென்றார்.

குருபிரசாத், பூனா (GURUPRASAD, POONA)

மெஹராஸாத் ஏகாந்தவாசம்

(**Meherazad Seclusion**)

1959 ஆகஸ்ட் 8 சனிக்கிழமை காலை பாபா, மூன்று தனித்தனி கார்களில் ஆண், பெண் மண்டலியுடன் மெஹராஸாத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். பூனா மையத்தைச் சார்ந்த பல அன்பர்கள், பந்த் கார்டனில் (BUND GARDENS) ஒன்றுதிரண்டு அவருக்குப் பிரியாவிடை அளித்தனர். பாபா, அவரது காரை நிறுத்தி, ஒரு பெரிய மாமரத்தின் கீழ் அமர்ந்தார் (பாபாஜான் அடிக்கடி அமர்ந்திருந்த அதே மரம்), ஜால்பாய் அந்தக் காட்சியைப் புகைப்படம் எடுத்தார். பாபாவின் ஆரத்தி நிகழ்த்தப்பட்டது. பூனாவில் ஐந்து மாதங்கள் தங்கியிருந்த பாபா, ஜெய் கோஷங்களுக்கு மத்தியில் அன்பர்களிடமிருந்து விடைபெற்றுச் சென்றார்!

பாபாவும் பெண்மணிகளும் சுமார் 11:00 மணியளவில் மெஹராஸாத்தை வந்தடைந்த வேளையில், காக்கா அவர்களை வரவேற்றார். கஜ்வானியும் தனது காரில் பின்தொடர்ந்து, குருபிரசாத்தில் அவர் பாபாவிற்கு வழங்கிய புதிய மெத்தையாலான உயர் முதுகு நாற்காலியைக் கொண்டு வந்தார். மண்டலி மண்டபத்தில் அந்த நாற்காலி போடப்பட்டு, பாபா அதை இறுதிக் காலம் வரை பயன்படுத்தினார்.

இப்போது பாபாவுடன் வாழும் மண்டலியில் பின்வரும் பத்து ஆண்களும், ஆறு பெண்களும் அடங்குவர்: கைக்கோபாத் (68), காக்கா பாரியா (68), பைதூல் (65), பெண்டு (56), விஷ்ணு (56), ஃபிரான்சிஸ் (52), எரச் (43), அலோபா (43), பாவ் கல்சூரி (32), மற்றும் மெஹர்தாஸ் (29). மேலும், புக்காரும் (40) அவ்வப்போது மெஹராஸாத்தில் தங்கியிருந்தார். ஆறு பெண் மண்டலி, மெஹரா (52), நாஜா (51), மணி (41), கோஹெர் (43), மெஹெரு (32), மற்றும் ரானோ (57).

பிற மண்டலி உறுப்பினர்கள் பாபாவுடன் மெஹராஸாத்தில் தங்காமல், கீழ் மற்றும் மேல் மெஹராபாத்தில் வாழ்ந்தாலும், அவர்களும் சம முக்கியத்துவம் வாய்ந்தவர்கள். பாபா திரும்பி வந்த அடுத்த நாள் ஆகஸ்ட் 9 அன்று, அவர்கள் அனைவரையும் சந்தித்தார். கீழ் மெஹராபாத்தில் பாதிரி, டாக்டர் டான், சிது, முஹமது மஸ்த் மற்றும் பாவ் கல்சூரி குடும்பம்; மெஹராபாத் மேல் மலையில் மன்ஸாரி, கைக்கோபாத் குடும்பத்தினர் - ஜாலு, குலு, மெஹெரு மற்றும் ஜெர்பாய் தஸ்தூர் ஆகியோர் வாழ்ந்து வந்தனர். ஆதி சீனியர், ஃபெராம், ஸரோஷ், சகன் ஆகியோர் அஹமதுநகரில் தத்தமது குடும்ப இல்லங்களில் வாழ்ந்து வந்தனர்.

பாபாவின் ஆன்மீகப் பணியில் உதவுவதற்காக, பாபாஜானின் சமாதியில் பிரார்த்தனையை மொழிய, பைதூல் ஆகஸ்ட் 10 அன்று பூனாவிற்கு அனுப்பப்பட்டார்.

மெஹராஸாத்தில், பாபாவின் ஏகாந்தவாச காலகட்டத்தில், பைதூல் கண்காணிப்புப் பணியில் அமருவதற்கு வசதியாக, புதியதொரு மரத்தினாலான புறக்காவலகம் (CHOWKY, சௌக்கி) உருவாக்கப்பட்டது. அது நிறைவடைந்ததும், ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, பாபா மண்டலியுடன் அதனை பின்தொடர்ந்து, மெஹராஸாத்தின் நுழைவாயிலுக்கு அருகில், ஒரு மாமரத்தின் கீழ் வைக்கப்பட்டது. மெஹராஸாத் பணியாட்கள் ஷங்கர் போஸ்லே (SHANKAR BONSLE), பாப்பு தேத்தே (BAPU DHETE), மாதோ கவானே (MADHO GAVHANE) ஆகியோர் காவலகத்தைத் தோளில் சுமந்து செல்ல, மெஹர்தாஸ் "ஹரி பாபா, ஹரி பாபா! மெஹர் பாபா, ஹரி ஹரி!" என்று உச்சரித்துக்கொண்டே அணிவகுப்பை வழிநடத்தினார். பாபா மாமரத்தின் கீழ் பைதூலைத் தழுவி, அதை ஆக்கிரமிக்குமாறு அறிவுறுத்தினார்.

1959 ஆகஸ்ட் 12ஆம் நாள் புதன்கிழமையன்று, நரம்பு வலியால் அவதிப்பட்ட ∴பெராமைப் பார்க்க பாபா, குஷ்ரு குவார்ட்டர்ஸுக்கு திடீர் விஜயம் மேற்கொண்டார். பாபா அவருக்கு சிகிச்சை பற்றி ஆலோசனை வழங்கினார். ∴பெராம் ஒரு 'தொடை நடுங்கி'; பல ஆண்டுகளாக, பாபா அவ்வப்போது ∴பெராமின் உடல்நிலை குறித்து அவருக்கு உறுதியளிக்கும் குறிப்புகளை எரச் மூலம் எழுதி அனுப்பி வைத்தார். பாபா குருபிரசாத்தில் இருந்தபோது, அவருடைய அறிவுறுத்தலின் படி, எரச் ஓர் அஞ்சல் அட்டையில் இவ்வாறு எழுதினார்: **"நீங்கள் அஞ்சவோ, கவலையடைவோ வேண்டாம் என்று பாபா விரும்புகிறார். உங்களைத் துன்புறுத்துவது, பயமுறுத்துவது மற்றும் நிலைகுலையச் செய்வது போன்ற அனைத்தும் உங்கள் நன்மைக்காகவே அவர் செய்கிறார். பாபா கூறுகிறார், 'எதுவும் எனது ∴பெராமுக்கு தீங்கு விளைவிக்க முடியாது!'"**

ஆகஸ்ட் 13 அன்று பாபா, அஹமதுநகர் பஜனைக் குழுவை வரவழைத்தார். பாடகர்கள் மற்றும் இசைக்கலைஞர்களைத் தவிர, ஸட்டா குடும்பம், டாக்கே, ரங்கோலே, வாமன், சகன், பகீரத் - மொத்தத்தில் 50 ஆண்கள் மற்றும் பெண்கள். அவர்கள் காலை 8:25 மணிக்கு பகீரத்தின் சரக்குவண்டியில் வந்தனர். சில பக்தி பாடல்களைக் கேட்ட பின்பு, வேடிக்கையான மனநிலையில் இருந்த பாபா, இரண்டு அங்குல தாடியுடன் அமர்ந்திருந்த கோமா கணேஷைப் (GOMA GANESH) பார்த்ததும், வாய்விட்டு சிரித்து கூறினார்: **"பைதூல்** (அப்போது குறுந்தாடி வளர்ந்திருந்தார்) **இதுவரை, அனைவரையும் விஞ்சியவர், நிகரற்றவர் என்ற எண்ணத்தில் இருந்தார், ஆனால் இங்கே அவருக்குப் போட்டியாளர் கோமா கணேஷ் இருக்கிறார்."**

பூனாவில் பாபா தங்கியிருந்த ஐந்து மாதங்களின் தடயங்களைப் பின்பற்றி, இவ்வாறு எடுத்துரைத்தார்: **"இந்தக் காலக்கட்டத்தில், பூனா அன்பர்களுக்கு என் அன்பை முழுமையாக வழங்கிய அதே வேளையில், மிகையான அளவில் அதை நானும் பெற்றுக்கொண்டேன். நீங்கள்** (கோமா

கணேஷ்) **அதில் பங்கெடுக்க முடியாததால், இன்று இங்கு அழைக்கப்படுகிறீர்கள். நாளை முதல் நீங்களும் வெளியேதான் இருக்க வேண்டும். நான் மூன்று குறிப்புகளை வலியுறுத்த விரும்புகிறேன்:**

"முதலில், அன்பால் நிரம்பிய உங்கள் இதயங்களுடன் என்னை சந்திக்கவும். இரண்டாவதாக, நான் வழங்கும் பிரசாதத்தை முழுமையாக உண்ணவும். மூன்றாவதாக, உங்கள் சண்டை சச்சரவுகளை இங்கேயே முழு அளவில் எதிர்த்துப் போராடித் தீர்த்துவிடுங்கள்."

பாபா ஒரு சில புதியவர்களிடம், அவர்கள் யார், என்ன செய்தனர் என்று விசாரித்தபோது, முறையாகத் தெரிவிக்கப்பட்டது. பாபா, மஹாராணி ஷாந்தாதேவி, மாய்ஸாஹேப் பட்வர்தன் (குருந்த்வாடி மஹாராணி), ஸர்தார் ராஸ்தே போன்றவர்களில் முக்கியமானவர்களையும், பிறரையும் பற்றி குறிப்பிட்டு, அவர் மீதான அனைவரின் அன்பை மிகவும் பாராட்டத்தக்க வகையில் எடுத்துரைத்தார்.

புகைப்படக்கலைஞர் பய்யா பாண்டேயைப் பார்த்த பாபா, **"பூனாவில் உங்கள் போட்டியாளர் பிக்குபாய் என்னை உண்மையாக நேசிப்பவர். பூனா அன்பர்களும் என்னை உண்மையாக நேசிக்கின்றனர். உள்ளூர்** (அஹமதுநகர்) **மையத்திலும் சிலர் உள்ளனர்"** என்று அவரை கிண்டல் செய்தார். பிக்குபாயுடன் ஒப்பிடும் போது பாபா, பாண்டேயை உலகப் பொருள் மீது பற்று அதிகம் என்று கூறி சிடுசிடுத்தார். மேலும் பாபா அவரிடம், **"ஏன் இவ்வளவு வயதானவர் போலத் தோன்றுகிறீர்கள்?"** என வினவினார்.

பாண்டே பதிலளித்தார், "எனது தாயார் மிகவும் சிரமப்பட்டு சமீபத்தில் காலமானார். இரவும் பகலும், நான் அவருடைய தேவைகளை கவனித்துக் கொண்டிருந்தேன்."

பாபா குறிப்பிட்டார், **"சில நேரங்களில் இளம் மற்றும் நம்பிக்கைக்குரிய வாழ்க்கையின் பணிக்காலம், எதிர்பாராத விதமாக முடிவுக்கு வரும். எனவே நீங்கள் ஏன் உங்கள் வயதான தாயாரை நினைத்து துக்கத்தில் ஆழ்ந்திருக்க வேண்டும்? கடவுளின் நினைவிலோ அல்லது எனது சேவையிலோ ஒருவருக்கு வயதாகிவிட்டால், அதைப் புரிந்து கொள்ள முடியும்."**

உரையாடலுக்கு நடுவே, புதிதாக நிறுவப்பட்ட மையத்திற்கு பாபாவின் பெரிய ஓவியத்தை பரிசாக வழங்கிய பாண்டேயை பாராட்டி ரங்கோலே சில வார்த்தைகளை மொழிந்தார்.

வேலைக்காக வெளியே செல்பவர்கள், மையத்திற்கான பணிகளில் தங்களை எவ்வாறு ஈடுபடுத்திக் கொள்கிறார்கள் என்று பாபா விசாரித்தார்; அதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் ஏற்கனவே செய்யப்பட்டிருப்பதாக அவருக்குத் தெரிவிக்கப்பட்டது. அப்போது பாபா, **"நகர் மெஹர் மையத்தின் அமைப்பாளர்கள் மற்றும் சேவகர்களிடையே ஏதேனும் முரண்பாடு அல்லது கருத்து வேறுபாடு உள்ளதா?"** என்று கேட்டார்.

சில தவறான புரிதல் இருப்பதாக ரங்கோலே பதிலளித்தபோது, பாபா கருத்துரைத்தார், **"சண்டை சச்சரவுகள் நல்லது, ஆனால் தவறான புரிதல் நல்லதல்ல."**

ரங்கோலே, ஸுனுமியான் (SOONUMYAN) இருவருக்கும் இடையே உருவான கருத்து வேறுபாடு, பாபாவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. சில காலமாக மையக் கூட்டங்களில் ஸுனு கலந்து கொள்ளவில்லை. ஸுனுமியான் திரையரங்கம் ஒன்றை கட்டிக்கொண்டிருந்தார், ஆனால் நிலத்தின் உரிமையாளருடன் தகராறு ஏற்படவே, நீண்டகால நீதிமன்ற வழக்கு, இழுபறியில் தொடர்ந்தது. ஸுனு சார்பாக பரிந்து பேசுமாறு அவர், பாபாவிடம் மன்றாடினார்; இறுதியில், ஸுனு வழக்கில் வெற்றி பெற்றார்.

ஸுனுவின் பொருளாதாரச் சிக்கலைப் பற்றி பாபா குறிப்பிட்டார், **"ஏக இறைவனான உண்மைப்பொருளுடன் ஒப்பிடுகையில் இவை அனைத்தும் முக்கியமற்றவை."**

ஸுனுவின் பக்கம் திரும்பிய பாபா, **"அடுத்த இரண்டரை மாதங்களில்** (ஆகஸ்ட் 14 முதல் அக்டோபர் இறுதி வரை) **மையத்தின் செயல்பாடுகளில் பங்கு கொள்ளுங்கள், அப்போது நான் என் உலகளாவிய ஆன்மீகப் பணிகளில் மூழ்கி இருப்பேன், அது என்னை பெரிய அளவில், என் உடலை கைவிடத் தூண்டும் அளவுக்கு, சிரமங்களுக்கு உள்ளாக்கும். ஸுனு, இது உங்களுக்கு ஒரு வாய்ப்பு, சிறப்பாக பயன்படுத்திக் கொள்ளுங்கள், இனி இப்படி ஒரு காலம் வராது."**

பாபா அங்கிருந்தவர்களிடம், அவர் கூறுவதன் முக்கியத்துவத்தைத் தெளிவாக மனதில் பதியவைக்கும் விதத்தில் எடுத்துரைத்தார்: **"கவனமாக இருங்கள். ஒருவருக்கொருவர் அன்பாகவும் இணக்கமாகவும் இருங்கள், அக்டோபர் மாதத்திற்குப் பின்னர், என் உடல்** (உயிருடன்) **இருந்தால், நான் பார்த்துக்கொள்வேன். இது கடினமான காலகட்டம் மற்றும் எனது பணியின் கடைசி கட்டம். உங்கள் இதர கவலைகள் அனைத்தையும் ஒதுக்கி வைத்துவிட்டு, மையத்தின் செயல்பாடுகளில் ஆர்வம் காட்டுங்கள்."**

பாபா, அஹமதுநகர் மையத்தின் நிதி, மாதாந்திர செலவுகள் ஆகியவற்றைப் பற்றி கேட்டறிந்தார்; மேலும் பூனா மையத்தை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருப்பதை நடைமுறை உதாரணமாகக் குறிப்பிட்டார். பூனா மையத்தை, சட்டப்பூர்வமாக பதிவு செய்து, அவர்களின் பெயரில் உள்ள வங்கிக் கணக்கில் ரூ.40,000 முன்பணமாகச் செலுத்த வேண்டும். மேற்கத்தியர்கள் ரூ.25,000 பங்களிக்க வேண்டும். அமைப்பாளர்கள் மற்றும் சேவகர்கள் மையத்தின் அடித்தளத்தை உறுதிப்படுத்த, சில தொகைகளை சேகரித்தனர். **"இந்தியாவில் எல்லா இடங்களிலும், எல்லா மையங்களிலும் இப்படித்தான் நடக்கும்"** என்று பாபா மேலும் கூறினார்.

அப்போது அவர் கூறியதாவது:

வங்கியில் அஹமதுநகர் மையக் கணக்கில் ரூ.500 வைப்புத்தொகையாக வழங்க விரும்புகிறேன். என் அன்பின் செய்தியை

அனைவர் மத்தியிலும் பரப்புவதற்கும், மையத்தின் செலவுகளுக்கும் இது பயன்படுத்தப்பட வேண்டும். உங்களில் ஒருவர் மற்றொருவரிடம் அன்புள்ளம் கொண்டவராக இருக்க வேண்டும், இதன்மூலம் உங்களை முன்னுதாரணமாக பிறர் பார்க்கவும், அவர்கள், பாபா மீதும் அவருடைய பணியின் மீதும் நம்பிக்கை வைப்பதற்கான சூழலை உருவாக்கவும் முடியும். உங்கள் குடும்பம் மற்றும் இல்லறக் கடமைகளை நீங்கள் செவ்வனே நிறைவேற்றலாம், ஆனால் அதே நேரத்தில், நீங்கள் என்னை நேசிக்க வேண்டும்; கடவுள் ஒருவரே உண்மையானவர், இதர அனைத்தும் மாயை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இதன் மூலம், உங்களுக்கிடையில் அன்பை நிலைநிறுத்தவும், மனிதநேயத்தின் மீதான எனது அன்பைப் பற்றி பிறருக்கு எடுத்துரைக்கும் தைரியத்தையும் நீங்கள் அடையப் பெறுவீர்கள். உங்களுக்குள் ஒற்றுமையின்மை இருந்தால், மையத்தின் செயல்பாடுகளைத் தொடர்வது அனைத்தும், அபத்தமானதாக இருக்கும்.

இப்போது நான் பரிசுகளை ஏற்றுக்கொள்வதையும், பிறருக்கு உதவுவதையும் நிறுத்திவிட்டதால், கொடுக்கத் தயாராக இருப்பவர்கள், அந்தத் தொகையை வைத்துக்கொண்டு, எனது பணிக்காகப் பயன்படுத்துகிறார்கள். பூனா மையத்திற்கு ரூ.25,000 நன்கொடை அளித்து உதவுமாறு மேற்கத்தியர்களிடம் கேட்டுக்கொண்டேன். உலக நோக்கங்கள் அனைத்தும் அர்த்தமற்றவை. அவை நீடித்து நிலைக்கும் தன்மையுடையது அல்ல. ஆன்மீகப் பாதையில் செல்லும் ஒவ்வொருவரும் துன்பத்திற்கு ஆளாகின்றனர், நான் அனைவருக்கும் எஜமானன். எனது நேரம் நெருங்கிவிட்டது. அதன் பின்னர், ஓர் எழுச்சி உருவாகும். 50 ஆண்டுகளுக்குப் பிறகு, ஸுனு, அவரது திரையரங்கம் எதுவும் இருக்காது. இந்த உலக சிந்தனைகள் மற்றும் பேச்சுக்கள் அனைத்திலும் எதுவும் இல்லை.

அஹமதுநகர் மைய ஊழியர்களுக்கு பாபா அறிவுரை வழங்கினார்:

குறுகிய மனப்பான்மையைத் தவிர்க்கவும். என் அன்பர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுவதானால் மையத்தால் என்ன பயன்? உங்கள் இதயம் சுத்தமாகவும், என் மீது உங்களுக்கு அன்பு இருந்தால் மட்டுமே நீங்கள், 'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!' என்று சொல்லலாம், அப்போது உங்கள் ஜெய் முழக்கங்கள் தன்னிச்சையாக, ஆழ் இதயத்திலிருந்து வரும். இந்த வாக்குவாத பேர்வழிகளுடன் ஒப்பிடுகையில், ஒரு தனிப்பட்ட, நேர்மையான அன்பர் மட்டும் இருந்தாலே போதும். அன்பாகவும், நேர்மையாகவும், இணக்கமாகவும் இருங்கள். மையக் கூட்டங்களில் கலந்துகொள்வதுடன் ஒருவரையொருவர் அன்புடன் சந்திக்கவும்.

பாபா, ஆதியிடம் ரூ.500 மையத்திற்குச் செலுத்துமாறு அறிவுறுத்தினார். கணிசமான நன்கொடை அன்பர்களிடமிருந்து அடையப் பெற்றதும், ஆதிக்கு இந்தப் பணம் வழங்கப்படும். பாபா மேலும் குறிப்பிட்டார்:

வங்கியில் யாருடைய பெயரில் கணக்கு தொடங்கப்பட வேண்டும் என்பதை, மைய அமைப்பாளர்கள் தங்களுக்குள் முடிவு செய்து

கொள்ளட்டும், இதனால் எவரேனும் தவறாக நிதியை நிர்வகிப்பதாக எந்தப் புகாரும் வரக்கூடாது.

உங்கள் மையத்தின் நோக்கம், நான் சொல்வதற்கிணங்க வாழ முயற்சிப்பதே ஆகும். நீங்கள் நேர்மையாகவும் அன்பாகவும் இருந்தால், உங்களுக்கு ஏராளமான நிதி கிடைக்கும்; இல்லையேல், மையம் ஒரு சுமையாகவே இருக்கும். நீங்கள் என் ஆலோசனைகளைப் பின்பற்றவில்லை என்றால், மையத்தின் கதவுகள் பூட்டப்படுவதை நான் ஊர்ஜிதம் செய்வேன். ஆந்திரா அன்பர்கள் எனது பணியைச் செய்து சிரமப்படுகிறார்கள், அவர்களுக்குள் கருத்து வேறுபாடுகள் இருந்தால், அது என் மீதுள்ள அன்பினால்தான்.

மையக் கூட்டங்களில் கலந்துகொள்ளும்படி எவரையும் வற்புறுத்தாதீர்கள் அல்லது உங்கள் கருத்துக்களை அவர்கள் மீது திணிக்காதீர்கள். ஹமிர்பூர் பக்தர்களுக்கு, உங்களுக்குக் கிடைக்கும் அளவுக்கு என்னுடைய சகவாசத்திற்கான வாய்ப்பு இல்லை; ஆனால் அவர்களின் அன்பு அதி தீவிரமானது. ஒவ்வொரு வருடமும் நான் அங்கு, பல்வேறு இடங்களுக்குச் சென்ற அந்த நாள் மற்றும் நேரத்தை அவர்கள் கொண்டாடுகிறார்கள். மேலை நாடுகளில், எனது ஒரு வார்த்தையில் தங்கள் உயிரையே தியாகம் செய்யத் தயாராக இருக்கும் அன்பர்களும் உள்ளனர்.

தெய்வீக நியதிப்படி, அவதார புருஷர் துன்பங்களுக்கு ஆளாக வேண்டும். என்னுடைய அவமானத்தின் காலம் நெருங்கிவிட்டது, நான் அதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் கடவுளை நேசிப்பதே எனக்கு மனமகிழ்ச்சியை நல்கும். ஆரம்பமில்லாத ஆரம்பத்திலிருந்து, நான் பரமாத்மா, பரமேஷ்வர் (அப்பாற்பட்ட மற்றும் அனைத்திற்கும் அப்பாற்பட்ட கடவுள்). உண்மைப்பொருளாகிய ஏக இறைவனின் ஒரு மிகக் குறுகிய பார்வையேனும் உங்களுக்கு கிடைத்தால், நீங்கள் அஹமதுநகரின் வீதிகளில் நிர்வாணமாக அலைந்து திரிவீர்கள்! எந்த ஓர் அவநம்பிக்கையும், அவமதிப்பும் ஏக இறைவன் எனும் என் உண்மைநிலையை மாற்ற முடியாது. நான் எந்த வகையிலும் பாதிக்கப்படாமல் இருக்கிறேன்.

என்னைப் பற்றிய விஷயங்களை மக்களுடன் விவாதிப்பதும், என்னைப் பற்றிய உங்கள் சிந்தனைக்கு மக்களைக் கொண்டுவருவதும் முறைதான். மெஹர் பாபா, யார் என்பதை மக்களுக்குச் சொல்லும் அதே வேளையில், ராமர் மீதான பக்தி (அன்பு மற்றும் பக்தி மார்கம்) மெஹர் பாபா மீதான பக்தி என்பதை தெளிவுபடுத்துவதே உங்கள் பணி. 'ஜெய் ராம்' என்று சொல்வதா அல்லது 'ஜெய் பாபா' என்று சொல்வதா என்ற சர்ச்சைக்குள் நுழைந்து சண்டை சச்சரவுகளில் ஈடுபடக்கூடாது. மக்கள் என் மீது நம்பிக்கை கொண்டிருந்தால், அவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும் போது 'ஜெய் பாபா' என்று சொல்லத் தொடங்குவார்கள். இதை அன்பர்கள் ஏற்கனவே ஹமிர்பூரில் செய்து வருகின்றனர்.

மெஹர் பாபா மனித உருவில் நிலைகொண்டிருக்கும் கடவுள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆர்வமுள்ளவர்களுக்கு இதைப் பற்றி விளக்குங்கள். அவர்கள் செவிமடுக்கவில்லை என்றால், பேசுவதை நிறுத்துங்கள். ஆனால் உங்கள் நம்பிக்கை எப்பொழுதும் உறுதியாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு மையத்திற்கும் சுயமாக உருவாக்கப்பட்ட அதன் மோதல்களும், முறுகல் நிலைகளும் உள்ளன; ஆனால், பிற இடங்களைப் போலவே, இதுபோன்ற சண்டை சச்சரவுகள், அமைப்பாளர்கள் மற்றும் சேவகர்கள் என் மீது கொண்ட அன்பின் விளைவாகும். இப்போது ரங்கோலே, அஹமதுநகர் மையத்தின் தலைமைப் பணியாளராக இருப்பதால், மக்கள் அவருக்கு எதிராகப் பேசத் தொடங்குவார்கள், அவரைப் பற்றி புறங்கூறுவார்கள், சில நேரங்களில் இது அவரைக் குழப்பத்தில் ஆழ்த்திவிடும்.

ரங்கோலேயிடம் பாபா கூறினார், **"நீங்கள் செயலாளராக இருப்பதால், அனைவரும் செருப்பாலும், காலணிகளாலும் உங்களை உதைப்பதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்! மேலும், உங்கள் தலையைத் தாழ்த்திக்கொண்டிருக்க வேண்டும். அத்தனை அடி, உதைகளுக்குப் பின்னரும், உங்கள் கோபத்தை உங்களால் தடுக்க முடியுமாயின், நான் உங்களைத் தலை தாழ்த்தி வணங்குவேன்"**

மூன்று மாத காலம் கடவுளின் பெயரைத் திரும்பத் திரும்ப உச்சரிப்பது முறையாக நடைபெறவில்லை என்பதைக் கேள்விப்பட்ட பாபா, **"ஒவ்வொருவரும் அவருடைய இதயத்திற்கு நெருக்கமான கடவுளின் பெயரை உச்சரிக்க முழு சுதந்திரம் உள்ளது. அது அல்லாவாக, பர்வர்திகாராக, ராமராக, கிருஷ்ணராக இருக்கலாம், அல்லது வெறுமனே கடவுளாகவும் இருக்கலாம். ஆச்சாரமான மதப் பாரம்பரியத்தில்** (ஷாரியத் - SHARIAT) **இந்த மோதல்போக்குகள் அனைத்தும் உள்ளன; ஆன்மீகப் பாதையில்** (தாரிக்கத் - TARIQAT) **அனைத்தும் சுத்தமாக விலக்கப்பட்டுவிட்டன, மேலும் கடவுள் நிலையை எய்தும் இறை ஞான பாதையில்** (மாரே:பத் - MAREFAT) **ஒருவரை மட்டுமே பார்க்கும் பார்வை உள்ளது; அதுவே ஏக இறைவன் எனும் உண்மைப்பொருள். நீங்கள் இதற்கு உடன்படவில்லை என்றாலும் பரவாயில்லை, ஆனால் உங்கள் இதயங்களை மட்டும் சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள்."**

பாபா இவ்வாறு கூறி முடித்தார், **"நான் :பிரான்சிஸிடம் ஒரு செய்தியை எடுத்துரைத்தேன்; அது தட்டச்சு செய்த பின்னர், அனைத்து குழுத் தலைவர்களுக்கும், முக்கிய பணியாளர்களுக்கும் அனுப்பப்பட வேண்டும்."**

அப்போது அங்கிருந்தவர்களில், ஆண் உறுப்பினர்கள் ஒவ்வொருவராக முன்னோக்கிச் சென்று, பாபாவின் முத்தங்களை இரு கன்னங்களிலும் பெற்றுக்கொண்டனர். அதைத் தொடர்ந்து, பெண்மணிகள், பாபா விரும்பியபடி அவரது கைகளைத் தொட்டு முத்தமிட்டு, பின்னர் அவரது பாதங்களைத்

தொட்டனர். அஹமதுநகரிலிருந்து பிரத்யேகமாக ஏற்பாடு செய்யப்பட்ட பஜ்ஜிகளால் நிரம்பிய கூடை ஒன்று, பாபாவின் அருகிலிருந்த சிறிய மர நாற்காலியில் வைக்கப்பட்டது. பாபா அதைப் பார்த்து, அவற்றை யார் தயார் செய்தார்கள் என்று கேட்டார். பஜ்ஜியை உண்ட பிறகு தண்ணீர் அருந்தாமல், அங்குத் தயாராக இருந்த தேநீரை அருந்துமாறு அவர் கூடியிருந்த அனைவருக்கும் தெரிவித்தார். சில நிமிடங்களுக்குப் பின்னர், அவரது விரல்கள் அசையவே, பணியில் கவனம் செலுத்திய பாபா, ஒவ்வொருவருக்கும் காய்ந்த இலைத் தட்டில் வைக்கப்பட்டிருந்த பிரசாதத்தை வழங்கினார். அனைவரும் திருப்திகரமாக உண்ணும் அளவுக்கு பஜ்ஜியுடன் தேநீரும் வழங்கப்பட்டது.

பாபா அவர்களை மீண்டும் மண்டபத்திற்கு அழைத்து, ஐந்து நிமிடங்களில் கலைந்து செல்லுமாறு கேட்டுக்கொண்டார். அவர்கள் புறப்பட்ட வேளையில், பாபா அனைவரையும் திரும்ப அழைத்து, தோட்டத்திற்குச் சென்று, காக்காவிற்கு, தண்ணீர் இல்லாமல் தோட்டத்தைப் பராமரிக்கும் தந்திரம் தெரியும் என்று கூறினார். கடந்த இரண்டு மாதங்களாக அஹமதுநகரில் மழை பொழியவில்லை; மேலும், மெஹராஸாத்தில் மலர்ந்திருந்த பூக்களின் பசுமை மற்றும் அழகைப் பார்ப்பது உண்மையிலேயே கவனத்தை ஈர்க்கும் வகையில் வியப்பூட்டுவதாக இருந்தது. பாபா கூட்டத்தை ஒரு சுற்றுப் பாதையில் அழைத்துச் சென்று, முன் வாயில் வழியாக வெளியே வந்தார். காலை 10:15 மணிக்கு, அனைவரும் விடைபெற்றுச் சென்றனர்.

மையக் குழுத் தலைவர்களுக்கு பாபா கூறிய செய்தி பின்வருமாறு:

1959 **ஆகஸ்ட் 14 முதல் அக்டோபர் இறுதி வரை, மாயா, எனக்கு எதிராக எல்லாவற்றையும் செய்ய முயற்சிப்பாள். உண்மையில், இல்லாத ஒன்றை இருப்பதுபோலக் காட்சியளிக்கச் செய்யும் வித்தகி. எனது உடல்நிலை, உடல், ஆற்றல், வார்த்தைகள், வாக்குறுதிகள் உட்பட அனைத்தும் எனக்கு எதிராகத் தோன்றும் வகையில், என் மீதான என் அன்பர்களின் நம்பிக்கையை சோதிக்கும் விதத்தில், ஒவ்வொன்றையும் சித்தரிக்கும் தலைசிறந்த வித்தைக்காரி. மாயாவிற்கு எதிராகச் செல்ல முடியாத ஒரே விஷயம் எனது பணி; ஏனெனில், மாயாவே எனது பணியின் முடிவுகளைக் கொண்டுவருவதற்கான ஊடகமாகும்.**

மாயா எனது பணியை நிறைவேற்றுவதற்கான கருவியாக இருப்பதால், இந்தப் பணியின் தலைசிறந்த முடிவுகளைக் கொண்டுவருவதற்கு, அது தன்னால் முடிந்த அனைத்தையும் செய்வது இயற்கையானது. மாயா, எதுவுமே இல்லாத நிலையில் மட்டுமே உளதாயிருப்பதன் காரணமாக, இறுதியில் ஏக இறைவன் எனும் ஒரே உண்மைப்பொருளுக்கு வழி வகுக்கும். அதனால், கடவுள் தம்முடைய முழு மகிமையில் வெளிப்படுவார்.

மாயா என்பது எல்லையில்லா இறைவனின் எல்லையற்ற நிழல். ஒரு ஒப்புமையைப் பயன்படுத்துவதானால், சூரியன் அடிவானத்திற்கு மேல்

தோன்றும் போது, எந்த ஒரு பொருளின் நிழலானதும், அந்தப் பொருளை விடப் பெரிதாகத் தோன்றும். ஆனால் சூரியன் நேரடியாக தலைக்கு மேல் இருக்கும் போது, நிழல் மறைந்து, அந்தப் பொருள் காலடியில் தவழ்கிறது. ஆகவே, எனது தற்போதைய உதவியற்ற மற்றும் அவமானத்தின் காலகட்டத்தில், சூரியனின் கதிர்கள் மங்கலாகவும் பலவீனமாகவும் தோன்றும் வேளையில், அது நிழலை உருவாக்குவதை விட, நிழல் பெரிதாகவும் சக்திவாய்ந்ததாகவும் தோன்றச் செய்து, எல்லா அளவிலும் மிகையாகத் தோற்றமளிக்கிறது.

ஆனால், ஏக இறைவன் (சூரியன்) அவரது வெளிப்பாட்டின் போது, அதாவது உச்சநிலையில் இருக்கும்போது, மாயா (நிழல்) மறைந்து, சூரியனின் கதிர்களின் முழு மற்றும் நேரடி சக்தியின் கீழ், கிட்டத்தட்ட ஒன்றுமில்லாததாக, சக்தியற்றதாக மாறிவிடுகிறது. அறியாமை மற்றும் இருளின் சக்திகள் மறைந்து, இறைவனின் வெளிப்பாட்டின் மகிமையில் இது மாயாவின் மீதான வெற்றியாகத் திகழும்.

ஒரு தனிநபராக உங்களுக்கே இந்த ஒப்புமையைப் பயன்படுத்துவதன் மூலம், சூரியனை (இறைவனை) நோக்கி உங்கள் முகத்தைத் திருப்பும்போது, உங்கள் நிழல் (மாயா) உங்களுக்குப் பின்னால் உள்ளது; அவ்வண்ணம் மாயா உளதாயிருந்தாலும், அதற்கு உங்கள் மீது அதிகாரம் எதுவும் இல்லை. ஆனால் நீங்கள் சூரியனுக்கு எதிராக முதுகைத் திருப்பும்போது, உங்கள் நிழலை உங்களுக்கு முன்னால் சுமந்துகொண்டு, அதன் விழிப்புணர்வைத் தொடர்ந்து அறிந்திருப்பீர்கள். எனவே, உங்களால் உங்கள் நிழலை அகற்ற முடியாவிட்டாலும், உங்கள் நிழலைப் புறக்கணித்து, சூரியனை நோக்கித் திரும்பினால், இறைவனின் முழுத் தோற்றமும் மகிமையும் இருக்கும் தருணத்தில், உங்கள் நிழல் என்றென்றும் மறைந்துவிடும்.

என் அன்பர்கள் அனைவரும் மாயாவின் தந்திரங்களுக்கு எதிராக நின்று, தம்மைப் பாதுகாத்து, எனது மேலங்கியை (தாமனை) உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

1959 ஆகஸ்ட் 14 வெள்ளிக்கிழமை முதல், பாபாவின் பணியின் 'மிக முக்கியமான காலகட்டம்' தொடங்கியது. பாபா, கைக்கோபாத்தின் அறைக்குள் தினமும் காலை 8:00 முதல் 8:30 வரை அவருடன் பணிபுரிந்தார். மெஹராஸாத்தின் எல்லைக்குள் எவரும் நுழையவோ அதிலிருந்து வெளியேறவோ கூடாது.

பாபா சுட்டிக்காட்டியபடி அவர், எரச், ஃபிரான்சிஸ் இருவருக்கும் மேலதிகமான உத்தரவுகளை வழங்கினார். தினசரி இரவு 7:00 மணி முதல் காலை 7:00 மணி வரை இருவரும் மௌனம் காத்தனர். இரவு கண்காணிப்புப் பணி இப்போது நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது:

பாவ் கல்சூரி - மாலை 5:00 முதல் இரவு 11:00 மணி வரை.

விஷ்ணு - இரவு 11:00 முதல் நள்ளிரவு 1:30 வரை.
பெண்டு - நள்ளிரவு 1:30 முதல் காலை 4 மணி வரை.
ரானோ - காலை 4:00 மணி முதல் 6:00 மணி வரை.

1959 ஆகஸ்ட் 15 அன்று, மெஹராஸாத்தில் கிணற்றிலிருந்து நீரிறைக்கும் விசைக்குழாய் கருவியை சரிசெய்ய பாதிரி அழைக்கப்பட்டார். அன்று ஜால்பாயும் பூனாவிலிருந்து ஷெரூவுடன் வந்தார். அன்றைய தினம் மாலை, மண்டலியின் முன்னிலையில், பாபா ஒரு காத்தாடியை பறக்கவிட்டபோது, மண்டலியும் மாறி மாறி அதில் பங்கெடுத்தனர். இரண்டு நாட்களுக்குப் பிறகு, பாபா மீண்டும் அதைச் செய்தார்; மேலும், சிறிது நேரம் கிரிக்கெட் விளையாடி சில ஓட்டங்களையும் குவித்தார். 18ஆம் தேதி மண்டலியுடன் பாபா, 'லாகோரி' (LAGORI) என்றழைக்கப்படும் ஏழு ஓடுகள் விளையாட்டை விளையாடினார்.

ஆகஸ்ட் 16ஆம் தேதி, பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்: **"மனிதனில் உளதாயிருக்கும் கடவுள், அப்பாற்பட்ட நிலையில்** (BEYOND STATE OF GOD) **இருக்கும் கடவுளுடன் ஒன்றிணையும் போது, மனிதனில் உளதாயிருக்கும் கடவுள் மனித-கடவுளாக** (MAN-GOD) **மாறுகிறார்.**

"கடவுளுக்கு அப்பாற்பட்ட நிலையில் இருக்கும் கடவுள், மனிதனில் கடவுளாக மாறும்போது, அப்பாற்பட்ட கடவுள், இறை-மனிதனாக (GOD-MAN) **மாறுகிறார்."**

அடுத்த நாள், பாபா மண்டலியிடம், **"கடவுளைக் கண்டுபிடிப்பது ஏன் அந்த அளவுக்கு சாத்தியமற்றதாக உள்ளது?"** என்று கேட்டு, **"ஏனெனில், நீங்கள் இழக்காத ஒன்றைத் தேடிக்கொண்டிருப்பதே அதற்குக் காரணம்"** என்று பதிலளித்தார்.

18ஆம் தேதி, பாபா மற்றுமொரு கேள்வியை எழுப்பினார்: **"கடவுள் ஒருவரே எனும்போது, 'பல' என்றால் என்ன?"**

எரச் கூறினார், "அது கடவுள் அல்லாததாக இருக்க வேண்டும்."

பாபா வினவினார்: **"எல்லாமே கடவுள் எனும்போது, கடவுள் அல்லாதது எது?"**

"கடவுளின் நிழல் கடவுளாக இருக்க முடியாது" என்று எரச் பதிலளித்தார்.

பாபா கூறினார், **"எனவே, கடவுள் அல்ல - கடவுளின் நிழலே மாயா. கடவுள் எல்லையற்றவராக இருப்பது போல, மாயா - கடவுளின் நிழல் - எல்லையற்றது. கடவுள் ஒன்றானவராக இருப்பது போல், அவரின் நிழலான மாயாவும் ஒன்றானது. அறியாமையின் அடிப்படையாக இருப்பதால், மாயா ஒன்றுக்கு மேலாக இருக்க முடியாது. எனவே கடவுள் ஒருவராக இருப்பது போல, மாயாவும் ஒன்று என்றால், 'பல' என்பது என்ன?"**

பாபா தொடர்ந்தார், **"கடவுள் பிரிக்க முடியாத அளவிறுதியற்றவர்; மாயா வகுக்கக்கூடிய விதத்தில் அளவிறுதியற்றது. ஆகையால், கடவுள்**

அளவிறுதியற்ற தன்மையுடன் ஒன்றானவர்; அதே வேளையில், மாயாவும் ஒன்றாகவே இருந்து, வகுபடும் தன்மையை கொண்டுள்ளது.”

அதே நாளில், பாபா, ஃபிரான்சிஸுக்கு நினைவூட்டினார், **“நான் கடவுள் என்பதை மறந்துவிடாதீர்கள். இரண்டரை மாதங்களுக்குப் பிறகு, முழு உலகமும் அதைக் கண்டுகொள்ளும்.”** அவர் மேலும் கூறுகையில், **“மிகக் கடினமான நாட்கள் வரவுள்ளன.”** மறுநாள் முதல், செய்தித்தாள்களின் தலைப்புச் செய்திகளையும், கட்டுரைகளையும் தனக்கு வாசிப்பதை நிறுத்த வேண்டும் என்று பாபா அறிவுறுத்தினார்.

1959 ஆகஸ்ட் 22 அன்று, பாபா மண்டலியிடம், **“இதன் அர்த்தம் என்ன என்று கேட்டார்: ‘என்னை அவமானத்தில் மூழ்க விடுங்கள்; அனுதாபத்துடன் அல்லாமல், புரிந்து கொள்வதன் மூலம் என்னை பாதுகாக்கவும். கசப்பாக இல்லாமல் இனிப்பாக ஆக்குங்கள்.’ இதற்கு என்ன அர்த்தம் என்று யூகிக்கவும்”** என்று கூறி பாபா பதிலளிக்கவில்லை.

பாபா, தமது இல்லத்திலிருந்து ஆண்களின் குடியிருப்பு வரை, உதவியின்றி நடக்க முடிந்தாலும், அவரது உடல்நிலை சீராக இல்லை. அவர் கைக்கோபாத்தின் அறையிலிருந்து முற்றிலும் சோர்வடைந்த நிலையில் திரும்பி வருவது வழக்கம். மண்டபத்திற்குள் நுழைந்ததும், கண்களை மூடிக்கொண்டு சில நிமிடங்கள் நாற்காலியில் சாய்ந்து, அவருக்கு முன்னால் வைக்கப்பட்ட ஒரு குறுகிய மூங்கில் இருக்கையில் தனது கால்களை நீட்டி, ஓய்வெடுத்தார்.

ஒரு நாள், பணி முடிந்து மிகவும் சோர்வாக காணப்பட்ட பாபா, **“நான் எல்லையற்ற சோர்வாக இருப்பது மட்டுமின்றி, சோர்வாக இருப்பதில் எல்லையற்ற சோர்வாக இருக்கிறேன். ஆனால் எனது பணி செய்யப்பட வேண்டும்; செய்யப்படும்”** என்று குறிப்பிட்டார்.

ஒருமுறை பாபா மண்டலியுடன் குருபிரசாத்தில் அமர்ந்திருந்தபோது, ஸோமனிடம் மராட்டி மொழியில் எழுதுமாறு கூறிய நாடகத்தைக் குறித்து எடுத்துரைத்தார். விவாதத்தைக் குறுக்கிட்டு மெஹர்தாஸ், “பாபா, இந்தியிலும் ஒரு நாடகம் எழுதப்பட வேண்டும்” என்று உணர்ச்சி பொங்க கூறினார்.

பாபா அதற்கு இணக்கம் தெரிவித்து, **“ஆமாம், எவரேனும் இந்தி மொழியில் எழுத வேண்டும், ஆனால் அதை யார் செய்வார்?”** என வினவி, சில கணங்கள் அமைதியாக இருந்து, பாவ் கல்சூரியை நோக்கி, **“நீங்கள் ஏன் எழுதக்கூடாது?”** என்று கேட்டார்.

“எனக்கு நாடகங்களைப் பற்றி எதுவும் தெரியாது,” பாவ் கல்சூரி எதிர்ப்புத் தெரிவித்தார். “நான் எழுத்தாளர் அல்ல.”

அதற்கு பாபா, **“இது எனது உத்தரவு அல்ல, ஆனால் முயற்சி செய்யுங்கள்”** என்றார்.

பாபா ‘இது எனது உத்தரவு அல்ல’ என்று கூறியதைக் கேட்டு, பாவ் கல்சூரி நிம்மதி அடைந்தார்; ஆனால் மாலையில், பாபாவின் அறைக்கு இரவு

கண்காணிப்புக்குச் சென்றபோது அவர், பாவ் கல்சூரியிடம், **"எத்தனை பக்கங்கள் எழுதினீர்கள்?"** என்று கேட்டார்.

ஆச்சரியமடைந்த பாவ் கல்சூரி, "ஒன்று கூட இல்லை" என்று பதிலளித்தார்.

"ஏன் இல்லை?"

"இது உங்கள் உத்தரவு அல்ல, பாபா."

"ஆமாம், இது என்னுடைய உத்தரவு அல்ல - ஆனால் முயற்சி செய்யச் சொன்னேன் அல்லவா? அதுதான் என் உத்தரவு."

எனவே பாவ் கல்சூரி எழுதத் தொடங்கினார். அவர் பகலில் எழுதியதை, பாவ் கல்சூரி, பாபாவின் அறைக்கு வந்த வேளையில், சில பக்கங்களை சத்தமாக வாசிக்குமாறு பாபா கேட்டுக்கொண்டார். பாபா அதற்கு **'தெய்வீகத் திருவிளையாடல்'** (திவ்ய லீலா) என்று பெயர் சூட்டினார். வாசிக்கும் போது, அது மிகவும் நன்றாக இல்லை என்றாலும், பாபா, **"அபாரம்! அற்புதம்!"** என்று பாராட்டினார்.

இந்த நேரத்தில் இரவு நேர கண்காணிப்பின் போது, இரண்டு சம்பவங்கள் நிகழ்ந்தன. பாவ் கல்சூரியின் உடல்நிலை மோசமடைந்தது. பயங்கரமான மூல நோயால் பாதிக்கப்பட்டிருந்ததால், அவரால் நீண்ட நேரம் அமர முடியவில்லை. தொடர்ந்து துடிதுடிக்கும் வலியும், சீழ் வெளியேற்றமும் இருந்தது.

ஒரு நாள் இரவு, அவர் பாபாவின் அறைக்குள் நுழைந்த அந்த கணத்தில், பாபா அவரது கால்களை அழுத்துமாறு கேட்டுக்கொண்டார். பாவ் கல்சூரி, படுக்கையின் அருகில் ஒரு குறுகிய இருக்கையில் அமர, பாபா படுக்கையில் பக்கவாட்டில் படுத்துக் கொண்டார். பாவ் கல்சூரி மிகையாக வலியை உணர்ந்தாலும், பாபாவின் காலை அழுத்தத் தொடங்கினார். படிப்படியாக, பாபா படுக்கையின் மறுபக்கத்திற்கு நகர்ந்த வேளையில், பாவ் கல்சூரி தொடர்ந்து அழுத்த வேண்டியிருந்தது. பாபா எவ்வளவு தூரம் நகர்ந்தாரோ, அந்த அளவுக்கு அதிகமாக அழுத்தத்தையும் வலியையும் பாவ் கல்சூரி உணர்ந்தார்.

பாபா முற்றிலும் படுக்கையின் மறுபுற விளிம்பில் இருந்தபோது, பாவ் கல்சூரி தனது இருக்கையை எடுத்துக்கொண்டு மறுபக்கம் சென்றார். பாபா அதை விரும்பாமல், படிப்படியாக அவர் படுக்கைக்கு குறுக்கே நகர்ந்தார். மீண்டும், பாவ் கல்சூரி இருக்கையை பழைய இடத்திற்கு எடுத்துச் சென்றார். இறுதியாக, பாபா படுக்கையின் நடுவில் தம்மை நிலைநிறுத்திக் கொண்டபோது, பாவ் கல்சூரி, மேலும் குனிந்து, நீண்ட நேரம் பாபாவின் உடலை அழுத்த வேண்டியிருந்தது, இதனால் மலக்குடல் வலி மிகவும் தீவிரமாக உணரப்பட்டது.

பாபா இந்த நிலையிலும் விட்டபாடில்லை. **"மேலும் அதிகமாக அழுத்தத்தைக் கொடுங்கள். நீங்கள் என்ன தூங்குகிறீர்களா? இன்று உங்களுக்கு சக்தி இல்லையா? இரவு உணவு உண்ணவில்லையா?"** என்று பாவ் கல்சூரியிடம் கேட்டுக்கொண்டே இருந்தார்.

இவ்வாறு இந்தப் பணி நான்கு மணி நேரம் நீடித்தது, பாபா எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்துக் கொண்டிருந்தார். பாவ் கல்சூரி தொடர்ந்து பாபாவின் கால்களை அழுத்திக் கொண்டிருக்க, ஒருமுறை கூட பாபா எழுந்து அமரவில்லை.

இந்த நிலையில், பாவ் கல்சூரியின் மனதில் இந்த எண்ணங்கள் அலை மோதின: "மக்கள் பாபாவை கருணையின் கடல் என்று அழைக்கின்றனர், ஆனால் அவர் கொடுமையின் பெருங்கடல்! எவ்வளவு கொடூரமான மனிதனாக ஒருவர் இருந்தாலும், அவர், பாபாவை விட கொடூரமாக இருக்க முடியாது! நான் மூல நோயால் அவஸ்தை அடைவதை பாபா அறிவார். இருந்தும், அவர் என்னை மேலும் வேதனைப்படுத்துவதற்காக வேண்டுமென்றே இதைச் செய்கிறார். ஒரு சாதாரண மனிதர் கூட என் மீது பரிதாபப்பட்டிருப்பார், ஆனால் அவர் கடவுளாக இருந்தும், என்னைக் கருத்தில் கொள்ளவில்லை."

அந்த நேரத்தில், பாபா கைகளைத்தட்டி, **"நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"** என்று கேட்டார்.

"ஒன்றுமில்லை," பாவ் கல்சூரி கூறினார்.

பாபா அவரைக் கடிந்துகொண்டார், **"இதைச் செய்வதன் மூலம் நீங்கள் என்னைக் கடமைக்குள்ளாக்குகிறீர்களா? மாறாக, எனக்கு சேவை செய்ய இந்த வாய்ப்பை நான் உங்களுக்கு வழங்குகிறேன். நீங்கள் எளிதில் அஞ்சி நடுங்குகிறீர்கள். இது ஒன்றுமே இல்லை! உங்களை நான் துண்டு துண்டாக வெட்டினாலும், நீங்கள் குறை கூறாமல் பொறுத்துக்கொள்ள வேண்டும், ஒரு சிணுங்கலின் ஒலி கூட உங்கள் உதடுகளிலிருந்து தப்பிக்கக் கூடாது.**

"இதுதான் அன்பு. இதுவே சேவை. என் உண்மையான கருணை உங்களைத் துண்டு துண்டாக வெட்டுவதில்தான் உள்ளது!

"இது ஒன்றும் இல்லை, ஆரம்பம் கூட இல்லை!" அவர் தொடர்ந்தார், **"அப்போது கூட, நீங்கள் புகார் செய்கிறீர்கள். நீங்கள் நினைக்கிறீர்கள்: 'நான் எவ்வளவு பெரிய சேவை செய்கிறேன்!'**

"உங்கள் சேவையில் என்ன இருக்கிறது? அது இன்னும் தொடங்கவில்லை, நான் உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் உண்மையிலேயே எனக்கு சேவை செய்வீர்களானால், உங்களைப் பற்றிய எண்ணம் இருக்காது. உங்கள் சிறிய பிரச்சினையைப் பற்றி நீங்கள் நினைக்கும் போது, நீங்கள் எனக்கு எப்படி சேவை செய்வீர்கள்? உங்கள் வேதனைக்குத்தான் சேவை செய்கிறீர்கள், எனக்கு அல்ல! இது எனது கொடுமையல்ல, எனது கருணையே."

பாபாவின் வார்த்தைகள், உண்மையான சேவையின் அர்த்தத்தை பாவ் கல்சூரிக்கு உணர்த்தியது, அவர் தனது தவறான எண்ணங்களுக்காக வருத்தப்பட மட்டும்தான் முடிந்தது. அதன் பின்பு பாபா எழுந்து அமர்ந்து, பாவ் கல்சூரிக்கு வலி நிவாரணி மாத்திரையைக் கொடுத்தார். அடுத்த நாள் மண்டலி மண்டபத்தில் பாபா, கோஹெரிடம் பாவ் கல்சூரிக்கு ஒரு மயக்க ஊசி போடுமாறு

அறிவுறுத்தினார். இது ஒவ்வொரு வாரமும் நான்கு அல்லது ஐந்து முறை மீண்டும் மீண்டும் செய்யப்பட்டது.

இரவுக் கண்காணிப்பில் நடந்த மற்றுமொரு சம்பவம் பாவ் கல்சூரிக்கு அதே மதிப்புமிக்க பாடத்தைக் கற்றுத் தந்தது. ஒரு நாள் இரவு, பாபா பசியாக இருப்பதாகக் கூறினார். இது அசாதாரணமானது அல்ல, சாக்லேட்டுகள் அல்லது இதர தின்பண்டங்கள் அவரது படுக்கையறையில் எப்போதும் வைக்கப்பட்டன. பாவ் கல்சூரி ஒரு டின் சாக்லேட்டைக் கொண்டு வந்து, அதைத் திறந்து, டின்னுக்குப் பக்கத்தில் படுக்கையின் விளிம்பில் மூடியை வைத்தார். அப்போது மெஹராஸாத்தில் மின்சாரம் இல்லாததால் அறைக்குள் இருட்டாக இருந்தது. ஜன்னலுக்கு வெளியே இருந்த மண்ணெண்ணெய் விளக்கிலிருந்துதான் (பாபாவின் சைகைகளைப் படிக்கப் பயன்படுத்தப்படும் மின்சார ஒளி விளக்கைத் தவிர) வெளிச்சம் வந்தது. திரை மூடப்பட்டிருந்ததால், பாவ் கல்சூரி அதைத் திறக்கச் சென்றார். அதைத் திறக்கும்போதே பாபா, அந்த டின்னைப் பார்க்காமல் சாக்லேட்டைக் கையிலெடுத்தார். டின்னில் கையை வைத்தபோது, மூடி தவறுதலாக படுக்கையிலிருந்து வீசி எறியப்பட்டு பாபாவின் முழங்காலில் விழுந்தது.

சீற்றமடைந்த பாபா, **"ஓ, எனது காலில் அந்த மூடி எவ்வளவு கடினமாக விழுந்தது. பயங்கரமாக வலிக்கிறது! எனக்கு சேவை செய்யவா அல்லது எனக்கு வலியை ஏற்படுத்தவா இங்கு வந்துள்ளீர்கள்? எவ்வளவு கவனக்குறைவாக இருக்கிறீர்கள்"** என்று பாவ் கல்சூரியைத் திட்டினார்.

பாவ் கல்சூரி அச்சத்தில் தனது தவறை உணர்ந்த போது, பாபா தொடர்ந்து கூறினார், **"இவ்வளவு வலியுடன் என்னால் இப்போது தூங்க முடியாது, என்னால் தாங்க முடியவில்லை!"**

பாபா சாக்லேட் எதுவும் எடுக்கவில்லை, பாவ் கல்சூரியை அரை மணி நேரம் தொடர்ந்து திட்டிக்கொண்டே இருந்தார்: **"தீய சகுனம் படைத்தவர்... பைத்தியம்... முட்டாள்... கவனக்குறைவான மூடர்... புத்தியற்றவர்,"** என்று கூறி இவ்வாறு முடித்தார், **"நீங்களே என் எதிரி; என் உயிரைப் பறிக்க வந்துள்ளீர்கள்!"**

அப்போது பாபா, **"என்னால் தூங்க முடியாது என்று நினைக்கிறேன், ஆனால் முயற்சி செய்கிறேன்"** என்றார். அவர் ஓய்வெடுக்க படுக்கையில் சாய்ந்த ஐந்தே நிமிடங்களில் மீண்டும் அமர்ந்து, சைகையால் தெரிவித்தார்: **"எனது காலில் வலி இருக்கிறது, என்னால் அதைத் தாங்க முடியவில்லை, என்னால் இப்போது தூங்கவும் முடியவில்லை, ஏன் இவ்வளவு கவனக்குறைவாக இருக்கிறீர்கள்? என்ன வகையான சேவையை நீங்கள் எனக்கு வழங்குகிறீர்கள்? நீங்கள் உண்மையில் என்னைக் கொல்கிறீர்கள்!"**

பாவ் கல்சூரி மன வருத்தத்தில் அமைதியாக இருந்தார். பாபா, **"நான் மீண்டும் முயற்சி செய்கிறேன், ஆனால் என்னால் தூங்க முடியாது என்று எனக்குத் தோன்றுகிறது"** என்று சைகை செய்து, அவர் படுக்கையில் சாய்ந்து கொண்டார்.

ஆனால் மீண்டும் ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு, பாபா எழுந்து அமர்ந்து முறையிடத் தொடங்கினார், **“இது பயங்கரமானது, நான் உங்களுக்குச் சொல்கிறேன், கொடுமையானது! எனது கால் மிகவும் வலிக்கிறது, என்னால் இப்போது தாங்கமுடியவில்லை. என்னால் தூங்கவும் முடியாது!**

“நீங்கள் என்னைக் கொல்ல இங்கே வந்துள்ளீர்களா? எனது துயரத்தைப் பற்றி உங்களுக்கு வருத்தம் இல்லையா? குறைந்தபட்சம் உங்கள் கவனக்குறைவுக்காக மனம் வருந்த வேண்டாமா? உங்கள் இதயம் என்ன கல்லால் ஆனதா? என்னைத் துன்புறுத்துவதற்காகவே இரவுக் கண்காணிப்புப் பணியைச் செய்கிறீர்களா? வெட்கமே இல்லை!” அவர் சுமார் ஒரு மணி நேரம் இந்த வழியில் வசைபாடிக் கொண்டிருந்தார்.

பாவ் கல்சூரி பரிதாபமாக உணர்ந்தார், ஆனால் அந்த மூடி மிகவும் மெல்லியதாக இருந்ததால், அதிக அளவில் காயப்படுத்த முடியாது. பாவ் கல்சூரியின் மனதில் இந்த எண்ணம் அலைமோதவே, அவர் சிந்திக்கத் தொடங்கினார்: “உலகின் எல்லையற்ற சுமையைத் தாங்குவதாகவும், எல்லையற்ற துன்பங்களை அனுபவிப்பதாகவும் பாபா கூறுகிறார். இவ்வளவு சிறிய, நடைமுறையில் குறிப்பிடத்தக்கதாக இல்லாத காயத்தால் எப்படி இவ்வளவு வலியை அவரால் உணர முடிகிறது? ஒரு சாதாரண மனிதன் கூட அதை உணர்ந்திருக்க முடியாது. அது ஒன்றுமில்லை!”

சிறிது நேரம் கழித்து, பாபா மீண்டும் எழுந்து அமர்ந்தார். **“என்னைத் துன்புறுத்துவதால் உங்களுக்கு என்ன லாபம்?”** அவர் கேட்டார். **“பதில் கூறுங்கள். நான் மிகவும் சிரமப்படுகிறேன், அதை ஒரு துளி கூட நீங்கள் உணரவில்லை. என்ன வெட்கமற்ற மனிதர் நீங்கள்! இப்போது எனக்கு உங்கள் முகத்தைப் பார்க்கக்கூடப் பிடிக்கவில்லை! என் உயிரைப் பறிக்க வந்துள்ளீர்கள்!”**

பாபா படுக்கையில் சாய்ந்து கொண்டார், பாவ் கல்சூரியின் மனம் தொடர்ந்து சிந்தனையில் ஆழ்ந்தது: “அவரால் இந்த அளவுக்குத் தாங்க முடியாவிட்டால், அவர் கூறுவது போல், உலகளாவிய துன்பங்களை அவரால் எப்படித் தாங்கிக்கொள்ள முடியும்? இவை அனைத்தும் வெறும் வார்த்தைகள், வெறும் தத்துவம்!”

பாபா தொடர்ந்து துன்பப்படுவதைப் பார்த்தார். இரண்டாவது வாகன விபத்துக்குப் பிறகு, பலத்த காயம் ஏற்பட்ட போதிலும், பாபாவின் உதடுகளிலிருந்து எந்த ஒரு சத்தமும் வெளிவரவில்லை என்பதை அவர் கவனித்திருந்தார். ஆனாலும், மனித மனம் இப்படித்தான் இருக்கிறது: சிறு சாக்குப்போக்கிலும் அது அங்கும் இங்கும் அலைகிறது. பாவ் கல்சூரி அனைத்தையும் மறந்து, பாபாவின் தாங்க முடியாத வேதனையைக் குறித்து கேள்வி கேட்கத் தொடங்கினார்.

பாபா எழுந்து, **“இங்கே வாருங்கள், என் அருகே அமருங்கள்”** என்று சைகையால் அழைத்தார்.

பாவ் கல்சூரி நின்று கொண்டிருந்தார், அவர் வருத்தத்தில் இருந்ததால், "நான் இங்கேயே நன்றாக இருக்கிறேன்" என்றார்.

"எனக்குக் கீழ்ப்படியுங்கள்."

பாவ் கல்சூரி அவர் அருகில் அமர்ந்ததும், பாபா, **"நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் என்ன நினைத்துக் கொண்டிருந்தீர்கள்?"** என்று கேட்டார்.

"ஒன்றுமில்லை."

"என்னை நீங்கள், என்னவாக நினைக்கிறீர்கள்? சொல்லுங்கள்."

"நீங்கள் எனது குருநாதர்."

"நீங்கள்?"

"உங்கள் அடிமை."

"அடிமையின் கடமை என்ன?"

"குருநாதரை மகிழ்விப்பது."

"நீங்கள் என்னை மகிழச் செய்கிறீர்களா? நீங்கள் என் அடிமையாக இருந்தால், எனக்கு சேவை செய்வது உங்கள் கடமை. நீங்கள் என்னை ஒரு மென்மையான மலரைப் போல நடத்த வேண்டும். இந்தப் பூவை அந்த மூடி தாக்கியபோது என்ன நடந்தது என்று உங்களுக்குத் தெரியுமா? அதன் இதழ்கள் நசுக்கப்பட்டது, காயத்தால் அல்ல, உங்கள் கவனக்குறைவால்.

"நீங்கள் என்னை குருநாதராக ஏற்றுக்கொண்ட அதே வேளையில், நானும் உங்களை என் அடிமையாக ஏற்றுக்கொண்டதால், அந்த அடிமை, தனது கடமையை சரியாகச் செய்வதை ஊர்ஜிதப்படுத்துவது குருநாதரின் கடமை. நான் உங்களை என் அடிமையாக ஏற்றுக்கொண்டதால், நீங்கள் சரியாக சேவை செய்து என்னை மகிழ்விக்க நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

"இமயமலை எனது தலையில் விழுந்தாலும், அது எனக்கு என்னவாக இருக்கும்? ஒன்றுமில்லை. எவரேனும் என் மீது கல்லை வீசினால், இன்று இரவு இங்கே நடந்ததால் நான் காயப்பட்ட அளவுக்குக் கூட வலி இருந்திருக்காது. எனக்கு ஏன் இந்த வலி? ஏனெனில் என் அடிமையின் கவனக்குறைவு ஒன்றுதான் இதற்குக் காரணம். நான் உங்களை என் அடிமையாக ஏற்றுக்கொண்டதால், உங்களுடைய சிறிய கவனக்குறைவையும் என்னால் தாங்க முடியவில்லை.

"ஆனால் நீங்கள் என்னை அதிருப்தி படுத்திவிட்டீர்கள் என்று நினைக்காமல், 'அவரால் எப்படி எல்லையற்ற துன்பங்களைத் தாங்க முடியும்?' என்ற எண்ணம் மட்டுமே உங்கள் மனதில் அலைமோதியது. எனது துன்பத்தைப் பற்றிய சிறிதளவு யோசனையேனும் உங்களுக்கு உள்ளதா? எப்பாடு பட்டேனும் எனக்கு சேவை செய்து, என்னைப் பிரியப்படுத்துவதே உங்களது கடமையே தவிர, இப்படி என் எல்லையற்ற சுமையைப் பற்றி சிந்திப்பது உங்களுக்கு உகந்ததல்ல; இப்படி சிந்திப்பதானால், உங்களை என் அடிமை என்று கூற முடியாது.

“எனவே நினைவில் கொள்ளுங்கள்: என் மீதான உங்கள் அலட்சியம், சொல்லொணாத் துன்பத்தை விட என்னை அதிகம் பாதிக்கிறது, ஏனெனில் என் அடிமையின் சிறிய கவனக்குறைவையும் என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது. நீங்கள் என் அடிமை என்பதால், என்னை ஒரு பூவைப் போல பாதுகாத்து நடந்துகொள்ள வேண்டும்.”

பாவ் கல்சூரி உடனடியாக அமைதியாகி, அவர் தனது எண்ணங்களுக்காக மிகவும் வருந்தினார். இந்தப் பாடத்தை அவருடைய இதயத்தில் ஊடுருவச் செய்ய, பாபா நான்கு மணி நேரம் செலவிட்டார். இது, பாவ் கல்சூரி ஒருபோதும் மறக்க முடியாத பாடமாக இருந்தது. அவதார புருஷரின் கருணை, கற்பனை செய்து பார்க்க முடியாதது. அவர் கருணையின் மொத்த உருவம், அவர் அதை மட்டுமே வழங்குகிறார்.

ஒரு நாள் ஃபிரான்சிஸ், பாபாவிடம் ‘நீலப்பேருந்து, புது வாழ்வு கவிகை வாகனம் இரண்டும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தவை’ என்று கூறி, “எதிர்காலத்தில் மக்கள் அவற்றைக் காட்சிப்பொருளாகப் பார்க்க ஆர்வம் காட்டுவார்கள்” என்றும் அவர் சுட்டிக்காட்டினார். “மேலும் கடுமையான இந்திய காலநிலையில் அவை படிப்படியாகச் சீர்கெடும் என்பதால், அவை முறையாக மீட்டெடுக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்.” இந்தப் பணியை, தானே மேற்கொள்வதாகக் கூறி, பாபாவின் அனுமதியைக் கோரினார் ஃபிரான்சிஸ்.

1959 ஆகஸ்ட் 21 அன்று, பாபா அவருக்கு அனுமதி வழங்கினார்: **“பழுதுபார்ப்புப் பணியைத் தொடங்குங்கள், உங்களுக்குத் தேவையான உதவியைப் பெற்றுக்கொள்ளுங்கள். இங்கு கிடைக்காத பொருட்கள் ஏதேனும் இருந்தால், பஜாரிலிருந்து கொண்டு வரப்படும்.”** இந்தப் பணிக்கு பாபா ரூ.1,000 அனுமதித்தார்.

பாபா இவ்வாறு கருத்துத் தெரிவித்தார், **“ஃபிரான்சிஸ், உங்கள் யோசனை மிகவும் நல்லது. மெஹராவும் அதைப் பாராட்டினார். உங்கள் பணியை தனிப்பட்ட முறையில் ஆய்வு செய்த பின்னர், எனது கருத்துக்களை உங்களுக்கு வழங்குவேன்.”**

பாபா மேலும் கூறினார், **“இன்னும், என்னைக் குறித்து எதுவும் உறுதியாக இல்லை. அடுத்த நான்கு நாட்களில், என் உடல் இங்கு வரலாம் அல்லது வராமலும் இருக்கலாம். நான் உங்களிடையே இருந்தாலும் இல்லாவிடிலும், எனது பணி தொடரும். நானே அந்த மையப்புள்ளி; அதிலிருந்து எல்லையற்ற ஆற்றல் எல்லா திசைகளிலும் பாய்ந்தோடும். நான் ஏதேனும் சில பணிகளைச் செய்து கொண்டிருக்கலாம், அல்லது ஓய்வெடுத்துக் கொண்டிருக்கலாம், நான் சீட்டு விளையாடலாம், அல்லது நகைச்சுவை துணுக்குகளை மொழிந்து கொண்டிருக்கலாம், ஆனால், எனது உலகளாவிய பணி இடையூறு எதுவுமின்றி தொடர்ந்து நடந்துகொண்டிருக்கும்.”**

பாபா ஏழு ஓடுகளின் விளையாட்டைத் தொடங்கிய அவ்வேளையில் பலத்த மழை பொழிந்ததால் அதை நிறுத்தினார்.

தினமும், மெஹர்தாஸ் இயற்றிய சில கவிதைகளை பாபா, அவர் முன்னிலையில் வாசிக்கச் செய்தார். 24ஆம் தேதி அலோபா, பாரசீக மொழியில் ஹஃபீஸின் சில வசனங்களை வாசித்ததைத் தொடர்ந்து, பாபா இவ்வாறு கருத்துரைத்தார், **"ஹஃபீஸின் கவிதைகளின் அமைப்பு, அவரது வார்த்தைகளின் தேர்வு, மொழியின் ஓட்டம் மற்றும் பல விஷயங்களை அவர் மிகக் குறைந்த வார்த்தைகளில் வெளிப்படுத்தும் பாணி, நேரடியாக இதயத்தைத் தொடும் தன்மையுடையது: இவை அனைத்துடன், அவரது கவிதையின் அழகு அசாதாரணமானது."**

ஃபிரான்சிஸை நோக்கி பாபா கூறுகையில், **"உங்களின் கைவண்ணத்தில் உருவான 'இறைவனோடு இணைந்திருங்கள்'** (STAY WITH GOD) **புத்தகம் ஒப்பற்ற ஒரு தொகுப்பாகும். எதிர்காலத்தில் அது மனிதகுலத்தின் இதயங்களில் அதீத தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது உங்களுக்குத் தெரியாது"** என்று குறிப்பிட்டார்.

ஃபிரான்சிஸுக்காக ஹஃபீஸின் சில ஈரடி வரிகளை மொழிபெயர்த்து பாபா கூறினார், **"ஹஃபீஸின் வார்த்தைகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டதும், அதன் சாராம்சத்தின் அசலும், அழகும் மறைந்துவிடும். அந்த மொழிபெயர்ப்பு, கவிஞரின் நோக்கத்தை உண்மையில் வெளிப்படுத்த முடியாது. ஹஃபீஸ் தனது முழு செயல் வன்மையையும், கட்டுப்பாட்டையும் கொண்டிருந்தார். வெகு சிலரே அத்தகைய அதிகாரத்துடன் கவிதைகளை வடிவமைக்க முடியும். அவருடையது ஒரு தத்துவஞானியின் கவிதை அல்ல. இது முற்றிலும் மாறுபட்ட விஷயம்."**

பேச்சின் தலைப்பை மாற்றி, பாபா இவ்வாறு நினைவு கூர்ந்தார்:

எனக்கு ஒரு மாமா (கொடாதத் மாஸா) **இருந்தார், அவருக்கு மீசை இல்லை. அவர் உதடுக்கு மேல் முடி வளரவில்லை. அவருக்கு நன்றாக மீசை வளர்க்க வேண்டும் என்ற ஆசை; மேலும் ஒரு பல்லியை, குறிப்பிட்ட முறையில் எண்ணெயில் கொதிக்கவைத்து, பின்னர் அந்த எண்ணெயை அவரது மேல் உதட்டில் தடவினால், சில நாட்களில் முடி வளர ஆரம்பிக்கும் என்று யாரோ ஒருவர் பரிந்துரைத்தார்.**

பல்லி ஒன்று பிடிக்கப்பட்டது. நான் அவரை சந்திக்கச் சென்றபோது எனது மாமா, அதைக் கொதிக்கும் எண்ணெயில் மூழ்கச்செய்யும் பணியில் இருந்தார். அப்போது எனக்கு பத்து வயது. அவர் செய்ததை நான் விரும்பாததால், பல்லியை எண்ணெயிலிருந்து எடுத்து நான் வெளியே எறிந்தேன். மாமா கோபமடைந்து, ஆத்திரத்தில் எனது கன்னத்தில் அறைந்தார். எனது தந்தை ஷெரியார்ஜி ஒரு வலிமையான மனிதர். மாமா என்னை அறைவதைக் கண்ட அவர், உடனே வந்து அவரை வேகமாக அறைந்தார். மாமா கோபமடைந்தாலும், பின்னர், அவர்களுக்கு இடையே கசப்பான உணர்வுகள் எதுவும் இல்லை.

அதன் பின்னர், எனது மாமா (மும்பை) **பைக்கலாவில் ஒரு தேநீர் கடையை நடத்தி வந்தார். அவர் உரிமையாளராக இருந்ததால், அங்குத் தங்கியிருந்தார். பாபாஜான் எனக்கு அளித்த முத்தத்திற்குப் பிறகு, நான் மும்பைக்குச் சென்றேன். அதிகாலையில் நான் ஒரு பூங்காவில் இருந்த மர இருக்கையில் சில மணி நேரம் அமர்ந்திருப்பதை வழக்கமாகக் கொண்டேன். தேநீர் கடையில் பணியைத் தொடங்கும் முன்பு, மாமா என்னிடம் வழக்கமாக வந்து, எனது கையைப் பிடித்து அவர் தலையில் வைப்பது அனுதினமும் அவரது வாடிக்கையாக இருந்தது. அவர் என்னை மிகவும் நேசித்தார், என் மீது முழு நம்பிக்கை வைத்திருந்தார்.**

ஒருமுறை, நான் அவரிடம் கேட்டேன்: **"நீங்கள் என்னை அறைந்த நாள் உங்களுக்கு நினைவிருக்கிறதா?"** மாமா பதிலளித்தார்: "எனது வாழ்நாளில் ஷெரியாரின் அறையை நான் எப்படி மறக்க முடியும்?"

"உண்மையில், எனது தந்தை மிகவும் வலிமையான மனிதர். என்னை அறைந்ததை சகிக்க முடியாத அளவுக்கு அவர் என்னை நேசித்தார்.

"எனது நெருங்கிய உறவினர்கள் மற்றும் என்னுடன் பள்ளியில் பயின்றவர்கள் அனைவரும் என்னை மிகவும் நேசிக்கிறார்கள்" என்று பாபா கூறி முடித்தார். அதற்குப் பிறகு பாபா, தமது அறைக்குச் சென்று ஓய்வெடுத்தார்.

1959 ஆகஸ்ட் 25 செவ்வாய்க்கிழமை, கைக்கோபாத்துடன் பணிபுரிந்த பிறகு, பாபா மண்டபத்திற்கு வந்தார். மண்டலி அனைவரும் அவருக்கு முன்னால் அமர்ந்தனர். சிறிது நேரம் பாபா கண்களை மூடிக்கொண்டு அமர்ந்த வண்ணம், மூங்கில் இருக்கையில் கால்களை நீட்டி ஓய்வெடுத்தார். அவரது கால்களில் வெப்பத்திற்காக விரிப்பு ஒன்று போர்த்தப்பட்டிருந்தது. இந்த நிலையில் சிறிது நேரம் ஓய்வெடுத்த பிறகு, பாபா ஆண்களிடம் வெளியே செல்லுமாறு சைகையால் தெரிவித்தார். பாபா, சில நிமிடங்கள் உள்ளே தனியாக அமர்ந்து, பின்பு கைகளைத் தட்டவே, ஆண்கள் மீண்டும் உள்ளே நுழைந்தனர்.

"எனது மனநிலைக்கு இடையூறு விளைவிக்கும் எதையும் நீங்கள் எவரும் செய்ய வேண்டாம்" என்று பாபா அறிவுறுத்தினார்.

ஃபிரான்சிஸிடம் பாபா, **"பேருந்தின் பழுது தொடர்பாக, அதற்கு இப்போது வண்ணம் தீட்டினால் போதும், ஏனெனில் சுத்தியல் பயன்படுத்தி பணிபுரிவதால் எழும் சத்தம், என்னை தொந்தரவு செய்து, எனது மனநிலையை கெடுத்துவிடும்"** என்றார்.

மேலும், **"முழு உலகமும் ஆபத்தில் உள்ளது, எனது ஆரோக்கியமும் ஆபத்தில் உள்ளது"** என்று அவர் கூறினார்.

முந்தைய நாள் இரவு, பாபாவின் உடல்நிலை எப்படி இருந்தது என்பதை விவரிக்க அவர் பெண்டுவிடம் கேட்டுக்கொண்டார். "நேற்று இரவு, பாபாவின் உடல்நிலை மிகவும் மோசமாக இருந்தது," பெண்டு கூறினார். "இந்நாட்களில், அவர் பொதுவாக இரவில் உடல்நிலை சீரில்லாமல் இருக்கிறார், ஆனால் நேற்று மிகவும் மோசமாக இருந்தது."

பாபாவின் முகம் இன்னும் இருண்டு காணப்பட்டது.

பாபா ஒரு பிரார்த்தனையை எடுத்துரைக்கப் போவதாகக் கூறி, அதற்கு முன்னர் அவர், அலோபாவிடம் நமாஸ் (முஸ்லீம் பிரார்த்தனை) மொழியுமாறு கூறினார். எரச், குருநாதரின் பிரார்த்தனையை (MASTER'S PRAYER) ஓதுமாறு அறிவுறுத்தப்பட்டார்.

"நேற்று இரவு, நான் மிகவும் வேதனையான நிலையில் இருந்தபோது, இந்தப் (புதிய) பிரார்த்தனை எனது நினைவுக்கு வந்தது." மேலும் நகைச்சுவையாக, **"முதலில், நான் அதை மனப்பாடம் செய்தேன், இப்போது நான் அதை உங்களுக்கு எடுத்துரைக்கிறேன்":**

பிரியமான கடவுளே, நாங்கள் உங்களுடன் ஐக்கியமாவதற்குத் தகுதியானவர்களாக மாறும் வரை, உங்களை மேலும் மேலும், மேலும் மேலும், மேலும் அதிகமாக நேசிக்க, எங்கள் அனைவருக்கும் உதவுங்கள். மேலும் பாபாவின் தாமனை (மேலங்கியை) **இறுதிவரை உறுதியாகப் பற்றிக்கொள்ள எங்கள் அனைவருக்கும் உதவுவீர்களாக!**

அந்தப் பிரார்த்தனை (பிரியமான கடவுளுக்கான பிரார்த்தனை என்று அறியப்பட்டது) மூன்று நாட்களுக்குப் பின்னர் 28ஆம் தேதி மீண்டும் மொழியப்படும் என்று பாபா கூறினார். ஃபிரான்சிஸிடம், பாபா, **"அலோபாவால் செய்யப்படும் பிரார்த்தனை, முஹமதியர்கள் கடவுளை வழிபடும் பிரார்த்தனை முறையாகும். பார்சிகளின் வழிபாட்டு முறை வேறுபட்டது, அவர்கள் ஒரு சிறப்பு முறையில் புனித நூலைக்** (SACRED THREAD) **கைகளில் பிடித்து,** (நெருப்புக் கோவிலில்) **தங்கள் வழிபாட்டில் ஈடுபடுகிறார்கள். இந்து வழிபாட்டிற்கும் வெவ்வேறு வழிகள் உள்ளன. கிறிஸ்தவர்கள் என்ன நடைமுறையை பின்பற்றுகிறார்கள்?"** என்று கேட்டார்.

ஃபிரான்சிஸ் சிலுவையின் அடையாளத்தை ஒரு கிறிஸ்தவரைப் போலச் செய்தார். **"ஒவ்வொரு மதத்திற்கும் சடங்கு சம்பிரதாயங்கள் உள்ளன"** என்று பாபா தொடர்ந்தார். **"அவை உலர்ந்துபோன எலும்புகள் போன்றவை. அன்புக்கு எந்த பந்தமும், பிணைப்பும் இல்லை. இதயத்தின் பிரார்த்தனை என்பது மிகப்பெரிய விஷயம். குருநாதருக்கான பிரார்த்தனைக்கு** (MASTER'S PRAYER) **அதீத சக்தியும், அர்த்தமும் உள்ளது. அதனால்தான் நான் அதை உலகிற்கு வழங்கினேன்."**

அன்று மதியம், காக்கா பாரியாவிற்கு மாரடைப்பு ஏற்பட்டது; மாலையில் பாதிரி, மெஹராஸாத்தில் தங்கி அவரை கவனித்துக் கொள்ள அழைக்கப்பட்டார். மெஹர்தாஸ் இரவில் காக்காவுடன் உதவியாக இருக்க உத்தரவிடப்பட்டது. காக்கா நலமாக இருப்பார் என்று பாபா, மண்டலியை ஆறுதல்படுத்தினார். **"அவர் இப்போது உயிரைத் துறக்கமாட்டார்,"** என்றும் அவர் கூறினார்.

மாலை 6:00 மணியளவில், பாபா உள்ளே சென்று கொண்டிருந்தபோது, ஆதி சீனியரும் டாக்டர் மூர்த்தியும் வந்தனர். பாபா, அவரை சந்திக்க டாக்டர்

மூர்த்தியை அழைத்திருந்தார்; அன்றிரவு மூர்த்தி மெஹராஸாத்தில் இரவைக் கழித்து, அடுத்தநாள் புறப்பட்டுச் சென்றார்.

1959 ஆகஸ்ட் 28 வெள்ளிக்கிழமை காலை 9:30 மணியளவில் பாபா, பெண் மண்டலியை மண்டபத்திற்கு வரவழைத்தார். அன்று கிருஷ்ண பெருமானின் பிறந்தநாள். பாபாவின் அறிவுறுத்தல்படி, ஆண்கள் தங்கள் கைகளையும் முகங்களையும் கழுவிவிட்டு, ஏற்கனவே பாபாவை நோக்கி அமர்ந்திருந்தனர். ஆண், பெண் மண்டலிக்கிடையே மண்டபத்தில் ஒரு திரை போட்டு மறைக்கப்பட்டிருந்தது. எரச் பிரியமான கடவுளுக்கான பிரார்த்தனையையும் அதைத் தொடர்ந்து 'குருநாதருக்கான பிரார்த்தனை'யையும் (MASTER'S PRAYER) மொழிந்தார். கைக்கோபாத், பாபாவின் முன் நின்றபோது, மனம் வருந்தி மன்னிப்பு கோரும் பிரார்த்தனை மொழியப்பட்டது. அந்த நேரத்தில் பாபா உட்பட அனைவரும் எழுந்து நின்றனர். இறுதியாக, கைக்கோபாத் பிரார்த்தனையை மொழிந்தார்:

கடவுளே, பிரியமான பாபாவின் பணிகளில் ஆண்களும் பெண்களும் அவருக்கு உதவியாக இருக்க இடங்கொடுங்கள். பாபாவின் மனநிலைக்கு இடையூறு விளைவிக்க எவரும் காரணமாக இராமல் பார்த்துக் கொள்ளுங்கள். அக்டோபர் இறுதிக்குள் பாபா விரும்பும் பணியை 100 சதவீதம் வெற்றிகரமாக நிறைவு செய்யவும், பாபாவின் உடல்நிலை பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளவும் உதவியாக இருங்கள்.

பெண்மணிகள் வெளியே சென்ற பிறகு, பாபா, நோஷிர் ஸிகன்போரியாவிற்கு சில அறிவுரைகளை வழங்கி, பின்னர் அவர் குடும்பத்துடன் ஆறு மாதங்கள் மெஹராபாத்தில் தங்க அனுமதிக்கப்பட்டார்.

கிருஷ்ண பெருமானின் பிறந்தநாளை முன்னிட்டு, பாபாவிற்கு வாழ்த்து அனுப்பிய பூனாவில் வாழும் சாது வாஸ்வானி மற்றும் அவரது மருமகன் ஜஷன் ஆகியோருக்கு பாபா இந்தச் செய்தியை அனுப்பிவைத்தார்:

என் அன்பான தாதா வாஸ்வானி, அன்பான ஜஷன் மற்றும் ஸெயின்ட் மீரா உயர்நிலைப் பள்ளியின் அன்பு உள்ளங்களுக்கும், என்னை நினைவில் கொண்டு என்னை நேசிக்கும் அனைவருக்கும் என் அன்பை வழங்குங்கள்.

நானே ராமன், நானே கிருஷ்ணன், நான் இவராகவும், நான் அவராகவும் இருந்தேன், இப்போது நான் மெஹர் பாபாவாக இருக்கிறேன். உண்மையில், இந்த உடல் மற்றும் உயிர் வடிவில், நான் மட்டுமே நித்தியமாக வணங்கப்படும் மற்றும் புறக்கணிக்கப்படும், எப்பொழுதும் நினைவில் கொள்ளப்படும் மற்றும் மறக்கப்படும் அதே ஆதிகால புருஷன்.

யாருடைய கடந்த காலத்தை வணங்கி நினைவுகூரப்படுகிறாரோ, யாருடைய நிகழ்காலம் புறக்கணிக்கப்பட்டு மறக்கப்படுகிறதோ, மேலும் யாருடைய எதிர்கால வருகை மிகுந்த ஆர்வத்துடனும் ஏக்கத்துடனும், எதிர்பார்க்கப்படுகிறதோ, அதே ஆதிகால புருஷன் நான்!

ஃபிரான்சிஸின் இந்தக் குறுங்கவிதை அந்தக் கடிதத்துடன் இணைக்கப்பட்டது:

இயேசு, அவருக்கு முன்பு கிருஷ்ணா.
இருவரும் இப்போது மெஹர் பாபா.
மேலும், யார் ஒருவரால் இதை நம்ப முடியவில்லையோ,
அவருக்குப் பசுவின் மூளை கிடைக்கவில்லையா!

நியூயார்க்கைச் சேர்ந்த பார்வையற்ற வர்ம முறை மருத்துவர் ஹாரி கென்மோர் (HARRY KENMORE), பாபாவிற்கு எழுதியதற்கு இணங்க, அவர் இந்தியா வர அனுமதி வழங்கப்பட்டது. 1959 செப்டம்பர் 1 செவ்வாய் அன்று காலை 10:00 மணிக்கு, மெஹர்ஜி அவரை தனது காரில் மும்பையிலிருந்து மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தார்; அங்கு அவர் நவம்பர் வரை தங்கியிருந்தார். பாபா, கென்மோரிடம் அவரது பயணத்தைப் பற்றிக் கேட்டு, **"நீங்கள், மீண்டும் என்னுடன் இருப்பதால் உண்மையிலேயே அதிர்ஷ்டசாலி, குறிப்பாக இப்போது நான் என் அன்பர்களை சந்திப்பதை நிறுத்திவிட்டேன். மிக முக்கியமான கடிதங்களைத் தவிர, நான் எந்தக் கடிதத்திற்கும் செவிமடுப்பதில்லை"** என்றார். பாபா, கென்மோரை ஃபிரான்சிஸுக்கு அறிமுகப்படுத்தினார், பின்னர் அவரை வீட்டிற்குள் அழைத்துச் சென்று, சிறிது நேரத்தில் திரும்பி வந்தார்.

பாபா எப்படித் தமது கால்களால் நடக்கிறார் என்று அவர் நினைப்பதாக, கென்மோரிடம் ஃபிரான்சிஸ் கேட்டார். அதற்கு கென்மோர், "பாபா அற்புதமாக நடக்கிறார். இது அவருக்கு மட்டுமே சாத்தியம். என்னைப் போல் உங்களால் அதை புரிந்து கொள்ள முடியாது, ஏனெனில், முன்பு பாபாவின் நிலையை நான் உணர்ந்த அந்த வேளையில், அவர் மீண்டும் ஒருபோதும் நடக்கவே முடியாது என்று அறிவித்திருந்திருப்பேன்!"

1958இல் அமெரிக்கா சென்று திரும்பிவந்த பிறகு, பாபா, டாக்டர் கென்மோருக்கு எழுதியிருந்தார்: **"நீங்கள் எனது மண்டலியில் ஒருவர். நான் எனது மண்டலியிடமிருந்து எல்லாவற்றையும் எதிர்பார்க்கிறேன், எனது மண்டலி என்னிடமிருந்து எதையும் எதிர்பார்ப்பதில்லை."**

மெஹராஸாத்தில் ஒரு சந்தர்ப்பத்தில், கென்மோர், "பாபா, நீங்கள் அன்பின் மொத்த உருவம்" என்று குறிப்பிட்டார்.

பாபா பதிலளித்தார், **"நான் மிகவும் கண்டிப்பானவனும் கடுமையானவனும் கூட, குறிப்பாக எனது மண்டலியிடம். நான் உலக மக்களிடம் நடந்துகொள்வது போல, மண்டலியிடம் நடந்துகொள்வது இல்லை. நான் உலகம் முழுவதற்கும் என் அன்பை அள்ளி வழங்குகிறேன், ஆனால் மண்டலி எனது கடுமையான பக்கத்தையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது."**

கென்மோரை தினமும் காலையில் புக்காரும், மாலையில் பாதிரியும் நடைப்பயிற்சிக்காக அழைத்துச் செல்வது வழக்கம். கென்மோர் ஒரு புதிய

அறிவியல் கண்டுபிடிப்பைத் தன்னுடன் கொண்டு வந்திருந்தார் - ஒரு 'போலராய்டு கேமரா' (POLAROID CAMERA, அது 60 வினாடிகளுக்குள் சித்திரத்தைத் தானே உருவாக்கிக் கொள்ளும் திறமை படைத்தது). அவர் பாதிரியுடன் இணைந்து, பாபா, மண்டலி மற்றும் ஆசிரமத்தின் பல புகைப்படங்களை எடுத்தார். கென்மோர் ஒலிப்பதிவு பெட்டி ஒன்றையும் உடன் கொண்டு வந்திருந்தார், அதை பாபா 'ஹாரியின் குழந்தை' என்று குறிப்பிட்டு வந்தார்; ஹாரி அதை எப்பொழுதும் தனது பக்கத்தில் வைத்திருப்பதை வழக்கமாகக் கொண்டார். பாபா அடிக்கடி கென்மோரிடம் மண்டலி மண்டபத்தில் குருநாதரின் பிரார்த்தனையை மொழியுமாறு கேட்டுக் கொண்டார், அதை அவர் ஆழ்ந்து ஓங்கிய குரலில் மொழிந்தார். 'பிகின் தி பிகீன்' (BEGIN THE BEGUINE), ஸ்வானி (SWANEE) மற்றும் பாபா விரும்பும் பிற பாடல்களைப் பாடுவதை ஹாரி விரும்பினார். சில நேரங்களில், பாபா, இந்தி, உருது மற்றும் ஆங்கிலத்தில் இசைப் பதிவுகளைக் கேட்பதற்காக கென்மோரையும் மண்டலியையும் பிரதான இல்லத்திற்கு அழைத்துச் சென்றார்.

இந்தக் காலக்கட்டத்தில் பிற்பகலில், பாபா 'ஏழு ஓடுகள்' விளையாட்டை மண்டலி, தோட்டக்காரர்கள், சமையல்காரர் மற்றும் ஓட்டுநர் ஷேக் ஆகியோருடன் விளையாடி வந்தார். பாபா ஒரு நாற்காலியில் அமர்ந்து, அங்கிருந்து ஓடுகளின் குவியலை இலக்காக வைத்து பந்தை வீசுவதும், ராமா (RAMA), பைய்யா (BHAIYA) என்ற இரண்டு பணிக்காரச் சிறுவர்கள் இந்த விளையாட்டுகளில் அடிக்கடி பங்கேற்பதும் வழக்கம்; மேலும் பாபாவின் முறை வரும்போது அவர் அதை அரிதாகவே தவறவிட்டார். ஷங்கர் என்று அழைக்கப்பட்ட வேறொரு தோட்டக்கார சிறுவனும் மிகவும் சிறப்பாக விளையாடினான்; இந்தக் கலகலப்பான விளையாட்டுகளின் போது, பாபாவின் நெருங்கிய தோழமையில் பங்குகொள்ளும் பாக்கியம் சிறுவர்களுக்கு வழங்கப்பட்டது.

கென்மோர் பார்வையற்றவராக இருந்தாலும், அவரும் தனது முறை வரும்போது பந்து வீசினார். ஒருமுறை, அவர் குறிவைத்து எறிந்தபோது, பாபா சைகையால் தெரிவித்ததற்கு இணங்க, பாதிரி ஓடுகளின் குவியலை சிதறடித்தார், அப்போது கென்மோர் தான் 'அடித்ததாக' நினைத்து களிப்படைந்தார். அதன் பின்னர், அவர் குறிவைத்து எறிவதை பயிற்சி செய்து, சில சமயங்களில் உண்மையில் ஓடுகளின் குவியலை அடித்தார். எவரேனும் குவியலை வெற்றிகரமாகத் தாக்கினால், கென்மோர், 'சக தோழருக்கு இரண்டு சுருட்டுகளை வழங்குங்கள்!' என்று குரல் கொடுத்தார்.

பாபா, கென்மோரிடம் கூறினார், "**நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி. நீங்கள் கடவுளுடன் இருப்பது மட்டுமின்றி, அவருடன் விளையாடவும் செய்கிறீர்கள்.**"

செப்டம்பர் 3ஆம் தேதி, பாபா எவ்வளவு சோர்வாக உணர்ந்ததாக, கென்மோரிடம் குறிப்பிட்டார்: "**முன்பு நான் கைக்கோபாத்தின் அறைக்குச் சென்று ஐந்து நிமிடம் பணிபுரிந்தது, என்னை சோர்வடையச் செய்தது. என்**

உடலில் ஏற்பட்ட அழுத்தம் காரணமாக, அதைத் தாங்க முடியாது என்று நினைத்தேன். ஆனால் இப்போது, ஐந்து நிமிடங்களுக்கு பதிலாக, நான் அரை மணி நேரம் பணிபுரிகிறேன், அந்தப் பணியில் கைக்கோபாத் மட்டுமே எனக்கு உதவ முடியும்; இன்று, என்னுடைய தாங்க முடியாத நிலையை அவரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. நான் மிகவும் சோர்வாக இருப்பதாக கைக்கோபாத் என்னிடம் கூறினார்.”

கைக்கோபாத் அப்போது குறுக்கிட்டு, “பாபாவின் பணியைக் குறித்து என்னால் சொல்லவும், சகிக்கவும் முடியாது. இன்று, அரை மணி நேரத்திற்கு அதிகமாக என்னால் அவருக்கு உதவ முடியவில்லை என்று பாபாவிடம் தெரிவித்தேன்.”

பாபா தொடர்ந்தார்:

அக்டோபர் இறுதி வரை, என் உலகளாவிய பணிக்கான நேரம். பூனாவில் நான் செய்த பணியை, இத்துடன் ஒப்பிடுகையில் அது ஒன்றுமில்லை. மண்டலி இதைப் புரிந்து கொள்ள முடியாது என்றாலும், பணியைப் பொறுத்தவரை, அதன் உள்ளார்ந்த முக்கியத்துவத்தை நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அது என்னை எப்படி சோர்வடையச் செய்கிறது என்று பாருங்கள்.

எனது பணியை நிறைவு செய்து, கைக்கோபாத்தின் அறையிலிருந்து நான் திரும்பும் போதுதான், மண்டலிக்கு எனது சோர்வைப் பார்க்கவும், உணரவும், எனது பலவீனமான உடல்நிலையை அனுபவிக்கவும் வாய்ப்பு கிடைத்தது. கண்களைத் திறக்கவும், உடலை அசைக்கவும் எனக்கு சிரமமாக உள்ளது. ஆனாலும், இந்த மோசமான உடல்நிலையில், நான் மண்டலியுடன் விளையாடி, எனது மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறேன். முதலில், நான் பணியின் மிகப்பெரிய அழுத்தத்தால் பாரத்தை சுமப்பது போலத் தோன்றினாலும், சிறிது நேரத்தில் மக்கள் எனது முகம் மகிழ்ச்சியாக இருப்பதைப் பார்க்கிறார்கள். இன்று, நான் (சீட்டு) விளையாடிக் கொண்டிருந்தேன், ஆனால், உடனடியாக அதை நிறுத்திவிட்டு உள்ளே சென்றேன். இவை அனைத்தும் எனது பணியுடன் தொடர்புடையது.

பாபா மேலும் கூறினார்: **“இந்த நாட்களில், நான் கடிதங்கள் வாசிப்பதைக் கேட்பதில்லை, நான் பலவீனமாக உணர்கிறேன் என்பதால் அல்ல, ஆனால் எனது பணிக்கு அதிக நேரம் கொடுக்க வேண்டும் என்பதற்காக. பொதுவாக, பிற்பகல் மூன்று மணிக்கு என் அறைக்குத் திரும்பிச் செல்கிறேன். நீங்கள், நான் ஓய்வெடுக்கச் செல்வதாக நினைக்கிறீர்கள். உண்மை என்னவெனில், நான் எனது பணிக்காக அவ்வாறு செய்கிறேன்.”**

இரண்டு நாட்களுக்குப் பிறகு, பாபா, **“என் உடலின் ஒவ்வொரு பாகமும் வலிக்கிறது”** எனவும், வேறொரு நாள் அவர், **“என் உடல், ஒரு துணியிலிருந்து தண்ணீர் பிழிந்தெடுக்கப்படுவதைப் போல் உணர்கிறேன்”** என்றும் கூறினார்.

ஒருமுறை பாபா ஆச்சரியத்துடன் எடுத்துரைத்தார்: **"இப்போது எனது கழுத்தைச் சுற்றி தொங்கிக் கொண்டிருக்கும் இந்தத் தமாஷாவை** (மாயாவின் கேலிக்கூத்து) **உருவாக்கி, என்னை மிகுந்த துன்பத்திற்குள்ளாக்கியது எது? என்னால் அதிலிருந்து விடுபட முடியாது!"**

'எரச், ஃபிரான்சிஸ் இருவருக்கும் வழங்கப்பட்டதைப் போன்ற மௌனம் மற்றும் உபவாசத்திற்கான அறிவுறுத்தல்கள், டாக்டர் கென்மோருக்கும் வழங்கப்படும், மேலும் அவை அடுத்த இரண்டு மாதங்களுக்கு நடைமுறையில் இருக்கும்' என்று பாபா சுட்டிக்காட்டினார். எரச், ஃபிரான்சிஸ் இருவருக்கும் மௌனத்திற்கான நேரம் மாற்றப்பட்டது. தினமும் மௌனம் கடைப்பிடிக்காமல், குறிப்பிட்ட தேதிகளில் காலை 8:00 முதல் இரவு 8:00 மணி வரை மட்டுமே கடைப்பிடிக்க வேண்டும்.

பாபா மேலும் கூறினார், **"செப்டம்பர் 7ஆம் தேதி முதல், எனது பணி முழு வீச்சில் ஆரம்பமாகும்."** நல்லது, தீயது, எந்தச் செய்தியும் அவருக்குத் தெரிவிக்கப்படக்கூடாது, மேலும் அந்த தேதியிலிருந்து அனைத்து விளையாட்டுகளும் நிறுத்தப்படும்.

ஷெரூ (SHEROO), **1959** செப்டம்பர் **3** அன்று மதியம் மெஹராஸாத்திற்கு வந்தபோது, சில நாட்கள் தங்க அனுமதிக்கப்பட்டார். ஆகஸ்ட் மாதத்திலும் சில நாட்கள் தங்கியிருந்தார். 6ஆம் தேதி பாபா, கென்மோரையும், மண்டலியையும் இசைப் பதிவுகளைக் கேட்பதற்காக, பிரதான இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். அவர் இவ்வாறு குறிப்பிட்டார், **"இசையும் எனது விளக்கங்களும் உங்களை வானத்திற்கு உயர்த்தும்; அதைத் தொடர்ந்து மதியம் 1:30 மணிக்கு, அலோபா உங்கள் அனைவரையும் கீழே வீழ்த்துவார்! அவர் அடோல்ஃப் ஹிட்லராக** (ADOLF HITLER) **நடிக்க உள்ளார். எனது விளக்கங்கள் உங்களை வானத்திற்கு உயர்த்தும், பின்னர் அலோபா உங்களை மீண்டும் பூமிக்குக் கொண்டு வருவார்."** அனைவரும் சிரித்தனர்.

மதியம் **1:30** மணியளவில், ஆண்கள் அனைவரும் மண்டபத்தில் ஒன்றுதிரண்டனர். அலோபாவால், மண்டபத்தின் குறுக்கே கட்டப்பட்ட திரை ஒன்று கயிற்றால் இயக்கப்பட்டது. அதன் பின்னால் ஒரு செயற்கை ஒலிவாங்கியை அவர் பொருத்தியிருந்தார். உலக வரைபடங்கள் அவருக்குப் பின்னால் தொங்கவிடப்பட்டு, இதர பொருட்கள் ஒரு மேஜை மீது வைக்கப்பட்டன. ஒரு பெரிய நாஸி ஸ்வஸ்திகா கொடி மேஜையின் மேல் பரப்பப்பட்டிருந்தது. உள்ளே நுழைந்த அலோபா, அடோல்ஃப் ஹிட்லரைப் போலத் தோற்றமளித்தார். அவர் அரபு, பாரசீகம் மற்றும் ஆங்கிலத்தில் தனது படைகளுக்கு உரை ஒன்றை 'ஒலிபரப்பு'ச் செய்யத் தொடங்கினார். அலோபாவின் உற்சாகமான நடிப்பால், பாபாவும் பிற அனைவரும் பெருமகிழ்ச்சியடைந்தனர். அவர் அந்தப் பாத்திரத்தில் முற்றிலும் மூழ்கி, அனைத்து நுணுக்கமான ஒலி விளைவுகளையும் தானே செய்தார் - அணிவகுப்பு இசைக்குழு, விசில் சத்தம் எழுப்பும் தோட்டாக்கள், குண்டுகள் வெடித்தல் இப்படி மற்றும் பல.

பூனாவிலிருந்து வந்த பாபாவின் சகோதரர் ஜால்பாயை அன்று இரவே ஆதி மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தார். பாபா, ஏற்கனவே ஓய்வு பெறச் சென்றவர், காரின் ஓசையைக் கேட்டதும், ஜால்பாய் வந்துள்ளாரா என்பதைக் கண்டறிந்து, அவருக்கான சில அறிவுரைகளுடன் பாவ் கல்சூரியை அனுப்பினார்.

ஹாரி டேனியல் டெடோல்சொவ் (HARRY DANIEL DEDOLCHOW, 32) என்பவர் வணிகக் கடற்படையில் பணிபுரிந்தார். 1955ஆம் ஆண்டு, ஸான் ஃபிரான்சிஸ்கோவில் ஜீன் அட்ரியல் எழுதிய 'அவதார்' (JEAN ADRIEL'S 'AVATAR') பிரதியை 'மனோதத்துவ புத்தகக் கடை'யில் பார்த்தபோது, மெஹர் பாபாவைப் பற்றி முதன்முதலில் கேள்விப்பட்டார். அவர் புத்தகத்தை வாங்கியதும், கடையின் உரிமையாளர், திருமதி ஆம்ஸ்ட்ராங் (MRS. ARMSTRONG), பாபாவைப் பற்றிய மேலதிகமான தகவலுக்காக, அவரிடம், ஐவி டியூஸை (I.V. DUCE) அணுகுமாறு பரிந்துரைத்தார். அதற்குப் பிறகு, டெடோல்சொவ் ஸுஃபி கூட்டங்களில் தவறாமல் கலந்து கொள்ளத் தொடங்கினார், அங்கு அவர் ஹெர்மன் அல்வாரடோ (HERMAN ALVARADO), ஜோஸஃப் & காரி ஹார்ப் (JOSEPH & KARI HARB), டான் ஸ்டீவன்ஸ் (DON STEVENS) மற்றும் பலரை சந்தித்தார்.

ஐவியின் தொடர்ச்சியான ஊக்கத்துடன், பாபாவை சந்திக்க டெடோல்சொவ் சிறிது காலம் முயன்றார், ஏனெனில் அவர் பணிபுரிந்த சரக்குக் கப்பல்கள் கொல்கத்தா துறைமுகத்தில் அடிக்கடி நிறுத்தப்படும். பாபா இறுதியாக அவரை 'ஐந்து நிமிடங்கள்' வர அனுமதித்தார். எனவே 1959 செப்டம்பர் மாதத்தில், அவரது கப்பல் கொல்கத்தாவை வந்தடைந்தபோது, டெடோல்சொவ் விடுப்பு எடுத்துக்கொண்டு, பாபாவை சந்திக்க ஏ.சி.எஸ். சாரியுடன் (A.C.S. CHARI) பயணம் செய்தார். அவர்கள் செப்டம்பர் 7 அன்று காலை 8:30 மணிக்கு மெஹராஸாத்தை வந்தடைந்தனர். ஐந்து நிமிடங்களுக்கு பதிலாக, பாபா அவரை இரண்டு மணி நேரம் தங்க அனுமதித்தார்.

அவர்கள் வந்த பிறகு, பாபா அவரை உள்ளே அழைக்கும் வரை, டெடோல்சொவ் மண்டலி மண்டபத்திற்கு வெளியே காத்திருக்க வேண்டியிருந்தது. விரைவில் அவர் அழைக்கப்படவே, சாரியை பின்தொடர்ந்து உள்ளே சென்று, அவர் அருகில் தரையில் அமர்ந்தார். எரச் மூலம் பாபா கூறியதைக் குறிப்பெடுக்க சாரி உடனடியாக தனது நோட்டுப் புத்தகத்தை எடுத்தார். பாபா, டெடோல்சொவை தன் அருகில் அழைக்க, அவர் அருகில் சென்றதும், டெடோல்சொவ், பாபாவைத் தொடர்ந்து பார்த்து, அவருடைய பாதங்களில் தலைவணங்க முயன்றார். பாபா அவரைத் தடுத்து, **"ஹாரி, நான் தரிசனம் வழங்குவதை நிறுத்திய நேரத்தில் நீங்கள் வந்திருக்கிறீர்கள். கடிதப் பரிமாற்றங்கள் அனைத்தும் தடைசெய்யப்பட்டுவிட்டன. நீங்கள் முன்பு வந்திருந்தால், என்னை ஒளிரும் மனநிலையில் பார்த்திருப்பீர்கள். நானே வந்து உங்களை வரவேற்றிருப்பேன். இருப்பினும், பிறர் என்னை அணுக முடியாதபோது, என்னிடம் வரும் வாய்ப்பைப் அடையப்பெறுவது உங்கள் அதிர்ஷ்டம்; மேலும் உங்களால், சாரிக்கும் அதே வாய்ப்பு கிடைத்துள்ளது.**

அவரும் இங்கே இருப்பதில் அதிர்ஷ்டசாலி; இந்த நாட்களில், நான் எவரையும் என்னைத் தலைவணங்க அனுமதிக்கவில்லை."

பாபா மேலும் கூறினார், **"நான் அனைத்தும் அறிவேன், ஹாரி, உங்கள் அன்பு எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது."**

ஹாரி டெடோல்சொவ் பின்பு விவரித்தார்:

நான் கட்டிடத்திற்குள் (மண்டலி மண்டபம்) நுழைந்த அந்த கணத்தில், மிகவும் லேசான மின்சாரம் என் உடல் முழுவதும் பாய்ந்தது. நான் சாரியுடன் அமர்ந்து, பாபாவைப் பார்க்க எனது வலப்புறம் சற்றுத் திரும்பியபோது, ஒரு நபர் கேமராவை, தெளிவாகப் பார்க்கும் பொருட்டு சரி செய்வது போல, பாபா எனது பார்வையின் எல்லைக்குள் இல்லாமல், மண்டலியை மட்டுமே பார்க்க முடிந்தது. பாபாவைத் தெளிவாகக் காண எனது கண்கள் எவ்வளவுதான் முயன்றும், பாபா எனது பார்வையின் எல்லைக்குள் விழாமல் இருந்தார்.

பாபா தனது வார்த்தைகளை எரச் மூலம் சொல்லிக் கொண்டிருந்த வேளையில், டெடோல்சொவின் கவனம் பாபாவிடம் இருந்தது. பாபா இறுதியாக, **"நீங்கள், நான் சொல்வதைக் கேட்கவில்லை!"** என மொழிந்த வார்த்தைகள் டெடோல்சொவின் தற்காலிக உயர்நிலையை உடைத்த அந்த கணத்தில், அவர் பாபாவை தெளிவாகப் பார்க்க முடிந்தது.

டெடோல்சொவ் உடனே, "பாபா, நான் விரும்பும் அளவுக்கு என்னால் உங்களை நேசிக்க முடியவில்லை. நீங்கள் விரும்புவதைப் போல, நான் உங்களை நேசிக்க விரும்புகிறேன். அதைச் செய்ய நான் ஏங்குகிறேன்" என்றார்.

பாபா பதிலளித்தார், **"இதுவரை, என்னை நேசிக்க வேண்டிய விதத்தில் நேசிக்கும் அன்பர் ஒருவர் எனக்குக் கிடைக்கவில்லை. ஓர் அன்பர் அன்பில் ஆழ்ந்திருக்கும் போது, அவரது அன்பை அவர் தொடர்ந்து அனுபவித்தாலும், அதை வெளிப்படுத்த முடியாது. அன்புக்கு எல்லை இல்லை. நீங்கள் உங்களால் முடிந்தவரை நேசிக்கலாம், ஏனெனில், அன்பில் பற்றாக்குறை என்பது இல்லை; உண்மையில், அன்பர்களில்தான் பற்றாக்குறை உள்ளது!**

"கீழ்ப்படிதல் மிக உயர்ந்தது என்பதை நினைவில் கொள்ளுங்கள். அன்பின் ஆரம்பத்திலும் முடிவிலும் கீழ்ப்படிதல் ஒன்றுதான் உள்ளது. மேலுமொரு சந்திப்பை ஏற்பாடு செய்வது கடினமாக இருக்கும் இந்த நேரத்தில், நீங்கள் வந்துள்ளீர்கள். இந்த நாட்களில் நான் பரிசுகளை ஏற்றுக்கொள்வதை நிறுத்திவிட்டேன் - உங்களிடமிருந்து எந்தப் பரிசையும் நான் ஏற்க மாட்டேன். மேலும், நான் உங்களிடமிருந்து எதையேனும் விரும்புகிறேன் என்றால், அது உங்கள் அன்பின் பரிசு மட்டுமே. இறுதிவரை எனது தாமனை (மேலங்கி) நழுவ விடாதீர்கள், ஒவ்வொரு நாளும் உங்கள் அன்பை அதிகரித்துக் கொண்டே இருங்கள்.

"நீங்கள் புறப்பட்டுச் செல்லும்போது, பாபாவை உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள். பாபா எங்கும் இருக்கிறார், ஆனால் நீங்கள் அவரை எப்பொழுதும் உங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்."

இத்துடன் விளக்கம் முடிந்தது; பாபா, **"இன்று ஏதாவது உணவு உண்டீர்களா?"** என்று கேட்டதற்கு, தானும் சாரியும் கொல்கத்தாவிலிருந்து நேரடியாக ரயிலில் வந்ததாகவும், மிகக் குறைவாகவே உண்டதாகவும் டெடோல்சொவ் கூறினார். பாபா தேநீர் மற்றும் சிற்றுண்டியை வரவழைத்தார், இருவரும் அவருக்கு முன்பாக அதை உண்டனர். பாபா, அவர்கள் திரும்பிச் செல்வதற்கான முன்பதிவைப் பற்றி கேட்டார், அது உறுதிப்படுத்தப்பட்டதாக சாரி பதிலளித்தார்.

பாபா ஓர் அற்புதமான மனநிலையில் காணப்பட்டார்; மேலும், மண்டலியை நோக்கி மிட்டாய் துண்டுகளை வீசத் தொடங்கினார். டெடோல்சொவ் ஒன்றைப் பிடித்து, உடனடியாக அதை, மூடியிருந்த காகிதத்துடன் விழுங்கினார்! அதைத் தொடர்ந்து பாபா, டெடோல்சொவை மெஹராவை சந்திக்க அனுமதிக்கப் போவதாகக் கூறினார். எரச், பாபாவை நாற்காலியிலிருந்து எழுந்து நிற்க உதவினார். பாபா, எரச்சிடம் சைகையால் தெரிவித்து, பின்பு, டெடோல்சொவை தன்னுடன் தோட்டத்திற்கு அழைத்துச் சென்றார். பாபா மிகவும் மெதுவாக சிரமத்துடன் நடந்தார், எனவே டெடோல்சொவ் தனது வலது கையை பாபாவின் இடுப்பைச் சுற்றி ஆதரவாக வைத்தபோது, பாபா தலையை அசைத்து, அது தேவையில்லை என்று சுட்டிக்காட்டினார். அவர் கைகளைத் தட்ட, மெஹரா பெண் மண்டலி அறையிலிருந்து தோன்றினார். அவர் கைகளைக் கூப்பி வணக்கம் தெரிவிக்கவே, பாபா, மெஹராவைத் திருப்பி அனுப்பி வைத்தார். பாபா தனது இடது கையை டெடோல்சொவின் வலது தோளில் வைத்து சிறிது நேரம் ஓய்வெடுத்தார். அப்போது அங்குத் தோன்றிய மணியிடம் பாபா, தோட்டத்தைச் சுற்றி டெடோல்சொவிற்குக் காட்டுமாறு அறிவுறுத்தினார்; அவரை ஒரு விரைவு சுற்றுலாவிற்கு அழைத்துச் சென்றபோது பாபா மறுகோடியில் நின்றார். சிறிது நேரத்தில் பாபா அவரைக் கைகளைத் தட்டி அழைத்து, டெடோல்சோவுடன் மண்டலி மண்டபத்திற்குத் திரும்பிச் சென்றார்.

பாபாவின் அனுமதியுடன், டெடோல்சொவ் 'குருநாதரின் பிரார்த்தனை'யை (MASTER'S PRAYER) மொழியத் தொடங்கினார், ஆனால் அவர் முழுவதுமாக உள்வாங்கப்பட்ட நிலையில், பேச முடியாமல் திணறியபோது, பாபா அவரிடம் நிறுத்துமாறி கூறி, **"ஹாரி கென்மோர் இந்தப் பிரார்த்தனையை எனக்கு முன்னால் சிறப்பாக மொழிகிறார். அவருடைய பாராயணம் எனக்கு மிகவும் பிடிக்கும்"** என்றார். அப்போது கென்மோர் 'குருநாதரின் பிரார்த்தனை'யை மொழிந்தார், ∴பிரான்சிஸ் மனம் வருந்தி மன்னிப்பு கோரும் பிரார்த்தனையை (PRAYER OF REPENTANCE) வாசித்தார்.

அவர்கள் பிரார்த்தனைகளை நிறைவு செய்ததும், டெடோல்சொவ் அறிவித்தார், "நான் அதை சிறப்பாக உரத்த குரலில் மொழிய முடியும்!" என்றதும், பாபா அவரை அவ்வாறு செய்ய அழைத்தார். **"எனக்கு முன்னால் நின்று 'குருநாதரின் பிரார்த்தனை'யை மொழியுங்கள்"** என்று பாபா அவருக்கு அறிவுறுத்தினார். அவர் முதலில் 'குருநாதரின் பிரார்த்தனை', தொடர்ந்து மனம்

வருந்தி மன்னிப்பு கோரும் பிரார்த்தனை மற்றும் கடைசியாக ஸுபி பிரார்த்தனையை எடுத்துரைத்தது, பாபாவைப் பெரிதும் மகிழ்வித்தது. அவர் டெடோல்சொவைத் தழுவி முத்தம் கொடுத்து, பின்னர் அவரை மண்டலியுடன் அமர வைத்தார்.

பாபா கேட்டார், **"நீங்கள் ஏதாவது ஆன்மீகப் பயிற்சி செய்கிறீர்களா?"**

"ஆம், பாபா, நான் உங்களின் சித்திரம் ஒன்றை என் முன்னால் வைத்து தியானம் செய்கிறேன், மாலையில் ஒரு மணிநேரம் அல்லது அதற்கும் மேலாக உங்கள் பெயரை மீண்டும் மீண்டும் உச்சரிக்கிறேன்."

"அதனால் உங்களுக்கு ஏதேனும் பாதகம் விளைவது உண்டா?"

"பொதுவாக ஒரு தலைவலி மற்றும் இரத்தச் சிவப்பான கண்கள்!"

பாபா சிரித்துக்கொண்டே, **"என்னை நேசியுங்கள், நேசியுங்கள், மேலும் நேசியுங்கள்"** என்று கருத்துத் தெரிவித்தார்.

பாபா, பாதிரியிடம் டெடோல்சொவ், சாரி இருவரையும் மெஹராபாத்திற்கு அழைத்துச் செல்லுமாறும், அங்கு டான் அவர்களுக்கு அனைத்து இடங்களையும் விளக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். அவர்கள் கொல்கத்தாவிற்குப் புறப்படுவதற்கு முன்பு, ஜால்பாய் அவர்களுடன் பூனாவிற்குச் செல்ல வேண்டியிருந்தது. புறப்படும்போது, டெடோல்சொவ் பாபாவை 'தந்தையே' (FATHER) என்று குறிப்பிட்டுக்கொண்டே இருந்தார். பாபா அவரிடம், **"நான் ஆதிகாலத்தவன். நான் இப்பூவுலகில் ராமனாக வந்தேன். நான் கிருஷ்ணனாகவும், முஹமதாகவும் வந்தேன். மேலும் நான் சிலுவையில் அறையப்பட்ட அதே கிறிஸ்து"** என்று கூறினார்.

அவர்கள் காலை 9:45 மணிக்கு புறப்பட்டுச் சென்றனர். பாபாவின் குழந்தை மற்றும் பள்ளிப் பருவத்துடன் தொடர்புடைய பூனாவில் பல இடங்களை ஜால்பாய் அவர்களுக்குக் காட்டினார். பூனா மையத்தில், ஹாரி டெடோல்சொவ் 'குருநாதரின் பிரார்த்தனை'யை, மெஹராஸாத்தில் ஹாரி கென்மோர் உச்சரித்ததைக் கேட்ட அதே ஆர்வத்துடன் உண்மையில் மிகவும் உரத்த குரலில் மொழிந்தார், அது பூனா அன்பர்களை முற்றிலும் அதிர்ச்சியடையச் செய்தது.

செப்டம்பர் 8ஆம் தேதி, பாபா, விஷ்ணுவுடன் தமது பணியில் சிறிது நேரம் செலவிட்டார். ஆதி, ராம்ஜு இருவரும், அவதார் மெஹர் பாபா அறக்கட்டளை குறித்து பிற மண்டலியை சந்திக்க, காலை 9:00 மணிக்கு வந்தனர். அதே நாளில் பூனாவிலிருந்து திரும்பி வந்த ஜால்பாய், அடுத்த நாள் ஷெரூவுடன் புறப்பட்டுச் சென்றார்.

1959 செப்டம்பர் 9 புதன்கிழமை முதல், பாபா, தமது பணியின் தீவிரமான கட்டத்தை ஏகாந்தவாசத்தில் தொடங்கினார்; **"இன்று முதல் 50 நாட்கள் சிறப்பான பணிகளைத் தொடங்குகிறேன்"** என அவர் தெரிவித்தார். இந்த ஏகாந்தவாசத்தில் அவரது பணியில் அவருக்கு உதவ, ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் ஆகிய மூன்று மாதங்களில், ஹமிர்பூர், மும்பை மற்றும் கராச்சியில்

வாழும் அவரது அன்பர்கள், இறை நாமத்தை தினமும் 24 மணி நேரமும் இடைவிடாமல் திரும்பத் திரும்ப உச்சரிக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர். இவ்வண்ணம், உடல் ரீதியாக அவர் தொலைதூரத்தில் இருந்தாலும், உலகில் வாழும் அவரது அன்பர்களின் இதயங்களில், பாபாவின் புனித நினைவின் சுடர் பிரகாசமாக எரிந்து கொண்டிருந்தது.

சில நாட்களாக, 'இறைவனுடன் இணைந்திருங்கள்' (STAY WITH GOD) புத்தகத்தின் சில பகுதிகள் மண்டலி மண்டபத்தில் வாசிக்கப்பட்டன. எரச் அல்லது சில சமயங்களில் ∴பிரான்சிஸ் அதைப் படித்த போது, குறிப்பாக, அனைவரும் பாபாவின் முன்னிலையில் அதைக் கேட்டு, அதன் அழகில் ஆழ்ந்தனர். ∴பிரான்சிஸின் இந்தப் படைப்பு, பாபாவை மகிழ்வித்ததால், நிச்சயமாக, அவரும் மகிழ்ச்சியடைந்தார். அவர் ஜீன் ∴போஸ்டருக்கு, JEAN FOSTER (1960, ஜனவரி 8 அன்று) இவ்வாறு எழுதினார்: "நம்பமுடியாத மகிழ்ச்சி என்னவெனில், பாபாவின் புகழ்ச்சிதான், அது மிக உயர்ந்த ரகமாக இருந்தது, அல்லது நான் இப்படிக் கூறவேண்டும், இந்தப் பணி அவரை மிகையாக மகிழச் செய்தது. மூன்று முறை அது, அவர் முன்னிலையில் வாசிக்கப்பட்டது, இடையிடையே மண்டலிக்கு அதன் கருத்துகளின் விளக்கங்களையும் அவர் வழங்கினார்."

10ஆம் தேதி, பாபாவின் அறிவுறுத்தல்களுக்காக ஆதி மெஹராஸாத் அழைக்கப்பட்டார். ஆதி அவரது இதர பணிகளுக்கு இடையே, 'இறைவனுடன் இணைந்திருங்கள்' (STAY WITH GOD) புத்தகத்தை வெளியிடுவதற்கான பணியிலும் முழு முனைப்பில் இருந்தார். அன்று, மண்டபத்தில் மண்டலியுடன் சீட்டு விளையாடி, பின்பு பாபா அவரது அறையில் ஓய்வு பெற்றார். ஹாரி கென்மோர், காக்காவின் அறைக்குச் சென்ற போது, பாபாவின் முந்தைய நாள் கதைகளை பாதிரி விவரித்துக் கொண்டிருந்த வேளையில், பாபா தற்செயலாக அங்கு வந்தார், ஆனால் அவர் வந்ததை கென்மோர் அறிய வேண்டாம் என்று அங்கிருந்தவர்களிடம் சைகையால் தெரிவித்தார். அமைதியாக, கென்மோரின் ஊன்றுகோலை அவர் கைகளிலிருந்து அகற்றி, தலைகீழாகப் பிடித்துக் கொண்டு, வளைந்த கைப்பிடியால் கென்மோரின் கழுத்தைப் பிடிக்க முயன்றார். கென்மோர், பாதிரியின் கதைகளைக் கேட்பதில் மிகுந்த ஆர்வத்துடன் இருந்ததால், அவர் ஒரு வார்த்தையும் கூறாமல் கண்டுகொள்ளாமல் இருந்தார். ஆனால் பாபா அவரது கழுத்தை மீண்டும் மீண்டும் ஊன்றுகோலால் பற்றிப் பிடித்துக் கொண்டிருந்தார்.

கடைசியாக, பாபா, கென்மோரை ஒரு விரலால் தொட்ட போது, அவர் பாபாவை உடனடியாக அடையாளம் கண்டு, "பாபா!" என்று கத்தியதும், அங்கிருந்தவர்கள் கலகலவென சிரித்தனர். பாபா மண்டபத்திற்குத் திரும்பிச் செல்லவே, அன்பர்கள் அனைவரும் பின்தொடர்ந்து, அவருக்கு முன்பாக அமர்ந்தபோது, கென்மோர், "பாபா, நீங்கள் ஒரு திருடனைப் போல் அணுகினீர்கள்!" என்றார்.

பாபா பதிலளித்தார், **"ஒரு நாள் நானும் அவ்வாறே உங்கள் இதயத்தில் நுழைவேன்."**

கென்மோர், "நீங்கள் ஏற்கனவே என் இதயத்தில் இல்லையா?" என வினவினார்.

"நான் உங்கள் இதயத்தின் மையப் பாகத்தில் நுழைவதைப் பற்றிக் கூறுகிறேன்; நான் உள்ளே நுழையும் போது, எப்பொழுதும் அங்கே இருந்தேன் என்பதை நீங்கள் அறிவீர்கள்" என்று பாபா கூறினார்.

பாபா மேலும் கூறினார், **"இன்று, ஊன்றுகோலால் நான் உங்கள் கழுத்தைப் பிடித்தேன். ஒரு நாள், நான் உங்கள் கன்னத்தில் அறைந்து உங்களை விழிப்புறச் செய்வேன். அதற்கு ஆயத்தமாக இருங்கள். ஒரு நாள், நிச்சயமாக, நான் உங்களை விழிப்புறச் செய்வேன்."**

1959 செப்டம்பர் 11 காலை 8:00 மணிக்கு பாபா, மண்டலி மண்டபத்திற்கு வந்து, தீவிரமான மனநிலையில் எடுத்துரைத்தார்: **"செப்டம்பர் 19 முதல் 40 நாட்களுக்கு, நான் ஏழைகளுடன் பணிபுரிவேன். எனக்கு 40 ஏழைகள் தேவை. இந்த 40 ஏழைகளில், ஒவ்வொரு நாளும் காலை 10:00 மணிக்கு, வெவ்வேறு மனிதர்கள் வர வேண்டும். எனவே 40 நாட்களில், 40 ஆதரவற்ற ஆண்கள் வர வேண்டும். ஒவ்வொரு நாளும் நான் ஏழை ஒருவரின் பாதங்களைக் கழுவி, அவரைத் தலை வணங்கி, அவருக்கு ரூ.20 வழங்குவேன். காக்கா, பிம்பல்காவ்ம் கிராமத்தில் அவருக்குப் பரிச்சயமானவர்கள் மூலம் ஏழை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ய இருந்தார், ஆனால் அவர் மெஹராஸாத் எல்லைக்கு வெளியே செல்லக்கூடாது."** கைக்கோபாத்தின் அறைக்குச் சென்ற பாபா, ஒன்பது மணிக்குத் திரும்பி வந்து விசாரித்தார்: **"எரச், நேற்றிரவு நீங்கள் சத்தமாகப் பேசிக்கொண்டிருந்தீர்கள். என்ன விஷயம்?"**

எரச் கூறினார், "நாங்கள் 'கடவுள் ஏக இறைவனாக ஒன்றானவர், அவர் பலராகவும் இருக்கிறார்' என்ற தலைப்பில், விவாதத்தில் ஈடுபட்டோம். ஹாரி அங்கே இருந்ததால் நாங்கள் சத்தமாகப் பேசிக் கொண்டிருந்தோம்." (கென்மோர், பார்வையற்றவர் மட்டுமின்றி, செவித்திறன் குறைபாடும் இருந்தது, மேலும் அவர் கேட்கும் விதத்தில் மண்டலி வழக்கத்தை விட சத்தமாக பேச வேண்டியிருந்தது.)

பாபா நாற்காலியில் அமர்ந்து **"அவர் என்ன கூறினார்?"** என்று கேட்டபோது, எரச், அவரது வார்த்தைகளை விவரித்தார். சில நிமிடங்களுக்குப் பிறகு, கென்மோர் மண்டபத்திற்குள் நுழைந்த வேளையில் பாபா இந்த சொற்பொழிவை வழங்கினார்:

ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளில் 'ஒன்றான' தன்மை மட்டுமே உள்ளது. மாயையில் 'பல' உள்ளன. உலகில் 'ஒரே கடவுளா? அல்லது பல கடவுள்களா?' என்ற குழப்பம் நிலவுவதற்குக் காரணம், கடவுள் எல்லையற்ற ஒருவராக இருப்பதால்தான்.

‘கடவுள் ஒருவரே’ என்று சொல்வது கூட தவறு. கடவுள் அந்த அளவுக்கு எல்லையற்றவராக இருப்பதால், அவரை ‘ஒன்றானவர்’ என்று கூட அழைக்க முடியாது. ஒருவர் இப்படி மட்டுமே சொல்லலாம்: “ஒன்றாக உளதாயிருப்பவர்.” கடவுள் என்ற வார்த்தை, அந்த ஒன்றானவருக்கு ஒரு பெயரைக் கொடுக்கும் முயற்சி மட்டுமே, ஏனெனில் உண்மையில் அவருக்குப் பெயர் இல்லை. ‘கடவுள் ஒன்றானவர்’ என்று கூறுவது கூட, அவர் இரண்டாக இருக்கும் சாத்தியக்கூறுகளைக் குறிக்கிறது. பல கடவுள்கள் என்று ஒருவர் கூறுவது பைத்தியக்காரத்தனம்.

அந்த ‘ஒன்றானவர்’ எண்ணிலடங்கா வேடங்களில் இருப்பதுதான் கடவுள். உதாரணமாக, எரச் கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்து, அவரது கற்பனையில் எண்ணற்ற விஷயங்களை உருவாக்குகிறார், மேலும் கற்பனை செய்யும் அந்தச் செயலிலேயே அவற்றைப் பாதுகாக்கிறார். பின்னர் அவர் கண்களைத் திறந்த அடுத்த கணமே, அவ்வாறு செய்வதன் மூலம் அவர் உருவாக்கி, பாதுகாத்து வைத்திருந்த கற்பனை அனைத்தையும் அழிக்கிறார். எனவே, அதே எரச், படைப்பவர், காப்பவர், அழிப்பவர் என்ற வெவ்வேறு பாத்திரங்களை வகித்தார்.

மீண்டும், ஹாரி தூங்கும் வேளையில், ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கும்போது - இதுவே கடவுளின் அசல் நிலை - மக்கள், ஹாரி தூங்கிக்கொண்டிருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் ஹாரி அவருடைய ஆழ்ந்த தூக்கத்தில் ஹாரியாகவும் இல்லை; அதாவது, அவர் தன்னை ஹாரியாக உணரவில்லை. அதே ஹாரி எழுந்ததும், மக்கள், ‘ஹாரி விழித்திருக்கிறார்’ என்றும், அதே ஹாரி பல் துலக்கும்போது, ’ஹாரி பல் துலக்குகிறார்’ என்றும் கூறுகின்றனர். அதே ஹாரி நடப்பது, ஓடுவது, பேசுவது, பாடுவது போன்றவற்றைப் பார்த்து, கேட்டு, புரிந்து கொள்ளப்படுகிறது. அதே ஹாரியும் வித்தியாசமான வேடங்களில் நடிக்கிறார். உண்மையில், ஹாரி ஒன்றுக்கு மேல் இருக்க முடியாது, ஏனெனில் ஒரு ஹாரி மட்டுமே இருக்கிறார்.

நாம் எப்பொழுதும் சொல்லக்கூடியது: “கடவுள் உளதாயிருக்கிறார்” அல்லது “கடவுள் ஒன்றானவர்.”

இரண்டு விஷயங்கள் உள்ளன: ‘ஒன்று’ மற்றும் ‘பல’. ஒன்றானவரை நாம் கடவுள் என்கிறோம்; பலவற்றை மாயை என்கிறோம். ஏன்? ஏனெனில் நிஜத்தில் ‘ஒன்றானவர்’ ஒருவர் மட்டுமே. இதை ஒருவர், ஒன்று என்று அழைப்பது கூட சரியல்ல - ஒன்றானவர் மட்டுமே உளதாயிருக்கிறார்.

பாபா மேலும் கூறினார், “அனைவரும், கடவுளாகிய பாபாவிடம் இவ்வாறு கேட்பது சிறந்தது: ‘ஓ பாபா! ஒருவராக இருப்பதன்றி வேறு எவராகவும் இருக்க முடியாத நீங்கள், என்னை உங்களுடன் ஒன்றாக்குங்கள்.’”

பாபா, கென்மோரிடம், “என்னை இந்த விவாதத்தில் ஈடுபடுத்தியதன் மூலம், நீங்கள் எனக்குத் தலைவலியை உருவாக்கிவிட்டீர்கள். இதற்குப்

பரிகாரமாக, வேடிக்கையாக ஏதாவது சொல்லுங்கள்" என்று கூறியதும், கென்மோர் உடனடியாக அதற்கு இணங்கி அவ்வாறே செய்தார்.

அப்போது பாபா அவரிடம், "**இப்போது நிறுத்துங்கள். எனது தாடைகள் வலிக்கும் அளவுக்கு என்னை சிரிக்க வைத்துள்ளீர்கள்**" என்றார்.

பாபா தனது கைகளை கழுவுவதற்குப் பயன்படுத்திய அலுமினியப் பாத்திரத்தை, மண்டலி மண்டபத்தில் தமதருகில் வைத்திருந்தார்; அதைக் கையில் எடுத்து, புக்காரின் வயிற்றை அழுத்தி அவரை கிண்டல் செய்து வந்தார். ஒரு நாள் காலை, பாபா அவ்வாறு செய்த வேளையில், அது எழுப்பிய ஒலியைக் கேட்டு சிரித்துவிட்டு, "**புக்கார் வெறுமையால் நிறைந்தவர்**" என்று கூறி, மேலும், "**வெறுமை நிறைந்ததாக இருப்பதே அதி சிறந்த நிலை. அதன் உண்மையான அர்த்தம் உங்களுக்குப் புரிகிறதா?**" என்று கேட்டார்.

கென்மோர் பதிலளித்தார், "அதாவது, பூம்பஞ்சிலிருந்து அழுக்கு நீரை பிழிவது போல, மாயாவில் அனுபவிக்கும் அனைத்து சிந்தனைகள், விருப்பங்கள் மற்றும் பிணைப்புகளை நீங்களே முற்றிலுமாக அகற்றுவதாகும்."

பாபா தலையசைத்து மேலும் விளக்கினார்:

இதன் பொருள் என்னவெனில், ஒருவரின் இதயத்தையும் மனதையும் உள்நோக்கித் திருப்புவது - அதாவது, வெறுமையாகவும் நிர்வாணமாகவும் மாறுவது. வெறுமையாக இருப்பது என்பது எல்லா ஆசைகளிலிருந்தும் விடுபடுவதாகும், அது இதயத்தைக் குறிப்பது. நிர்வாணமாக இருப்பது மனதைச் சார்ந்தது, மேலும் ஒருவரின் உண்மையான இலக்கைப் பின்தொடர்வதில் பிறரின் கருத்துக்கள், விமர்சனங்கள் அல்லது கண்டனங்களைப் பொருட்படுத்தாமல் இருப்பது.

ஜுனெய்த் (JUNAID) **வெறுமையாகவும் நிர்வாணமாகவும் ஆக வேண்டும் என்று அவரது குருநாதர் கூறியதன் அர்த்தம் இதுதான்.**

அக்காலத்து பொது ஜனங்கள் கடவுளைப் பற்றி அறியாததால், (தீர்க்கதரிசி) முஹமது அவர்களை செவிடர், ஊமை மற்றும் குருடர்கள் என்று குறிப்பிட்டார். "அவர்கள் பார்ப்பது எதுவும் உண்மையல்ல, அவர்கள் கேட்பது எதுவும் உண்மையல்ல, அவர்கள் சொல்வதெல்லாமும் உண்மையல்ல" என்று அவர் கூறினார். "இவ்வாறே, முழுமையாகத் திறந்த கண்கள் இருந்தும், அவர்கள் குருடர்கள்; காதுகள் இருந்தும், அவர்கள் செவிடர்கள்; மொழிவதற்கு வாய் இருந்தும், அவர்கள் ஊமைகள்."

"மறுபுறம், பயாஸித் (BAYAZID) **ஒருமுறை தனது சீடர் ஒருவரிடம், கடவுளை அறிய நீங்கள் செவிடராக, ஊமையாக மற்றும் குருடராக மாற வேண்டும் என்று கூறினார். இந்தக் கூற்று முஹமதின் கூற்றுக்கு நேர்மாறானது, ஆனால் இருவருக்கும் அவற்றின் சொந்த குறிப்பீடுகள் அல்லது எழுத்து, பேச்சு வடிவிலான குறிப்புரைகள் உள்ளன."**

பாபா, கென்மோரிடம் '**அவர் என்ன புரிந்துகொண்டார்**' என்று கேட்டார். அதற்கு கென்மோர், "உலக விஷயங்களில் பட்டும் படாமலும் பற்றற்று இருக்க வேண்டும்" என்று பதிலளித்தார்.

பாபா மேலும் கூறினார், **"இது சரிதான். நீங்கள் காது கேளாதவராகவும், ஊமையாகவும், பார்வையற்றவராகவும் மாறினால் மட்டுமே கடவுளை அடைய முடியும். அகந்தை உங்களை எந்த திசையிலிருந்தும் தாக்க முடியாது. அவர் இந்த நிலையை எட்டியதும், விலைமதிப்பற்ற ஆபரணமான ஃபிரான்சிஸ் போன்ற ஒருவருக்கு அலோபா மீது எரிச்சலும், கோபமும் வராது!"**

ஒரு நாள் புக்கார், கென்மோரை உல்லாசமாக நடைப்பயிற்சிக்கு அழைத்துச் செல்ல இருந்தபோது, பலத்த மழை பெய்ததால் அவர்களால் செல்ல முடியவில்லை. கென்மோர் பிரதான இல்லத்திற்கு எதிரே அமைந்த குடிலில் தங்கியிருந்தார். கென்மோரின் அறைக்குச் செல்லும்போது அவரின் காலணிகளும், காலுறைகளும் நனைந்துவிடும் என்று எண்ணி, கென்மோரைத் தனது முதுகில் தூக்கிக் கொண்டு, குறுகிய திறந்தவெளியைக் கடந்து, அவரது அறைக்கு அழைத்துச் சென்றார் புக்கார். ரானோ அங்கு நடந்த சம்பவத்தை பாபாவிடம் தெரிவித்தார்; அவர் அடுத்த நாள் காலை புக்காரை கண்டித்தார். **"டாக்டர் கென்மோர் போன்ற கனமான மனிதரை ஏன் சுமந்து சென்றீர்கள்?"** பாபா வினவினார். **"உங்கள் முதுகில் நான் அமர்ந்திருப்பது வேறு. இதனால் உங்களுக்கு மாரடைப்பு வரலாம்."** சில நாட்களுக்குப் பின்னர், உண்மையிலேயே புக்காருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. பாபா அவரிடம், **"இதை நீங்களே விலை கொடுத்து வாங்கிக் கொண்டீர்கள். ஆனால் நீங்கள் உயிரை விடமாட்டீர்கள். எனது வெளிப்பாடு வரை உங்களை உயிருடன் வைத்திருக்க விரும்புகிறேன். நீங்கள் எனது வெளிப்பாட்டைக் காண்பீர்கள். உங்கள் ஆசைகளை நான் நிறைவேற்றவில்லை, ஆனால் உங்கள் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுகிறேன்"** என்று கூறினார்.

1959 செப்டம்பர் 12 காலை 8:00 மணிக்கு, பாபா மண்டலி மண்டபத்திற்கு வந்து, முன்மொழியப்பட்ட ஏழைகளுக்கான திட்டத்தை எவருக்கும் தெரியப்படுத்தக்கூடாது என்று மண்டலியை எச்சரித்தார். அன்று வந்திருந்த மெஹர்ஜியிடமும் அதைக் குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை. இந்தக் காலகட்டத்தில், புக்கார் தினசரி நாட்குறிப்பை இந்தி மொழியில் எழுதிக் கொண்டிருந்தார்; பாபா அதை அனுமதித்திருந்தாலும், சிவப்பு நிறத்தில் கோடிட்டுக் காட்டப்பட வேண்டும், இது வெளியீட்டிற்காக அல்ல என்றும் குறிப்பிட்டார்.

கைக்கோபாத்தின் அறையிலிருந்து திரும்பிவந்த பாபா, அவரது உடல்நிலை குறித்து முறையிட்டு டாக்டர் கென்மோரிடம், **"இன்று எனது நிலை, நான் உயிரைத் துறந்தது போலாகிவிட்டது. உங்கள் வேடிக்கையான கதைகள் கூட என்னை இன்று சிரிக்க வைக்காது"** என்று கூறினார்.

ஆதி சீனியர் ஏதோ பணி குறித்து விவாதிக்க அன்று காலை வந்தார்; மெஹர்ஜி மதியம் 1:00 மணிக்கு வந்தவர், சில நாட்கள் தங்க அனுமதிக்கப்பட்டார்.

13ஆம் தேதி, பாபா மீண்டும் எதிர்வரும் பணியைப் பற்றி குறிப்பிட்டார்: **“இக்காலக்கட்டத்தில் உங்களில் எவரும் எனக்கு, எந்த வித தலைவலியையும் ஏற்படுத்தக்கூடாது. எல்லோரும் என்னை மகிழ்ச்சியாக வைத்திருக்க முயற்சிக்க வேண்டும், அதனால் நான் செய்யும் பணிகள் அனைத்தும் சிறப்பாக நிகழும். செப்டம்பர் 19ஆம் தேதியிலிருந்து துவங்கும் அடுத்த 40 நாட்கள், எனது பணியின் மிக முக்கியமான நாட்கள். எனவே பணியின் பொறுப்பு வழங்கப்பட்டவர்கள், தத்தமது கடமைகளை முழு மனதுடன் செய்ய வேண்டும். சிறு அளவிலான அலட்சியமும் இருக்கக்கூடாது. ‘மாயாவைத் தோற்கடிப்பது மட்டுமல்ல, அதை முழுவதுமாக நசுக்க வேண்டும்”** என்றும் அவர் கூறினார்.

1959 செப்டம்பர் 16 அன்று, மீண்டும் மாயாவின் சக்திகளைக் குறிப்பிட்டு, பாபா கூறினார்: **“இந்த 40 நாட்களில், மாயா, தடைகளை உருவாக்குவது உச்சத்தை எட்டி, அதன் எல்லையைச் சென்றடைந்து, உண்மைத் தன்மையை அம்பலப்படுத்தும். அவ்வாறு தன்னைத் தானே வெளிப்படுத்துவதன் மூலம், மாயா எனது பணியைச் செய்யும். சுருக்கமாகச் சொன்னால், எனது பணி, மாயாவை அம்பலப்படுத்துவது; அவ்வேளையில் உண்மைப்பொருள் வெளிப்படுகிறது. மாயா எனது பணியை மேலும் மேலும் எதிர்த்து, வேகமாகத் தனது வேலையைச் செய்வதால், அது தன் எல்லையை அடைந்து, தன்னை அம்பலப்படுத்திக்கொள்ள காரணமாக இருக்கிறது. சொல்லப்போனால், அது எனது விருப்பத்திற்கு ஏற்ப செயல்படுகிறது.**

“இம்முறை மாயா, எனது வழிமுறையின் ஊடகமுமாகத் திகழும் உங்களை வெல்ல முயற்சிப்பாள். நீங்கள் அனைவரும் தாக்கப்படுவீர்கள். சில சமயங்களில் இதுவும், சில சமயங்களில் அதுவும், வெவ்வேறு வழிகளில் நீங்கள் அதன் வேலையைச் செய்வீர்கள். எனவே இந்த நேரத்தில், எனது பணியில் எனக்கு உதவ, உங்களால் முடிந்தவரை முயற்சி செய்யுங்கள், நான் உங்களுக்கு வழங்கிய அறிவுரைகளை எக்காரணத்தைக் கொண்டும் மீறாதீர்கள். உங்களால் இயன்றவரை அவற்றை உறுதியாகப் பற்றிக்கொள்ளுங்கள்.”

பாபா, டாக்டர் கென்மோரை மண்டலி மண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்த மேஜையில் அவருக்கு வர்மமருத்துவ சிகிச்சை அளிக்க அனுமதித்தார். (அடுத்த இரண்டு நாட்களில் கென்மோர், பாபாவிற்கு அந்த சிகிச்சையை வழங்கினார்.)

அன்று பிற்பகல், 4:15 மணியளவில், பாபா, மண்டலியுடன் உலா வரும் போது, அவர் கூறினார், **“ஹாரி, மிகுந்த சிரமமெடுத்து எனக்கு சிகிச்சை அளித்ததில், இப்போது நான் நன்றாக உணர்கிறேன். சில நேரங்களில், நடக்கும் போதெல்லாம், நான் கடுமையான வலியை உணர்ந்தேன். இதர நேரங்களில் அது குறைவாக இருந்தது. ஆனால் எப்பொழுதும் ஒருவித வலி இருந்து கொண்டேயிருந்தது. சிறிதளவும் வலி இல்லாதது இதுவே முதல்**

முறை. இன்று நான் பிற நாட்களை விட அதிகமாக நடந்தேன், ஆனாலும் எனக்கு எந்த வலியும் இல்லை.”

ஹாரி கென்மோரைப் பற்றி பாபா கூறினார், **“அவர் உண்மையிலேயே ஓர் அசாதாரண மனிதர், சிறந்த இதயம், மிகையான புத்திசாலித்தனம் - அத்துடன் அற்புதமான வயிறு! அவர் நன்றாக உண்டாலும், ஐந்து நிமிடங்களில் தனது உணவை முடித்துவிடுகிறார். இன்னும் அவர் ஆரோக்கியமாகவும் வலிமையாகவும் இருக்கிறார்.”**

பாதிரி ஐந்து நாட்களுக்கு ஒருமுறை மெஹராபாத்திற்குச் சென்று, அங்குள்ள நிர்வாகத்தை கவனிக்கும்படி கட்டளையிடப்பட்டார்; அன்று அவர் திரும்பிவந்த வேளையில், பாபா அவரது அறைக்குள் சென்றுகொண்டிருந்தார்.

1959 செப்டம்பர் 17 வியாழன் அன்று, மண்டலி மண்டபத்தில், பாபா ∴பிரான்சிஸிடம் ‘ஓம் மையப்புள்ளி’ (OM POINT) குறித்து ‘இறைவனுடன் இணைந்திருங்கள்’ (STAY WITH GOD) புத்தகத்தில், அவர் எழுதிய பகுதியை வாசிக்கச் சொன்னார். பாபா அதை விளக்கிக் கூறுகையில், **“இது ஒரு ரகசியம் அல்லது மர்மம் என்று கூறலாம்; எனது முந்தைய வருகை காலங்களில், நான் இதை ஒருபோதும் தெளிவாக விளக்கவில்லை. அனைத்து வார்த்தைகளும் ‘ஓம்’ மையப்புள்ளியிலிருந்து வந்தவை”** என்றார்.

பாபா, கென்மோரிடம் அவரது உதடுகளை இறுக்கமாக மூடிக்கொண்டு, ‘ஆம்’ அல்லது ‘இல்லை’ என்று கூறி, சில கேள்விகளுக்கு பதிலளிக்குமாறு கேட்டுக்கொண்டார். பாபா தொடர்ந்து விளக்கினார், **“அப்போது நீங்கள் உருவாக்கும் ஒலி ‘ஹு-ஹு’ அல்லது ‘ஓம்’. அதீத சந்தோஷம் அல்லது துக்கத்தின் போது, இந்த ஒலி தானாகவே உங்கள் வாயிலிருந்து வெளியேறும். துக்கமாக, துன்பமாக அல்லது இன்பமாக, சந்தோஷமாக இருந்தாலும், இந்த ஒலி எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருக்கும்.”**

மறுநாள் காலை, பாதிரி, ஆதி, நோஷிர் ஸிகன்போரியா மூவரும் வந்தனர். நேருவின் மகள் இந்திரா காந்தி, ஷிர்டிக்கு புனித யாத்திரை செல்லத் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்பட்டது. அங்கு அவரை சந்தித்து, பாபாவைப் பற்றி எடுத்துக்கூறி, அவரை ஸாக்கோரிக்கு அழைத்துச் செல்லுமாறு பாபா, ஆதி சீனியருக்கு அறிவுறுத்தினார்.

அவர் மெஹர் பாபாவை சந்திப்பதில் விருப்பம் தெரிவித்தால், இரவில் கூட ஐந்து நிமிடங்களுக்கு அவரைப் பார்க்க அனுமதிக்கப்படுவார், ஆனால் அவர் முதலில் ஸாக்கோரிக்குச் சென்றால் மட்டுமே. பாபாவின் கடுமையான ஏகாந்தவாசத்தைக் கருத்தில் கொண்டு, இது ஆச்சரியமாக இருந்தது. இந்திரா காந்தி அப்போது மெஹராஸாத்திற்கு வரவில்லை அல்லது மெஹர் பாபாவை சந்திக்கவில்லை, ஆனால் அவர் இந்தியாவின் பிரதமரானார்.

மெஹராபாத்தில் வாழும் ஆண்கள் அனைவரும் அன்றிரவு 9:30 மணிக்கு அங்கு ஒன்று கூடுமாறு பாபா அறிவுறுத்தினார். டான் அவர்களுக்கு முன்பாக 'குருநாதருக்கான பிரார்த்தனை' (MASTER'S PRAYER) மற்றும் 'மனம் இரங்கி மன்னிப்பு கோரும்' பிரார்த்தனைகளை (REPENTANCE PRAYER) வாசிக்க வேண்டும்.

மாலை 6:00 மணிக்கு மெஹராஸாத்தில், பாபா அனைவரையும் அவரது இல்லத்திற்கு அழைத்தார். சில ஆங்கில இசைப்பதிவுகள் இசைக்கப்பட்டு, அதைத் தொடர்ந்து டாக்டர் ஹாரி கென்மோரால் பிரார்த்தனைகள் மொழியப்பட்டன. பாபா பின்பு மண்டலியை அனுப்பிவைத்து, அவர் கென்மோரை ஆரத்தழுவி முத்தமிட்டார்.

செப்டம்பர் 19ஆம் தேதி முதல் பாபாவின் பணி தீவிரமடைந்தது. அவர் கூறினார், **"அடுத்த 40 நாட்கள் எனது அவதார பணியின் மிக முக்கியமான காலகட்டமாக இருக்கும். தற்போதைய பணி, ஈடு இணையற்றதாகவும், நீங்கள் எப்பொழுதும் கனவிலும் கற்பனை செய்ய முடியாத அளவுக்கு மிகையாகவும் இருக்கும்."** பாபா உணவு, தண்ணீர் எதுவும் உட்கொள்ளாமல் காலை 7:30 மணி முதல் மாலை 4:30 மணி வரை உபவாசம் கடைப்பிடித்தார்.

ஓர் ஏழையின் கால்களைக் கழுவி, தலை வணங்கி, பத்து ரூபாய் பிரசாதமாக வழங்கினார். (எட்டு நாட்களுக்குப் பிறகு, ஜப்பானில் வீசிய ஒரு சூறாவளிப் புயலில் 5,000 பேர் கொல்லப்பட்டனர், லட்சக்கணக்கான மக்கள் தங்கள் இல்லங்களை இழந்தனர்.)

19ஆம் தேதி முதல், ஆண்கள் மற்றும் பெண்களில் ஒவ்வொருவரும், தினமும் அரை மணி நேரம் கடவுளின் பெயரை உச்சரிக்க வேண்டும் என்று பாபா கட்டளையிட்டார். பதினைந்து நிமிடங்களுக்கு அவர்கள் மீண்டும் இவ்வாறு மொழிய வேண்டியிருந்தது: **"ஓ அன்பான கடவுளே, டிசம்பர் இறுதிக்குள் பாபா தனது மௌனத்தைக் கலைக்கட்டும்."**

எவரும் மெஹராஸாத்தை விட்டு வெளியே செல்லவும், வெளியாட்களை உள்ளே அழைக்கவும் அனுமதிக்கப்படவில்லை. மேலும், அடுத்த 40 நாட்களுக்கு, பாபா எந்த ஆண் மண்டலியையும் முடித்திருத்தம் செய்ய அனுமதிக்கவில்லை.

பாபா தினமும் காலையில் கைக்கோபாத்துடன் தொடர்ந்து பணியாற்றினார். பாபா, கைக்கோபாத்தின் அறைக்குள் நுழைந்தவுடன், அவர் கைகளைத் தட்டினார், அதாவது அரை மணி நேரம் முழு மௌனம் காக்க வேண்டும் என்பதற்கான அடையாளம். கைக்கோபாத் பின்பு பிறரிடம், இந்த நேரத்தில் பாபா, அவருடைய கைகளைப் பற்றிப் பிடித்துக் கொண்டு, இருவரும் அமைதியாக, எதிரெதிராக அமர்ந்து, ஒருவரையொருவர் நோக்கிக் கொண்டிருந்தனர் என்றும் கூறினார். காலை 9:00 மணிக்கு பாபாவின் பணி நிறைவடைந்ததும், ஆண் மண்டலி, மண்டபத்தில் கூடினர். ஏழை மனிதர் ஒருவர் அழைத்து வரப்பட்டு, அந்த மனிதரை ஒரு குறுகிய நாற்காலியில் நிற்கச் செய்து, பாபா, அந்த ஏழையின் கால்களைக் கழுவி, துடைத்து உலரச் செய்து,

தலைவணங்கி, அவருக்கு பிரசாதத்தை வழங்கினார். இதைத் தொடர்ந்து தரை சுத்தம் செய்யப்பட்டதும், மண்டபத்தின் கதவுகள் மூடப்பட்டன. கைக்கோபாத்தின் கைகளைப் பற்றிக்கொண்டு நின்ற பாபாவுடன், பிற அனைவரும் நின்றுகொண்டிருந்தனர். டாக்டர் கென்மோர் (குருநாதருக்கான) பர்வர்திகார் பிரார்த்தனை மற்றும் மனம் வருந்தி மன்னிப்பு கோரும் பிரார்த்தனை இரண்டையும் மொழிந்தார். அதைத் தொடர்ந்து பாபா, பொதுவாக பைதூல், மெஹர்தாஸ் ஆகியோரை அல்லது சிலரை அல்லது அனைவரையும் தலைவணங்கினார்.

19ஆம் தேதி இந்த நிகழ்ச்சி நிறைவடைந்ததும், பாபா அவரது அறைக்கு ஓய்வெடுக்கச் சென்றார். மண்டபத்தை விட்டு வெளியேறும் முன்னர், அவர் கென்மோரிடம், **"இந்தப் பணி எனது உயிரைப் பறிக்கும்"** என்று கூறினார். பின்னர், அவர் இதை **'உண்மையில் நடப்பதாக அர்த்தப்படுத்தவில்லை, ஆனால் அவர் அதீத வேதனையை தாங்கவும், பல பிரச்சினைகளை எதிர்கொள்ளவும் வேண்டியிருக்கும்'** என்று விளக்கினார்.

அன்று இரவு பாபாவின் வயிறு வீக்கமடைந்து, மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டது. மறுநாள் காலையில், டாக்டர் கோஹெரால் பரிசோதிக்கப்பட்ட பின்பு, பாபா அவரிடம், **"இதற்கு எந்த நோயும் காரணமல்ல என்பதை இப்போது நீங்கள் உறுதியாக நம்புகிறீர்களா?"** எனக் கேட்டு விளக்கினார்: **"நான் கடுமையான பணியில் மூழ்கியிருக்கும் போதெல்லாம், எனது வயிற்றில் சில தொந்தரவுகள் எழுகின்றன, அந்த நேரத்தில் நான் நோய்வாய்ப்படுகிறேன்."**

சில நாட்களுக்குப் பிறகு பாபா வெளிப்படுத்தினார், **"நான் எனது சிறப்புப் பணியைத் தொடங்கும் போதெல்லாம், எனது வயிற்றில் ஏதாவது தொல்லை ஏற்படுகிறது. இது எனது வழக்கமான பணியின் விளைவு அல்ல, முற்றிலும் வேறுபட்டது. நான் எனது சில சிறப்புப் பணிகளில் மூழ்கியிருக்கும் போதெல்லாம், இயற்கையான சுவாசம் நின்றுவிடுகிறது, நான் சுவாசிக்க வேறு வழிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். இது யோகாவைச் சார்ந்த செயல் அல்ல. இது வேறு. இந்தப் பணியை நிறைவுசெய்த பின்னர், எனது வயிறு அதன் இயற்கையான நிலையில் தொடர்ந்து செயல்படும்."**

அவர் இவ்வாறு கூறி முடித்தார், **"அக்டோபர் மாதத்தில், நான் பெரும் சிரமங்களை சந்திக்க நேரிடும். இந்த சிரமங்களைக் கடந்து, என் உடல் நிலைத்திருந்தால், டிசம்பர் மாதத்தில் நான் எனது மௌனத்தைக் கலைப்பேன் என்று மெஹராவிடம் கூறினேன்."**

1959 செப்டம்பர் 20அன்று, பூட்டி, BHOOTY (குலு - GULU என்றும் அழைக்கப்படுகிறது), திபெத்திய மாஸ்டிஃப் (TIBETAN MASTIFF) பெண்ணின நாய் மெஹராஸாத்தில் உயிரைத் துறந்தது. பாபா, 1948இல் உத்தர்காஷியில் இருந்தபோது, குட்டியாக இருந்த இந்த நாயை உடன் அழைத்து வந்தார்; காக்கா அதைக் கண்காணித்து, பராமரித்து வந்தார். அன்று மதியம் அது மெஹராஸாத்தில் அடக்கம் செய்யப்பட்டது, அடுத்த பிறவியில் பூட்டி மனித

உருவம் எடுக்கும் என்று பாபா கூறினார். மனம் வருந்தி மன்னிப்புக் கோரும் பிரார்த்தனை (REPENTANCE PRAYER) மொழியப்பட்டது; பாபாவே முதல் கைப்பிடி மண்ணை அதன் உடல் மீது தூவினார். பலமுறை பாபா மீண்டும் கூறினார்: **"பூட்டி ஆசீர்வதிக்கப்பட்டது, மிகச் சில பிராணிகளுக்கே இத்தகைய வாய்ப்பு கிடைக்கிறது."** மெஹராஸாத்தில் இப்போது இரண்டு நாய்கள் மட்டுமே இருந்தன: மஸ்தான், MASTAN (பூட்டியின் குட்டி) மற்றும் பீட்டர். மெஹரா, மஸ்தானையும், மணி, பீட்டரையும் கவனித்துக் கொண்டனர்.

1959 செப்டம்பர் 25 வெள்ளிக்கிழமை அன்று, நரிமனும் மெஹர்ஜியும் வந்தபோது அவர்கள் அரை மணி நேரம் தங்க அனுமதிக்கப்பட்டனர். பாபா, நரிமனிடம், **"அக்டோபர் மாதம் மிகவும் முக்கியமானது. பாபாவின் தாமனை** (மேலங்கி) **மிகவும் இறுக்கமாகப் பற்றிக்கொண்டு, அக்டோபர் வரை ஒவ்வொரு நாளும் சிறிது நேரம், இறை நாமத்தை உச்சரிக்க வேண்டும் என்பதை அனைவருக்கும் தெரிவிக்கவும். அவர்கள் இதை எனது கட்டளையாக எடுத்துக் கொள்ள வேண்டும்"** என்று கூறினார்.

இதற்கிடையில், ஹாரி கென்மோர் அமெரிக்காவிற்கு திரும்புவதை நினைத்து மனச்சோர்வடைந்தார். 26ஆம் தேதி, பாபா அவருக்கு ஆறுதல் கூறினார், **"கடவுளுக்கு முன்னால், 'நாளை' என்பதை நினைத்து நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? நான் உங்கள் இதயத்தில் இருக்கிறேன். உங்கள் அன்பை நான் அறிவேன்; நீங்கள் வெளிப்படுத்துவது, வெளிப்படுத்தாதது அனைத்தையும் நான் அறிவேன். உங்களின் அளப்பரிய ஆர்வமாக என்ன இருக்கும் என்பதும் எனக்குத் தெரியும். அப்படியானால், நான் உங்களை இங்கேயே இருக்கச் செய்தாலோ அல்லது அமெரிக்காவிற்கு அனுப்பினாலோ உங்களுக்கு ஏன் கவலை? யாருக்குத் தெரியும், நான் உங்களை அக்டோபர் இறுதிக்குள் அனுப்பலாம், அல்லது டிசம்பர் வரை நான் உங்களை இங்கே இருக்கச் செய்யலாம். எப்படி இருந்தாலும், நீங்கள் ஏன் 'நாளை' வருவதைப் பற்றி கவலைப்படுகிறீர்கள்? உங்கள் கவலைகள் அனைத்தையும் என்னிடம் கொடுத்துவிட்டு, அக்டோபர் வரை என்னுடன் நிம்மதியாக இருங்கள்."**

அப்போது பாபா வேடிக்கையாகக் கூறினார்: **"உண்மையில் நீங்கள் சுத்த முட்டாள்! எனது மண்டலி முட்டாள்கள்! நீங்கள் மட்டுமே இங்கு புத்திசாலி என்று நினைத்தேன், ஆனால் இப்போது நீங்களும் அவர்களில் ஒருவராக நிரூபிக்க முயற்சிக்கிறீர்கள்!"** கென்மோர் சிரித்தார்.

28ஆம் தேதி, ஜால்பாய் சிறிது காலம் தங்குவதற்காக பூனாவிலிருந்து மெஹராஸாத் வந்தார். இரண்டு நாட்களுக்குப் பிறகு, பெஹராமின் மனைவி பெரின் தனது மகன்களான ஸொராப், ருஸ்தம், மகள் குல்னார், அவரது வருங்கால கணவர் ஜெஹாங்கு ஸுகத்வாலா ஆகியோருடன் வந்தார். (அன்று கைக்கோபாத்துடனான தனது பணியிலிருந்தும், ஏழைகளின் கால்களைக் கழுவும் நிகழ்ச்சியிலிருந்தும் பாபா 'விடுப்பு' வழங்கினார்.) குல்னார், ஜெஹாங்கு

ஸுகத்வாலா இருவரின் திருமணத்திற்கு ஒப்புதல் அளித்து, பாபா, அக்டோபர் 16ஆம் தேதி மும்பையில் அவர்களது திருமண தேதியை நிர்ணயம் செய்தார். அவர் ஜெஹாங்குவிடம், **"குல்னாரைக் கண்டுகொண்டதில் நீங்கள் உண்மையிலேயே அதிர்ஷ்டசாலி, ஏனெனில் குல்னார் மூலம் நீங்கள் என்னைக் கண்டுகொண்டீர்கள்!"** என்றார்.

அவர்கள் புறப்படும் போது, பலத்த மழை பெய்தது - இது ஒரு நல்ல சகுனம் மற்றும் தம்பதியினருக்கு பாபாவின் ஆசீர்வாதங்கள் வெளிப்படுவதற்கான ஆதாரம். மழை காரணமாக, சாலையில் குறுக்கிடும் ஓடைகள் நிரம்பி ஓடியதால், அவர்கள் புறப்பட இரண்டு மணி நேரம் தாமதமானது.

(அக்டோபர் மாதத்தில், திருமணத்திற்கு 12 நாட்களுக்கு முன்பு, பெஹ்ராம் வயிற்றுப்புண்ணால் மிகவும் சிரமப்பட்டார். அவர் மருத்துவமனைக்குச் செல்லவும் தயாராக இல்லை; ஆனால் குடும்பத்தினருக்கும் பாபாவிற்கும் இடையே தொலைதந்திகள் பரிமாறப்பட்டு, பின்னர் அவர் இணக்கம் தெரிவித்தார். பெஹ்ராமிற்கு அவசர அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அவரது உடல்நிலை காரணமாக குல்னாரின் திருமணத்தில் கலந்துகொள்வது சாத்தியமில்லை என்று மருத்துவர் கூறினார். பாபாவிற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதும், அவர் மீண்டும் தொலைத்தந்தி அனுப்பினார்: **"திருமண ஏற்பாடுகளைத் தடையின்றி தொடருங்கள். கவலைப்பட வேண்டாம் என்று பெஹ்ராமிடம் கூறுங்கள். நான் அவருடன் இருக்கிறேன்"** பாபாவும் குடும்பத்தினரிடம் கூறினார், **"அனைத்தையும் என்னிடம் விட்டுவிடுங்கள். திருமணம் தள்ளிப் போகாது,"** என்றும், பெஹ்ராம் தொடர்ந்து பாபாவின் பெயரைத் திரும்பத் திரும்ப உச்சரிக்குமாறும் அவர் கட்டளையிட்டார். மருத்துவர், பெஹ்ராமிடம் ஒரு மாதத்திற்கு எங்கும் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தினார், ஆனால் பெஹ்ராம் தனது குடும்பத்துடன் மும்பைக்கு திருமணத்திற்குச் சென்றார். டாக்டர் இதுகுறித்து கருத்துத் தெரிவிக்கையில், "எனது 35 வருட அறுவை சிகிச்சை அனுபவத்தில், எந்த ஒரு மனிதரும் இவ்வளவு விரைவாக குணமடைந்ததில்லை!" என்று கூறினார்.)

1959 செப்டம்பர் 30 அன்று, பாபா ஒரு சில அறிவுறுத்தல்களுக்காக ஆதியை மெஹ்ராஸாத்திற்கு அழைத்து, அக்டோபர் மாதம் முழுவதும் அவரைப் பார்க்க வாய்ப்பில்லாமல் போகலாம் என்று கூறினார். அவரிடமும் பிற அனைவரிடமும் இவ்வாறு தெரியப்படுத்தினார்: **"அக்டோபர், எனக்கு சிரமமானதாக இருக்கும். நாளை முதல் எனது தீவிரமான பணி தொடங்க உள்ளது. இன்று விடுமுறை என்பதால் மகிழ்ச்சிகரமாகக் கடந்துவிட்டது. இனி, நாளை முதல் எனது பணி, உயிரைப் பறிக்கும் அழுத்தத்துடன் தொடங்கும். நான் டிசம்பர் மாதத்தில் 'என் இறை வெளிப்பாட்டை நிகழ்த்துவேன்' என்பதை எனது தெய்வீக நேர்மையுடன் இன்று நான் உங்களுக்குச் சொல்கிறேன். இதை நான் உறுதியாக உங்களுக்குச்**

சொல்கிறேன். இப்போது அதில் எந்த சந்தேகமும் இல்லை"; பாபா இதை ('இறை வெளிப்பாட்டின் நிகழ்வு') மூன்று முறை எடுத்துரைத்தார்; மேலும் ஒவ்வொரு முறையும் '**ஆமென்**' என்று மீண்டும் மொழியுமாறு மண்டலிக்கு அறிவுறுத்தினார்.

அடுத்த நாள், அக்டோபர் 1ஆம் தேதி, பாபா கூறினார்: **"எனது பணியின் கடைசி, கடினமான மற்றும் முக்கியமான கட்டம் இன்று முதல் 28 நாட்களுக்குத் தொடரும். இது என்னை சிலுவையில் அறைவதன் ஆரம்பமாக இருக்கும். இந்தப் பணியின் பலன், நிகழும் ஆண்டு இறுதிக்குள் வெளிப்படும். நான் விரும்புவதைச் செய்து, எனக்கு உதவ நீங்கள் அனைவரும் 100 சதவீதம் முயற்சி செய்ய வேண்டும்."**

முந்தைய நாளை 'விடுமுறை'யாக பாவித்தாலும், பாபா, இரண்டு ஏழைகளின் பாதங்களைக் கழுவி, தலைவணங்கிய பின்னர், அவர்களுக்குப் பிரசாதம் வழங்கினார். பாபா ஏழைகளுடனான தமது பணியை நிறைவு செய்ததும், கென்மோர் பிரார்த்தனைகளை மொழிந்தார். அன்று மதியம் பெண் மண்டலி மண்டபத்திற்கு அழைக்கப்பட்ட போது, கென்மோர் 'குருநாதருக்கான பிரார்த்தனை' மற்றும் மனம் வருந்தி மன்னிப்புக் கோரும் பிரார்த்தனையை மீண்டும் மொழிந்தார்; அதைத் தொடர்ந்து, பாபா எடுத்துரைத்த பின்வரும் பிரார்த்தனையையும் மொழிந்தார்:

சர்வவல்லமையுள்ள கடவுளே, இன்று, அக்டோபர் 1ஆம் தேதி தொடங்கி, அக்டோபர் 28ஆம் தேதி வரை, பாபாவின் மாபெரும் பணியில் அவருக்கு உதவுங்கள்; இதனால் அவரது 'இறை வெளிப்பாடு' 1959 டிசம்பர் 31ஆம் தேதிக்கு முன்பு சாத்தியமாகும். மேலும் ஆண், பெண் மண்டலிக்கும் உதவுங்கள், அதனால் அவர்கள், அவரது 'இறை வெளிப்பாட்டின்' இறுதி வரை அவரது தாமனை (மேலங்கி) **உறுதியாகப் பற்றிக்கொள்ளலாம்.**

பாபாவின் உபவாச நேரம் காலை 7:00 மணி முதல் மாலை 4:00 மணி வரையாக மாற்றப்பட்டது.

1959 அக்டோபர் 2 அன்று, பாபாவின் அருகில் அலோபா செல்வதை அனுமதிக்கக் கூடாது என்று டாக்டர் கென்மோர் தனது கருத்தை வெளிப்படுத்தினார், ஏனெனில் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் அவர், பாபாவை ஒரு நாள் காயப்படுத்தலாம். (அலோபா, சில சமயங்களில், பாபாவின் காலடியில் விழுவதை பழக்கமாகக் கொண்டதால், அவரது தலை பாபாவின் பாதத்தில் படும் என்ற அச்சம் எழுந்தது.) கென்மோர், "உணர்ச்சி நுழையும் போது, அறிவு வெளியேறுகிறது" என்று குறிப்பிட்டார்.

பாபா உடனே, **"அன்பு நுழையும் போது, உணர்ச்சியும், பகுத்தறிவும் வெளியேறும்!"** என்று கூறினார்.

அதே நாளில், சந்திரன் மற்றும் இதர கிரகங்கள் குறித்த தலைப்பைப் பற்றி விவாதிக்கும் போது, பாபா பின்வருமாறு விளக்கினார்:

இருபது அல்லது முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, பூமியைத் தவிர, உயிரினங்கள் வாழும் இதர கிரகங்கள் இருப்பதை நான் சுட்டிக்காட்டினேன். ஆனாலும், கடவுளை இப்பூவுலகில் மட்டுமே உணர முடியும் என்பதை நான் உறுதியாகக் கூறுகிறேன். கடவுள் எங்கும் இருக்கிறார், ஆனால் அவர் இந்த பூமியில் மட்டுமே அவதார புருஷராகத் தோன்றுகிறார். பரிபூரண குருநாதர்கள் பூமியில் மட்டுமே காணப்படுகின்றனர், வேறு எங்கும் இல்லை. ஒரு கிரகத்தில் மக்கள், நூற்றுக்கணக்கான ஆண்டுகள் உயிர்வாழும் விதத்தில் தங்கள் புத்தித்திறனை மேம்படுத்தியுள்ளனர். ஆனால் அங்கு வாழும் மக்கள் 99 சதவீதம் நாத்திகர்கள். இந்தப் பரிணாம வளர்ச்சியடைந்த கிரகங்கள் அனைத்திலும், மனம் ஆதிக்கம் செலுத்தும் அதே வேளையில், இதயம் முற்றிலும் வளர்ச்சியடையவில்லை. சில கிரகங்களில், மக்கள் முற்றிலும் இதயம் இல்லாதவர்களாக இருக்கின்றனர்; அன்பை உணர ஒரு சதவீதம் கூட இடம் இல்லை. பூமியைத் தவிர, பிற அனைத்து பரிணாம உலகங்களிலும் அறிவு மட்டுமே நிலவுகிறது. எனவே, அந்த கிரகங்களில் கடவுளை உணர முடியாது. இந்த ஆத்மாக்கள் இறைவனை உணர இப்பூவுலகில் பிறவி எடுத்தாக வேண்டும்.

அக்டோபர் 4ஆம் தேதி, பாபா இந்தப் பிரார்த்தனையை தன்னிச்சையாக எடுத்துரைத்தார், அதை அவர் முன்னிலையில் மொழியுமாறு டாக்டர் கென்மோருக்கு அறிவுறுத்தினார்:

உமது சித்தம் நிறைவேறட்டும், ஓ பூரணமானவரே,
எனது விருப்பம் ஏற்கப்படாது, அதனால் எந்த பயனுமில்லையே.
உன்னுடன் என்றென்றும் ஐக்கியமாவதைப் பொறுத்தவரை,
நான் உழைத்து பாடுபடுவேன் உயிருடன் இருக்கும் வரை.
இரவு, பகல் அனைத்தும் உம்மை நேசிப்பதற்கும் கீழ்ப்படிவதற்கும்,
நானே உழைத்து உரிமையைத் தேடினேன் உன்னுடன் இணைவதற்கு!

பாபா வெளியிட விரும்பும் ஒரு சுற்றறிக்கையைக் குறித்து விவாதிக்க, ஆதி 6ஆம் தேதி அழைக்கப்பட்டார். டாக்டர் டான் மற்றும் நோஷிர் ஸிகென்போரியா சில அறிவுறுத்தல்களுக்காக மெஹராபாத்திலிருந்து அதே நாளில் வந்தனர்.

அறிவுறுத்தப்பட்டதற்கு இணங்க, மெஹராஸாத் மற்றும் மெஹராபாத் மண்டலி அனைவரும் அன்று இரவு 8:00 மணி முதல், 7ஆம் தேதி 24 மணி நேரம், உணவு, தண்ணீர் உட்கொள்ளாமல் உபவாசம் கடைப்பிடித்தனர். பாவ் கல்சூரி இரவு நேரக் கண்காணிப்பில் இருக்க வேண்டியிருந்ததாலும், மாலை உணவைத் தவிர்த்துவிட்டதாலும், உபவாசத்திற்கு பதிலாக மௌனம் காக்கும்படி அவருக்கு உத்தரவிடப்பட்டது. பாவ் கல்சூரி மண்டலி மண்டபத்தில், முந்தைய நாள் பாபா விநியோகித்த ஒரு சாக்லேட்டை அவிழ்த்து எரச், ∴பிரான்சிஸ் மற்றும் புக்காரிடம் காட்டினார்.

‘**அங்கே என்ன நடக்கிறது**’ என்று பாபா கேட்டதும், புக்கார் அவரிடம், “நாங்கள் சாப்பிட முடியாது, அவரால் (பாவ்) பேச முடியாது” என்று கூறினார்.

பாபா பதிலளித்தார்:

நாக்கு மௌனமாக இருக்கும்போது மனம் பேசும்;
மனம் அமைதியாக இருக்கும்போது இதயம் பாடும்;
இதயம் பாடுவதை நிறுத்தும்போது, பரமாத்மா அதன்
'ஏக இறை' எனும் அசல் சுயத்தை அனுபவிக்கத் தொடங்கும்.

பாபா தொடர்ந்தார், **“ஆழ்ந்த தூக்கத்தில், நாக்கு, மனம் மற்றும் இதயம் அமைதியாகும் வேளையில், ஒருவன் சுயநினைவை இழக்கிறான். மனதை முழு உணர்வு நிலையில் அமைதியாக வைத்திருப்பது சிரமம். ஆழ்ந்த தூக்கத்தில் விழித்திருக்க முடிந்தால், அதுவே அவனது இறுதி இலக்கு! அதாவது, ஆதி முதலாக இருந்த நித்தியமான அதே இறைநிலை!”**

அன்று பாபா, அவரது அன்பர்களுக்கு மேலும் அறிவுரைகளை வழங்கினார்; இந்த அறிவுறுத்தல்கள் ஒரு சுற்றறிக்கையாக வெளியிடப்பட்டன. **நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் தமது உலகளாவிய பணியில் முழுமையாக ஈடுபட உள்ளதாக அவர் குறிப்பிட்டார். எனவே, டிசம்பர் இறுதி வரை, அவருக்கு கடிதம் எழுதவோ அல்லது அவரைப் பார்க்கவோ வேண்டாம் என அன்பர்களைக் கேட்டுக்கொண்டார். எவ்வாறாயினும், யார் ஒருவருடைய கடுமையான நோய் அல்லது மரணம் குறித்து பாபாவிடம் தெரிவிக்க ஆதி அனுமதிக்கப்பட்டார். இந்தியாவிலும் பிற இடங்களிலும் இறை நாமத்தை உச்சரிக்க முன்வந்தவர்கள் அனைவரும், அக்டோபர் 28ஆம் தேதிக்குப் பின்னர் அதைத் தொடர வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டனர்.**

“அதற்குப் பிறகு, நான் என் உலகளாவிய பணியைத் தனியாகச் செய்யும் வேளையில், என் அன்பர்களிடமிருந்து எந்த உதவிக்கான தேவையும் இராது. மேற்கத்திய அன்பர்களும் என்னைப் பார்க்க இந்தியாவிற்கு வர ஆர்வமாக உள்ளனர், ஆனால் நான் அவர்களின் வருகையை காலவரையின்றி தள்ளிவைத்தேன்” என்று பாபா கூறினார்.

பாபா இவ்வாறு கூறி முடித்தார், **“நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில், மண்டலி அல்லது வேறு எவரிடமிருந்தும், எந்த இடத்திலிருந்தும், எந்தவிதமான இடையூறும் முற்றிலும் விரும்பத்தகாதது. அக்டோபர் மாத இறுதியில் என்னைப் பார்க்கவோ அல்லது எனக்கு எழுதவோ நினைப்பவர்கள், எனது விருப்பத்தைப் பூர்த்திசெய்வதற்காக அவர்களின் பொறுமை மற்றும் ஆர்வத்தை இப்போது கட்டுப்படுத்த வேண்டும்.”**

∴பிரான்சிஸ் பிராபஸோனின் ‘இறைவனுடன் இணைந்திருங்கள்’ (STAY WITH GOD) புத்தகத்தின் முதல் பிரதி 1959 அக்டோபர் 8 அன்று மெஹராஸாத்தை வந்தடைந்தது. சம்பந்தப்பட்ட ஆஸ்திரேலியா அன்பர்களுக்கு பாபா தொலைத்தந்தி அனுப்பினார்: **“‘இறைவனுடன் இணைந்திருங்கள்’ புத்தகம்**

என்றென்றும் நிலைத்திருக்க அது என்னிடம் வந்துள்ளது. அதை ஓர் உன்னதமான புத்தகமாக வெளிவர உதவிய அனைவருக்கும் என் அன்பை வழங்குகிறேன்.” (28ஆம் தேதி, பாபா புத்தகத்தின் 200 பிரதிகளில் கையெழுத்திட்டார், அவற்றில் பலவற்றை அவர் மேற்கத்திய நாடுகளில் வாழும் சில அன்பர்களுக்கு அனுப்பிவைத்தார்.)

டாக்டர் கென்மோரிடம், பாபா கடுமையான துன்பங்களை சந்திக்க நேரிடும் என்று கூறியது உண்மையாகி விட்டது. 9ஆம் தேதி, முந்தைய இரவு பெண்டுவின் கண்காணிப்பின் போது அவரது உடல்நிலை மிகவும் மோசமாக இருந்ததாக அவர் குறிப்பிட்டார், அவர் தனது மௌனத்தைக் கலைத்துவிடுவார் போலத் தோன்றியது. **“இதுபோன்ற கடினமான மற்றும் இடர்பாடான இரவை நான் இதற்கு முன்பு கழித்ததில்லை”** என்று அவர் கூறினார். **‘அத்தகைய ஓர் இரவைக் கழித்த பின்னர், அவர்களின் பிரார்த்தனையின் பலனாகத்தான் அவர்களிடையே இருக்க முடிந்தது’** என்று பாபா மண்டலிக்குத் தெரிவித்தார்.

10ஆம் தேதி, தமது இல்லத்திற்குள் செல்லும்போது, பாபா, **“நான் முடிவில்லா ஏக இறைவன், ஆனால் இன்று நான் லட்சக்கணக்கான ஆண்டுகளைக் கடந்த ஒரு வயதான மனிதனைப் போல் உணர்கிறேன்”** என்று குறிப்பிட்டார்.

அடுத்த நாள், அவர் கூறினார், **“நான் மிகவும் சோர்வாக இருக்கிறேன், தூங்க விரும்புகிறேன். இந்த வகையான சோர்வு முற்றிலும் வேறுபட்டது, இதற்கு 700 வருட கால தூக்கம் தேவைப்படுகிறது!”**

நவ்ஸாரியின் ஹோஷங் பரூச்சா (32), கோவாஸ் வெஸ்னா இருவரும் குருபிரசாத்தில் தங்குவதற்கு கடந்த மார்ச் மாதம் அழைக்கப்பட்டனர், ஆனால் அவர்கள் வந்த அதே நாளில் பாபா அவர்களை திருப்பி அனுப்பினார். 1959 அக்டோபர் 15 அன்று, ரயிலில் அஹமதுநகர் வந்த அவர்களை, பாதிரி மெஹராஸாத்திற்கு காலை 9:30 மணிக்கு அழைத்துச் சென்றார். இருவரும் பதினொரு நாட்கள் தங்க அனுமதிக்கப்பட்டனர்.

பாபா அவர்களிடம் கூறினார்: **“25ஆம் தேதி வரை நீங்கள் இங்கே இருக்கலாம். நான் உங்களுக்கு ஏதேனும் ஓர் ஊரில்** (இறுதியில் அது ஸூரத் நகரமாக இருந்தது) **முக்கியமான பணி ஒன்றைத் தர உள்ளேன். அதை நிறைவு செய்து, நீங்கள் 31ஆம் தேதி** (அக்டோபர்) **அன்று நவ்ஸாரியில் உங்கள் இல்லங்களுக்குத் திரும்பலாம். டிசம்பர் இறுதி வரை, நவ்ஸாரியை விட்டு வெளியே செல்லாதீர்கள். எனது ஏகாந்தவாச காலகட்டத்தில் இங்கே இருப்பது உண்மையிலே உங்கள் அதிர்ஷ்டம். 17, 19, 21, 23 ஆகிய தேதிகளில், நீங்கள் உணவு, தண்ணீர் எதுவும் உட்கொள்ளாமல், காலை 8:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை மௌனம் காக்க வேண்டும். நான் மண்டலிக்கு பல கடமைகளை வழங்கியுள்ளேன். பதினொரு நாள் நீங்கள் இங்குத் தங்கும் வேளையில், தினமும் மண்டலி மண்டபத்தை சுத்தம் செய்வது உங்கள்**

கடமையாகும். எனது நாற்காலியை தனியாக ஒருவர் தூக்காதீர்கள், இருவரும் சேர்ந்து தூக்குங்கள்.

"நீங்கள் வருவதற்கு முன்பு, நான் பல சொற்பொழிவுகளை வழங்கினேன், அவற்றை ஃபிரான்சிஸ் பதிவு செய்துள்ளார். நீங்கள் இங்கு தங்கியிருக்கும் போது உங்களுக்குப் படிப்பதற்காக வழங்கப்படுவதை நீங்கள் பிறருக்கு விளக்க வேண்டும். உங்கள் ஆரோக்கியத்தை கவனித்துக் கொள்ளுங்கள். நீங்கள் இங்கே இருக்கும் வேளையில், உலகின் எதையும் நினைவில் கொள்ளாதீர்கள். உலகை மறந்து உங்கள் மனதில் என்னை மட்டும் வைத்துக் கொள்ளுங்கள். காலை 7:00 மணிக்கு சிற்றுண்டி, தேநீர், மதியத்திற்கு முன் மதிய உணவு, பிற்பகல் 3:00 மணிக்கு தேநீர், இரவு 7:00 மணிக்கு இரவு உணவும் வழங்கப்படும். நன்றாக உண்ணுங்கள்."

ஹோஷங் பல்வேறு நவ்ஸாரி அன்பர்கள் சார்பில் இனிப்பு மற்றும் தின்பண்டங்களின் பரிசுப் பொட்டலங்களைக் கொண்டு வந்திருந்தார். அவை மண்டபத்திற்கு வெளியே வைக்கப்பட்டிருந்தன, பாபா அவற்றை மண்டபத்திற்குள் எடுத்து வருமாறு கூறினார். ஒவ்வொரு பொட்டலத்தைத் திறக்கும்போதும், பாபா அதிலிருந்து ஒரு சிறிய பகுதியை எடுத்து டாக்டர் கென்மோரிடம் சுவைக்கக் கொடுத்தார். அவர் இனிப்புகளை மிகவும் விரும்பினார். அனைத்து பொட்டலங்களையும் திறந்து, கென்மோர் அவற்றை சுவைத்து முடித்ததும், மகிழ்ச்சியுடன் கூறினார், "ஒவ்வொரு வார இறுதியிலும் இந்த அன்பர்கள் நம்மைப் பார்க்க வரவேண்டும்!"

பாபா சிரித்துக்கொண்டே டாக்டர் கென்மோரைப் பற்றி அவர்களிடம் கூறினார்: **"ஹாரி தனது பணத்தை எனது நோக்கத்திற்காக மிகவும் தாராளமாக பயன்படுத்துகிறார். அவர் அதி புத்திசாலி, நகைச்சுவை நயம் படைத்தவர் மற்றும் என் மீது அளப்பரிய அன்பு கொண்டவர். அவர் எனக்கு முழு மனதுடன் கீழ்ப்படிகிறார். அவரால் பார்க்க முடியாது, ஆனால் எல்லாவற்றையும் தனது ஒலிப்பதிவு கருவியில் பதிவு செய்கிறார். அவர் ஒரு புதிய** (போலராய்டு) **கேமராவைக் கொண்டு வந்துள்ளார். ஒரு நிமிடத்திற்குள் சித்திரங்களை உருவாக்க முடியும்."**

மதிய உணவுக்குப் பிறகு, பாபா மண்டலி மண்டபத்திற்குத் திரும்பி வந்ததும், புக்காரின் உரத்த கைதட்டல் அனைவரையும் அங்கு வரவழைத்தது. ஹோஷங், கோவாஸ் இருவரையும் பாபா தினமும் மாலை 7:00 முதல் இரவு 8:00 மணி வரை, ஒரு பிரார்த்தனையைத் திரும்பத் திரும்ப மொழியுமாறு கூறினார். பாபா எடுத்துரைத்த அந்தப் பிரார்த்தனை:

எல்லாம் வல்ல இறைவனே, பாபாவை உறுதியாகப் பற்றிக்கொள்ள எங்கள் அனைவருக்கும் உதவுங்கள்; மேலும் இந்த ஆண்டு இறுதிக்குள், பாபா நிச்சயமாக உங்களின் அவதார உருவை வெளிப்படுத்த உதவுங்கள்!

புதிதாக வெளியிடப்பட்ட 'இறைவனுடன் இணைந்திருங்கள்' (STAY WITH GOD) புத்தகத்தின் நகலை ஹோஷங், கோவாஸ் இருவரிடமும் பாபா காட்டினார். அதிலிருந்து ஒரு பகுதியை படிக்குமாறு ஃபிரான்சிஸ் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

∴பிரான்சிஸ் பிராபஸோன் பல உபவாசங்களை மேற்கொண்டதால் அவருக்கு இரத்த அழுத்தம் குறைவாக இருப்பதாக பாபா தெரிவித்தார்.

கடந்த காலங்களில் பல மாரடைப்புகளை சந்தித்த காக்கா, ஒரு மூலையில் அமைதியாக அமர்ந்திருந்தார். அவரைச் சுட்டிக் காட்டி, **"நான் எனது மௌனத்தைக் கைவிடும் வரை அவர் உயிரைத் துறக்கமாட்டார்!"** என்று பாபா அறிவித்தார்.

பாபா பின்னர் அனைத்து ஆண்களுடனும் சீட்டு விளையாடத் தொடங்கினார். ஹோஷங், கோவாஸ் இருவருக்கும் விளையாடத் தெரியாது, ஆனால் பிற அனைவருடன் பாபாவைச் சுற்றி வட்டமாக அமர்ந்தனர். சீட்டுகள் வழங்கப்பட்டதும், திடீரென குழுவில் ஒருவர் 'ஆட்டம் முடிந்தது!' என்று கூறி, என்ன நடக்கிறது என்பதை அவர்கள் அறிந்து கொள்வதற்குள், மண்டலியில் ஒருவர் ஹோஷங், கோவாஸ் இருவரின் கழுத்தைப் பிடித்து, அவர்களின் தலைகளைக் கீழே தள்ளி, மூக்குகளைத் தரையில் உரசச் செய்தனர். தொடங்குவதற்கு முன்பே முடிந்துவிட்டதாகத் தோன்றிய இந்த விளையாட்டைக் கண்டு வியப்படைந்த இருவரும், இதர ஆண்களுடன் இணைந்து, தங்கள் வெறுமையான வெளிப்பாடுகளை ரசித்த பாபாவை வெட்கத்துடன் பார்த்தனர். ஒரு விளையாட்டைத் தொடர்ந்து மற்றொன்று பின்தொடரவே, ஒவ்வொரு நிமிடமும், எவரேனும் ஒருவரது மூக்கு தரையில் உரசப்படுவதைக் கண்டு அனைவரும் சிரிப்பு ஆரவாரம் செய்தனர். பாபாவின் அணி தவறாமல் வெற்றி பெற்றது.

ஒரு மணி நேரம் சீட்டு விளையாடிய பிறகு, பாபா, ஹோஷங் மற்றும் கோவாஸின் அறைக்குச் (மண்டபத்திற்கு எதிரே அமைந்த குடிசை) சென்று, அவர்களிடம் போதுமான போர்வைகள், தலையணைகள் போன்றவை உள்ளனவா என்பதை ஊர்ஜிதம் செய்தார். டாக்டர் கோஹெர் அவர்களின் தேவைகளை கவனிக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தார். பிற்பகல் 3:30 மணிக்கு பாபா அவரது அறைக்கு ஓய்வு எடுக்கச் சென்றார். பாபா ஒவ்வொரு நாளும் மண்டலி மண்டபத்திலிருந்து வெளியேறும் போதும், ஆண் மண்டலி பாபாவை வணங்கி விடையளிக்க காத்து நின்றனர். பாபா மண்டபத்தின் கடைசிக் கோடியிலிருந்து அவர்களை வணங்குவதும், மண்டலி தலைதாழ்த்தி பதில் வணக்கம் தெரிவிப்பதும் அன்றாடம் நடந்து வந்தது. அப்போது பாபா திரும்பி கைகளைத் தட்டும் வேளையில், பெண் மண்டலியில் ஒருவர் (ரானோ அல்லது கோஹெர்) உடனடியாக அழைப்பிற்கு பதிலளித்து, பாபாவை அவரது அறைக்கு அழைத்துச் செல்வது வழக்கம். அதைத் தொடர்ந்து மண்டலி அவர்களின் தேநீருக்காகச் செல்வதும் வழக்கமாக நடந்து வந்தது.

அக்டோபர் 16 அன்று, ஹோஷங், கோவாஸ் இருவரும் அதிகாலையில் எழுந்து மண்டபத்தை சுத்தம் செய்வதில் மும்முரமாக இருந்தனர். காலை 7:45 மணிக்கு மண்டபத்திற்கு வந்த பாபா, **"நன்றாக தூங்கினீர்களா? தேநீர் அருந்தினீர்களா? நலமாக இருக்கிறீர்களா?"** என்று கேட்டார். சிறிது நேரம்

கழித்து, **"எனது உலகளாவிய பணியின் அழுத்தத்தால் இன்று எனது எலும்புகள் அனைத்தும் வலிக்கிறது"** என்று குறிப்பிட்டார்.

காலை 8:00 மணிக்கு பாபா, கைக்கோபாத்தின் அறைக்குச் சென்று, அவரது பணியை முடித்துவிட்டு, பாபாவும் மண்டலியும் மண்டபத்தில் மீண்டும் கூடினர். பாபா மறுபடியும் கூறினார், **"எனக்கு உடல்நிலை சரியில்லை. இனி நான் கைக்கோபாத்துடன் அமர விரும்பவில்லை, ஆனால் என் உலகளாவிய பணியின் அழுத்தத்தால் நான் 700 வருடங்கள் ஓய்வெடுக்க விரும்புகிறேன்!"**

இந்த நேரத்தில் பாபா, கடிதப் பரிமாற்றத்தில் கலந்துகொள்வது அல்லது சொற்பொழிவு வழங்குவதை வழக்கமாகக் கொண்டார். மணி எழுதும் கட்டுரை, 'குடும்பம்' அல்லது தனிப்பட்ட கடிதம் என எதையாவது எரச் வாசித்தார். கென்மோர் காலை 9:00 மணிக்கு மண்டபத்திற்கு வந்து, பாபாவின் வலது புறம் அமர்ந்தார்; அவருடைய 'குழந்தை' (இசைப்பதிவு பெட்டி) எப்பொழுதும் அவருடன் இருக்க வேண்டும்.

கென்மோர் அவரது ஆழ்ந்து ஓங்கிய குரலில் பிரார்த்தனைகளை மொழிவதைக் கேட்ட ஹோஷங், கென்மோரிடம், "நீங்கள் பிரார்த்தனை செய்கிறீர்களா அல்லது கடவுளுடன் போரிடுகிறீர்களா?" என்று கேட்டார்; கோவாஸும் அவ்வாறே உணர்ந்தார்.

அடுத்த நாள் பிரார்த்தனைகளை மொழியுமாறு கேட்கப்பட்டபோது, கென்மோர் அவற்றைக் கிட்டத்தட்ட ஒரு கிசுகிசுத்த குரலில் எடுத்துரைத்தார். பாபா அவரைத் தடுத்து, **'ஏன் திடீரென ஒரு புதிய பாணியில் பிரார்த்தனை செய்கிறீர்கள்'** என்று கேட்டதற்கு, கென்மோர் பதிலளித்தார், "நமது புதிய பார்வையாளர்களின் செவிப்புலன் கருவியை நான் தொந்தரவு செய்ய விரும்பவில்லை!"

ஹோஷங், கோவாஸ் இருவரையும் பாபா கடுமையாகப் பார்த்தார்; அந்த நேரத்தில் தங்கள் கால்களுக்குக் கீழே பூமி இரண்டாகப் பிளந்து அவர்களை விழுங்கினால் நன்றாக இருக்கும் என உணர்ந்தனர்! பாபா, கென்மோரிடம் வழக்கம் போலப் பிரார்த்தனையை மீண்டும் மொழியுமாறு அறிவுறுத்தினார். அவர் முடித்த அந்த கணத்தில் பாபா இவ்வாறு குறிப்பிட்டார், **"பிரார்த்தனைகள் இதயத்திலிருந்து ஒலிக்க வேண்டும். அவை சத்தமாக அல்லது மென்மையாக மொழிந்தாலும் பரவாயில்லை. அவை இயல்பாக இருக்க வேண்டும். ஹாரிக்கு அவற்றை சத்தமாக உச்சரிப்பது இயற்கையானது. அவர் மென்மையாக உச்சரிக்க வேண்டும் என்றால், அது அவருக்கு இயற்கையாக இருக்காது."**

பிரார்த்தனைக்குப் பிறகு, பாபா, வழக்கமாக மெஹராஸாத்தை நோக்கிச் செல்லும் தனியார் சாலையில் சிறிது தூரம் நடந்து செல்வது பழக்கம். ஹோஷங், பாபாவின் தலைக்கு மேல் ஒரு குடையையும், கோவாஸ் ஒரு நாற்காலியையும் உடன் எடுத்துச் சென்றார். அவ்வப்போது பாபா சிறிது நேரம் ஓய்வெடுத்தார். கென்மோர் எப்பொழுதும் நகைச்சுவை துணுக்குகளுடன் தயார்

நிலையில் இருந்தார். அவர் ஒன்றைச் சொல்லத் தொடங்கிய அந்த கணமே, பாபாவின் உதடுகளில் மௌனமான சிரிப்பு உதயமாவதைக் காண முடிந்தது. பாதிரி, ஹாரியின் கேமராவில் உடனடியாகப் படம்பிடித்து பாபாவிடம் கொடுத்தார்.

சில நேரங்களில் நடைப்பயிற்சிக்கு பதிலாக, ஹோஷங், கோவாஸ் இருவரையும் தனது இல்லத்திற்கு அழைத்துச் சென்று, அங்கு மணி, கவாலி இசைப்பதிவுகளை இசைப்பது அவ்வப்போது நடந்தது. பாபா, நிதானமாக அமர்ந்து, அவற்றைக் கேட்டு சில நேரங்களில் சில வரிகளின் அர்த்தத்தை விளக்கினார்.

மண்டபத்தில் காலை நிகழ்ச்சிகள் 11:00 மணிக்கு முடிவடையும். பாபா ஆண்களுடன் சீட்டு விளையாட மதியம் திரும்பி வருவதை வழக்கமாகக் கொண்டார். விளையாட்டுகளைப் பற்றிக் குறிப்பிடுகையில், அவர் ஒருமுறை கூறினார், "**சீட்டு விளையாடும்போது நான் என்ன உள்பணிகளைச் செய்கிறேன் என்று உங்களுக்குத் தெரியாது. உலகில் பலர் சீட்டு விளையாடுகின்றனர், ஆனால், கடவுள் இதில் ஈடுபடுவதால் இங்கு விளையாடுவது முற்றிலும் வேறுபட்டது.**"

16ஆம் தேதி மதியம், அவர்கள் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தபோது, பாராகோட்டி (BARAKOTI) என்றழைக்கப்பட்ட மஸ்த் மெஹராஸாத்திற்கு நடந்து சென்று, தகரக் கொட்டகையின் கீழ் அமர்ந்தார்.

பாபா மண்டலியுடன் அவரைப் பார்க்கச் சென்றார். மஸ்த் போன்ற தோற்றமுடைய அந்த மனிதனுக்கு, பாபா முன்னர் ஒரு முறை வழங்கிய புதிய மேல் கோட்டு ஒன்றை அவர் உடலில் அணிந்து, மேலும் பதினொரு கோட்டுகளை அதன் மேல் அணிந்திருந்தார். பாபா மண்டலியிடம் உணவு வழங்கினார்களா என்று கேட்டார். அவரது ஒரு காலில் பாராகோட்டி அழுக்கு கந்தல்களைப் போர்த்தியிருந்தார். பாபா அதைப் பற்றிக் கேட்க, ஒரு தெருநாய் அவரைக் கடித்ததாக பாராகோட்டி பதிலளித்தார். பாபா, ஹோஷங்கிடம் (மருத்துவர்) அந்தக் கந்தல்களை அகற்றி, சுத்தமான துணியால் கட்டு போடுமாறும், பின்பு கைகளை நன்கு கழுவி சுத்தம் செய்யுமாறும் அறிவுறுத்தினார். அதன் பின்னர் அனைவரும் மண்டபத்திற்கு திரும்பி வந்தனர்.

அன்று மதியம், பாபா, ஹோஷங் மற்றும் கோவாஸ் ஆகியோருக்கு தலா ஒரு சீதாப்பழத்தைப் பிரசாதமாக வழங்கி, அவர்களை மெஹராஸாத் தோட்டத்தைப் பார்க்க அழைத்துச் சென்றார். வெயிலிலிருந்து பாபாவைக் காக்க ஹோஷங் குடையைப் பிடித்திருந்தார். பாபா கிணறு வரை நடந்து, தோட்டத்தில் வந்து இவ்வாறு குறிப்பிட்டார்: "**இது அல்லாவின் தோட்டத்தில் ஒரு குறுநடை, நான் உண்மையில் அதை அர்த்தப்படுத்தி கூறுகிறேன்.**" அவர்கள் திரும்பி வந்ததும், பாபா அவர்களுக்கு இனிப்புகளை வழங்கினார். வழக்கமான சீட்டு விளையாட்டுக்குப் பின்னர், அவர் தனது அறையில் ஓய்வெடுத்தார்.

மெஹராஸாத், அக்டோபர் 1959
அலோபா, பைதூல், பெண்டு, புக்கார், பாவ் கல்சூரி, எரச், ஹாரி கென்மோர், பாபா, விஷ்ணு, ஃபிரான்சிஸ், மெஹர்தாஸ்
(MEHERAZAD, OCTOBER 1959
ALOBA, BAIDUL, PENDU, PUKAR, BHAU KALCHURI, ERUCH, HARRY KENMORE, BABA, VISHNU, FRANCIS, MEHERDHAS)

பாபா அவரது இல்லத்திற்குச் சென்ற பின்னர், அரிதாகவே ஆண்கள் பக்கம் திரும்பி வந்தார்; ஆனால் அன்று மாலை 5:00 மணிக்கு எதிர்பாராமல் வந்தவர், ஹோஷங், கோவாஸ் இருவரும் தங்கியிருந்த அறைக்குச் சென்று, அவர்கள் சௌகரியமாக இருக்கிறார்களா என்று விசாரித்து, பின்னர் அவர்களின் அறைக்கு முன் ஒரு நாற்காலியில் அமர்ந்தார்; ஆதி வெளியிட்ட பாபாவின் சமீபத்திய 'வாழ்க்கை சுற்றறிக்கை'யின் நகலை (1959 அக்டோபர் 7 அன்று எடுத்துரைத்தது) அவர்களுக்கு வழங்கினார்.

"1959 டிசம்பர் 30 அன்று, பிரபஞ்சத்திற்கு நான் மிகப் பெரிய ஒன்றை வழங்குவேன். இந்தத் தகவலை உங்களுக்குத் தெரிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்; அதற்காகவே நான் இந்த நேரத்தில் வர முடிவு செய்தேன்" என்று பாபா சைகையால் தெரிவித்தார்.

மெஹராஸாத்திலிருந்து சென்ற பின்னர், அவர்கள் இருவரும் செய்ய வேண்டிய, அவர் விரும்பும் வேலையைப் பற்றி அவர்களுக்கு அறிவுறுத்தினார். பல குழந்தைகளைக் கொண்ட இரண்டு நடுத்தரக் குடும்பங்களுக்கு தலா ரூ. 500 வழங்குமாறு கூறினார், அவர்கள் தங்களால் இயன்ற அளவு முயற்சி செய்தும், வாழ்க்கையைச் சமாளிக்க முடியாமல், தன்மானத்தின் நிமித்தம் பிறரிடம் யாசிக்கவும் விரும்பவில்லை. ஹோஷங், கோவாஸ் இருவரும் விவசாயிகளை தேர்ந்தெடுக்கக் கூடாது, ஏனெனில் அரசாங்கம் ஏற்கனவே விவசாயிகளுக்கு ஏராளமான உதவிகளை வழங்கியது. சம்பந்தப்பட்ட நபர்களைத் தேர்ந்தெடுத்து, தலை வணங்கி, பின்பு பணத்தை வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

பாபா கூறினார், **"இந்தப் பணி மிகவும் இன்றியமையாதது. இதன் முக்கியத்துவம் உங்களுக்குத் தெரியாது. இது, உங்களை முழுமையாக நம்பி ஒப்படைக்கப்பட்ட கடைசி பணி. பணத்தைக் கொடுக்கும் முன்பு, கவனமாகத் தேடி, கண்டுகொள்ளுங்கள். கவலைப்படாதீர்கள். நான் உங்களுக்கு உதவுவேன். குடும்பங்கள், எந்த ஜாதி, மதத்தைச் சார்ந்ததாகவும் இருக்கலாம். பணியை நிறைவு செய்து, அக்டோபர் 31 அன்று வீடு திரும்புங்கள்."** பாபா, எரச்சிடம் இதுபோன்ற பணியை அவர் எப்படிச் செய்தார் என்பதையும், பாபாவும் மண்டலியும் அத்தகைய குடும்பங்களைக் கண்டுபிடிப்பதில் எதிர்கொண்ட சிரமங்களையும் எடுத்துரைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

புறப்படுவதற்கு முன்பு, பாபா, **"இப்போதெல்லாம் நான் இந்தப் பணியைச் செய்வதில்லை, எனவே நான், உங்களிடம் அதைச் செய்யும்படிக் கூறினேன்"** என்று விளக்கினார்.

பிற்பகலில் சில நேரங்களில், பாபா, ஹோஷங் மற்றும் கோவாஸின் அறைக்கு வந்து, அதன் முன் அமைதியாக அமர்ந்து, தனது உள் பணிகளில் மூழ்கினார். எப்பொழுதும் மாலை நேரங்களில் இருவரும், எரச் அல்லது கென்மோருடன் உரையாடும்போது, பாபாவிற்கு இடையூறு ஏற்படாதவாறு, ஓசை எழுப்பாமல் கவனமாக இருந்தனர். ஒரு நாள் இரவு, ஒரு தண்ணீர் குழாய்

கவனக்குறைவாக சற்று திறந்திருந்ததால், சொட்டும் நீரின் சத்தத்தைக் கேட்டு, ஏன் இவ்வளவு சத்தம் என்று விசாரிக்க பாபா, பாவ் கல்சூரியை அனுப்பினார்.

ஹோஷங், கோவாஸ் இருவரும் 1959 அக்டோபர் 17 காலை 8:00 முதல் இரவு 8:00 மணி வரை, மௌனமாக இருந்து, உபவாசம் கடைப்பிடிக்க அறிவுறுத்தப்பட்டனர். பாபா, அவர்கள் மௌனத்தைத் தொடங்கும் முன்னர், இருவரையும் தொடர்பு கொள்ள, வழக்கத்தை விட சற்று முன்னதாகவே வந்தார். "**இரவு 8:00 மணி வரை பேச வேண்டாம்; உங்கள் மௌனத்தால் இன்று நான் சீக்கிரமாக வந்தேன்**" என்றார்.

அவர் மேலும் கூறினார், "**நீங்கள் தவறியேனும் பேச நேர்ந்தால், கவலைப்பட வேண்டாம், ஆனால் மீண்டும் பேசாதீர்கள். அனைவருக்கும் இதுபோன்ற துல்லியமான விவரங்களை நான் கவனத்தில் கொள்ள வேண்டும்; இருப்பினும், நான் எல்லா செயல்பாடுகளிலிருந்தும் விலகியே இருக்கிறேன்.**"

பாபாவைப் பற்றிய பல கட்டுரைகள், அவருக்காக அர்ப்பணிக்கப்பட்ட துணைப் பத்திரிகையை வெளியிடும் 'மெட்ராஸ் மெயில்' (MADRAS MAIL) நாளிதழுக்கு அனுப்பப்பட இருந்ததால், ∴பிரான்சிஸ் உட்பட அனைவரும், அன்றைய தினம், மெய்மறந்த நிலையில் தத்தமது பணியில் முழு முனைப்புடன் செயல்பட்டனர்.

மண்டலி மண்டபத்தில், உரையாடலின் தலைப்பு சடங்கு, சம்பிரதாயங்களை நோக்கி நகர்ந்தது. பாபா, "**இன்று இந்தியாவில், குறிப்பாக, இந்து சமூகத்தில் சடங்கு சம்பிரதாயங்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. ஆனால் நான் எனது மௌனத்தைக் கலைத்து, பேசும் போது, இந்த வம்பு தும்புகள் அனைத்தும் தீர்ந்துவிடும்**" என்று கூறினார்.

ஹோஷங், கோவாஸ் இருவரையும் பாபா பிரதான இல்லத்திற்கு அழைத்துச் சென்றார்; அங்கு மணி கவாலி இசைத்தட்டுகளை இசைத்தபோது, பாபா ஒரு பாடலை விளக்கினார்:

இறைப்பற்று மிக்கவருக்கும், பிரியாமானவரிடம் பைத்தியக்கார அன்பு கொண்டவருக்கும் இடையே ஒருபோதும் சமரசம் இருக்க முடியாது. இறைப்பற்று மிக்கவர் (சடங்கு முறைகளை பின்பற்றும் ஒருவர்) **தெய்வீக மதுபான கோப்பையை வெறுக்கும் அதே வேளையில், இறைப் பைத்தியக்கார அன்பர் அதற்காக ஏங்குகிறார். ஒரு விட்டில்பூச்சி மெழுகுவர்த்திச் சுடரின் மீது மிகுந்த அன்பைக் கொண்டுள்ளது; மேலும் அது தன்னைத்தானே எரிக்கும்போது மட்டுமே திருப்தி அடைகிறது. இறைப் பைத்தியக்கார அன்பர் விட்டில்பூச்சியிடம், அது தீச்சுடரை நேசிப்பதுபோல், அவர் தனது பிரியமானவரை வெறித்தனமாக நேசிப்பதாகவும் கூறுகிறார்: "நீங்கள் ஒருமுறை மட்டுமே நெருப்பில் உங்களை எரித்துக்கொள்கிறீர்கள், ஆனால் பிரியமானவரின் அன்பில் நான் என்றென்றும் எரிய வேண்டும்."**

தீச்சுடர், விட்டில்பூச்சியை அழிக்கிறது, ஆனால் இந்த அன்பு, அன்பரை அழிக்காது.

அன்று பிற்பகலில், பாபா குறிப்பிட்டார், **"நான் யுகத்தின் அவதார புருஷராக வெளிப்பட்ட பின்னர், என்னைப் பற்றி அறிந்துகொள்வதை விட, இப்போது மக்கள் என்னைப் பற்றி அறியவேண்டியது மிகவும் முக்கியம்."**

சீட்டு விளையாடும் போது, பாபா ஒருமுறை இவ்வாறு தெரிவித்தார், **"என்னை நீங்கள் உண்மையிலே அவதார புருஷராகப் பார்த்தால், பிற அனைத்தும் மாயையாகத் தோற்றமளிக்கும்."**

மேலுமொரு முறை, அவர் விளக்கினார், **"இறைவனுடன் ஐக்கியமான பிறகு, மனித தளத்தில் இறங்குவது இன்னும் கடினமாக உள்ளது. சீட்டு விளையாடுவது போல் இது எளிதானது அல்ல! கைக்கோபாத்தின் அனுபவம் சத்குருவின் (குதுப்) அனுபவத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டது. சத்குருவின் நிலை மிக உயர்ந்த நிலை. நீங்கள் அந்த நிலையை அடைந்த அந்த கணமே, கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் அனைத்தையும் அரைக்கண நேரத்தில் நீங்கள் அறிந்துகொள்வீர்கள்."**

இந்தத் தீவிரமான பேச்சுக்கு நடுவே, திடீரென இடையூறு ஏற்பட்டது; பாதிரி, மண்டலியின் அறைக்கு எதிரே இருந்த மரத்திலிருந்து விழுந்த ஒரு சிறிய தங்க நிற கிளியைக் கொண்டுவந்தார். பாபா அதை ஒரு கூண்டில் வைத்து, 'பாபா' என்ற வார்த்தையை தினமும் திரும்பத் திரும்ப மொழியும் விதத்தில், பறவைக்குப் பயிற்சி அளிக்குமாறு கூறினார். மேலும், **"பறவை தனது உயிரைத் துறக்கும் நேரத்தில் இதை மொழிந்தால், விடுதலை கிடைக்கும்"** என்றும் கூறினார். ஒரு கூண்டில் அந்தக் கிளி அடைக்கப்பட்டது. மெஹராஸாத்தில் நீண்ட காலம் இருக்க அது விதிக்கப்படவில்லை ஏனெனில், கூண்டின் கம்பிகளில் ஒன்று தளர்வாக இருந்ததால், அடுத்த நாள் காலை அது தப்பித்து, பறந்து சென்றது.

பாபா, அவரது அறைக்கு ஓய்வெடுக்கச் சென்றவர், மாலை 4:30 மணிக்கு, ஹோஷங், கோவாஸ் இருவருக்கும் இந்தச் செய்தியை அனுப்பினார்: **"மகிழ்ச்சியாக இருங்கள். இரவு 8:00 மணிக்கு உங்கள் மௌனத்தைக் கலைத்து, நன்றாக உணவு உண்ணுங்கள்."**

மீண்டும் மாலை 6.00 மணிக்கு அவரிடமிருந்து ஒரு செய்தி வந்தது: **"என் அன்பில் மகிழ்ச்சியாக இருங்கள். இரவு 8:00 மணி வரை பேசவோ அல்லது சிறிதளவு சத்தம் செய்யவோ வேண்டாம். தவறியேனும் நீங்கள் பேசினால், கவலைப்பட வேண்டாம்."**

இரவு 7:55 மணிக்கு, அவர் மீண்டும் ஒரு குறிப்பை அனுப்பினார்: **"இரவு 8:00 மணிக்கு உங்கள் மௌனத்தைக் கலைத்து, உங்களுக்கு வழங்கப்பட்ட பிரார்த்தனையைத் திரும்பத் திரும்ப மொழியுங்கள். எதற்கும் அஞ்ச வேண்டாம். இரவு 8:00 மணிக்குப் பிறகு, நன்றாக உணவு உண்ணுங்கள்."**

இறுதியாக, இரவு 8:05 மணிக்கு, **"மகிழ்ச்சியாக இருங்கள். என்னை நினைவில் கொள்ளுங்கள். நன்றாக உணவு உண்டீர்களா?"** என்ற கேள்வியுடன் ஒரு தகவல் வந்தது. பாபா தன் அன்பர்கள் மீது கொண்டிருந்த அன்பு இதுவே. அவரது நிலையான நினைவு அவர்களுக்கு மகிழ்ச்சியை அளித்தது.

இரவு நேரங்களில், மண்டலி, பாபாவுடன் வாழ்ந்த நாட்களின் கதைகளை ஹோஷங், கோவாஸ் இருவருக்கும் எடுத்துரைத்தது, மனதிற்கு விருந்தாக அமைந்தது. ஒரு முறை பாபா, பைதூலிடம் ஒரு மஸ்தை அழைத்து வரக் கூறிய கதையை பைதூல் அவர்களிடம் கூறினார். அப்போது அவர் அனுபவம் இல்லாத ஒரு புதிய நபராக இருந்ததால், தனது அனைத்து திறமைகளையும் பயன்படுத்தி மஸ்தைக் கவர முயன்றார், ஆனால் மஸ்த் அசைந்தபாடில்லை. சீற்றத்தில் பைதூல், அவரை வலுக்கட்டாயமாகத் தூக்க முயன்றார்.

மஸ்தின் கையிலிருந்த ஒரு சிறிய கழியால் அவர் பைதூலின் கண்ணில் திடீரெனக் குத்தியதும், அவர் உடனடியாக மஸ்தை விட்டு வெளியேறி, திகிலுடன் அவரது கண்ணிலிருந்து இரத்தம் வழிவதைக் கண்டார். பார்வையை இழந்துவிட்டதாக நினைத்தவர், படிப்படியாக குணமடைந்து முழுப் பார்வையையும் மீட்டெடுத்தார். '**ஒரு மஸ்தை அவரது விருப்பத்திற்கு எதிராக எதையும் செய்யுமாறு கட்டாயப்படுத்தக் கூடாது**' என்று பாபா அவருக்கு விளக்கினார்.

மற்றுமொரு சந்தர்ப்பத்தில், 1956இல் பாபா அமெரிக்காவில் இருந்தபோது, பாபாவின் அறிவுறுத்தலின்படி ஒரு மஸ்தைத் தொடர்பு கொள்ளச் சென்றதாக பைதூல் கூறினார், மேலும் அவரை ஆச்சரியப்படுத்தும் விதத்தில் மஸ்த், "மெஹர் பாபா அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்துவிட்டாரா?" என வினவினார்.

ஒரு முறை கோவாஸ் உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது, பாபா, கோஹெரை இந்தச் செய்தியுடன் அவரைப் பார்க்க அனுப்பினார்: **"உங்கள் உடல்நிலையைக் கவனித்துக்கொள்ளுங்கள். எனது பணிக்காக நீங்கள் நலமாக இருக்க வேண்டும்."**

1959 அக்டோபர் 18 ஞாயிற்றுக்கிழமை அன்று, பாபா சொற்பொழிவு வழங்கும் மனநிலையில் காணப்பட்டார். பௌதீகக் கண்களால் கடவுளைப் பார்ப்பதற்கும், ஆறாவது ஆன்மீகத் தளத்தில் கடவுளைப் பார்ப்பதற்கும் இடையே உள்ள வித்தியாசத்தைப் பற்றி ஹோஷங் வினவினார். பாபா விளக்கமாக எடுத்துரைத்து, இவ்வாறு கூறி முடித்தார்: **"கடவுளைப் பார்ப்பது இறுதி இலக்கு அல்ல. அவருடன் ஒன்றாக ஐக்கியமாவதுதான் குறிக்கோள்."**

பாபா, கைக்கோபாத்தை அழைத்து, அவருடைய அனுபவங்களையும், அவர் கண்ட காட்சிகளையும் எடுத்துரைக்குமாறு கேட்டுக்கொண்ட போது, அவர் கூறினார்: "முதலில், நான் கடவுளைக் கண்டேன், பாபாவை நான் கடவுளோடு ஒப்பிட்டுப் பார்த்தபோது, பாபா அவரைப் போலத் தோன்றவில்லை. பின்னர்,

அனைத்து 'பிதாக்களின் பிதாவான அஹுரமஸ்தாவையும் - பாபாவையும் ஒரே நேரத்தில் பார்த்தேன். பாபா, அவர் கடவுள் என்பதை நான் உறுதியாக நம்பினேன். அதற்குப் பிறகு, நான் பாபாவை ஒரு ஒளிவட்டத்தில் பார்க்க ஆரம்பித்தேன். பாபாவை ஒரு ஒளிக்கீற்றில் பார்ப்பது எனக்குள் இருந்து வருகிறது, அதை நான் எப்பொழுது வேண்டுமானாலும் அனுபவப்பூர்வமாகச் செய்யலாம்."

'கைக்கோபாத் கடவுளைப் பௌதீகக் கண்களால் பார்ப்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு' என்று பாபா விளக்கினார். அதைத் தொடர்ந்து பாபா 'தெய்வீகச் சுடரொளி' (நூர் - NOOR) குறித்து பேசத் தொடங்கினார்.

'தெய்வீகச் சுடரொளி' (NOOR) **எல்லையற்றது. இது, உங்கள் மின் சக்தியிலிருந்து வேறுபட்டது. மின்சாரம், அணு, வெப்பம், ஒளி, போன்ற அனைத்து வகையான சக்திகளும் தெய்வீகச் சுடரொளியின் சிறிய கிளைகள் மட்டுமே. தெய்வீகச் சுடரொளி, ஒளியல்ல; அதை விட மிக அதிகம். அதை விளக்க, நாம் ஓர் உருவகத்தைப் பயன்படுத்துவோம். ஒரு கோடி சூரியன்களை ஒன்று சேர்த்தால், இவற்றின் குளிர்ச்சியானது தெய்வீகச் சுடரொளியின் குளிர்ச்சியின் ஒரு குறுகிய பாகமாக இருக்கும். தெய்வீகச் சுடரொளியிலிருந்து சூரியன், நட்சத்திரங்கள், சந்திரன்கள், கோள்கள் போன்றவை ஒளியை அடையப் பெறுகின்றன. தெய்வீகச் சுடரொளி எல்லையற்றது; அதைப் பிரிக்க முடியாது. ஆதலால், சூரியன்கள், நட்சத்திரங்கள், சந்திரன்கள், கோள்கள், முதலியன அதன் அங்கமாக இருக்க வேண்டும்.**

உங்களுக்கு எந்த அனுபவமும் இல்லாததால் இதை விளக்குவது கடினம். எடுத்துக்காட்டாக, கோவாஸ் மது அருந்தினார், அதே வேளையில் நீங்கள் (ஹோஷங்) மது அருந்தவில்லை என்று வைத்துக்கொள்வோம். மது போதை என்றால் என்ன என்பதை அவர் எவ்வளவுதான் விளக்கினாலும், உங்களால் அதைப் புரிந்துகொள்ள முடியாது; (வேறு வார்த்தைகளில் சொல்வதானால்) அனுபவம் இல்லாமல் மது போதை என்றால் என்ன என்பதை அறிய முடியாது.

புக்கார் மருத்துவரிடம் மார்பில் வலி இருப்பதாகக் கூறினால், மருத்துவரின் மருத்துவ அறிவிலிருந்து அவருக்கு வலியைப் பற்றிய யோசனை மட்டுமே இருக்கும், ஆனால் மருத்துவரால் வலியை அனுபவிக்க முடியாது. இந்தப் பௌதீக விஷயங்களை வெளிப்படுத்த கடினமாக இருக்கும் வேளையில், ஆன்மீகத்தைப் புரிந்துகொள்வது எவ்வளவு கடினமாக இருக்கும், இது அதி நுட்பமானது.

இதை விளக்கிய பிறகு பாபா கூறினார்: **"கைக்கோபாத், இந்த உடலைக் கைவிட்ட பிறகு, பிறப்பு-இறப்பு சுழற்சியிலிருந்து விடுபடுவார். எனவே, அவருக்கு வேறு பிறவி தேவையில்லை. இப்போது, கைக்கோபாத் எனது வட்டத்தில் உறுப்பினராக இல்லை, ஆனால் பைதூல் வட்டத்து உறுப்பினர் என்று வைத்துக்கொள்வோம். கைக்கோபாத்திற்கு பல ஆன்மீக அனுபவங்கள் உள்ள அதே வேளையில் பைதூலுக்கு இல்லை.**

(இருந்தபோதிலும்) பைதூல் எனது வட்டத்து உறுப்பினர்களில் ஒருவராக இருப்பதால், உயர்ந்த அந்தஸ்தை அனுபவிக்கிறார்."

தொடர்ந்து, பாபா விளக்கினார்: **"எனது ஆண் பெண் மண்டலி அனைவரும் இறைநிலையை எய்துவர். அவர்கள் நித்திய பேரின்பம், நித்திய ஞானம் மற்றும் நித்திய சக்தியின் அனுபவத்தை அடையப் பெறுவார்கள், அதே நேரத்தில் கைக்கோபாத் பிறப்பு-இறப்பு சுழற்சியிலிருந்து விடுபடுவார்; அதாவது, அவர் எனது மண்டலி உறுப்பினர்களில் ஒருவராக இல்லை."**

ஒலிப்பதிவுக் கருவி, மண்டபத்திற்குள் கொண்டு வரப்பட்டு, சில கவாலி பாடல்கள் இசைக்கப்பட்டன. பாபா சில பாடல்களைப் பற்றிக் கருத்துரை வழங்கினார்:

ஆன்மீகப் பாதையின் சிரமங்களைக் கண்டு அஞ்சுபவர்கள் தைரியமற்றவர்கள்; அன்பிற்குரியவரின் அன்பெனும் வாளால் பலியாக அஞ்சுபவர்கள் இறுதி இலக்கிலிருந்து வெகு தொலைவில் இருப்பார்கள்.

குருநாதருக்கு எதிராகப் பேசும் மற்றும் அவரை சந்தேகக் கண்களால் பார்க்கும் தாழ்ந்த எண்ணம் கொண்டவர்கள், ஒருபோதும் இறுதி இலக்கை அடைய மாட்டார்கள். குருநாதர், அன்பருக்கு எதுவும் செய்யவேண்டும் என்ற தேவையோ, கண்டிப்போ இல்லை; ஆதலால், அவர் அன்பரின் துன்பம் மற்றும் துயரங்களைக் குறித்து வெளியளவில் கவலைப்படுவதில்லை. உண்மையில், அவர் அந்தத் துயரங்களை அறியாதது போல் இருக்கிறார்.

அன்பன் தனது குருநாதரிடம் கூறுகிறான்: "ஐக்கியத்திற்கான அளப்பரிய ஏக்கம் என்னில் இருந்தும், நீங்கள் ஏன் என்னைக் கண்டுகொள்வதில்லை?"

அன்பிற்குரியவர் கூறுகிறார்: "உங்கள் அன்பினால் என்னை கட்டாயப்படுத்துகிறீர்களா?" வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அன்பன் தனது கஷ்டங்களைக் குறித்து குருநாதரிடம் புகார் செய்யக்கூடாது, அவரிடமிருந்து எதையும் எதிர்பார்க்கக்கூடாது.

அன்பன் தனது அன்பிற்குரியவரிடம் கூறுகிறான்: "எனது துன்பத்தின் எந்த இரவை நான் உங்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்? எனது அன்பின் வாழ்வில், என்றென்றும் தொடரும் துன்பம் நிறைந்த ஒரே ஓர் இரவு மட்டுமே உள்ளது!"

அன்று மதியம், பாபா வழக்கம் போல சீட்டு விளையாடினார். பின்னர், அவர் ஹோஷங், கோவாஸுடன் மெஹராஸாத் சாலையில் நடந்து சென்ற வேளையில், 1940 ஆண்டுகளில் இரவில் அமைதியாகத் தூங்கும் வயல்களில் ரத்தன்ஷா கியாரா தங்கியிருந்த அறையை சுட்டிக்காட்டினார்.

மண்டலி மண்டபத்திற்குத் திரும்பி வந்த பாபா, அனைவருக்கும் சாக்லேட்டையும் சீதாப்பழங்களையும் வழங்கினார். அவர், தனது இல்லத்திற்கு ஓய்வு எடுக்கச் சென்றபோது, ஹோஷங் குடையுடன் அவருடன் சென்றார்; வழியில் அவர், "பாபா, நாங்கள் இங்கு வந்து நான்கு நாட்கள் ஏற்கனவே

கடந்துவிட்டன...” என்று கூறியதும், பாபா அவரை அன்புடன் பார்த்து ஒரு முத்தம் கொடுத்தார்.

மறுநாள் காலை 1959 அக்டோபர் 19 திங்கட்கிழமை அன்று, மண்டலி மண்டபத்தில் பாபா, எரச்சிடம் வெவ்வேறு புத்தகங்களிலிருந்து, சில பகுதிகளைப் படிக்குமாறு அறிவுறுத்தினார். ஒன்று ‘நிர்விகல்ப் சமாதி’ (NIRVIKALPA SAMADHI) குறித்த சத்குரு சங்கராச்சாரியாரின் (SANKARACHARYA) விளக்கம். அதன் முடிவில் பாபா, **“இவை அனைத்தும் ‘கடவுள் பேசுகிறார்’ (GOD SPEAKS) புத்தகத்தில் விளக்கப்பட்டுள்ளது”** என்று கூறினார். பின்பு, தாமஸ் ஏ கெம்பிஸ் (THOMAS A KEMPIS) எழுதிய ‘இமிட்டேஷன் ஆஃப் கிறிஸ்து’ (IMITATION OF CHRIST) என்ற புத்தகத்தின் ஒரு பகுதியும் வாசிக்கப்பட்டது.

பிற்பகலில், சீட்டு (லா ரிஸ்க்) விளையாடிய போது, பாபா கூறினார், **“நான் எனது பணியின் சுமையால் நசுக்கப்படுகிறேன், அதிலிருந்து சற்று நிம்மதியை நாடி, உங்களுடன் சீட்டு விளையாட இங்கு வருகிறேன்.”**

ஒரு சந்தர்ப்பத்தில், ஹாரி கென்மோர் மண்டபத்திற்கு வெளியே அமர்ந்து பாதிரியுடன் உரையாடிக் கொண்டிருந்தார். பாபா திரும்பி வந்தது அவருக்குத் தெரியாது. இருவரும் அமர்ந்திருந்த இடத்திற்கு பாபா சென்ற அவ்வேளையில், கென்மோர், பாதிரியிடம் கூறினார், “முதியவர் (‘OLD MAN’ - பாபாவிற்கான அவரது பாசமுள்ள சொற்றொடர்) நீண்ட காலமாக நடைப்பயிற்சிக்குச் செல்லவில்லை என்று தோன்றுகிறது”

அப்போது, பாபா அவரை முதுகில் தட்டி, **“வாருங்கள் நடக்கச் செல்லலாம்”** என்று சைகையால் தெரிவித்தார். பாபா தன் அருகில் நிற்பதை உணர்ந்து கென்மோர் திடுக்கிட்டார். நடக்கச் சென்றபோது பாபா, **“இன்று நான் எல்லையில்லா அமைதியற்றவனாக இருக்கிறேன்”** என்று குறிப்பிட்டார்.

அன்றைய தினம் இரவு 8:00 மணி வரை, தண்ணீர் கூட அருந்தாமல் உபவாசம் மேற்கொள்ளுமாறு பாபா, கென்மோருக்கு அறிவுறுத்தினார். மாலை 7:00 மணிக்கு, பாபா இந்தக் கவிதையை இயற்றி அவருக்கு அனுப்பினார்:

மேலும் ஒரே ஒரு மணி நேரம்,
பின்னர் உங்கள் வயிற்றின் கதவைத் திறக்கலாம்,
வகைவகையான தின்பண்டங்களுடன்,
உங்கள் ஆற்றலை மீட்கலாம்.
உங்கள் இதயத்தில் இறை நாமத்துடன்,
மாயாவோடு போர் தொடுக்கலாம்.
மேலும், பாபாவின் நாமத்தை உச்சரித்து,
மாயாவைத் தரையை நாவால் துழாவச் செய்யலாம்!

பாபா, 20ஆம் தேதி காலை 8:00 மணிக்கு மண்டலி மண்டபத்திற்கு வந்தபோது, மேற்காணும் கவிதை உரக்க வாசிக்கப்பட்டது. பாபா அன்றைய தினம் பேரானந்தத்தைப் பற்றியும் விளக்கினார்:

உணர்வு நிலையின் ஆறாவது ஆன்மீகத் தளத்தில் ஒரு மனிதன் கடவுளை நேருக்கு நேர் பார்க்கிறான், ஆனந்தத்தை அனுபவிக்கிறான்.

கடவுள் உணர்வை அடையப்பெற்ற, பரிபூரண குருநாதர் அல்லாத ஒருவர் அளவிலா பேரின்பம், அறிவு மற்றும் சக்தியை அனுபவிக்கிறார்.

கடவுள் உணர்வை அடையப்பெற்ற, ஒரு பரிபூரண குருநாதரான ஒருவர் அளவிலா பேரின்பம், அறிவு மற்றும் சக்தியை அனுபவித்து பயன்படுத்துகிறார்.

பௌதீகத் தளத்தில் நிலைகொண்டுள்ள ஒரு மனிதர், யுகத்தின் அவதார புருஷர் அல்லது ஒரு பரிபூரண குருநாதரின் அருளால் எங்கும், எதிலும் கடவுளைக் காண முடியும். அத்தகைய மனிதரும் பேரின்பத்தை அனுபவிக்கிறார். ஆனால் அவரது அனுபவத்திற்கும், ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டுள்ள ஒருவரின் உன்னதமான பேரின்பத்திற்கும் இடையே வேறுபாடு உள்ளது. பௌதீகத் தளத்தில் இருக்கும் மனிதனுக்கு வேறு ஆசைகள் உள்ளன, ஏனெனில், அவனிடம் மனம் இருப்பதால் மேலும் கவலைக்குள்ளாகிறான். ஆறாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டிருக்கும் மனிதன் அன்பான கடவுளுடன் ஐக்கியமாக மட்டுமே ஏங்குகிறான்.

பாபா, புக்காரிடம் கூறினார், **"நான் எனது பணியின் பளுவால் மிகுந்த அழுத்தத்தை உணர்கிறேன், சிறிது தூர நடைப்பயிற்சிக்குப் பின்பு, சிலுவையில் அறையப்படும் எனது வழக்கமான பணியைத் தொடங்குவேன்."** ('சிலுவையில் அறைதல்' மூலம், பாபா, இந்த நேரத்தில், கைக்கோபாத்துடன் அவர் செய்த பணியைக் குறிப்பிடுகிறார்).

கைக்கோபாத்துடனான அவரது பணி முடிந்ததும், பாபா ஒரு நடைப்பயிற்சிக்குச் சென்று, அன்று பிற்பகல் சீட்டு (லா ரிஸ்க்) விளையாடினார். மதியம் 3:00 மணியளவில் அனைவருக்கும் தேநீர் மற்றும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. ஹோஷங் சாதாரணமாக தேநீர் அருந்துவதில்லை, ஆனால், பாபா அவருக்கு ஒரு கோப்பை தேநீரைக் கொடுத்து, **"இன்று மட்டும் அருந்துங்கள், ஆனால் உங்கள் வாழ்நாளில் இனிமேல் அருந்தாதீர்கள்!"** என்றார். அதற்குப் பிறகு பாபா, தமது அறைக்கு ஓய்வடுக்கச் சென்றார்.

அன்று மதியம் 1:45 மணிக்கு ஹாரி கென்மோருக்கு பாபா மற்றுமொரு கவிதையை இயற்றினார்.

ஹாரி நீங்கள் எனக்கு மிகவும் பிரியமானவர்.
அதனால்தான் உங்களை அழைத்தேன் என் அருகில்.
இப்போது இது தெளிவாக இருக்கட்டும்,
நீங்கள் இங்கு இருக்கும் வரை என்றென்றும்
மகிழ்ச்சியாகவும், முழு முக மலர்ச்சியாகவும் இருங்கள்.
எனது வாக்குறுதியைப் பற்றி ஒருபோதும் அஞ்சாதிருங்கள்.
நான் பேசுவேன், நீங்கள் கேட்பீர்கள்.
நீங்கள் அங்கே இங்கே எங்கே இருந்தாலும் சரி -
நான் பேசுவேன், நீங்கள் கேட்பீர்கள்.

ஹோஷங், கோவாஸ் இருவருக்கும் அக்டோபர் 21ஆம் நாள் மீண்டும் உபவாசமும், மௌனமும் காக்கவேண்டிய நாள். பாபா வழக்கம் போல வந்து, அவர்களின் உடல் நலம் மற்றும் தூக்கம் பற்றி விசாரித்தார். கைக்கோபாத்துடன் தனது பணியை முடித்துவிட்டு, பாபா, அவர்கள் அறைக்கு வெளியே வராண்டாவில் ஒரு நாற்காலியில் அமர்ந்தார். ஏதோ ஒரு பணியில் தீவிரமாக ஈடுபட்டிருப்பது போல சில நிமிடங்கள் அமைதியாக அமர்ந்திருந்த அவர், காக்கா நட்டிருந்த மா மரங்களின் வரிசையை நோக்கி நடந்தார். காக்கா, பாபாவிடம், "ஒரு மரத்தைத் தவிர எல்லா மரங்களும் நல்ல பலனைத் தருகின்றன" என்றார். பாபா, மரத்தைச் சுற்றி புல் அடர்ந்து வளர்ந்திருந்தாலும், மரத்தின் அருகில் சென்று, அதை லேசாகத் தொட்டார். பின்னர் அவர் தனது இருக்கைக்குத் திரும்பிச் சென்றார்.

அதற்குப் பிறகு ஹோஷங், கோவாஸ் இருவரையும் இசைப்பதிவு பெட்டியில் இசையைக் கேட்க பிரதான இல்லத்திற்கு பாபா அழைத்துச் சென்றார். இந்த முறை அவர் கருத்துத் தெரிவிக்கவோ அல்லது எந்த விளக்கமும் வழங்கவோ போவதில்லை என்று குறிப்பிட்டார்; ஆனால் ஒரு முறை கவாலி இசையின் போது, அவர் கூறினார், **"அன்பரின் துன்பம் எவ்வளவுதான் இருந்தாலும், அவர் புகார் செய்யும் விதத்தில் ஒருபோதும் வாயைத் திறக்கக்கூடாது. அவரது உதடுகள் மூடப்பட்டு, நாக்கு பூட்டப்பட வேண்டும்."**

இறுதியில், பாபா மேலும் ஒரு வரியை விளக்கினார்: **"அன்பன் தன் அன்பிற்குரியவரிடம், 'நான் உன்னுடையவனாகிவிட்டேன்; நீங்கள் என்னுடையவரா இல்லையா என்பது எனக்கு முக்கியமில்லை.'"**

பிற்பகல் சீட்டு (லா ரிஸ்க்) விளையாட்டின் போது, பாபா, ஹோஷங்கிடம், **"நான் கடவுள்களின் கடவுள்! என் மீது முழு நம்பிக்கையுடன் இருங்கள். எனக்கு எல்லாம் தெரியும், கவலைப்படாதீர்கள்"** என்று கூறினார்.

மேலும், **"இன்னும் மூன்று நாட்கள் மட்டுமே உள்ளன, நீங்கள் திரும்பிச் செல்ல வேண்டும்"** என்று குறிப்பிட்டார். ஹோஷங், கோவாஸ் இருவருக்கும் நள்ளிரவு 12:30 மணி வரை தூங்க வேண்டாம் என உத்தரவு வழங்கப்பட்டது. 27ஆம் தேதி இரவு 11:30 மணி முதல் 12:30 வரை, அவர்களுக்கு வழங்கப்பட்ட பிரார்த்தனையை மீண்டும் மீண்டும் மொழிய வேண்டும். அக்டோபர் 27 இரவு 8 மணி முதல் 28 இரவு 8 வரை உபவாசம் கடைப்பிடித்து, மௌனம் காக்க வேண்டும். இந்த 24 மணி நேரத்தில் தண்ணீர் மற்றும் இரண்டு கப் தேநீர் மட்டுமே அருந்த முடியும்.

1959 அக்டோபர் 22ஆம் தேதி காலை, பாபா, ஹோஷங்கிடம் **'புக்காரின் உடல்நிலையைக் கண்காணித்து அவருக்கு மீண்டும் மாரடைப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்'** என்று குறிப்பிட்டார், ஏனெனில், பாபா அன்றைய தினம் புக்காரிடம், அவர் நவம்பர் மாதம் தனது இல்லத்திற்குத் திரும்பிச் செல்லுமாறு கூற இருந்தார். இதைக் கேட்ட புக்கார், பாபாவைப் பிரிந்திருக்கும்

நினைப்பில் ஒரு குழந்தையைப் போல் அழுதார். பாபா அவருக்கு ஆறுதல் கூறினார், **"கவலைப்படாதீர்கள், எனக்குக் கீழ்ப்படியுங்கள்."**

நீண்ட நாட்களாக, பெண்மணிகளை வெளியே அழைத்துச் செல்லாமல் இருந்ததால், அவர்களுடன் நடைபயிற்சிக்குச் செல்வதாகக் கூறி, அன்று சீக்கிரமாகவே பாபா மண்டபத்தை விட்டு வெளியேறினார். வழக்கம் போல, பாபா செல்வதற்கு முன்பு, கென்மோர் 'குருநாதர் மற்றும் மனம் வருந்தி மன்னிப்பு கோரும் பிரார்த்தனைகளை' மொழிந்தார்.

அன்று மதியம், சீட்டு விளையாடும் வேளையில், பாபா, அலோபாவிடம் '**வெளியே சென்று மழை வர வாய்ப்பு உள்ளதா**' என்று பார்த்து வருமாறு அறிவுறுத்தினார். வானம் மேகமூட்டமாக இருந்ததை, அவர் திரும்பி வந்து பாபாவிடம் தெரிவித்தார். இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு, பாபா அவரை மீண்டும் சென்று பார்க்குமாறு கூறியதும், அவர் அவ்வாறு செய்தார். கீழ்ப்படிதல் என்றால் என்ன என்பதை ஹோஷங், கோவாஸ் இருவருக்கும் பாபா எடுத்துக்காட்டிக் கொண்டிருந்தார்.

பாபா, அவர்கள் இருவரும் மெஹராஸாத்தை விட்டு வெளியேறிய பிறகு, ஸுரத் நகரில் செய்ய வேண்டிய பணியைப் பற்றி மேலும் அறிவுறுத்தினார். **ஏழைக் குடும்பங்களுக்குப் பணம் கொடுக்க அவர்கள் ஸுரத் செல்லும்போது, இருவரும் தனிப்பட்ட வேலையில் ஈடுபடக்கூடாது. பணி முடித்ததும், அது வெற்றிகரமாக நடந்ததா இல்லையா என்பதை பாபாவிற்குத் தொலைத்தந்தி மூலம் தெரிவிக்கவும், பின்பு விரிவான அறிக்கையை அனுப்பவும் அறிவுறுத்தப்பட்டனர்: "பணத்தைக் கொடுப்பதற்கு முன்பு, பெறுநரின் பாதங்களைத் தொட்டு தலை வணங்க வேண்டும்; நீங்கள் இங்கிருந்து புறப்படுவதற்கு முன்பு, நான் உங்களை வணங்குகிறேன், எனவே நீங்கள் பெறுநரை வணங்கினால், நான் அவர்களுக்குத் தலை வணங்குகிறேன் என்று அர்த்தம்."**

அன்று பிற்பகல், மற்றுமொரு முறை அனைவரும் தேநீருக்காக அழைக்கப்பட்டனர்; பாபா உணவுப்பண்டங்களை விநியோகித்தார். அவர் ஹோஷங் பரூச்சா உட்பட அனைவருக்கும் தேநீர் வழங்கி ஹோஷங்கிடம் கூறினார், **"இந்த முறை எடுத்துக் கொள்ளுங்கள், ஆனால் உங்கள் வாழ்க்கையில் இனி ஒருபோதும் இல்லை"** என்று திரும்பத் திரும்பக் கூறினார்.

23 அன்று மதியம் முதல் பிற்பகல் 3:00 மணி வரை ஆதி, மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டார். அன்று காலை, உரையாடலின் போது, பாபா இவ்வாறு குறிப்பிட்டார்: **"பேச்சுகள் மூலம் நீங்கள் என்ன சாதிக்க முடியும்? வாசிப்பதும் எவ்வகையிலும் உதவாது. எந்த அளவு படித்தாலும், கேட்டாலும் அதற்கும் எந்த மதிப்பும் இருக்காது. உண்மையான புரிதல் என்பது ஒரே நொடியில் வருவது!"**

ஹோஷங், கோவாஸ் இருவரிடமும், பாபா கூறினார்: **"நான் உங்களை மெஹராஸாத்திற்கு அழைத்தது சகவாசத்திற்காக அல்ல, ஆனால் எனது பணியில் எனக்கு உதவுவதற்காகவே. இந்த ஏகாந்தவாச காலம், மனச்சோர்வை ஏற்படுத்துகிறது; நான் மிகவும் மோசமான இரவுகளைக் கடக்கிறேன். பகலும் மோசமாகக் கழிகிறது. ஆனால், உங்களுடன் உரையாடி, விளையாடுவதன் மூலம் அது குறைகிறது. இந்த நெருக்கடியான காலகட்டத்தில் நீங்கள் இங்கு இருப்பது உங்கள் இருவருக்கும் பெரும் அதிர்ஷ்டம். வெளியளவில், நான் சீட்டு விளையாடுகிறேன், நடைப்பயிற்சிக்காக போகிறேன், நகைச்சுவை துணுக்குகளைக் கேட்கிறேன், இப்படி மற்றும் பல, ஆனால் அது வெளியளவிலானது. உள்ளளவில், எனது பணி தொடர்கிறது.**

"உலகம் முழுவதிலுமிருந்தும் மக்கள் இங்கு வர விரும்புகிறார்கள் - ஒரே ஒரு நிமிடத்திற்காக - ஆனால் நான் அவர்களை அனுமதிக்கவில்லை. நீங்கள் என்னுடன் இவ்வளவு நேரம் இருந்தீர்கள்! இது எனது கருணை, பதிலுக்கு நீங்கள் 100 சதவீதம் எனக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அதுதான் எனக்கு வேண்டும்.

முந்தைய நாள் இரவு, ஹாரி கென்மோருக்காக, பாபா வரைந்த ஒரு கவிதையை வாசிக்கச் செய்தார்:

அன்பான ஹாரி, நீங்கள் நன்றாக இருந்தும்,
இன்னும் உங்களுக்கு வேண்டும் வானுலக மதுபானம்,
அந்த மதுபானமோ, பன்றியைக் கடவுளாக்கும்.
ஒன்பது பேரில் ஒளிரும் 'குதுப்'பாக மாறுபவர் ஒருவர் மட்டும்,
என்னுடைய மற்றும் உங்களுடைய உலகம் முழுவதும்.

பாபா பின்பு கூறினார்: **"இறை அனுபவம் குறிக்கோள் அல்ல; இறை காட்சிகளும் இலக்கு அல்ல. இறைவனோடு ஐக்கியம் ஒன்றுதான் இறுதி இலக்கு. இந்த இலக்கை அடைய, எனது அருள் அவசியம். எனது அருளுக்காக, நீங்கள் எனது விருப்பத்திற்கு அடிபணிய வேண்டியதும் அவசியம். காலநிலை குளிராக இருக்கும் தருணத்தில், மதுபானம் அருந்துவது நல்லது, ஆனால், காலநிலை வெப்பமாக இருந்தால் வியர்க்கும், மதுபானம் அருந்தினால் ரத்த அழுத்தம் வரலாம். எனவே, அதைக் கேட்காதீர்கள்; சரியான நேரத்தில் நான் அதை (அருள்) வழங்குவேன்."**

அதன் பின்னர், எரச், கென்மோர், ஹோஷங், கோவாஸ் ஆகியோருடன் பாபா ஒரு குறுகிய நடைப்பயிற்சியை மேற்கொண்டார்; மேலும் பாதிரி, ஹாரியின் போலராய்டு கேமரா மூலமாக அவர்களின் புகைப்படங்களை எடுத்தார்.

அடுத்த நாள், அக்டோபர் 24 அன்று, ஒவ்வொருவருடைய உடல்நிலை குறித்த வழக்கமான விசாரணைக்குப் பிறகு, பாபா, கென்மோருக்கு அறிவுரை வழங்கினார்: **"இம்முறை நீங்கள் இங்கு தங்கியிருந்தபோது, நான் உங்களிடம்**

பல விஷயங்களைப் பகிர்ந்து கொண்டேன், பல சந்தேகங்களைத் தீர்த்துவைத்தேன், உங்களுக்காக கவிதைகள் வரைந்தேன், உங்களுடன் பல முறை அமர்ந்து இசைப்பதிவு கருவியில் இசையை ரசித்தேன், இப்படிப் பல. இவற்றைத் தவிர, நீங்கள் என்னுடைய பல சொற்பொழிவுகளையும், 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) **புத்தகத்தையும் படித்து வருகிறீர்கள். இப்போது 'இறைவனுடன் இணைந்திருங்கள்'** (STAY WITH GOD) **என்ற புதிய புத்தகம் வெளியாக உள்ளது. இவை அனைத்தையும் வாசிப்பது மற்றும் கேட்பது உங்கள் மனதிற்குப் போதுமான உணவை விட அதிகமாகவே இருக்கும்.**

"பிற துறவிகள் மற்றும் பரிபூரண குருநாதர்களின் சில சொற்பொழிவுகள், அவர்களின் முரண்பாடான அறிக்கைகளால் உங்களை குழப்பமடையச் செய்யும். உதாரணமாக, முஹமதுவும், கிறிஸ்துவும் மறுபிறவி இல்லை என்றும், கிருஷ்ணரும், புத்தரும் மறுபிறவி இருப்பதாக அறிவித்ததாகவும் கூறப்படுகிறது. இப்போது நீங்கள் யாரை நம்ப வேண்டும்?

"எனவே, எனது ஆலோசனையைக் கேட்டு, 'கடவுள் பேசுகிறார்' புத்தகத்தை இறுதி அதிகாரமாக ஏற்றுக்கொள்ளுங்கள். இதற்கு முன்னர் இதுபோன்ற எதுவும் வெளியிடப்படவில்லை."

பாபா, கென்மோருக்காக மற்றுமொரு கவிதையையும் தயாராக வைத்திருந்தார்:

இது உண்மைப்பொருளான தெய்வீக அன்பின் சட்டம்,
நீங்கள் வாடி வதங்க வேண்டும், துயரங்களுக்கு ஆளாக வேண்டும்;
நீங்கள் துன்பப்பட வேண்டும், ஆனால் அழுது புலம்ப வேண்டாம்,
வார்த்தைகள் வேண்டாம், எழுத்து வரிகளும் வேண்டாம்,
அன்பிற்குரியவருக்கான ஏக்கம் இருந்தால் மட்டும் போதும்!

பிற்பகலில் பாபா, ஹோஷங் பரூச்சா உட்பட ஆண்கள் அனைவருக்கும் தேநீர் வழங்கினார்; மீண்டும் ஒருமுறை, பாபா அவரிடம் தேநீர் அருந்தவும், ஆனால் அவரது வாழ்க்கையில் இனி ஒருபோதும் அருந்தக் கூடாது என்றும் கூறினார். சில இசைப்பதிவுகள் மண்டபத்தில் ஒலித்தன, ஆனால் பாபா அவற்றில் எதையும் விளக்கவில்லை.

1959 அக்டோபர் 25 அன்று காலை, டாக்டர் கோஹெர், டாக்டர் ஹோஷங் பரூச்சா ஆகியோருடன் பாபா, மண்டலியில் சிலருக்கான மருத்துவ சிகிச்சை குறித்து விவாதித்தார். ஒருமுறை ஹோஷங் ஒருவருக்கு சிகிச்சை அளித்துக் கொண்டிருந்த போது, பாபா அவரை அழைத்தார். ஹோஷங் முதலில் அவரது மருத்துவப் பையை மூடி வைத்துவிட்டு பாபாவிடம் சென்றார். பாபா அவரைக் கடிந்துகொண்டார்: **"நான் அழைக்கும்போது நீங்கள் அனைத்தையும் அப்படியே விட்டுவிட்டு உடனடியாக வரவேண்டும். நீங்கள், உங்கள் பையை மூடியிருக்கக் கூடாது."** இது ஹோஷங்கிற்கு ஒரு முக்கியமான பாடமாக அமைந்தது, அதை அவர் மறக்கவே இல்லை.

அன்றைய தினம் மண்டலி மண்டபத்தில், பாபா, அலோபாவிடம், ஹஃபீஸின் தொகுப்பிலிருந்து, பாரசீக மொழியில் ஒரு வசனத்தை வாசிக்கச் சொன்னார். பாபா அந்த ஈரடிக்கவிதையை விளக்கினார்:

அன்பிற்குரியவரைப் பிரிந்ததால் ஏற்பட்ட துன்பம் மலைபோல் பெரியதாக இருந்தது, அந்தத் துன்பத்தில் என் உடல் நாணல் போல நலிந்து போனது. மலையின் பளுவை நாணல் தாங்குவது எப்படி சாத்தியமாகும்? ஆனால் ஹஃபீஸ் கூறுகிறார்: "நான் 40 வருடங்கள் எனது குருநாதரின் அருளால் அதைத் தாங்கிக் கொண்டேன்." திடீரென குருநாதர், ஹஃபீஸின் விதியின் வாசலைத் திறந்து, ஈராண்டு-பழமையான மதுபான கோப்பையுடன் அவர் முன் நின்றார். இறை போதையை உருவாக்கும் மதுவில் ஒரே ஒரு துளியை மட்டும் அருந்தச் செய்து, இறை ஞானத்தை அருளினார்.

பாபா தொடர்ந்தார்:

ஒரு பரிபூரண குருநாதருக்குத் திடீர் விருப்பம் (தற்போக்கெண்ணம்) **வருவதானால், அவர் ஒரு கணத்தில் நாணல் ஒன்றை, 'பிரிவின் துன்பமான மலையின் முழுப் பளு'வையும் தாங்கச் செய்ய முடியும். ஒரு சத்குரு (குதுப்) அவரது அருளை அடையப் பெறும் தயார் நிலையில் ஒருவர் இருக்கிறாரா, இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல், அவர் விரும்பும் யார் ஒருவருக்கும் தனது அருளைப் பொழியலாம். ஒரு பரிபூரண குருநாதர் இதைச் செய்ய முடியும் என்றால், அவதார புருஷரின் அளவிறுதியற்ற சக்திகளால், அவர் தனது அன்பானவர்களுக்காக என்ன செய்ய முடியும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்.**

ஹோஷங், கோவாஸ் இருவரும் அன்றைய தினம், திரும்பிச் செல்ல இருப்பதை பாபா நினைவுபடுத்தினார். அவர்கள் சோகமாக தலையசைத்தனர். அவர்கள் என்ன செய்கிறார்கள், அன்றைய நாள் என்ன நாள் என்று கூட தெரியாத அளவுக்கு அவர்களின் மனம் மிகவும் வெறுமையாகிவிட்டது. பாபா, கோவாஸ் வெஸுனாவிடம், "**இன்றைய தேதி என்ன?**" என வினவினார்.

கோவாஸ் பதிலளித்தார்: "செப்டம்பர் 25."

"இல்லை," ஹோஷங் அவரைத் திருத்தினார், "இன்று நவம்பர் 15."

அவரது சகவாசத்தை சற்று மேலதிகமாக இருவருக்கும் வழங்க, பாபா, காலையில் அவர்களுடன் நடைபயிற்சிக்காக செல்ல முடிவு செய்தார். ஹோஷங், பாபாவின் நாற்காலியை எடுத்துச் சென்றபோது, கோவாஸ், பாபாவின் தலைக்கு மேல் குடையைப் பிடித்திருந்தார். நடைபயிற்சிக்குப் பிறகு, பாபா பிரதான இல்லத்திற்கு மதிய உணவுக்காகச் சென்றார்.

அன்று மதியம் அவர்களுடன் சீட்டு விளையாடி, பின்பு பாபா விடைபெற்றார். ஆனால் விரைவில் அவர் மற்றுமோர் ஆட்டத்திற்காகத் திரும்பி வந்தார். அவர் மீண்டும் வெளியேறி, இரண்டாவது முறை மறுபடியும் திரும்பி வர நேர்ந்தது. இதை அவர் மூன்று முறை செய்தார். பாபாவின் நாற்காலிக்கு அருகில் ஒரு பொட்டலம் சாக்லேட் இருந்தது, பாபா அவர்களுக்கு அந்த சாக்லேட்டில் சிலவற்றை, திரும்பிச் செல்லும் வேளையில் பிரசாதமாக வழங்க

வேண்டும் என்ற திடீர் ஆசை, பரூச்சாவின் மனதில் தோன்றியது. பாபா பொட்டலத்தை எடுத்து, அதிலிருந்த சாக்லேட்டுகளை அனைவருக்கும் விநியோகித்தார். கடிகாரத்தில் பிற்பகல் 3:00 மணி ஒலித்ததும், பாபா நாற்காலியிலிருந்து எழுந்தார். பதினொரு நாட்கள் கடந்துவிட்டன, விடைபெறும் தருணம் வந்துவிட்டது. கண்ணீரைக் கட்டுப்படுத்த போராடிய ஹோஷங், கோவாஸ் இருவரையும் பாபா ஆரத்தழுவினார். ஒருமுறை, பாபா அவர்களிடம் கூறினார்: **"உள்ளூர கதறி அழுங்கள்; அப்போது, நீங்கள் அழுகிறீர்கள் என்பது என்னைத் தவிர வேறு எவருக்கும் தெரியாது."** அவர்கள் உள்ளூர அழுது கொண்டிருந்தது பாபாவிற்குத் தெரியும். அவரது அன்பான கண்கள் அத்தகைய அன்பைப் பொழிந்தன, அவர்கள் பாபாவின் முன்னால் அசையாமல் நின்றனர். பாதிரி அவர்களை ரயில் நிலையத்திற்கு அழைத்துச் செல்லவே, மாலை 4:00 மணிக்கு இருவரும் ரயிலில் புறப்பட்டுச் சென்றனர்.

1959 அக்டோபர் 27 அன்று மெஹராஸாத்தில் விஷ்ணுவிற்கு மாரடைப்பு ஏற்பட்டது. ஏற்கனவே வழங்கிய சுற்றறிக்கையுடன், பாபா தமது அன்பர்கள் அனைவருக்கும் அன்று இரவு 8:00 மணி முதல் அக்டோபர் 28 இரவு 8:00 மணி வரை, 24 மணி நேரம் மௌனம் காத்து, உபவாசம் கடைப்பிடிக்க உத்தரவு பிறப்பித்துள்ளார். மெஹராஸாத் மண்டலி உட்பட உலகம் முழுவதும் வாழும் அவரது அன்பர்கள் அனைவரும் அவ்வாறு செய்தனர்.

28ஆம் தேதி பாபாவின் ஏகாந்தவாசத்தில் முக்கியமான பணியின் கடைசி நாள், மேலும் பாபா ஓர் ஏழையின் கால்களில் கடைசியாக தலை வணங்கிய நாளாகும். பிரார்த்தனைக்குப் பிறகு, பாபா ஒவ்வோர் ஆண் மண்டலியையும், கடைசியாக கைக்கோபாத்தையும் தலை வணங்கினார். பாபா அவரை வணங்கியபோது, 'பாபா, உங்கள் உடல்நிலையை நன்றாகப் பாதுகாத்து, டிசம்பர் 30ஆம் தேதிக்குள் உங்களை வெளிப்படுத்துங்கள்!' என்று மொழியுமாறு கைக்கோபாத் அறிவுறுத்தப்பட்டிருந்தார்.

மாலை 4:30 மணிக்கு, ஆண், பெண் மண்டலி மற்றும் ஹாரி கென்மோர் முன்னிலையில், பின்வருபவை மொழியப்பட்டன:

நாளை முதல் டிசம்பர் 30 வரை (63 நாட்கள்) பாபா, தனியாகப் பணிபுரிவார் (கைக்கோபாத்தின் உதவியுடன், அரை மணி நேரத்திற்கு பதிலாக பதினைந்து நிமிடங்கள், மற்றும் முடிந்தால் ஒரு மஸ்தின் உதவியுடன்). **பாபா, தமது ஆன்மீகப் பணியை 1959, டிசம்பர் 30ஆம் தேதிக்குள் முழுமையாக நிறைவு செய்ய முடிவு செய்துள்ளார். அன்பான கடவுளே, பாபா விரும்பிய பலன்களை முழுமையாக நிறைவேற்ற உதவுமாறும், அவருடைய தாமனைப் (மேலங்கி) நாங்கள் உறுதியாகப் பற்றிக்கொள்ள முயற்சி செய்யவும், அவருக்கு 100 சதவீதம் கீழ்ப்படியவும் உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

அடுத்த நாள் காலை, 1959 அக்டோபர் 29, பைதூல் அவரது மௌனத்தைக் கலைக்குமாறு அறிவுறுத்தப்பட்டார்; மேலும் மண்டலிக்கு உபவாசம், மௌனம் போன்றவற்றிற்கான கட்டளைகள் வழங்கப்படவில்லை. ஆண்களுக்கு

முடிதிருத்தம் செய்ய, அன்றைய தினம் முடிதிருத்தும் நபர் அழைக்கப்பட்டார், மேலும் பைதூலின் தாடியையும் அகற்ற அனுமதி வழங்கப்பட்டது.

அன்று காலை வழக்கம் போல மண்டலி மண்டபத்திற்கு வந்த பாபா, ஹாரி கென்மோரை அழைத்து, அவரிடம் கூறினார்:

நான் இதுவரை எவருக்காகவும் கவிதை வரைந்ததில்லை. அன்பர்கள் எப்பொழுதும் அன்பிற்குரியவரைப் புகழ்ந்து, பாராட்டி கவிதைகள் எழுதுவது மரபு. ஆனாலும் பாருங்கள், நான், அன்பிற்குரியவர், உங்களுக்காகக் கவிதைகள் வரைந்துள்ளேன்!

டிசம்பர் இறுதிக்குள் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள். அமெரிக்காவிற்குச் சென்று, நீங்கள் முன்பு செய்ததைப் போலவே உங்கள் பயிற்சியைத் தொடங்குங்கள். டிசம்பர் இறுதி வரை பயிற்சியைத் தொடரவும், அதற்குப் பிறகு நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள். உங்களிடம் உள்ள பணத்தை நீங்கள் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதையும் நீங்கள் அறிந்து கொள்வீர்கள். 'இறைவனுடன் இணைந்திருக்க' $1,000 மற்றும் பிற பணிகளுக்காக $1,000 ஒதுக்கி வைக்கவும். இங்கிருந்து மகிழ்ச்சியுடன் அமெரிக்காவிற்குச் சென்று அங்கு வாழும் என் அன்பர்கள் அனைவருக்கும் என் அன்பை அள்ளி வழங்குங்கள். நீங்கள் எவ்வளவு பெரிய அதிர்ஷ்டசாலி, நான் உங்களை அமெரிக்காவிற்கு எனது 'அன்பு' மற்றும் 'உண்மைப்பொருளின் வழிகாட்டி'யாக அனுப்பி வைக்கிறேன்.

மெஹராஸாத் தோட்டத்திலிருந்து கொண்டு வரப்பட்ட மூன்று கொய்யாப்பழங்களின் அளவை உணருமாறு பாபா, கென்மோரிடம் கேட்டுக்கொண்டார். பாபா அவரிடம், **"இந்தப் பழங்களில் ஒரு பகுதியை நான் உண்பதற்காக உங்களுக்குத் தருகிறேன், பின்னர் இந்தப் பிரசாதத்தின் பலனை நீங்கள் அனுபவிப்பீர்கள். இந்தப் பிரசாதத்தால் உங்கள் இதயத்தில் உண்மைப்பொருளின் விதையை விதைப்பேன்"** என்று குறிப்பிட்டார்.

முந்தைய நாள் இரவு டாக்டர் கென்மோருக்கு பாபா வரைந்த இரண்டு கவிதைகளைப் படிக்குமாறு பாபா, எரச்சிடம் கேட்டுக்கொண்டார்:

அன்பான ஹாரி, எனக்கு முழுமையாகக் கீழ்ப்படியுங்கள்;
பீட்டர் செய்தது போல், ஜான் செய்தது போல்;
உங்கள் தந்தையை (பாபா) உங்கள்
இதயத்தில் வைத்துக்கொள்ளுங்கள்;
இங்கிருந்துச் செல்வீர்கள், ஆனால் செல்லாதது போல்!
பிரியமான மெஹராஸாத்தில் உங்கள் இதயத்தை விட்டுவிடுங்கள்,
மனம், உடல் இரண்டையும் நியூயார்க் நகரில் தவழ விடுங்கள்.
ஆன்மீக ரீதியாக, பாபாவை உண்கிறீர்கள்,
உடல் ரீதியாக, மாமிசத்தைப் புசிக்கிறீர்கள்.
நான் உங்கள் பிரிவை உணர்வேன்,
நீங்கள் எனது பிரிவை உணர்வீர்கள்.

ஆனால் ஒரு நாள், நாம் 'ஐக்கியமாக' இருப்போம்.
நீங்கள் இங்கிருந்து புறப்பட்டுச் செல்வீர்கள்,
மகிழ்ச்சி, புன்னகை இரண்டையும் கொண்டு செல்வீர்கள்.
இங்கே உங்கள் பணி நிறைவடைந்தது
என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

இரண்டாவது கவிதை:

ஆச்சரியமும் கவலையும் அடைய வேண்டாம்,
அனைத்தும் தெய்வீகமாக நன்றாக இருக்கும்.

எனது பிரியமான அமெரிக்க அன்பர்களுக்கு,
என் ஆசீர்வாதங்களின் செய்தியை வழங்குங்கள்!

அதற்குப் பிறகு பாபா, டாக்டர் கென்மோர் மற்றும் ஆண்களுடன் உலாவச் சென்றார். அடுத்த நாள், பாதிரியுடன் கென்மோர் மெஹராபாத்திற்குச் சென்று வர பாபா அறிவுறுத்தினார். மறுநாள் காலை 8:00 மணிக்கு, பாபா, டாக்டர் கென்மோரைப் பார்க்க வந்தார்.

ஜால்பாய் நவம்பர் 1 அன்று மெஹராஸாத்திற்கு மூன்று நாட்களுக்காக வந்தார். அவர் தங்கியிருந்த காலத்தில், கென்மோர் மற்றும் மண்டலியுடன் பாபா நடந்து செல்வதை காணொளித் திரைப்படம் பிடித்தார். நவம்பர் 2ஆம் நாள் மெஹர்ஜி, பிரேம் கில்னானி, அவரது மனைவி மற்றும் குழந்தைகள் பாபாவின் தரிசனத்திற்காக வந்தனர்.

டாக்டர் ஹாரி கென்மோர் மெஹராஸாத்திலிருந்து மும்பை சென்று 1959 நவம்பர் 4 அன்று நியூயார்க் நகருக்குப் பயணம் செய்தார்; அவர், பாபாவின் இந்தச் செய்தியை அன்பர்களுக்கு எடுத்துச் சென்றார்: **"என் அமெரிக்கக் அன்பர்களுக்குத் தெரியப்படுத்துங்கள், உடல் ரீதியாக என்னிடமிருந்து வெகு தொலைவில் இருந்தாலும், ஆன்மீக ரீதியில் அவர்கள், தங்களை விட எனக்கு மிகவும் நெருக்கமாக இருக்கிறார்கள்; மேலும், அனைவரும் எனக்கு மிகவும் பிரியமானவர்கள்."**

பாபாவிடமிருந்து ஹாரிக்கு ஓர் இறுதிக் கவிதை:

அன்புள்ள ஹாரி, மகிழ்ச்சியாகவும்
முகமலர்ச்சியாகவும் இருக்க வேண்டும்,
மெஹராஸாத் துயரங்கள் அனைத்தும்
மண்ணோடு மண்ணாக அடங்கட்டும்.
அதி விரைவில், ஹாரி, அனைத்தும் முடிந்ததாக எண்ணாமல்
மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்,
அனைத்து அமெரிக்க அன்பர்களுக்கும்
எனது அன்பும் ஆசீர்வாதமும்.

மெஹராஸாத், அக்டோபர் 1959
ஃபிரான்சிஸ், எரச், பாபா, ஹாரி கென்மோர்
(MEHERAZAD, OCTOBER 1959
FRANCIS, ERUCH, BABA, HARRY KENMORE,)

உலகளாவிய பணி - ஏகாந்தவாசம்

(**Universal Work In Seclusion**)

1959 அக்டோபர் மாதத்தில் முடிவுறும் முக்கியமான இரண்டரை மாதங்கள் குறித்து, பாபா தமது அன்பர்களை பலமுறை எச்சரித்திருந்தார்; அந்த நேரத்தில், அவருக்கு எதிராக, மாயா தன்னால் முடிந்த அனைத்தையும் செய்ய முயற்சிப்பதாக அவர் கூறினார். பூனா அன்பர்களைப் பொறுத்தவரை, அந்தக் காலகட்டத்தின் இறுதி நாளான அக்டோபர் 31 அன்று, பூனா மையமாகச் செயல்பட்டு வந்த, அந்த இல்லத்தின் உரிமையாளர் அப்பா ராவ் முதலியாரின் (APPA RAO MUDALIAR) ஒரே மகன் ஸ்ரீநிவாஸ் முதலியார் (SRINIVAS MUDALIAR), ஏணியிலிருந்து தவறி விழுந்து, காயங்களால் உயிரிழந்த நிகழ்வு, உண்மையில் கடினமாகவும், சோகமாகவும் இருந்தது. ஸ்ரீநிவாஸ், குடும்பத்தின் ஒரே ஆதரவாக இருந்து, பாபாவின் நோக்கங்களுக்காக மிகுந்த நேர்மையுடனும், அர்ப்பணிப்புடனும் பணியாற்றி வந்தார். பாபாவிற்குத் தெரிவிக்கப்பட்டதும், ராமகிருஷ்ணனுக்கு இந்தத் தொலைதந்தி அனுப்பப்பட்டது: **"பிரியமான ஸ்ரீநிவாஸ், பாபாவில் தனது பேரின்ப 'நிவாஸை'** (குடியிருப்பை) **அடைந்துள்ளார். பாபாவின் அன்பின் அரவணைப்பால் முதலியார் குடும்பத்தை ஆறுதல்படுத்துங்கள்."**

பாபா, தமது ஏகாந்தவாசத்தை இன்னும் இரண்டு மாதங்கள் நீட்டிக்க முடிவு செய்தார். அலோபா 1959 நவம்பர் 5 அன்று, பாபாவுக்காக ஒரு நகைச்சுவை நாடகத்தை எழுதி நடித்தார். அடுத்த நாள், பாபா 'எண் ஒன்றும், பூஜ்யமும்' (THE ONE AND THE ZERO - பின்பு 'தி எவ்ரிதிங் அண்ட் தி நத்திங்' - (THE EVERYTHING AND THE NOTHING) என்ற புத்தகத்தில் அச்சிடப்பட்டது) என்ற தலைப்பில் சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினார், அதன் ஒரு பகுதி:

கடவுள் பொதுவாக (ஒன்று) 'ஒன்றானவராக'ப் பேசப்படுகிறார்... இருப்பினும், விதிவிலக்கிற்கு இடமின்றி சொல்லப்போனால், எந்த ஓர் எண்ணும், ஒன்று கூட இரண்டாவது என இல்லாமல் இருக்கும், பிரிக்க முடியாத ஒருவரை சித்தரிக்க முடியாது. இதை 'ஒன்று' என்று அழைப்பது கூட தவறானது. சமுத்திரத்தை நாம் 'ஒன்று' என்று கூறுவதில்லை. அது மஹாசமுத்திரம் மட்டுமே.

நரிமன், ஜிம் மிஸ்திரி இருவரும் நவம்பர் 7ஆம் நாள் வந்தபோது, இரண்டு நாட்கள் மெஹராஸாத்தில் தங்க அனுமதிக்கப்பட்டனர். அதற்கிடையில், பாவ் கல்சூரி இந்தி நாடகத்தை எழுதி முடித்துவிட்டார்; அதற்கு பாபா, 'திவ்ய லீலா' (DIVYA LEELA) என்ற தலைப்பை வழங்கினார்; அது, பாபா முன்னிலையில் மண்டலி மண்டபத்தில் தினமும் வாசிக்கப்பட்டது. நவம்பர் 9ஆம் தேதி, கேஷவ் நிகத்தை மெஹராஸாத்திற்கு அழைத்த பாபா, நாடகத்தை வெளியிடுவதற்கான பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தார்; அது பாபாவின் பிறந்தநாளில்

அச்சிடப்பட்டது. கேஷவ், புக்கார் இருவரும் நவம்பர் 12ஆம் தேதி ஹமிர்பூருக்கு புறப்பட்டுச் சென்றனர்.

நவம்பர் 13ஆம் நாள், பாபா இவ்வாறு விளக்கினார், **"கடவுள் நல்லவரும் அல்ல தீயவரும் அல்ல, ஒவ்வொருவரும், கடவுளுக்குடையவராகவும், கடவுளிலும் இருப்பதால், நல்லவர்களாகவோ, தீயவர்களாகவோ இருக்க முடியாது. நல்லதும், தீயதும், இரட்டைத்தன்மை படைத்த வாழ்வின்** (DUAL EXISTENCE) **வெளிப்பாடாகும்; எனவே இது மாயையான நிகழ்வு என்று அழைக்கப்படுகிறது."**

1958ஆம் ஆண்டு அமெரிக்காவில் பாபாவை சந்தித்த ஜோனா ஸ்மித் (JOANNA SMITH) என்ற நியூயார்க்கை சேர்ந்த 'பாபா அன்பர்' ஒருவர் இந்தியாவில் பயணம் செய்து கொண்டிருந்தார். பாபாவை மீண்டும் பார்க்க விரும்பிய அந்தப் பெண்மணியை அங்கு வர அனுமதித்தார். நவம்பர் 21 அன்று காலை, ஔரங்காபாத்திலிருந்து காரில் பயணம் செய்து, அஹமதுநகர் வந்தடைந்த அவரை, ஆதி மெஹராஸாத்திற்கு அழைத்து வந்தார். பாபா அந்தப் பெண்மணியுடன் தோட்டத்தை சுற்றி வருகையில், 'பாபா மீண்டும் மேற்கத்திய நாடுகளுக்கு எப்போது வருவார்' என்று கேட்டு தொடர்ந்து கூறினார், "நீங்கள் இப்படி நடந்து செல்வதை அனைவரும் பார்க்க வேண்டும் பாபா" என்றார். பாபா தெளிவுபட எதுவும் கூறாமல் புன்னகைத்தார். மெஹர்ஜி, ஜோனாவை மெஹராபாத்திற்கு ஒரு குறுகிய சுற்றுப்பயணத்திற்காக அழைத்துச் சென்ற அதே நாளில், அவர் ஔரங்காபாத் திரும்பிச் சென்றார். (மெஹர்ஜி 23ஆம் தேதி வரை தங்கினார்.)

முந்தைய நாள் பங்கெடுத்ததைப் போலவே, பாபா அன்று மதியம் 'ஏழு ஓடுகள்' (SEVEN TILES) விளையாட்டை விளையாடினார்.

பாபா தமது ஏகாந்தவாச பணியின் கடைசி 40 நாட்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்று அறிவித்திருந்தார். 22 அன்று காலை 9:00 மணிக்கு பிரார்த்தனைகள் மொழியப்பட்டன. ஒவ்வொரு மண்டலியும் பின்வருவனவற்றைத் திரும்பத் திரும்ப மொழியும் அதே வேளையில், பாபா, அவர்களின் கால்களில் தலை வணங்கினார்: **"சர்வவல்லமையுள்ள கடவுளே, டிசம்பர் இறுதிக்குள், பாபாவின் பணியை நிறைவு செய்ய உதவுங்கள், மேலும் பாபாவின் தாமனை** (மேலங்கியை) **இறுதிவரை உறுதியாகப் பற்றிக்கொள்ளவும், அவரது அவமானம், மகிமை இரண்டையும் பகிர்ந்து கொள்ளவும் எங்களுக்கு உதவுங்கள்."**

ஏற்கனவே அறிவுறுத்தியபடி, பாதிரி, அரன்காவ்மிலிருந்து ஆறு ஏழைகளை அழைத்து வந்தார். பாபா அவர்களின் கால்களைக் கழுவி, தலை வணங்கி, ஒவ்வொருவருக்கும் 50 ரூபாய் பிரசாதமாக வழங்கினார்.

பாபா இப்போது தமது ஏகாந்தவாசத்தின் முழு முனைப்பான கட்டத்தில் நுழைந்தார். இருப்பினும், மூன்று நாட்களுக்குப் பிறகு, மாயா அவரது பணியில்

குறுக்கிட்டு, 40 நாட்களின் மிக முக்கியமான பணியைத் தொடங்குவதில் முட்டுக்கட்டையாக இருந்ததாக பாபா சுட்டிக்காட்டினார்.

நவம்பர் 16 அன்று ஒரு மஸ்தைக் கண்டுபிடிக்கும் நோக்கத்தில் பைதூல் குஜராத்திற்கு அனுப்பப்பட்டார். அவர் 27ஆம் நாள், பீர் ஸாஹேப் (PIR SAHEB) என்றழைக்கப்பட்ட மஸ்துடன் திரும்பி வந்தார். அவருடன் பாபா மிக்க மகிழ்ச்சியாக இருந்து, திருப்திகரமாக பணியாற்றினார். அடுத்த நாள் ஸூரத்திற்கு மஸ்த் திருப்பி அனுப்பப்பட்டார், அப்போது பாபா இவ்வாறு கருத்துரைத்தார்: **"இன்று தொடங்கி, டிசம்பர் 25 வரையிலான 40 நாட்களின் பணியை 28 நாட்களில் செய்து முடிப்பேன்."**

1959 நவம்பர் 29 ஞாயிற்றுக்கிழமை அன்று, பாபாவின் அறிவுறுத்தலின்படி, அஹமதுநகரிலிருந்து நெருங்கிய அன்பர்கள் (சகன், வாமன், ருஸ்தம் காக்கா, மானேக், ரங்கோலே, பகீரத்) இரண்டு பேருந்துகளில் தொழுநோயாளிகள், பார்வையற்றவர்கள் மற்றும் ஊனமுற்றவர்கள் (ஒட்டுமொத்தமாக 100 ஆதரவற்றவர்கள்) அனைவரையும் அழைத்து வந்தனர். மெஹராஸாத்தில் காலை 9:00 மணிக்கு, பாபாவின் வழக்கமான முறைப்படி, ஏழைகளின் கால்களைக் கழுவி, தலைவணங்கிய பிறகு, பாபா ஒவ்வொருவருக்கும் ஐந்து ரூபாய் பிரசாதமாக வழங்கினார்.

டிசம்பர் 7ஆம் தேதி, பாபா தனது சொற்பொழிவை 'தி பேர்ல் டைவர்' - ('THE PEARL DIVER', பின்பு 'தி எவ்ரிதிங் அண்ட் தி நத்திங்' - THE EVERYTHING AND THE NOTHING) என்ற தலைப்பில் வழங்கினார். இரண்டு நாட்களுக்குப் பின்னர் 9ஆம் தேதி, அவர் தமது அன்பர்களுக்கு, கீழ்வரும் இந்தச் செய்தியை எடுத்துரைத்தார், இது பின்னர் ஒரு வாழ்க்கை சுற்றறிக்கையாக வெளியிடப்பட்டது:

இது என்னை நேசிக்கும் மற்றும் எனக்குக் கீழ்ப்படியும் உங்கள் அனைவருக்கும், அதே போல் அதைச் செய்யும் அனைவருக்காகவும் வழங்கப்படுகிறது. குறிப்பாக, எனக்குக் கீழ்ப்படிந்து, எந்த சூழ்நிலையிலும் எனது தாமனை (மேலங்கி) **உறுதியாகப் பற்றிக் கொண்டு, என்ன நடந்தாலும் நடக்காமல் இருந்தாலும், இறுதிவரை, என்னுடன் அட்டைபோல் ஒட்டிக்கொள்ள வேண்டும் என்று உறுதிமொழியாக** ('ஆம்' என்று) **பதிலளித்த உங்கள் அனைவருக்காகவும் வழங்கப்படுகிறது.**

எனக்குக் கீழ்ப்படிந்து, என்னைப் பற்றிக் கொள்வது என்பது, எனது விருப்பத்திற்கு, நீங்கள் முழுமையான மற்றும் நிபந்தனையற்ற முறையில் சரணடைவதைக் குறிக்கிறது, மேலும் இந்த உலகில் அல்லது மூவுலகங்கள் மற்றும் அதற்கு அப்பால், எனது உலகளாவிய பணியின் முக்கியத்துவம் அல்லது முடிவுகள் குறித்து, என்னிடம் எந்த அறிக்கையும், விளக்கமும் அல்லது அறிவிப்பையும் எதிர்பார்க்க மாட்டார்கள். நான் எதைச் சொன்னாலும், சொல்லாமல் இருந்தாலும், செய்தாலும், செய்யாமல் இருந்தாலும் அல்லது செயல்படுத்துவதைத் தவிர்த்தாலும் - என் அன்பர்களின் என் மீதான திட நம்பிக்கை, எனது விருப்பத்திற்கு அடிபணிந்து நடப்பது போன்ற எதுவும், என்னிடம் ஒரு காரணத்தையோ விளக்கத்தையோ

கேட்கத் தூண்டக்கூடாது. ஆனால், எல்லையற்ற பரமாத்மாவான உண்மைப்பொருளாகிய என்னில் ஒரு பகுதியாகவும், பிரிவாகவும் இருக்கும் என் அன்பர்களே, உங்கள் மீது நான் கொண்ட அன்பின் காரணமாக, நான் பின்வருவனவற்றை உங்களுக்காக வழங்குகிறேன்:

எல்லையற்ற எனது பணியின் முக்கியமான கட்டம், நான் கூறியது போல், அக்டோபர் 28ஆம் தேதி முழுத் திருப்தியளிக்கும் விதத்தில் நிறைவுற்றது. அதைத் தொடர்ந்து வரும் இன்றியமையா பணிக் காலம், டிசம்பர் 24ஆம் தேதி இதைப்போலவே திருப்திகரமாக நிறைவுறும்.

எனது இந்தப் பணியின் பலன் 100 சதவீதம் டிசம்பர் 24ஆம் தேதி வெளிப்படும்.

இந்த முடிவு இரண்டு நிலைகளிலான வெளிப்பாடாக இருக்கும்: எனது அவமானம் மற்றும் எனது மகிமை.

அவமானத்தின் கட்டத்தில், என் மீதான உங்கள் அன்பின் அளவு மற்றும் எனக்குக் கீழ்ப்படிவதற்கான உங்கள் தயார்நிலை ஆகியவை என்னால் அல்ல, அவமானத்தின் கட்டத்தால் சோதிக்கப்படும். உங்களில், என் அன்பின் தெய்வீக மகிமையில் வெற்றிவாகை சூடி, அதன் மூலம் எனது தாமனை (மேலங்கி) உறுதியாகப் பற்றிக் கொண்டவர்கள் உண்மையிலே பாக்கியவான்கள்.

'இறை வார்த்தை'யின் மூலம் எனது மௌனத்தை நான் கலைக்கும் போது, என்னை மகிமைப்படுத்தும் நிலை உருவாகும் - இது மனிதனின் மனதிலும், இதயத்திலும் கடவுள் உளதாயிருப்பதை சந்தேகத்திற்கு இடமின்றி வலியுறுத்தும். அந்த 'இறை வார்த்தை' கடவுள் உளதாயிருக்கிறார் என்பதை மட்டுமல்ல, அவர் மட்டுமே எல்லையற்ற தன்மையில் நித்தியமாக உளதாயிருக்கிறார் என்பதை உலகுக்கு உணர்த்தும்.

1960இல் - எந்த மாதத்திலும், எந்த நாளிலும், எந்த நேரத்திலும் நான் எனது மௌனத்தைக் கலைத்து 'இறை வார்த்தை'யை மொழிவேன்.

அக்டோபர் 28ஆம் தேதியுடன் நிறைவடைந்த எனது பணியை, மனிதன், ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளை உணரத் தடையாக இருக்கும் அறியாமை எனும் மாயையில் குவிந்து கிடக்கும் உலகளாவிய குப்பைகளுக்கு ஒப்பிடலாம். டிசம்பர் 24ஆம் தேதி 'நிலைநிறுத்தப்படும்' எனது முடிவு, நான் இந்த குப்பை மேட்டில் ஒரு தீக்குச்சியைப் பயன்படுத்தி எரியவிடுவதைப் போல் இருக்கும்.

அதைப் பின்தொடர்ந்து வரும் அவமானத்தின் நிலை, முதல் முறையாக உருவாகும் புகையைப் போல், உங்கள் கண்களுக்குள் நுழைந்து, உங்களைக் 'குருடாக்கி', குழப்பத்தை உருவாக்கி, உங்களை சூழ்ந்து கொள்ள முயல்கிறது. அது உங்களைக் குழப்பமுறச் செய்யவோ அல்லது உங்களில் பீதியை ஏற்படுத்தவோ வேண்டாம். அதைத் தொடர்ந்து வரும் நெருப்பு, சந்தேகம் மற்றும் குழப்பம் என்ற புகையை அகற்றி, அதன் ஒளி, ஒரே உண்மைப்பொருளான ஏக இறைவனை வெளிப்படுத்தும்; மேலும்

உண்மைக்குப் புறம்பான அனைத்தும் அதன் எரியும் தீப்பிழம்புகளில் அழிந்துவிடும். இதுவே எனது மகிமை.

கவலைப்படாதீர்கள். என் அன்பில் மகிழ்ச்சியாக இருந்து, இறுதி வரை எனது தாமனை (மேலங்கி) **உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள். அனைவரும் தெய்வீக ரீதியில் நலமாக இருப்பார்கள் என்பதில் உறுதியாக இருங்கள். கடவுள், அவரை நம்புபவர்களை கைவிடுவதில்லை. என்னை, நான் நேசிக்கப்பட வேண்டிய விதத்தில் நேசித்து, எனக்குக் கீழ்ப்படிபவர்கள், ஒரு நாள் அதுபோல நேசிக்கப்படுவார்கள், பிறர் அவருக்குக் கீழ்ப்படிவார்கள். இன்று மனமுவந்து எனக்கு ஊழியம் செய்ய முன்வந்தவர்கள் நாளை உண்மையான குருநாதர்களாக மாறுவார்கள்.**

உங்கள் ஒவ்வொருவருக்கும் எனது நித்தியமும், நிரந்தரமுமான அன்பை வழங்குகிறேன்.

பாபா மேலும் கூறினார்:

இந்த ஐந்து மாத உழைப்பின் தாக்கம், என் உடல்நிலையை பெரிதும் பாதித்தது. எனவே, டிசம்பர் இறுதிக்குப் பிறகு நான் ஏகாந்தவாசம் மேற்கொள்ளமாட்டேன் என்றாலும், ஜனவரி மாதத்தில் என் அன்பர்கள் என்னைப் பார்க்கவோ அல்லது எனக்குக் கடிதங்கள் எழுதவோ, நேர்காணல்களுக்கான கோரிக்கைகளை முன்வைக்கவோ, ஆலோசனைகள் மற்றும் விளக்கங்கள் கோரி என்னை தொந்தரவு செய்யவோ கூடாது என்று நான் விரும்புகிறேன். இந்தக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பதன் மூலம், அவர்கள் எனக்கு உதவியாக இருப்பார்கள்; அவர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடனும் விருப்பத்துடனும் இதைச் செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, இடையிடையே 'வாழ்க்கை சுற்றறிக்கை'களின் (LIFE CIRCULARS) நகல்களைத் தட்டச்சு செய்தல், அச்சிடுதல் மற்றும் முகவரியிட்டு அனுப்பும் பணி குஷ்ரு குவார்ட்டர்ஸில் ஆதி மற்றும் அவரது ஊழியர்களின் பொறுப்பாக மாற்றப்பட்டது. அச்சிடுவதில் ஏற்படும் பிழைகள் காரணமாக, சில சமயங்களில் சுற்றறிக்கையை மறுபடியும் அச்சிட வேண்டியதாகிறது. 1959 டிசம்பர் 17 அன்று எரச், ஆதிக்கு, கீழ்வரும் குறிப்பை அனுப்பினார்:

'வாழ்க்கை சுற்றறிக்கை' **45** - (LIFE CIRCULAR - LC **45**) **3,000** பிரதிகளை அச்சிடுவதற்குத் தேவையான மேலதிக உழைப்பு மற்றும் செலவுக்குத் தூண்டுதலாக இருந்தது, அச்சு இயந்திரத்தில் பணிபுரியும் அனுபவம் குன்றிய நபர்கள் (PRINTER'S DEVILS) அல்ல என்று பாபா கூறுகிறார். ஆனால் பாபாவின் உலகளாவிய பணியில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில், பாபாவின் பணியைச் செய்யும் போது, பத்திரிகைகளிலும் உங்கள் அலுவலகத்திலும் கூட, மாயா தனது சுய ரூபத்தைக் காட்டத் தவறியதில்லை.

நோஷிர் ஸிகன்போரியா மெஹராஸாத்திற்கு முதலில் டிசம்பர் 15 அன்று பாதிரியுடன், மீண்டும் 20ஆம் தேதி ஆதியுடன் அழைக்கப்பட்டார்.

பாபாவின் நெருங்கிய அன்பரான டாக்டர் தௌலத் ஸிங் (DR. DAULAT SINGH), மூளைக்காய்ச்சலால் ஜபல்பூர் விக்டோரியா மருத்துவமனையில், டிசம்பர் 22 பிற்பகல் 2:30 மணிக்குக் காலமானார். டாக்டர் தௌலத் ஸிங் குடும்பத்தினருக்கு பாபா இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார்: **"டாக்டர் தௌலத் ஸிங் போன்ற துணிச்சலான மற்றும் அன்பான ஆன்மா, அவருடைய ஒரே அன்பிற்குரியவரான என்னிடம் வராமல் இருக்க முடியாது."**

பாபாவின் ஏகாந்தவாசப் பணி, 1959 டிசம்பர் 24 வியாழன் அன்று முடிவடைய இருந்தது, அந்த நாள் மெஹராவின் பிறந்தநாளாகவும் கொண்டாடப்பட்டது. மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்ட அஹமதுநகர் பஜனைக் குழுவினர், அங்கு இசை நிகழ்ச்சியை நடத்தினர். பாபா 24 தொழுநோயாளிகளின் கால்களைக் கழுவி, தலைவணங்கி போர்வையை அன்புப் பரிசாக வழங்கினார். பாபா தமது கைகளால் அவர்களுக்கு தேநீருடன் இனிப்பு ரவை பரிமாறினார். இவ்வாறு, இறை-மனிதன் அவரது அன்பான மெஹராவின் பிறந்தநாளில் தமது பணியை நிறைவுசெய்தார்.

டாக்டர் தேஷ்முக் நாக்பூரிலிருந்து வந்து, தனது ஒலிப்பதிவு கருவியில் சில பதிவுகளை செய்தார்.

அலென் ஏல் (ALAIN YOUELL), 21, (நெதர்லாந்தின்) ஹேக் (HAGUE IN THE NETHERLANDS) நகரில் டான் ஸ்டீவன்ஸுடன் (DON STEVENS) தங்கியிருந்த ஆங்கிலப் பல்கலைக்கழக மாணவர். டான் தனது வருடாந்திர கிறிஸ்துமஸ் விடுமுறையில் இந்தியா வருவதைப் பற்றி பாபாவிற்குக் கடிதம் எழுதி, அலெனை அழைத்து வரலாமா என்று கேட்டார். பாபா அதற்கு இணக்கம் தெரிவித்து, டிசம்பர் நடுப்பகுதியில் அவர்களின் வருகையை உறுதி செய்தார். ஆனால், அதைத் தொடர்ந்து, பாரிஸில் டான் ஸ்டீவன்ஸின் எண்ணெய் வணிகக் கூட்டங்களால், பயணம் பல நாட்கள் தாமதமனது. மிகவும் சிரமமான பயணத்திற்குப் பிறகு, ரோம் நகரில் பெய்த மழை காரணமாக, கராச்சியில் விமானங்கள் தடுத்து நிறுத்தப்பட்டு, மேலும் கால தாமதமானதால் இருவரும் 1959 டிசம்பர் 26 அன்று மும்பையை வந்தடைந்தனர். அடுத்த நாள் அவர்கள் மெஹர்ஜியுடன் மெஹராஸாத்திற்கு அழைத்து வரப்பட்டனர். அவர்கள் தாமதமாக வந்ததைக் கண்டு பாபா எரிச்சலில், **"டான், இன்னும் ஒரு நாள் தாமதமாக வந்திருந்தால், உங்கள் வருகையை ரத்து செய்திருப்பேன்"** என்று கூறினார்.

அலென், பாபா மீது சிறிதும் ஆர்வம் காட்டவில்லை. ஸ்டீவன்ஸுடன் அலென் வருவதன் ஒரே நோக்கம் 'டான் ஸ்டீவன்ஸை மரணத்தை விட மோசமான விதியிலிருந்து காப்பாற்றுவது'. மெஹர் பாபாவை டான் நம்பும் அளவுக்கு அவர் ஒன்றும் மேல்நிலை ஆன்மீக குருநாதர் அல்ல என்பதை அலென் உறுதியாக நம்பியதால், 'டான் தானாகவே சிக்கிக்கொண்ட இந்த விசித்திரமான விஷயத்தை அவர் கண்கூடாகக் காண' வந்தார். அவர்கள் மெஹராஸாத்தை வந்தடைந்த வேளையில், அலென் வெறிச்சோடிய

கிராமப்புறங்களை ஆய்வு செய்து, அங்கு எவரும் வாழ விரும்ப மாட்டார்கள் என்று முடிவு செய்தார்.

இருவரும் மண்டலி மண்டபத்திற்குள் நுழைந்த அவ்வேளையில், பாபா எதிர் கோடியிலிருந்து உள்ளே வந்தார். பாபாவைப் பார்த்த அலென் தரையில் அமர்ந்து கண்ணீர் விட்டு அழுதார். பாபா அருகில் சென்று அவரை ஆரத் தழுவினார். பின்னர் அலென் எப்படி உணர்ந்தார் என்பதை விவரித்தார்:

நான் எப்படியோ எழுந்து நின்றேன். எல்லையில்லா அந்த கணத்தில் - பாபாவைப் பார்த்தது அல்லது அவர் முன்னிலையில் இருந்தது அல்லது இரண்டின் உச்சத்திலிருந்து - நான் 'இல்லம் வந்தடைந்தேன்' என்பதை துல்லியமாக அறிந்தேன். அவர் யார் என்பதையும் துல்லியமாகத் தெரிந்து கொண்டேன். எனது மனதில் முற்றிலும் எந்தவிதமான கேள்விகளுக்கும் இடமில்லை.

அன்று, பாபா மீண்டும் 27 தொழுநோயாளிகளின் கால்களைக் கழுவி, தலைவணங்கி ஒவ்வொருவருக்கும் பிரசாதமாக ஐந்து ரூபாய் வழங்கினார். டான் ஸ்டீவன்ஸ், ஜால்பாய் இருவரும், பாபா, தொழுநோயாளிகளுடன் பணிபுரிவதைக் காணொளிப் படமாக எடுத்தனர். இந்த நிகழ்ச்சியில் மஹாராணி ஷாந்தாதேவியும் கலந்து கொண்டார். தொழுநோயாளிகளுடன் பாபா செய்த பணியின் ஒரு பாகத்தின் போது, பாபாவின் மேல் குடை பிடிப்பதற்கான ஒரு வாய்ப்பு அலெனுக்கு வழங்கப்பட்டது. அவர் பதட்டமாக இருந்தார், அந்த அனுபவம் அவரை உணர்ச்சிவசப்பட வைத்தது. ('ஏதோ தளபாடங்கள் உள்ளளவில் உதிரி உதிரியாகப் பிரிக்கப்படுவது போல் உணர்ந்தேன்,' என்று அவர் நினைவு கூர்ந்தார்.)

டான், அலென் இருவரும் மெஹராபாத்தில் தங்குவதற்காக அழைத்துச் செல்லப்பட்டனர். நோஷிர் ஸிகன்போரியா தினமும் காலையில் அவர்களை மெஹராஸாத்திற்கு அழைத்துச் சென்று, மாலையில் திரும்பி வந்தார். ஒவ்வொரு நாளும் பாபா, அலெனிடம் அவரது உடல்நிலை குறித்தும், ஏதாவது விசேஷமாக உண்ண விரும்புகிறீர்களா என்றும், அவர் உடல் எடையை அதிகரிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். காலை நேரங்களில், 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தின் புதிய பதிப்பிற்கான டான் மேற்கொண்ட வெளியீட்டுத் திட்டங்களை பாபா விவாதித்தார், அந்த நேரத்தில் அலென், மணியுடன் உரையாட வெளியே சென்று, அவரது நாய் பீட்டருடன் விளையாடுவதை வழக்கமாகக் கொண்டார்.

ஒரு நாள் காலை, பாபா மண்டலி மண்டபத்தில் அமர்ந்து, கருப்பு நிற கொம்பாலான விளிம்புகள் கொண்ட கண்ணாடியை அணிந்து, மடியிலிருந்த காகிதக் கட்டுகளை அலசிக் கொண்டிருந்தார். அவை அனைத்தும் '**பாபாவின் இறுதி உயில், ஏற்பாட்டின் வெவ்வேறு நகல்கள் மற்றும் அவதார் மெஹர் பாபா அறங்காவல் பத்திரம்**' என்று டானிடம் விளக்கினார். எரிச்சலுடன் தோன்றிய அவர், **பொருத்தமான வார்த்தைகளில் அனைத்தையும்**

ஒன்றிணைக்க, ராம்ஜூவிற்கு யோசனைகளை வழங்குவது எவ்வளவு கடினமாக இருந்தது என்பதை விவரித்தார்.

பிற்பகலில், சீட்டு (தரையில் மூக்கை உரசுவது!) மற்றும் 'ஏழு ஓடுகள்' விளையாட்டுகள் விளையாடுவது வழக்கமாக நடந்தது. ஃபிரான்சிஸ் தனது கவிதைகளை வாசிக்க அழைக்கப்பட்டார். பாபா சில ஆண்டுகளாக டான் ஸ்டீவன்ஸுக்கு இந்த வருகையைக் குறித்து உறுதியளித்திருந்தார், மேலும் அவர்கள் இந்தியாவில் தங்கியிருந்த பன்னிரெண்டு நாட்களின் போது, பாபாவின் நெருங்கிய சகவாசத்தில் இருப்பதற்கான பல வாய்ப்புகள் டானுக்கு வழங்கப்பட்டன.

ஒரு நாள் பாபா, அலெனிடம் '**அவர் வாழ்க்கையில் என்ன செய்ய விரும்புகிறார்**' என்று கேட்டார். பாபாவிடமிருந்து இந்தக் கேள்வி எழும் என்று டான் ஸ்டீவன்ஸ், அலெனை எச்சரித்திருந்தார். அலென், மொழிகளைக் கற்றுக்கொள்வதில் ஆர்வமாக இருப்பதாகக் கூறி, அவர் மொழிபெயர்ப்பாளராகவோ அல்லது உள் வடிவமைப்பாளராகவோ தேர்ச்சி பெறலாம் என்று தெரிவித்தார். அவர், மக்கள் மீது அவருக்கு அதீத ஈர்ப்பு இருப்பதாகக் கூறியபோது, பாபா, எரச் மூலம், "**உளவியல்! நீங்கள் ஒரு சிறந்த உளவியல் நிபுணராக மாறுவீர்கள். இது மிகவும் கடினமாக இருக்கும், ஆனால் நீங்கள் புதிய உளவியலின் ஒரு பகுதியாக இருப்பீர்கள். இன்றைய உளவியல் அப்படி செயல்படுவதில்லை.**" (அவர் கூறியதன் பொருளை பாபா விளக்கவில்லை.)

அலென், நகைச்சுவை கலந்த தொனியில், "பாபா, நான் உங்களுக்கு முன்னால் எனது திருவோடை ஏந்தி யாசிக்க விரும்புகிறேன்" என்றார்.

பாபா சீற்றத்துடன் பதிலளித்து, "**நீங்கள் மேற்கில் இருக்கிறீர்கள், மேற்கில் எனது பணியை நீங்கள் செய்ய வேண்டும். அங்கேதான் நீங்கள் இருக்க வேண்டும்**" என்று சுட்டிக்காட்டினார். மேலும், "**எனக்காக நீங்கள் செய்ய வேண்டிய பணிகள் ஏராளம்**" என்றும் அவர் கூறினார்.

பாபா பிடிவாதமாக இருந்தார்: "**நீங்கள் என்னிடம் வந்துள்ளீர்கள், எந்த 'இஸமும்' தேவையில்லை. நீங்கள் எந்த சூழ்நிலையிலும், எந்த மதத்திலும் இணையக்கூடாது.**" இருப்பினும், '**அவர் திரும்பிச் சென்றதும், ஸியன்னாவின் கேத்தரின்** (CATHERINE OF SIENNA), **அவிலாவின் தெரஸா** (THERESA OF AVILA), **அஸிஸியின் ஃபிரான்சிஸ்** (FRANCIS OF ASSISI) **மற்றும் அப்போஸ்தலர் பால்** (APOSTLE PAUL) **போன்ற வெவ்வேறு கிறிஸ்தவ புனிதர்களின் வாழ்க்கையைப் படிக்குமாறு**' அவரிடம் அறிவுறுத்தினார்.

பாபா ஒவ்வொரு நாளும் உடற்பயிற்சி செய்து, மண்டபத்திற்கு வெளியே ஆண்கள் பகுதியில் நடந்து செல்வதை வழக்கமாகக் கொண்டார். ஒருமுறை, அவர் ஃபிரான்சிஸின் உதவியை நாடாமல், ஆதரவில்லாமல் வெயிலில் நடந்து அனைவரையும் ஆச்சரியத்திற்குள்ளாக்கினார். வேறொரு நாள், அவர் டான், அலென் இருவரையும் தோட்டத்தைச் சுற்றி அழைத்துச் சென்றார். அலென்,

தோட்டக்கலையில் ஆர்வமாக இருந்ததால் பல கேள்விகளைக் கேட்டார். பாபா அவர்கள் நடந்து செல்லும்போது அலெனின் தோளைப் பற்றிக்கொண்டு நடந்த காட்சி, ஒரு குறும்படமாக எடுக்கப்பட்டது.

பாபா, அலெனிடம் ஏளனத்திற்குரிய கதைகளை எடுத்துரைக்குமாறு சொல்வது வழக்கம். ஒருமுறை பாபா கூறினார், **"அலென் எனது மற்றொரு கோமாளி, அனிதா (வியய்யார்ட்) முதல் இடத்தில் உள்ளார்."** மற்றுமொரு தருணத்தில், அலெனிடம், **"எனது பழைய அன்பர்களில் நீங்களும் ஒருவர். இப்போது எனது புதிய அன்பர்கள் என்னுடன் உள்ளனர்."**

அவர்கள் தங்கியிருந்த காலத்தில், ஈரான் நாட்டிலிருந்து அன்பர்களின் குழு ஒன்று பாபாவைப் பார்க்க வந்தது. ஈரானைச் சேர்ந்த அலோபா அவர்களை சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

இந்தக் காலகட்டத்தில், எதிர்பாராத விதமாக ஹாரி டெடோல்சொவ் வந்தார். பாபா அவரை நோக்கி, **"ஹாரி, நீங்கள் என்னை வந்து பார்க்கக் கூடாது என்பது உங்களுக்குத் தெரியும்! இங்கு வரவேண்டாம் என்று அனைவருக்கும் கடிதம் அனுப்பியிருக்கிறேன். நான் ஏகாந்தவாசத்தில் இருக்கிறேன்"** என்று ஊசியால் துளைப்பது போலக் கூறினார். சில கணங்களுக்குப் பிறகு, பாபாவின் தீவிரமான வெளிப்பாடு, ஒரு மகிழ்ச்சிகரமான புன்சிரிப்பிற்கு வழிவகுத்தது. **"இங்கே வாருங்கள்,"** என்று அவர் சைகையால் அழைத்து, டெடோல்சொவை அரவணைத்துக் கொண்டார்.

டெடோல்சொவ் தன்னுடன் இரண்டு பெரிய பெட்டிளைக் கொண்டு வந்திருந்தார். ஒன்றில் மருத்துவப் பொருட்கள் மற்றும் விஸ்கி, மற்றொன்று சிகரெட் பொட்டலங்களால் நிறைந்தது. அலென் ஏல், தனது பிரிட்டிஷ் உரிமை உணர்வுக்கு அடிபணிந்து, 'அவர் எப்படி பாபாவிற்கு இதுபோன்ற பொருட்களை கொண்டு வர முடியும்?' என்று நினைத்தார்.

பாபா அவரை நோக்கி, **"நீங்கள் புகைப்பிடிப்பதுண்டா?"** என்று கேட்டார்.

"ஆமாம்" என்று பதிலளித்தார்.

"அவற்றில் நீங்கள் எதைப் புகைக்கிறீர்கள்?"

"ஸேலம்," அலென் ஏல் பதிலளித்தார்.

பாபா, எரச்சிடம் அட்டைப்பெட்டி ஒன்றைக் கொடுக்குமாறு சைகையால் தெரிவித்து, பின்பு பாபா அதை, அலென் ஏலைத் தாக்குவது போல பாவனை செய்து, **"நீங்கள் இதை உங்களிடம் வைத்துக்கொள்ளலாம், ஆனால் எந்த சூழ்நிலையிலும் ஒரு நாள் ஐந்து சிகரெட்டுக்கு மேல் புகைக்கக்கூடாது"** என்று கட்டளையிட்டார். இந்த நேரத்தில், அலென், பூமி இரண்டாக பிளந்து அவரை விழுங்குவது போல முட்டாள்தனமாக உணர்ந்தார்.

அவர்கள் வந்த முதல் சில நாட்களில், பாபா, அலெனிடம் **'ஏதேனும் விஷயம் உங்களைக் கவலையடையச் செய்கிறதா'** என்று கேட்டுக்கொண்டே இருந்தார். இடையிடையே பேச்சை திடீரென நிறுத்திவிட்டு, **"ஏதேனும் உங்களை தொந்தரவு செய்கிறதா?"** என்று கேட்டதற்கு, அலென் எப்போதும், "இல்லை, பாபா" என்று கூறிவந்தார்.

டான் ஸ்டீவன்ஸ் (DON STEVENS) & அலென் ஏல் (ALAIN YOUELL)

இறுதியாக, அலென், “ஆம், பாபா, ஏதோ ஒன்று என்னைக் கவலையடையச் செய்கிறது. நான் ஒரு பாம்பை எதிர்கொள்ளப் போகிறேன் என்று அஞ்சுகிறேன். பாம்புகளைக் கண்டு நான் பயப்படுகிறேன்! நான் சிறுவனாக இருந்தபோது எனக்கு ஒரு பயங்கரமான அனுபவம் ஏற்பட்டது.”

பாபா மெதுவாகத் தலையசைத்து, **“பாம்பைப் பார்க்க நேர்ந்தால் என்னை நினைத்து எனது பெயரை மொழியுங்கள்”** என்று உறுதியளித்தார்.

இந்தத் தந்திரம் பலனளிக்குமா என அலென் சந்தேகப்பட்டதோடு, அதை விரைவில் மறந்துவிட்டார். மெஹராபாத்தில் அவர்களின் கடைசி இரவு, அவர் சிறுநீர் கழிக்க நள்ளிரவில் எழுந்து, வெளியே சென்றபோது, பிரகாசமான நட்சத்திரங்களைக் காண முடிந்தது; திடீரெனக் கீழே அவரது காலடியில் ஒரு பாம்பு இருந்ததைக் கண்டதும், உள்ளுக்குள் பாபாவின் பெயரைச் சொல்லத் தொடங்கிய அந்த கணத்தில், அவர் எவ்வளவு அமைதியாக உணர்ந்தார் என்று ஆச்சரியப்பட்டார்.

அடுத்த நாள், அவர்கள் மெஹராஸாத் சென்ற வேளையில், பாபா **‘எப்படித் தூங்கினீர்கள்?’** என்று கேட்டு, **“உங்களை ஏதேனும் தொந்தரவு செய்கிறதா?”** என வினவினார். அலென் அந்த சம்பவத்தை மறந்துவிட்டதால், அவருக்கு அது இப்போது நினைவுக்கு வந்தது. அவரிடம் பாம்பைப் பற்றி விவரிக்கக் கூறியபோது, ”அது ஒரு கட்டுவிரியன், இந்தியாவில் உள்ள கொடிய பாம்புகளில் ஒன்றாகும். இது எந்தவிதமான எச்சரிக்கையும் அல்லது தூண்டுதலும் இல்லாமல் ஒருவரைத் தாக்குகிறது என்று கூறப்படுகிறது” என்றார்.

இதற்கிடையில், ஹோஷங் பரூச்சா மற்றும் கோவாஸ் வெஸுனா ஆகியோர் 28ஆம் தேதி மெஹராஸாத்திற்கு வந்தனர், இரண்டு நாட்களுக்குப் பிறகு பால் நாத்துவும் வந்தார். 1960, ஜனவரி 1, 2 தேதிகளில் ஹோஷங், கோவாஸ் இருவரும் சமீபத்தில் தங்கியிருந்த மண்டலி மண்டபத்திற்கு எதிரே அமைந்த குடிலில் இரவைக் கழிக்க டான், அலென் இருவரையும் பாபா அனுமதித்தார்.

ஏ.சி.எஸ். சாரி 1ஆம் தேதி மெஹராஸாத்தில் பாபாவை சந்தித்த அதே நாளில் ஜால்பாயும் வந்திருந்தார். அன்று, பாபா, பாதிரியிடம் அடுத்த நாள் அரன்காவ்ம் கிராமத்தில் தரிசனம் வழங்குவதாகக் கூறி அனுப்பினார். இந்தச் செய்தியைக் கேட்டு கிராமவாசிகள் மிகுந்த மகிழ்ச்சியடைந்து, பாபாவின் ஏகாந்தவாசத்திற்குப் பிறகு வழங்க இருந்த முதல் தரிசனத்திற்கான ஆயத்தங்களைத் தொடங்கினர். கிராமத்தின் கரடுமுரடான மண் சாலைகள் தூசியால் நிறைந்திருந்தன; அதை சீராக்க, கிராம மக்கள் சாலையில் தண்ணீர் தெளித்தனர். பாபாவின் வருகையின் போது, தூசி கீழே படிந்திருக்க வேண்டும், அதனால் ஒவ்வொரு துகள்களிலும் பாபாவின் கால்தடங்கள் பதிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் பிரார்த்தனை செய்தனர். தங்களிடம் நேரம் மிகக்

குறைவாக இருந்ததால், அரன்காவ்ம் கிராம மக்கள் தங்கள் இல்லங்களையும் கிராமத்தையும் சுத்தம் செய்ய இரவு பகலாக உழைத்தனர்.

கிராம மக்கள் தங்கள் அன்றாடத் தேவைகளுக்காக தொலைதூரத்திலிருந்து மாட்டுவண்டியில் தண்ணீர் கொண்டு வர வேண்டியிருந்தாலும், தங்கள் இறைவனின் வருகையை முன்னிட்டு சாலைகளில் நீர் பாய்ச்சி சீராக்கினர். ஜனவரி 1ஆம் தேதி இரவு, அவர்களின் முயற்சியைப் பாராட்டி, இந்தப் பணியில் முழுமையாக ஈடுபட்டிருந்தபோது, மழைக்கடவுள் இந்திரன், மழையின் வடிவில் அன்பின் கண்ணீரைப் பொழிவதை காலம் நேரில் பார்த்தது. ஜனவரியில் வழக்கத்திற்கு மாறாகப் பொழிந்த மழையால், குறுகிய நேரத்தில் சாலைகள் அனைத்தும் செவ்வனே சீராக்கப்பட்டன.

1960 ஜனவரி 2 சனிக்கிழமை அன்று, உதய சூரியன் ஓர் அற்புதமான காட்சியைக் கண்டது. புதிதாகக் கட்டப்பட்ட 'அவதார் மெஹர் பாபா அரன்காவ்ம் மையம்' மலர் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டது; இது இனிமையான வாசனையை எங்கும் பரவச்செய்தது. கிராமத்தில் ஒவ்வொருவரும் அவரவர் இல்லத்தை அழகுபடுத்த செய்யாத எதுவும் இல்லாமல், அவதார புருஷரின் வருகைக்காகக் காத்திருந்தினர். அன்று அதிகாலையில் ஆதி மெஹராஸாத்திற்கு சில பார்வையாளர்களை அழைத்து வந்தார்: யோகி ஷுத்தானந்த் பாரதி, அனில் ஸர்க்கார், அவரது குடும்பத்தினர் மற்றும் சாரி (இருவரும் கொல்கத்தாவை சேர்ந்தவர்கள்). காலை 8:30 மணிக்கு மெஹராபாத்தை வந்தடைந்த பாபா, சிறிது நேரத்தை அங்குக் கழித்த பின்னர், அரன்காவ்ம் கிராமத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். சூரியனின் மென்மையான கதிர்கள் படைப்பின் இறைவனை வரவேற்றன, இடையிடையே மேகங்கள் அவருக்கு, குடைபோல் உதவ முயன்றன.

பாபா முதன்முதலில் எளிமையான அரன்காவ்ம் மையத்திற்குள் நுழைந்தார், அது பாவ் கல்சூரி, ஜங்க்ளே அவர்களின் குடும்பங்கள் வாழும் குடியிருப்பு வளாகத்தில் ஓர் அறையாக இருந்தது. பாபாவுடன் டான் ஸ்டீவன்ஸ், அலென் ஏல் மற்றும் பிற பார்வையாளர்களும் வந்தனர். பாபாவைப் பார்த்ததும், கிராம மக்களால் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை, மேலும் 'அவதார் மெஹர் பாபாவிற்கு ஜெய்!' என்ற கோஷங்கள் முழங்கின. அரன்காவ்ம் மையம் சமீபத்தில் கட்டப்பட்டது, பாபா இந்த சிறிய அறைக்கு அவரது பிரசன்னத்தை அருளியது இதுவே முதல் முறை. கதவின் குறுக்கே கட்டப்பட்டிருந்த நாடாவை வெட்டி, வளாகத்திற்குள்ளே நுழைந்த பாபா, அங்கு வைக்கப்பட்டிருந்த அவரது புகைப்படத்தை தரிசனம் செய்தார். சிறிது நேரத்தில் வெளியே வந்தவர், ஒரு பந்தலின் கீழ் அமர்ந்து, கட்டிடத்தின் வெளியே அமைக்கப்பட்டிருந்த மேடையில், யாதவ் காம்ப்ளே என்ற பக்தர், பாபாவின் தெய்வீகத்தன்மையைப் போற்றும் வகையில் பாடிய பாடல்களைக் கேட்டு மகிழ்ந்தார்.

ஜங்க்ளேயின் பதினோரு வயது மகள் பிரபா, பாபாவின் ஆரத்தியை மெல்லிசையாகப் பாட ஆரம்பித்த வேளையில், உணர்ச்சி பொங்க, அவள் கன்னங்களில் கண்ணீர் வழியத் தொடங்கியது; அவள் கட்டுப்பாட்டை மீறி அழ ஆரம்பித்தாள். அதீத உணர்ச்சிகள் நிறைந்த சூழல் அனைவரையும் ஆட்கொண்டு, பெரும்பாலானோரை கண்கலங்கச் செய்தது. விலங்குகள் கூட அசையாமல் இருப்பதை அலென் கவனித்தார். அது அவருக்கு மாட்டுக் கொட்டகையில் இருந்த இயேசுவை நினைவூட்டியது, மேலும் அவர் 'வெள்ளை வெல்வெட் மேகத்தில் மிதப்பது போல்' உணர்ந்தார்.

பிரபா அழுது கொண்டே, பாபாவின் அன்பான அரவணைப்பைப் பெற்றாள். அவள் தன்னால் முடிந்தவரை முயற்சி செய்தாலும், தொடர்ந்து பாடி ஆரத்தியை முடிக்க இயலாமலாயிற்று, ஆனால் பாபா அவளிடம், **"உனது முழுமையான இதயத்திலிருந்து வரும் இதுபோன்ற பாடலே உண்மையான ஆரத்தி, அதற்கு வார்த்தைகள் தேவையில்லை"** என்று கூறினார். இடைவிடாமல் கண்ணீர் வழியவே, பிரபா, பாபாவுக்காக ஒரு பாடலை வழங்க முடியவில்லை, ஆனால் அன்பானவர் கேட்கும் விதத்தில் அவளது இதயத்தின் அமைதியான மெல்லிசையை வழங்கினாள்.

பாபா 'குடும்ப குவார்ட்டர்ஸ்' வளாகத்தில் வாழ்ந்த அனைவரையும் சந்தித்து, அரவணைத்து, பிறகு ரமா கல்சூரியின் இல்லத்திற்குச் சென்றார். அங்கிருந்து, நடனக் கலைஞர்கள் கழுத்தில் தொங்கிய மேளதாளங்களுடன், உற்சாகமாகத் துள்ளிக் குதித்து நடனமாடி, இதயங்களின் அளப்பரிய மகிழ்ச்சியை வெளிப்படுத்திய வண்ணம், பாபா, கிராமம் முழுவதும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். அன்பு, மின்சாரம் பாய்வதை போல், அவர்களின் மெல்லிய உடல் நரம்புகளில் ஓடிக்கொண்டிருந்தது; அனைவரும் அசாதாரண ஆற்றலை அனுபவித்தனர். பாபாவை அவரது அன்பர்கள், மண்டலி மற்றும் கிராமவாசிகள் பின்தொடர்ந்தனர். பாபாவிற்குப் பின்னால் சின்னஞ்சிறிய மெஹர்நாத்தும் ஷீலாவும், பாபா நடந்து சென்ற பாதையில் தூசியை கவனமாக சேகரித்துக் கொண்டிருந்தனர். கிராமத்துப் பெண்கள், இல்லங்களை நோக்கிச் செல்லும் நடைபாதையில், பாபாவை வரவழைக்க தங்களுடைய சிறந்த புடவைகளை விரித்திருந்தனர். அவர் ஒவ்வொரு வீட்டு வாசலிலும் காலடி எடுத்து வைத்து, அவர்களின் நீண்ட கால ஆசையை நிறைவேற்றினார்.

அலென் கண்களில் நீர் வழிய பின்னால் நடந்து சென்றார். அவருக்குள் என்ன நடக்கிறது என்பதை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. பாபா எவரையேனும் அனுப்பி அவரை அருகில் அழைத்து வந்தாலும், மீண்டும் நடனக் கலைஞர்கள், மேளதாளம், ஜெய் முழக்கங்கள், சங்குகளின் ஒலி மற்றும் வெயிலின் வெப்பம் அனைத்தும் அவரது முகத்தில் கண்ணீரை வரவழைத்தது.

பாபாவின் கழுத்தையும், தோள்களையும் நிரப்பிய பலவிதமான வண்ண மாலைகள் விரைவாக அகற்றப்பட்டாலும், மீண்டும் மீண்டும் வந்து குவிந்த வண்ணம் இருந்தன. இது பாபாவிற்கும் கிராமவாசிளுக்கும் இடையேயான மனதைத் தொடும் அன்பின் பரிமாற்றம்; அனைவரும் அவரது மகிழ்ச்சியை

மனதில் கொண்டிருந்தனர். நூற்றுக்கணக்கான கிராமவாசிகள் மத்தியில், சூழ்நிலை மிகவும் அமைதியாக இருந்தது; உற்சாகமான ஆரவாரத்திலும் எந்தக் குழப்பமோ பிரச்சினையோ எழவில்லை.

இரண்டாவது வாகன விபத்துக்குப் பிறகு, பாபா, சிறிது தூரம் மட்டுமே நடக்கத் தொடங்கினார், ஆனால் அன்று அவர் ஒன்றரை மணி நேரத்திற்கும் மேலாக தொடர்ந்து நடந்ததைக் கண்ட கிராம மக்கள் திகைப்பில் ஆழ்ந்தனர். பாபா தனது உடல் வலியையும் பொருட்படுத்தாமல், ஒவ்வொரு வீட்டிற்கும் விஜயம் செய்வது வரை, கிராமத்தில் தனது சுற்றுப்பயணத்தைத் தொடர்ந்தார். கிராமவாசிகளின் தீவிரமான ஏக்கத்தை பாபாவால் புறக்கணிக்க முடியவில்லை. ஒவ்வோர் ஆண், பெண், குழந்தையும் பாபாவை ஆழ் இதயத்திலிருந்து வணங்குகின்றனர், மேலும் அவர்களில் ஒவ்வொருவரையும் சந்திப்பதில் பாபா தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். பழைய கிராமத்தைச் சுற்றி இரண்டு மைல் தூரம் நடக்க அவர் விரும்பியது, இந்த ஏழை எளிய மக்கள் மீது அவர் கொண்டிருந்த அன்பிற்குப் போதுமான சாட்சி.

அருகாமையில் அமைந்த காசநோய் சுகாதார நிலையத்தை நிர்வகிக்கும் மருத்துவர் மற்றும் செவிலியர்கள், நோயாளிகளில் சிலர் அரன்காவ்ம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் ஆகையால், அன்றைய தினம் பாபாவின் தரிசனத்திற்கான வாய்ப்பைப் பெற வேண்டியவர்கள் என்று கூறி, பாபாவை தங்கள் மருத்துவமனைக்கு விஜயம் செய்யுமாறு கேட்டுக் கொண்டனர். கம்லாபாய் புஸல்கர் (KAMALABAI PUSALKAR), ஓர் ஊழியர் செவிலியர் மற்றும் பக்திமிக்க பாபா அன்பர், நோயாளிகளைப் பற்றி எடுத்துரைத்து, (அவர் முன்னர் 1954இல் செய்ததைப் போல) சுகாதார நிலையத்தை பாபாவின் பிரசன்னத்தால் ஆசீர்வதிக்குமாறு கேட்டுக்கொண்டதற்கு பாபா இணக்கம் தெரிவித்தார். அவர் நேரில் சென்று ஒவ்வொரு நோயாளிக்கும், ஊழியர்களுக்கும் பிரசாதம் வழங்கினார்.

பின்னர், அனைவரும் கீழ் மெஹராபாத்தில் அமைந்த துனிக்கு அருகில் ஒன்றுதிரண்டனர். அஹமதுநகரிலிருந்து அழைத்து வரப்பட்ட இரண்டு தொழுநோயாளிகளின் கால்களைக் கழுவி, பாபா அவர்களுக்கு பிரசாதம் வழங்கினார்.

கைகளை சுத்தம் செய்து, பாபா காரில் அமர்ந்து, அவர்கள் மெஹராஸாத் திரும்பிச் சென்றனர். எரச், அலென், டான், ஷுத்தானந்த் பாரதி ஆகியோர் பாபாவுடன் இருந்தனர். பாபா முன் இருக்கையிலிருந்து திரும்பி டானிடம் சைகையால் தெரிவித்தார், **"அவதார புருஷராக, எனக்கு, நிச்சயமாக பல பொறுப்புகள் மற்றும் கடமைகள் உள்ளன, ஆனால் அவை அனைத்திலும் என்னை ஆழமாகத் தொட்டது, தொழுநோயாளிகளின் கால்களில் தலைவணங்குவதைத் தவிர வேறு எதுவும் இல்லை. அவர்கள் அசிங்கமான கூண்டில் சிக்கிய அழகான பறவைகள் போன்றவர்கள்."**

மேலும் தொடர்ந்து கூறினார், **"இந்த கிராமவாசிகள் உலகத்தின் பார்வையில் ஏழைகளாக இருக்கலாம், ஆனால் அவர்கள் செல்வந்தர்களைக்**

கூட பொறாமை பட வைக்கும் அளவுக்கு அதிக செல்வத்தை வைத்திருக்கிறார்கள், ஏனெனில் அவர்கள் ஆதிகால புருஷரின் அன்பில் செல்வந்தர்கள்.”

பயணத்தின் போது, அலென், டானிடம் ஃபிரெஞ்சு மொழியில் சில வார்த்தைகளைப் பேசினார். ஷுத்தானந்த பாரதி தனக்கு ஃபிரெஞ்சு மொழியும் தெரியும் என்று கூறி, மூவரும் அந்த மொழியில் உரையாடத் தொடங்கினர். சில நிமிடங்களுக்குப் பிறகு, பாபா திரும்பிப் பார்த்து புன்னகையுடன் சைகையால் கேட்டார், **“ஆங்கிலத்தில் பேசுங்கள், பாபா ஃபிரெஞ்சு மொழியை புரிந்து கொள்வார் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?”** மெஹராஸாத்தில், பாபா தனது மலர் மாலைகளில் ஒன்றை அலெனுக்கு வழங்கி, நல்ல நகைச்சுவையுடன் அதை அவருக்கு அணிவித்தார்.

டான் ஸ்டீவன்ஸ், அலென் ஏல் இருவரும் அடுத்த நாள் காலை 8:00 மணிக்கு மெஹர்ஜியுடன் புறப்பட்டுச் சென்று, ஜனவரி 8ஆம் நாள் நள்ளிரவில் மும்பையிலிருந்து விமானத்தில் பயணம் செய்தனர். புறப்படுவதற்கு முன்பு, பாபா, அலெனிடம் ஆசீர்வதிக்கப்பட்ட புகைப்படம் ஒன்றைத் தமது கைகளால் கொடுத்தார். பாபாவுடனான அலெனின் முதல் சந்திப்பு இதுவாக இருந்தாலும், அவர் தனது இல்லம் திரும்பும் நேரத்தில் பாபாவை விரும்பத்தக்க, சுவாரஸ்யமான ஒருவராக உறுதியாகப் பற்றிப் பிடித்துக்கொண்டார். ஒவ்வொரு காலையிலும், பாபா, அலெனின் தோள்களைத் தட்டி, **“நீங்கள் என்னை எவ்வளவு நேசிக்கிறீர்கள்? இன்று காலை இந்த நேரத்தில், இன்னமும் நீங்கள் என்னை நேசிக்கிறீர்களா?”** என்று கேட்டு, கிண்டல் செய்தார்.

அலென் கூறினார், “பாபா, நான் உங்களை 101% நேசிக்கிறேன்; இதற்கு மேலும் நான் உங்களை எப்படி நேசிக்க முடியும்?” அதைத் தொடர்ந்து எழுதிய கடிதத்தில், அலென் அவரது அன்பு இப்போது ‘101லிருந்து கால் சதவிகிதமும், அதன் பின்னர் அரை சதவிகிதம் அதிகரித்துள்ளதாகவும்’ எழுதியிருந்தார்.

இதற்கிடையில், அஹமதுநகர் அன்பர்களும், மைய ஊழியர்களும் பாபாவின் தரிசனத்திற்காக ஆர்வமாக இருந்து, அவரிடம் பிரார்த்தனை செய்தனர். அவர் ஏகாந்தவாசம் மேற்கொண்டதால், அவர்களால் நீண்ட நாட்களாக பாபாவைப் பார்க்க முடியவில்லை. ஆந்திரா அன்பர்களும் தரிசனம் கோரி வேண்டுகோள் விடுத்திருந்தனர்; எனவே, பாபா 1960 ஜனவரி 4 திங்கள் அன்று, அஹமதுநகர் மையத்தில் தரிசனம் வழங்க முடிவு செய்தார். குஷ்ரு குவார்ட்டர்ஸில் மையமாக இருந்த பெரிய அறை சுத்தம் செய்யப்பட்டு, முழுப் பகுதியும் மேடை மற்றும் பந்தலால் அலங்கரிக்கப்பட்டது. காலை 8:30 மணிக்கு ஆதியின் காரில் வாமன், மண்டலியுடன் பாபாவை அழைத்து வந்தார். காரிலிருந்து இறங்கிய பாபா, முதலில் மண்டபத்திற்குள் நுழைந்து, அங்கு அவர் பல நிமிடங்கள் இருந்தார்.

அன்று காலை வரவிருந்த ஆந்திர அன்பர்களைப் பற்றி ஆதி சீனியரிடம் கேட்டார். ஆந்திரா அன்பர்கள் மெஹராபாத் மற்றும் மெஹராஸாத்திற்கு

விஜயம் செய்ய ஆர்வமாக இருப்பதாக ஆதி அவரிடம் கூறினார். அதற்கு பாபா, **"நான் அஹமதுநகருக்கு வந்துவிட்டதால், அவர்கள் மெஹராஸாத் செல்வதில் எந்த பயனும் இல்லை"** என்று பதிலளித்தார். ஆனால் அவர்கள் மீதுள்ள அன்பினால், **"நான் அஹமதுநகரிலிருந்து பதினொரு மணிக்கு பதிலாக, பத்து மணிக்குப் புறப்பட்டுச் சென்று, மெஹராஸாத்தில் அவர்களை சந்திப்பேன்"** என்றார்.

சிந்தா சர்வராவ், மஜேட்டி ராமமோகன் ராவ், மாணிக்யாலா ராவ் ஆகியோர் தலைமையில் ஆந்திரா குழுவினர் மொத்தத்தில் 65 அன்பர்கள் காலை 8:45 மணிக்கு குஷ்ரு குவார்ட்டர்ஸை வந்தடைந்தனர். சந்திப்பு மண்டபத்திலிருந்து வெளியே வந்ததும், பாபா ஒரு பெரிய அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார், அங்கு அஹமதுநகர் மற்றும் ஆந்திரா அன்பர்கள் அனைவரும் அவரது வருகைக்காகக் காத்திருந்தனர். அறைக்குள் அடியெடுத்து வைத்த அந்த நொடியில், 'பிரியமானவர்களே, செல்லுங்கள், மெஹர் தர்பார் செல்லுங்கள்' என்ற பாடலுடன் அவரை வாழ்த்தி வரவேற்றனர்! பாபா இருக்கையில் அமர்ந்ததும், ஆந்திரா அன்பர்கள் எரியும் கற்பூரம், மலர் மாலைகள், பழக்கூடைகள் மற்றும் இனிப்புகளுடன் முதலில் அவரை அணுகினர். மாணிக்யால ராவ் அனைவரையும் ஒவ்வொருவராக அறிமுகப்படுத்தினார், பாபா அவர்களைத் தழுவி இரு கன்னங்களிலும் முத்தமிட்டார்.

ஆந்திரா பெண்மணிகளில் ஒருவர், இரண்டு புகைப்படங்களுடன் ஒரு கடிதத்தை பாபாவிடம் வழங்கினார், அதில் பாபாவின் சமீபத்திய ஏகாந்தவாசத்தின் போது, மஸுலிப்பட்டினத்தில் அவரது ஏராளமான பெண் பக்தர்கள், அந்தக் காலகட்டம் முழுவதும் அவரது நாமத்தைத் தொடர்ந்து உச்சரித்து வந்தனர். கடிதத்தை அவரிடம் ஒப்படைத்த பெண்மணி, பாபாவைப் பார்த்துக்கொண்டே வெகுநேரம் மயங்கிய நிலையில் நின்றார், மேலும் அவரை அங்கிருந்து செல்லுமாறு கேட்டுக் கொண்டபோதிலும் அவர் அசைந்தபாடில்லை. பாபா தமது அன்பர்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியுடன் காணப்பட்டார்.

பின்னர், அஹமதுநகர் உள்ளூர் மக்கள் வந்தனர். அங்கு ஒன்றுதிரண்ட நூற்றுக்கணக்கான மக்களை அவரால் அரவணைக்க முடியவில்லை, ஏனெனில் அதற்கு அதிக நேரம் பிடிக்கும் என்றும், அவரை சந்திப்பதற்காக நீண்ட தூரம், இரண்டு நாள் ரயில் பயணம் செய்து வந்திருந்த ஆந்திரா அன்பர்களை ஓரிரு மணி நேரம் சந்திப்பதற்காக மெஹராஸாத்திற்கு சீக்கிரமாகச் செல்ல விரும்புவதாகவும் பாபா கூறினார். பாபாவின் அதிகாரப்பூர்வமான அறிவிப்பு இருந்தபோதிலும், அவரது பழைய அன்பர்களில் சிலர் அவரைத் தழுவுவதைத் தடுக்க முடியவில்லை, மேலும் பல தாய்மார்கள் தங்கள் பச்சிளம் குழந்தைகளை ஆசீர்வதிக்குமாறு அவரது பாதங்களின் அருகில் கிடத்தினர்.

குறிப்பாக பாபா பிரசாதமாக வழங்கிய வாழைப்பழத்தைப் பெற பல உள்ளூர் குழந்தைகள் வந்ததாகத் தோன்றியது. பாபா யார் என்று அவர்களுக்குத் தெரியாது - அக்கறையும் இல்லை. இந்த அப்பாவி குழந்தைகளின் அன்பு, வாழைப்பழத்தின் மீது மட்டுமே இருந்தது! வீதிகளில் அலைந்து திரியும்

விஷமக்கார சிறுவர்களைப் பார்த்து, பாபா சிரித்துக்கொண்டே சில சமயங்களில் இரண்டு வாழைப்பழங்களை வழங்கினார்.

பாவ் கல்சூரியின் ஏழு வயது மகள் ஷீலா, கைகளில் மலர் மாலை ஒன்றை ஏந்திக்கொண்டு மேடையை நெருங்கியபோது, பாபா, அவளை அரவணைப்பார் என்று நம்பினாள். பாபாவிடம் மாலையைக் கொடுக்குமாறு எரச் சைகையால் தெரிவித்தும், அவள் அதைச் செய்யாமல் நின்றுகொண்டிருந்தாள். பாபாவின் அறிவுறுத்தலுக்கு இணங்க, எரச் அவளை அழைத்துச் செல்லவே, பாபா அவளைத் தழுவிய போது மாலையை அணிவித்து, அவளுடைய விருப்பத்தை நிறைவேற்றினாள்.

பாபா அனைவரையும் தழுவவில்லை என்றாலும், ஒவ்வொருவரின் கைகள், தோள்கள் அல்லது தலையில் மெதுவாக கையால் வருடியதன் மூலம், அவர் தனது அன்பை வழங்கினார். கோஹெரின் சகோதரி, ரோஷன், 80 குழந்தைகளை 'ரிமாண்ட் ஹோம்' (REMAND HOME) எனும் அஹமதுநகர் அனாதை இல்லத்திலிருந்து அழைத்து வந்தார், அங்கு அவர் ஆசிரியராகப் பணிபுரிந்தார்; அவர்கள் ஒவ்வொருவருக்கும் பாபா பிரசாதம் வழங்கினார். சில அனாதை குழந்தைகள் அச்சத்தில், பிரசாதத்தை வாங்கிக் கொண்டு விரைவாக விலகிச் சென்றாலும், பாபா அவரது ஸ்பரிசத்தை வழங்கத் தவறவில்லை.

படலே (PADALE) மற்றும் பல்வானி (BHALWANI) கிராம மக்கள் பாபாவின் தரிசன நிகழ்ச்சியைக் கேள்விப்பட்டு, ஏராளமான குழந்தைகள் மற்றும் குடும்பத்தினருடன் மாட்டு வண்டிகளில் வந்தனர். அங்கிருந்த குழந்தைகளின் எண்ணிக்கையைப் பார்த்தால், அன்றைய தினம் பெரியவர்கள் சிறுபான்மையினராக இருந்தது போலத் தோன்றியது.

இந்த நிகழ்ச்சிக்காக குஷ்ரு குவார்ட்டர்ஸில் கிட்டத்தட்ட 1,000 பேர் கூடியிருந்தனர். வணிகர்கள், தபால் நிலைய ஊழியர்கள், நீதிமன்ற நீதிபதிகள், துணைக் காவல் கண்காணிப்பாளர் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர். காவல் துறை அதிகாரி பாபாவின் பாதங்களில் தலைவணங்கிய போது, பாபா சில கணங்கள் முதுகில் தட்டினார். நவ்லேயின் (அஹமதுநகரின் நீண்டகால அன்பர்) முறை வந்தபோது, பாபாவிடம் சில வார்த்தைகளை கிசுகிசுக்க அவருக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது. மற்றுமொரு பழைய அன்பரான காக்கா சிஞ்சோர்கர், பாபாவை தரிசனம் செய்யும் எண்ணத்தில் தனது நம்பிக்கைக்குரிய ஊன்றுகோலை மறந்து சென்றார்; ஆதி பின்னர் அதை அவரிடம் கொடுத்தார்.

அங்கு ஒன்றுதிரண்ட அனைவரும் பாபாவின் தரிசனத்தைப் பெற்றுக்கொண்டனர், தாமதமாக வந்த சில இளைஞர்கள் ஆரத்தி நிறைவடைந்த பின்னரும், தரிசனத்தைப் பெற முடித்தது. காவல்துறை அதிகாரி பாபாவிடம் அவரது குடும்பத்தை மெஹராஸாத்திற்கு அழைத்துவர அனுமதி கோரிய போது, பாபா அஹமதுநகரிலிருந்து புறப்பட்ட அரை மணி நேரத்திற்குள் அங்கு வருமாறு அறிவுறுத்தினார்.



குஷ்ரு குவாட்டர்ஸ், அஹமதுநகர், **4 ஜனவரி 1960**
(KHUSHRU QUARTERS, AHMEDNAGAR), 4 JANUARY 1960

குஷ்ரு குவாட்டர்ஸ், அஹமதுநகர், **6 ஜனவரி 1960**
(KHUSHRU QUARTERS, AHMEDNAGAR), 6 JANUARY 1960

நெருங்கிய அன்பர்களையும் மைய ஊழியர்களையும் தனித்தனியாகச் சந்திக்கும் வாய்ப்பு பாபாவிற்கு இன்னும் கிடைக்காததால், ஆரத்தி முடிந்ததும் மண்டபத்தில் ஒன்று கூடும்படி அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. ஆரத்தி ஒரு புனிதமான மற்றும் அன்பால் ஆட்கொள்ளப்பட்ட சூழ்நிலையில் நிகழ்ந்தது, அதன் பிறகு, பாபா மீண்டும் மையத்திற்குச் சென்ற வேளையில், பொதுமக்கள் சிலர் அவரைப் பின்தொடர்ந்தனர், ஆனால் பாபா தனது அன்பர்களையும் மைய ஊழியர்களையும் மட்டுமே சந்திக்க விரும்புவதாக அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

பாபா அவர்களிடம் வினவினார், **"பண்டோபா மையக் கூட்டங்களில் கலந்து கொள்கிறாரா?"** சில சமயங்களில் பங்கெடுப்பதாக பதில் வந்தது. **"அவருக்கு இவ்வளவு பெரிய குடும்பம் இருப்பதால், அவர் இல்லாதது மன்னிக்கப்பட்டது"** என்று பாபா கிண்டல் செய்தார்.

தமது அஹமதுநகர் அன்பர்களை சந்தித்த பிறகு, பாபா காரில் நுழைந்ததும், அது வழக்கமான ஜெய் ஆரவாரங்களுக்கு மத்தியில் மெஹராஸாத்திற்கு புறப்பட்டுச் சென்றது. மெஹராஸாத்தில் அவர் ஆந்திரா அன்பர்களை, தோட்டத்தைச் சுற்றி அழைத்துச் சென்று, ஏகாந்தவாச மலையை சுட்டிக்காட்டினார். அந்நேரத்தில் பாபா கைகளைக் கூப்பி தெம்பி மலையை நோக்கி வணக்கம் செலுத்தினார் - இது அவரது உலகளாவிய பணியின் அடையாளமாகும். ஆந்திரா அன்பர்களிடமும் அவ்வாறே செய்யுமாறு சைகையால் தெரிவித்தார். இதையடுத்து அனைவரும் ஆந்திரா திரும்பிச் சென்றனர்.

ஏதோ காரணங்களுக்காக, தௌலத் ஸிங்கின் மகன் உப்கார் (UPKAR), மெஹராஸாத் செல்லமுடியாமல் ஆனதால் பாபா அவரை மறுநாள் காலை வர அனுமதித்தார்.

ஒரு நாள், பாவ் கல்சூரியின் நாடகமான 'திவ்ய லீலை'யைப் பற்றி பாபா குறிப்பிட்டார், **"நாடகம் அற்புதம், ஆனால் அதில் சில பாடல்களும் இணைக்கப்பட வேண்டும்."**

"ஆனால் அவற்றை யார் இயற்றுவார்கள்?" பாவ் கல்சூரி விசாரித்தார்.

"எவரையேனும் பரிந்துரைக்கவும்."

"கேஷவ்?"

"நல்ல யோசனை" என்று பாபா பதிலளித்தார். ஆனால், சில நிமிடங்களுக்குப் பிறகு, **"பாடல்கள் சூழலுக்கு ஏற்ப இருக்க வேண்டும், நாடகம் என்னவென்று கேஷவிற்குத் தெரியாது... நீங்கள் ஏன் பாடல்களை எழுதக்கூடாது?"** என்று கேட்டார்.

"ஆனால் எனக்கு, பாடல் எழுதுவது பற்றி எதுவும் தெரியாது!" பாவ் கல்சூரி எதிர்ப்புத் தெரிவித்தார்.

"நான் உங்களை நாடகம் எழுதச் சொன்னபோது, 'எனக்கு நாடகம் எழுதத் தெரியாது' என்று கூறிவிட்டு, இப்போது மீண்டும் அதையே சொல்கிறீர்கள். இதைத் திரும்பத் திரும்பச் சொல்வதை நிறுத்துங்கள்."

எனவே, பாவ் ஐந்து பாடல்களை எழுதி, திவ்ய லீலாவில் இணைக்குமாறு கூறி அனுப்பினார்.

சில நாட்களுக்குப் பிறகு, பாபா அவரிடம் கூறினார், **"அன்று நீங்கள் ஐந்து சிறந்த பாடல்களை இயற்றினீர்கள். இப்போது நீங்கள் இன்னும் அதிகமாக இசையமைக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்."**

அவர், தானே ஆச்சரியப்படும் விதத்தில், பாவ் கல்சூரி தொடர்ந்து பாடல்களை இயற்றினார், மேலும் 20 நாட்களில், அவர் 100க்கும் அதிகமான பாடல்களை எழுதினார். அந்தப் பாடல்களை ஒருங்கிணைத்து, பாபா வழங்கிய 'மெஹர் ஜோதி' (MEHER JYOTI) என்ற தலைப்பில், ஒரு புத்தகமாக அச்சிடப்பட்டது. பாபா பாடல்களைப் பெரிதும் விரும்பி, அவற்றை ருஸ்தம் காக்காவிற்கு அனுப்பி ஒவ்வொரு வாரமும் அஹமதுநகர் மையத்தில் பாடுமாறு அறிவுறுத்தினார். பாவ் கல்சூரி தனது வாழ்நாளில் பக்திப் பாடல்களை எழுதியதில்லை (அவர் கல்லூரியில் வேதியியல், விவசாயம் மற்றும் சட்டம் பயின்றார்), மேலும் இந்த இலக்கிய முயற்சிகளில் அவரது திறமைகள் அனைத்தும் பாபாவின் ஊக்கம், உத்வேகம் மற்றும் உள் உதவி காரணமாக வெளிப்பட்டன.

ஆனால், ஒரு நாள், பாபா அவரிடம் வேறு எதையோ எழுதச் சொன்னபோது, பாவ் கல்சூரி, "பாபா, நான் எழுத்தாளரும் அல்ல, கவிஞரும் அல்ல. எனக்கு மொழியின் முறையான பயன்பாடும் தெரியாது. எனக்கு ஏன் இதுபோன்ற பணியைத் தருகிறீர்கள்? இந்தியாவில் பல சிறப்பான எழுத்தாளர்கள் மற்றும் கவிஞர்கள் உள்ளனர், அவர்கள் உங்களிடம் வந்தால், மெச்சத்தக்க வகையில் உங்களுக்கு வேண்டியதை எழுதுவார்கள்" என்றார்.

பாபா இதை ஒரு கணம் யோசித்துவிட்டு, **"இந்த எழுத்தாளர்கள் மற்றும் கவிஞர்களில் உங்களுக்கு எவரையேனும் தெரியுமா?"** என்று கேட்டார்.

"ஆம், நான் அவர்களைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன்," பாவ் கல்சூரி கூறினார். "அவர்கள் இந்தியாவில் மிகவும் பிரபலமானவர்கள்."

"சரி" என்று பாபா ஒப்புக்கொண்டு, **"என்னைப் பற்றி அவர்களுக்கு எழுதுங்கள், அவர்கள் ஆர்வமாக இருந்தால், நான் அவர்களை அழைக்கலாம்"** என்றார்.

பாவ் கல்சூரி பல பிரபலமான கவிஞர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கு எழுதினார், மேலும் பாபா அவர்களைத் தமது தொடர்பில் கொண்டுவருவதில் மிகுந்த ஆர்வத்துடன் இருப்பதுபோலத் தோன்றினார். பாபா, அவர்கள் மீது ஆர்வம் காட்டுவதால், கண்டிப்பாக வருவார்கள் என்றும் பாவ் கல்சூரி நினைத்தார். சில நாட்களுக்குப் பின்னர், அவர்களில் சிலரிடமிருந்து வந்த பணிவான கடிதங்கள் பாபா முன்னிலையில் வாசிக்கப்பட்டன, அவற்றைக்

கேட்டு அவர் மகிழ்ச்சியடைந்தார், ஆனால் அவர்களுக்குத் தெரிவிக்கும் விதத்தில் பாபா எந்த அறிவுறுத்தலும் வழங்கவில்லை; இது பாவ் கல்சூரிக்கு ஏமாற்றத்தை அளித்தது. பாவ் கல்சூரி அவர்களுக்குத் தானாக எழுதி, பாபாவின் சில செய்திகளை அனுப்பி வைத்தார்.

மீண்டும் பாவ் கல்சூரி பாபாவிடம் கூறினார்: "இந்தப் பிரபலமானவர்களில் சிலர் நிச்சயமாக உங்களிடம் வருவார்கள், அவர்கள் வந்தால் உங்களைப் பற்றி உன்னதமாக எழுதுவார்கள்."

பாபா உடனே, "**அவர்கள் எழுதியதில் ஏதேனும் உங்களிடம் உள்ளதா?**" என்று கேட்டபோது, அவற்றில் சில பிரதிகள் தன்னிடம் இருப்பதாக பாவ் கல்சூரி கூறினார். பாபா அவற்றைக் கொண்டு வருமாறு கூறி, வாசிக்கச் சொன்னார். பாவ் கல்சூரியும் அவ்வாறே செய்ததைத் தொடர்ந்து, பாபா, "**இந்த எழுத்துக்களில் என்ன இருக்கிறது? மிகவும் வறண்டு போய் உள்ளது! மொழி வளம் நன்றாக உள்ளதே தவிர, வேறு ஒன்றும் இல்லை. அன்பின் உயிரோட்டம் அதில் இருக்கிறதா? உண்மையைச் சொல்லுங்கள், அது வெறும் வார்த்தைகள் இல்லையா? ஒருபோதும் மீண்டும் அவர்களுக்கு எழுதாதீர்கள், அவர்கள் என்னிடம் வரமாட்டார்கள்.**"

அப்போது அவர், "**நான் வீணாக எழுதச் சொல்கிறேன் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? உங்கள் எழுத்துக்களைப் பற்றி உங்களுக்கு ஏதாவது யோசனை உள்ளதா? அதில் அன்பின் உயிரோட்டம் அருமையாகப் பாய்கிறது, பாய்ந்தோடுகிறது; நீங்கள் எழுதுவது எனக்குப் பிடிக்கும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இன்னும் என்ன வேண்டும்?**" என்று கூறினார். பாவ் கல்சூரி அமைதியாக இருந்து, பாபா கேட்டுக் கொண்டபோது மட்டும் தொடர்ந்து எழுதினார்.

1945இல் குடும்ப அழுத்தங்கள் காரணமாக, எரச் தனது உறவினரான கோர்ஷெத் தமானியாவை (KHORSHED DAMANIA) மணந்தார்; ஆனால், பாபாவின் கட்டளைப்படி, திருமணத்திற்குப் பின்னர் அவர் நிரந்தரமாக பாபாவுடன் இணைந்து, மீண்டும் தனது மனைவியுடன் குடும்ப வாழ்க்கையைத் தொடரவில்லை. ஏற்கனவே குறிப்பிட்டபடி, அவரை ஒரு குரு என்று கூறிக்கொள்ளும் மங்காராம் மிர்சந்தானியின் (MANGHARAM MIRCHANDANI) தொடர்பில் கோர்ஷெத் தமானியா வர நேர்ந்தது. 1957இல் மும்பை, ஆஷியானாவில் பாபாவை எதிர்கொள்ள மூன்று சீடர்களை அனுப்பிவைத்த அதே 'போலி துறவி'தான் மிர்சந்தானி.

கோர்ஷெத், பிந்த்ரா ஹவுஸிற்குச் செல்வதை பாபா தடை செய்தார், மேலும் நான்கு 'அக்பர் அச்சகம்' குடும்பங்களும் இந்த குரு என்று அழைக்கப்படுபவருடன் தொடர்பு கொள்ளக்கூடாது என்று பாபா விரும்பினார். அக்பர் அச்சகத்தில் பாபாவின் சார்பில், மணி மற்றும் எரச்சின் மாமா மெஹர்ஜி ஸட்டா ஆகியோருக்கு இடையே, ஒரு வருடத்திற்கும் மேலாக, கடிதப் பரிமாற்றம் நடந்து வந்தது. இறுதியாக, பாபாவின் சமீபத்திய ஏகாந்தவாசத்தின்

காரணமாக பல ஒத்திவைப்புகளுக்குப் பின்னர், 1960 ஜனவரி 10 அன்று காலை 9:00 மணிக்கு மெஹராஸாத்தில் ஜெஸவாலா, கேரவாலா, ஸட்டா மற்றும் தமானியா குடும்பங்களை சந்திப்பதற்காக பாபா அவர்களை அழைத்தார். கூட்டம் அன்று மதியம் வரை நீடித்தது. பாபா, தமது இறுதி முடிவைக் கடைப்பிடிக்க இணக்கம் தெரிவித்தவர்கள் மட்டுமே கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று தெளிவுபடுத்தினார்.

நான்கு குடும்பங்களிலிருந்தும் மொத்தம் 24 நபர்கள், எரச், மணி, கோஹெர் ஆகிய அனைத்து உறுப்பினர்களும் அன்று வந்திருந்தனர். ஒவ்வொருவரும் நன்றாகத் தூங்கினார்களா என்று பாபா கேட்க, கூட்டத்தில் ஒருவர் பாபாவிடம், அவர் நன்றாகத் தூங்கினாரா என்று கேட்டார்; அதற்கு பாபா, **"நான் 24 மணிநேரமும் தூங்குகிறேன், ஆனால் அதே நேரத்தில் நான் எப்பொழுதும் விழித்திருக்கிறேன்!"** என்றார்.

பாபா நிகழ்ச்சியைத் துவக்கி இவ்வாறு தெரிவித்தார்:

இன்று நான், அனைத்து தவறான புரிதல்களையும், குழப்பங்களையும் அகற்றிவிட்டு, எனது முடிவை வழங்குவேன்; இது இறுதியானது மற்றும் மாற்ற முடியாதது. 'எனது பொறாமையின் காரணமாக, மக்கள் புனிதர்களிடம் ஒட்டிக்கொள்வதை நான் விரும்பவில்லை' என்று கூறப்படுகிறது. உண்மை என்னவெனில், நான் பொறாமைப்படுவதானால், என்னைப் பற்றி மட்டுமே பொறாமைப்பட முடியும், ஏனெனில் என்னை விட பெரியது அல்லது அதற்கு அப்பாற்பட்டது எதுவுமில்லை - நான் எல்லாவற்றிற்கும் மேலாக இருக்கிறேன். இந்திய நாடு, உண்மையான மற்றும் பொய்யும், போலியுமான புனிதர்களால் நிறைந்துள்ளது; அத்தகைய புனிதர்களிடமிருந்து அவர்கள் அடையப் பெறும் 'அனுபவங்களுக்கு', தவறான முக்கியத்துவத்தை அளிப்பதை எதிர்த்து நான் மக்களை எச்சரிக்கிறேன்.

கோர்ஷெத், தனக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பற்றி பேசும்போது அவர் நேர்மையானவர், அவை உண்மையானவை. ஆனால் என் உயரத்திலிருந்து பார்க்கும் போது, இந்த அனுபவங்களுக்கு எந்த முக்கியத்துவமும், மதிப்பும் இல்லை. மக்கள் தங்கள் அனுபவங்களைச் சொல்லும் போதெல்லாம் (அத்தகைய அனுபவங்கள் எனது ஆளுமையின் அடிப்படையிலானதாக இருந்தாலும் கூட), **நான் அவற்றைக் கடுமையாக நிராகரித்து, கண்டுகொள்ள வேண்டாம் என்று அவர்களை எச்சரிக்கிறேன்.**

பாபாவின் இறை ஒளியாலும், பிரசன்னத்தாலும் நிரம்பியிருந்த மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த பதினேழு வயது சிறுவன் பாலக் பகவானின் அனுபவத்தை எரச் விவரித்தார், மேலும் அவர் பாபாவை எல்லா இடங்களிலும், எல்லாவற்றிலும் பார்த்தார். அவர் ஐந்தாவது ஆன்மீகத் தளத்தில் நிலைகொண்டிருப்பதாகக் கற்பனை செய்து, மக்களுக்கு தரிசனமும் பிரசாதமும் வழங்கிக் கொண்டிருந்தார். இது போன்ற அனுபவங்களுக்கு, தவறான விளக்கங்கள் வழங்குவதற்கு முற்றுப்புள்ளி வைத்து, பாபா மிக உறுதியான பதிலை எழுதச் செய்தார். பாபா இது போன்ற அனுபவங்களை ஒரு

தமாஷாவுடன் (சாலையோர மாயாஜால கண்காட்சி) ஒப்பிட்டார், இது சிறிது நேரம் யாத்ரீகரைத் திகைப்பில் ஆழ்த்தி, ஆன்மீகப் பாதையில் முன்னேற்றத்தை திசைதிருப்புகிறது; இது ஓர் உதவியாக இல்லாமல் தடையாக இருப்பதை நிரூபிக்கிறது.

பாபா விளக்கினார்:

இந்த 'அனுபவங்கள்' ஒரு பெரிய அணையின் சிறுசிறு துளைகளிலிருந்து வடியும் நீரின் துளிகள் போன்றது; மேலும் அவை, பேரழிவை ஏற்படுத்தாதபடி நான் கவனித்து, தொடர்ந்து தடுத்து நிறுத்த வேண்டும். வண்ணங்கள், வட்டங்கள் மற்றும் விளக்குகளைப் பார்ப்பது, வானில் மிதப்பது போன்ற பல்வேறு அனுபவங்களை அடையப் பெற்றவர்கள் பலர் உள்ளனர். அவர்கள் ஒரு பொதுவான செயல்முறை மற்றும் அவர்களுக்கு ஏற்புடைய அனுபவங்களை வழங்குவதன் மூலம், அவர்களைச் சுற்றி ஒரு குழுவை ஈர்க்கிறார்கள்; ஆன்மீகப் பாதையில் பல்வேறு உணர்வு நிலைகளை அனுபவிக்கும் யாத்ரீகர்கள், இவற்றில் ஒருபோதும் ஈடுபடவோ அல்லது இதைக் குறித்து கனவு காணவோ, கண்டுகொள்ளவோ கூடாது. இவ்வாறு ஆன்மீகத் தளங்களில் முன்னேற வழியில்லாமல், அவர்கள், தங்களைப் பின்பற்றுபவர்களை, அவர்களின் சுய நிலைக்கு மட்டுமே கொண்டு வர முடியும், அதற்கு மேல் எதுவும் இல்லை. பின்னர் அடிக்கடி கருத்து வேறுபாடுகள் ஏற்படுகின்றன, மேலும் குழுவில் பிளவுகள் உருவாகி, வேறு தலைமையின் கீழ் அதனைப் பின்பற்றுபவர்களுடன் மற்றுமொரு கிளையை உருவாக்குகிறது.

இந்த அனுபவங்களினால் விளையும் உண்மையான ஆபத்து என்னவெனில், இறை நாட்டம் மிக்க ஒருவர், அவர் இறுதி இலக்கை அடைந்துவிட்டதாகவும், ஆன்மீகப் பாதையில் பரிபூரண தேர்ச்சி பெற்றுள்ளதாகவும் நினைத்து, தவறாக வழிநடத்தப்படுகிறார். இது பாதையின் அனுபவங்களுக்கும் பொருந்தும், இது இறை உணர்வை எய்தும் ஒரே உண்மையான அனுபவத்துடன் ஒப்பிடும் போது, முற்றிலும் முக்கியமற்றதாக இருக்கும்.

இதை ஹஃபீஸ் தனது கவிதைகளில் அழகாகச் சித்தரித்துள்ளார். ஆரம்பத்தில் தான் கடலோரம் சென்று, ஆழமற்ற நீரில் துள்ளிக்குதித்தாடும் ஒரு மனிதனைப் போல் இருந்ததாகவும், தனது இன்பத்தில், தான் சமுத்திரத்தின் முத்தை அடையப் பெற்றதாக நினைத்ததாகவும் ஹஃபீஸ் கூறுகிறார். அதைத் தொடர்ந்து, நீண்ட காலத்திற்குப் பிறகு, ஹபீஸ் இன்னும் நீச்சல் கற்றுக் கொள்ளவில்லை என்பதை உணர்ந்தார்; அவர் நீச்சல் கற்றுக்கொண்டபோது, பல அலைகளை எதிர்கொண்டு கடக்க வேண்டியிருந்ததால், அவர் இன்னும் தலைகீழாக குதிக்கக் கற்றுக்கொள்ளவில்லை என்பதையும் உணர்ந்தார். அவர் தேர்ச்சி பெற வேண்டிய அடுத்த படி என்பது, தண்ணீருக்கு அடியில் மூச்சைப் பிடித்துக்

கொண்டு, நீண்ட நேரம், அவர் சமுத்திரத்தின் முத்தை அடையப் பெறும் - இறுதி இலக்கிற்காக, கடலின் கீழ்ப்பகுதியைச் சென்றடைவதாகும்.

ஆன்மீகப் பாதையில் ஆர்வமுள்ள ஒருவருக்கு, அதைக் காண்பது அல்ல, ஆனால் அதுவாக மாறுவதே குறிக்கோள்.

பாபா பின்னர், எரச்சிடம் அவர் விரும்புவதை எடுத்துரைக்குமாறு கேட்டுக்கொண்டார், பிறர் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தவும், கேள்விகளை முன்வைக்கவும் வாய்ப்பளிக்கப்பட்டது. இறுதியில், கோர்ஷெத் ஜெஸவாலா, மிர்சந்தானியுடன் தன்னைத் தொடர்ந்து இணைத்துக் கொள்வதை உறுதிப்படுத்தினார். மேலும் எரச் அல்லது பாபாவிற்கு எதுவும் எழுதக் கூடாது, அல்லது அவர்களில் எவரையும் மீண்டும் பார்க்க வேண்டாம் என்று பாபா அவருக்குக் கட்டளையிட்டார்; இருப்பினும், பாபா, கோர்ஷெத்தைத் தொடர்ந்து நேசிப்பதாக உறுதியளித்தார். இனிமேல் கோர்ஷெத்தின் செயல்களுக்கு அவரே பொறுப்பு என்பதையும் பாபா தெளிவுபடுத்தினார். பிந்த்ரா ஹவுஸிலிருந்து (அவர் தங்கியிருந்த இடம்) பொருட்களை அக்பர் அச்சகத்திற்கு இடமாற்றம் செய்யுமாறும் உத்தரவிடப்பட்டது.

முன்பு விவரித்தபடி, பாபா பணிபுரியும் வழிகள் மற்றும் முறைகளில் ஒன்று, மண்டலியிடையே சலசலப்புகளை உருவாக்குவது. உதாரணமாக, பாபாவின் சூசகமான குறிப்புகளின் பேரில், காக்கா, சில நேரங்களில் அலோபாவை மிகவும் துன்புறுத்துவதால், காக்காவின் முன்னிலையில் இருப்பது கூட அலோபாவிற்கு வெறுப்பாக இருந்தது, எனவே படிப்படியாக அலோபா விரக்திக்குள்ளானார்.

ஒருமுறை மண்டபத்தில் எரச், பாபாவிற்கு ஆங்கிலத்தில் ஒரு கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்தார்; அதை முடித்ததும் பாபா, காக்காவிடம், **"உங்களுக்குப் புரிந்ததா?"** என்று கேட்க, 'இல்லை' என்று தலையசைத்தார் காக்கா. பாபா, **"நீங்கள் படிப்பறிவில்லாதவர், உங்களால் ஆங்கிலத்தை எப்படிப் புரிந்துகொள்ள முடியும்?"** பின்னர் அலோபாவிடம், **"இன்று முதல், இந்தக் காட்டுமிராண்டிக்கு ஆங்கிலம் கற்றுக் கொடுங்கள்!"** அலோபா மகிழ்ச்சியடைந்து, காக்காவைப் பின்தொடர்ந்து, பழிவாங்கத் தொடங்கினார்; ஏழை காக்கா உண்மையில் சிக்கலில் மாட்டிக்கொண்டார். அலோபா அவரை ஒரு வார்த்தையை ஒரு டஜன் முறை எழுத வைத்த வேளையில், பாபாவின் கட்டளைப்படி, காக்கா அதை எந்த எதிர்ப்பும் தெரிவிக்காமல் அமைதியாகச் செய்ய வேண்டிய கட்டாயம்; உண்மையில் அவர் அதை நினைவில் வைத்துக்கொள்ள முயற்சித்தார். துரதிர்ஷ்டவசமாக, காக்கா இந்த வார்த்தையை மறந்துவிட்டால், அலோபா, அதை மீண்டும் மீண்டும் சொல்லவும், பல முறை எழுதவும் வைத்தார். இப்படி இந்த நாடகம், பாபா அதை நிறுத்தும் வரை பல நாட்கள் தொடர்ந்தது.

ஒருமுறை பாவ் கல்சூரியின் முன்னிலையில் குருபிரசாத்தில், அலோபாவிற்கு எதிராக பாவ் கல்சூரி ஏதோ கூறியதாக பாபா, அலோபாவிடம்

கூறினார். பாவ் கல்சூரி, "இல்லை, பாபா, நான் அப்படிச் சொல்லவில்லை" என்றதும், பாபா அவரை, சீற்றத்துடன் பார்த்து, **"நீங்கள் வேகாத மண் பானை போன்றவர், அதைத் தட்டினால் உடைந்துவிடும், டோங்-டாங் என ஒலிக்காது"** என்று கருத்துத் தெரிவித்தார். இதன் பொருள், பாவ் கல்சூரி இன்னும் பக்குவம் அடையவில்லை, பாபா எப்படிச் செயல்பட வேண்டும் என்று விரும்புகிறார் என்பது அவருக்குப் புரியவில்லை.

ஒவ்வோர் ஆண், பெண் மண்டலி உறுப்பினருக்கும், பாபாவுடனான வாழ்க்கை, வாளின் விளிம்பில் நடப்பது போன்றது. ஒருவர் வாழ வேண்டிய வாழ்க்கையை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. பாபாவின் அன்பு ஒன்றுதான், மண்டலி அவரைப் பற்றிக்கொண்டு இருக்கவும், பல்வேறு சோதனைகளையும் கடுமையான சூழ்நிலைகளையும் கடந்து செல்லவும் உதவியாக இருந்தது; நிச்சயமாக, அவற்றை தமது பணிக்காக, பாபா வேண்டுமென்றே உருவாக்கினார்.

பல வருடங்கள் பாபாவிற்கு சேவை செய்த பின்னர், 1960 ஜனவரி 18 அன்று பிந்த்ரா ஹவுஸ் செல்ல எரச்சிற்கு இரண்டு வார விடுமுறை வழங்கப்பட்டது. அவர் இல்லாத நேரத்தில், ∴பெராம் இரண்டு வாரங்களுக்காக மெஹராஸாத்திற்கு வந்தார், பால் நாத்துவும் பத்து நாட்கள் தங்குவதற்காக 15ஆம் தேதி வந்தார். அடுத்த நாள் பாபாவின் அறிவுறுத்தல்படி புக்கார், குமார், மெஹர்ஜி மூவரும் வந்தனர். 20ஆம் தேதி முதல் ஒரு வாரம் மெஹராஸாத்தில் தங்குவதற்காக டாக்கே அழைக்கப்பட்டார்; மேலும் மூன்று நாட்களுக்குப் பிறகு நரிமனும், ஜிம் மிஸ்திரியும் ஒரு வாரத்திற்காக வந்தனர். மெஹராஸாத்தில் தங்கியிருந்த ஷெரூ 16ஆம் தேதி பூனாவிற்குத் திரும்பிச் சென்றார். நோஷிர் ஸிகன்போரியா தனது குடும்பத்துடன் மெஹராபாத்தில் தங்கியிருந்தார், ஆனால் அவர்களும் இந்த நேரத்தில் திரும்பிச் சென்றனர்.

பிப்ரவரி 3 அன்று, எரச் மெஹராஸாத் திரும்பி வந்த போது, பாபா அவரிடம், **"நீங்கள் இங்கிருந்து சென்றதில் பாவ் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்"** என்று கூறினார். இது முற்றிலும் பொய்யானது, அதைக் கேட்ட பாவ் கல்சூரி அதிர்ச்சியடைந்தார். ஆனால் அவரால் என்ன சொல்ல முடியும்? அவர் அமைதியாக இருக்க வேண்டியிருந்தது. பாபா அபிப்பிராய பேதத்தையும், அசௌகரியத்தையும் 'கிளறி' விடுவதற்கான மற்றுமோர் எடுத்துக்காட்டு.

1960 ஜனவரியில், உகாண்டாவைச் (UGANDA) சேர்ந்த ஸத்பால் ஸிங் (SATPAL SINGH) பல கேள்விகளைக் கேட்டு பாபாவிற்கு எழுதியிருந்தார். அவற்றில் ஒன்று: "நாம் ஏன் படைக்கப்பட்டோம்?"

பாபாவின் சுருக்கமான பதில்: **"என்னை கஷ்டப்படுத்துவதற்காக."**

பாபாவின் வார்த்தைகள் உண்மையில் உடனடியாக வெளிப்பட்டதாகத் தோன்றியது; ஜனவரி 30 அன்று, பாபா அவரது தொண்டையில் கடுமையான வலியைப் பற்றி புகார் செய்தார். அவர் விழுங்குவதில் சிரமத்தை அனுபவித்து, ஓய்வெடுக்க முடியாமல் அவதிப்பட்டார். தொண்டையில் தோல் மென்மையாக

இருந்த அதே வேளையில், வீக்கம் இல்லாத போதும், ஜுரம் அவரைத் தாக்கியது. அடுத்த நாள் காலையில் வலி அதிகமாக இருந்ததால், டாக்டர் கோஹெர் 'பூத் மருத்துவமனை'யின் (BOOTH HOSPITAL) டாக்டர் ஆண்டர்ஸனை (DR. ANDERSON) தொடர்பு கொள்ள அனுமதிக்கப்படவே, அவர் ஆதியால் மெஹராஸாத்திற்கு அழைத்து வரப்பட்டார். அவரது நோயை திட்டவட்டமாகத் தீர்மானிக்க முடியாவிட்டாலும், அவர் ஒரு மருந்தை வழங்கி, தோல் பகுதியில் ஒற்றடம் கொடுக்குமாறு பரிந்துரைத்தார். இருந்தாலும் பிப்ரவரி 15 வரை வலி நீடித்தது. டாக்டர் டான், பாதிரி இருவரும் எப்போதேனும் டாக்டர் கோஹெருடன் கலந்தாலோசிக்க அழைக்கப்பட்டனர்.

எல்சா மிஸ்திரி இரண்டு மாதங்கள் தங்குவதற்காக பிப்ரவரி 2ஆம் தேதி வந்தபோது, பாபா அவரிடம், **"எனக்கு உடல்நிலை சரியில்லாத போதும், நான் உங்கள் மத்தியில் வந்திருக்கிறேன்"** என்று கூறினார். மேலும் அவர், **"எல்சா, நான் கடவுள். நான் கடவுள் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. நான் 100 சதவீதம் கடவுள்!"** என்றார்.

எல்சா உறுதிப்படுத்தினார், "நீங்கள் கடவுள்; நான் என் ஆழ் இதயத்திலிருந்து உங்களை கடவுளாக ஏற்றுக்கொள்கிறேன்."

1960 பிப்ரவரி 4 அன்று காலை, மெஹருவின் சகோதரர் ஜங்கு (JANGOO), சகோதரி நாகு (NAGGU), நாகுவின் கணவர் ரவி மேத்தா (RAVI MEHTA) ஆகியோர், பாபாவுடனான நேர்காணலுக்காக ஆதியால் அழைத்து வரப்பட்டனர். அடுத்த நாள் படே (BADE), பிற அன்பர்களுடன் பத்தார்டியிலிருந்து (PATHARDI) வந்து, பாபாவை தரிசனம் செய்துவிட்டு அன்றே புறப்பட்டுச் சென்றார். அதே நாளில், திருமலா ராவுடன் கிஷின்சந்த் கஜ்வானி மற்றும் ஸொராப்ஜி ஸிகன்போரியா ஆகியோரும் வந்தனர். கஜ்வானி, பாபாவிற்கு ஒரு வானொலியை வழங்கினார்.

பாபா, கஜ்வானியிடம் சற்று லேசான தொனியில், **"ஏன் வந்தீர்கள்?"** என வினவினார்.

"மன அமைதிக்காக" கஜ்வானி பதிலளித்தார்.

பாபா கேலி செய்தார், **"நீங்கள் மன அமைதிக்காக என்னிடம் வருகிறீர்கள். ஆனால் இந்த அமைதியற்ற மண்டலி அமைதிக்காக எங்கே போவார்கள்?"**

உண்மை என்னவெனில், அந்த நேரத்தில், மண்டலி அனைவரும் சங்கடமாக உணர்ந்தனர். பாபா ஆசிரமத்தில் உணர்வின் அதிர்வலையை உச்சத்திற்கு எடுத்துச் சென்ற அந்த நிலையில், மண்டலிக்கு மரணத்தைத் தவிர வேறு எந்த எண்ணமும் இல்லை. இத்தகைய சூழ்நிலை எல்லா நேரத்திலும் நிலவினாலும் சில சமயங்களில் அவை தாங்கொணா அளவை எட்டியது.

பாவ் கல்சூரியின் மூல நோய் கடுமையாகிவிட்டதால், பிப்ரவரி 6ஆம் தேதி, அவர் அஹமதுநகர் பூத் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்; இரண்டு

நாட்களுக்குப் பின்னர் அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. டான் அறுவை சிகிச்சையில் கலந்து கொண்டு, சிதுவின் உதவியுடன் அவரை கவனித்துவந்தார். அன்றைய தினம் அக்பர் அச்சகத்தில் காலை 8:30 மணிக்கு பாபா, ஸட்டா குடும்பத்தினரை சந்தித்து, மீண்டும் 15ஆம் நாள் காலை, பாவ் கல்சூரியைப் பார்க்க வந்த வேளையில் அவர்களை சந்திக்க நேர்ந்தது.

1960 பிப்ரவரி 7 ஞாயிற்றுக்கிழமை அன்று, பாபா, மன்ஸாரி, கைக்கோபாத் மற்றும் கல்சூரி குடும்பத்தினரைப் பார்க்க மெஹராபாத் சென்றார். 20ஆம் தேதி, அவசர மருத்துவ ஊர்தி மூலம் மெஹராபாத்திற்கு அழைத்து வரப்பட்ட பாவ் கல்சூரி, மார்ச் இறுதி வரை தங்கியிருந்தார்.

பிப்ரவரி 15 அன்று, அக்பர் அச்சகத்தில் இருந்தபோது, பாபா, மெஹர்ஜி மாமாவிற்கு விளக்கினார்: **"நீங்கள் பிறந்ததிலிருந்து இதுவரை, ஒருமுறையேனும், நீங்கள் ஒருபோதும் இருந்ததில்லை என்று நினைத்ததில்லை! இத்தனை வருடங்கள், மாதங்கள் மற்றும் நாட்கள், உங்கள் உடலிலும், மனதிலும் என்ன நடந்திருந்தாலும், நடக்காமல் இருந்திருந்தாலும், நீங்கள் இருக்கிறீர்கள் என்பதை முழுமையாக அறிந்திருக்கிறீர்கள்."**

மெஹர்ஜி மாமா குறுக்கிட்டார், "ஆனால், எல்லா காலத்திற்கும் நமக்குத் தேவையான இறுதி அனுபவத்தைக் குறித்த ஞானம் (DNYAN), எல்லா காலத்திலும் இருக்க வேண்டும்."

பாபா தொடர்ந்தார், **"இந்த ஞானத்திற்காக, 'நீங்கள் என்னவாக இருக்கிறீர்களோ அவ்வாறு இல்லை' என்பதை முழுமையான உணர்வுடன், எல்லா நேரங்களிலும் முழுவதுமாக அறிந்துகொள்வது, உங்களைச் சார்ந்தது.**

"உங்கள் வாழ்நாளில் (அதாவது, உங்கள் அறியாமையின் வாழ்வில்) **உங்கள் வாழ்நாள் முழுவதும், 'நீங்கள் இருந்ததில்லை' என ஒருமுறை கூட முழுமையான உணர்வு நிலையில் நீங்கள் உணரவில்லை என்பதை, நீங்கள் முழுமையாக உணர்ந்திருக்கிறீர்கள், ஏனெனில் 'நீங்கள் இருக்கிறீர்கள்' என்பதை எப்பொழுதும் உணர்ந்து, அதே உணர்வுடன் எப்பொழுதும் இருப்பீர்கள்.**

"'நீங்கள் என்னவாக (இப்போது) **இருக்கிறீர்கள்' என்பதற்கு பதிலாக, 'நீங்கள் என்னவாக (இப்போது) இல்லை' என்பதைத் தொடர்ந்து அனுபவிக்க வேண்டும். இதுவே ஒருவரை எல்லா நேரங்களிலும், ஒரே நொடியில், அனைத்தையும் அறியச் செய்யும் ஞானம் ஆகும், ஏனெனில் ஒருவர் அந்த ஞானத்தின் ஆதாரமாக மாறுகிறார்."**

மும்பையில், பாபாவின் பழைய சீடர்களில் ஒருவரான பிளீடருக்கு (PLEADER) மாரடைப்பு ஏற்படவே, பாபாவிற்குக் கடிதங்கள், தொலைத்தந்திகள் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது. பிளீடர் மிகுந்த வேதனையில் இருந்தார்,

மும்பை அன்பர்கள் பாபாவிடம் என்ன செய்ய வேண்டும் எனக் கேட்டு, தொடர்ந்து அறிக்கைகளை அனுப்பி வந்தனர். இறுதியாக, தொடர் தகவல் பரிமாற்றங்களால் சோர்ந்து போன பாபா, பிளீடரை மெஹராஸாத்திற்கு அழைத்து வருமாறு அறிவுறுத்தியதும், 1960 பிப்ரவரி 19 அன்று காலை 10:30 மணிக்கு அவர்கள் மெஹராஸாத் வந்தடைந்தனர்.

பிளீடர் தூக்குப்படுக்கையில் இருந்தார், பாபா அவரிடம் **'எப்படி உணர்கிறார்?'** என்று கேட்டபோது, பலவீனமான குரலில், பிளீடர் பாபாவிடம் முறையிட்டார், "உங்கள் வாக்குறுதியை நிறைவேற்றுங்கள் அல்லது உங்களை நீங்கள் கடவுள் என்று அழைப்பதைக் கைவிடுங்கள்!" (இது பிளீடரிடம் ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளின் ஒரு குறுகிய காட்சி வழங்கப்படும் என்று பாபா கூறியதைக் குறிக்கிறது.)

பிளீடரின் உள்ளங்கையைத் தொட்டு உறுதியளிக்கும் விதத்தில் பாபா அவரிடம், **"நீங்கள், உங்கள் உடலைக் கைவிடும் முன்பு, நான் எனது வாக்குறுதியை நிறைவேற்றுவேன், கவலைப்படாதீர்கள்"** என்று கூறினார்.

பாபா, பிளீடரை ஒரு தனி அறையில் தங்க வைக்கவே, டாக்டர் கோஹெர் அவருக்கு சிகிச்சை அளிக்கத் தொடங்கினார். பல மும்பை அன்பர்கள் பிளீடரை ரயிலில் அழைத்து வந்தனர், அவர்களில் குலாப்தாஸ் (GULABDAS, அவரது தூரத்து உறவினர்), ராட்டிலால் பாஞ்சால் (RATILAL PANCHAL), கிஷோர் மிஸ்திரி, கர்மன் மாசியின் மகன்கள் ஹோமி, ஸரோஷ் மற்றும் ஸரோஷின் மனைவி கோர்ஷெத். (ஸரோஷ், கோர்ஷெத் ஆகியோருடன் பிளீடர் தங்கியிருந்தார்).

பாபா அவர்களிடம், **"பிளீடர் எந்த உபாதையினால் அவதிப்படுகிறாரோ, அது எனது விருப்பத்தால் விளைந்தது, அது அவருடைய நன்மைக்காகவே"** என்று கூறினார்.

பாபா, அலோபாவிடம் ஹஃபீஸின் இந்தக் கவிதையை மொழியுமாறு அறிவுறுத்தினார்:

நான் என் எதிரிகளை செழிப்படையச் செய்து,
எனது நண்பர்களை சுக்குநூறாக்குவேன் என்று கடவுள் கூறுகிறார்!
அதை எதிர்த்து பேசவோ, ஏன் என்று கேள்வி கேட்கவோ
எவருக்கும் உரிமை இல்லை!

பாபா மேலும் கூறினார், **"நீங்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒருவிதத்தில் துன்பப்பட்டிருக்க வேண்டும், ஆனால் அதிலிருந்து வெளிவந்த பிறகு, துன்பம் ஒரு கனவாக மாறுகிறது. அந்த வலிகளும், தொல்லைகளும் இன்னும் உங்களிடம் உள்ளதா? இல்லை, அவை ஒரு கனவு போல மங்கிவிட்டன.**

"உடல் உபாதைகள் மூலமாக நான் எதை சாதிக்கிறேன் என எவருக்கும் தெரியாது, நான் அதை நித்தியமாகத் தாங்கிக்கொள்கிறேன், அதிலிருந்து இன்பத்தை அடையப் பெறுகிறேன். கடுமையான துன்பங்களும், பலவிதமான வலிகளும் இருந்தாலும், இன்பத்தை அனுபவிக்கும் போது, அது நித்திய பேரின்பமாக மாறும்."

பாபா, **"என் அன்பர்களில் எவர் ஒருவர் வலி மற்றும் துன்பத்தை அனுபவிக்கிறாரோ அவர் எனது வலியிலும் துன்பத்திலும் பங்கெடுக்கிறார்"** என்று கூறி முடித்தார்.

பிளீடரைக் கவனிக்கும் பொறுப்பு ஹோமி மற்றும் ஷாபூர் பி. பாரேக் (SHAPUR P. PAREKH, பிளீடரின் உறவினர்) ஆகியோருக்கு வழங்கப்பட்டது. பிற அனைவரையும் பாபா மும்பைக்குத் திருப்பி அனுப்பினார். பாபா ஒரு நாளில் பலமுறை பிளீடரை சந்தித்து, அவரது முகத்தைக் கையால் வருடி முத்தமிட்டார். சில சந்தர்ப்பங்களில் பிளீடர், பாபாவின் பெயரை உச்சரித்துக் கொண்டிருந்தார்.

1960 பிப்ரவரி 20, 21, 22 ஆகிய தேதிகளில் ரஞ்சி கோப்பை கிரிக்கெட் (RANJI TROPHY CRICKET) போட்டியைக் காண பாபா, அஹமதுநகர் வாடியா பார்க்கிற்குச் சென்றார். 21ஆம் தேதி, பாபா, பிளீடருக்கு ஒரு கல்லறையைத் தோண்டி தயாராக வைக்குமாறு பாதிரிக்குத் தகவல் அனுப்பி, பீளீடரை 24ஆம் தேதி முதல் மெஹராபாத்தில் தங்கவைக்கப் போவதாகவும் தெரிவித்தார்.

23ஆம் தேதி, பாதிரி, டாக்டர் டான் ஆகியோரை பாபா மெஹராஸாத்திற்கு அழைத்து, பிளீடர் குறித்த அறிவுரைகளை வழங்கினார். அன்று ஸரோஷ் (ஈரானி) வந்திருந்தார்; பாபா பின்னர் அக்பர் அச்சகத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.

அடுத்த நாள் பிப்ரவரி 24 அன்று, பிளீடருக்காக அவசர மருத்துவ ஊர்தி ஒன்று வரவழைக்கப்பட்டது. பிளீடர் செல்வதற்கு முன்பு, மீண்டும் முறையிட்டார், "உங்கள் வார்த்தையை நிறைவேற்றுங்கள், பாபா!"

பிளீடரின் உள்ளங்கையைப் பற்றிக்கொண்டு பாபா உறுதியளித்தார், **"நீங்கள் உங்கள் உடலைத் துறப்பதற்கு முன்பு, நான் எனது வார்த்தையை நிறைவேற்றுவேன். மெஹராபாத்திற்குச் செல்லுங்கள், அங்கு நீங்கள் என் அருளைப் பெறுவீர்கள். உடலை விட்டு வெளியேறும் முன், நீங்கள் எனது உண்மையான ரூபத்தின் ஒரு குறுகிய காட்சியைக் காண்பீர்கள்."**

பாபா அப்போது பிளீடரின் கன்னங்கள், அவரது தலை, நெற்றி மற்றும் கைகளை முத்தமிட்டு, அன்புடன் ஆசீர்வதிக்கும் விதத்தில் அவரது கரங்களை பிளீடரின் உடல் மீது செலுத்தினார். பின்னர் அவர் அவசர மருத்துவ ஊர்தியில் அழைத்துச் செல்லப்பட்டதை, பாபா நின்று பார்த்துக் கொண்டிருந்தார். "எனக்கு இப்போது வலி எதுவும் இல்லை பாபா" என்று பிளீடர் பாபாவிடம் கூறி, "என்னை இப்போது மெஹராபாத்தில் தூங்கச் செய்யுங்கள்" என்றார்.

பாபா பதிலளித்தார், **"இப்போது, அதி விரைவில் நான் உங்களை என்னில் தூங்கச் செய்வேன், மேலும் உங்கள் உடல் மெஹராபாத் மண்ணில் கலக்கும்."** பிளீடர் அவருக்கு நன்றி கூறினார்; அவசர மருத்துவ ஊர்தி மெஹராபாத்திற்கு புறப்பட்டுச் சென்றது; அங்கு டாக்டர் டான் அவருக்கு சிறந்த சிகிச்சை அளித்து, அவர் சௌகரியமாக இருப்பதை ஊர்ஜிதம் செய்ய, தன்னால் முடிந்த அனைத்தையும் செய்தார்.

பாபாவின் 66ஆவது பிறந்தநாள் வியாழன், 1960 பிப்ரவரி 25 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இந்தியா முழுவதும் அவருக்காக அர்ப்பணிக்கப்பட்ட பல்வேறு மையங்கள் விழாக்கோலம் பூண்டு காணப்பட்டன. மெஹராஸாத்தில் இது எளிமையான முறையில் அனுசரிக்கப்பட்டது. காலை 5:00 மணிக்கு ஆண், பெண் மண்டலி அனைவரும் பாபாவின் நாமத்தை உச்சரித்து, ஜெய் கோஷங்களை எழுப்பினர். பாபா ஒரு புதிய இளஞ்சிவப்பு மேல் கோட் அணிந்திருந்தார், மெஹரா அவருக்கு மாலை அணிவித்தார். மெஹர்தாஸ் மற்றும் மெஹராஸாத்தில் பணிபுரியும் சிறுவர்கள், மண்டபத்தை அலங்கரித்து, ஒரு சிறிய மேடையை அமைத்திருந்தனர். அவர்கள் மேடை நாடக ஆடைகளை அணிந்துகொண்டு, பாபாவின் பிறந்தநாளில் அவருக்கு மரியாதை செலுத்தும் வகையில், சிவபெருமான் அவரது சொர்க்கலோகக் குழுவுடன் வானிலிருந்து இறங்கி வரும் ஒரு காட்சியை அரங்கேற்றினர்.

ஃபிரான்சிஸ் அப்போது பாபாவின் பிறந்தநாளை ஒட்டி, குறுங்கவிதை ஒன்றை வாசித்தார். பெண்மணிகள் தங்கள் குடியிருப்புக்குத் திரும்பிச் சென்றதும், எரச் பிறந்தநாள் கடிதங்கள் மற்றும் தொலைதந்திகளைப் படிக்கத் தொடங்கினார். சிறிது நேரத்தில் வாகனம் ஒன்று வந்தது. இது 1956ஆம் வருடம் அறிமுகப்படுத்தப்பட்ட நீல நிற 'டிஸோட்டோ' (DeSOTO) கார், நரிமன், அர்னவாஸ் இருவரும் பாபாவின் பிறந்தநாள் பரிசாக வழங்கவிருந்தனர். ஹோமா தாதாசாஞ்சி மும்பையிலிருந்து அதை ஓட்டி வந்தார்; மேலும் காருக்குத் தேவையான முழுப் பராமரிப்புச் செலவுகளையும் இருவரும் வழங்க விரும்புவதாகக் கூறினார். பாபா அவர்களின் அன்பான மற்றும் நடைமுறையில் பயனுள்ள பரிசை ஏற்றுக்கொண்டார்; பின்னர் ஹோமாவுடன் ஒரு குறுகிய பயணத்திற்குச் சென்றார். இது வரை பாபா, நரிமனின் 'அம்பாஸடர்' (AMBASSADOR) காரை பயன்படுத்தி வந்தார்.

அன்று காலை 8:00 மணி அளவில், பாபா, பிம்பல்காவ்ம் கிராமத்தைச் சேர்ந்த 60 பள்ளி மாணவர்களின் கால்களைக் கழுவி தலை வணங்கினார். ஒவ்வொருவருக்கும் ஒரு புதிய சட்டை, ஒரு ஜோடி கால்சட்டை மற்றும் இனிப்புப் பொட்டலம் பிரசாதமாக வழங்கப்பட்டது. சகன் அன்று பாபாவிற்கு மதிய உணவை எடுத்து வந்தார்.

அன்று மதியம் மெஹர்தாஸ் மற்றும் பிற அன்பர்கள் பல நகைச்சுவை ஓரங்க நாடகத்தை நிகழ்த்தினர். முதலாவதாக, விஷ்ணு பகவானின் தீவிர பக்தரான பிரஹலாதனைப் பற்றியது, அவர் விஷ்ணு மீது வைத்திருந்த நம்பிக்கைக்காக, கொடூரமான அரசனாக இருந்த அவரது தந்தையால் சித்திரவதை செய்யப்பட்டார். இரண்டாவது நாடகத்தில், காக்கா ஒரு செல்வந்தராகவும், புக்கார் அவரது தடித்த மனைவியாகவும் நடித்தனர். மூன்றாவது நாடகம் பொய்யும் போலியுமான ஒரு சாதுவைப் பற்றியது. பாபா அனைத்து நிகழ்ச்சிகளையும் ரசித்தார்; காக்காவின் போலி மீசை கீழே விழுந்ததும், அமைதியாக அதை எடுத்து மீண்டும் ஒட்டிக்கொண்டது அனைத்திலும் சிறந்த அம்சமாக இருந்தது.

ஹமிர்பூரிலிருந்து வந்த மாத்ர தத்தா ஷாஸ்திரி (MATRA DUTTA SHASTRI) 'திவ்ய லீலை'யின் (DIVYA LEELA) அச்சிடப்பட்ட பிரதிகளை பாபாவின் பாதங்களில் சமர்ப்பித்தார். ராஜா கேரும் (RAJA KHER) வந்திருந்தார், பாபா இருவரையும் நாள் முழுவதும் மெஹராஸாத்தில் இருக்கச் செய்தார். அவர்கள் அடுத்த நாளும் ஹோமா தாதாசாஞ்சியுடன் வந்தனர். பாபா, பிப்ரவரி 26ஆம் தேதி அஹமதுநகர் மையத்தில் தனது பிறந்தநாளை சிறப்பிப்பதற்காக உழைத்த அனைவரையும் ஆரத்தழுவினார்.

பாபாவிடமிருந்து கீழ்வரும் 'பிறந்தநாள் செய்தி' உலகம் முழுவதும் வாழும் அவரது அன்பர்களுக்கு அனுப்பப்பட்டது: **"உண்மையான அன்பன் கடவுளுக்காக உயிரைத் துறக்கும் தருணத்தில் மட்டுமே பிறக்கிறான்."**

முன்னதாக, பிப்ரவரி 20ஆம் தேதி, பாபா, மும்பை மையத்திற்கு இந்தச் செய்தியை வழங்கினார்: **"ஒருவர், கடவுளின் தெய்வீக சித்தத்திற்கு முற்றிலுமாக அடிபணிந்து இருந்தால், அனைத்து சேவை, தியாகம், தனிமைப்படுத்தல், இறை நாட்டம், சரணடைதல் ஆகியவை கடவுள் மீதான ஒருவரின் அன்பைக் குறிக்கும்."**

கொல்கத்தா குழுவிற்கு, அவர் கீழ்வரும் செய்தியை அனுப்பினார்: **"என் இறை வார்த்தைகளின் வார்த்தையைக் கேட்க எனது மௌனத்தில் அனைத்து ஒலிகளையும் மூழ்கடிக்கவும்."**

அன்று, பாபாவின் விருப்பத்திற்கிணங்க, கொவ்வூரில் அமைந்த ஆந்திர கோவிலான மெஹர்ஸ்தானின் (MEHERSTHAN) அடிக்கல்லை தனபதி நாட்டினார். இந்தக் கோவிலில் பாபாவின் பெரிய அளவிலான வெண்கல சிலை ஒன்று வைக்கப்பட்டிருந்தது. பாபா, கோடூரி கிருஷ்ணா ராவிற்கு இந்தச் செய்தியை அனுப்பி வைத்தார்: **"உங்கள் அன்பின் கோவிலுக்கு நீங்கள் அடிக்கல் நாட்டும்போது நான் உங்களுடன் இருந்தேன்."**

அனில் ஸர்க்கார் (ANIL SARKAR) ஜனவரி மாதம் மெஹராஸாத்திற்குச் சென்றபோது விபத்தில் சிக்கி அவரது கால் உடைந்தது. பிப்ரவரி 25 அன்று, பாபா அவருக்கு இந்தத் தொலைத்தந்தியை அனுப்பினார்: **"அனில் ஸர்க்கார் எனது எல்லையற்ற துன்பத்தில் ஒரு பகுதியை பகிர்ந்து கொள்கிறார் என்பதை நினைத்து அகமகிழட்டும், அதற்காக நான் இன்றும், என்றென்றும் மனித ரூபத்தில் பிறவி எடுக்கிறேன்."**

சில மாதங்களுக்குப் பின்னர், அவரது மனைவி ரமா ஸர்க்கார், கணவர் அனில் இரத்த நச்சூட்டம் காரணமாக, உடல் வலியால் அவதிப்படும் வேளையில், அவரை பாபா அதிலிருந்து விடுவிக்காததால், வன்சொற்களால் அவர், பாபாவை வசைபாடுவதாகத் தெரிவித்தார். தொலைத்தந்தி மூலமாக பாபா, ரமா ஸர்க்காருக்குக் கீழ்வரும் பதிலை அனுப்பினார்: **"எனது பாசாங்குத்தனமான அபிமானிகளின் புகழைக் காட்டிலும், என் அன்பர்கள் என்னை வசைபாடுவது இனிமையானது."**

இதற்கிடையில், பாபாவின் உத்தரவின்படி, பிளீடர், கீழ் மெஹராபாத்தில் மண்டபத்திற்கு அருகில் அமைந்த பெண்டுவின் பழைய அறையில் தங்க வைக்கப்பட்டார். அவரது உடல்நிலை மிகவும் மோசமாக இருந்தது. 1960 பிப்ரவரி 26 வெள்ளிக்கிழமை மதியம் 1:00 மணிக்கு, அவர் அங்கிருந்த சேவகரிடம் கூறினார், "விளக்கை அணையுங்கள்; இங்கே மிகவும் பிரகாசமாக இருக்கிறது!"

ஷாபூர் அவரிடம், "இது பகல் நேரம்; இங்கு விளக்கு எதுவும் எரியவில்லை" என்றார்.

ஆனால் பிளீடர் புகார் கூறினார், "அங்கே பிரகாசமான விளக்கு ஒன்று எரிகிறது! அது மிகவும் பிரகாசமாக உள்ளது!"

ஷாபூர் உடனே, "உங்களுக்கு தரிசனம் வழங்குவது பற்றி பாபா கூறியதை நினைவில் கொள்கிறீர்களா? ஒருவேளை நீங்கள் அவருடைய பிரகாசத்தைப் பார்க்கிறீர்கள்" என்று நினைவுபடுத்தினார்.

அப்போது பிளீடர் கூறினார், "நான் பாபாவின் தரிசனத்தைப் பெற்றுக்கொண்டேன்! அவர் வழங்கிய வாக்குறுதியைக் காப்பாற்றினார்! இப்போது நான் என் இறுதி மூச்சு விடும்வரை என் அருகில் இருங்கள், அறையை விட்டு வெளியேறாதீர்கள். நான் என் உடலைத் துறந்த பின்பு, பாபா இங்கு வரும் வேளையில், எனது சார்பாக ஆழ்ந்த நன்றியைத் தெரிவியுங்கள் - ஏனெனில் நான் அவருடைய அருளால் இறுதி இலக்கை அடைந்தேன், அவருக்கு நான் எப்பொழுதும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன் என்று கூறுங்கள்."

அவரது கடைசி தருணங்களில், பிளீடர் எல்லையற்ற அமைதியை அனுபவிப்பது போலத் தோன்றியது. அன்று மாலை 6:45 மணிக்கு அவர் உடலைத் துறந்தார். உடனடியாக மெஹராஸாத்திற்குத் தகவலும், மும்பைக்குத் தொலைத்தந்திகளும் அனுப்பப்பட்டன. மறுநாள் பிளீடரின் சகோதரர் அர்தேஷிர், அவரது உறவினர்கள் மற்றும் சில அன்பர்கள் மெஹராபாத் வந்தனர்.

27ஆம் தேதி, ஸரோஷ் காலை 9:00 மணிக்கு ஸரோஷ் மோட்டார் ஒர்க்ஸுக்கு பாபாவை காரில் அழைத்துச் சென்று, அங்கு அவர் முன்னிலையில் ஸரோஷின் புதிய அலுவலக வளாகத்தை பாபா ஆசீர்வதித்தார். அங்கிருந்து பாபா, டிஸோட்டோவில் அமர்ந்து கீழ் மெஹராபாத்தை நோக்கிச் சென்றார்; அங்கு, பிளீடரின் உடல் ஒரு தகனப் பெட்டியில் வைக்கப்பட்டு, குஸ்தாஜியின் இறுதி உறைவிடத்திற்கு அருகில், பாதிரி தயாராக வைத்திருந்த கல்லறையில் பாபா முன்னிலையில் வைக்கப்பட்டது. பாபாவின் அறிவுறுத்தல்படி, கைக்கோபாத் ஸொராஸ்ட்ரிய பிரார்த்தனைகளை மொழிந்தார். மும்பையிலிருந்து இறுதிச் சடங்கிற்காக வந்தவர்களிடம், பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்: **"பொதுவாக, நான் உயிரைத் துறந்த ஒருவரின் அருகில் செல்வதில்லை. ஆனால் இதோ இங்கே எனது சிறப்புமிக்க நபர், இன்று நான் அவருக்கு எல்லா விதத்திலும் விடுதலை வழங்கியுள்ளேன், அவர் திரும்பி வரமாட்டார்."**

குருநாதரின் பிரார்த்தனை (MASTER'S PRAYER), மனம் வருந்தி மன்னிப்புக் கோரும் பிரார்த்தனை (REPENTANCE PRAYER) இரண்டையும் திரும்பத் திரும்ப

மொழியுமாறு பாபா அனைவரையும் கேட்டுக் கொண்டார். பிரார்த்தனையின் போது, பாபா இரு கரங்களையும் வானத்தை நோக்கி நீட்டிய வண்ணம் நின்று கொண்டிருந்தார். அதன்பின், பாபா முதலில் பிளீடரின் உடல் மீது மண்ணைத் தூவி, பூக்களையும் வீசினார். பிளீடரின் இறுதி உடல் மெஹராபாத் மண்ணோடு மண்ணாகக் கலந்தது. பாபா, அர்தேஷிரிடம், **"அவர் முக்தியை அடையப் பெறும் அளவுக்கு அதிர்ஷ்டசாலி"** என்று குறிப்பிட்டார்.

பிற்பகல் 4:00 மணியளவில் பாபா மீண்டும் மெஹராஸாத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அன்று அவர் மண்டலி மற்றும் பணியாட்களுடன் ஏழு ஓடுகள் விளையாடினார். அன்று பூனாவிலிருத்து ஜால்பாய் வந்து, அடுத்த நாள் திரும்பிச் சென்றார். பாபாவை சந்திக்க பிப்ரவரி 28, மீண்டும் மார்ச் 1ஆம் தேதி டாக்கே வந்திருந்தார். பால் நாத்து பத்து நாட்கள் தங்குவதற்காக மார்ச் 3ஆம் தேதி வந்தார்; அடுத்த நாள் மெஹர்ஜியும், மெஹர்வான் ஜெஸவாலாவும் வந்தனர். ஸர்தார் ராஸ்தே, அவரது மனைவியுடன் பிப்ரவரி 28ஆம் தேதி மெஹராஸாத்தில் பாபாவை சந்தித்தார்.

தினமும் காலையில், பாபா மண்டபத்திற்கு வரும் வேளையில், மண்டபத்தின் உள்ளே பல ஆண்டுகளாக மண்டலி தங்களுக்கென நிலையாக அமைத்துக்கொண்ட இருக்கைகளில் அமர்வது வழக்கம். பாபாவின் நாற்காலியின் வலதுபுறத்தில் மறைவாக காக்காவும், அவருக்கு அடுத்ததாக, அலோபா, கைக்கோபாத் இருவரும் அமர்ந்தனர். பைதூல், பாபாவிற்கு முன்னால் அமைந்த சுவருக்கு எதிராகவும் (மண்டபத்தின் பின்புறம்), பைதூலின் வலதுபுறம் எரச், ∴பிரான்சிஸ், பாவ் கல்சூரி, பெண்டு ஆகியோரும் அமர்ந்திருந்தனர். ஆண்கள் மாட்டு சாணத்தால் பூசப்பட்ட மண் தரையில் பருத்தி துண்டுகள் அல்லது பாய்களில் அமர்வதைப் பழக்கமாகக் கொண்டனர்.

ஒவ்வொரு நாளும் பாபா 'உண்மை செய்திகள்', ('REAL NEWS') - அவரது அன்பர்கள் அல்லது அவர்களின் குழு செயல்பாடுகளைக் குறித்து - அதைத் தொடர்ந்து ஒருவேளை 'போலி செய்திகள்' ('BOGUS NEWS') - செய்தித்தாள்கள் அல்லது சுவாரஸ்யமான பத்திரிகை கட்டுரைகளிலிருந்து கேட்பது நடைமுறையில் இருந்தது. இந்த நேரத்தில் பாபா கடிதப் பரிமாற்றத்தைத் தடை செய்திருந்தாலும், உலகம் முழுவதிலுமிருந்தும் அன்பர்கள் அவருடைய ஆலோசனையைக் கேட்டு எழுதுவதுண்டு. 'திருமணம் செய்து கொள்ளலாமா?... வெளியூர் போகலாமா?... நான் இந்தத் தொழிலைத் தொடர வேண்டுமா?... நான் சட்ட சிக்கல்களில் மாட்டிக்கொண்டு இருக்கிறேன்... எனது வணிகம் தோல்வியடைகிறது...' இப்படிப் பல.

அஞ்சல்களில் ஒரு கடிதம் அல்லது தொலைத்தந்தி மூலமாக, 'பாபா, உங்கள் அருளால் எங்களுக்கு ஒரு மகன் பிறந்தான்' என்ற மகிழ்ச்சியான செய்தி குறிப்பிடப்பட்டிருக்கும். அடுத்ததாக ஒன்று கூறலாம், 'பாபா, எங்கள் மகன் நோயிலிருந்து குணமடையாதது உங்கள் விருப்பமாக இருக்க வேண்டும், அவன் இன்று காலமானான்.' ஒரு கடிதத்தில் திருமண நிச்சயதார்த்த அறிவிப்பும்,

அடுத்த ஒன்றில் கணவன்-மனைவி கடுமையான சண்டை சச்சரவுகளில் ஈடுபடுவது குறித்த செய்தியும் இருக்கும். எரச் கூறினார்: "உலகம் வெறும் காட்சி, மாயத் தோற்றம் என்று பாபா மீண்டும் மீண்டும் சொல்வதைக் கேட்பது ஒன்றுதான், அவருக்கு ஒவ்வொரு நாளும் வந்த கடிதப் பரிமாற்றத்தின் தன்மை, உலகம் வேறு ஒன்றும் இல்லை என்று நம்மை நம்ப வைத்தது."

எரச், பாவ் கல்சூரி, மணி மற்றும் பிறர் மூலம், பாபா பதில் அனுப்புவது வழக்கமாக நடந்து வந்தது; பின்னர் ஒவ்வொரு நாளும், "**அந்த நபரிடமிருந்து ஏதாவது தகவல் வந்ததா?**" என்று கேட்டு, தொலைத்தந்திகள், தொடர்ந்து இரண்டாவது, சில நேரங்களில் மூன்றாவது கடிதமும் அனுப்பப்பட்டது. உதாரணமாக, மார்ச் மாத தொடக்கத்தில், ஸொராப்ஜி ஸிகன்போரியாவின் மகன் நோஷிர், அவரது மனைவியுடன் இரண்டு மாத வேலைப் பயிற்சிக்காக டெல்லிக்குச் செல்ல இருப்பதாக தெரிவித்து, டெல்லியில் வாழ்ந்த கேக்கி தேசாய்க்கு எல்சா கடிதம் எழுதினார். பாபா, தேசாயிடம் தம்பதியினரைத் தங்கவைக்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொண்டார், மேலும் அவர்கள் தங்குவதற்கும் உணவிற்கும் மாதம் ரூ.150 செலுத்துமாறு பாபா, நோஷிரிடம் கூறினார். டில்லியில் வாழும் பிற அன்பர்களுக்குக் கடிதம் எழுதி, தம்பதியினருக்கு வழிகாட்டவும், அப்பகுதியில் வாழ்ந்த இதர பாபா அன்பர்களுக்கு அவர்களை அறிமுகப்படுத்தவும் அறிவுறுத்தினார்.

ஒரு வாரமானபோதிலும் கேக்கி தேசாயிடமிருந்து எந்த பதிலும் வராததால், பாபா நடந்ததை நினைத்து கவலையடைந்ததாகத் தோன்றியது. பத்து நாட்களுக்குப் பின்னர், அவருக்கு ஒரு தொலைத்தந்தி அனுப்பப்பட்டது. மேலும் பல கடிதங்கள் பரிமாறப்பட்டன. பாபாவின் நாட்களை முழுமையாக நிரப்பிய மற்றும் அவரது நேரத்தை வெளிப்படையாக ஆக்கிரமித்த சிறிய சிறிய விஷயங்களுக்கு இது ஒரு பொதுவான உதாரணம்.

பாபா அவ்வப்போது பல்வேறு நபர்களின் ஆதரவுக்காக ஏற்பாடு செய்வது வழக்கமாக நடந்த ஒன்று. அவர் ஸரோஷ் அல்லது நரிமனிடம், "**அடுத்த ஆறு மாதங்களுக்கு, ஒரு குறிப்பிட்ட நபருக்கு மாதம் ரூ.100 வழங்குங்கள்**" என்று கூறியதும் அல்லது டாக்டர் கோஹெருக்குச் செய்தது போல் ஒருவரின் கல்விக்கு ஏற்பாடு செய்ததும் அல்லது லதா லிமாயேக்கு இசைப்பயிற்சிக்கான பாடம் நடத்த உதவியதையும் எடுத்துக்காட்டாக எடுத்துரைக்கலாம். மேற்படிப்புக்காக எவரேனும் வெளிநாட்டிற்குச் சென்றால், அந்த நாட்டில் வாழும் அன்பர்களுக்கு, அவர்களை கவனித்துக் கொள்ளுமாறு (உதாரணமாக, அமெரிக்கா சென்ற திகம்பர் காடேக்கர், தாதி கேரவாலா மற்றும் நாஜு கொத்வால் போன்றவர்கள்) அறிவுறுத்தல்களுடன் எழுதுவதும் வழக்கம். இது தவிர, பாபா தனது நெருங்கிய அன்பர்கள் அருகில் அல்லது தொலைவில் இருந்தாலும் அவர்களுக்கு பிறந்தநாள் அட்டை அல்லது தொலைத்தந்தி அனுப்புவதை எப்பொழுதும் நினைவில் கொள்வது வழக்கம் (டாக்கே, தூன் ஸட்டா அல்லது கல்சூரி குடும்பத்தினர், இங்கிலாந்தில் வாழும் டிலியா டிலியோன் அல்லது

அமெரிக்காவில் வாழும் கிட்டி டேவி போன்ற பலர்). இதனால், அனைவரின் பிரியமான பாபாவிற்கு, ஒரு கணமும் ஓய்வு என்பதே இல்லை.

பாபா, குருபிரசாத்திற்குப் புறப்படுவதற்கு முன்பு, குஷ்ரு குவார்ட்டர்ஸில் தரிசன நிகழ்ச்சி ஒன்றை வழங்க ஆதி பரிந்துரைத்தார், அதற்கு பாபா ஒப்புக்கொண்டார். 1960 மார்ச் 6ஆம் தேதி தரிசன நிகழ்ச்சி திட்டமிடப்பட்டு, வளாகத்தில் ஷாமியானா அமைக்கப்பட்டது. இதற்காக வந்திருந்த நவ்ஸாரி குழுவை, பாபா, முந்தையநாள் மெஹராஸாத்திற்கு அழைத்தார். பல புதியவர்கள் குழுவில் இருந்தனர். அவர்களில் ஹோஷங் பரூச்சாவின் சகோதரர் மர்ஸ்பானிடம் (MARZBAN) பாபா கேட்டார், **"என்னை என்வென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?"**

பாபா அன்பர்களில் ஒருவராக இல்லாத மர்ஸ்பான், "ஓர் ஏமாற்றுப் பேர்வழி!" என்று வெளிப்படையாக பதிலளித்தார்.

பாபா சிரித்துக்கொண்டே கூறினார், **"நான் கடவுள், ஏமாற்றுப் பேர்வழி மட்டுமின்றி இடையில் உள்ள எல்லாமும் நான்தான். உங்கள் வெளிப்படையான கருத்தை நீங்கள் எனக்கு வழங்கியதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.**

"என்னை நேசிக்கிறீர்களா?" அப்போது பாபா கேட்டார்.

"நேசிப்பது என்றால் என்ன என்று எனக்குத் தெரியாது," என்று மர்ஸ்பான் பதிலளித்தார். ஆனால் இதற்குப் பின்னர், அவர் கண்கலங்கி அழ ஆரம்பித்தார், பாபாவை விட்டு வெளியேற விரும்பவில்லை. பாபா அவரை அழைத்து பலமுறை தழுவினார். மர்ஸ்பான் மனதில் அன்று முதல் மாபெரும் மாற்றம் ஏற்படவே, பாபாவின் தீவிர அன்பராக மாறினார்.

அவர் மீது உறுதியான நம்பிக்கை கொண்டவர்கள், ஒருபோதும் கவலைப்பட காரணம் எதுவும் இல்லை என்று பாபா சுட்டிக்காட்டினார்: **"கவலை என்ற கேள்வியே எழாது."** சமீபத்தில் நடந்த பிறந்தநாள் விழா குறித்து, **"இந்த நாட்டிலும், மேற்கிலும் உற்சாகமாகக் கொண்டாடப்பட்ட எனது பிறந்தநாளைப் பார்க்கும்போது, அதுவே கடைசியாக இருக்கும் என எண்ணுகிறேன்"** என்று நகைச்சுவையாகக் கூறினார்.

1960 மார்ச் 6 அன்று குஷ்ரு குவார்ட்டர்ஸில் பொது தரிசனம் அதிகாலையிலிருந்து மதியம் 2:00 மணி வரை நடைபெற்றது; கிட்டத்தட்ட 8,500 பேர் அவரது தரிசனத்தைப் பெற்றுக்கொண்டனர். மும்பை, பூனா, ஹமிர்பூர், நாசிக், ஸூரத், பத்தார்டி மற்றும் கொல்கத்தா போன்ற தொலைதூர இடங்களிலிருந்து வந்திருந்த பலருக்கு, ஷாமியானாவின் கீழ் அமர்ந்து பாபா பிரசாதம் வழங்கிய வேளையில், அஹமதுநகர் பஜனைக் குழுவினரின் இசை நிகழ்ச்சி தொடர்ந்து நடந்தது.

பரோடா மஹாராணி மற்றும் பிரபல இந்திய கிரிக்கெட் வீரரான நரி காண்டிராக்டரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். மெஹராஸாத்திலிருந்து பெண் மண்டலியையும் பாபா அழைத்து வந்திருந்தார், அவர்கள் திரைக்குப்

பின்னால் இருந்து நடவடிக்கைகளைப் பார்த்தனர். அவர்களுக்கும் பாபாவிற்கும் மதிய உணவு தயார் செய்யப்பட்டது, ஆனால் பாபாவிற்கு உணவு உண்ண நேரம் இல்லாததால், அது மெஹராஸாத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

கொவ்வூரைச் சேர்ந்த ஆலா சதிராஜு, அவரது தீவிரமான உடல்நிலை காரணமாக, அறுவை சிகிச்சை செய்ய இருப்பதாக பாபாவிற்குத் தொலைதந்தி அனுப்பினார். மார்ச் 8ஆம் தேதி, பாபா இந்த பதிலை அனுப்பிவைத்தார்: **"என் மீதான உங்களின் அளப்பரிய அன்பைத் தவிர, வேறு எதுவும் தீவிரமாக இருக்க முடியாது."**

மார்ச் 9 காலை 7:30 மணிக்கு, பாபா ஒரு சிறிய 'ஏழை நிகழ்ச்சி'க்காக மெஹராபாத் செல்லும் வழியில், சிறிது நேரம் குஷ்ரு குவார்ட்டர்ஸுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். மெஹராபாத் மண்டபத்தின் பின்பக்க வராண்டாவில் 14 ஏழைகளைத் தயார் நிலையில் வைத்திருக்குமாறு பாதிரிக்கு அறிவுறுத்தப்பட்டது. கிராமவாசிகள் ஒவ்வொருவரின் கால்களையும் கழுவுவதற்காக அழைக்கப்பட்ட ஏழைகளை வராண்டாவில் நிற்கச் செய்து, பாபா தரையில் நின்ற வண்ணம் அவர்களின் கால்களைக் கழுவி, தலைவணங்கி ஒவ்வொருவருக்கும் நான்கு ரூபாயை வழங்கினார். இந்த நேரத்தில் மெஹராபாத்தில் தங்கியிருந்த கைக்கோபாத் அறிவுறுத்தியதற்கு இணங்க நிகழ்ச்சிக்கு வந்திருந்தார். பாபா சுமார் 10:30 மணியளவில் மெஹராஸாத் திரும்பிச் சென்றார்.

சில நாட்களுக்கு முன்பு, மார்ச் 3ஆம் தேதி, பாபாவின் பாதங்கள் வீங்கத் தொடங்கின; 7ஆம் தேதி அவருக்கு ஜுரம், உடல் வலி, முகம், கால்கள் இரண்டும் வீங்கி இருந்தது. பாதிரி சில ஹோமியோபதி மருந்துகளை அவருக்கு வழங்கினார், ஆனால் வீக்கம் சில நாட்கள் நீடித்தது. திடீரென ஒரு வாரத்தில், 14ஆம் தேதிக்குள், பாபாவின் உடல் நிலை சீரானது. கடந்த 6ஆம் தேதி நிகழ்ந்த தரிசனத்தால் விளைந்த சிரமத்தைத் தவிர, அவருக்கு ஏற்பட்ட நோய்க்கு எந்த விளக்கமும் இல்லை.

மார்ச் 14 அன்று, கைக்கோபாத் ஒரு மணி நேர பிரார்த்தனை நிகழ்ச்சிக்காக மெஹராஸாத்திற்கு அழைக்கப்பட்டார். பாபா மண்டலியுடன் பூனாவிற்குப் புறப்படுவதற்கு முன்னர், எரச், பூனா சென்று வழக்கம்போல பிந்த்ரா ஹவுஸில் தனது குடும்பத்துடன் சில நாட்களைக் கழித்தார்.

காக்கா பாரியா, கைக்கோபாத் இருவரையும் தவிர அனைத்து மெஹராஸாத் மண்டலியும் பூனாவில் பாபாவுடன் இணைய வேண்டும். மூன்று மாதங்கள் பாபா பூனாவில் இருந்த காலத்தில் காக்கா அதன் பராமரிப்பாளராக மெஹராஸாத்திலும், கைக்கோபாத் தனது குடும்பத்தினருடன் மெஹராபாத்திலும் தொடர்ந்து தங்கிவந்தனர்.

அந்த ஆண்டு, அலோபாவும் மெஹராஸாத்தில் செய்யப்பட வேண்டிய பெரிய பழுதுபார்க்கும் பணிகளை மேற்பார்வையிட காக்காவிற்கு உதவியாக இருந்தார். எரச்சின் மாமா, ஹோமி மாமா ஸட்டாவும் உதவிக்காக

அழைக்கப்படவே, பாபா இல்லாத நேரத்தில் மெஹராஸாத்தில் தங்கினார். ஹாரி கென்மோர், மண்டலி மண்டபம் - ஒரு காலத்தில் எலிஸபெத்தின் கார் கேரேஜாகவும், பின்பு, குட்டிக்குதிரை ஷெபாவுக்காக பயன்படுத்தப்பட்ட குதிரைக் கொட்டிலாகவும் இருந்ததால் - மிகவும் சீரான முறையில் கல் மற்றும் சிமென்ட் தரையைக் கொண்டிருக்க வேண்டும் என்று பரிந்துரைத்தார். இதன் மூலம் பாபா ஒரு மென்மையான மேற்பரப்பில், கூடத்தில் மேலும் கீழும் நடந்து, அதிக உடற்பயிற்சியில் ஈடுபட முடியும். பாபா இல்லாத வேளையில் இந்தப் புதிய தரையை அமைப்பது முக்கிய பணியாக இருந்தது.

மெஹர் பாபா, குருபிரசாத், பூனா, **1960**
(MEHER BABA, GURUPRASAD, POONA, 1960)

குருபிரசாத் தரிசனம்

(**Darshan At Guruprasad**)

1960 மார்ச் **20** 'குருத்தோலை ஞாயிறு' (PALM SUNDAY) அன்று காலை **8:00** மணியளவில், பாபா பெண் மற்றும் ஆண் மண்டலியுடன் (எல்சா மிஸ்திரி உட்பட) மெஹராஸாத்திலிருந்து புறப்பட்டு, மூன்று மணி நேரத்தில் குருபிரசாத்தை வந்தடைந்தார். பாபா, தமது அஹமதுநகர் அன்பர்களை ஸரோஷ் மோட்டார் ஒர்க்ஸில் காத்திருக்குமாறு கூறி, பூனாவிற்குச் செல்லும் வழியில் அவர்களை சந்தித்தார். பாபா, அஹமதுநகர் மாவட்ட ஆட்சியாளர் எஸ்.பி. காஸியை (S.B. KAZI), குஷ்ரு குவார்ட்டர்ஸில் சந்தித்தார். பாபா பூனாவை வந்தடையும் வேளையில் அன்பர்கள் எவரும் சாலையோரம் காத்திருக்க வேண்டாம் என்று அவர்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டது, அனைவரும் அவரது விருப்பத்திற்குக் கீழ்ப்படிவதாக உறுதியளித்தனர். ஆனால், பாபா வந்த வேளையில், சத்தாராவின் எம்.ஜே. ரங்கோலே (M.J. RANGOLE) மற்றும் அவரது மனைவி கைகளில் ஒரு குழந்தையை ஏந்திய வண்ணம் வாயில்களுக்கு அருகில் நின்று கொண்டிருந்தனர். முந்தைய ஆண்டு, தம்பதியினர் பாபாவை அணுகியபோது, மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியிருந்தனர், அவரது மனைவிக்கு குழந்தை பாக்கியம் இல்லாததால் சமூகத்தில் சிரமமான சூழ்நிலையை சந்திக்க வேண்டியதை எடுத்துரைத்த வேளையில், 'கவலைப்பட வேண்டாம், அவர் அதைப் பார்த்துக்கொள்வதாக' இருவருக்கும் உறுதியளித்தார். இதனால் தம்பதிகள் தங்கள் நன்றியைத் தெரிவிக்க வந்திருந்தனர்.

பாபா தனது தலைமை பூனா சேவகர்களை சந்தித்தார். ஒரு மணி நேரத்திற்கு பிறகு, ஹாரி டெடோல்சொவும் (HARRY DEDOLCHOW), கொல்கத்தாவிலிருந்து முதிய வழக்கறிஞர் அமியா காந்தி தாஸும் (AMIYA KANTI DAS) வந்தனர். அமியா தாஸ் **1931** முதல் பாபாவின் தரிசனத்திற்காக ஏங்கிக்கொண்டிருந்தார், ஆனால் ஏதோ காரணத்திற்காக அது ஒருபோதும் நிறைவேறாமலே இருந்தது. பாபா அவரை முதன்முதலாகத் தழுவியபோது, முதியவர் கண்கலங்கி அழுதார்.

டெடோல்சொவ், பாபாவிற்கும் மண்டலிக்கும் ஒரு பெட்டி நிரம்ப பரிசுகளை கொண்டு வந்திருந்தார். பாபா, "**இதற்குத் தேவையில்லை. எனக்கு வேண்டியது உங்கள் அன்பு மட்டுமே**" என்று குறிப்பிட்டார்.

அமியா தாஸும் சில பரிசுகளை கொண்டு வந்ததாக பாபாவிடம் டெடோல்சொவ் தெரிவித்தார். பாபா முகம் சுளித்துக்கொண்டே தொடர்ந்தார், "**பாபாவிற்கு, அன்பர்களின் அன்பைத் தவிர வேறு எதுவும் தேவையில்லை. நீங்கள் செய்வதை நான் பாராட்டுகிறேன்; உங்களில் உள்ள அன்புதான் உங்கள் செயல்களை கட்டாயப்படுத்துகிறது என்பதை நான் அறிவேன். ஆனால் இவை அனைத்தும் எனக்கு மாயை. அன்பு ஒன்றுதான் உண்மையானது.**"

பாபா அவர்களைத் தழுவி, டெடோல்சொவிடம் அவரது சிரமங்களைப் பற்றி வினவினார், மேலும் அவர் வணிகக் கடற்படையில் ஒரு கடற்படை சேவகராக, கடல் வாழ்க்கையின் கடுமையை விவரித்தார். அவர் ஒருபுறம் தனது தூய்மையற்ற எண்ணங்களுக்கும் செயல்களுக்கும் இடையே தனக்குள்ளேயே உணர்ந்த பிரிவினை பற்றியும், மறுபுறம் தனது 'தந்தை'யை (பாபாவை) நோக்கிச் செல்ல வேண்டும் என்ற அவரது தூண்டுதலைக் குறித்தும் விவரித்து, அதைச் செய்ய அவருக்கு தைரியம் இல்லை என்று கூறினார்.

பாபா, டெடோல்சொவிடம் கேட்டார்: **"உங்கள் அனைத்து மாசு படிந்த மனதுடன் என்னிடம் வர ஏன் அஞ்சுகிறீர்கள்? இந்த தெய்வீக மஹா சமுத்திரத்தைத் தவிர வேறு எங்கு உங்கள் அசுத்தங்களைக் களையப் போகிறீர்கள்? அனைத்தையும் இந்த 'சமுத்திரத்தில்' வீசி எறியுங்கள்! அவற்றை என்னிடம் கொடுத்து சுதந்திரமாக இருங்கள். நல்லது, தீயது இரண்டையும் என்னிடம் சமர்ப்பணம் செய்வதன் மூலம், யார் வேண்டுமானாலும் சுதந்திரமாக இருக்க முடியும், ஆனால் அது மிகவும் கடினம், லட்சக்கணக்கானவர்களில் ஒருவரால் மட்டுமே அது சாத்தியம்!**

"தீய எண்ணங்களுக்கு அஞ்ச வேண்டாம். அவை வருவதால் எந்தத் தீங்கும் இல்லை, ஆனால் அவற்றைச் செயல்படுத்த இடந்தராதீர்கள். வேண்டுமென்றே அவற்றை வரவேற்க வேண்டாம். ஒரு மனிதன் எப்போதேனும் விஷம் அருந்த நினைத்தால், அவனுக்கு எதுவும் ஆகாது, ஆனால் அவன் அதை தொடர்ந்து நினைப்பதானால், அவன் விஷத்தை விழுங்கும் காலம் விரைவில் வரலாம்.

இந்தக் 'கற்பனை'யால் உருவான படைப்பைப் பற்றி பாபா பின்பு டெடோல்சொவிற்கு விளக்கினார்: **"உங்கள் கண்களை மூடிக்கொண்டு பத்துத் தலை யானையை கற்பனை செய்து பாருங்கள்.** (டெடோல்சோவ் அவ்வாறு செய்தார்.) **இப்போது நீங்கள் கண்களைத் திறக்கும்போது அந்த உருவம் இல்லாமல் போகிறது. கற்பனை செய்வதன் மூலம், நீங்கள் பத்துத்-தலைகளை உருவாக்கினீர்கள். மேலும் உங்கள் அதே கற்பனையால் அதிலிருந்து விடுபட்டீர்கள். இவ்வாறு பத்துத் தலை யானையை கற்பனையில் உருவாக்கியவர் நீங்கள். கற்பனை செய்யும் வரை மட்டுமே யானையின் உருவம் நீடித்தது. கற்பனை செய்து கொண்டே செல்லும் வரை கற்பனையைப் பேணி பாதுகாக்கிறீர்கள். அதேபோல், இந்த முழுப் படைப்பும் மனதின் விளைவு. 'படைப்பது, காப்பது, அழிப்பது' என்பது மனதின் நாடகம்!"**

அன்பைப் பற்றி விளக்கிய பாபா, **"உங்களுக்கு நீச்சல் தெரியுமா?"** என்று டெடோல்சொவிடம் கேட்டார்.

டெடோல்சொவ், "என்னால் நீந்த முடியும் ஆனால் என்னால் நன்றாக மிதக்க முடியும்" என்றார்.

"நீங்கள் கடற்படையில் இருக்கிறீர்கள், மாலுமி, உங்களுக்கு நீச்சல் தெரியாதா? உங்கள் கப்பல் மூழ்கினால் என்ன செய்வீர்கள்?"

டெடோல்சொவ், "நான் மிதந்து கொண்டே இருப்பேன், என்னைக் கரைக்கு வழிநடத்த நீங்கள் இருக்கிறீர்கள்" என்றார்.

பாபா பதிலளித்தார், **"நீங்கள் தலைகீழ் குதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்! இறை அன்பின் கடலில் மூழ்குவது எப்படி என்று உங்களுக்குத் தெரியாவிட்டால், நீங்கள் எவ்வாறு கடலின் அடிமட்டத்தை அடைந்து முத்தைக் கண்டுகொள்வீர்கள்? இறை அன்பின் கடலில் மூழ்கி இருப்பவராக இருங்கள், நீங்கள் அப்போது 'பாபா எனும் முத்தை' கண்டுகொள்வீர்கள்!"**

டெடோல்சொவ் பாபாவை 'தந்தை' (FATHER) என்று அழைப்பது வழக்கம். **"நீங்கள் என்னை 'தந்தையே!' என்று அழைக்கும் போதெல்லாம் எனக்கு எனது முதுமை நினைவுக்கு வருகிறது. எனவே, என்னை 'பாபா' என்று அழைக்கவும். நான் ஆதிகாலத்தவன், நீங்கள் என்னை 'பாபா' என்று அழைத்தால், எனக்கு எனது முதுமை ஞாபகம் வராது"** என்று பாபா கேலி செய்தார்.

டெடோல்சொவ், அமியா தாஸ் இருவரும் மறுநாள் பல்வேறு பூனா சேவகர்களுடன் பாபாவை சந்தித்தனர். ஏறக்குறைய 60 பேர் ஒன்றுதிரண்டனர். ஒரு கட்டத்தில் ஒரு தாய் தனது கைக்குழந்தையைக் கைகளில் ஏந்திய வண்ணம் பாபாவை அணுகினார். குழந்தை அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தது, ஆனால் பாபா அதைக் கைகளில் எடுக்க விரும்பியதால், தாய், குழந்தையை பாபாவின் கைகளில் கொடுத்தார்; பாபா அதை விழிக்க வைக்கும் முயற்சியில் அதன் கன்னங்களை வருடத் தொடங்கினார். குழந்தை அழுவதற்குப் பதிலாக, கண் இமைகளை மூடாமல் பாபாவை உற்றுப் பார்த்துக்கொண்டே இருந்தது. இறுதியாக, தாய், பாபாவின் கைகளிலிருந்து குழந்தையை எடுத்த அந்த கணத்தில் குழந்தை அழ ஆரம்பித்தது!

பாபா ஓர் உரையை ஆரம்பித்த போது, தாஸ் குறிப்புகள் எடுக்கத் தொடங்கினார். பாபா அவரை நிறுத்துமாறு சைகையால் தெரிவித்தார்; அப்போது அவர் எந்தக் குறிப்புகள் எடுப்பதையும் விரும்பவில்லை. காலை சந்திப்பிற்குப் பிறகு, டெடோல்சொவ், தாஸ், ஜால்பாய் ஆகியோர் மதிய உணவிற்காக வெளியே சென்று, பின்னர் ஒரு மணி வரை மிருகக்காட்சிசாலைக்குச் சென்றனர், அதைத் தொடர்ந்து அவர்கள் பாபாவுடன் மதிய சந்திப்பிற்காக குருபிரசாத் திரும்ப இருந்தனர்.

மிருகக்காட்சிசாலையில் இருந்த வேளையில், ஜால்பாய், ஹாரி டெடோல்சொவிடம், "அடுத்த முறை நீங்கள் பாபாவை சந்திக்க வரும்போது, விலை குறைந்த வானொலி டிரான்ஸிஸ்டர் ஒன்றை, சுமார் $20, எனக்காக வாங்கி வருவீர்களா?" என்று கேட்டார்.

டெடோல்சொவ் உடனே, "ஒரு பிரச்சினையும் இல்லை, ஜால். நான் உங்களுக்கு அதைவிட நல்லதாக வாங்கி வருகிறேன். இருப்பினும், பாபா அதற்கு இணக்கம் தெரிவித்தால் மட்டுமே" என்றார்.

ஜால்பாய், “எனக்கு பாபாவின் வழிகளும் முறைகளும் தெரியும். குருபிரசாத்திற்குத் திரும்பியதும், நான் அவரிடம் கேட்பேன்” என்று பதிலளித்தார்.

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு, மூவரும் வந்த வேளையில், பாபாவுடனான அன்பர்களின் சந்திப்பு ஏற்கனவே நடந்து கொண்டிருந்தது. டெடோல்சொவ் விரைவாக தனது காலணிகளை கழற்றிவிட்டு அறைக்குள் நுழைந்தார். பாபா அவரைப் பார்த்து, **“பிரதான ஒலி பரப்புக் கருவியும், ஒலி வாங்கியும் நானே! ‘எனக்கு இது வேண்டும், எனக்கு இதைக் கொண்டு வரவும் இது போன்ற வணிகம் - இந்த அபிலாஷைகளிலிருந்து விலகி இருந்து, ‘எனக்கு பாபா வேண்டும், எனக்கு கடவுள் வேண்டும்’ என்று சொல்ல முயற்சிக்கவும். இது எளிதானது அல்ல, ஆனால் முயற்சி செய்யுங்கள்.”**

கூட்டம் நிறைவடைந்ததும், டெடோல்சொவ், பாபாவை அணுகி, ஜால்பாயின் கோரிக்கையைப் பற்றி அவரிடம் கூறினார், “உங்கள் வழிகள் அவருக்குத் தெரியும் என்று ஜால் கூறினார்...”

“எனது வழிகள் எவருக்கும் தெரியாது” என்று பாபா பதிலளித்தார், மேலும் ஜால்பாய்க்கு வானொலியை வாங்கி வர டெடோல்சொவை அனுமதிக்கவில்லை.

ஹாரி டெடோல்சொவ், அமியா தாஸ் இருவரும் புறப்படும்போது, பாபா, ஹாரியிடம், **“அனைத்தும் நான் அறிவேன். எப்படி எனக்குத் தெரியும் என்று உங்களுக்குத் தெரியுமா?”** என வினவினார்.

ஹாரி ‘இல்லை’ என்று கூறவே, பாபா அவருக்கு விளக்கிக் கூறினார்:

எல்லையற்ற சிக்கலான நிகழ்வின் தன்மை - அதாவது பிரபஞ்சம் - எல்லையற்ற அளவுக்கு எளிமையானது. ஆனால் இதை அறிந்து, புரிந்து கொள்வது எல்லையற்ற அளவுக்குக் கடினமானது. ‘உலகளாவிய மனம், உலகளாவிய சக்தி, மற்றும் உலகளாவிய உடல்’ என்றால் என்ன - மேலும் அவற்றுடன் - ‘தனிமனித மனம், தனிமனித ஆற்றல் மற்றும் தனிமனித உடல்’ இவற்றிற்கான தொடர்பு என்ன என்பதை நீங்கள் அறிந்தால், பரிபூரண குருநாதருக்கு, அனைத்தும் எப்படித் தெரியும் என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்.

தனிமனித மனதை ஒரு வானொலி நிலையத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால், வானொலி கருவிகளை வைத்துள்ளவர்கள் சரியான அலைவரிசையில் இயங்கச் செய்தால், வானொலி நிலையத்தால் ஒலிபரப்பப்படும் அனைத்தையும் கேட்க முடியும். இந்த நிகழ்வில், பரிபூரண குருநாதர் என்பவர், ஒவ்வொரு தனிமனித ஒலிபரப்பு நிலையத்துடனும் இணைக்கப்பட்ட வானொலி தொகுப்பாகும், இதன் விளைவாக ஒலிபரப்பப்படும் அனைத்தையும் அவர் கேட்க முடிகிறது.

எனது உலகளாவிய சரீரத்தில், படைப்பில் உள்ள எண்ணற்ற உயிரினங்கள் மற்றும் பொருட்களின் உடல்கள் உள்ளன. அதே போல், ஒவ்வொரு தனிமனிதனின் சூட்சும உடல் (சக்தி) மற்றும் ஆழ் மன உடல்

(மனம்) ஆகியவை முறையே எனது உலகளாவிய சக்தி மற்றும் உலகளாவிய மனதின் ஒரு பகுதியாகும்.

கடலில் இங்கு ஒரு துளிக்கும், அங்கு ஒரு துளிக்கும் இடையேயான எல்லையற்ற தூரம், கடலுடனான துளியின் உறவில் எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்தாது. எந்த ஒரு துளியும் கடலின் எந்த ஓர் இடத்தில் இருந்தாலும், அது கடலின் முழுமையிலும் ஒருமைப்பாட்டிலும் உளதாயிருக்கும்.

உலகளாவிய மனம் எனும் கடலில், ஒரு தனிமனித (துளி) மனம் என்ன நினைக்கிறது என்பது வேறொரு தனிமனித மனதிற்குத் தெரியாது, ஆனால் தனிமனித மனங்கள், உலகளாவிய மனதின் பிரிக்க முடியாத பாகமாக இருப்பதால், உலகளாவிய மனம் அதை உடனடியாக அறிந்து கொள்கிறது.

இந்தப் பரந்து விரிந்த, அனைத்தையும் உள்ளடக்கிய இறை ஞானம், பளிச்சிடும் ஒரு நொடிப்பொழுதில் அடையப் பெறப்படுகிறது. ஆனால் அனைத்தையும் ஒரு நொடிப்பொழுதில் அறிந்துகொள்வதற்கு, உங்கள் சுயத்தைப் படிப்படியாக இழக்கும் அதே நேரத்தில், காலத்தின் மாயையில் என்றென்றும் நிலைத்திருக்கும், நித்தியம் எனும் முடிவில்லாத காலம் தேவை. உங்கள் சுயத்தை இழப்பது என்பது, உங்களைக் கடவுளாகக் கண்டறிய, கடவுளில் உங்களை முழுமையாக இழப்பதாகும்.

உங்களின் பொய்யும் போலியுமான சுயத்திற்கு, இறப்பது என்பது எளிதான காரியமல்ல; இத்துடன் ஒப்பிடுகையில், பிணத்தை உயிர்த்தெழச் செய்வது என்பது குழந்தையின் விளையாட்டு. ஆனால் ஒருமுறை இந்த 'சாத்தியமற்றதை' அடையப்பெற்றதும், சாத்தியமற்றது என்று எதுவும் இல்லை.

அன்று மதியம் பிந்த்ரா ஹவுஸிற்கு ஹாரி டெடோல்சொவ், அமியா தாஸ் இருவரையும் தன்னுடன் செல்ல பாபா அனுமதித்தார். பின்னர் அவர்கள் கொல்கத்தா திரும்பிச் சென்றனர். இருவரும் புறப்படும் வேளையில், பாபா அவர்களிடம் வலியுறுத்திக் கூறினார், **"பாபாவை உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள்."**

பாபா அடுத்த மூன்று மாதங்களுக்கு குருபிரசாத்தில் தங்கியிருந்தார்; முந்தைய ஆண்டைப் போலவே, இந்தியா முழுவதிலுமிருந்து நூற்றுக்கணக்கான அன்பர்கள் 'அன்பின் கடலில் நீராட' வந்ததைக் காலம் கவனித்தது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தரிசனம் வழங்கப்பட்டது. இது தவிர, ஒவ்வொரு நாளும் சதாஷிவ் பாட்டீல், மெஹர்ஜி, ஜால்பாய், பெஹராம், அவரது மகன்கள் ஷெரூ, ருஸ்தம், ஸொராப் ஆகியோரின் வருகையால், ஒரு மகிழ்ச்சியான சூழல் நிலவியது.

ஒவ்வொரு வார இறுதியிலும் மும்பையிலிருந்து பலர் வந்தனர்; மேலும் நரிமன், ஜிம் மிஸ்திரி ஆகியோர் குருபிரசாத்தில் தங்க அனுமதிக்கப்பட்டனர். டாக்டர் தேஷ்முக் தினமும் வந்து சென்றார், பின்னர் அவரது குடும்பத்தினரும்

வந்தனர். வாரம் ஒருமுறை பூனா மையத்தின் உறுப்பினர்கள் (ராமகிருஷ்ணன், பிரதாப், தாடே, மதுசூதன், ஷிண்டே, காம்ப்ளே, போட்டே, டவ்லே மற்றும் பலர்) வந்தனர்.

மெஹர்வான் ஜெஸவாலா, ஜெஹாங்கு ஸுகத்வாலா இருவரும் அவர்களால் இயன்ற போதெல்லாம் வருவதை வழக்கமாகக் கொண்டனர் - இதனால் குருப்பிரசாத் சூழ்நிலை பரபரப்பாக இல்லாவிடிலும், எப்பொழுதும் ஓய்வுக்கு இடமின்றி மும்முரமாகவே இருந்தது. ஜெஹாங்கு 1959 டிசம்பரில் பெங்களூருக்கு இடமாற்றம் செய்யப்பட்டதால், அவரது மனைவி குல்னாருடன் அங்குச் சென்று குடியேறிய பின்னர், அவர்கள் பூனாவிற்கு எப்படித் திரும்பி வந்தார்கள் என்பதை ஜெஹாங்கு விவரிக்கிறார்:

1959ஆம் ஆண்டில் விமானப்படையிலிருந்து எனக்கு இடமாற்ற உத்தரவு கிடைத்ததும், குல்னாரும் நானும், அன்பான பாபாவிடம் எங்களின் தயக்கத்தை தெரிவித்து, பூனாவில் தங்கி, தொடர்ந்து பணியாற்ற விரும்புவதாகத் தெரிவித்தோம். பாபா எங்கள் இருவரிடமும், **"மகிழ்ச்சியுடன் பெங்களூர் சென்று, என்னையும் உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள். எனது பார்வை உங்கள் இருவரிடமும் உள்ளது"** என்று கூறினார். நாங்கள் பெங்களூருக்குச் செல்வதற்கு முன்னர், 'இறைவனுடன் இணைந்திருங்கள்' (STAY WITH GOD) புத்தகத்தின் பிரதி ஒன்றை பாபா கையொப்பமிட்டு எங்களுக்குக் கொடுத்தார்.

நிலைமை சாதகமாக இல்லாததாலும், பூனாவிற்குத் திரும்பி வர நாங்கள் முழு முனைப்புடன் முயற்சித்ததாலும், பெங்களூரில் தங்குவது மிகவும் அசௌகரியமாக இருந்தது. எனது பணியை ராஜினாமா செய்ய அனுமதி கோரி பாபாவிற்குத் தொலைத்தந்தி அனுப்பினேன். பாபா இந்த பதிலை அனுப்பியிருந்தார்: **"ராஜினாமா செய்ய வேண்டாம். அனைத்தையும் என்னிடம் விட்டு விடுங்கள்."**

ஆச்சரியமளிக்கும் விதத்தில் மூன்று மாதங்களில் பூனாவிற்குத் திரும்பி வந்தோம். 1960 ஏப்ரலில் நான் குருபிரசாத்தில் பாபாவை சந்தித்தபோது, பூனாவில் என்னைப் பார்த்ததில் மகிழ்ச்சி அடைந்த அவர், **"கடவுளின் விருப்பம் வென்றுவிட்டது"** என்று குறிப்பிட்டார்.

நான் பாபாவிடம், "ஆம் பாபா, உங்கள் விருப்பம் வென்றுவிட்டது" என்று கூறினேன்.

குருபிரசாத் மண்டலி மண்டபத்தில் தமக்கு முன் அமர்ந்திருந்த அனைவரையும், கைகளை அசைத்து, சுட்டிக்காட்டி பாபா, **"எனது விருப்பம் வெற்றி பெறுவதானால், உங்கள் அனைவரையும் தொழுநோயாளிகளாக மாற்ற விரும்புகிறேன்!"** என்றார்.

இந்தக் காலகட்டத்தில் பாபா, பல விளக்கங்களையும் சொற்பொழிவுகளையும் வழங்கினார். பாபாவின் தரிசனத்திற்காக குருபிரசாத்திற்கு வந்த அனைவரும் கீழ்வரும் கட்டளையைப் படிக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர்:

'பாபாவின் தரிசனம் அல்லது சகவாசத்திற்காக நீங்கள் வரும் வேளையில், எந்த ஒரு சாது, துறவி அல்லது சன்னதிக்கு விஜயம் செய்தால், அது திட்டவட்டமாக நீங்கள் பாபாவிற்காக வரவில்லை என்பதற்கு சமம்' என்று பிரியமான பாபா அடிக்கடி வலியுறுத்தியுள்ளார்.

அன்பின் இறைப் பெருங்கடலான பாபாவைத் தொடர்புகொள்ளும் அரிய வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கும் தருணத்தில், எவரையும் தரிசிக்க வேண்டும் என்ற போர்வையில் கூட, உங்கள் இதயத்தில் நிலவும் பாபா-சூழலைக் கெடுக்கும் வகையில், வேறு எந்த துறவியின் அல்லது ஆலய தரிசனத்திற்காகச் செல்லக்கூடாது.

கோடையில் சாதுக்கள், துறவிகள், யோகிகள் மற்றும் பலர் பூனாவிற்கு விஜயம் செய்வது வழக்கம். அத்தகைய நபர்களில், ஒரு சிலர் மட்டுமே உண்மையானவர்கள். பாபா, கடவுளின் உண்மையான அன்பர்களின் அடிமை என்றும், அதே வேளையில் அவர் உயர்ந்தவர்களில் உயர்ந்தவர் என்றும் பாபா கூறியுள்ளார். சுருக்கமாகச் சொன்னால், பூனாவில் தங்கியிருக்கும் போது, நீங்கள் எந்தத் துறவி, சாது போன்றோரையும் பார்க்காமல், பாபாவின் அன்பில் மகிழ்ச்சியாகவும் கவனமாகவும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரு கூட்டத்தில் (மே 30 அன்று), பாபா தமது அன்பர்களிடம் இவ்வாறு கூறினார்:

எந்தத் துறவிகளையும் தரிசிக்க வேண்டாம் என்று நான் அவ்வப்போது என் அன்பர்களை எச்சரிப்பது உண்டு. நான் ஏன் அவ்வாறு செய்கிறேன்? ஏனெனில், நீங்கள் அவ்வாறு செய்யும் வேளையில், நான் உங்களுக்கு வழங்கும் வழிமுறைகளை நீங்கள் மீறும் வாய்ப்பு உள்ளது. உங்கள் தனிப்பட்ட ஆன்மீக மேம்பாட்டிற்கு, இதுபோன்ற சம்பவங்கள் மிகவும் விரும்பத்தகாதவை, மேலும் நான் உங்களை என்னுடையவர் என்று ஏற்றுக் கொள்ளும்போது, அது மேலதிக துன்பத்தை விளைவிக்கிறது. ஆதிகாலத்தவராகிய என் மீது உங்களுக்கு உறுதியான நம்பிக்கை இருந்தால், நீங்கள் எந்தத் துறவியையோ அல்லது சாதுவையோ தரிசிப்பது தேவையற்றது, அல்லது யார் ஒருவரை நம்புகிறீர்களோ அவருடைய அறிவுரைகளுக்குக் கீழ்ப்படிவதாக வாக்குறுதி அளிக்க வேண்டியது அவசியம்.

உதாரணமாக, நான் உங்களுக்கு உபவாசம் கடைப்பிடிக்க வேண்டும் என்று கட்டளையிடுவதாக வைத்துக்கொள்வோம், அந்த நேரத்தில் நீங்கள் ஒரு துறவியிடம் செல்வதானால் அவர் உங்களுக்குப் பிரசாதம் வழங்கி, அதை உண்ணுமாறு கேட்டுக்கொள்கிறார். இது உங்களை இக்கட்டான நிலைக்குத் தள்ளும். இந்தப் பிரசாதத்தை நீங்கள் உண்டால், எனது கட்டளையை மீறுகிறீர்கள்; நீங்கள் அதை உண்ணவில்லை என்றால், அந்தத் துறவியை அவமதிக்கிறீர்கள். இதுபோன்ற சம்பவங்கள் ஏற்கனவே பல நடந்துள்ளன, எனவே உங்களை இதுபோன்ற இக்கட்டான

சூழ்நிலையிலிருந்து காப்பாற்ற, துறவிகளிடமிருந்து விலகி இருக்குமாறு மீண்டும் மீண்டும் உங்களை எச்சரிக்க வேண்டியதாகிறது.

நீங்கள் என்னோடு மட்டும் ஒட்டிக்கொள்வது நல்லது. உங்கள் தளராத நம்பகத்தன்மை மற்றும் பக்தி மூலம் நீங்கள் மிகவும் பயனடைவீர்கள். அங்கும் இங்கும் ஓடிக் கொண்டே இருப்பதானால், அதிக அளவில் தேவையில்லாத ஈடுபாடு ஏற்படும். இது எனது பிரியமான அன்பர்களுக்கு மட்டுமே நான் வழங்கும் அறிவுரை, எனது தரிசனத்திற்காக வருகைதரும் பொது ஜனங்களுக்கு அல்ல.

பிற உண்மையான அல்லது போலி துறவிகளைப் பின்பற்றுபவர்களுக்கான எனது அறிவுரை என்னவெனில், என் அறிவுறுத்தல்களைப் பின்பற்றத் தயாராக இல்லாவிடில், அவர்கள் என்னிடம் வர வேண்டிய தேவையில்லை. முற்றிலுமாக எனக்குக் கீழ்ப்படியத் தயாராக இல்லாதவர் எவரும் என்னிடம் உதவிக்காக வரக்கூடாது.

துக்காராமின் சில ஈரடிக் கவிதைகளை பாபா மேற்கோள் காட்டினார், இதன் பொருள்: **"துறவிகளுடனான உங்கள் தொடர்புகளிலும், பரிவர்த்தனைகளிலும் கவனமாக இருங்கள்; ஏனெனில், நீங்கள் அவர்களுக்குக் கீழ்ப்படியாத பட்சத்தில், உங்கள் நல்ல மனப்படிவங்கள் எந்த நேரத்திலும் அழிக்கப்படும் அல்லது அழிக்க மிகவும் கடினமான வகையைச் சார்ந்த மனப்படிவங்களை அடையப்பெறுவதற்கான வாய்ப்புகளுக்கு வழிவகுக்கும்."**

எனவே துறவிகளை, போதிய அளவு தூரத்திலிருந்து மதிப்பது நல்லது.

நான் ஒரு துறவி அல்ல, நான் அவதார புருஷர் (கடவுளின் அவதாரம்). துக்காராம், ஒரு பரிபூரண குருநாதர் (சத்குரு). மக்களின் அணுகுமுறை மற்றும் புனிதர்களுடனான அவர்களின் தொடர்பு குறித்து பாபா எச்சரித்தார். **எனவே, அவதார புருஷருடனான தொடர்பு மற்றும் குறிப்பாக வழங்கப்பட்ட குறிப்பிட்ட வழிமுறைகள் குறித்தும் மிகுந்த கவனமாக இருக்க வேண்டும். நீங்கள் வேண்டுமென்றே எனது அறிவுரைகளை மீறும் போது, ஜாக்கிரதையாக இருங்கள், எந்தவித கீழ்ப்படியாமையும், சம்பந்தப்பட்ட அன்பருக்கு மிகவும் சோகமான சூழ்நிலையை உருவாக்கும்.**

முடிந்தவரை என்னை முழு மனதுடன் நினைவு கூர்ந்து மகிழ்ச்சியாக இருப்பதே என் அன்பனுக்கான சிறந்த வழி. எனவே என்னை நினைவில் கொண்டு, நேசிக்க முயற்சி செய்யுங்கள், இதர அனைத்தையும் என்னிடம் விட்டுவிடுங்கள்.

தொலைதூரங்களிலிருந்து பாபாவை சந்திக்க வந்தவர்களில் பலர், உள்ளூர் தர்மசாலையில் தங்கியிருந்தனர். எந்தக் கோவில்களுக்கும் செல்ல வேண்டாம் என்று பாபா குறிப்பாக அறிவுறுத்தியிருந்த போதிலும், மதுபன் தாஸ்

(MADHUBAN DAS), பூனா (ஏப்ரல் மாதம்) வந்தபோது, 20 மைல் தொலைவில் அமைந்த ஆலந்திக்கு, சத்குரு தியானேஷ்வரின் (PERFECT MASTER DNYANESHWAR) சமாதியில் தரிசனம் செய்யச் சென்றார். திரும்பி வந்த பின்னர் இரவு முழுவதும் ஜுரத்தால் அவதியுற்றார். அடுத்த நாள் அவர் பாபாவிடம் வந்தபோது, பாபா அவரைத் திருத்தும் விதத்தில் கடிந்துகொண்டார்: **"ஏன் எனக்குக் கீழ்ப்படியாமல் பூனாவை விட்டு வெளியே சென்றீர்கள்? ஏன் அங்கும் இங்கும் அலைகிறீர்கள்? என்னைப் பரமாத்மாவாக (கடவுள்) எடுத்துக் கொள்ளும்போது, ஏன் தேவ தேவதைகளின் சிலைகளுக்குப் பின்னால் ஓடுகிறீர்கள்? நான் உங்களுள் இருக்கிறேன், நான் எங்கும் இருக்கிறேன். நான் பிரபஞ்சத்தின் கடவுள்! எச்சரிக்கையாக இருங்கள், நீங்கள் என்னை விட்டு அங்கும் இங்கும் அலைந்து திரிவதானால், எனது தாமன் (மேலங்கி) உங்கள் கைகளை விட்டு நழுவிவிடும்!"**

பாபா மேலும் கூறினார்: **"சமீபத்தில், மெஹராபாத் தரிசனத்தின் போது, என் அன்பர்களிடம், எனது தரிசனம் மற்றும் சகவாசத்திற்காக வந்தவர்கள், அவற்றை அடையப் பெற்றதும், நேரடியாகத் தத்தமது இல்லங்களுக்குச் செல்ல வேண்டும் என்றும், சிலர் பணி நிமித்தமாக வேறு இடங்களுக்குச் செல்ல விரும்பினால் அல்லது நண்பர்கள், உறவினர்களை சந்திப்பதானால், அவர்கள் முதலில் அந்த இடங்களுக்குச் சென்று, பின்னர் என்னிடம் வந்து, நிகழ்ச்சி முடிந்ததும், நேரடியாகத் தமது இல்லத்திற்குச் செல்லும் ஆயத்தத்துடன் வருவது நல்லது; எனது தரிசனத்திற்குப் பிறகு, நீங்கள் இல்லம் திரும்புவதற்கு முன்னால், அங்கும் இங்கும் அலைவதானால், எனது சகவாசத்தால் நீங்கள் அடையப் பெற்ற தனிச் சிறப்புமிக்க மனப்படிவங்களைச் சிதறடிக்கும் வாய்ப்புள்ளது. அதாவது எனது தரிசனம் மற்றும் சகவாசத்தால் விளைந்த நற்பலனை நீங்கள் இழக்கிறீர்கள்!"**

சில அன்பர்கள் அவரவர் இடங்களுக்குத் திரும்புவதற்கு முன்பு, சில புனித ஸ்தலங்களுக்குச் செல்லலாமா என்று கேட்டதற்கு, பாபா இவ்வாறு பதிலளித்தார்: **"நீங்கள் அத்தகைய இடங்களுக்குச் செல்வதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை, ஆனால் உங்கள் யாத்திரையை முடித்த பின்னர் என்னிடம் வாருங்கள். நான் கடவுள்களுக்குக் கடவுள்; எனது தரிசனத்திற்குப் பிறகு, வேறு எந்த இடத்திற்கோ, நபரிடமோ செல்லவேண்டிய தேவையில்லை."**

ஆயினும்கூட, ஏற்கனவே பிற குருநாதர்களைப் பின்பற்றும் மக்களை பாபா ஒருபோதும் தடுப்பதில்லை. அப்போது பூனாவில் வாழ்ந்து வந்த ஒரு குறிப்பிட்ட துறவியின் சீடர்கள், பாபாவின் தரிசனத்திற்காக வந்தபோது, பாபா, அவர்களிடம் கூறினார்: **"ஒவ்வோர் இதயமும் பாபாவின் இல்லம், நீங்கள் யார் ஒருவரைப் பின்பற்றி அவருடன் வாழ்கிறீர்களோ, அவர் ஓர் அற்புதமான ஆத்மா. நான் எல்லோரிலும் இருக்கிறேன். நான் எல்லோருமாக இருக்கிறேன். உங்களை நான் இங்குப் பார்ப்பதில் மிக்க மகிழ்ச்சி**

அடைகிறேன். நீங்கள் இப்போது யாரைப் பின்பற்றுகிறீர்களோ அவரை, தொடர்ந்து உண்மையாகப் பின்பற்றுங்கள்."

மெஹராபாத்தில், பாவ் கல்சூரி, டாக்டர் டானின் கண்காணிப்பின் கீழ், அவரது அறுவை சிகிச்சையிலிருந்து மீண்டு வந்தவர், 1960 மார்ச் 27 அன்று காலை இரயிலில் பூனாவிற்கு வந்தார். அந்த நாள் குருபிரசாத்தில் பாபா தரிசனம் வழங்கும் நாளாக இருந்தது; அன்றும் மறுநாளும் பாபா வயிற்றுக் கோளாறு காரணமாக அவதியுற்றார். 30ஆம் தேதி மீண்டும் கால் வீங்கத் தொடங்கியதால் சிறுநீர் கழிக்க முடியவில்லை.

மார்ச் 27ஆம் நாள் பாபாவை தரிசனம் செய்ய வந்த நபர்களில் பல பிராமண பக்தர்கள் இருந்தனர். சுப்பிரமணியம் என்ற நபர் அவரது பக்தியின் அடையாளமாக, நெற்றியில் நீண்ட குங்குமக் குறியிட்டு வந்திருந்தார். அதைப் பற்றி பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

பல்வேறு சாதியினரின் நெற்றியில் தனித்தனி அடையாளங்கள் உள்ளன. இதேபோல், பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்கள், பாரம்பரிய பழக்கவழக்கங்களை கடைப்பிடிக்கின்றனர். இதைக் குறித்து ஹ.ஃபீஸ் இந்தக் கதையைக் கூறுவது வழக்கம். ஒரு காலத்தில் உலகின் பல்வேறு மதங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 72 விகாரமான, சூன்யகார கிழவிகள் இருந்தனர். இந்து மதத்தைச் சேர்ந்த கிழவி, பிற அனைவரிடமும் கூறுகிறார்: "அனைவரிலும் நான் மிகவும் அழகாக இருக்கிறேன், என் அழகை வேறொருவர் அழகோடு ஒப்பிட முடியாது."

இஸ்லாமிய மதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கிழவி கூறுகிறார்: "இல்லை, நான் மிகவும் இளமையாகவும் அழகாகவும் இருக்கிறேன். என்னை எவருடனும் ஒப்பிட முடியாது!"

ஸொராஸ்ட்ரிய மதத்தைத் சார்ந்தவர், "நான் அனைவரிலும் சிறந்தவள், அழகானவள். என்னைக் குறைகூறி எவருடனும் வெளிச்சமிட்டுக் காட்டமுடியாது!" என்றார்.

"இல்லை, இல்லை," கிறிஸ்தவ கிழவி வலியுறுத்தி கூறுகிறார், "என் அழகோடு யாருடைய அழகையும் ஒப்பிட முடியாது!" அதேபோல, பல்வேறு மதங்களைச் சார்ந்த அனைத்து பாரம்பரியவாதிகளும் தங்கள் மதத்தை சிறந்ததாகக் கருதி, பிறரை இழிவுபடுத்தும் விதத்தில் தரம் தாழ்த்தி பேசுகிறார்கள்.

72 கிழவிகள் முன்னும் பின்னுமாக மோதல்போக்கைக் கடைப்பிடிக்கும் வேளையில், தெய்வீக அன்பின் பாதையில் ஒரு பெண்மணி கடந்து செல்கிறார். அவர் உண்மையான இறை நாட்டம் மிக்கவர், மிகவும் அழகானவர். அவர்களின் தற்பெருமைகளைக் கேட்டு, தங்களை அழகாகவும் முற்போக்கானவர்களாகவும் கருதும் வயதான கிழவிகளுக்காக அவர் பரிதாபப்படுகிறார், ஆனால் அவர்கள் துரதிர்ஷ்டவசமாக பயனற்ற, மிதமிஞ்சிய உரையாடலில் மட்டுமே ஈடுபடமுடிகிறது. அன்பான கடவுளை

ஒருபுறம் தள்ளி வைத்துவிட்டு, அவர்கள் தங்கள் மதங்களின் செய்தித் தொடர்பாளர்களாக செயல்படுவதோடு, கோட்பாடுகள், சடங்கு சம்பிரதாயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். 72 சூன்யக்கார கிழவிகளும், இறை நாட்டம் மிக்க இந்தப் பெண்மணியைப் பார்த்ததும், "அவள் எவ்வளவு அலங்கோலமாக இருக்கிறாள்! அவள் எந்த மதத்தையும் பின்பற்றுவதில்லை!" என்று கத்திக் கதறுகிறார்கள். ஆனால், கடவுளின் உண்மையான அன்பர், இதுபோன்ற வம்புக்காரர்களை சற்றும் பொருட்படுத்தாமல் தனது வழியில் செல்கிறார். காய்ந்த எலும்புகளுக்காக அவர்கள் சண்டை சச்சரவுகளில் ஈடுபடும் போது, தெய்வீக அன்பின் சாரத்தை அவர் சுவைக்கிறார்!

உண்மையான அன்பனை ஒரு யானைக்கும், அவனை எதிர்ப்பவர்களை நாய்களுக்கும் பிரதிநிதித்துவப்படுத்தலாம். நாய்கள், இயல்பிலேயே, யானையைப் பார்த்து குரைக்கும், ஆனால் அது நாய்களுக்கு பயப்படாமல் தனது வழியில் செல்கிறது.

இறை-மனிதன் அல்லது சத்குரு, இந்த 72 கிழவிகளும், உண்மையான மதத்தைப் பின்பற்றுபவர்களும் தன்னைத் தவிர வேறு எவருமல்ல என்பதை அறிவார்.

முடிவில், பாபா இவ்வாறு அவதானித்தார், **"அன்பனாக இருப்பது மிகவும் கடினம். உண்மையான அன்பன் ஒருபோதும் இல்லாததை இருப்பதுபோலக் காட்டுவதில்லை, நான் விரும்பும் இந்த வகையான அன்பனைக் கண்டுகொள்வது மிகவும் அரிது. அன்பன் ஒருவனின் முழுமையான உதவியற்ற தன்மையை வெளிப்படுத்தும் விதத்தில் ஹஃபீஸ் கூறுகிறார், 'என் அன்பிற்குரியவரை நேசிப்பதில், நான் யானையின் காலடியில் ஓர் எறும்பைப் போல் ஆனேன் - பாதுகாப்பாகவும் பத்திரமாகவும், ஆனால் அசைய முடியாத நிலையில் இருக்கிறேன்!'"**

உஜ்ஜயினில் உள்ள 'கல்பவிரிக்ஷா' (KALPAVRIKSHA) இதழின் ஆசிரியருக்கு, பாபாவிடமிருந்து இந்தச் செய்தி மார்ச் 30 அன்று தொலைத்தந்தி மூலம் அனுப்பப்பட்டது: **"நீங்கள் கடவுளைப் பற்றி எவ்வளவு அதிகமாக விவாதிக்கிறீர்களோ, அவ்வளவு குறைவாக நீங்கள் அவரைப் புரிந்துகொள்கிறீர்கள். எனவே கடவுளை நேசித்து கடவுளாகுங்கள்."**

மார்ச் 31 அன்று, கொல்கத்தாவைச் சேர்ந்த அமியா தாஸ் தரிசனத்திற்காக மீண்டும் வந்தார், பாபா அவருக்கு ஒரு பளபளக்கும் வெள்ளை ரோஜாவை அன்புப் பரிசாக வழங்கினார். அன்று பிற்பகல் 4:30 மணியளவில், பாபா, ஒன்பது மண்டலியுடன் பிந்த்ரா ஹவுஸுக்கும், பின்பு பேஷ்வா பூங்காவிற்கும் (PESHWA PARK) அழைத்துச் செல்லப்பட்டார்.

ஏப்ரல் 1ஆம் தேதி முதல், வழக்கமான தரிசனம் ஆரம்பமானது. 2ஆம் தேதி மதியம் பால் நாத்துவும் அன்று மாலை மும்பையிலிருந்து ராவ்ஸாஹேபும் வந்திணைந்தனர். எல்சா, மார்ச் மாத இறுதியில் மும்பை வழியாக ஸிம்லாவிற்குத் திரும்பிச் சென்றார்.

பாப்புஸாஹேப் ஷிண்டே பிரசாதத்தைப் பெற்றுக்கொள்ளும் காட்சி,
இடதுபுறம் அமர்ந்திருப்பவர் ஹாரி டெடோல்சொவ்
(BAPUSAHEB SHINDE ACCEPTING PRASAD, HARRY DEDOLCHOW – SEATED LEFT)

பெரும்பாலும் மும்பை, பூனா மற்றும் அஹமதுநகர் அன்பர்களுக்கு வழங்கிய மாபெரும் தரிசனம் 1960 ஏப்ரல் 3 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 8:00 மணி முதல் மதியம் வரை நடைபெற்றது. அஹமதுநகர் கல்லூரியில் பாரசீகப் பேராசிரியராக பணிபுரிந்த அப்துல் கரீம் (ABDUL KARIM), பகீரத் மூலம் பாபாவின் தொடர்பில் வந்தார். பாபா, பேராசிரியரிடம் காலை மற்றும் மதிய உணவில் என்ன உண்டீர்கள் என்று கேட்டார். பேராசிரியர் ஒரு நீண்ட பட்டியலை எடுத்துரைத்த வேளையில் பாபா கூறினார், **"உண்மையில் ஒரு சுவையான காலை மற்றும் மதிய உணவை உண்டு, இப்போது நீங்கள் திருப்தியாகவும் மகிழ்ச்சியாகவும் உணர்கிறீர்கள். நீங்கள் பலவற்றை சுவைத்தீர்கள், ஆனால் நீங்கள் என்னை சுவைக்கவில்லை! நீங்கள் விரும்பும் உணவுகளை உண்ணலாம்; நீங்கள் விரும்பியபடி வேண்டிய அளவுக்கு அருந்தலாம், ஆனால் அதிலிருந்து நீங்கள் அடையப் பெறும் திருப்தி குறுகிய காலம் மட்டுமே நிலைத்திருக்கும்.**

"ஒரு துளி, இறைப்பெருங்கடலை விழுங்குவதில்தான் உண்மையான இன்பம் உள்ளது! அதுபோன்ற பானத்திற்காக ஒருவர் ஆசைப்பட வேண்டும்! இதை எது சாத்தியமாக்க முடியும்? தொடர்ந்து முழு மனதுடன் இறைவனை நினைவுகூருவது; மாற்று வழி என் அருள்.

"இது மனதில் வெண் சாயம் பூசுவது போலல்லாமல், வெள்ளம், மனதையே அடித்துச் சென்று அழிக்க வேண்டும். அன்பினால் மட்டுமே இதை சாதிக்க முடியும்."

அன்று பூனா நகராட்சியின் பொறியாளர் எல். நூர்காவ்ம்கர் (L. NEURGAONKAR) பாபாவை சந்தித்தபோது மனதின் பொய்யான அகங்காரத்தின் பொருள் குறித்த தலைப்பு, உரையாடலில் இடம்பெற்றது. கற்றறிந்த, மதவாதியான அவருக்கு பாபா இவ்வாறு விளக்கினார்:

நீங்கள் ஆன்மீக இலக்கியங்களை அதிகம் கற்றறிந்துள்ளீர்கள். உங்கள் தெளிவான வெளிப்பாடுகளுக்கு நீங்கள் நன்கு அறியப்பட்டவர். ஆன்மீகப் புரிதல், ஒருவரை அதன் பாதைக்கு அருகில் அழைத்துச் செல்கிறது. ஆனால் ஆன்மீகப் பாதையின் அனுபவம் முற்றிலும் மாறுபட்ட பாடம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். உணர்வின் உயர் நிலைகளை புத்தக அறிவின் மூலம் கற்பனை செய்து பார்க்க முடியாது.

ஒருவர் ஆன்மீகப் பாதையில் பயணிக்கும்போது, அருமையான காட்சிகள், இனிமையான இசை ஒலிகள், மற்றும் மகிழ்ச்சியூட்டும் வாசனைகள் போன்ற பல்வேறு அனுபவங்களை எதிர்கொள்கிறார். மிகவும் மேல்நிலையை எய்திய ஒருவர், பௌதீகத் தளத்திலிருந்து பிரிக்கப்பட்டு, அவரது உடல் நகர்வதைப் பார்க்க முடியும்.

ஆன்மீகப் பாதையில் ஒருவரின் பல்வேறு அனுபவங்கள் நிரந்தரமானவை அல்ல, ஆனால், ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளில் உளதாயிருக்கும் அனுபவங்கள் என்றென்றும் நிலையானது. அப்படியானால்,

அவர் எந்த விதமான எண்ணங்களில் அல்லது செயல்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தாலும், மாயாவால் அவரைத் தொட முடியாது. அந்த நிலையில், அனைத்தும் அதன் அளவிறுதியற்ற தீவிரத்தில் அனுபவிக்கப்படுகின்றன. புத்தகங்களிலிருந்து அடையப்பட்ட ஆன்மீகப் புரிதல், இந்த நிலையை எவ்வாறு கற்பனை செய்ய முடியும்? அறிவாற்றல் இந்த அனுபவத்தைப் புரிந்து கொள்ளத் தவறிவிடுகிறது.

கடவுள் என்றென்றும் உளதாயிருக்கிறார். கடவுள் எப்பொழுதும் இருந்தார். இதன் பொருள் என்ன? பல கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு 'கடவுள் இருந்தார்' என்று நீங்கள் கூறலாம். ஆனால் கால இடைவெளியில் எவ்வளவு தூரம் பின்னோக்கிச் சென்று பார்க்க முடியும்?

இதன் விளைவாக, நீங்கள் கற்பனை செய்யக்கூடிய காலத்திற்கு முன்பே கடவுள் இருந்தார். காலத்திற்கு அப்பாற்பட்ட கடவுளை, காலத்தின் எல்லைக்குள் கொண்டு வருவதில் நீங்கள் எப்படி வெற்றி பெறுவீர்கள்? எல்லையற்ற கடவுள் என்ற காலவரையற்ற அனுபவத்தை அனுபவிக்க, பொறுமை, பொறுமையின்மை இரண்டும் அவசியம். இதை எப்படி அடைய முடியும்? இந்த சாதனையின் முதல் கட்டத்தை, 'பரிபூரண குருநாதரின் காலடியில் உள்ள தூசி போல் ஆக வேண்டும்' என்ற தீவிர ஆசையைக் கொண்டிருப்பதன் மூலம் அடையலாம். நீங்கள் எவ்வளவு இலகுவான இறகுபோல மாறுகிறீர்களோ, அவ்வளவு அதிகமாக அவருடைய கருணையின் காற்று வீசும்.

புக்காரை சுட்டிக்காட்டி பாபா குறிப்பிட்டார்:

இங்கே ஒரு தடித்த, கனமான நபர். அவர் காற்றில் உயரமாக பறக்க விரும்புகிறார் என்று வைத்துக்கொள்வோம் - ஆகாயவிமானத்தில் அல்ல. நான் ஓர் உதாரணமாக மட்டுமே கூறுகிறேன். அவர் என்ன செய்ய வேண்டும்? அவர் என்னவாக வேண்டும்? காய்ந்த இலையைப் போல் அவர் லேசாக மாறிவிட்டால், அவரை இலகுவாக உயர்த்துவதற்கு ஒரு சிறிய காற்று வீசினாலே போதும். அகந்தையின் காரணமாக, உங்கள் வாழ்க்கை அளவுக்கு அதிகமான பளுவுடன் பருமனாகவும் மாறும். அகந்தையே அனைத்திற்கும் தடையாக இருக்கிறது.

மனதின் இந்தப் பொய்யும், போலியுமான அகங்காரத்தை ஒழிக்க வேண்டும். ஆனால் அது கிட்டத்தட்ட சாத்தியமற்றது. பொய்யும், போலியுமான அகங்காரத்தை அகற்றுவது என்பது, தனிப்பட்ட வாழ்வின் அந்தமாகும்.

அகந்தை, பொதுவாக அதனை பெருமையின் தோரணையில் வெளிப்படுத்துகிறது. எனவே ஒரு மனிதர் கூறுகிறார்: "நான் மட்டுமே அந்தப் பணியைச் செய்தேன், அந்தப் பணியை என்னால் மட்டுமே செய்ய முடியும்." பெருமை, அகந்தையை வளர்க்கிறது.

அகந்தையின் இதர அம்சம் இன்னும் நுட்பமானது. இது உடலுடனும் மனதுடனும், உங்களின் பிரிக்க முடியாதது என்று நம்பப்படுகிற

அடையாளத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. 'நான் இப்படி அழைக்கப்படுகிறேன், நான் பார்க்கிறேன், தொடுகிறேன், நுகர்கிறேன், பேசுகிறேன், சுவைக்கிறேன், கனவு காண்கிறேன், தூங்குகிறேன், விழித்திருக்கிறேன்' என்று நீங்கள் சொல்வது முற்றிலும் இயல்பானது என்று நீங்கள் உணர்கிறீர்கள். உண்மைப்பொருளின் அனுபவத்தை அடையப்பெற, பொய்யும், போலியுமான அகந்தை, 'உண்மையான நான் எனும் நிலைப்பாடாக' மாற்றப்பட வேண்டும்.

இது எளிதானது அல்ல. இந்தச் செயல்பாட்டில், பொய்யும், போலியுமான அகந்தை, அதன் அனைத்து நுணுக்கங்களுடன் கொரில்லா போரை நடத்துகிறது. ஒவ்வோர் அடியிலும் ஒருவரை ஏமாற்ற முயல்கிறது. துறவிகள் மற்றும் குருநாதர்களின் சகவாசத்தில் இருப்பதுதான் முறையான பரிகாரம். அகந்தையின் கடினமான மேலுறை, அவர்களின் சகவாசத்தில் மென்மையாகவும் மேலும் மென்மையாகவும் மாறுவதைத் தொடர்ந்து, ஒருவர் தனது சுய பலவீனங்களை எதிர்கொள்ளும் அளவுக்கு தைரியம் படைத்தவராக மாறுகிறார்.

அஞ்சாத, நேர்மையான வாழ்க்கையை வாழ்வதன் மூலம், பாசாங்குத்தனம் படிப்படியாக பலவீனமடைகிறது. அனைத்து நேர்மையுடனும் இதயம் முற்றிலுமாக சுத்திகரிக்கப்படும்போது, பாசாங்குத்தனம் முழுவதுமாக அகற்றப்படுகிறது. இது மிகவும் நீண்ட நெடிய செயல்முறையாகும், இது வருடங்களின் கணக்கீட்டில் இல்லாமல், வாழ்நாளின் மறுபிறவிகளில் நிகழ்கிறது.

பொய்யும் போலியுமான அகந்தை அழிந்தால், கடவுள் வெளிப்படுகிறார்; பன்மைத்துவம், என்றென்றும் ஒருமைப்பாட்டின் ஆதாரமாகத் திகழும் கடவுளுடன் இணைக்கப்படுகிறது. இதுதான் உண்மையான அனுபவம். அப்படிப்பட்ட ஒருவர், மனிதனிடையே மனிதனாக வாழ்ந்து, கடவுளின் வாழ்க்கையை நடத்தினால், அவர் சத்குரு என்று அழைக்கப்படுகிறார். அவர் 'ஒற்றுமை'யை பன்மையில் கொண்டு வருகிறார். உங்களுக்குள் இருக்கும் பரிபூரண சத்குருவின் எல்லையற்ற தன்மையின் ஓர் அம்சத்தைப் பார்க்க முயற்சி செய்யுங்கள். இதற்காக, நீங்கள் அனைத்தையும் விட்டுவிட்டு, அவர் உங்களுக்காகத் தீர்மானிக்கும் விதத்தில் அவரை மட்டும் பின்பற்ற வேண்டும்.

அத்தகைய அர்ப்பணிப்பு அவ்வளவு எளிதானது அல்ல. மனம் உங்கள் வழியில் நின்று கூறுகிறது: 'என்ன ஓர் அவசர முடிவு! குருநாதரிடம் சரணடைவது நல்லதா? அவர் உண்மையானவர் என்று நீங்கள் உறுதியாக நம்புகிறீர்களா? அதற்கான சான்றுதல்கள் தான் என்ன? அவர் ஒரு போலியாகக் கூட இருக்கலாம்.'

அப்போது இதயம் உள்ளே நுழைந்து, 'அவருடைய சகவாசத்தில், உங்களை நீங்கள் ஒரு பெரிய மாற்றத்துடன் கண்ட நபராக உணரவில்லையா? இவ்வளவு அன்பான அமைதியான சூழலை

வேறெங்கேனும் அனுபவித்திருக்கிறீர்களா? நீங்கள் தேடிக்கொண்டிருந்த அந்த ஏக இறைவன் அவர் இல்லையா?' என்ற கேள்விகளை எழுப்புகின்றன.

இப்படி மனதிற்கும் இதயத்திற்கும் இடையேயான மோதல் நீடிக்கிறது. குறிப்பாக நீங்கள் குருநாதரிடமிருந்து விலகி இருக்கும்போது, மனம் அதன் தந்திரங்களை அதிக சக்தியுடன் செயல்படுத்தத் தொடங்கும் வேளையில், இதயத்தின் குரல் பலவீனமாகிறது. அதனால்தான் குருநாதர் மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைப்பது கடினம், அவருடைய காலடியில் தூசியாக மாறுவது இன்னும் கடினம்.

நான் உங்களுக்கு உதவாத வரை, நீங்கள் சரணடைய முடியாது. உங்களது சரணாகதி நிறைவடையும் தருணத்தில், ஒரு வினாடியை விட குறைவான நேரத்தில், என் அருளை அடையப் பெற்று, உணர்வுப்பூர்வமாக அளவிறுதியற்ற தன்மை அல்லது அளவிறுதியற்ற உணர்வு நிலை எனும் இறுதி இலக்கு எய்தப்படுகிறது.

துக்காராம் ஒரு பரிபூரண குருநாதர் - சத்குரு. அவருடைய கவிதை வரிகளில் (பாடல் வசனம்) ஒன்றில் அவர் இவ்வாறு கூறியிருக்கிறார்:

"பரிபூரண குருநாதர் அவருடைய கருணையால்,
எந்நேரத்திலும் சீடனை, தன்னைப் போலாக்க முடியும்."

இங்கு, "ஏன் இந்த நீண்ட பரீட்சைகளும், பரிசோதனைகளும்? ஏன் அருளை வழங்குவதில் இத்தனை தாமதம்?" என்று எவரேனும் கேட்கலாம். குருநாதர் தரப்பிலிருந்து, உண்மையில் எந்தத் தாமதமும் இல்லை. காலம் கடந்த நிலை அவருடையது. படைப்பைப் பொறுத்தவரை, அவருக்கு தற்போதைய தருணம் மட்டுமே உள்ளது. மாயையில் கட்டுண்ட மனிதர்களுக்கு, துக்காராம் பின்வருமாறு கூறியுள்ளார்:

"தக்க தருணம் வரும் வரை,
தேவையற்ற அவசரத்தால் பலனில்லை!"

ஆகவே, குருநாதரின் அருளால், ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளில் ஒருவர் நிஜமாக நிலைநிறுத்தப்படும் அந்தத் தருணத்தின் வருகைக்காக, யுக யுகங்கள் விரைந்தோட வேண்டும்.

பல நாட்கள் மௌனத்தைக் கடைப்பிடிக்கும் தனது தீர்மானத்தைப் பற்றி நூர்காவ்ம்கர், பாபாவிடம் தெரிவித்தார். அந்தக் காலகட்டத்தில், 'கடவுளைப் பற்றி மட்டும் பேச விதிவிலக்குகள் அனுமதிக்க முடியுமா' என்று அவர் பாபாவிடம் கேட்டார். பாபா இதை ஏற்றுக்கொள்ளாமல், மேலும் கூறினார்:

மௌனம் என்றால் மௌனம். நீங்கள் அதைக் கடைப்பிடிக்க விரும்பினால், முழுமையாகக் கடைப்பிடிக்கவும். மனம் அதன் மாயாஜால வித்தைகளில் ஈடுபட இடந்தராதீர்கள். உங்கள் ஒருமுக தீர்மானத்தில் மனம் எப்பொழுதும் தடைகளை உருவாக்குகிறது. அதன் வழிகள் மிகவும் நழுவிச் செல்லும் தன்மையுடையவை. ஆரம்பத்தில், நீங்கள் கடவுள் அல்லது ஆன்மீகத்தைப் பற்றி பேசுவீர்கள், ஆனால் இந்த ஆர்வத்தின் போர்வையில், உங்கள் மௌனத்தால் மனம் விரைவில் உங்களை சோர்வடையச் செய்யும்.

அதைத் தொடர்ந்து, மறைமுகமாக, பிறர் உங்களிடம் வந்து கடவுளைப் பற்றி உங்களுடன் உரையாட வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்ப்பீர்கள். இத்தகைய சூழ்நிலைகளை உருவாக்கும் விதத்தில், மனதின் தந்திரமான தன்மை உங்களைத் தூண்டுவது சாத்தியமற்றது அல்ல.

மௌனம் கடைப்பிடிக்கும் போது, மனம் அமைதியாக இருக்கட்டும். இந்த மௌனத்திற்கு வெளியளவிலான மௌனம் உதவியாக இருக்கும். பல ஊமைக் குழந்தைகளைப் பார்க்கிறோம், ஆனால் அவர்களின் மௌனத்தால் என்ன பலன்? நீங்கள் விரும்பும் தியானத்திலும், மௌனத்தைக் கடைப்பிடிப்பதிலும் உங்கள் இதயத்தையும் ஆன்மாவையும் ஈடுபடுத்துங்கள், நான் உங்களுக்கு உறுதுணையாக உங்களுள் இருக்கிறேன்!

1960 ஏப்ரல் 4 திங்கட்கிழமை, பாபாவிற்கு ஜுரமும் சளியும் இருந்தது, மேலும் தொண்டை வலி இருப்பதாகவும் புகார் செய்தார். அவரது கால்களின் வீக்கமும் உள்ளங்கால்களில் ஒரு 'கனமும்' முழு மாதமும் நீடித்தது. பாபா, டாக்டர் கோஹெரின் தேவையான சிகிச்சையை அனுமதித்தார், ஆனால் பூனாவில் எளிதான சிகிச்சை அடையப்பெறும் விதத்தில் எந்தவொரு வெளி மருத்துவரிடம் ஆலோசனை பெறவோ அல்லது அவரை அழைத்துச் செல்லவோ அவர் அனுமதிக்கவில்லை. மேலும், உடல் இடர்பாடுகள் இருந்தபோதிலும், பாபா தரிசன நிகழ்ச்சிகளை அனுமதித்து வந்தார்.

பாபா அன்று மதியம், ஷிண்டே, காம்ப்ளே, டவ்லே, போட்டே ஆகியோரை சந்தித்து, சதாஷிவ் பாட்டீல், தினமும் பிற்பகல் 2:00 முதல் 5:00 மணி வரை குருபிரசாத்திற்கு வர அனுமதிக்கப்படுவதாகத் தெரிவித்தார்.

ஏப்ரல் 5ஆம் நாள் காலை, என்.எம். பஹுவான்தாஸ் என்ற பூனா அன்பர் அனுப்பிய கவிதை பாபா முன்னால் வாசிக்கப்பட்டது. அதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த பாபா, 17ஆம் தேதி காலை 8:30 மணிக்கு அவரை குருபிரசாத்திற்கு வருமாறு கூறி அனுப்பினார்.

5ஆம் தேதி, பாபா, குஜராத்தி குழுவிடம் தன்னைப் பற்றி விளக்கினார்:

நான் உயர்ந்தவனாக இருக்கும் அதே வேளையில், தாழ்ந்தவனாகவும் மாறுவதால், நான் இறை அறிவை வெளிப்படுத்துவதோடு அறியாமையையும் ஏற்றுக்கொள்கிறேன். நான் இறை அறிவு மற்றும் அறியாமை என்ற இரட்டை வேடத்தில் நடிக்கிறேன், ஒரே நேரத்தில் அறிவதும், அறியாததும்.

ஒரு குறிப்பிட்ட விஷயம் ஒரு மாதத்திற்குள் நடக்கும் என எனக்குத் தெரிந்தாலும், அது பல ஆண்டுகளாக நடவாதது போல நான் திட்டங்களைத் தீட்டுவேன். மீண்டும், ஒரு நிகழ்வு வருடக்கணக்கில் நடக்காது என்பதை அறிந்திருந்தாலும், அது விரைவில் நடக்கும் என்று எதிர்பார்க்கிறேன். நீங்கள் அயல் நாட்டிற்குப் போகக் கூடாது என்பது எனக்குத் தெரியும்; இருந்தும், அடுத்த சில மாதங்களுக்குள், நீங்கள் அந்த இடத்திற்குப் புறப்பட்டுச் செல்வீர்கள் என்றும், அதற்கு நீங்கள் தயாராக இருக்குமாறும்

கூறி நான் உறுதியளிக்கிறேன். ஆனால் இறுதியில் நீங்கள் போகவில்லை. அப்போது, நீங்கள் அங்குச் செல்வீர்கள் என்று உறுதியளித்ததன் மூலம், என்ன நடக்கும் என்று எனக்குத் தெரியாதது போலத் தோன்றச் செய்கிறது.

ஞானத்தில் (இறை ஞானத்தில்) **அறியாமை அல்லது அறிந்து கொள்ளாதது உள்ளது. ஆனால் அறியாமையில் ஞானம் இருக்க முடியாது. எல்லா ஞானமும் மிக உயர்ந்த நிலையில் இருப்பதால், உங்கள் நிலையில் நான் முழு அறியாமையை ஏற்றுக்கொள்கிறேன். உண்மையில் நான் அளவிறுதியற்ற அறிவாளி, பல நூறு ஆண்டுகளுக்குப் பின்னரும் என்ன நடக்கும் என்பதை நான் அறிவேன், ஆனால் நான் உங்கள் நிலையில் இருக்கும்போது அறியாமையை நிலைநிறுத்த முயல்கிறேன்.**

பௌதீகத் தளத்திலும், சாதாரண சூழ்நிலையிலும் கூட, அறிவும் அறியாமையும் ஒரே நேரத்தில் வெளிப்படும். உதாரணமாக, நீங்கள் சொல்கிறீர்கள்: 'எனக்கு நீச்சல் தெரியாது.' உங்களுக்கு நீச்சல் தெரியாது என்பது உங்களுக்குத் தெரியும் என்பதை இது குறிக்கிறது. உங்களுக்குத் தெரியாமல் இருந்திருந்தால், இந்தப் புரிதல் உங்களுக்கு இருந்திருக்க முடியாது. இது 'அறியாமையின் அறிவு'.

அதே போல், இறை ஞானமாகத் திகழும் நானே அறிவைப் பற்றிய அறியாமையை வெளிப்படுத்துகிறேன். இப்படித்தான் அனைத்தையும் அறிந்த நான், ஒரே நேரத்தில், அறியாதது போலத் தோன்றுகிறேன். அனைத்தும் அறிந்தவனின் அறியாமை இதுவே.

1960 ஏப்ரல் 7 அன்று தலேகாவ்மிலிருந்து (TALEGAON) ஆர். சக்ரபாணி (R. CHAKRAPANI) குருபிரசாத்திற்கு வந்தார். இதற்கு முன்னர் ஒரு சந்தர்ப்பத்தில், பாபா அவருக்கு சில உத்தரவுகளை வழங்கியிருந்தார். நீண்ட தாடி, தலைமுடியுடன் ஒரு சாதுவைப் போல் அவர் அமைதியாக இருந்தார். பாபா அவரிடம், **"எவரையேனும் உங்கள் கால்களில் விழ நீங்கள் அனுமதிக்கிறீர்களா?"** என்று கேட்டதற்கு, இல்லை என்று தலையை அசைத்தார் சக்ரபாணி.

"அது மிகவும் நல்லது" என்று பாபா சைகை செய்தார்.

கூட்டத்தில் உரையாற்றிய பாபா நீண்ட நேரம் அதைத் தொடர்ந்தார்:

ஆன்மீகப் பாதையில் ஒரே தடையாக இருப்பது அகந்தை. அகந்தையின் தன்மை பற்றி பல தொகுப்புகள் எழுதப்பட்டுள்ளன. ஆனால் புத்தக அறிவு மிகக் குறைவாகவே உதவும் அதே வேளையில், ஒருவரின் சுய முயற்சியால், அகந்தை, கடக்க முடியாத ஒன்றாகவே உள்ளது. நீங்கள் உபவாசம் இருந்தாலும் சரி, போஜனம் உண்டாலும் சரி, நீங்கள் ஆக்ரோஷமாக அல்லது அடக்கமாக இருந்தாலும் சரி, அகந்தை தன்னை வளர்த்துக் கொண்டே இருக்கும். 'நான் பார்க்கிறேன், படிக்கிறேன், தூங்குகிறேன்' போன்ற அகந்தையின் இயல்பான போக்குகள் கூட பிணைப்புகளை உருவாக்குகின்றன. எனவே பழைய மனப்படிவங்களைச்

செலவழிக்கும் செயலிலேயே இரவும் பகலும் புதிய மனப்படிவங்களை உருவாக்கி கட்டுண்டவராகிறீர்கள்.

நீங்கள் நீண்ட தலைமுடியுடன், சாதுவின் அங்கியை அணிவதானால், பிறர் மதிப்பும், மரியாதையும் வழங்குவதை நீங்கள் மறைமுகமாக எதிர்பார்க்கிறீர்கள். சாமானியர்களின் வாழ்க்கையைத் தவிர, வேறு வழியில் வாழ முயலும்போது, ஆன்மீகத்தில் தவறான விளம்பரத்திற்கான உணர்வை உருவாக்குகிறீர்கள். பிறர் உங்களை மரியாதையுடன் பார்க்கத் தொடங்குகிறார்கள்; ஆன்மீக அதிகாரம் இல்லாமல் - அதாவது வெளியளவில் கடவுளின் பெயரால், ஆனால் உள்ளுக்குள் சுய திருப்தியைத் தவிர வேறு எதுவும் இல்லாமல் - நீங்கள் மரியாதையை ஏற்கத் தொடங்குகிறீர்கள். காலப்போக்கில், உயர்வு மனப்பான்மை ஊட்டமளித்து வளர்க்கப்படுகிறது, அகந்தை மேலதிக மரியாதைகளுக்காக ஏங்குகிறது. இது மிகவும் ஆபத்தான படுகுழி!

இறை உணர்வை எய்திய பரிபூரண குருநாதரில், 'உண்மையான அகந்தை' (REAL EGO) **நிலைகொள்கிறது. அவர் ஒவ்வொரு பொருளிலும், ஒவ்வோர் உயிரிலும் தன்னைப் பார்க்கிறார். அவரது தெய்வீகம் மிகவும் முழுமையானதாக இருப்பதால், அவர் அனைவருக்கும் தியானம் மற்றும் வழிபாட்டின் பொருளாக மாறுகிறார். எனவே அவருக்கு மரியாதையையும், வணக்கத்தையும் ஏற்றுக்கொள்ளும் அதிகாரம் உள்ளது. அவருடைய செயல்கள் அனைத்தும் செயல்கள் அல்ல, எனவே கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவை அல்ல.**

அனைத்து மனப்படிவங்களின் கட்டுப்பாடுகளிலிருந்தும் முற்றிலும் விடுபட, குருநாதரின் தலையீடு அவசியம். அன்பின் விழிப்புணர்வு ஒன்றுதான் அதற்கான பரிகாரம். அப்போதுதான் அபூர்வமாக ஒரு தனிமனிதன் அனைத்து மனப்படிவ குவியல்களிலிருந்தும் குருநாதரின் அருளால் விடுவிக்கப்படுகிறான்.

சக்ரபாணியிடம் திரும்பிய பாபா, **"எனவே, பிறர் உங்களை வணங்க அனுமதிக்காதது நல்லது"** என்று கூறினார்.

சின்னா சுப்பாராவ் அப்போது "அப்படியானால், மனைவியோ, குழந்தைகளோ முறையே கணவனை அல்லது தந்தையை மரியாதையுடன் வணங்குவது முறையா?" என்று கேட்டார்.

"**இது முற்றிலும் வேறுபட்ட விஷயம்,**" என்று பாபா பதிலளித்தார், "**இது அதிக அளவிலான பிணைப்பை உருவாக்காது.**"

"நான் எப்படி நேர்மையாக இருக்க முடியும்?" கூட்டத்தில் ஒருவர் கேட்டார்.

முதலில் உங்களுடன் நேர்மையாக இருங்கள். உங்கள் செயல்களிலும் நடத்தையிலும் பாசாங்குத்தனத்தின் சாயல் சிறிதளவும் இருக்கக்கூடாது. மனசாட்சிக்குக் கீழ்ப்படிந்து செயல்படுங்கள். உங்கள் இதயத்தின் குரலை நீங்கள் கேட்கவில்லை என்றால், அது பாசாங்குத்தனம்.

நீங்கள் ஒரு துறவி என்றால், உங்களைத் துறவி என்று அழைக்கவும், இல்லை என்றால், உங்களை ஒரு சாதாரண மனிதர் என்று கூறவும். நீங்கள் ஒரு துறவியாக இல்லாத பட்சத்தில், உங்களை ஒரு துறவி என அழைத்தால், உங்கள் இதயம் உங்களைக் கூர்முனையால் குத்தி வலியை உருவாக்கும்; உள்ளுக்குள் புயல் உருவாகும்! ஏன் தேவையின்றி உங்கள் தலையில் சிக்கலைக் கொண்டுவர வேண்டும்?

எவரேனும் உங்கள் ஆசீர்வாதத்தை நாடினால், அதை வழங்க உங்களுக்கு அதிகாரமோ அல்லது உரிமையோ இல்லையெனில், நீங்கள் ஆசிர்வதித்து அது நிறைவேறாத பட்சத்தில் என்ன நடக்கும் என்று நினைத்து உங்கள் இதயம் கொந்தளிக்கும் அந்த நேரம், ரகசியம் வெளியே வரும்! ஆசீர்வதிக்க உங்களுக்கு சக்தி இல்லை. எனவே, எல்லா இதய குமுறல்களையும் தவிர்க்க, நீங்கள் நிஜத்தில் என்னவாக இருக்கிறீர்களோ அதையே வெளிப்படுத்துவது நல்லது. துண்டு துண்டாக வெட்டுவது எளிது, ஆனால் இதயத்தின் வருத்தம் மிகவும் பயங்கரமானது. அதன் கட்டளைகளை தொடர்ந்து புறக்கணிப்பதன் மூலம், அது உணர்வின்றி உணர்ச்சியற்றதாகிறது. அது ஒரு பள்ளத்தில் வீழ்வது போன்றது!

ஒருவர் பாபாவிடம் கேள்வி ஒன்றைக் கேட்க வேண்டும் என்ற தனது விருப்பத்தை வெளிப்படுத்தினார், அதற்கு பாபா, **"நான் சொல்வதை, எந்தக் கேள்வியும் எழுப்பாமல் செவிமடுத்து கேளுங்கள்; இல்லை என்றால், உங்கள் மண்டை பிளந்துவிடும்!**

"நேசிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்! நீங்கள் எனது சகவாசத்திற்காக வந்துள்ளதால், உங்கள் மூளைக்கு சற்று ஓய்வு கொடுங்கள்!"

"பாபா, அதற்கு உங்கள் ஆசீர்வாதம் தேவை" என்று அந்த மனிதர் உறுதியாகக் கூறினார்.

"அதையும் கேட்காதீர்கள்! நான் உங்களை மிகவும் நேசிக்கிறேன். நீங்கள் என்னிடம் கேள்வி எழுப்பிக் கொண்டிருந்தால், நான் பதிலளித்துக் கொண்டிருப்பேன், ஆனால், நீங்கள் எங்கும் இருக்கமாட்டீர்கள். நானாக சொல்வதை செவிமடுத்து கேளுங்கள், நீங்கள் அதைப் புரிந்துகொள்ளவில்லை என்றால் கவலைப்படாதீர்கள். நான் எதை விளக்க வேண்டுமோ, அதை நானே விளக்குகிறேன். புரிந்து கொள்ள முயல்வதில் நீங்கள் சிரமப்பட்டு பயனில்லை."

'நேர்மை' (HONESTY) என்ற தலைப்பில் தொடர்ந்து ஒரு நாள் பாபா இந்த சொற்பொழிவை வழங்கினார்.

ஒருவர் கடவுளை, உண்மைப்பொருளைத் தேடுவதில் முழுமையான நேர்மை அவசியம். ஆன்மீகப் பாதையின் நுணுக்கங்கள் ஒரு மயிரிழையை விட நுட்பமானவை. மிகச் சிறிய அளவிலான பாசாங்குத்தனமும் ஓர் அலையாக மாறி, அது ஒருவரை ஆன்மீகப் பாதையிலிருந்து புறம் தள்ளிவிடும்.

பொய்யும் போலியுமான 'நான் எனும் அகந்தை' ஒன்றுதான், உங்களுக்குத் தெரிந்த ஒவ்வொரு தந்திரத்தின் மூலமாக, 'ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளிலிருந்து' உங்களை விலக்கி வைப்பது. நேர்மை என்ற போர்வையில், இந்தப் பொய்யும் போலியுமான 'நான் எனும் அகந்தை', தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்கிறது. உதாரணமாக, 'நான் பாபாவை நேசிக்கிறேன்' என்று நீங்களே கூறுகிறீர்கள். உண்மை என்னவெனில், நீங்கள் பாபாவை உண்மையாக நேசித்திருந்தால், உங்களை நீங்களாகவே உறுதிப்படுத்திக் கொள்ளும் பொய்யான சுயமாக இருக்க மாட்டீர்கள்! சுயம், அன்பில் துவண்டுவிடாமல், 'நான் பாபாவை நேசிக்கிறேன்' என்று நம்பி, உறுதியளிக்கிறது. அது சுய ஏமாற்றுத்தனம் அல்லவா?

இந்தப் பொய்யும் போலியுமான சுயத்தை எப்படி ஒழித்துக்கட்டுவீர்கள்? இந்த நிழலாடும் நான்-நான்-என்பதை விட்டுவிட்டு, நான்-ஒருவனே உளதாயிருக்கிறேன் அல்லது கடவுள்-ஒருவரே உளதாயிருக்கிறார் என்ற நிலையில் உங்களை எப்படி நிலைநிறுத்துவீர்கள்? அதற்கு ஹஃபீஸ் அளித்த பதில்:

"ஓ அன்பனே, பிரிவதும் இணைவதும்
உனக்குத் தேவை இல்லாத விஷயம்!
அன்பிற்குரியவரின் விருப்பத்திற்கு
முழுமையாக அடிபணிய மட்டுமே முயலவும்."

அன்பிற்குரியவருடன் ஐக்கியம் ஆவதற்கான ஏக்கம் கூட பிணைப்புகளை உருவாக்குகிறது. எனவே பிரிவு, 'ஐக்கியம்' பற்றியும் கவலைப்பட வேண்டாம்; அன்புடன் இருங்கள், மேலும் அன்பு காட்டுங்கள். நீங்கள் மேலும் மேலும் அன்பைப் பொழிவதன் மூலம், நீங்களே உங்களை அர்ப்பணித்து, பரிபூரண குருநாதரே உங்கள் பாதையாக இருப்பதைக் கண்டறிய முடியும். இத்தகைய மாற்றத்திற்கு நீங்கள் உள்ளாகும்போது, பொய்யும் போலியுமான 'நான் எனும் அகந்தை' படிப்படியாகக் குறைந்து, தன்னை உறுதிப்படுத்துகிறது. அப்போது, பரிபூரண குருநாதர் எதைச் செய்யச் சொல்கிறாரோ, அதை நீங்கள் நிறைவேற்ற முடிகிறது. ஆரம்பத்தில், 'நான் ஏன் ஒருவருக்குக் கீழ்ப்படிய வேண்டும்?' என்று மனம் முணுமுணுக்கிறது. ஆனால் ஹஃபீஸ் மனதை ஆறுதல்படுத்துகிறார்: "ஓ மனமே! குருநாதருடனான இந்த பந்தம் மட்டுமே நித்திய சுதந்திரத்தை நல்கும்."

பரிபூரண குருநாதரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், அவருக்கு முற்றிலுமாகக் கீழ்ப்படிகிறார்கள். பரிபூரண அடிமையாக மாறுகிறவன் பரிபூரண குருநாதராகிறான்.

பாபா தரிசன நேரத்தில் தினமும் இளஞ்சிவப்பு நிற கோட் அணிவது வழக்கம். ஏப்ரல் 8ஆம் தேதி, சில அன்பர்கள் அவர் வேறு சில நிறத்திலான கோட் அணிவதைப் பார்க்க விரும்பினர். பாபா புன்னகையுடன் பதிலளித்தார்: "என் அன்பர்களின் ஆலோசனையின் பேரில், நான் எனது கோட் மற்றும் ஆடைகளின் நிறத்தை மாற்றத் தொடங்கினால், என் அலமாரிகளில் என்ன

வகையான வண்ணங்கள் அறிமுகப்படுத்தப்படும் என்று உங்களால் கற்பனை செய்ய முடியுமா? நான் உங்கள் அன்பின் அடிமை, உங்கள் திடீர் விருப்பத்திற்கும், தற்போக்கு எண்ணத்திற்கும் அல்ல!"

ஒரு வேலை வேண்டி பாபாவின் ஆசீர்வாதத்தை நாடிய ஒருவர், "பாபா, நீங்கள் உங்கள் அன்பர்களின் அடிமை என்று சொல்கிறீர்கள். சரி, எனக்கு இந்த வேலை கிடைக்க உங்கள் ஆசிகளை வழங்க வேண்டும்" என்று அவருக்கு நினைவூட்டினார்.

பாபா புன்னகையுடன் பதிலளித்தார், **"நான் உங்கள் அடிமை இல்லை, நான் உங்கள் அன்பின் அடிமை. அதை நினைவில் கொள்ளுங்கள்."**

1960 ஏப்ரல் 10 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2:00 முதல் 6:00 மணி வரை, ஜாஃபர் (JAFFER), கவாலி பாடல்களை நான்கு மணி நேரம் பாபா முன் பாடினார். ஷக்கீலா பானு (SHAKILA BANU), கஜானன் வாட்வே (GAJANAN WATVE), மங்களா எஸ். ஆப்டே (MANGALA S. APTE) உள்ளிட்டோரும் பஜனைகள் பாடினர். வழக்கம் போல், அஹமதுநகர் மையத்திலிருந்து வந்தவர்களைப் போலவே ஆதியும் இந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்தார். (ஆதி முந்தைய நாள் காலை சகன் மற்றும் சிதுவுடன் வந்தார்.)

ஒரு குறிப்பிட்ட சாதனா (SADHANA, ஆன்மீகப் பயிற்சி) செய்து கொண்டிருந்த பாபுராவ் காளே (BABURAO KALE) அன்று பாபாவின் தரிசனத்திற்காக வந்தவர், அவரிடம் தனது கனவைப் பற்றிக் கூறினார்; அதில் அவர் காற்றில் பறப்பதைக் கண்டதாகக் கூறி பாபாவிடம், "இதற்கு ஆன்மீக ரீதியில் ஏதேனும் சிறப்பு அர்த்தம் உள்ளதா?" என்று கேட்டார்.

அதற்கு பாபா, **"என்ன அர்த்தம்? கனவு மட்டும்தான்! பறவைகள் பறப்பதைக் காண்கிறோம். ஆன்மீகத்தில் அதற்கு என்ன அர்த்தம்? பழங்காலத்தில், சில சக்தி வாய்ந்த யோகிகளால் பறவைகளைப் போலப் பறக்க முடிந்தது. கடவுளை நேசிக்கும் ஒருவருக்கு இது போன்ற விஷயங்கள் முக்கியமானவையோ அல்லது அத்தியாவசியமானவையோ அல்ல"** என்றார்.

பாபா, தமக்கு முன்னால் அமர்ந்திருந்த அன்பர்களிடம், இதுபோன்ற கனவுகள் காண்பதுண்டா என்று கேட்டதும், சில கைகள் உயர்ந்தன. **"அப்படியானால் இதுபோன்ற கனவுகள் சாதாரணமானவை"** என்று பாபா கருத்துத் தெரிவித்தார். புக்காரை சுட்டிக்காட்டி, **"இவ்வளவு பருமனாக இருந்தாலும் கனவில் பறக்க முடியும் என்பது என்ன ஓர் அதிசயம்!"** என்று கூறி, பாபா தொடர்ந்தார், **"நீங்கள் தண்ணீரில் நடந்தாலும் சரி, காற்றில் பறந்தாலும் சரி, ஒரு வேளை நீங்கள் கண்டது போலக் கனவில் வந்தாலும் சரி, அல்லது பண்டைய யோகிகள் சாதாரண விழிப்பு நிலையில் செய்தது போலானாலும் சரி, இதற்கு ஆன்மீக ரீதியில் எந்த அர்த்தமும் இல்லை - புறக்கணிக்க உகந்தது.**

பூனா (POONA) **1960**

“கடவுளை நேசிக்க நேர்மையாக முயற்சி செய்யுங்கள், அன்பைத் தவிர பிற அனைத்தும் அர்த்தமற்றவை என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்.”

“நீங்கள் தியானம் செய்கிறீர்களா?” பாபா அவரிடம் கேட்டார். **“அப்படியானால், யாரை மனதில்கொண்டு தியானம் செய்கிறீர்கள்?”**

பாபுராவ் காளே, “கடவுளை நினைந்து” என்று பதிலளித்தார்.

“கடவுள் எங்கே?”

காளே பதிலளித்தார், “கடவுள் எல்லா இடங்களிலும், எல்லாவற்றிலும், ஒவ்வொரு தூசி துகளிலும், அதற்கு அப்பாலும் இருக்கிறார்.”

பாபா கேட்டார், **“இது வெறும் புத்தக அறிவு அல்லவா? இது உங்கள் அனுபவமா? ஒரு குழந்தை கூட இதுபோன்ற வார்த்தைகளை மொழிய முடியும். எனவே உங்களுக்கு அனுபவம் இல்லாத வரை, இதுபோன்ற வார்த்தைகளைக் கூறுவது பயனற்றது.**

“ஏக இறைவனான உண்மைப்பொருளைக் குறித்து நீங்கள் உண்மையிலேயே ஆர்வமாக இருந்தால், நீங்கள் விரும்பும் எந்த ஒரு தெய்வீக வடிவத்தையும் அன்புடன் தியானிக்க முயற்சி செய்யுங்கள் அல்லது முழு மனதுடன் கடவுளின் பெயரை நினைவில் கொள்ளுங்கள். தெய்வீக அருளால், பாக்கியசாலி ஒருவர் கடவுளை நேருக்கு நேர் பார்க்கிறார், எங்கும் எதிலும், இந்த அறையில் உள்ள அனைத்தையும் நீங்கள் இப்போது உங்கள் பௌதீகக் கண்களால் பார்ப்பதை விட மிகத் தெளிவாகவும் நெருக்கமாகவும் பார்க்கிறார்.

“ஏக இறைவனான உண்மைப்பொருளைக் கண்கூடாகக் காண்பதற்கு முன்னர், ஒருவர் ஆன்மீகப் பாதையில் பல அனுபவங்களை அடையப்பெறுகிறார். சரியாகவும், சாதுரியமாகவும் மதிப்பிடப்படாவிட்டால், இந்த அனுபவங்கள் மிகவும் கவர்ச்சிகரமானதாகவும், ஏமாற்றத்தை அளிப்பதாகவும் நிரூபிக்கப்படும். கனவில், ஒருவர் வானில் பறப்பதையும், மிதப்பதையும் நினைத்து பெருமைப்படத் தொடங்கினால், எந்த அளவுக்கு பெருமைப்படும் விதத்தில் ஆன்மீகப் பாதையில் உள்ள அனுபவங்கள் சக்தி வாய்ந்ததாக இருக்க முடியும்? தனது தனித்துவத்தை மேலும் மேலும் தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்கும் அகந்தையின் தந்திரமான தன்மை குறித்து, ஒருவர் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

“ஒன்று மட்டும் நிச்சயம். இதுபோன்ற அனுபவங்களுக்கு நீங்கள் எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறீர்களோ, அந்த அளவுக்கு நீங்கள் கட்டுண்டவராகிறீர்கள். அனுபவங்களின் பின்னால் ஓடாதீர்கள், ஆனால் கடவுள் மீதான உங்கள் அன்பில் உறுதியாக இருங்கள்.”

விமானப்படை தளபதி மனோகர் ஸாக்கரே (MANOHAR SAKHARE) அன்று விமானத்தில் பூனாவிற்கு தரிசனத்திற்காக வர முடிந்தது, ஆனால் பாபாவின் சகவாசத்தில் இருக்க ஏங்கிக்கொண்டிருந்த மனைவி மோனாவை, அவரால்

அழைத்து வர முடியவில்லை. ஸாக்கரே அவரது மனைவியின் அன்பைப் பற்றியும், சிறிது நேரத்திற்கேனும் வர வாய்ப்பில்லாததால் ஏற்பட்ட ஏமாற்றத்தைப் பற்றியும் பாபாவிடம் கூறினார். அதைக் கேட்ட பாபா, **"நான் இங்கு மட்டுமல்ல, அங்கேயும் இருக்கிறேன் என்று அவரிடம் கூறுங்கள். நான் எங்கும் இருக்கிறேன். மேலும், அவர் என்னை நேசிப்பதைக் காட்டிலும் நான் அவரை அதிகமாக நேசிக்கிறேன் என்றும் கூறுங்கள்"** என்றார்.

அவர் உருது மொழியில் ஒரு சில வரிகளை மொழியுமாறு மண்டலியில் ஒருவரைக் கேட்டுக்கொண்டார்: "குருநாதர் கூறுகிறார்: 'என் ஒளி இங்கிருந்து அனைத்திற்கும் அப்பாலும் நீண்டுள்ளது! எனது அன்பர்கள் என்னைக் கண்டுகொள்வதில் எந்த அளவிற்கு வெற்றி பெறுவார்கள் என்பதை நான் பார்க்கிறேன்.'"

பாபா இவ்வாறு கூறி முடித்தார்: **"நான் உங்கள் நிலையில் இருக்கிறேன், அனைத்து ஆன்மீகத் தளங்களிலும் அதற்கு அப்பாலும் இருக்கிறேன்."**

1960 ஏப்ரல் 13 புதன்கிழமை முதல் மஹாராணி ஷாந்தாதேவி தினமும் காலை 8:30 முதல் 10:30 மணி வரை பாபாவைப் பார்க்க வரத் தொடங்கினார். தரிசனத்திற்கான நேரம் காலை 9:00 முதல் 11:00 மணி வரையாக இருந்தது.

தனிப்பட்ட முறையில் நேர்காணலை விரும்புபவர்களிடம், ஒரு நாள் பாபா கூறினார்: **"நான் 700 ஆண்டுகள் ஓய்வெடுக்க விரும்புகிறேன். இங்கு வருகை தந்துள்ள அனைவரும், நான் அவர்களைத் தனியாக சந்திக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். எனவே, இரண்டு அல்லது மூன்று பேர் என்னை தனிப்பட்ட முறையில் சந்திக்க வரும் வேளையில், பிற அனைவரும் வெளியே செல்லட்டும். ஒவ்வொருவரும் இரண்டு அல்லது மூன்று நிமிடங்களுக்கு மட்டுமே சந்திப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் ஒருமுறை நேர்காணல் தொடங்கினால் அது முடிவடைய நீண்ட நேரம் எடுக்கும். இதற்கிடையில், காத்திருக்கும் பிற அனைவரும் சோர்வடைந்து விடுகிறார்கள்."**

ஞாயிற்றுக்கிழமைகள் தவிர ஒவ்வொரு நாளும் மதியம், பாபா குளிர்ந்த இனிப்பு கலந்த பானகத்தை மண்டலி மற்றும் அங்கிருந்த அனைவருக்கும் வழங்குவது வழக்கம். மதியம் 1:30 மணிக்கு தேநீர் அருந்திய பின்னர், அரை மணி நேரத்தில், பானக விநியோகம் நடக்கும். பாபா முதலில் அனைவரிடமும் ஒரு குவளையைக் கொடுத்து, பின்னர் அவர்களின் குவளைகளை நிரப்பினார். சில நேரங்களில், பானகம் அதிகமாக இருந்தால், அதை மூன்றாவது முறையும் வழங்குவது உண்டு.

ஏப்ரல் 14 அன்று, ஹாஃபீஸின் கீழ்வரும் ஈரடிக் கவிதைகள் (ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து) பாபா முன்னால் வாசிக்கப்பட்டது.
ஹாஃபீஸ் கூறுகிறார்:

ஒன்றும் அறியாதவரே! முழு முனைப்புடன் முயன்றால்
ஒரு நாள் நீங்கள் இறை ஞானத்தின் குருநாதராக மாறுவீர்.
நீங்களாகவே ஆன்மீகப் பாதையைக் கடக்காதவரை,
பிறருக்கு எப்படி வழிகாட்டுவீர்?
தெய்வீகப் பள்ளியில், ஓ மகனே, பரிபூரண குருநாதர்
முன்னிலையில், முயலுங்கள், முயலுங்கள்,
கீழ்ப்படிய முயலுங்கள், ஒரு நாள் நீங்களும் பிதாவாகலாம்.

ஆன்மீகப் பாதையில் பயணிக்கும் துணிச்சலான
மனிதர்களைப் போல், இந்தத் தாமிரம் போன்ற
வாழ்வின் கைகளைக் கழுவுங்கள்,
அதனால், ஒரு நாள் நீங்கள் அன்பின் வேதியியல் சக்தியால்
அதைத் தங்கமாக மாற்றுவீர்கள்.
உணவு, தூக்கம் போன்ற உடலின் தேவைகள் உங்களை,
இறை அன்பின் வாசலிலிருந்து விலக்கி வைத்துள்ளன.
நீங்கள் அனைத்து தேவைகளிலிருந்தும் விடுபடும்போது,
அவை உங்களை அன்பானவருடன் ஐக்கியமாகச் செய்கின்றன.

பாபா விளக்கினார்:

ஆசைகள் இல்லாமல் இருப்பது மிகவும் கடினம். 'நான் தூங்க வேண்டும், நான் உண்ண வேண்டும்' - இவை தேவைகள் (ஆசைகள்). 'நான் தூங்கவோ உண்ணவோ விரும்பவில்லை' - இதுவும் ஒரு தேவை. எனவே தேவைகள் இல்லாமல் இருப்பது சாத்தியமற்றது. அப்படியானால் தீர்வுதான் என்ன? ஹஃபீஸ் ஒன்றை வழங்குகிறார்.

ஹஃபீஸ் கூறியதாவது: பரிபூரண குருநாதரின் அருளால் மட்டுமே உங்களை அனைத்துத் தேவைகளிலிருந்தும் விடுவிக்க முடியும். இறைவனின் மகிமையில் இம்மி அளவு வெளிப்பட்டாலும், பூமியின் சூரியனை விட லட்சக்கணக்கான மடங்கு பிரகாசமாக மாறுவீர்கள். ஒரு குறுகிய கணம் உங்களை இறை அன்பின் கடலில் மூழ்கடிக்கும் அதிர்ஷ்டம் இருந்தால், தயங்க வேண்டாம். அந்தத் தருணம் அடிக்கடி வருவதில்லை. குருநாதர் உங்களை மூழ்கச் சொன்னதும் தயங்காமல் 'மூழ்கி விடுங்கள்!' உலகம் உங்களைப் பற்றி என்ன நினைக்கும் என்று கவலைப்படாதீர்கள். உலகம் உங்களைப் பைத்தியக்காரன் என்று அழைக்கும், ஆனால் நீங்கள் தயங்கக்கூடாது.

உங்களின் ஒரு மயிரிழைக் கூட இறை அன்பின் கடலில் தோய்க்கப்பட்டால், நீங்கள் நித்தியமாக 'ஈரமாகி' விடுகிறீர்கள். நீங்கள் அனுபவிக்கும் அன்பானவருடன் இணைந்த அந்த ஆனந்தத்தில், இடைவெளி எதுவும் இல்லை. இது தொடர்ச்சியாக உள்ளது. இந்த ஆன்மீகப் பாதையில் நீங்கள் தலையும், காலும் இல்லாத அளவுக்கு மாறினால், தலை முதல் கால் வரை நீங்கள் கடவுளாகிவிடுவீர்கள்.

“தலையும், காலும் இல்லாதவராக மாறுவது எப்படி?” என்று பாபா கேட்டார்.

நான் சொல்வதைச் செய்வது. உங்கள் மனதைப் பயன்படுத்தாதீர்கள். பிரியமானவரின் ‘தெய்வீக விருப்பம்’ எப்போது உங்கள் விருப்பமாக மாறுகிறதோ, அப்போது நீங்கள் தலையும், காலும் இல்லாதவராக இருப்பீர்கள். இருந்தும் இவை அனைத்தும் சாத்தியமற்றது - அன்பான இறைவனுடன் இணையும் ஆசை கூட பைத்தியக்காரத்தனம். எனவே ஒரே ஒரு தீர்வு மட்டுமே உள்ளது, அதுவே, பரிபூரண குருநாதரின் பாதங்களில் தூசியாக மாறுவது.

பரிபூரண குருநாதருக்கு முற்றிலுமாகக் கீழ்ப்படிவதுதான் ஒரே பதில். அவருடைய கட்டளைகளைப் பொறுத்தவரை, அவற்றை இம்மி அளவும் பிசகாமல் பின்பற்றுங்கள். அவற்றின் முக்கியத்துவத்தை பகுப்பாய்வு செய்ய உங்கள் தலையைப் பயன்படுத்த வேண்டாம். பரிபூரண குருநாதர் உங்களிடம் செய்யச் சொல்வதைச் செய்யுங்கள். அவருடைய கட்டளைப்படி உங்கள் கால்கள் அசையட்டும். அவருடைய கட்டளைப்படி உங்கள் வாழ்க்கை அமையட்டும். இதுவே தலையும், காலும் இல்லாமல் மாறுவது என்று அர்த்தம்.

இதை மராட்டியில் மொழிபெயர்க்கும்படி பாபா, சஞ்ஜீவனி தேஷ்முக்கிடம் கேட்டுக்கொண்டார். இந்த உரை, தத்துவத்தை எடுத்துரைப்பதால் மொழிபெயர்க்க சிரமம் என்று முறையிட்டுத் தயங்கினார். அவருடைய தந்தை டாக்டர் தேஷ்முக் அதற்கு ஒப்புக்கொண்டதும், பாபா அவரைத் திருத்தினார்:

அதை, தத்துவம் என்று சொல்லாதீர்கள். இது தத்துவம் அல்ல! இது வற்றாத இறை வாழ்க்கையை சித்தரிக்கிறது. உண்மையான மனிதர் ஒருவரிடமிருந்து எதிர்பார்க்கப்படும் வாழ்க்கை இதுதான். நீங்கள் வாழும் வாழ்க்கை ஒரு மிருகத்தின் வாழ்க்கை! இது மிருகத்தனத்தை தவிர வேறு எதையும் சித்தரிக்கவில்லை.

ஒருவர் அறிவார்ந்த மேதையாக இருக்கலாம், ஆனால் ஒருவர், ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளை உணராத வரையில், அவரது அறிவு என்று அழைக்கப்படுவது, அறியாமையில் வார்த்தைகளின் விளையாட்டைத் தவிர வேறொன்றுமில்லை. அவரது வாழ்க்கை விளக்கங்கள் மற்றும் உண்மைப்பொருளைப் பற்றிய வர்ணனைகள், குருடர்களை குருடர்கள் வழிநடத்துவதற்கு ஒப்பிடலாம்.

பொதுவாக வாழ்க்கை எப்படிச் சித்தரிக்கப்படுகிறது? முதலில் நீங்கள் விளையாட்டுகளில் மூழ்கியிருக்கும் குழந்தை. பின்னர் இளமையாகவும் அழகாகவும் நீங்கள் வளர்கிறீர்கள்; இளமையின் பகற்கனவில் தொலைந்துபோய், பின்பு திருமணம் செய்துகொள்கிறீர்கள். குழந்தைகளை ஈன்றெடுக்கிறீர்கள். காலம் செல்லச்செல்ல வயதாகி, கவலைகள் குவிந்து பெருகும். அனைத்து தவிர்க்க முடியாத பலவீனங்களுடனும் முதுமை ஒவ்வொரு நாளும் நெருங்கிக்

கொண்டிருக்கும், இறுதியாக ஒரு திருப்தியற்ற உணர்வுடன் நீங்கள் பௌதீக உடலை விட்டு வெளியேற வேண்டும். இதை, வாழத் தகுதியான வாழ்க்கை என்று சொல்ல முடியுமா? இது ஒரு யானையின் வாழ்க்கையிலிருந்து மிகவும் வேறுபட்டதல்ல.

ஒரே கதையே திரும்பத் திரும்ப நிகழும் உங்களின் எண்ணற்ற பிறவிகளை நான் அறிவேன். நினைவில் கொள்ளுங்கள், இது ஒரு கனவு, ஆனால் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த கனவு. கனவின் ஒன்றுமில்லாத தன்மையை உங்களுக்கு உணர்த்துவதே இதன் நோக்கம். ஆனால் நீங்கள் அறியாமை மற்றும் சுயமாக விதைக்கப்பட்ட மாயக் கவலைகளால் அடக்கியாளப்படுவதால், உண்மையான நிலைமையை உணர்ந்து, சிறப்பான மனித வாழ்க்கையை வாழ்வதில் உறுதியாக இருக்கவில்லை.

இந்த ஈரடிக் கவிதைகளில், ஹஃபீஸ் 'நிலையான வாழ்க்கை'யைக் குறித்த அடையாளக் குறிப்பை வழங்குகிறார். இதுவே ஒருவர் குறிக்கோளாகக் கொள்ள வேண்டிய வாழ்க்கை. இந்த வாழ்க்கைக்காகத்தான் உங்களுக்கு ஒரு மனித உருவம் வழங்கப்படுகிறது. நீங்கள் இப்போது 'நிலையான வாழ்க்கை'யை வாழ முடிவு செய்து, அதற்காக நேர்மையான முயற்சிகளை மேற்கொள்ளாத வரை, இதற்கு முந்தைய மனித வடிவங்கள் அனைத்தும் விலங்குகளுடன் ஒப்பிடப்படுகின்றன. எனவே நிலையான வாழ்க்கைக்கு வழிவகுக்கும் (கடவுளுக்கான) அன்பின் வாழ்க்கை மட்டுமே வாழத் தகுதியானது. கடவுளை நேசிப்பவருக்கு ஒரே ஏக்கம், ஒரே கவலை, அதாவது கடவுளுடன் ஐக்கியமாக வேண்டும். அன்பனை நித்திய வாழ்விற்கு அழைத்துச் செல்லும் நிஜ வாழ்க்கை இதுதான்.

1960 ஏப்ரல் 15 புனித வெள்ளி அன்று காலை பாபா, சத்குரு பயாஸித் (PERFECT MASTER BAYAZID) பற்றி விளக்கினார்:

பயாஸித் ஒரு குதுப், ஸூஃபி உலகில் நன்கு அறியப்பட்டவர். ஒரு ஸூஃபி கவிஞர் இவ்வாறு பாடியுள்ளார்: "பல காலச் சுழற்சிக்குப் பிறகுதான், பயாஸித் போல் ஒருவர் பிறக்கிறார்!" அவர் கூராஸான் (KHURASAN, ஈரான்) நாட்டைச் சேர்ந்தவர். ஒருமுறை, 70 மைல் தூரம் நடந்து வந்த ஒருவர், பயாஸித்திடம் வந்து, "எனது சகோதரர் உங்கள் மீது ஆழ்ந்த அன்பு வைத்திருக்கிறார். அவர் உடல்நலம் குன்றி இருக்கிறார், உங்களை அவரிடம் அழைக்கிறார். அவரால் இவ்வளவு தூரம் பயணிக்க முடியாது; ஆதலால் அவர் உயிரைத் துறப்பதற்கு முன்பு, நீங்கள் அவரைப் பார்க்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் என்னை அனுப்பியுள்ளார்" என்று கூறினார்.

மிகவும் வயதாக இருந்தாலும், பயாஸித் ஒரு வாரத்திற்கு தினமும் ஏறக்குறைய பத்து மைல்கள் நடந்து, தனது அன்பரிடம் சென்றார். இதுவரை தங்கள் ஊரில் காலடி எடுத்து வைக்காத அவர், அன்பர் ஒருவரைப் பார்க்க மட்டுமே வந்தது ஊர் மக்களை வியப்பில் ஆழ்த்தியது.

அந்த அன்பரைப் பார்த்ததும், "எனது பணி முடிந்தது" என்று பயாஸித் அறிவித்தார். ஒவ்வொரு நாளும் பத்து மைல்கள் கடந்து, அவர் தனது இல்லத்திற்குத் திரும்பிச் சென்றார்.

ஒவ்வொரு நாளும் தனது மேலங்கியை மாற்றி, சட்டைப் பையில் ஏதேனும் உள்ளதா என்று பார்ப்பது அவரது பழக்கம். வீட்டிற்குத் திரும்பிய அவர் தனது மேலங்கியைக் கழற்றிப் பார்த்தபோது, எறும்பு ஒன்று அதில் இருந்ததைக் கண்டு பயாஸித் நினைத்தார்: "இந்த எறும்பு அந்த ஊரிலிருந்து வந்ததாக இருக்கவேண்டும்" என்று கூறி, மீண்டும் அந்த இடத்திற்குத் திரும்பி நடந்தார். 70 மைல்கள் நடந்து, எறும்பை அங்கு விட்டுவிட்டு, மீண்டும் தமது ஊருக்குத் திரும்பிய பயாஸித், விரைவில் தனது உடலைத் துறந்தார்.

அவர் ஏன் திரும்பிச் சென்றார்? அது எந்த அளவுக்கு அர்த்தமுள்ளதாக இருந்தது? அவர் என்ன பணிபுரிந்தார்? என்பதை புத்தித்திறனால் கிரகிக்க முடியாது. அவர் ஏன் இந்தப் பணியைச் செய்கிறார் என்பது அவருக்கு மட்டுமே தெரியும். எனவே, நான் எப்பொழுதும் சொல்கிறேன்: குருநாதர் சொல்வதைச் செய்யுங்கள், உங்கள் பொது அறிவைப் பயன்படுத்தாதீர்கள். பரிபூரண குருநாதரின் பணி மற்றும் அறிக்கைகள் மனித அறிவுக்கு எட்டாதவை. அவருடைய அறிவுறுத்தல்களைத் தவறாமல் தொடர்ந்து பின்பற்றுங்கள்.

ஒருமுறை, ஆர்வமும், சந்தேக நோக்கமும் கொண்ட ஒருவர் பயாஸித்திடம் சென்று, "நீங்கள் பரிபூரணமானவர் ஆதலால், பிறரின் எண்ணங்களை அறிந்திருக்க வேண்டும். நான் இப்போது என்ன நினைத்துக் கொண்டிருக்கிறேன், சொல்லுங்கள்?" என்று கேட்டார்.

அதற்கு பயாஸித் பதிலளித்தார்: "நீங்கள் நினைக்கக் கூடாததை நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள், கேட்கக் கூடாததைக் கேட்கிறீர்கள். திறந்த மனதுடன், நாவை அடக்கிக்கொண்டு வந்திருந்தால், இந்தத் தேவையான கண்டனத்திற்கு பதிலாக, வேண்டியதை நீங்கள் அடையப் பெற்றிருப்பீர்கள்."

பாபா அதே நாளில், இதர பரிபூரண குருநாதர்களைப் பற்றி பேசினார்:

ராமகிருஷ்ண பரமஹம்சர் கற்றறியாதவர். ஒரு நாள் ஒரு மனிதர் ராமகிருஷ்ணருக்கு ஒரு நிலத்தை வழங்க விரும்பி அவரை அணுகினார். ஆவணப் பத்திரங்களைப் பதிவு செய்ய அரசு அதிகாரி ஒருவர் வர இருந்ததைக் கேள்விப்பட்டு, அச்சத்தில், பெரிய அதிகாரி இங்கு வந்தால் என்ன நடக்கும் என்ற சிந்தனையில் ஆழ்ந்தார்! எல்லாம் வல்லவராகவும், அனைத்தையும் அறிந்தவராக இருந்தும், அப்படிப்பட்ட விளையாட்டை அவர் விளையாடினார்.

சாய்பாபா, களிமண் குழாய் மூலம் புகைப்பிடிப்பதைப் பழக்கமாகக் கொண்டிருந்தார். ஒருமுறை ஏழைப் பெண் ஒருத்தி தனது குழந்தையுடன் அவரிடம் சென்றபோது, சிறுவன் அவர் முன்னால் நிர்வாணமாக நின்று கொண்டிருந்ததைப் பார்த்து, அவர் அந்த ஏழைப் பெண்ணிடம் கேட்டார்: "இது

ஆணா அல்லது பெண்ணா?" இவ்வாறு, அனைத்தையும் அறிந்திருந்தும், சாய்பாபா அவரது அறியாமையை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்.

நானும் அப்படித்தான். நான் ஒரு நபருக்கு நாளை இறை-உணர்தலை வழங்குவதாக உறுதியளிக்கிறேன்; ஆனால், அதே நேரத்தில் அவருக்கு நூற்றுக்கணக்கான பிறவிகள் தேவை என்பதை நான் அறிவேன். அத்தகைய நம்பிக்கைக்குரிய செயலில், அறியாமை வெளிப்படுகிறது. உயர்ந்தவர்களில் உயர்ந்தவனான நான், எப்படி இத்தகைய அறியாமையில் இருக்கிறேன் என்பதைப் புரிந்துகொள்வது கடினம்!

ஏனெனில், நான் அவதார புருஷராக இருப்பதால், நான் நடிக்கவில்லை; ஆனால் எல்லாவற்றிலும், எல்லோரிலும் எல்லாமுமாக மாறுகிறேன். எல்லையற்ற ஞானமாகத் திகழும் அவதார புருஷர், எல்லையற்ற அறியாமையாகவும் மாறுகிறார். ஆனால் உயர்ந்த மற்றும் மிகக் குறைந்த உணர்வு நிலைகளிலும், அவற்றிற்கு இடையிலும் ஒரே நேரத்தில் இருக்கும் எனது நிலையை நீங்கள் எப்படிக் கற்பனை செய்ய முடியும்? மிக உயர்ந்த நிலையிலிருந்து, எனக்கு எல்லாம் தெரியும், அதே வேளையில், பிற உணர்வு நிலைகளில் எனக்கு எதுவும் தெரியாது.

நான் நடிக்கும் இந்த இரட்டை வேடம் ஓரளவிற்கு ஒரு பாரசீக ஈரடிக் கவிதைகளில் சித்தரிக்கப்பட்டுள்ளது:

நான் மிக உயர்ந்த கோளத்தில் தோன்றுகிறேன்,
ஆனால் அதே நேரத்தில்,
என்ன இருக்கிறது என தெரியவில்லை
எனது பாதங்களின் அருகில்;
நித்திய இறை-மனிதனாக நான் ஒரே நேரத்தில்
இறைவன் மற்றும் மனிதன்,
மேலும் அனைத்திற்கும், அனைத்து
உயிரினங்களுக்காகவும் நான்,
அனைத்து நிலைகளிலும் என்னை
தலை தாழ்த்தி இருக்கச் செய்கிறேன்,
அதனால் என்னை 'பிரிக்க முடியாத
ஏக இறைவனாக' அறியச் செய்கிறேன்.

நான் பிரபஞ்சத்தின் இறைவன்; அனைத்தும் நான் அறிவேன்.
உன் உடலை உனக்குக் கொடுத்து, நான் உன்னில் வாழ்கிறேன்,
ஆனாலும் உன் உடல்நிலை குறித்து அனுதினமும் கேட்கிறேன்.
ஏனென்று தெரியுமா? நீ திடகாத்திரமாக இருக்க விரும்புகிறேன்,
அதனால் நான் உன்னை என் அன்பில் தூள் தூளாக்கி விடுகிறேன்!

நான் கொடுக்கிறேன் அதே வேளையில் கோருகிறேன் உன்னிடம்.
இதுவே படைப்பில் நான் நித்தியமாக நடிக்கும் இரட்டை வேடம்.

வழக்கம் போல, பாவ் கல்சூரி குருபிரசாத்தில் இரவுக் கண்காணிப்புப் பணியைத் தொடர்ந்தார். ஒரு நாள் இரவு பாபா, பாவ் கல்சூரியிடம் ஒரு குவளை தண்ணீர் கேட்கவே, அவர் குவளையை நிரப்பும் வேளையில், பாபா அவரிடம் விளக்குகளைப் போடுமாறு சைகையால் தெரிவித்தார். விளக்குகளை எரியவிட்டு, பாபாவிடம் தண்ணீரை எடுத்துச் சென்றபோது, பாபா சீற்றமடைந்து, **"நான் தண்ணீர் கேட்டேன், நீங்கள் விளக்குகளைப் போடச் சென்றீர்கள்? என்ன ஒரு முட்டாள் நீங்கள்!"**

"ஆனால் நீங்கள் அவற்றைப் போடச் சொன்னீர்கள்," பாவ் கல்சூரி கூறினார். "நான் எப்படி இரண்டு விஷயங்களை ஒரே நேரத்தில் செய்ய முடியும்?"

அதிருப்தியுடன், பாபா, **"எனக்கு முதலில் தண்ணீர் வேண்டியதாக இருந்தது. நீங்கள் அதை முதலில் எனக்குக் கொடுத்திருக்க வேண்டும், பிறகு விளக்குகளை எரியவிட்டிருக்க வேண்டும்"** என்று சைகையால் தெரிவித்தார். பாபா தொடர்ந்து பாவ் கல்சூரியைக் கண்டித்தார்; பின்னர் எரச், கோஹெர் இருவரையும் அழைத்து, பாவ், அவருடைய கட்டளைகளுக்கு சரியாகக் கீழ்ப்படியவில்லை என்றும், அவரை பயங்கரமாகத் துன்புறுத்துவதாகவும் புகார் கூறினார்.

மறுநாள், பாவ் கல்சூரி கண்காணிப்பில் இருந்தபோது, பாபா விளக்குகளைப் போடுமாறு சைகை செய்தார். அவர் அதைச் செய்யும்போது, பாபா தண்ணீர் கேட்டார். முந்தைய நாள் கற்றுக்கொண்ட பாடத்தை நினைவு கூர்ந்த பாவ் கல்சூரி, முதலில் விளக்கை எரியவிட்டு தண்ணீர்க் குவளையை பாபாவிடம் எடுத்துச் சென்றார். மிகவும் கோபமடைந்த பாபா, **"எனக்கு ஏன் முதலில் தண்ணீர் கொடுக்கவில்லை?"** என்று கேட்டார்.

அதற்கு பாவ் கல்சூரி, "நீங்கள் முதலில் விளக்குகளை எரியவிடச் சொன்னீர்கள், அப்படியே செய்தேன். நேற்று, முதலில் கொடுத்த உத்தரவை நான் முதலில் நிறைவேற்ற வேண்டும் என்று சொன்னீர்கள்."

"ஆனால் இன்று நீங்கள் முதலில் எனக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று நான் விரும்பினேன்."

"ஆனால் முதலில் உங்களுக்கு எது வேண்டும் என்று நான் எப்படி அறிவேன்?"

"அதனால்தான் கீழ்ப்படிதல் என்பது இயலாத காரியம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறேன்! என்றாலும், அதுபோன்ற சந்தர்ப்பத்தில், நீங்கள் உங்கள் தவறை ஒப்புக்கொண்டிருக்க வேண்டும். 'ஆம், பாபா, மன்னிக்கவும். நான் தவறு செய்துவிட்டேன்' என்று சொல்லியிருக்க வேண்டும். ஆனால் அதற்கு பதிலாக, நீங்கள் என்னுடன் தொடர்ந்து வாக்குவாதத்தில் ஈடுபடுகிறீர்கள், இது என்னை மிகவும் எரிச்சலடையச் செய்கிறது! நமது தவறுகளை உண்மையாக ஒப்புக்கொள்வது மிகவும் பாராட்டத்தக்கது. என்னுடன் ஒருபோதும் வாதிடாதீர்கள்.

"உண்மையைத்தான் சொல்கிறேன், இன்று நீங்கள் முதலில் தண்ணீர் கொடுக்கவேண்டும் என்று ஆசைப்பட்டேன். எனக்கு என்ன வேண்டும் என்று

உங்களுக்குத் தெரியாதபோது, உங்களுக்கு அது குறித்த அறிவு இல்லை என்று நிரூபணமாகிறது. மேலும், நீங்கள் அறியாதவராய் இருக்கும்போது, ஏன் என்னிடம் வாக்குவாதம் செய்கிறீர்கள்? நான் சொன்னதை நீங்கள் ஏன் ஏற்கவில்லை? இன்று, நீங்கள் இரண்டாவது கட்டளைக்கு முதலில் கீழ்ப்படிய வேண்டும் என்று நான் விரும்பினேன்.

"எனது வழிகளை உங்களால் புரிந்து கொள்ள முடியாவிடில், குறைந்தபட்சம் உங்கள் தவறை வாதம் செய்யாமல் ஏற்றுக்கொள்ளுங்கள். உங்கள் தவறை முழு மனதுடன் ஒப்புக்கொண்டால், ஒரு நாள் என் ஆசை என்னவென்று உங்களுக்குப் புலப்படும். அதற்குப் பிறகு நான் உங்களுக்கு என்ன வேண்டும் என்று சொல்ல வேண்டியதில்லை."

இரவுக் கண்காணிப்பைத் தவிர, ஒரு நாள் பாபா, பாவ் கல்சூரியிடம் நாடகம் ஒன்றை எழுதுமாறு கூறி, பாபா அதன் கருப்பொருளை விளக்கினார். பாபா அதற்கு 'அன்பின் மகிமை' (THE GLORY OF LOVE, பிரேம் மஹிமா) என்று பெயரிட்டார். அவர் அத்துடன் இணைக்க வேண்டிய சில கருத்துகளை வழங்க, பாவ் கல்சூரி அதை விரிவுபடுத்தி, பாபா குருபிரசாத்தில் இருந்தபோதே நாடகம் நிறைவு செய்யப்பட்டு, அவர் முன்னிலையில் வாசிக்கப்பட்டது. பாபா இரண்டு கஸல்களை இயற்றி அத்துடன் இணைக்க வேண்டும் என்று கூறினார், இவை ருஸ்தம் காக்காவிற்கு அனுப்பப்பட்டு, அவர் இந்தப் பாடல்களுடன் அஹமதுநகர் மையத்தில் கூட்டத்தைத் தொடங்குமாறு அறிவுறுத்தப்பட்டார்.

ஒரு நாள் ஃபிரான்சிஸ், பாபாவிடம் கூறினார், **"மேலதிகமாக நான் பார்க்கையில், ஏன் எவரேனும் இறை உணர்வை அடைய விரும்புகிறார் என்று எனக்கு மேலதிக ஆச்சரியமாக உள்ளது - அது மாபெரும் விஷயம். கடவுள் மிகவும் பெரியவர், அதனால்தான்!"**

பாபா சிரித்துக்கொண்டே அவருக்கு முத்தம் ஒன்றைக் கொடுத்தார். ஆனால் சில சமயங்களில் ஃபிரான்சிஸும் பாபாவின் சீற்றத்திற்கு ஆளானார். ஒரு நாள், பாபா ஏதோ ஒன்றிற்காக அவரைக் கண்டித்தபோது, ஃபிரான்சிஸ் கண்கலங்கி அழத் தொடங்கினார், மிகவும் வருந்தினார். பின்பு பாபா அவரை அழைத்து சில எழுத்துப் பணிகளைப் பற்றி அறிவுறுத்தினார். பாபா அவருக்கு உறுதியளித்தார், **"நீங்கள் மனம்தளர வேண்டாம்; நீங்கள் உண்மையிலேயே சிறப்பாகச் செய்கிறீர்கள், நான் உங்களைக் குறித்து மிகவும் திருப்தி அடைகிறேன். நான் முன்பு செய்ததை மட்டுமே சொன்னேன், அதனால் உங்கள் இதயம் மிகவும் சௌகரியமாக உணரும்!"** பாபா அவருக்கு ஒரு முத்தம் கொடுத்தார், ஃபிரான்சிஸ், இப்போது அளவிலா மகிழ்ச்சியில், நன்றியுடன் சிரித்தார்.

ஒரு நாள் நாக்பூரைச் சேர்ந்த என்.எஸ். அகர்வால் (N.S. AGARWAL), ஆறுதல் வேண்டி சில மணி நேரங்களுக்காக வந்து, பாபாவின் பாதங்களில் தலை வணங்கினார். அவர் தனது இருக்கைக்குத் திரும்பியதும், பாபாவிடம், தரிசனம் வழங்குமாறு கேட்டுக் கொண்டார், "நான் தரிசனத்திற்கு வந்துள்ளேன்; எனக்கு தரிசனம் வழங்க வேண்டும்."

“இப்போதுதான் பாபாவின் தரிசனத்தைப் பெற்றுக்கொண்டீர்கள்!” எரச் குறிப்பிட்டார்.

இருந்தும், அகர்வால் கூப்பிய கரங்களுடன் வேண்டினார்: “பாபா, எனக்கு தரிசனம் வழங்குமாறு நான் உங்களிடம் பிரார்த்திக்கிறேன்.”

“உண்மையான தரிசனம் - என்னை, எனது சுய ரூபத்தில் காண்பது என்பது, அரிதான, பாக்கியம் வாய்ந்த ஒருவருக்கு மட்டுமே கிடைக்கும்” என்றார் பாபா.

“அர்ஜுனனுக்கு பஹவான் கிருஷ்ணர் அருளியது போல, நீங்கள் என்னை ஆசீர்வதித்தால், எனக்கு விஷ்வரூப தரிசனம் கிடைக்கும்.”

“அர்ஜுனன் அடையப் பெற்ற விஸ்வரூபம் அல்லது விராட் தரிசனம் உண்மையான தரிசனம் அல்ல. அது வெறும் கிருஷ்ணரின் உலகளாவிய சரீரத்தின் தரிசனம். விராட் தரிசனத்தில் அச்சம் நிறைந்திருக்கும். அதனால்தான் அர்ஜுனனுக்கு அச்சம் ஏற்பட்டது. உண்மையான தரிசனத்தில் ஆனந்தம் மட்டுமே இருக்கும்.”

ஒருவர் இடையே குறுக்கிட்டு, அகர்வாலிடம் கூறினார், “அதனால்தான் அர்ஜுனன், கிருஷ்ணனிடம் பிரபஞ்ச தரிசனத்தைத் திரும்பப் பெறுமாறு பலமுறை வேண்டிக்கொண்டார்; மேலும் அவருடைய வழக்கமான கவர்ச்சிகரமான மனித உருவில் மீண்டும் தோன்றுமாறு கெஞ்சினார். எனவே நீங்களும் இப்போது இந்த அவதார உருவில் பாபாவை தரிசனம் செய்வதில் திருப்தி அடையவும். இதுவும் உங்கள் நல்ல அதிர்ஷ்டத்தால் விளைந்தது.”

அகர்வால் அதற்கு பதிலளித்தார், “ஏனெனில், நான் திருப்தியடையவில்லை. மனம் கலக்கத்தில் ஆழ்ந்து, அதிருப்தியில் உள்ளது; உண்மையான தரிசனத்திற்காக இதயம் ஏங்குகிறது.”

அதைக் கேட்டு பாபா இவ்வாறு எடுத்துரைத்தார்: **“நல்லது! ஆனால் உங்களுக்கு நிஜ தரிசனத்தைப் பற்றி எதுவும் தெரியாது. இது விஷ்வரூப தரிசனத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டது. நிஜ தரிசனத்தில், எப்பொழுதும் புது பொலிவூட்டும் ஆனந்தம் நிரம்பி வழியும்; அச்சம் என்பது இல்லை. அத்தகைய தரிசனம் பெறுவதற்கான ஒரே வழி, அன்பின் மூலம் அணுகுவது; என்னை நேசிப்பது எளிதானது அல்ல; அன்பைப் பின்பற்றுவது என்பது, அதிக மற்றும் பெரிய அளவிலான தியாகத்திற்கு தன்னைத் தயார்படுத்திக் கொள்வதாகும், அன்பின் வாழ்க்கையை வாழ்வதில், எதையும் அல்லது அனைத்தையும் என் அடையாளக் குறிப்பிற்கு இணங்கினாற் போல விட்டுவிடுவதற்கு நீங்கள் தயாராக இருக்க வேண்டும் அல்லது உங்கள் விருப்பத்திற்கு இணங்க உங்கள் குடும்பம், வணிகம் அல்லது சமூகத்துடனான தொடர்பை தக்கவைத்துக் கொள்ள வேண்டும்.**

“இது எளிதல்ல. உங்கள் சுய வழியில் என்னை நேசிக்க முயற்சி செய்யுங்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் வேளையில் முற்றிலுமாகக் கீழ்ப்படியுங்கள். ஆனால் நீங்களாகவே எந்த

அறிவுறுத்தல்களையும் கேட்க வேண்டாம். கவலைப்பட வேண்டாம். நான் உங்களை விரும்புகிறேன்."

1960 ஏப்ரல் 17 ஞாயிற்றுக்கிழமை குருபிரசாத்தில் மிகவும் நெரிசலான நாள். காலை 8:00 மணி முதல் மதியம் வரை, அமெரிக்காவில் இருந்த வேளையில் பாபாவைப் பற்றிக் கேள்விப்பட்ட தஸ்தூர் போத் (DASTUR BODH) என்ற ஸொராஸ்ட்ரிய பிரதான பாதிரியார் உட்பட, ஆயிரக்கணக்கானோர் பாபாவின் தரிசனத்தைப் பெற்றுக்கொண்டனர். பிரபல இந்திய கிரிக்கெட் வீரரான பாலி உம்ரிகரும் (POLLY UMRIGAR) அவரது மனைவி டினூவுடன் (DINOO) வந்திருந்தார்.

உருது மொழியில் பேராசிரியர் தஸ்த்கிர் (PROFESSOR DASTGIR) மொழிபெயர்த்த 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தின் ஒரு பகுதியைக் கேட்ட பாபா, அவரிடம் கூறினார், **"உங்கள் உள்ளம் வறண்டுள்ள அதே வேளையில், மனம் மிகவும் மென்மையாக உள்ளது. உங்கள் புத்தித்திறனால் மொழிபெயர்க்கப்பட்ட இந்தத் தொகுப்பு, பலரை அழ வைக்கும். பிறரின் இதயங்களை மென்மையாக்குவதன் மூலம், நீங்களும் அவர்களைப் போல் ஆகிவிடுவீர்கள். எனது பார்வை உங்கள் மீது இருக்கும். உங்களின் முயற்சியை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன்."**

இதற்கிடையில், ஹில்ட ஹால்பெர்ன் (HILDE HALPERN), பாபாவின் செய்திகளை ஜெர்மன் மொழியில் மொழிபெயர்த்து 'லிபே அண்ட் வெய்ஷெய்ட்' (LIEBE UND WEISHEIT, அன்பு மற்றும் ஞானம்) என்ற சிறிய புத்தகத்தை வெளியிட்டார். பாபா அவரிடம், **"உங்கள் தாய்மொழியில் என் அன்பையும் ஞானத்தையும் பரப்பும் உங்கள் முயற்சியை ஆசீர்வதிக்கிறேன்"** என்று கூறினார்.

இந்தக் காலகட்டத்தில், பாபாவின் அண்ணன் மகள் குல்னாரின் கணவர் ஜெஹாங்கு ஸுகத்வாலா பூனா விமான நிலையத்தில் பணிபுரிந்து வந்தார். ஒரு நாள் மாலை, அவர் தனது இரு சக்கர வாகனத்தில் வீடு திரும்பும்போது, சாலையில் இருந்த பள்ளத்தில் மோதி, அவரது பிரேக் பழுதானது. அவர் சாலையின் வெகுதூரத்தில் வீசப்பட்டார், அவருடைய ஸ்கூட்டர் எதிர் திசையில் பறந்தது. அவர் காயமின்றி தப்பித்தார், மேலும் அவர் பாபாவின் பெயரை முழு மனதுடன் உச்சரித்ததே அதற்குக் காரணம் என்று கூறினார்.

மறுநாள் மதியம், ஜெஹாங்கு, பாபாவிடம் அவர் உயிர் தப்பிய 'அற்புதமான' நிகழ்வை எடுத்துரைத்தபோது, பாபா அவரைத் திருத்தினார்: **"இது என்னுடைய அதிசயம் அல்ல. நான் அற்புதங்கள் புரிவதில்லை! அதை, விபத்து நடந்த வேளையில் நீங்கள் முழு மனதுடன் நினைவில் கொண்டிருந்த எனது பெயரின் அதிசயம் என்று அழைக்கவும்.**

"எல்லாமே தலைகீழாக நடக்கும்போது, மனம் உதவியற்றதாக மாறும், அது இதயத்தை முழுவதுமாக நம்பியிருக்க வேண்டும். இது நீங்கள் எனது விருப்பத்திற்கு அடிபணிந்து, என் உதவியை மட்டுமே நம்பும்

தருணங்கள். நீங்கள் எல்லாவற்றையும் என்னிடம் விட்டுவிட்டால், உங்களைப் பற்றி கவலைப்படாமல் இருக்கும் அளவுக்கு எனக்குத் துணிச்சல் இருக்காது, அப்போது நீங்கள் இக்கட்டான சூழ்நிலையிலிருந்து விடுபடுகிறீர்கள்."

ஏப்ரல் 18 அன்று மஹாராணி ஷாந்தாதேவி, பாபாவிற்கும் அவருடன் இருந்த அனைவருக்கும் சுவையான மதிய உணவை வழங்கினார்; மேலும், வாட்வே மீண்டும் பாபாவுக்காக மதியம் 2:00 முதல் மாலை 5:00 மணி வரை, ஒரு சிறப்பு இசை நிகழ்ச்சியை நடத்தினார். மற்றுமொரு சந்தர்ப்பத்தில், தேஷ்முக் மற்றும் நாக்பூரைச் சேர்ந்த வழக்கறிஞர் தின்கர் வி. டாகே (DINKAR V. DHAGE) ஆகியோர் மண்டலி மற்றும் சில நெருங்கிய பூனா அன்பர்களுக்கு மதிய உணவை வழங்கினர், பாபா அவர்களுடன் அமர்ந்திருந்தார்.

ஆந்திரா மற்றும் ஹமிர்பூரை சேர்ந்த அன்பர்களுக்கு ஏப்ரல் 18 அன்று பாபாவுடனான சந்திப்பிற்கு நேரம் வழங்கப்பட்டது. புக்காரின் குடும்பத்தினரும் கலந்துகொண்டனர், புக்காரின் மனைவியிடம் பாபா வினவினார், **"புக்கார் எங்கே தங்க வேண்டும், இங்கேயா அல்லது ஹமிர்பூரிலா?"**

"இரண்டு இடங்களிலும்" என்று பதிலளித்தார்.

பாபா சைகையால் தெரிவித்தார், **"என்னால் மட்டுமே அப்படி இருக்க முடியும், நான் இரண்டு இடங்களிலும் வாழ்கிறேன்!**

அடுத்த நாள், பாபா மீண்டும் தனது ஹமிர்பூர் அன்பர்களுடன் நேரத்தை செலவிட்டார். அவர்கள் அனைவரும் ஏழைகள், ஆனால் அதிக பணம் செலவு செய்து, இந்த நீண்ட நெடிய பயணத்தை மேற்கொண்டனர். பாபா இவ்வாறு குறிப்பிட்டார்:

நான் அவர்களின் அன்பை பெரிதும் விரும்புகிறேன்! அவர்களுக்கு உரைகளும் விளக்கங்களும் தேவையில்லை. அவர்கள் அன்புடனும் அன்பிற்காகவும் வருகிறார்கள். அவர்களுக்கு என் அரவணைப்பும் தரிசனமும் போதுமானது. அவர்களுக்கு விளக்கமளிக்கும் தலைவலியை நான் அனுபவிக்க வேண்டியதில்லை.

அவதார புருஷர் பூமியில் வரும் போது, அவர், வறுமையில் வாடும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் நோயால் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து அன்பைப் பெறுகிறார். மீனவர்கள் கிறிஸ்துவின் தோழர்கள், கிருஷ்ணருக்கு மாடு மேய்க்கும் சிறுவர்கள். இந்த (ஹமிர்பூர்) மக்களே எனக்குப் பிரியமானவர்கள்! அவர்கள் ஏழைகள், ஆனால் அவர்களின் இதயம் தூய்மையானது. அவர்களின் அன்பு எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

இங்கு வரும் எழுத்தறிவாளர்கள் மற்றும் அறிவுஜீவிகளிடம் அன்பை உருவாக்க மட்டுமே விளக்கங்களும் சொற்பொழிவுகளும் அவசியம். இவர்களுக்காக அல்ல.

ஒரு நாள் பாபா அங்குக் கூடியிருந்தவர்களிடம் கூறினார்: **"என்னைப் பொறுத்தவரை நீங்கள் அனைவரும் ஜனாதிபதிகள், பிரதமர்கள் மற்றும் அமைச்சரவை மந்திரிகள். அவர்கள் வர முடியும், வரலாம், வருவார்கள், ஆனால் அன்பிற்காக வருபவர்கள் - அது முற்றிலும் வேறுபட்டது."**

ஒரு நாள் பஜனை நிகழ்ச்சிக்குப் பிறகு, பாபா, பாடகர்கள் மற்றும் இசைக்கலைஞர்களிடம் இவ்வாறு கூறினார்:

கடவுள் உளதாயிருக்கிறார் என்று அனைத்து புனித நூல்களிலும் விதிவிலக்கின்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ஆன்மீகவாதிகள், துறவிகள் மற்றும் அனைத்து நம்பிக்கைகளிலிருந்தும் இறை உணர்வை எய்திய குருநாதர்கள், கடவுள் மட்டுமே உளதாயிருக்கிறார் என்பதை உறுதிப்படுத்துகிறார்கள். எனவே கடவுளைக் காண முடியும் என்பது தெளிவாக வெளிப்படும் அதே வேளையில், அவரைக் கண்டுபிடித்து, கண்கூடாகக் காண்பது உங்கள் கடமையாகும்.

உங்கள் வாழ்க்கையை உள்ளங்கையில் ஏந்திச் சென்றால் மட்டுமே இது சாத்தியமாகும். அப்போதுதான் கடவுளைக் காணும் ஆர்வத்தை உருவாக்க முடியும். பௌதீக உலகில் நீங்கள் பார்க்கும் பொருட்களை விட கடவுளை மிகத் தெளிவாகப் பார்க்க முடியும். நீங்கள் கோயில்கள், மசூதிகள், தேவாலயங்கள் அல்லது நெருப்புக் கோயில்களுக்குச் செல்கிறீர்களா அல்லது சமூகத்தில் தற்போது வழக்கத்தில் நிலவும் சடங்கு சம்பிரதாயங்களைப் பின்பற்றுகிறீர்களா, இல்லையா என்பது முக்கியம் அல்ல. கடவுளைக் காண வேண்டும் என்ற தீராத ஆவல்தான் உண்மையில் இன்றியமையா தேவை. இதற்கு, நீங்கள் உங்கள் குருநாதரின் மீது அசைக்க முடியாத நம்பிக்கையையும், அவருடைய ஒவ்வொரு கட்டளையையும் முழு விருப்பத்துடன் நிறைவேற்றுவதற்கு உறுதி தளரா தைரியத்தையும் கொண்டிருக்க வேண்டும்.

சில நாட்களுக்கு முன்பு, நீங்கள் என் முன்னிலையில் 'எனது குருநாதர் இதை என்னிடம் சொன்னார்...' என்ற பாடலை ஒருமித்த குரலில் பாடினீர்கள்: மேலும் இன்று, நான் இப்போது உங்களிடம் சொன்னது அனைத்தும் சொல்லவும், கேட்கவும், நடைமுறையில் கடைப்பிடிக்கவும் உகந்தது.

குருபிரசாத்தில் பாபா சீட்டு விளையாடுவது வழக்கம். ஒரு நாள், ஒரு நீதிபதி முதல் முறையாக 'லா ரிஸ்க்' (LA RISQUE) என்ற விளையாட்டில் பங்கெடுத்தார். பாபா அவருக்கு விளக்கினார்: **"நான் மூன்று காரணங்களுக்காக சீட்டு விளையாடுகிறேன்.**

- **ஒன்று: உலகளாவிய பணியின் பாரம் குறைகிறது;**
- **இரண்டு: அனைத்து விளையாட்டு வீரர்களின் மனமும் மிகவும் இயல்பான முறையில் என் மீது கவனம் செலுத்துகிறது;**

- **மூன்று: இந்த விளையாட்டில், வீரர்கள் இரு அணிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வோர் ஆட்டத்தின் முடிவிலும், விளையாட்டில் தோல்வியடைந்தவர்கள் அனைவரும், உயர்ந்தவர்களில் உயர்ந்தவரான என் முன்னால், தங்கள் மூக்குகளைக் கம்பளத்தில் உரச வேண்டும். இது ஓர் அரிய பாக்கியம், இதனால், தோல்வியுற்றவர்கள் வெற்றியாளர்களாக மாறுகிறார்கள்."**

பாபா, உருது மொழியில் ஒரு வரியை மேற்கோள் காட்டி முடித்தார்: **"இது வெற்றியாளர் வெட்கப்படும் ஒரு விளையாட்டு, தோல்வியுற்றோர் மகிழ்ச்சியும், முகமலர்ச்சியும் அடைவர்."**

1960 ஏப்ரல் 24 ஞாயிற்றுக்கிழமை அன்று, அஹமதுநகர் பஜனை குழுவினருக்கு (குழந்தைகள் உட்பட 26 பேர்), குருபிரசாத்தில் பாபா முன் பாட வாய்ப்பு வழங்கப்பட்டது.

இரண்டு நாட்களுக்குப் பின்னர், 26ஆம் தேதி, பாபா, 'ஆன்மீகப் பாதை'யைப் (SPIRITUAL PATH) பற்றி உரை நிகழ்த்திக் கொண்டிருந்தபோது, **"தேடப்படும் அந்த ஏக இறைவனே தேடுபவன் என்பதுதான் வேடிக்கை. அதே ஏக இறைவனே, தேடுபவரை இவ்வாறு கேட்கத் தூண்டுகிறார்: 'நான் கடவுளைக் கண்டுகொள்ள முடியுமா?'... 'நான் எப்படி கடவுளைக் கண்டுகொள்வது?'...**

'நான் கடவுளை எங்கே காணலாம்?' என்று தேடுபவர் கேட்பதும், உண்மையில் கடவுள், 'தேடுபவர் எங்கே இருக்கிறார்?' என்று தேடுவதும் ஒன்றுதான்.

ஓர் இளம் பக்தர் ஒரு நாள் பாபாவிடம், இந்தத் தீவிரமான கேள்வியைக் கேட்டார்: "இந்தப் பிறவியில் நான் இறைநிலையை எய்த முடியுமா?"

அதற்கு பாபா, **"ஏன் இவ்வளவு ஆவலாக, பொறுமையின்றி இருக்க வேண்டும்? எனது பதிலால் உங்களுக்கு என்ன லாபம்? இந்தப் பிறவியிலேயே உண்மைப்பொருளை உணர்ந்து கொள்வீர்கள் என்று நான் சொல்வதானால், இந்த ஊக்கமளிக்கும் வார்த்தைகளைக் கேட்பதைத் தவிர, வேறு எதையும் அடையப் பெற முடியுமா? நான், 'இல்லை** (இந்த வாழ்நாளில் இல்லை)', **உண்மைப்பொருளை உணர இன்னும் பல பிறவிகள் தேவை' என்றும் கூறுவதானால், நீங்கள் பதட்டமாகவும், மனச்சோர்வுடனும் இருப்பீர்கள் அப்படித்தானே!"** என்றார்.

"இரண்டிலும் என்னை எதுவும் பாதிக்காது" என்று அந்த இளைஞர் பதிலளித்தார்.

"அப்படியானால், உங்கள் கேள்வியை முழுவதுமாக மறந்துவிடுங்கள்! நீங்கள் மிகுந்த முயற்சியுடன் உண்மைப்பொருளைத் தேடுவதை விட, உங்கள் மூலமாகவும் - அனைவரின் மூலமாகவும் - தன்னை வெளிப்படுத்திக் கொள்வதில், ஏக இறைவனான பரம்பொருள் எல்லையற்ற ஆர்வத்துடன் உள்ளது என்பது மிகவும் உறுதியானது.

“உண்மைப்பொருளை விரும்புவது கூட தேவையற்ற விருப்பமாகும், மேலும் உண்மைப்பொருள் விருப்பத்திற்கு அப்பாற்பட்டது. நீங்கள் உண்மைப்பொருளைக் கோர முடியாது; அது தெரியாமலே உதயமாவது. பரிபூரண குருராதரிடம் தொடர்ச்சியாக, நிபந்தனையற்ற முறையில் சரணடைவதன் மூலம் மட்டுமே, உண்மைப்பொருளை அடைய முடியும்.”

பாபா தொடர்ந்து கூறினார், **“மறுபடியும், ஆன்மீகப் பாதை மிகவும் வழுக்கும் தன்மையுடையது என்பதை நினைவில் கொள்ளுங்கள். இல்லாததை இருப்பது போலக் காட்டிக் கொள்ளாமல், உங்களைக் காத்துக் கொள்ளவும். இது மிகவும் மோசமான ஒன்று. நேர்மை என்ற விளக்கு உங்களுக்குள் எப்பொழுதும் எரியட்டும். உங்கள் தேடலில் உண்மையாக இருங்கள். எனது பார்வை உங்கள் மீது இருக்கும். கவலைப்பட வேண்டாம்.”**

ஒரு பெண்மணியிடம் **‘அவதூறு அல்லது புறங்கூறல்’** (SLANDER OR BACKBITING) பற்றி விளக்கிய பாபா, கபீரின் இந்த ஈரடிக் கவிதையை மேற்கோள் காட்டினார்:

என்னை அவதூறு செய்பவர் எனது நண்பர்.
ஏனெனில், அவர் தனது சொந்த சோப்பைக் கொண்டு,
என் அழுக்கைத் தூய்மைப்படுத்துகிறார்!

“ஆகவே,” பாபா வலியுறுத்திக் கூறினார், **“முதலாவது தேவை என்பது ‘அன்பு’. இரண்டாவது ‘புறங்கூறாமை’.**

“எவரேனும் உங்களை அவதூறு கூறினால் மகிழ்ச்சியாக இருங்கள், பிறரை அவதூறாகப் பேசாமல் எப்பொழுதும் கவனமாக இருங்கள்.”

அந்தப் பெண்மணி, “பாபா, நான் எவரையும் அவதூறாகப் பேசவில்லை” என்று கூறினார்.

“எவரையும் அவதூறாகப் பேசாமல் இருப்பது நல்லது. ஆனால் பொதுவாக, மது அருந்துபவர்: ‘எனக்கு போதை ஏறுமா? நான் மது அருந்தியதே இல்லை!’ என்று முறையிடுவது வழக்கம்.

“அவதூறு கூறுபவர்களும் அப்படித்தான். ஒருவர் அவதூறு கூறுவதை எவரேனும் கவனித்து, சுட்டிக்காட்டுவதாக இருந்தால், ‘நான் அவதூறு கூறுகிறேன் என்று யார் கூறுகிறார்கள்? நான் ஒருபோதும் அவ்வாறு செய்ய மாட்டேன்’ என்று பதிலளிப்பார்.”

அந்தப் பெண்மணி, “ஆனால் உண்மையில், நான் ஒருபோதும் புறங்கூறுவதில்லை. இதுதான் உண்மை!” என்றார்.

பாபா அப்போது விளக்கினார்:

எவரேனும் ஒருவர், இன்னொருவரின் குறைகளை அவரது முதுகுக்குப் பின்னால் கூறுவதானால், அது உண்மையாக இருந்தாலும், அவதூறு என்றுதான் அர்த்தம்.

புறங்கூறலால் உருவாகும் மனப்படிவங்கள் என்ன விளைவை ஏற்படுத்துகின்றன? ஒரு நபர் ‘ஏ’, இன்னொரு நபர் ‘பி’யிடம், மூன்றாம் நபர்

‘சி’ அவர்களிடையே இல்லாத நேரத்தில், ‘அவர் ஒரு தீய மனிதர்’ என்று கூறுவதாக வைத்துக்கொள்வோம்; முதல் நபர் ‘ஏ’ இதை ‘பி’யிடம் நேரடியாகக் கூறுவதன் விளைவாக, நபர் ‘ஏ’க்கும் ‘சி’க்கும் இடையே மறைமுகமாகவும், நபர் ‘ஏ’க்கும் ‘பி’க்கும் இடையே நேரடியாகவும் மனப்படிவங்கள் பரிமாறப்படுகின்றன. இவ்வாறு, அவதூறின் விளைவாக உருவாகும் மனப்படிவங்கள் இரண்டு வகைப்படும் - நேரடியாகவும், மறைமுகமாகவும் தோன்றுபவை. இதன்மூலம், மிகமிகக் குறுகிய அளவிலான மனப்படிவங்கள் உருவாக்கப்பட்டு, லட்சக்கணக்கான பிறவிகளுக்கு அவற்றிலிருந்து விடுபடுவது கடினமாக மாறிவிடுகிறது.

மனப்படிவங்கள் ஏழு வண்ணங்களைக் கொண்டவை. காமம், கோபம் இவற்றால் உருவாகும் மனப்படிவங்கள் வெவ்வேறு வண்ணங்களைக் கொண்டிருக்கும் அதே வேளையில், புறங்கூறலால் உருவாகும் மனப்படிவங்கள் மேலும் ஆழமானவை. அவற்றைப் பற்றி நாம் தெரிந்துகொள்ள முடியாது; ஆனால் அவை மிகவும் தீய வகையைச் சார்ந்தவை, அவற்றை அழிப்பது என்பது கிட்டத்தட்ட சாத்தியமற்றது. நோய்க்கிருமிகள் மிகவும் நுட்பமானவை, கண்ணுக்குத் தெரியாதவை, ஆனால் அவை மிகுந்த தொல்லை தருபவை. இதேபோல், அவமதிப்பு மற்றும் புறங்கூறல் தொடர்பான மனப்படிவங்கள் தொல்லை தந்து இடர்பாடுகளை உருவாக்குகின்றன.

எனவே, பிறரை இழிவுபடுத்தவோ அல்லது அவதூறாகப் பேசவோ வேண்டாம். எவரேனும் அதை உங்களுக்குச் செய்தால், நீங்கள் மகிழ்ச்சியடைய வேண்டும். எவரேனும் உங்களை உதைத்தால், அவரது காலை அழுத்தி விடவும். ‘ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு’ என்ற கிறிஸ்துவின் கூற்றில் அர்த்தம் பொதிந்துள்ளது. நீங்கள் நேசித்தால், உங்களால் அவதூறு கூற முடியாது. எனவே அனைவரையும் நேசிக்க முயற்சி செய்யுங்கள். நீங்கள் அவ்வாறு செய்தால், நான் உங்களை நம்புவேன்! இல்லையேல், நீங்கள் என்னிடம் வருவதில் அர்த்தமில்லை. அதனால் என்ன நன்மை? உங்கள் அதிர்ஷ்டத்தால் நீங்கள் அனைவரும் என்னுடன் இணைந்திருக்கிறீர்கள்.

நான்கு விரல்களையும் கண்ணெதிரே வைத்தால் என்னைப் பார்க்க முடியாது. எனவே, ஆழமான கருத்துகளை எவ்வாறு விவாதிக்க முடியும்? துக்காராம் கூறியதாவது:

எம்பெருமானாகிய எனது பரிபூரண குருநாதருக்கு
நான் எப்படி நன்றி கூறுவது?
அவர் ஒருவரே ஒவ்வொரு நொடியும்
என்னை விழிப்புடன் இருக்கச்செய்வது!

இதனால்தான், நான் அவ்வப்போது உங்களை, புறங்கூறுவது குறித்து எச்சரித்து வருகிறேன்; மேலும் இது குறித்த ‘வாழ்க்கை சுற்றறிக்கை’யும் வெளியிட்டுள்ளேன்.

ஏதோ கவலை தோய்ந்த முகத்துடன் காணப்பட்ட ஒரு பெண்மணியைப் பார்த்து, பாபா கூறினார்: **"உங்கள் மனதின் பொறியை மூடி, கவலைகள் அனைத்தையும் முடித்துக்கொள்ளுங்கள். உங்கள் இதயப் பொறியைத் திறந்து அன்பை விடுவியுங்கள்."**

அதேபோன்று சிரமங்களை எதிர்கொண்ட வேறொருவரிடம், பாபா வலியுறுத்தி கூறினார்: **"உடல் துன்பங்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். உடல் துண்டு துண்டாக வெட்டப்பட்டாலும், இதயம் கறை படிவதைக் காட்டிலும் அது மிகச் சிறிய விஷயமாகும். இதயத்தைத் தூய்மையாக வைத்திருக்க உங்களால் இயன்றவரை முயற்சி செய்யுங்கள். உங்கள் நம்பிக்கை கலப்படமின்றி இருக்கட்டும். உடல் மூலம், உங்களுக்கு துன்பத்தை அனுபவிக்கும் வாய்ப்பு கிடைக்கும், ஆனால் அதைத் தொடர்ந்து படிப்படியாக வரும் காலத்தில், அனைத்து துன்பங்களும் முடிவுக்கு வர வேண்டும். பிறகு நீங்கள் உடலைக் கைவிட்டு நித்திய ஆனந்தத்தை அனுபவிப்பீர்கள்."**

1960 ஏப்ரல் 29 வெள்ளிக்கிழமை, கொல்கத்தா, ஜபல்பூர் மற்றும் ஹமிர்பூரிலிருந்து சுமார் 50 பக்தர்கள் வந்தனர். மத்தியப் பிரதேசம் மற்றும் உத்தரப் பிரதேச மாகாணங்களைச் சேர்ந்த ஒரு குழுவிடம், பாபா இவ்வாறு கூறினார்:

மிகப்பெரிய 'எல்லையில்லா பொக்கிஷம்' உங்களுக்குள் உள்ளது. நீங்கள் அதை உங்களுள் தேடாததுதான் ஒரே பிரச்சினை. நீங்கள் அனைத்தையும் வெளியே தேடுகிறீர்கள். 'ஆரம்பம் இல்லாத அதன் அப்பாற்பட்ட நிலை'யில் உருவான பிறப்பிலிருந்து இதுவே உங்கள் பழக்கமாக இருந்து வருகிறது.

உங்கள் தூக்கத்திலிருந்து விழிப்புற்ற அடுத்த கணமே, உங்களை வெளியே பார்க்கத் தொடங்குகிறீர்கள். ஆன்மீகப் பாதையில், நீங்கள் உள்ளே உற்றுநோக்கத் தொடங்கும் வேளையில், பொக்கிஷத்தின் சில தீப்பொறிகளைக் காண்கிறீர்கள். ஆனால் இவை ஏக இறைவன் எனும் உண்மைப்பொருளான பொக்கிஷத்தின் நிழல்கள் மட்டுமே.

இந்த எல்லையில்லா பொக்கிஷத்தின் இறுதி வாசலைத் திறக்கும் திறவுகோல், பரிபூரண குருநாதரிடம் மட்டுமே உள்ளது. எல்லையில்லா பொக்கிஷத்தை - ஏக இறைவன் எனும் பரம்பொருளை - பார்க்க விரும்புவது அல்லது அத்துடன் ஒன்றிணைவது ஒரு விதத்தில் சுத்த பைத்தியக்காரத்தனம். இது மிகவும் கவர்ச்சிகரமான இன்பங்கள் அல்லது மிகவும் துக்கமான வலிகளால் பாதிக்கப்படாமல் இருக்கும் அளவுக்கு பைத்தியக்காரத்தனமாக இருக்க வேண்டும். பரிபூரண குருநாதரின் அளவிறுதியற்ற அன்பான 'தோற்றம்' - பார்வை - அத்தகைய 'பைத்தியக்காரத்தனத்தை' எழுச்சியுறச் செய்ய முடியும். ஆனால் இதற்காக, குருநாதரின் அறிவுறுத்தல்களின்படி அவரது விருப்பத்திற்கு முழுமையாக

அடிபணிந்து வாழ்க்கையை நடத்த வேண்டும். நீங்கள் உடல்ரீதியாக அவருக்கு அருகில் அல்லது தொலைவில் இருந்தாலும் எந்த வித்தியாசமும் இல்லை.

(கூட்டத்தில் யாரோ ஒருவர் கேள்வியுடன் இடையே குறுக்கிட்டார்). **நீங்கள் எனது சகவாசத்தில் இருக்கும்போது, கேள்விகள் எதுவும் எழுப்பாமல் நான் எடுத்துரைப்பதை முழுமையாக கவனித்து, ஏற்றுக்கொள்ளுங்கள். என்னை நேசித்து அமைதியாக இருங்கள். புத்திக்கு அதிக செல்லம் கொடுப்பதானால், அது எண்ணற்ற கேள்விகளை எழுப்பும். மனதின் இந்தக் கேள்விகள் அனைத்திற்கும் பதிலளிக்க முடியும், ஆனால் அது ஆன்மீக ரீதியில் இன்றியமையாததாக இராது. வெறும் அறிவார்ந்த விளக்கங்கள் உங்களை உள் குழப்பத்திலிருந்து வெளியே கொண்டுவராது, மாறாக உங்களுக்குள் மேலும் புரியாத புதிரை உருவாக்கும். மிகவும் அரிதான நபர்களில் மட்டுமே அதை விரைவில் புரிந்துகொள்ளும் மதிநுட்பம் உள்ளது.**

நான் ஏற்கனவே கூறியதை புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். நீங்கள் என்னை எவ்வளவு அதிகமாக நேசிக்கிறீர்களோ, அவ்வளவு குறைவாக நீங்கள் கேள்வி கேட்கிறீர்கள். அன்பு, அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்கிறது, ஏனெனில் அது கேள்வி கேட்பதிலிருந்து தன்னை விலக்கிவைக்கிறது.

சொர்க்கமும் நரகமும் ஒன்றாக மாறினாலும் எனது தாமனை (மேலங்கி) **நழுவ விடாமல் பற்றிக்கொள்ளுங்கள்! முரண்பாடான எண்ணங்களைப் பற்றி கவலைப்பட வேண்டாம், ஆனால் என்னை உறுதியாகக் பற்றிக்கொண்டதை மட்டும் நினைவில் கொள்ளுங்கள். எந்த சூழ்நிலையிலும் பிடி தளர்ந்து விடக்கூடாது.**

அன்பிற்குரியவரிடம் எதையேனும் கோருவது அன்பிற்கு அவமானம். அன்பிற்குரியவரின் விருப்பம் மட்டுமே அன்பனின் மூலமாக வெளிப்படும் வரை, அன்பு கொடுக்கும், கொடுக்க மட்டும் செய்யும், கொடுத்துக்கொண்டே இருக்கும்.

அழகும் அன்பும் ஒன்றோடு ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன. கடவுளின் அழகுக்கும் அன்பிற்கும் இடையே, அன்பன் ஒருவனின் இதயத்தில் எப்பொழுதும் இனிமையான ஒரு மோதல் இருந்துகொண்டே இருக்கும். கடவுளின் அழகும், அன்பும் தியாகத்தையும் முழு சரணாகதியையும் கோருகின்றன. கடவுளின் அன்பன் அன்பிற்குரியவர் விரும்புவதைச் செய்தாக வேண்டும்.

மண்டலியில் ஒருவர் 'கடவுள் என்றால் என்ன?' என அவரது நண்பர் ஒருவர் அவரைக் கேட்டபோது, திருப்திகரமான பதிலை வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டதாக பாபாவிடம் கூறினார்.

"'எது கடவுள் இல்லை?' என்று நீங்கள் அவரிடம் எதிர்க்கேள்வி எழுப்பியிருக்க வேண்டும்" என்றார் பாபா. **"பதில் மிகவும் எளிதானது."**

"எனது தாமனைப் (மேலங்கி) **பற்றிக்கொள்ளுங்கள்."**

1960 மே 1 ஞாயிற்றுக்கிழமை அன்று ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்ட பெரிய தரிசன நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. அவர்களில் பிரபலமான இந்திய நடிகர், பிரேம் நாத் (PREM NATH, 34), தனது இளம் மகனுடன் மாலை வேளையில் தாமதமாக வந்தார். ஆச்சரியப்படும் விதத்தில் பாபா அவருக்கு ஒரு நேர்காணலை வழங்க ஒப்புக்கொண்டார். பிஞ்சிலே முதிர்ந்த சிறுவன் பாபாவின் முன்னிலையில் ஆங்கிலத்தில், ஷேக்ஸ்பியர் (SHAKESPEARE) எழுதிய ஹேம்லெட் (HAMLET) ஓரங்க நாடகத்தின் சிறப்பு சொற்றொடரான 'இருக்க வேண்டும், அல்லது இல்லாதிருக்க வேண்டும்... (TO BE OR NOT TO BE..)' என்ற வரிகளை மொழிந்தான்.

பெரும்பாலும், குருபிரசாத்தில் பாபா தங்கியிருந்த காலத்தில், மும்பையிலிருந்து பல திரைக்கதை எழுத்தாளர்கள் பாபாவிடம் வந்து, தங்கள் திரைப்பட இயக்கங்களில் வெற்றிபெற பாபாவின் ஆசிகளை நாடினர். அவர்களின் திரைப்படங்களில் ஆன்மீக உண்மைகளை சித்தரிப்பதன் அவசியத்தை பாபா அவர்கள் மனதில் எப்பொழுதும் பதிய வைத்தார். 1960ஆம் ஆண்டு பாபாவை தரிசனம் செய்ய திரையுலகின் பல செல்வாக்கு மிக்க நபர்கள் வந்தனர்.

ஒரு நாள் (மே 23) டி.டி. காஷ்யப் (D.D. KASHYAP, 50), மும்பை திரைப்பட இயக்குனர், காலையில் தரிசனத்திற்காக வந்து இரண்டு மணி நேரம் பாபாவின் முன்னிலையில் அமர்ந்திருந்தார். பாபா அவரிடம் இவ்வாறு குறிப்பிட்டார்: **"அனைத்தும் நான் அறிவேன். அப்படியிருந்தும், நீங்கள் உங்களை எனக்கு அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும். இதெல்லாம், உங்கள் நிலையில் உங்களை சந்திப்பதற்காகத்தான். உங்களைப் பார்த்ததில் மகிழ்ச்சி. நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா? உங்களுக்கு ஏதாவது கவலை உள்ளதா?"**

காஷ்யப், "அப்படி விசேஷமாக எதுவும் இல்லை" என்றார்.

"ஒருவர் ஒரு மனித உருவத்தை அடையும்போது, வாழ்க்கையில் நன்றாக இருந்தாலும், இல்லாவிடிலும், ஒரு விதத்தில் கவலைகள் தவிர்க்க முடியாததாகிவிடுகிறது, ஆனால் ஒருவர் அவற்றிற்கு அடிபணியக்கூடாது."

காஷ்யப் கூறுகையில், "முன்பு நான் வாழ்க்கையில் உயர்ந்த இடத்தில் இருந்தேன், திரைப்பட உலகிலும் அதுபோலவே உயர்வாக இருந்தேன். இருப்பினும், கடந்த சில ஆண்டுகளில், நான் பல ஏற்ற தாழ்வுகளை சந்தித்தேன். இன்று, உங்களின் புனித பாதங்களில் அமரும் அதிர்ஷ்டம் எனக்கு கிடைத்துள்ளது. வாழ்வில் என்ன நடந்தாலும் அது பயனுள்ளது, அது கடவுளின் விருப்பம் என்பதையும் நான் இன்னும் அதிகமாக உணர்கிறேன்" என எடுத்துரைத்தார்.

மகிழ்ச்சியடைந்த பாபா இவ்வாறு கூறினார்:

வாழ்க்கையில் நடக்கும் நிகழ்வுகளைப் புரிந்து கொள்ள இது ஒரு சிறந்த வழியாகும். 'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) **புத்தகத்தைப் படியுங்கள். நீங்கள் சரியாகப் புரிந்து கொண்டால், நான் சொல்வதை நீங்கள் புரிந்துகொள்வது மிகவும் எளிது. கவலைப்படுவதற்கு என உலகில் எதுவும் இல்லை என்பதை நீங்கள் காண்பீர்கள். எது நடந்தாலும் அதற்கு, உங்கள்**

மனப்படிவங்களால் விளைந்த கர்ம வினைகளே காரணம். மனப்படிவங்கள், படைப்பின் கனவை உண்மையானதாகவும், நீடித்ததாகவும் தோன்றச் செய்து, தேவையற்ற மனக்குமுறல்களை உருவாக்குகின்றன.

நல்ல நேரங்கள் என்று அழைக்கப்படும் அனைத்தும் மகிழ்ச்சியான கனவுகள் போன்றது. இணக்கமான சூழ்நிலையின் காரணமாக, அவை நீண்ட மற்றும் இனிமையான காட்சியாக மாறும், மேலும் நீங்கள் அவற்றை தொடர்ந்து அனுபவிக்க விரும்புகிறீர்கள். ஆனால் நீங்கள் தூக்கத்திலிருந்து விழித்திருக்கும்போது, கனவுகளின் உலகத்திற்கு எந்த மதிப்பும் இல்லை என்பதை நீங்கள் காண்கிறீர்கள்.

கடினமான நேரம் அச்சுறுத்தும் கனவுகள் போன்றது. அத்தகைய சூழ்நிலைகளிலிருந்து நீங்கள் விரைவில் வெளிவர விரும்புகிறீர்கள். உதாரணமாக, ஒரு புலி உங்கள் கனவில் நேரடியாக உங்கள் மீது பாய்ந்தால், நீங்கள் உடனடியாக விழித்துக்கொள்வீர்கள்.

படைப்பின் கனவிலிருந்து அனைவரையும் எழுப்பி, ஏக இறைவனில் வாழ வைத்து, அவனது எல்லையற்ற பேரின்பத்தை அனுபவிக்கச் செய்வதே இறைவனின் திட்டம். நல்ல மற்றும் கடினமான நேரங்கள் என்று அழைக்கப்படுவதை அரங்கேற்றுவதற்கு, எதிர் துருவங்களாகத் திகழும் கர்ம விதி (சட்டம்) தவறாமல் செயல்படுகிறது. ஆனால், கடவுள் தமது அளப்பரிய இரக்கத்தில், நன்மை மற்றும் தீமைகளுக்கு அப்பாற்பட்டவர், அனைவரையும், அனைத்தையும் தன்னை நோக்கி அழைத்துச் செல்கிறார். எனவே உண்மையில் கவலைப்படுவதற்கென ஒன்றுமில்லை.

நான் நித்திய பேரின்பமாக நிலைகொண்டிருக்கிறேன். அஞ்ஞானத்தில் மூழ்கி இருப்பவர்களுக்காகவும், மாயையில் தத்தளிக்கும் அனைத்திற்காகவும், அனைவருக்காகவும் நான் நித்தியமாக துன்பப்படுகிறேன்.

திரைப்பட இயக்குனர் பாபாவிடம் தனது சமீபத்திய திரைப்படமான மாயாவின் கதையின் ஒரு பகுதியை - ஒரு செல்வந்தர் வீட்டு இளைஞன் குடிசையில் வாழும் ஏழை பெண் ஒருத்தியைக் காதலித்து, தனது செல்வத்தையும், செல்வாக்கையும் ஏழைகளுக்காக உதவுவதைப் பற்றிய கதையை எடுத்துரைத்தார். பாபா இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்:

'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) **என்ற புத்தகத்தை நீங்கள் படித்தால், படைப்பின் ரகசியத்தை வெளிப்படுத்தும் தெய்வீக நாடகத்தின் ஆன்மீக உலகம் எனும் பரந்து விரிந்த காட்சியைக் காண்பீர்கள். முழுப் படைப்பும் ஒரு 'காதல் விளையாட்டு' அல்லது லீலை (தெய்வீக விளையாட்டு) கடவுள் தம்மையே அதற்காக அர்ப்பணித்து அனுபவிக்கிறார்!**

திரைப்படத்துறையில், நீங்கள் ஆன்மீக உண்மைகளையும் அறிமுகப்படுத்த வேண்டும், ஆனால் படிப்படியாக செய்யுங்கள். இது காலத்தின் கட்டாயம். நீங்கள் அதில் வெற்றி கண்டால், அது உங்களுக்கு பொருள் மற்றும் ஆன்மீக உலகமாகிய இரு வழிகளிலும் லாபகரமாக

இருக்கும். இருப்பினும், இதுபோன்ற படங்களை இயக்கும்போது அல்லது தயாரிக்கும்போது ஒன்றை மட்டும் மனதில் கொள்ளுங்கள், கடவுளைத் தவிர, இதர அனைத்தும் மாயை. பின்பு நீங்கள் செய்யும் பணி உங்களை பிணைக்காது, மேலும் கடவுளின் பொக்கிஷத்தை வெளிப்படுத்தும் இதயம், மேலும் மேலும் தூய்மையாக மாறும்.

ஒரு பாரசீக ஈரடிக் கவிதை பின்வருமாறு விவரிக்கிறது:

அன்பிற்குரிய கடவுள், அன்பரிடம் கூறுவதைக் கேளுங்கள்;
கோடிக்கணக்கான அந்நியர்களின்
இருப்பிடத்தை காலி செய்யுங்கள்;
அப்போதுதான், நான் உள்ளே நுழைகிறேன்.
அந்நியர்களைக் கண்டு நான் வெட்கப்படுகிறேன்!
இந்த அந்நியர்கள் யார், யார்? தேவைகள், ஆசைகள்,
எண்ணங்கள்! அவை அனைத்தும் சுருக்கித்
திணிக்கப்பட்டுள்ளன உங்களுக்குள்!
நீங்கள் அழைத்தாலும் அவை இடமளிக்காது
அன்பான கடவுளுக்கு.

அந்நியர்கள் இதயத்தை விட்டு வெளியேறும் போது,
அது தூய்மையாகவும், அதி சுத்தமாகவும் மாறுகிறது.
பின்பு கடவுள் அதைப் பார்க்கிறார், அவருடைய அன்பான
பார்வை அனைத்து கவலைகளையும் துடைக்கிறது.
அப்போது ஒருவர் அனுபவிக்கும் கடவுளின் பார்வையானது
'கனிவான, கடினமான' காலங்களில் வெளிப்படும்
அவரது இனிமையான விருப்பத்தைக் குறித்த
எந்த சந்தேக சிந்தனைக்கும் இடமளிக்காது.

இறை உணர்வை எய்திய ஆத்மா இப்பூவுலகில் வாழ்கிறது,
ஆனால், உலகம் அவரைத் தொடாது, தொடவும் முடியாது.
இறைவனை உணர்தல் என்பது குழந்தைகளின் விளையாட்டல்ல.
ஒருவர் உடல், மனம், இதயம் அனைத்தையும் பரிபூரண
குருநாதரிடம் அர்ப்பணிக்க வேண்டும், இதைச் செய்ய!

இந்தக் கட்டத்தில், காஷ்யப், கடவுளுடன் ஐக்கியமாவதற்கான தீவிர ஏக்கத்தைக் குறிப்பிடும் சில வரிகளை மேற்கோள் காட்டினார். பாபா அவற்றை விரும்பி இவ்வாறு குறிப்பிட்டார்:

இது ஒரு நல்ல மேற்கோள், ஆனால் ஒருவர் தனது இதயத்தில் அத்தகைய ஏக்கத்தை உருவாக்குவது எப்படி? அதுதான் சிரமமான ஒன்று. கடவுளை தரிசனம் செய்யாமல் வாழ்வது சாத்தியமில்லை என்பதை ஒருவர் தன் ஆழ் இதயத்திலிருந்து உணர வேண்டும். அவரது நிலை, நீரிலிருந்து வெளியே எடுக்கப்பட்ட மீனைப் போல் இருக்க வேண்டும். அத்தகைய ஏக்கம்

தொடரும் போது, ஒருவருக்கு கடவுளைக் காணும் பாக்கியம் கிடைக்கும் - அதுவே இறை ஒளியின் மஹா சமுத்திரம்.

ஒருவர் கடவுளுடன் ஐக்கியமாவதற்குத் தேவையான ஏக்கத்தின் தீவிரத்தை, பௌதீக அளவீடு எவ்வளவுதான் உயர் தரமாக இருந்தாலும் அளவிட முடியாது; அத்தகைய ஏக்கம் ஓர் அரிய அனுபவமாகும், முற்றிலும் தனித்துவமானது, இது பரிபூரண குருநாதரிடமிருந்து வெளிப்படும் தெய்வீக அன்பின் தீப்பொறியால் எரியும் ஒருவருக்கு மட்டுமே உரித்தானது.

நான் உங்களை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். ஆன்மீக உண்மைகளை மக்களுக்கு அறிமுகப்படுத்துவதன் மூலம், நல்ல திரைப்படங்களை உருவாக்குவதற்கு நீங்கள் அதிக பங்களிப்பை வழங்க முடியும். ஆனால் நேர்மையாக இருங்கள். உங்கள் நடவடிக்கைகளில் பாசாங்குத்தனம் ஊடுருவ வேண்டாம். உங்கள் மனசாட்சியின் கூற்றிற்கு நேர்மையாக பதிலளிக்க முயற்சி செய்யுங்கள். நான் உங்களுடன் இருக்கிறேன்; நான் உங்களுள் இருக்கிறேன். ஆனால், என்னையும் உங்களுடன் அழைத்துச் செல்ல வேண்டும். என் அன்பும், ஆசிகளும்.

1960 மே 2 திங்கட்கிழமை காலை, பாபா தனது பூனா அன்பர்களான டவ்லே, குருந்த்வாடியின் ராணிஸாஹேப் மற்றும் இதர இல்லங்களுக்கு விஜயம் செய்தார். காம்ப்ளேயின் மனைவி அனுமதிக்கப்பட்டிருந்த மருத்துவமனையையும் அவர் பார்வையிட்டார். ஷிண்டே கட்டி எழுப்பிய புதிய வீட்டைப் பார்வையிட்டு, அதன் திறப்பு விழாவையும் நடத்தி, அதற்கு 'மெஹர் பிரசாத்' (MEHER PRASAD) என்று பெயரிட்டார். குருபிரசாத்தில் அனைவருக்கும் ஷிண்டே மதிய உணவை அனுப்பி வைத்தார்.

கோடூரி கிருஷ்ணாராவ், போனல வெங்கடேஸ்வரலு உட்பட ஆந்திராவிலிருந்து ஏராளமான அன்பர்கள் பாபாவின் தரிசனத்திற்காக குருபிரசாத் வந்தனர். தாடேபள்ளிகுடம் (TADEPALLIGUDEM) பகுதியைச் சேர்ந்த பாப்பிராஜ் பன்டேலா (BAPIRAJ BANDELA), இளஞ்சிவப்பு நிற கோட் ஒன்றை அணிந்து உள்ளே நுழைந்தது, மனதை நெகிழ வைக்கும் சம்பவமாக இருந்தது. அவர் ஓர் அப்பாவி மட்டுமின்றி மிகவும் தூய்மையான மனிதர், அவருடைய இளம் மகன்களும் அவரைப்போல் உடையணிந்திருந்தனர். பாபா ஆந்திரா பயணத்தின் போது அணிந்து, பின்னர் அவருக்கு வழங்கிய சூரிய தொப்பியும் அவரது தலையில் இருந்தது. அவர்களின் வருகையும், பாப்பிராஜின் தற்செயலான வேடிக்கையான கருத்துக்களையும் கேட்டு, பாபா அடக்கமுடியாத தனது சிரிப்பை வெளிப்படுத்தினார். **"ஐந்தே நிமிடங்களில், என் உலகளாவிய சுமையை அவர் குறைத்துவிட்டார்"** என்று பாபா கூறினார்.

பால் நாத்துவும் மே 2ஆம் தேதி வந்து, ஆறு வார பள்ளிக்கூட விடுமுறையில் குருபிரசாத்தில் தங்கினார்.

மே 3 அன்று பிற்பகல் நேரத்தில், கவாலி பாடகர் ஜாதவின் (JADHAV QAWAAL) இசை நிகழ்ச்சி நடைபெற்றது. பாடகரும் அவரது குழுவினரும் இதற்கு

முன்னர் இரண்டு முறை பாபா முன்னிலையில் - 1953இல் பாபாவின் பிறந்தநாளுக்காக மெஹராபாத்திலும், அடுத்த ஆண்டு சத்தாராவிலும் இசை நிகழ்ச்சியை நடத்தினர். இந்த சந்தர்ப்பத்தில், பாபா, ஜாதவின் நடிப்பை மிகவும் விரும்பினார், அவர் தனது கைக்குட்டைகளில் ஒன்றைக் கொடுத்து இவ்வாறு குறிப்பிட்டார்: **"ஆதி நாத (அசல் ஒலி) அலையின் அதிர்வை கேட்க நேர்ந்தால், நீங்கள், உங்கள் உடல் உணர்வை இழந்துவிடுவீர்கள். நானே 'பிரம்ம நாதம்' (ஆழ்கடல் ஒலி** - OCEANIC SOUND). **உங்களின் நிலையில் இருப்பதால், உன்னதமான இசையின் ஒரு பகுதியைக் கேட்கும் வேளையில், பிரம்ம நாதத்தின் ஏழாவது நிழல் அதிர்வுகளில் கூட நான் மகிழ்ச்சி அடைகிறேன்."**

ஒருமுறை, குஞ்ஜோதி (GUNJOTI, ஔரங்காபாத் மாவட்டம்) கிராமத்திலிருந்து ஒரு பாடகர் குருபிரசாத்திற்கு வந்து, பாபாவின் முன்னிலையில் கேஷவ் நிகம் எழுதிய 'மெஹர் சாலிஸா' (MEHER CHALISA) குறுங்கவிதை தொகுப்புகளைப் பாடினார். அவர் அந்தப் பாடலை உண்மையிலே சித்திரவதை செய்தார், ஆனால் பாபா அதை ரசிப்பது போலத் தலையசைத்தார்; பின்பு மண்டலியிடம், **"அவர் அதைக் குழப்பியடித்துவிட்டார்!"** என்று சைகையால் தெரிவித்து, எரச்சிடம், **'பாடல் மிகவும் நன்றாக இருந்தது; உங்கள் நடிப்பு என்னை மிகவும் மகிழ்வித்தது'** என்று கூறுமாறு அறிவுறுத்தினார்; பாடகர் மிகுந்த மகிழ்ச்சியுடன் திரும்பிச் சென்றார்.

பாபாவின் சகோதரர் மகன்களான ஸொராப், ருஸ்தம் இருவரும், பாபாவிற்கு எப்போதேனும் சிறுகதைகளை எடுத்துரைத்துக் கொண்டிருந்தனர். பெஹராமின் பணியாளர் நார்யாவும் (NARYA) சில நேரங்களில் பங்கெடுப்பது வழக்கம். நார்யா குருபிரசாத்தில் தினமும் ஏதாவது ஒரு வேலை நிமித்தம் அனுப்பப்படும் வேளையில், பாபா அவரிடம் அவருடைய பெயரைக் கேட்கும் போதெல்லாம், 'நா-நா-நா-நார்யா' என்று திக்கித் திணறி உச்சரித்து வந்தார். பாபா இதில் மிகுந்த மகிழ்ச்சி அடைந்து, ஒவ்வொரு முறை நார்யா வரும்போதும் அவரிடம் இதே கேள்வியைக் கேட்டு, அவருடைய பதிலை எப்போதும் ரசித்தார். பாபாவின் கேள்விகள் அவற்றின் விளைவைக் கொண்டிருந்தன, ஏனெனில் பாபா அவரது உடலைத் துறந்த பின்பு, நார்யாவின் திணறல் முற்றிலுமாக நின்றுவிட்டது.

தரிசன நேரத்தில் குருபிரசாத்தில் இசை நிகழ்ச்சிகள் எப்பொழுதும் நடந்த வண்ணம் இருந்தன, பெரும்பாலும் பூனா பஜனை குழுவினரால் நிகழ்த்தப்பட்டது. மேலும், இந்தியா முழுவதிலும் அமைந்த பல்வேறு மையங்களிலிருந்து இதர இசைக் குழுக்களும் பாபா முன்னிலையில் இசை நிகழ்ச்சியை நடத்த அழைக்கப்பட்டன. போபால் நகரிலிருந்து, நஃப்டேயின் குழந்தைகள், போஃபலியின் மகன் ஸ்ரீராம் ஆகியோருக்கும் ஒருமுறை பாபாவின் முன் பாடும் வாய்ப்பு வழங்கப்பட்டது; நாக்பூரைச் சேர்ந்த வாமன் நாத்துஜி நாயக் என்ற அன்பரும் பாபா முன் பாடினார். மே 4 அன்று, நேனே மற்றும் ஸிகன்போரியாவின் மகள்களும் இசை நிகழ்ச்சியில் பங்கெடுக்குமாறு

கேட்டுக்கொள்ளப்பட்டனர். பின்பு வேடிக்கையாக, டாக்டர் தேஷ்முக்கும் அழைக்கப்பட்டார்.

ஒருமுறை பாபா ஒரு பாராயண நிகழ்ச்சியின் போது, கண்கள் சோர்ந்து அரைத்தூக்கத்தில் இருந்த ஒருவரிடம், **"நீங்கள் தூங்குகிறீர்களா அல்லது விழித்திருக்கிறீர்களா?"** என்று கேட்டார்.

திடுக்கிட்டு அவர், "நான் விழித்துதான் இருக்கிறேன்" என்று பதிலளித்தார்.

"நீங்கள் தூங்கினாலும் சரி, விழித்திருந்தாலும் சரி, நீங்கள் கனவு காண்கிறீர்கள்! நான் உண்மையில் இருப்பதைப் பார்க்கும்போது மட்டுமே நீங்கள் விழித்திருக்க முடியும்! ஆனால் நானாகவே வெளிப்படும் வரை, எவரும் என் உண்மை நிலையில் இருப்பதைப் பார்க்க முடியாது" என்று பாபா குறிப்பிட்டார்.

பாபா தனது அவதார நிலை தொடர்பாக கிருஷ்ணரின் இந்த வார்த்தைகளை பகவத் கீதையிலிருந்து மேற்கோள் காட்டினார்:

நான் என்னை மாயாவின் திரை மறைவில் வைத்துக்கொண்டேன்.
அதனால், நான் இறையொளியாக இருந்தாலும், யாரொருவரும்
எனது சுய ரூபத்தைக் காண முடியாது.

பாபா, ஹஃபீஸின் இந்த வரியையும் மேற்கோள் காட்டினார்:

உண்மையான துறவியின் காலடியில் கரங்களைக் கூப்பியவண்ணம்
பேரரசர்களும் தேவதைகளும் தலைவணங்கி நிற்கின்றனர்.

மராட்டி செய்தித்தாள் 'ஸையாத்ரி'யின் (SAHYADRI) ஆசிரியர் ஆனந்த்ராவ் விட்டல் பாட்டீல் (ANANTRAO VITHAL PATIL) பலமுறை பாபாவின் தரிசனத்திற்காக வந்திருந்தார்; 1960 மே 6 வெள்ளிக்கிழமை அன்று அவரது அலுவலகத்திற்கு பாபா விஜயம் செய்தார்.

அடுத்த நாள், பாபா ஒரு சுற்றறிக்கையின் நகல் வரைவுக்கு ஒப்புதல் அளித்தார், ஜூன் 20 அன்று பூனாவிலிருந்து மெஹராஸாத் செல்வதாகவும், ஜூன் 10 முதல் அவர் தரிசனம் வழங்குவதை நிறுத்துவதோடு, 1960 இறுதி வரை பார்வையாளர்களை சந்திக்க மாட்டார் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்த சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

ஜூலை 1 முதல் ஆண்டு இறுதி வரை பாபா, மெஹராஸாத்தில் முழுமையான ஏகாந்தவாசம் மேற்கொள்ள உள்ளார். அந்த ஆறுமாத காலக்கட்டத்தில், தனிப்பட்ட சில பணிகளுக்காக, அவர் எவரை அழைப்பாரோ அவர்களைத் தவிர, வேறு எவரும் அவரை சந்திக்கவோ அல்லது அவ்வாறு செய்யும் விருப்பத்தைத் தெரிவிக்கவோ கூடாது.

வருட இறுதிவரை, யார் ஒருவரும் பாபாவுடன் தொடர்பு கொள்ளக்கூடாது. அவசர காலத்தில் மட்டும், பாபாவிற்கு நேரடியாக முன்பணம் செலுத்தப்பட்ட தொலைத்தந்தி அனுப்ப அனுமதிக்கப்படுகிறது.

இருப்பினும், பாபாவிற்கு அனுப்புவதைத் தவிர, இதர தேவையான கடிதப் போக்குவரத்தை வழக்கம் போல தொடரலாம்.

அன்று இரவு முழுவதும் பாபாவிற்கு ஜுரம் அதிகமாக இருந்தது. அடுத்த நாள், மே 8, ஞாயிற்றுக்கிழமை தரிசனத்தின் போது, வாக் (WAGH) என்றழைக்கப்பட்ட வங்கி மேலாளர், இரக்க குணம் படைத்தவர், பல கேள்விகள் அடங்கிய பட்டியலுடன் வந்த வேளையில், பாபா அவரிடம் கூறினார்:

கடவுளைப் பற்றி வாதம் செய்யக்கூடாது. வெறும் வார்த்தைகளால் விவாதிப்பது உங்களை எங்கும் அழைத்துச் செல்லாது. அன்பில் விவாதங்களுக்கும், வாக்குவாதங்களுக்கும் இடமில்லை. விவாத மனப்பான்மை தளர்வடைந்து மேலும் திறந்த மனதுடன் இருக்க வேண்டும். பிடிவாதமாக இருக்காதீர்கள்.

பின்பு, வாழ்க்கையின் போக்கில், அதிர்ஷ்டவசமாக இறை அன்பிற்குரியவரை - இறையுணர்வை எய்திய குருநாதரை சந்திக்கும் தருணம் வருமாயின், இதயம் மகிழ்ச்சியால் பரவசமடைகிறது. அன்பால் ஆட்கொள்ளப்பட்ட இதயம், ஒருவரின் வாழ்க்கையை அன்பிற்குரியவருக்காக அர்ப்பணிக்க ஏங்குகிறது. அதில், 'அன்பானவரின் விருப்பமே முதன்மையாக இருக்கட்டும்' என்று கூறுகிறது.

மனதில் எந்த நேரமும் சந்தேகம் எழுகிறது. மனம் கேட்கிறது: "அன்பான இவர் நேசிக்கத் தகுந்தவரா? இந்த அன்பானவருக்காக நான் தியாகம் செய்வது முறையாக இருக்குமா?"

இதயம் பதிலளிக்கிறது: "ஏன் வாதிடுகிறீர்கள்? அன்பிற்குரியவரின் தெய்வீகத் தன்மையில் மூழ்கி விடுங்கள். உங்கள் வாழ்க்கையை அவர் பாதங்களில் அர்ப்பணம் செய்யுங்கள்."

மனம் மறுப்புத் தெரிவித்து கண்டிக்கிறது: "ஒன்றைத் தீர்மானிப்பதற்கும், விவாதிப்பதற்கும் எனக்குத் திறன் இருப்பதால், நான் ஏன் கண்மூடித்தனமாக வீழ வேண்டும்? நான் என்ன குருடனா? இதயத்தின் அறிவுறுத்தல்களை நான் ஏன் பின்பற்ற வேண்டும்? நான் ஒன்றுக்கும் உதவாதவனா?"

இப்படி மனதிற்கும் இதயத்திற்கும் இடையே போராட்டம் தொடர்கிறது.

பின்னர் ஒரு பார்வையாளர் பாபா, அவரது ஆசீர்வாதத்தை வழங்குமாறு கேட்டுக் கொண்டதற்கு, பாபா இவ்வாறு பதிலளித்தார்:

ஆசிகளை வழங்குவது எனக்கு மிகவும் எளிதானது. அன்பைக் கொடுப்பது மிகவும் கடினம். அருள் புரிவது மிக மிக அரிது. ஏன்? ஆசீர்வாதங்களை வழங்குவது எனக்கு மிகவும் எளிது, ஏனெனில் நீங்கள் அவற்றைப் பெற ஆர்வமாக உள்ளீர்கள். தேவையான ஏற்புத்திறன் ஏற்கனவே உள்ளது. ஆனால் அன்பில் அது அவ்வாறு இல்லை, ஏனெனில் அதை அடையப்பெற வேண்டிய அளவுக்கு எவரும் உண்மையில் விரும்பவில்லை. அன்பின் 'கதகதப்பு' மிகவும் தாங்க முடியாதது, அதை

அடையப் பெறும் ஒருவரின் இதயம் முழுவதும் புண்கள் மற்றும் புடைப்புகளால் நிறைந்திருக்கும். இதைத் தாங்கிக்கொண்டால், உங்கள் இதயம் தூய்மையாகும். பின்னர் அது அன்பால் நிரப்பப்படும்.

என் அன்பை அடையப் பெறும் ஒருவர், உலகின் பார்வையில் முற்றிலும் பாழாய்ப் போனவராகக் கருதப்படுகிறார். என் அன்பை அடையப் பெற, நீங்கள் அனைத்தையும் - உங்கள் சுயத்தை கூட இழக்க வேண்டும்! உங்களையும் உலகத்தையும் பொறுத்தவரை நீங்கள் உயிருடன் வாழாதது போல் இருக்கும் அளவுக்கு எல்லா ஆசைகளையும் துறக்க வேண்டும். அப்போது நீங்கள் அன்பைப் பெற தகுதியானவராவீர்கள். அரிதாகவே ஒருவர் அந்த அன்பை அடையப்பெறும் ஏக்கத்தைக் கொண்டவராக இருக்கிறார். நான் அன்பின் இறைப்பெருங் கடல். அப்படிப்பட்ட ஒருவருக்கு அன்பை வழங்க நான் தயாராக இருக்கிறேன், ஆனால் அதைப் பெறுபவர் எங்கே? அன்பைப் பெற எப்பொழுதும் தயார் நிலையில் இருக்கும் எவரும் இல்லை.

என் அருளைப் பொறுத்தவரை, நான் அவ்வாறு வழங்கும் திடீர் ஆர்வம் (தற்போக்கெண்ணம்) **வரும் வேளையில் அதை வழங்குகிறேன். கருணை என்பது கருணை, மேலும் அது ஒருவரின் தகுதிகள் மற்றும் குறைபாடுகளை முற்றிலும் கருத்தில் கொள்ளாதது. அருளைப் பொழியும் போது, உடனடியாக நீங்கள் எப்பொழுதும் இருந்துகொண்டிருக்கும் கடவுளாக மாறுகிறீர்கள் - ஆனால் அது மிகவும் அரிதானது.**

மே 11 அன்று, பாபா, மாய்ஸாஹேப் பட்வர்தனின் பங்களாவிற்கு விஜயம் செய்தபோது, அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்மணி ஒருவர், பாபாவிடம் அதையே கேட்டார் - அவருடைய ஆசீர்வாதம். அவரிடம் பாபா, **"நீங்கள் எனது தரிசனத்திற்கு வந்த அந்த கணமே, என் ஆசிகளை அடையப் பெற்றீர்கள் என்று அர்த்தம், ஏனெனில் தரிசனமே ஆசீர்வாதம்"** என்று விளக்கினார்.

ஜால்பாயின் நண்பரான ஸால் ஐடூன் (ZAL AIDOON), பூனா அன்பர்களில் ஒருவர், குருபிரசாத்தில் ஒரு நாள் முழுவதும் பாபாவின் சகவாசத்தில் இருக்க அனுமதி வழங்கப்பட்டது. ஒருமுறை, பாபா, மண்டலி மற்றும் நெருங்கிய அன்பர்களுடன் அமர்ந்திருந்தபோது, **"நான் எப்படி இருக்கிறேன்?"** என்று கேட்டார்.

ஸால் தவிர பிற அனைவரும் அவர் அற்புதமாக இருப்பதாகக் கூறினர். ஸால், ஓர் எளிய, கபடமற்ற நபராக இருந்ததால், "பாபா, நீங்கள் எனக்கு வயதானவர் போலத் தோற்றமளிக்கிறீர்கள்" என்று கூறினார்.

"நான் உண்மையில் வயதானராகத் தெரிகிறேனா?" பாபா (அப்போது வயது 66) ஆச்சரியத்துடன் கேட்டார்; **"பதிலளிப்பதற்கு முன்னர் ஒன்றுக்கு இரண்டு முறை யோசியுங்கள். பின்னர் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்."**

ஸால் சற்று யோசித்து, "ஆம், பாபா, நீங்கள் வயதான ஒருவரின் தோற்றத்தைக் கொண்டிருக்கிறீர்கள்!" என்றார்.

பாபா அவரை மண்டபத்தை விட்டு வெளியேறுமாறு அறிவுறுத்தி, இதை நன்றாக யோசித்துவிட்டு, திரும்பி வந்து அவருக்கு பதிலளிக்குமாறு கூறினார். திரும்பி வந்ததும், அப்பாவித்தனமாக அதையே திரும்பத் திரும்பச் சொன்னார். பாபா அவரை வெளியே அனுப்பிய பின்பு மண்டபத்திற்குத் திரும்பி வந்ததும், மீண்டும் பாபா வயதானவராகத் தோன்றுவதாகக் கூறினார். ஆனால் மூன்றாவது முறையாக அவரை மண்டபத்தை விட்டு வெளியே செல்லுமாறு சொன்னபோது, 'ஆழமான' சிந்தனைக்குப் பின்னர் அவர் திரும்பி வந்து, "பாபா, நீங்கள் இளமையாகத் தெரிகிறீர்கள்!" என்றார்.

பாபா, "**இப்போது புத்தி வந்துவிட்டது! அமருங்கள்**" என்று சைகையால் தெரிவித்தார்.

புக்காருக்கும் அதுவே நடந்தது. ஒரு நாள் பாபா அவரிடம், "**நான் எப்படி இருக்கிறேன்?**" என வினவினார்.

"இன்று நீங்கள் சற்று வயதானவர் போலத் தெரிகிறீர்கள்" என்று வெளிப்படையாகப் பதிலளித்தார் புக்கார்.

"**என்ன?**" என்று பாபா வியப்புடன் வினவி, "**உங்கள் பொருட்களுடன் உடனே ஹமிர்பூருக்குப் புறப்படுங்கள்!**" என்றதும், புக்கார் விரைவாக யோசனை செய்து, "நீங்கள் இளமையாக இருக்கிறீர்கள், பாபா!" என்று பதிலளித்தார்.

"**அது நல்லது. இதை மட்டும் நினைவில் கொள்ளுங்கள், எனக்கு ஒருபோதும் வயதாகாது. நான் நித்திய இளமையாக இருக்கிறேன்.**"

ஒவ்வொரு நாளும், பாபா, அவர் முன்னிலையில் இந்த வசனத்தை (குஜராத்தியில்) ஸால் மீண்டும் மீண்டும் மொழியச் செய்தார், அவர் இதை பொருத்தமான நடிப்புடன் செய்தார்:

குரு நானக் கூறுகிறார்: "கேளுங்கள், பார்த்தாரி, உங்களை இயக்கியபடி நீங்கள் நடிப்பது நல்லது. இல்லாவிடில் பூசணிக்காயால் அறையப்படுவீர்கள், நாங்கள் அதைக் குறித்துக் கவலைப்பட மாட்டோம்."

ஒரு நாள் குறிப்பிடத்தக்க சிறப்பான தோற்றத்தில் ஒருவர் வந்து, பாபாவிற்கு மாலை அணிவித்து, தலைவணங்கி கூறினார், "'கடவுள் பேசுகிறார்' (GOD SPEAKS) புத்தகத்தை நான் பல முறை படித்து, அதை எனது விரல் நுனியில் வைத்துள்ளேன், இப்போது உண்மைப்பொருளை எப்படி உணர வேண்டும் என்று எனக்கு அறிவுறுத்துங்கள்."

பாபா கூறினார்:

மனதிற்கு வேண்டியதை, புத்தித்திறன் மூலமாக மனம் கிரகித்துக் கொள்கிறது. மனதிற்கு அப்பாற்பட்டதை அறிய, மனதை நிர்மூலமாக்குவது முக்கியம். மனதிற்கு அப்பாற்பட்டதை நீங்கள் மனம் எனும் ஊடகத்தின் மூலம் அறிய விரும்புகிறீர்கள்! அது சாத்தியமற்றது. எனவே நீங்கள் கடவுளை நேசிப்பது சாலச் சிறந்தது.

நான் என்றென்றும் சுதந்திரமாக இருக்கிறேன், அதே வேளையில், உங்களுக்குள், நான் கட்டுண்டிருக்கிறேன். அனைத்திற்கும் அனுபவம் தேவை. அப்போதுதான் சிந்தனைகள், சந்தேகங்கள், கேள்விகள் என்றென்றும் மறையும். ஒரு மனிதர் 'கடவுள் பேசுகிறார்' புத்தகத்தைக் கற்றறிந்த பின்னர், அவர் கடவுள் என்று பறைசாற்றினால் அது பாசாங்குத்தனம்!

உதாரணமாக, நீங்கள் ஒரு மனிதர். நீங்கள் மனிதர் என்று பிறருக்குச் சொல்ல வேண்டிய தேவை ஏதேனும் உள்ளதா? இல்லை. ஆனால் நீங்கள் கழுதைகளுக்கு மத்தியில் வாழ்ந்தால், நீங்கள் ஒரு மனிதர் என்று ஆணித்தரமாக அறிவிப்பீர்கள். அதே வழியில், நான் கடவுள், ஆனால் நான் அதைப் பற்றி பேச வேண்டியதில்லை, ஏனெனில் அது மிகவும் இயற்கையானது. இருந்தாலும் சில நேரங்களில், நான் அதை அறிவிக்க வேண்டும்.

நீங்கள் எப்படி எல்லையில்லா உண்மைப்பொருளை அனுபவிக்க முடியும்? நீங்கள் அதை கற்பனை செய்ய முயற்சி செய்யலாம், ஆனால் அதைக் குறித்த உண்மையான யோசனை உங்களுக்கு இருக்க முடியாது. 'நான் எனும் அகந்தை' மறைந்ததும், முகத்திரை கிழிந்து, ஏக இறைவன் எனும் எல்லையில்லா உண்மைப்பொருள் உணரப்படுகிறது. உங்களுக்கும் கடவுளுக்கும் இடையே உள்ள முகத்திரை என்பது என்ன? அது உங்கள் 'அகந்தை' மட்டுமே! அகந்தை அழியும் போது, கடவுள் அதன் இடத்தை ஆக்கிரமித்துக் கொள்கிறார்.

உங்களின் 'நான் எனும் சுயத்தை' எப்படி நிர்மூலமாக்குவது? உங்கள் முகத்திரையைக் கிழித்தெறிய உங்களின் அகங்காரத்தை அழித்துவிட வேண்டும்! எப்படி? முகத்திரையை அகற்றுவதற்கான அனைத்து முயற்சிகளும், அதை வலுப்படுத்தி, மேலும் முடிச்சுகளின் மீது முடிச்சுகள் குவிந்து இறுக்கமாகப் பிணைக்கப்படுகின்றன. உங்களின் 'நான் எனும் அகந்தையை' நான் எப்படிப் கையாண்டாலும் அதை என்னிடம் ஒப்படைப்பதே எளிதான வழி.

பாபா தொடர்ந்து விளக்கினார்:

ஆன்மீகப் பாதையில், பாவம் என்று கூறப்படும் ஒன்றே ஒன்று பாசாங்குத்தனம். எனவே நேர்மையாக இருங்கள். நீங்களே உங்களுக்கு முகத்திரை. இறை உணர்தல் எளிது, ஆனால் நீங்களே அதை மிகவும் கடினமாக்குகிறீர்கள். ஆரம்பம் முதல் நீங்கள் கடவுள்! உங்களைப் பிணைக்க வைத்தது யார்? உங்கள் மனம்! நீங்கள் தூங்கும்போது, சுதந்திரமாக இருக்கிறீர்கள், ஆனால் அது உணர்வுப்பூர்வமாக அல்ல. நீங்கள் விழித்தெழும் வேளையில், உலகப் பொருட்கள் அனைத்தும் உங்களை சூழ்ந்து கொள்கின்றன.

எனவே உங்கள் ஆழ்ந்த தூக்க நிலையில் நீங்கள் முழு விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். மலர் மாலை அணிவித்து, தலை

வணங்குவது மட்டும் போதாது. நீங்கள் கடவுளுக்காக ஏங்கினால், உங்கள் வாழ்க்கையின் மதிப்பின் வலிமையில் நீங்கள் அவருக்காக ஏங்க வேண்டும்!

உங்கள் மனம் உங்களை ஏமாற்ற முயற்சித்தால், அது ஒரு பொருட்டல்ல. ஆனால் உங்கள் கைகள் உங்களை ஏமாற்றிவிடாதபடி, எனது தாமன் (மேலங்கி) மீதான பிடி நழுவாமல் ஜாக்கிரதையாக இருங்கள்.

பூனாவைச் சேர்ந்த சில அறிஞர்கள் வந்து பல்வேறு கேள்விகளை எழுப்பிய போது, பாபா அவர்களுக்கு சிறிது நேரம் பல விஷயங்களை விளக்கி இவ்வாறு குறிப்பிட்டார், **"கடவுளின் உண்மையான அன்பர்களுக்கு முன்னால், அறிவார்ந்த ராட்சதர்கள் அனைவரும் சித்திரக்குள்ளர்கள்."**

‘எனது மேலங்கியை பற்றிக் கொள்ளுங்கள்’
(‘HOLD ONTO MY DAAMAN’)

நீங்கள் கடவுளை
எவ்வளவு அதிகமாக
விவாதிக்கிறீர்களோ,
அவ்வளவு
குறைவாகப் புரிந்து
கொள்கிறீர்கள்.
எனவே, கடவுளை
நேசித்து
கடவுளாகுங்கள்.

-அவதார் மெஹர் பாபா